ஸ்ரீகலா SRIKALA



ஸ்ரீகலா SRIKALA



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...

TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

Download

Contents

மலர் : 1
மலர் : 2
மலர் : 3
மலர் : 4
மலர் : 5
மலர் : 6
மலர் : 7
மலர் : 8
மலர் : 9
மலர் : 10
மலர் : 11
மலர் : 12
மலர் : 13
மலர் : 14
மலர் : 15
மலர் : 16
மலர் : 17
மலர் : 18
மலர் : 19
மலர் : 20
மலர் : 21
மலர் : 22
மலர் : 23
மலர் : 24
மலர் : 25
மலர் : 26

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

வட சென்னை ராயபுரம் பகுதி அந்தக் காலை நேரத்தில் அதற்கே உரிய பரபரப்போடு சுறுசுறுப்பாய் இயங்கி கொண்டிருந்தது... அங்கு அரசாங்கம் கட்டி கொடுத்திருந்த அடுக்குமாடி குடியிருப்பில் இருந்த வீடு ஒன்றில் அலைப்பேசியில் பேசி கொண்டிருந்த முத்துபேச்சியின் முகம் வண்ண மலராய் விரிந்து மலர்ந்திருந்தது... அத்தனை சந்தோசம் அந்த முகத்தில்...

"பாண்டி... ஏலேய் பாண்டி..." அலைப்பேசியை அணைத்து விட்டு பரபரப்பாய் உள்ளே வந்த முத்துபேச்சி கூக்குரலிட...

அங்கிருந்த சிறிய வரவேற்பறை சுவற்றில் சட்டத்தில் மாட்டி வைக்கப்பட்டிருந்த கருமாரி அம்மன் புகைப்படத்தின் முன் கண்களை மூடி தனது வேண்டுகோளை தீவிரமாய் விடுத்துக் கொண்டிருந்த பாண்டியன் முகத்தைச் சுளித்தான்...

அதே போல் அங்கு மூலையில் அமர்ந்து தனது பாட புத்தகங்களைச் சரி பார்த்துப் பையில் வைத்துக் கொண்டிருந்த ஐந்து வயது கயல்விழி தனது காதை பொத்தி கொண்டாள் அன்னை போட்ட கூப்பாட்டைத் தாங்க இயலாது...

"இந்தா புள்ள எதுக்கு இந்தக் கூப்பாடு போடுற...?" அலுத்துக் கொண்டே கண்களைத் திறந்தான் பாண்டியன்...

"நீ என்னித்திக்கு இப்படி டெய்லி சாமி கூம்புடுற...? எனக்காகத் தானே... உன்னோட வேண்டுதல் பலிச்சிருச்சு பாண்டி..."

கண்கள் மின்ன, முகம் மலர கூறியவளை கண்டு நம்ப முடியாத பாவனையைத் தன் கண்களில் காட்டியவன்,

"நெசமாவா சொல்லுற புள்ள..."

"அட நெசமாத்தான் பாண்டி..." என்று அவன் தலையில் அடித்துச் சத்தியம் செய்தவள்,

PDF தமிழ் .com

"இப்பத்தே ஐயா ஃபோன்ல விசயத்தைச் சொன்னாரு... இந்தத் தடவை நடக்கிற எலெக்சன்ல எனக்குச் சீட் ஃகன்பார்மாம்... ரொம்பச் சந்தோசமாயிருக்கு பாண்டி... நம்மளோட இத்தனை நாள் கனவு, கஷ்டப்பட்டது எல்லாம் வீண் போகலை..."

"நான் எங்கே புள்ள கஷ்டப்பட்டேன்... நீ தான் ராப்பகலா கட்சிக்காக உழைச்ச... உன்னோட உழைப்புக்கு கிடைச்ச ஊதியம் தான் புள்ள இந்த வாய்ப்பு..." என்று மனம் நெகிழ்ந்து சொன்னவன்,

"இந்த எலெக்சன்ல நீ ஜெயிச்சு, அப்புறம் மந்திரியாகி, ஒரு நாள் இல்லை ஒரு நாள் முதலமைச்சராகிக் கோட்டையில் கொடி ஏத்தும் நாள் ரொம்பத் தொலைவு இல்ல புள்ள..."

அவளின் முன்னேற்றதை கற்பனையில் கண்டவனாய் கனவில் மிதந்தான் பாண்டியன்...

"ம்... நிச்சயம் அது ஒரு நாள் நடக்கும் பாண்டி..." என்றாள் அவள் உறுதியுடன்...

பத்து வயதில் கட்சி அலுவலகத்தில் எடுபிடி வேலை பார்த்து அதற்குப் பின் பிரச்சாரக் கூட்டத்தில் தீவிரமாய் இறங்கியவளை இந்த அளவுக்குக் கொண்டு வந்தது அவளால் 'ஐயா' என்றழைக்கப்படும் செல்வநாதன்... போன ஆட்சியில் நிதியமைச்சராய் இருந்தவர்... கட்சி தலைவரிடம் மிகுந்த செல்வாக்கு உடையவர்... அதோடு அவர் தலைவரின் நெருங்கிய நண்பரும் கூட...

அவர் தான் இவளுள் இருந்த தீராத அரசியல் தாகத்தைத் தெரிந்து கொண்டு அவளை இந்தளவுக்கு வளர்த்து விட்டவர்... இன்றும் அவரது அலுவலகத்தில் தான் அவள் பணிபுரிகிறாள்... கிட்டத்தட்ட அவரது செயலாளர், வலது கை மாதிரி...

"சரி புள்ள... அம்மா கிட்ட போய் இந்தச் சந்தோசமான விசயத்தைச் சொல்லு..."

பாண்டியன் அப்படிச் சொல்லவும் அவளது கண்களில் ஒருவித கோபம் எழுந்தது...

"த்தா... காலையிலேயே என் வாயில நல்ல வார்த்தை வந்திர போகுது... காலங்கார்த்தால அது மூஞ்சியில முழிச்சா பொழுது விளங்கினாப்புல தான்..." என்று எரிந்து விழுந்தவளை கண்டு அவன்,

"என்ன இருந்தாலும் உன்னைப் பெத்தவ இல்லையா முத்து..."

"அதைப் பத்தி மட்டும் பேசாதே பாண்டி... என் வயிறு எரியுது... அந்த நாயி என்ன எங்கப்பனை முறையா கல்யாணம் பண்ணி காதலாவா என்னைய பெத்து எடுத்துச்சு... துட்டுக்கு ஆசைப்பட்டுப் பாண்டிச்சேரிக்குப் போய்ப் பாசை தெரியாத பிரெஞ்சுக்காரன் கூடப் படுத்து எந்திரிச்சு என்னைப் பெத்தெடுத்திருக்கு... உடம்பு அரிப்பெடுத்த சிறுக்கி..."

தன்னைப் பெற்ற அன்னையை வசவுகளால் குளிப்பாட்டினாள் முத்துபேச்சி... ஆம்... அவள் சொல்வதும் உண்மை தான்... அவளது அன்னை குமாரி சாலையோரத்தில் வசித்து வந்தவள்... தாய், தந்தை இல்லாத அநாதை... கிடைக்கும் வேலையைச் செய்து கொண்டு அதில் வரும் பணத்தில் வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருந்தவள்...

சில சமயம் எந்த வேலையும் கிடைக்கவில்லை என்றால் பிச்சை எடுக்கவும் தயங்க மாட்டாள்... பசி அவளின் தன்மானத்தைக் காவு வாங்கிவிடும்... அப்படிக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த போது தான் அவளது தோழி ஒருத்தி பாண்டிச்சேரி பெருமைகளைக் கூறி,

"அங்கே வெளிநாட்டுக்காரன் ஒருத்தனை கரெக்ட் பண்ணினா போதும் புள்ள... நம்ம கையில் பணம் கொட்டோ கொட்டோன்னு கொட்டும்..." என்று ஆசை வார்த்தை கூற...

PDF தமிழ் .com

அதை நம்பி அதற்கு என்றிருந்த தரகரிடம் போய் நின்றாள் குமாரி... இவளை போல் பல பெண்களைப் பார்த்தவன் அவன்... அதனால் நல்ல லாபம் கிடைக்கும் என்று எண்ணி அவளை நன்றாக அலங்கரித்துப் பாண்டிச்சேரி அழைத்துச் சென்றவன் அங்குச் சுற்றுலாவுக்கு வந்திருந்த பிரெஞ்சுக்காரன் ஒருவனிடம் டாலரை வாங்கிக் கொண்டு குமாரியை தள்ளிவிட்டு சென்றுவிட்டான்...

நல்லவேளை குமாரி பயந்து போல் அந்த வெளிநாட்டுக்காரன் இல்லை... அவனுடன் இருந்த அந்த ஒரு நாளும் அவளை ராணி போல் நடத்தினான்... அவளது உடலின் பசியை அவன் தணித்தது போல் அவளது வயிற்றின் பசியையும் சேர்த்துத் தணித்தான்... அதில் தான் அவள் பெரிதும் கவரப்பட்டாள்...

அவன் போகும் போது அவளின் கை நிறைய டாலரை அள்ளி கொடுத்துவிட்டுச் சென்றான்... அதைக் கண்டதும் அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... அதற்கு விலையாகத் தனது கற்பை பலி கொடுத்து இருக்கிறோம் என்ற குற்றவுணர்ச்சி அவளுக்குச் சிறிதும் இல்லை... அவளைப் பொருத்தவரை ஒரு நாள் வயிற்றுப்பாடு கவலை தீர்ந்தது... அத்தோடு பல நாள் வயிற்றுப்பாடுக்குத் தேவையான பணம் அவள் கையில்...

பணம் மட்டும் தான் வாழ்க்கையின் பிரதானம் என்று நினைத்தாள் அவள்... ஒரு மனிதனிடம் எது இல்லையோ அதைத் தான் அவனின் மனம் தேடி போகும்... அவளைப் பொருத்தவரை பணம் தான் பிரச்சினை... அதனால் அதைத் தேடி ஓடினாள் அவள்...

கையிலிருந்த பணம் அடுத்து வந்த நாட்களில் அவள் செய்த ஆடம்பர செலவில் அப்படியே கரைந்து காணாமல் போனது... மீண்டும் பழையபடி நடுத்தெருவுக்கு வந்தாள்... மீண்டும் கிடைத்த வேலையைச் செய்தாள்... இல்லை என்றால் பிச்சை எடுத்தாள்... அந்த நேரத்தில் தான் வயிற்றில் முத்துபேச்சி உருவாகியிருந்தாள் அவளுக்கே தெரியாமல்...

கர்ப்பத்தைக் கலைக்கும் நாட்களைத் தாண்டி இருந்தது கரு... அதனால் வேறுவழியின்றி அவளைப் பெற்றெடுத்தாள் குமாரி... அவள் வசிக்கும் சாலையோரத்தில் இருக்கும் அம்மன் பேர் தான் முத்துபேச்சி... அந்தப் பெயரை அப்படியே மகளுக்கு வைத்துவிட்டாள் அவள்...

பிரெஞ்சுக்காரனின் வித்து என்பது முத்துபேச்சியைப் பார்த்ததும் தெரிந்து கொள்ளலாம்... அவளது மேனி அப்படியொரு வெண்மை நிறத்தில் பொன்னாய் மின்னும்... ஆனால் தலை முடி மட்டும் அன்னையைப் போல் கறுப்பு நிறம்... பிரெஞ்சு, இந்தியா இரண்டும் சேர்ந்த கலவை அவள்... அதனால் இயற்கையாகவே அழகாய் இருந்தாள்... அவள் வாயை திறந்தால் மட்டும் தான் அவள் ஒரு 'லோக்கல்' பார்ட்டி என்று எல்லோருக்கும் தெரிய வரும்...

"இருக்கட்டுமே புள்ள... ஆனா உன்னைய இத்தன வயசு வரைக்கும் பாதுகாத்து வளர்த்துச்சு இல்லையா... அதுக்காகவாவது நீ போய்ச் சொல்லு புள்ள..." என்று பாண்டியன் தன் நிலையில் பிடியாய் நின்றான்...

வேறுவழியின்றி அவனை முறைத்துக் கொண்டு அங்கிருந்த ஒற்றை அறைக்கதவை திறந்து உள்ளே சென்றாள் முத்துபேச்சி... அன்னை அருகில் சென்றவளின் நாசியில் நேற்று அன்னை அடித்த சரக்கின் நாற்றம் குப்பென்று அடித்தது...

"தூத்தேறி... கர்மம்... கர்மம்... ஒரு பொம்பளை இப்படியா குடிச்சிட்டு விடிஞ்சது கூடத் தெரியாம தூங்குவா..." என்றபடி அன்னையின் முதுகில் ஓங்கி ஒரு அடி போட்டாள்...

"யாருடி அவ என்னைய அடிக்கிறது...?" கத்தி கொண்டே எழுந்து அமர்ந்தார் குமாரி...

வயதும், குடியும் சேர்ந்து அவரது தோற்றத்தை இன்னமும் முதுமையாக்கி இருந்தது...

PDF தமிழ் .com

தன்னை அடித்தது மகள் என்று தெரிந்ததும் அவர் சற்று அடங்கித் தான் போனார்... ஏனென்றால் இப்போது தங்க இடம் கொடுத்து, குடிப்பதற்குக் 'குவாட்டர்' வாங்கிக் கொடுப்பதும் அவள் தானே... அதனால் பம்மி கொண்டு அமைதியாய் இருந்தார்...

அப்போது அங்குப் பாண்டியன் வந்தான்... அவனைக் கண்டதும் குமாரியின் வாய் நீண்டது...

"டேய் பாண்டி... நேத்து என்ன சரக்குடா வாங்கியாந்த... சுத்தமா போதை ஏறலை..." என்று அவர் சலித்துக் கொள்ள...

"இல்லையே ஆத்தா... நல்ல சரக்கான்னு கேட்டு தானே வாங்கியாந்தேன்..." என்று குழப்பத்துடன் தலையைச் சொறிந்தான் பாண்டியன்...

அதைக் கண்டு தலையில் அடித்துக் கொண்ட முத்துபேச்சி, "எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கீங்களே ரெண்டு பேரும்..." என்று எரிச்சலுற்றவள் அன்னையிடம்,

"எம்மா... எனக்கு இந்த எலெக்சன்ல சீட் கிடைச்சிருக்கு..." என்க...

"ஆத்தி... எம்புட்டு சந்தோசமான விசயம் முத்து..." என்று மகளிடம் சந்தோசப்பட்டவர் பாண்டியனிடம்,

"பாண்டி... இன்னைக்கு இதைக் கொண்டாடுறதுக்காக நீ ஃபாரின் சரக்கு வாங்கியா என்ன..." என்க...

"உன்னைய திருத்த முடியாது..." என்று கூறிவிட்டு அவள் அறையை விட்டு செல்ல...

"சும்மா என்னைய குறை சொல்லாதே... நீ மட்டும் என்ன ஒழுங்கா...?" என்று குமாரி அவளிடம் எகிற...

அதைக் கேட்டு கோபத்துடன் அன்னை பக்கம் திரும்பியவள், "நான் ஒண்ணும் உன்னைய மாதிரி உடம்பு சொகத்துக்கு அலைஞ்சு போயி புள்ள பெத்துக்கலை... என் புருசனோட காதலோடு சேர்ந்து தான் புள்ள

பெத்துக்கிட்டேன்..." என்று பதிலுக்கு அவளும் கோபத்தோடு கத்தினாள்...

இதற்கு மேல் பேச்சை வளர்த்தால் இந்த இடம் மீன் சந்தையாகி விடும் அபாயம் இருந்ததால் பாண்டியன் இருவருக்கும் இடையில் நுழைந்து இருவரையும் சமாதானப்படுத்தினான்...

"இந்தா புள்ள... கயலுக்கு ஸ்கோலுக்கு நேரமாகிருச்சு... நீ கிளம்பு..." என்று முத்துபேச்சியை அவன் விரட்டி விட...

மகள் ஞாபகம் வந்ததும் அவள் அன்னையை முறைத்துக் கொண்டு வெளியில் சென்றாள்...

அறையை விட்டு வெளியில் வந்தவள் மகளைத் தேடினாள்... அவளோ சமத்தாய் சமையலறையில் இருந்த பாத்திரத்தில் இருந்து இட்லியை எடுத்து தனது டிபன்பாக்சில் வைத்து அதன் மீது வெங்காயச் சட்னியை ஊற்றி கொண்டிருந்தாள்...

முத்துபேச்சியோ சரியான வாயாடி... ஆனால் அவளது மகளோ மிகவும் அமைதி... இவள் யாரை மாதிரி என்கிற யோசனை அவள் மனதில் ஓடியது... அத்தோடு சில வேண்டாத நிகழ்வுகளும் சேர்ந்து... தலையைக் குலுக்கி அதை விரட்டி அடித்தவள் மகளிடம் வந்தாள்...

"கயலு கிளம்பிட்டியா கண்ணு..." என்றபடி அங்கு வந்தவள் மகளின் டிபன்பாக்சை மூடி சிறிய பையில் வைத்து அதனுடன் தண்ணீர் பாட்டிலையும் சேர்த்து வைத்தவள் மகளை அழைத்துக் கொண்டு கிளம்பினாள்...

மகளை ஸ்கூட்டியில் அமர வைத்தவள் தானும் அதில் ஏறியமர்ந்து அதைக் கிளம்பியவள் அடுத்தச் சில நிமிடங்களில் சாலை போக்குவரத்தில் கலந்தாள்...

தினமும் எதையாவது பேசி கொண்டு வரும் மகள் இன்று வாயை மூடி கொண்டு வருவதை உணர்ந்து,

"கயலு... மேலுக்கு முடியலையாடா..."

PDF தமிழ் .com

"இல்லைம்மா..." என்றவள் மேலே பேசவில்லை...

"அப்புறம் எதுக்கு அமைதியா வர்ற புள்ள..."

"ம்மா..." என்று தயங்கியது குழந்தை...

"சொல்லு கண்ணு..."

மகள் யோசித்து வாயை திறக்கும் முன் பள்ளி வந்திருந்தது... அது ஒரு அரசாங்க பள்ளி... தனியார் பள்ளியில் சேர்க்கும் அளவுக்கு இப்போது அவளுக்கு வசதி இருந்த போதும் மகளைத் தனியார் பள்ளியில் சேர்க்கவில்லை... தனக்கு என்று சில கொள்கைகளை அவள் வைத்திருந்தாள்... அதில் இதுவும் ஒன்று...

எங்குப் படித்தாலும் படிக்கும் பிள்ளைகள் நன்கு படித்து முன்னேறும் என்பது அவளது எண்ணம்... அதற்கேற்ப அவளது செல்ல மகளும் படிப்பில் கெட்டி...

ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு மகளைக் கீழே இறக்குவதற்காகத் தனது கைகளை மகள் புறமாய்க் கொண்டு போனவள் அவளின் முகத்தில் இருந்த கலக்கத்தைக் கண்டதும் தானும் மனம் கலங்கியவளாய் அப்படியே தன் நெஞ்சோடு மகளை அணைத்து கொண்டாள்...

ஏனோ பொறுப்பில்லாத தாய்க்கு மகளாய் பிறந்த காரணத்தாலோ என்னவோ அவள் தனது மகளின் மீது அப்படி ஒரு பாசம் வைத்திருந்தாள்...

"என்ன கண்ணு யோசனை...?" மகளின் தலையை அவள் பரிவாகத் தடவி கொடுக்க...

"ம்மா... என்னோட அப்பா யாரும்மா...?"

அதில் திடுக்கிட்டு போனவளாய் மகளின் முகத்தைப் பார்த்தாள் அவள்... இத்தனை நாளாய் தகப்பனை பற்றிக் கேட்காத மகள் இன்று கேட்கிறாள் என்றால்...? பெரும் கவலையாக இருந்தது அவளுக்கு...

"நான் தான் ஏற்கெனவே சொல்லியிருக்கேனே கயலு... அப்பா சாமி கிட்ட போயிட்டாருன்னு..." சொல்லும் போதே முத்துபேச்சியின் கண்கள் கலங்கியது தன்னவனை நினைத்து...

"ஆனா நிம்மியோட அம்மா சொல்றாங்க பாண்டி மாமா தான் என்னோட அப்பான்னு..."

அதைக் கேட்டதும் அவளது தேகம் இறுகியது... சின்னப் பிள்ளையிடம் போய் என்ன வார்த்தை சொல்லியிருக்கிறார்கள் என்று அவளது மனம் கோபத்தில் எரிமலையாய்க் கொதித்தது...

"இங்கே பாரு கண்ணு... யாரு என்ன சொன்னாலும் நம்பக் கூடாது சரியா... பாண்டி மாமா எனக்கு நல்ல பிரெண்ட் மட்டுமல்ல அம்மா, அப்பா, கடவுள் இது எல்லாத்துக்கும் மேலே... அப்படி ஒரு உறவுக்கு என்ன பேர் இருக்குமோ அது தான் பாண்டி மாமா..."

அவளது கண்கள் கரித்தது நண்பனின் தோழமையை நினைத்தது... அவளது பத்து வயதில் பாண்டியன் அவளுக்கு நண்பனானான்... தென் மாவட்டத்தில் இருந்து பன்னிரெண்டு வயதில் ஊரை விட்டு ஓடி வந்தவன் இந்தப் பாண்டியன்... அவனோடு சேர்ந்து அவளுக்கும் தென்மாவட்ட வட்டார மொழி வழக்கு பழக்கமாகி இருந்தது...

பத்து வயதில் அவனோடு சேர்ந்து பிச்சை எடுத்திருக்கிறாள்... கிடைத்த சிறு சிறு வேலைக்குப் போயிருக்கிறாள்... இன்னும் எத்தனையோ... அப்படி வேலைக்குப் போகும் இடத்திலுள்ள கழுகு மனிதர்களிடம் இருந்து சின்னஞ்சிறு புறாவாகிய அவளைக் காப்பாற்றும் வேலையை அன்று மட்டுமல்லாது இன்றும் செய்து வருபவன் அவன்...

அவன் நண்பன், கடவுள் என்ற சொல்லுக்கு எல்லாம் அப்பாற்பட்டவன்...

PDF தமிழ் .com

"ம்மா... நீ சொன்னா சரியா தான் இருக்கும்..." என்று தலையாட்டிய மகளைக் கண்டு மனம் நெகிழ்ந்தது அந்தத் தாய்க்கு...

"கயலு... நாம ஸ்கூலுக்கு வந்திருக்கிறது படிக்கிறதுக்கு மட்டும் தான்... யார் என்ன சொன்னாலும் காதுல வாங்க கூடாது என்ன... நீ நல்லா படிச்சு பெரிய வேலைக்குப் போனா தான் உனக்குக் கௌரவதை... உனக்குன்னு இந்தச் சமுதாயத்தில் தனியே ஒரு இடம் கிடைக்கும்..."

அவளின் முகத்தில், வார்த்தையில் இந்தச் சமுதாயத்தில் இடம் கிடைக்காது சாலையோரத்தில் வசித்து வந்ததற்கான வலி அப்பட்டமாய்த் தெரிந்தது...

"சரிம்மா..." என்ற கயல்விழி அன்னையின் கன்னத்தில் முத்தமிட்டு, "பைம்மா..." என்று செல்ல...

மகளுக்குக் கையாட்டிய படி நின்றவளின் மனம் நெருப்பாய்க் கனன்றது... அடுத்தச் சில நிமிடங்களில் அந்த நிம்மியின் வீட்டின் முன் அவளது ஸ்கூட்டி நின்றது...

"எவடி அவ வீட்டிலிருக்கிறது... வெளியில் வாடி..." கத்தியபடி அந்த வீட்டின் வாயிலில் நின்ற முத்துபேச்சியை அங்கிருந்த அக்கம்பக்கத்தினர் வேடிக்கை பார்த்தனர்...

"இங்கே என்ன அவுத்து போட்டு ஷோவா காட்டுறேன்... இப்படி உத்து பாத்துக்கிட்டு நிக்கிற... போ போ போய்ப் புள்ள குட்டிய கவனி..." என்று கைகளைக் காற்றில் ஓங்கி அசைத்து அவள் போட்ட சத்தத்தில் அதற்கு மேல் அங்கு நின்று வேடிக்கை பார்க்க அவர்கள் என்ன முட்டாள்களா...?

கல் எறியப்பட்ட காக்கா கூட்டங்களாய் நாற்புறமும் சிதறி ஓடினர் அங்குக் குடியிருந்த மக்கள்...

இந்த வாயும், தைரியமும், துணிவும் முத்துபேச்சிக்கு இல்லை எனில் அவளால் இந்தச் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ்ந்திருக்க முடியாது... அவள் மட்டும் கோழையாக இருந்திருந்தால் என்றோ இந்தப்

பிணந்தின்னி கழுகுகள் அவளைத் தங்களுக்கு இரையாக்கி இருக்கும்...

அவள் கத்திய கத்தலில் நிம்மியின் அம்மா வீட்டினுள் இருந்து வந்தாள்... அங்கு முத்துபேச்சியைக் கண்டதும் அவளுக்கு உள்ளுக்குள் மனம் பதறினாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் அலட்சியமாய் வந்து நின்றவள்...

"இந்தா இப்போ எதுக்கு இங்க வந்து இந்தக் கத்து கத்துற..."

அவளது கேள்விக்குப் பதில் பேசாது தனது வலது கை கொண்டு அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டாள் முத்துபேச்சி...

அதில் 'பே'வென அவள் பேந்த பேந்த விழிக்க...

"நீ பார்த்தியாடி... என் மகளுக்கு அப்பா பாண்டின்னு உனக்குத் தெரியுமா...? பாண்டிய பத்தி உனக்கு என்ன தெரியும்... என் மகளோட அப்பா பத்தின பேச்சு உனக்குத் தேவையில்லாதது... அது என் கவலை... உனக்கு வேண்டாம் அந்தக் கவலை..."

அதில் அந்தப் பெண்ணுக்கும் கோபம் வந்தது... அத்தோடு அடிப்பட்ட அவமானமும் சேர்ந்து கொண்டது...

"அப்போ யாருடி அவ அப்பா...? இதுவரைக்கும் உன் புருசனை நான் பார்த்ததே இல்லை... ஒருவேளை அந்தச் செல்வநாதனோ...?"

அவள் கேட்கும் முன் அடுத்த அடி விழுந்தது அவளது கன்னத்தில்...

"நாயே... யாரை பார்த்து என்ன வார்த்தை பேசுற... அவர் என் தகப்பனுக்குச் சமானம்... இனி அவரைப் பத்தி தப்பா ஒரு வார்த்தை பேசின உசுரோட இருக்க மாட்ட..."

"அப்போ உன் புருசன் யாரு...? எங்கே இருக்கான்னு சொல்லு..."

PDF தமிழ் .com

முத்துபேச்சியின் தோற்றத்தை அளவிட்டவாறு அவள் கேட்டாள்...

வெளிர் நீல நிற ஜீன்ஸ் பேண்ட்டும், கறுப்பு நிற ஆண்கள் அணியும் பருத்தி சட்டையும், அதைச் சுற்றி பல வண்ண நிறம் கொண்ட ஷால் அணிந்து, முடியையும் ஆண்கள் போல் வெட்டியிருந்த அவளது முரட்டுத்தனமான தோற்றமும், அவளது வெண்ணிற முகத்தில் இரு புருவங்களுக்கு இடையில் வைக்கப்பட்டு இருந்த சிறு கறுப்பு பொட்டும் அவளுக்கு அதீத அழகை அள்ளி கொடுத்திருந்தது...

அந்தப் பெண் பேசியதில் அவளது முகத்தில் சிறிது வேதனை வந்து போனது... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டவள் முகத்தைக் கடினமாய் மாற்றியதோடு இல்லாமல் தனது குரலையும் கடினமாக மாற்றிக் கொண்டு,

"அவர் இப்போ உயிரோட இல்லை..." என்றவளை இளக்காரமாய்ப் பார்த்த அந்தப் பெண்,

"யார் கிட்டயோ ஏமாந்து போயி வயித்துல வாங்கிட்டு வந்த உனக்கு எல்லாம் வாய் சவடால் எதுக்கு...? கெட்டு சீரழிஞ்ச நீ என்னைய பேசுறியா...?" என்று அவள் கத்த...

"ஏய்... என்னைப் பத்தி உன் கிட்ட விளக்கி சொல்லணும்ன்னு எந்த அவசியமும் எனக்கு இல்லை.. இன்னொரு தடவை இப்படி என் மக கிட்ட பேசின அதுக்கு அப்புறம் நம்ம பசங்க கிட்ட சொல்லி உன்னைப் போட்டு தள்ளிர சொல்லிருவேன்..."

முத்துபேச்சியின் அரசியல் பலம் தெரியுமாதலால் அடுத்த நொடி அந்தப் பெண் வாயை கப்சிப் என்று மூடி கொண்டாள்...

அதை நக்கலாய் பார்த்த முத்துபேச்சி, "இதை முதல்லேயே செய்றதுக்கு என்ன...? கையில் ஆயுதம் எடுத்தா தான் அடங்குறீங்க என்ன...? இந்தப் பயம் எப்பயும்

இருக்கணும்..." என்று அவளை மிரட்டிவிட்டு தனது ஸ்கூட்டியில் கிளம்பி சென்று விட்டாள்...

செல்வநாதனை சந்திக்கப் போகும் முன் அந்தப் புகழ் பெற்ற பேக்கரியில் இனிப்பு வாங்கியவள் அதை எடுத்துக் கொண்டு நேரே அவரது வீட்டிற்குச் சென்றாள்... அங்கே அவளைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் யாருக்கும் இல்லை...

நேரே வீட்டின் வரவேற்பறைக்குள் நுழைந்தவளை கண்டு அங்கு அமர்ந்திருந்த செல்வநாதனின் மனைவி கமலா முகத்தைச் சுளித்தார்...

"திறந்த வீட்டில் நாய் நுழையற மாதிரி சில ஜென்மங்கள் ரோசமே இல்லாம நுழையுதுங்க..." சத்தம் போட்டு அந்தம்மாள் பேச...

அதைக் கேட்டு முத்துபேச்சி முகம் மாறவில்லை... மாறாகப் புன்னகை முகத்துடன்,

"அம்மா... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்கம்மா..." என்று அவரது கால்களில் விழுந்தாள் சாஷ்டாங்கமாய்...

அவளுக்கு வாழ்க்கை வழிகாட்டியாய் இருக்கும் தெய்வத்தின் மனைவி அல்லவா அவர்... அப்படி என்றால் அவரும் தெய்வம் தான் அல்லவா...

அவள் திடுமென அப்படிக் காலில் விழுந்ததும் திடுக்கிட்டு போன கமலா சோபாவில் இருந்து எழுந்தவர் அவளைக் கண்டு கொள்ளாது அங்கிருந்து சென்றுவிட, அதைக் கண்ட முத்துபேச்சியின் மனம் சுருங்கியது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து சோபாவில் அமர்ந்தவள் செல்வநாதனின் வரவிற்காகக் காத்திருந்தாள்...

வெளியில் கிளம்பி கொண்டிருந்த செல்வநாதனிடம் வந்த கமலா, "உங்க வைப்பாட்டி வந்திருக்கா..." என்று அருவருப்பில் முகத்தைச் சுளித்துக் கொண்டு சொல்ல...

PDF தமிழ் .com

அதைக் கேட்டு செல்வநாதனுக்குக் கோபம் வந்தது... ஆனாலும் அடக்கி கொண்டு,

"முத்து என்னோட மகள் மாதிரி... பத்து வயசில் இருந்து எனக்கு அவளைத் தெரியும்... நீ இப்படித் தேவையில்லாம பேசாதே..."

"அதான் வெளியில் அப்படி ஒரு பேச்சு அடிபடுதே... அவ குழந்தைக்கு அப்பா நீங்க தான்னு..."

அதைக் கேட்டு ஆத்திரம் அடைந்தவர் தன் கையை ஓங்கி விட்டார் அடிப்பதற்காக...

"ஓங்கி அறைஞ்சேன்னா செத்து போயிருவ... என்ன பேச்சு பேசுற... ஊர் உலகம் என்ன சொன்னாலும் நம்பிருவியா...? உன் புருசனை நம்ப மாட்டியா...?"

"அப்ப அந்தக் குழந்தைக்கு அப்பா யாரு...?" விடாப்பிடியாய் அவர் அதிலேயே நின்றார்...

செல்வநாதனும் பல முறை முத்துபேச்சியிடம் கேட்டுப் பார்த்துவிட்டார்... அது யார் என்று அவள் இதுவரை வாய்த் திறந்தது இல்லை...

"அவர் உசிரோட இல்லைங்க ஐயா... இனி அவரைப் பத்தி பேசினா செத்த மனுசன் திரும்ப உசிரோட எழுந்து வரவா போறாங்க... விடுங்கய்யா..." என்றதோடு முடித்துக் கொள்வாள்...

அவளின் நல்வாழ்வு பொருட்டு அவள் குழந்தை உண்டாகி இருப்பதைக் கேள்விப்பட்டு அதைக் கலைத்து விடச் சொல்லி அவர் வற்புறுத்த... அவளோ கண்கள் கலங்க மறுத்தாள்...

"அவங்க என் மேல வச்ச காதலுக்குச் சாட்சி நிறைய இருக்கு ஐயா... ஆனா நான் அவங்க மேல வச்ச காதலுக்கு இது ஒண்ணு தான் சாட்சி..." என்று கண்ணீரோடு மறுத்தவளை மேலே பேசி வேதனைப்படுத்த அவரால் முடியவில்லை...

மனைவியை உறுத்து விழித்த செல்வநாதன், "அதைப் பத்தி முத்து தான் கவலைப்படணும்... நீ எதுக்கு அதைப் பத்தி யோசிக்கிற..."

"நீங்க சம்பந்தப்பட்டு இருப்பீங்களோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு..." என்று சொல்லும் போதே கமலாவின் கண்கள் கலங்கியது...

மனையின் பயம், நேசம் இரண்டுமே புரிந்தவராய் அவர், "என்னை நம்பு கமல்... இத்தனை வருச வாழ்க்கையில் என் மேல் எந்த ப்ளாக் மார்க்காவது விழுந்து நீ பார்த்திருக்கியா...?" என்று வினவ...

அவரது மனைவி அதைப் புரிந்தார் போன்று இல்லை என்று தலையாட்டினார்...

"இப்பவும் அதே நம்பிக்கையோடு இரு... என்ன சரியா..." கணவன் சொன்னதைக் கேட்டு அரைகுறை மனதாகத் தலையாட்டி வைத்தார் கமலா...

"ஆமாம் நித்தி எப்போ வருகிறாள்...?"

மகள் நித்யாவை பற்றிக் கேட்டதும் கமலாவின் முகம் மலர்ந்து விட்டது சந்தோசத்தில்...

"நாளைக்கு வந்திருவாள்..."

"கூட மாப்பிள்ளையும் வர்றாரா...?"

"இல்லைங்க அவருக்கு ஏதோ வேலையாம்..."

"ஓ... அப்படின்னா ஒண்ணு செய் கமல்... நித்தியை அங்கேயே இருக்கச் சொல்லு... நாம போய் ரெண்டு நாள் அங்கே தங்கியிருந்துட்டு கையோட அவளையும் பேரனையும் இங்கே கூட்டிட்டு வந்திடலாம்... அவள் தனியா வர வேண்டாம்..."

இது தான் செல்வநாதன்... எத்தனை வேலைகள் இருந்த போதும் குடும்பத்திற்குத் தனி முக்கியத்துவம் கொடுப்பவர்...

PDF தமிழ் .com

"அப்படியே செய்யலாம்ங்க..." கமலா முத்துபேச்சியை மறந்தவராய் மகளிடம் பேசுவதற்காகச் சந்தோசமாய் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்...

மனைவியைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்ட செல்வநாதன் வரவேற்பறைக்கு வந்தார்... அவரைக் கண்டதும் பவ்யத்துடன் எழுந்து நின்ற முத்துபேச்சி,

"ரொம்ப நன்றிங்கய்யா..." கண்ணீர் மல்க கூறியபடி கைக்கூப்பியவள் அப்படியே அவரின் காலில் விழுந்தாள் தனது நன்றியின் வெளிப்பாடாய்...

"என்னம்மா இது...? இது உன்னோட உழைப்புக்கு கிடைச்ச வெற்றி முத்து..." என்று சொல்லியவர்,

"நல்லாயிரும்மா..." என்று மனதார வாழ்த்தினார்...

அதில் மனம் நெகிழ எழுந்தவள் அவரிடம் இனிப்பை நீட்டினாள்...

"ஏற்கெனவே சுகர் பேஷண்ட்... இதில் இனிப்பு வேறயா...?" என்றாலும் சந்தோசமாய் அந்த இனிப்பை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்...

"மைசூர்பாகு அப்படியே வெண்ணெயா கரையுது முத்து... பேஷ் பேஷ் ரொம்ப நன்னாயிருக்கு..." என்றபடி அவர் சிரிக்க...

"ஐயாவுக்கு நெய் மைசூர்பாகு பிடிக்கும்ன்னு தான் வாங்கியாந்தேன்..." என்று அவளும் உடன் சேர்ந்து சிரித்தாள்...

"இந்த இருபத்தொன்பது வயசில் நீ இதைச் சாதிச்சியிருக்கன்னா அது உன்னோட அயராத உழைப்பு தான் காரணம் முத்து... உனக்காக நான் தலைவர் கிட்ட எந்த ரெக்கமெண்டேசனும் பண்ணலை... அவரா தான் இந்த வாய்ப்பை கொடுத்தது..."

"அது ஐயா நீங்க என்னைப் பத்தி தலைவர் கிட்ட சொன்னதால தானே... இல்லை எத்தனையோ தொண்டர்களில் நானும் ஒருத்தியாய் போய் இருந்திருப்பேன்..." என்று அவள் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை...

"இருக்கலாம்... அதே மாதிரி உன் ஏரியாவில் உனக்குன்னு தனிச் செல்வாக்கு இருப்பதை நீ மறந்திராதே முத்து... நீ அங்கே நின்னா எதிராளிக்கு டெபாசிட் காலி..." என்று கூறி அவர் சிரிக்க...

அதை நாண புன்னகையுடன் தலையசைத்து ஏற்றுக் கொண்டாள் அவள்...

"அப்புறம் இன்னைக்கு ஈவினிங் ஏழு மணிக்கு மேல தலைவரை நீ சந்திக்க அப்பாயிண்ட்மென்ட் வாங்கியிருக்கேன்... அவர் வீட்டில் போய்ப் பார்த்திட்டு வந்திரு... போகும் போது சால்வை, பூ மாலை எல்லாம் வாங்கிட்டு போக மறந்திராதே..." என்று அவர் நியாபகப்படுத்திச் சொல்ல...

"மறக்க மாட்டேன் ஐயா..." என்றவள் அவரிடம் விடைப்பெற்று அவரின் அலுவலகத்திற்குச் சென்றாள்... அங்குத் தான் அவளது வேலை... எடுபிடி வேலையில் இருந்து பெரிய பெரிய வேலைகள் வரை அங்கே எல்லாமே அவள் தான்... அவளுக்கு உதவியாய் கூடப் பாண்டியன் இருப்பான்...

****

அன்றிரவு தலைவரை சந்தித்து விட்டு எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு அவள் வீடு திரும்பும் போது மணி ஒன்பதாகி இருந்தது... குறுக்கு வழியில் சீக்கிரம் வீடு செல்வதற்காகப் பக்கவாட்டுத் தெருவில் தனது ஸ்கூட்டியை திருப்பினாள் அவள்...

அங்கே ஒரு பெண்ணின் பின்னால் ஒருத்தன் பின்தொடர்ந்து வந்து அவளிடம் வம்பு பண்ணி கொண்டு

PDF தமிழ் .com

இருந்தான்... அந்தப் பெண் ஏதோ மறுத்து பேசி கெஞ்சி கொண்டிருப்பதைக் கண்டு கோபமுற்றவளாய் தனது ஸ்கூட்டியை நேரே அவர்கள் முன் கொண்டு வந்து நிறுத்தினாள் முத்துபேச்சி...

ஸ்கூட்டியில் இருந்து இறங்கிய முத்துபேச்சி நேரே அவனிடம் சென்று, "என்ன தனியா வர்ற பொண்ணுக்கிட்ட லந்து பண்றியா...? அடிச்சேன் வையி மூஞ்சி முகறை எல்லாம் பேந்துரும்..." என்று நாக்கை மடித்துத் துருத்தி கொண்டு ஒரு கையால் அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு மறு கையால் அவனை ஓங்கி அறை கொடுக்கப் போனாள்...

அந்தப் பெண் பயந்து அவளின் பின்னால் ஒடுங்கி போய் நின்றிருந்தாள்...

முத்துபேச்சி பேசியதை கண்டு அவன் ஒன்றும் பயந்ததாகத் தெரியவில்லை...

"நான் யாருன்னு தெரியாம என் கிட்ட விளையாடாத..." என்றான் தெனாவெட்டாய்...

அவனைப் பார்த்தாலே தெரிந்தது பணக்கார வீட்டு பையன் என்று...

"ஆமா... நீ என் மாமா, மச்சான் பாரு... உன் கிட்ட நான் விளையாடுறதுக்கு..." என்றவள் ஆத்திரத்தில் அவனது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை ஒன்றை விட்டாள்...

அந்நேரம் காவல்துறை ஜீப் ஒன்று சரேலென்று அங்கு வந்து நின்றது... அதிலிருந்து உயரமான ஆண்மகன் ஒருவன் கீழிறங்கினான்...

மாநிறமாய்க் கம்பீரமான தோற்றத்தில் நல்ல முறுக்கேறிய உடலும், முறுக்கிய மீசையுமாய்ப் பார்ப்பதற்குக் காவல்துறையைச் சேர்ந்தவன் என்பதற்கு அடையாளமாய்க் கஞ்சி குடித்தது போல் விறைப்பாய் நடந்து வந்தான் இவர்களை நோக்கி...

அவனது இடது பக்க நெஞ்சில் மாட்டியிருந்த சிறிய பெயர் பலகையில் அவனது பெயர் 'விஜய் IPS' என்று கறுப்பு எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இருந்தது...!!!

வாசம் நேசமாகும்...!!!

PDF தமிழ் .com

சென்னை மாநகரத் துணை ஆணையராக விஜய் பொறுப்பேற்று இரண்டு நாட்கள் தான் ஆகியிருந்தது... எப்போதும் குற்றங்கள் அதிகளவில் நடப்பது வட சென்னை பகுதியில் தான் என்பதால் இன்று அவன் இங்கே ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தான்...

பிரதான சாலைகளை விட இந்த மாதிரி சிறிய வீதியின் இருட்டில் நடக்கும் குற்றங்கள் தான் ஏராளம்... அதனால் தான் அவன் இந்த வீதிக்கு ரோந்து வந்தது... அங்கு ஒரு பெண் ஆடவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு தான் அவன் ஜீப்பை நிறுத்தச் சொன்னது...

விஜய் இறங்கி அவர்களை நெருங்கி வரும் சில அடி தூரத்தில் அந்த ஆண் முத்துபேச்சியை நோக்கி தன் கையை ஓங்கியிருந்தான்...

ஒரு பெண் தன்னை அடித்தது அவனுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

நல்லவேளையாக அவனின் கை முத்துபேச்சியின் கன்னத்தில் இறங்கும் முன் வேகமாய் அவர்கள் அருகில் வந்த விஜய் அவனது கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்திவிட்டான்...

அவளும் அவனது கையைத் தடுப்பதற்கு ஏதுவாகத் தனது கையை ஓங்கியபடி அவனை எதிர் கொள்வதற்குத் தேவையான தைரியத்துடன் தான் நின்றிருந்தாள்...

அதற்குள் விஜய் அவனின் கையைப் பிடித்துவிடவும் 'யாரது...?' என்ற கேள்வியுடன் விஜய்யை திரும்பி பார்த்தவள் இனிமையாக அதிர்ந்தாள்...

"சாமி... நீ எப்படி இங்கே...?" முகம் மலர விஜய்யை பார்த்து அவள் கேட்க...

அவனோ அவளைத் தெரிந்தது போல் காட்டி கொள்ளாது, "இங்கே என்ன பிரச்சினை...?" என்று காவல்துறை மிடுக்கோடு கேட்டான்...

அதில் அவளது முகம் சுருங்கி போய்விட்டது... இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு நடந்ததை அவனிடத்தில் அப்படியே கூறினாள்...

"டேய்... என் கையை விடுடா... நீ போலீஸ்ன்னா பெரிய பருப்பா...? என் அப்பா யாருன்னு தெரியுமா...?" என்று அந்த ஆண் அடங்காது கத்தினான்...

அதில் விஜய்யின் முகம் கடுமையாய் மாறியது... அடுத்த நொடி அவனது கை அந்த ஆணின் கன்னத்தில் இடியாய் இறங்கியது... அதில் நிலைக்குலைந்து போனவனாய் அந்த ஆண் கன்னத்தைப் பிடித்தபடி அதிர்ந்து போய் நின்றான்...

விஜய் ஜீப்பில் இருந்து இறங்கியதும் கூடவே இறங்கி வந்த ஏட்டுவிடம் அவன்,

"இவனை ஜீப்பில் ஏத்துங்க... ஸ்டேசனுக்குக் கூட்டிட்டுப் போய்ப் போலீஸ்ன்னா யாருன்னு அவனுக்குக் காட்டுவோம்... உன் அப்பா அப்படி என்ன பெரிய பருப்பான்னு நானும் பார்க்கிறேன்..." என்று மீண்டும் அவனை அடித்தவன்,

"பொம்பளை கிட்ட வீரத்தை காட்டுற உனக்கு எல்லாம் எதுக்குடா மீசை...?" என்று கூறியபடி மேலும் அவனை அடித்தவன் ஏட்டுவிடம் கண்களால் அவனை அழைத்துப் போகச் சொன்னான்...

பின் முத்துபேச்சி பின்னால் பயந்தபடி நின்றிருந்த அந்தப் பெண்ணிடம், "யாரும்மா இவன்...? உனக்குத் தெரிஞ்சவனா...?" என்று விஜய் கேட்க...

"நான் வேலை பார்க்கிற கம்பெனி ஓனரோட பையன்... லவ் பண்றேன் அது இதுன்னு சொல்லிக்கிட்டு இப்படித்தான் தினமும் என் பின்னால் வந்து வம்பு பண்ணுவான்..." என்று சொன்னவளின் குரல் தேம்பியது...

PDF தமிழ் .com

"அதுக்கு நீ ஏம்மா இப்படிப் பயந்து அழுற...? உன்னை மாதிரி பயந்த பொண்ணுங்களைப் பார்த்தா தான் இவனை மாதிரி ஆளுங்களுக்குக் கொண்டாட்டம்... கொஞ்சம் தைரியாம எதிர்த்து நின்னு பேசி பாருங்க... அப்புறம் துண்டை காணோம், துணியைக் காணோம்ன்னு ஓடி போயிருவாங்க..."

அவனது அறிவுரை கேட்டு அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்த்த முத்துபேச்சி களுக்கென்று சிரிக்க... அதைக் கண்டு அவன் அவளை முறைத்தான்...

"அட போ சாமி... ரொம்பத்தா அலட்டிக்கிற..." என்றபடி அவள் தனது ஸ்கூட்டியை நோக்கி போனாள்...

"நீ போம்மா..." என்று அந்தப் பெண்ணை அனுப்பி வைத்தவன் ஸ்கூட்டியில் ஏறியமர்ந்த முத்துபேச்சி அருகில் வந்தான்...

அவளோ அவனைக் கண்டு கொள்ளாது கைகளைக் கட்டி கொண்டு விறைப்பாக ஸ்கூட்டியின் மீது அமர்ந்திருந்தாலும் வண்டியை கிளப்பிக் கொண்டு செல்லவில்லை...

அதைக் கண்டு தனக்குள் சிரித்தவனாய் தலையில் இருந்து தொப்பியை கழட்டியவன், "ரௌடி... நீ கொஞ்சம் கூட மாறவே இல்லைடி..." என்றவன்,

"சொல்லு எப்படியிருக்க...?" என்று அவன் கேட்கும் போதே அவள் கோபத்துடன் கத்தினாள்...

"நான் ரௌடியா...? ரௌடியா...?" என்று கை விரல்களை மடக்கி குஸ்தி போடுவது போல் உயர்த்தியபடி கேட்டாள் கோபமாய்...

அவளது ஓங்கிய கையைச் சுட்டிக்காட்டியபடி, "யார் இப்படிப் பிகேவ் பண்ணுவாங்க... ரௌடி தானே..." என்று கேட்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தவன்,

"சரி ரௌடின்னு சொல்லலை... வேணும்ன்னா பேச்ச்ச்ச்சிசிசிசின்னு சொல்லவா..." என்று அவள் பெயரை அவன் இழுத்து உச்சரிக்க...

அதில் அவள் முகம் சுருங்கி சிணுங்கினாள்...

"சாமி... அப்படிக் கூப்பிடாதேன்னு எத்தினி தபா உன் கையில சொல்லியிருக்கேன்..."

"பின்னே உன்னைப் பார்த்தாலே எனக்கு எங்க ஊர்ல இருக்கிற பேச்சியம்மன் ஞாபகம் தான் வருது... இரண்டு கண்ணையும் உருட்டிக்கிட்டு நீ முழிக்கிறதை பார்த்தா அச்சு அசல் பேச்சியம்மனே தான்..." மீண்டும் கிண்டலடித்தான் அவன்...

அன்றும் இன்றும் தன்னைச் சரி சமமாய்ப் பாவித்துப் பேசும் அவனைக் கண்டு அவளது உள்ளம் நெகிழ்ந்தது... கண்கள் பனித்தது... என்றுமே விஜய் இப்படித்தான்...

இதோ இப்போது இத்தனை உயர் பதவியில் இருந்தும் அவன் தன்னை மறக்காததே அதற்குச் சாட்சி...

"அப்புறம் சாமி... எப்போ இங்கே மாத்தி வந்த...?"

"சாமின்னு கூப்பிடாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது... விஜய்ன்னு மட்டும் கூப்பிடு..." என்று அவன் சலித்துக் கொள்ள...

"அதெப்படி உனக்கும் எனக்கும் உள்ள அந்தஸ்து வித்தியாசத்தை நீ மறந்தாலும் நான் மறக்க கூடாது இல்லையா... நீ எனக்கு எப்பயும் சாமி தான்..." என்றவளை கண்டு சிரித்தவன்,

"உன்னை எல்லாம் திருத்த முடியாது... சரி அம்மா, பாண்டி எல்லாரும் நல்லா இருக்காங்களா...?"

"ம்... ரெண்டு பேரும் நல்லா இருக்காங்க... அதுலயும் எங்கம்மா சரக்கும், பிரியாணியுமா அமோகமா இருக்கு..." என்று கூறியவளின் எரிச்சலை அவனும் புரிந்து கொண்டவனாய் அமைதியாய் இருந்தான்...

PDF தமிழ் .com

"அது கெடைக்கட்டும் விடு சாமி... நீ எப்போ இங்கே மாத்தி வந்த...?"

"ரெண்டு நாளாச்சு... இப்போ ஐயா அசிஸ்டெண்ட் கமிசினர்... சிட்டி ஏசிபியாக்கும்..." என்றான் மார் தட்டியபடி பெருமையாய்...

"ரொம்பச் சந்தோசம் சாமி... இப்பவாவது ஊர் பக்கம் வரணும்ன்னு உனக்குத் தோணிச்சே..."

"இப்பவாவது வந்தேனேன்னு சந்தோசப்படு..." என்றவனைக் கண்டு,

"ரொம்பச் சந்தோசமா இருக்கு சாமி... ஒரு எட்டு வீட்டுக்கு வந்து ஒரு வாய் காபி குடிச்சிட்டு போயேன்..." ஆசையாய் கேட்டவளை கண்டு,

"இப்போ நான் ட்யூட்டியில் இருக்கேன்... நாளைக்குச் சண்டே தானே... கட்டாயம் உன் வீட்டுக்கு வர்றேன்... அதே வீடு தானா... இல்லை மாறிட்டியா...?"

"இல்லை சாமி... அதே வீடு தான்... முதல்ல வாடகைக்கு இருந்தேன்... இப்போ சொந்தத்துக்கு வாங்கிட்டேன்... அரசாங்கம் ஓசியில கொடுத்ததை அந்த வீட்டுக்கார நாதாரி என் கிட்ட கொள்ளை ருபாய்க்கு வித்துட்டு போயிட்டான்..."

கொஞ்சம் எரிச்சல், நிறைய ஆற்றாமையுடன் சொன்னவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது...

"இந்த உலகத்தில் மாறாதது ஒண்ணே ஒண்ணு தான்... அது உன் வாய் மட்டும் தான்..."

"வாயுள்ள புள்ள தான் பொழைக்கும் சாமி..." என்று கெத்தாகக் கூறியவள், "சரி சாமி நான் கெளம்புறேன்... நாளைக்குக் கட்டாயம் வீட்டுக்கு வா..." என்றபடி அவள் தன் ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு சென்றாள்...

செல்லும் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் மனதில் நல்ல அழகான ஆங்கிலத்தில் பேசும் அந்தக்

கல்லூரி மாணவி முத்துபேச்சி வலம் வந்தாள்... அது எல்லாம் கல்லூரியில் வகுப்பில் மட்டும் தான்... மற்ற நேரம் எல்லாம் இந்த வாயாடி முத்துபேச்சியைத் தான் அதிகம் பார்க்கலாம்...

இன்னமும் அவள் தன்னியல்பு மாறாமல் அப்படியே இருப்பது கண்டு அவனுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அவளைப் பற்றிய யோசனையுடன் தனக்காகக் காத்துக் கொண்டிருந்த ஜீப்பில் அவன் ஏறிச் சென்றான்...

****

அன்று அலுவல் வேலை முடிந்து விஜய் வீட்டிற்கு வரும் போது நள்ளிரவு பன்னிரெண்டை தாண்டியிருந்தது... தன்னிடம் இருந்த சாவி வைத்து கதவை திறந்து கொண்டு வீட்டினுள் நுழைந்தவன் வரவேற்பறையில் விளக்கு எரிவதை கண்டு ஆச்சிரியப்பட்டுப் போனான்...

என்ன என்று அங்கு எட்டி பார்த்த போது அவனின் தம்பி மகன் மூன்று மாத குழந்தை ராம் பாட்டி மடியில் படுத்துக் கொண்டு கையைக் காலை உதைத்தபடி சிரித்து விளையாடி கொண்டிருந்தான்...

விஜயை கண்டதும் அவனது அன்னை மைதிலி, "வா விஜய்... சாப்பிட்டியா...?" என்று கேட்க...

"ம்... ஆச்சும்மா..." என்று பதிலுரைத்தவன், "குளிச்சிட்டு வர்றேன்..." என்றபடி வெளி வரந்தாவை ஒட்டியிருந்த தனது அறைக்குள் நுழைந்தான்...

ஐந்து நிமிடத்தில் குளித்துவிட்டு வந்தவன் தாயின் அருகில் அமர்ந்து தனது தம்பி மகனை கைகளில் அள்ளி கொண்டான்...

"டேய் படவா... இன்னும் தூங்காம என்ன பண்ணிட்டிருக்க... பெரியப்பாவை பார்க்கணும்னு முழிச்சிட்டு இருந்தியா...?"

PDF தமிழ் .com

அவன் சொன்னது புரியவில்லை என்றாலும் பெரிய தந்தையின் முகம் கண்டு குட்டி பயல் பொக்கை வாயை திறந்து காட்டி சிரித்தான்...

அதை ஆதுரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மைதிலி மனதில் கவலை அரித்தது... ஆனால் அந்தக் கவலையை மகனிடம் அப்படியே சொல்லிவிட முடியாது... சொன்னாலும் மகன் அதைக் காதில் வாங்கிக் கொள்ள மாட்டான்...

மகனின் வாழ்க்கையை நினைத்து பெருமூச்சு விட்டபடி எழுந்தவர் சமையலறைக்குச் சென்று பாலை சூடு பண்ணி கொண்டு வந்து மகனிடத்தில் கொடுத்தார்...

"தேங்க்ஸ்ம்மா..." என்றபடி வாங்கிக் கொண்டவன் அதைப் பருக ஆரம்பிக்க... சின்னவன் தனது கைகளால் தம்பளரை எட்டி பிடிக்க முயன்றான்...

"பாரு இந்த வயசில் என்னவொரு சுட்டித்தனம்... நீயும் சின்னதில் இது மாதிரி தான் இருந்த விஜய்..." என்றபடி பேரனை தனது கைகளில் எடுத்துக் கொண்டார் மைதிலி...

"அப்போ என்னை மாதிரி வீட்டில் ஒரு போலீஸ் ரெடின்னு சொல்லுங்கம்மா..." என்று கூறி அவன் சிரித்தான்...

"அவன் யாரை மாதிரி வேணும்ன்னாலும் வரட்டும்... ஆனா உங்களை மாதிரி மட்டும் வர வேண்டாம்..." என்றாள் அங்கு வந்த அவனது தம்பி வெங்கட்டின் மனைவி சியாமளா...

அதைக் கேட்டு தர்மசங்கடமான மௌனம் நிலவியது அங்கே... அதைக் கண்டு கொள்ளாதவளாய் அவள் தனது குழந்தையை எடுத்துக் கொண்டு தங்களது அறைக்குச் சென்றுவிட்டாள்...

"அவ கிடைக்கிறாள் விடு விஜய்..." என்று மகனை சமாதானப்படுத்திய மைதிலி, "நம்ம காயத்ரிக்கு வளைகாப்பு பண்ணி நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டு வரணும்... இன்னும் இரண்டு நாளில் வளைகாப்பு வைக்கிறதா இருக்கோம்..." என்று இழுக்க...

ஒன்றும் பேசாது எழுந்து தனது அறைக்குச் சென்றவன் தனது பர்சை எடுத்து வந்து அதிலிருந்து பணத்தை எடுத்து அவரிடம் நீட்டினான்...

"இது போதுமா...? இல்லை...?"

"போதும் விஜய்..." என்று பணத்தை வாங்கிக் கொண்டவர் மறந்தும் அவனை 'வளைக்காப்பிற்கு வா' என்றழைக்கவில்லை...

அதைக் கண்டு அவனது மனதில் ஒரு வலி எழுந்தது... தனது சொந்த வீட்டில் தான் மட்டும் அந்நியப்பட்டுப் போனது போல் ஒரு தனிமை உணர்வு... ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு,

"அப்பாவுக்கு நாளைக்கு மெடிக்கல் செக்கப் போகணுமே பணம் இருக்கா...?" என்று கேட்டான் தன்மையான குரலில்...

"ஏற்கெனவே அதுக்குத் தனியா பணம் ஒதுக்கி வச்சிட்டேன்..."

அன்னை அப்படிச் சொன்னாலும் மேலும் ஐந்து ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை அவரின் கையில் திணித்துவிட்டு தனது அறைக்கு வந்தான்...

மீண்டும் தனிமை சூழ்ந்து கொண்டது அவனை...

ரகுராமன், மைதிலி தம்பதியினருக்கு இரண்டாவது மகன் இவன்... மூத்தவள் ஜமுனா, இரண்டாவது இவன், மூன்றாவது தம்பி வெங்கட், நாலாவது தங்கை காயத்ரி...

வங்கியில் கணக்கராகப் பணியாற்றிய ரகுராமன் தனது வருமானத்தில் பிள்ளைகளை எந்தக் குறையும் இல்லாமல் சிறப்பாக வளர்த்தார்... எல்லாப் பெற்றோர்களையும் போல் அன்பையும், பாசத்தையும் கொட்டி தான் வளர்த்தார்கள் அவனின் பெற்றோர்...

எப்போது, எங்கு, எந்த இடத்தில் அந்தப் பாசம் இடறிப் போனது என்று அவனுக்குத் தெரியவில்லை...

அவனது கைகள் வழக்கம் போல் மதுவை எடுத்து ஒரு கோப்பையில் ஊற்றிக் கொண்டது... அதை எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவன் அதைக் குடிக்காது வெறித்துப் பார்த்தான்...

எல்லோரும் தன்னவளை மறப்பதற்காகத் தான் நினைவு மங்கும் அளவிற்குக் குடிப்பார்கள்... ஆனால் அவனோ அவளை நினைப்பதற்காகவே குடித்தான்... முன்பு எல்லாம் அதிகம் குடிப்பான்... இப்போது தான் வகிக்கும் பதவி காரணமாகச் சற்று குறைவாகத் தான் அவன் குடிப்பது வழக்கம்...

ஒருவிதமான மிதக்கும் உணர்வு வரும் வரை குடித்தவன் அப்படியே படுக்கையில் சாய்ந்தான்... கண்களை மூடி கொண்டவனின் கருவிழிகளுக்குள் அவனது கண்ணம்மா மயக்கும் புன்னகையுடன் தோன்றினாள்...

"விஜூ..." கிறக்கமும், மயக்கமும் கலந்து ஒலித்த அவளது குரலில் அவன் அப்படியே மயங்கி தான் போனான்...

"ஏன்டி என்னை விட்டு போன...?" காற்றில் கைகளை அசைத்து அவளிடம் உரிமையுடன் சண்டை போட்டான்...

"கண்ணம்மா... கண்ணம்மா... எங்கேடி போன...? ப்ளீஸ் என் கிட்ட வந்திரு கண்ணம்மா..." கைகளில் அகப்படாத தன்னவளை தேடி அவனது கைகள் காற்றில் அலைபாய்ந்தது அவனது மனதை போல்...

தேடி தேடி அவள் கிடைக்காமல் சோர்ந்து போனவனின் கண்களின் ஓரம் நீர்த்துளிகள் துளிர்த்தது... வெளியில் கம்பீரமாக வலம் வரும் அந்தக் காவல்துறை அதிகாரியின் மனதில் யாரிடமும் சொல்ல முடியாத அளவு பெரும் துக்கம் இருந்தது...

மறுநாள் சொன்னது போல் விஜய் முத்துபேச்சி வீட்டிற்குக் கிளம்பினான்... என்றும் இல்லாத வண்ணம் புன்னகை முகமாய்க் கிளம்பிய மகனை சற்று சந்தேகத்துடன் பார்த்தார் ரகுராமன்...

"இன்னைக்கு லீவு தானே... எங்கே கிளம்பிட்ட விஜய்...?"

"பிரெண்ட்டை பார்க்க போறேன்..." என்றவன் அவரின் பதிலை எதிர்பாராது வெளியில் கிளம்பி சென்றுவிட்டான்...

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த ரகுராமனின் அருகில் வந்த மைதிலி, "நீங்க கொஞ்ச நேரம் வாயை மூடிக்கிட்டுச் சும்மாயிருக்க மாட்டீங்களா...? இப்போ இந்தக் கேள்வி ரொம்ப அவசியமா...?" என்று கணவரை கடிந்து கொண்டார்...

"அதுக்கு இல்லை மைதிலி..."

"அவன் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை... தத்துபித்துன்னு எதையாவது செஞ்சிட்டு வந்து நிற்கிறதுக்கு... அதனால எதைப் பத்தியும் கவலைப்படாம உங்க வேலையைப் போய்ப் பாருங்க..." என்றவர் கணவர் தன் முகத்தைப் பார்ப்பது உணர்ந்து,

"மெடிக்கல் செக்கப்புக்குக் கிளம்பச் சொன்னேன்..." என்றபடி உள்ளே சென்றுவிட்டார்...

தான் பெற்ற மக்களையும், கட்டிய மனைவியையும் நினைத்தபடி ஆயாசத்துடன் நாற்காலியில் இருந்து எழுந்தவர் உள்ளே உடை மாற்ற சென்றார்...

****

முத்துபேச்சி வீட்டிற்குச் செல்லும் முன் அவளுக்குப் பிடித்த மாம்பழம், ஆரஞ்சு பழங்களை வாங்கிக் கொண்டு சென்றான் அவன்... அவளது அடுக்குமாடி குடியிருப்பின் முன் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அவளது வீட்டை நோக்கி வேக எட்டுக்களை வைத்தான் புன்னகையுடன்...

வீட்டின் முன் நின்று அவன் கதவை தட்டியதும் அதைத் திறந்த பாண்டியன் அங்கு எதிர்பாராத விதமாக அவனைக் கண்டதும் முகம் மலர,

"வா விசய்... நல்லாயிருக்கியா...?" என்று நலம் விசாரித்தபடி அவனை வரவேற்றான்...

"நான் நல்லாயிருக்கேன் பாண்டி... நீ எப்படியிருக்க...?" என்று கேட்டபடி உள்ளே நுழைந்தவன் வீட்டை கண்களால் துளாவினான்...

சிறிய வீடாக அது இருந்த போதும் சுத்தமாக வைத்திருந்தாள் முத்துபேச்சி... அங்கிருந்த ஒற்றை நாற்காலியை விஜய் அமர்வதற்கு எடுத்து போட்ட பாண்டி,

"நீ உட்காரு விசய்..." என்றவன்,

"ஏ புள்ள முத்து... நம்ம விசய் தம்பி வந்திருக்கு பாரு..." என்று உள்நோக்கி குரல் கொடுத்தவன்,

"இன்னைக்கு லீவு நாளு இல்லியா... அதான் புள்ளையைத் தலைக்குக் குளிக்க வைக்கிறா..." என்று விஜய்யிடம் உரைத்தவன்,

"நீ இரு விசய்... நா இப்ப வந்திர்றேன்..." என்றபடி பாண்டியன் வெளியில் கிளம்ப,

"பேச்சி வர்ற வரைக்கும் நீ பேசிக்கிட்டு இரு பாண்டி..." அவனைப் போக விடாது தடுத்தவன் அங்கேயே அவனை அமர்த்திக் கொண்டான்...

அவன் சொன்னதும் சரியென்று கீழே அமர்ந்த பாண்டி, "பெரிய போலீசு ஆபிசராகிட்டியாம்... நேத்து முத்து சொல்லிச்சு..." என்று ஆச்சிரியப்பட்டு அவன் வினவ...

"உனக்கு அதே விசய் தான்... அதில் எந்த மாற்றமும் இல்லை..." என்று கூறி அவன் சிரிக்க...

"ரொம்ப நல்லதா போச்சு விசய்... ஒரு செகண்ட் ஷோ சினிமாவுக்குப் போக முடியலை... உங்க போலீசு தொந்திரவு தாங்க முடியலை... நா ஆளு வேற பார்க்க ஒரு மாதிரி இருக்கேன்னா... சந்தேகப்பட்டு உள்ளே போட்டுராங்க... காலையில் முத்து வந்து தான் பேசி என்னை வெளியில் எடுக்கும்... ஐயா பேரை சொன்னா

விட்டுடுவாங்க தான்... ஆனா நான் சொல்ல மாட்டேன்... இனி உன் பெயரை சொல்லலாம் இல்லையா விசய்..."

"கட்டாயம் என் பெயரை சொல்லலாம் பாண்டி..." பாண்டியன் மீது இருந்த நம்பிக்கையில் அவன் அப்படிக் கூறினான்...

"வா சாமி... வந்து நேரமாச்சா...?" என்றபடி கைகளைச் சுடிதார் துப்பட்டாவில் துடைத்தபடி அங்கு வந்தாள் முத்துபேச்சி...

அவள் பின்னாலேயே வால் பிடித்துக் கொண்டு கயல்விழி வந்தாள்... எதிர்பாராமல் புதியவனை அங்குக் கண்டதும் அன்னையின் பின்னால் ஒளிந்து கொள்ளப் போனாள்...

"ஏய் புள்ள கயலு... அவுக நமக்குத் தெரிஞ்சவுக தான்..." என்றபடி மகளை முன்னால் இழுத்தாள் அவள்...

"உன் பொண்ணா பேச்சி..." விஜயின் கண்கள் ஆர்வத்துடன் சின்னவளை பார்த்தது...

"ம்... பேரு கயல்விழி..." என்றாள் பெருமை பொங்க மகளைப் பார்த்தபடி...

"இங்கே வாங்க பேபி..." என்று கயல்விழியை அவன் தன்னருகில் கூப்பிட அவளோ 'மாட்டேன்' என்பது போல் தலையசைத்து அன்னையிடம் ஒடுங்கி கொண்டாள்...

"உன் பொண்ணு உன்னைப் போல் வாயாடி இல்லை போலிருக்கு... ரொம்ப அமைதியாயிருக்கா... ஒருவேளை அவள் அப்பா மாதிரியா...?" சிரிப்புடன் அவன் கேட்க...

"ஆமா..." என்றாள் முத்துபேச்சி...

"உன் வீட்டுக்காரர் என்ன பண்றார்...?"

"அவர் இப்போ உயிரோட இல்லை..." அதைச் சொல்லும் போது அவளது முகத்தில் அத்தனை வேதனை...

"ஓ..." என்ற விஜய் அப்படியே மௌனமானான்...

சங்கடமான மௌனம் நிலவியது அங்கே...

"உனக்கு எத்தனை குழந்தைகள்...?" பேச்சை மாற்ற எண்ணி முத்துபேச்சி அவனிடத்தில் கேட்டாள்...

"குழந்தைகள் இல்லை... பிறக்கிறதுக்கு முன் என் மனைவி இறந்துட்டாள்..." என்றவனின் குரலில் அத்தனை துயரம் இருந்தது...

இப்போது முத்துபேச்சி வாயடைத்து போனாள் வருத்தத்தில்... அதனால் அமைதியாக இருந்தாள்...

"அம்மா எங்கே பேச்சி...?"

உள்ளறையைக் காட்டி, "அங்கே தான் தூங்குது..." என்றவள், "பாண்டி... சாமிக்கு சாப்பிட ஏதாச்சும் கடையில் இருந்து வாங்கியா..." என்று தோழனை விரட்ட...

"ஏன் உன் வீட்டில் சாப்பிடறதுக்கு ஒண்ணும் இல்லையா...?" என்று விஜய் கேட்டான்...

"சாமி... நீ போய் என் வீட்டில்... அட போ சாமி சும்மா விளையாடிக்கிட்டு..." என்று கூறி அவள் சிரிக்க...

"நெஜமா தான் சொல்றேன்..." அவன் சொன்னதும் அவளுக்குக் கையும் ஓடவில்லை... காலும் ஓடவில்லை...

"மெய்யாலுமா சாமி..." எனப் பல முறை அவனிடம் கேட்டு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டவள் பரபரப்போடு சமையலறைக்குச் சென்றாள்...

அடுத்த அரை மணி நேரத்தில் விஜய்க்கு பிடித்த பூரி, கிழங்கை செய்தவள் ஆவி பறக்க அதை எடுத்து வந்து அவனிடத்தில் நீட்டினாள்...

"பாண்டி... நம்பி சாப்பிடலாமா...?" என்று சந்தேகத்துடன் விஜய் பாண்டியனை பார்க்க...

"நீ சாப்பிடு விசய்... அப்படி உனக்கு ஏதாச்சும் ஆச்சுன்னா பக்கத்துல தான் டாக்டர் இருக்காரு... கவலைப்படாதே..."

என்று அவன் சிரியாமல் உரைக்க...

"டேய் பாண்டி..." என்று அவள் நண்பனை அடிக்கப் போனாள் கோபத்துடன்...

"நீ வீணா கொலை பழியில் மாட்டிக்கக் கூடாதேன்னு உன் மேலுள்ள அக்கறையில் தான் சொன்னேன் புள்ள..." என்று சொன்ன பாண்டி அவள் கொடுத்த அடிகளைச் சிரித்தபடி வாங்கிக் கொண்டான்...

கயல்விழியும் அன்னையுடன் சேர்ந்து கொண்டு பாண்டியனை மொத்தியது...

அவர்கள் அடிக்கும் லூட்டியை பார்த்த விஜய் வாய் விட்டுச் சிரித்தான்... வெகு நாட்களுக்குப் பின் அவன் மனதார சிரிக்கிறான்...

"நீ சாப்பிடு சாமி..." என்ற முத்துபேச்சி பாண்டியனை அடித்து ஓய்ந்தவளாய் தரையில் சரிந்து அமர்ந்தாள்...

விஜய் சாப்பிடுவதற்கு முன் கயல்விழியிடம், "நீ சாப்பிடறியா பேபி..." என்க...

"கயலு... நீயும், நானும் சேர்ந்து சாப்பிடுவோம்..." என்று பாண்டியன் சின்னவளை அழைத்துக் கொண்டு உள்ளே செல்ல...

அதைப் பார்த்த முத்துபேச்சி, "இப்போ மட்டும் உனக்கு எதுவும் ஆகாதா...?" என்று சத்தம் போட...

"அதெல்லாம் எனக்கு எதையும் தாங்கும் வயிறாக்கும்..." என்று பதிலுரைத்த பாண்டியன் தனது வாயில் இரண்டு பூரிகளை ஒரே நேரத்தில் திணித்தான்...

"அப்புறம் சாமி... வீட்டில் எல்லாரும் நல்லாயிருக்காங்களா...? தங்கச்சி, தம்பிக்கு எல்லாம் கல்யாணமாகிருச்சா..."

"ம்... ஆகிருச்சு... தம்பிக்கு ஒரு பையன் இருக்கான்... தங்கச்சிக்கு இப்போ ஏழாம் மாசம் நடக்குது..." என்று

பேசியபடி அவன் சாப்பிட துவங்கினான்...

அவன் வேக வேகமாய்ச் சாப்பிடுவதைக் கண்டு, "நல்லாயிருக்கா சாமி... உங்க வூட்டு கணக்கா எனக்கு ருசியா சமைக்க வராது..."

"ரொம்ப நல்லாயிருக்கு..." என்று கூறியவன் வெகு நாட்களுக்குப் பின் வயிறார உண்டான்...

மேலும் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு கிளம்பி சென்ற விஜய் அடுத்தப் பத்து நிமிடத்தில் அவளது வீட்டிற்கு மீண்டும் வந்தான்...

மடியில் மகளை அமர வைத்துக் கொண்டு அவளின் தலையைப் பரிவுடன் வருடி கொண்டு இருந்த முத்துபேச்சியைக் கண்டு அவனுள் இரக்கம் சுரந்தது...

"பேச்சி..." என்று அவன் அவளை அழைக்க...

அதில் திடுக்கிட்டு விழித்தவள், "என்ன சாமி... ஏதாவது மறந்து விட்டுட்டு போயிட்டியா..." என்று பதட்டத்துடன் எழுந்தபடி கேட்க...

"இல்லை... பேபிக்கு ஒண்ணும் வாங்கிக் கொடுக்கலையே அதான்..." என்றவன் சாக்லெட் அடங்கிய கவரை கயல்விழியிடம் நீட்டினான்...

அவள் தயங்கியபடி அன்னையைப் பார்க்க...

"வாங்கிக்கோ கண்ணு..." என்று அன்னை சொன்னதும்...

முகம் மலர அவனின் கைகளில் இருந்து அந்தக் கவரை வாங்கிய கயல்விழி, "தேங்க்ஸ் அங்கிள்..." என்றாள் சிறு சிரிப்புடன்...

அதை அங்கீகரித்தவனாய் புன்னகையுடன் அவளது கன்னத்தில் தட்டியவன், "பை பேபி..." என்று சின்னவளிடம் உரைத்தவன்,

"வர்றேன் பேச்சி..." என்று அவளிடம் விடைப்பெற்றுச் சென்றான்...

அன்று மாலை வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் வெளியில் சென்றிருக்க விஜய் மட்டும் வீட்டிலிருந்தான்... வழக்கம் போல் யாரும் அவனை அழைக்கவில்லை... வழக்கம் போல் அவனும் அதை எதிர்பார்க்காதவனாய்ப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை...

மிகவும் போரடிக்கவும் வெளியில் சென்று ஊரை சுற்றி வரலாம் என்று எண்ணி உடை மாற்றிக் கிளம்பினான்...

அந்நேரம் வீட்டின் அழைப்பு மணி அடித்தது... அவன் வந்து கதவை திறந்ததும் அங்கு நின்றிருந்தவரை கண்டு ஆச்சிரியப்பட்டுப் போனான்... அவரும் அப்படியே...

"சாமி...", "பேச்சி..." என்று இருவரும் ஒருவரை ஒருவர் ஆச்சிரியத்துடன் பார்த்து அழைத்துக் கொண்டனர்...

"உள்ளே வா பேச்சி..." அவன் வாசலில் இருந்து நகர்ந்து வீட்டினுள் செல்ல வழி விட...

"வேண்டாம் சாமி... அது சரி வராது..." என்றவள் வாயிலில் நிற்க...

"நீ இன்னும் திருந்தலையா...?" என்று போலி முறைப்புடன் அவன் முறைக்க...

"நான் திருந்தணும்ன்னு நினைச்சாலும் உன்னை மாதிரி ஆளுங்க எங்க சாமி திருந்த விடுறாங்க... எங்களுக்கான சலுகையை நாங்களே எடுக்க நினைச்சாலும் எங்கே நீங்க விடுறீங்க... தீட்டுன்னு சொல்லி தீண்டத் தகாத பொருளா தானே எங்களை ஒதுக்கி வச்சியிருக்கீங்க..."

அதைக் கேட்டு அவனது முகம் மாறிப் போனது... அதைக் கண்டு கொண்டவளாய் அவசரமாய் அவள்,

"நான் உன்னைய சொல்லலை சாமி... எதார்த்தத்தைச் சொன்னேன்... ஆனா நீ ரொம்ப ரொம்ப நல்லவன்..." என்று சொல்ல...

"அப்போ வீட்டுக்குள் வா..." என்று விடாப்பிடியாய் அவன் அழைக்க... அதே விடாப்பிடியுடன் அவள் அதை மறுத்துவிட்டாள்...

"ஆமாம் நீ எப்படி இங்கே...? பழைய வீட்டில் இல்லையா...?" என்று அவள் கேட்டாள்...

"இல்லை... அது வாடகை வீடு தான்... இந்த வீடு இப்போ தான் வாங்கினது..." என்றான் பதிலாக...

"ஓ..." என்றவளை பார்த்து,

"அது சரி நீ எதுக்கு ஃபெல் அடிச்ச..."

"அது வந்து சாமி மீதமிருக்கிற சாப்பாட்டை எங்க ட்ரஸ்ட்ல இருக்கிற ஆளுங்க ஒவ்வொரு ஏரியாவுக்கும் போய் வாங்கிட்டு வருவாங்க... அது மாதிரி இன்னைக்கு நான் இங்கே வந்திருக்கேன்..."

"ஆமாம்... அம்மா சொன்னாங்க..." என்றவன் உள்ளே சென்று கவரில் கட்டி வைக்கப்பட்டிருந்த உணவு பொட்டலத்தைக் கொண்டு வந்து அவளிடம் நீட்டினான்...

"ரொம்பத் தேங்க்ஸ் சாமி..." என்றவள் அதை வாங்கித் தன் கையிலிருந்த பெரிய சாக்குப் பையில் பத்திரமாக வைத்து கொண்டாள்...

"இதைக் கொண்டு போய் என்ன பண்ணுவீங்க...?" என்று கேட்டபடி அவன் வீட்டின் கதவை பூட்டினான் வெளியில் செல்வதற்காக...

"உங்களுக்குத் தான் இது பழசு... ஆனா என்னைய மாதிரி ஆளுங்களுக்கு இது தான் சாமி பிரியாணி சோறு..." என்று சிரித்தபடி சொன்னவளின் கண்ணில் இயலாமையில் வறுமையில் வாழ்ந்ததின் வலி அப்படியே தெரிந்தது...

"ஒரு காலத்தில் நீ கஷ்டப்பட்ட தான் இல்லைங்கல்ல... ஆனா இப்போ நல்லாத்தானே இருக்க... இப்போ எதுக்கு இந்தத் தேவையில்லாத பேச்சு...?" என்று அவன் அவளைக் கடிய...

"ஆனா என்னைய மாதிரி கஷ்டப்படுறவங்க நிறைய இருக்காங்க சாமி..." என்றவள், "இந்தச் சாப்பாட்டை எல்லாம் சேகரிச்சுப் பட்டினியில் இருக்கிறவங்களுக்குக் கொடுத்துடுவோம்..." என்றாள் அவனது கேள்விக்கு விடையாக...

"நானும் உன் கூட வரவா..." ஆர்வத்துடன் கேட்டவனைக் கண்டு சந்தோசத்துடன் தலையாட்டியவள்,

"ஏசிபி சார் எங்க கூடச் சேர்ந்து சேவை செய்றது எங்களுக்கு நல்ல விளம்பரம் தான் இல்லையா... வா... வா..." என்று விரிந்த புன்னகையுடன் அவள் சொல்ல...

"நான் ஏசிபியா வரலை... உன்னோட நண்பனா தான் வர்றேன்..." என்றபடி கிளம்பியவன் தனது இரு சக்கர வாகனத்தில் அவளது ஸ்கூட்டியை பின் தொடர்ந்தான்...

சிறிது தூரம் சென்றதும் அந்தப் பாலத்தின் அடியில் இவளை போல் உணவு கொண்டு வந்தவர்கள் ஒரு பத்து பேர் நின்றிருந்தனர்... எல்லா உணவு வகைகளையும் சேகரித்துப் பின் பங்கு போட்டு பிரித்து அங்குச் சாலையில் வசிக்கும் மனிதர்களுக்கு இலையில் வைத்து பரிமாறினர்... பசியுடன் இருந்தவர்கள் கண்கள் கலங்க நன்றி கூறி அதை வாங்கி உண்டது மனதை பெரிதும் நெகிழ்த்துவதாய் இருந்தது...

அந்த மாதிரி ஒரு நெகிழ்ந்த மனநிலையில் விஜய் இருந்தான்... அவர்கள் உண்ணும் உணவில் தனது வீட்டின் உணவும் ஒரு கைப்பிடி இருப்பதைக் கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"ரொம்பப் பெரிய விசயம் பண்ற பேச்சி... நீ மட்டும் நல்லா இருந்தா போதாதுன்னு இந்தச் சமுதாயமும் நல்லா இருக்கணும்ன்னு நினைக்கிற பாரு... உண்மையில் நீ கிரேட் தான்..." என்று அவளை மனதார பாராட்டினான் அவன்...

"இது எல்லாம் கொஞ்சம் தான் சாமி... இவங்களுக்குச் செய்றதுக்கு இன்னும் நிறைய இருக்கு... அதுக்குத் தான் அரசியலில் நுழைஞ்சேன்... நாம நினைச்சது நடக்கணும்ன்னா அதிகார பலம் நம் கையில் இருக்கணும்..." என்று தீவிரமான குரலில் சொன்னவள்,

"உனக்கு ஒண்ணு தெரியுமா சாமி... இந்த எலெக்சன்ல எனக்குச் சீட் கிடைச்சியிருக்கு..." என்றாள் சந்தோசத்துடன்...

"வாழ்த்துக்கள்..." அவளது கையைப் பற்றிக் குலுக்கி வாழ்த்து சொன்னவனின் மனம் தானே வென்றது போல் அத்தனை சந்தோசப்பட்டது அவளை நினைத்து...

"நீ சாதிப்ப... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றான் நம்பிக்கையான குரலில்...

அதைக் கேட்டு ஆமோதித்துப் புன்னகைத்தவள், "சரி சாமி நீ கிளம்பு..." என்று அவனைக் கிளம்பச் சொல்ல...

"நீ வீட்டுக்கு போகலையா...?"

"இல்லை... இங்கே இருக்கிற புள்ளைங்களுக்குப் பாடம் சொல்லி கொடுத்துட்டு நான் கிளம்ப இன்னும் ரெண்டு மணி நேரமாகும்..."

"பிஈ படிச்ச நீயே பாடம் சொல்லி கொடுக்கும் போது எம்ஈ படிச்ச நான் சொல்லி கொடுக்க மாட்டேன்னா..." புருவம் உயர்த்தி அவன் கேட்க...

அவன் தெளிவாக வகுப்பு எடுக்கும் பாங்கு அவளுக்கும் தெரியுமாதலால் புன்னகையுடன் சரியென்றாள்...

அடுத்த இரண்டு மணி நேர பொழுது அவனுக்கு அங்கிருந்த சாலையோர குழந்தைகளுடன் இனிமையாகக் கழிந்தது... ஒரேடியாகப் படிப்பு என்றில்லாமல் சிரிப்பும் கலாட்டாவுமாய்ச் சென்றது அந்த வகுப்பு...

"புள்ளைங்களா சார் பெரிய இன்ஜினியரிங் படிப்பு படிச்சவங்க... அதனால கணக்குப் பாடம் நல்லா சொல்லி

கொடுப்பாங்க..."

"மேடம் மட்டும் இன்ஜினியர் இல்லாம வேறு என்ன...? என்னை விடப் படிப்பில் சூரப்புலி உங்க மேடம்..." என்றான் அவளை விட்டு கொடுக்காது...

"ஐய்யே சாமி... நான் சொன்ன கணக்கே வேற... நீ காலேசுல பொட்டை புள்ளைங்களைக் கணக்கு பண்ணுவியே அதைச் சொன்னேன்..." சிரியாமல் அவனது மூக்கை உடைத்தாள் அவள்...

"இது தெரியாம நான் தான் உனக்கு வலிய வந்து காம்ப்ளிமெண்ட் கொடுத்துட்டேனோ..." என்று தலையில் கை வைத்து சோகமாய் உரைத்தவன்,

"போனா போகுது என் பேச்சியம்மனை தானே புகழ்ந்து சொன்னேன்..." என்று அவளைப் 'பேச்சியம்மன்' என்றழைத்து அவளுள் சூட்டை கிளப்பினான்...

"சாமி..." என்று சிணுங்கியவளை கண்டு சிரித்தவன் பாடத்தைக் கற்பிக்க ஆரம்பிக்க, அவளும் வேலையில் கவனமானாள்...

வகுப்பு முடிந்து அவள் கிளம்பும் போது, "நேரமாகிருச்சே தனியா போயிருவியா...?" என்று அவன் கேட்க...

"எனக்கு என்ன பயம்..." என்று தெனாவெட்டாய் கூறியவளை கண்டு,

"அதானே... பயம் தான் உன்னைக் கண்டு பயப்படணும்..." என்றவன் அவளது அலைப்பேசியை வாங்கித் தனது அலைப்பேசிக்கு அழைத்துத் துண்டித்தவன்,

"இது என்னோட நம்பர்... எதுக்கும் வச்சுக்கோ... அது மாதிரி வீடு போய்ச் சேர்ந்ததும் எனக்கு ஃபோன் பண்ணு..." என்றபடி அலைப்பேசியை அவளிடம் கொடுத்தான்...

"ஐய்யே... ரொம்பத்தே அக்கறை..." என்று பழிப்பு காட்டியவள் அவன் மேலே பேசும் முன் தனது ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு சிட்டாகப் பறந்தாள்...

"நீ ரௌடியே தான்டி..." என்று சிரித்தபடி தனது இரு சக்கர வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு வீடு நோக்கி சென்றான் அவன்...

ஏனோ இன்று அவனது மனதுக்கு அத்தனை சந்தோசமாய், நிறைவாய் இருந்தது... கடந்த சில வருடங்களாக அவனிடத்தில் இல்லாத மகிழ்ச்சி இன்று அதிகளவில் நிறைந்திருந்தது...

காதலையும் தாண்டி வேறு பல நல்ல விசயங்கள் வாழ்க்கையில் இருப்பதை முத்துபேச்சி இன்று அவனுக்கு நன்றாக உணர்த்திவிட்டாள்... இனி அவனும் அவளின் வழியைப் பின்பற்ற முடிவு செய்தான்...

அதே நேரம் சற்றுத் தூரத்தில் முத்துபேச்சியின் ஸ்கூட்டியை தடுத்து நிறுத்திய ஒரு வெளிநாட்டுக் கார் ஒன்றில் இருந்து இறங்கிய நான்கு இளைஞர்களால் அவள் அடுத்தச் சில நிமிடங்களில் கடத்தப்பட்டாள்...

வாசம் நேசமாகும்...!!!

தனது ஸ்கூட்டியின் முன் திடீரென்று இப்படி ஒரு கார் வழி மறித்தார் போன்று வந்து நிற்கும் என்று சற்றும் எதிர்பாராத முத்துபேச்சி உடனடியாகப் பிரேக்கை அழுத்தி தனது ஸ்கூட்டியை நிறுத்தினாள்...

"டேய் கஸ்மாலம்... வீட்டுல சொல்லிக்கினு வந்தியா...?" என்று அவள் காரை பார்த்து பெருங்குரலெடுத்துச் சத்தம் போட துவங்கும் போது அதிலிருந்து நான்கு ஆண்கள் இறங்கினர்...

முகத்தை அடையாளம் காணாதவாறு அவர்களின் முகம் பெரிய கைக்குட்டையால் மறைக்கப்பட்டு இருந்தது...

"டேய் யாருடா நீங்க எல்லாம்...?"

அப்போதும் சற்றும் பயப்படாமல் குரல் கொடுத்தாள் அவள்... முகமூடி கொள்ளையர்கள் போல் அவர்கள் முகத்தை மூடியிருந்த போதும் அவர்களது உடையைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை... பெரிய இடத்து ஆட்கள் போன்று தான் தெரிந்தது...

மேலும் அவர்கள் அவள் அருகில் நெருங்கி வரவும் அவள் சுதாரித்துக் கொண்டு தனது வண்டியை கிளப்பிக் கொண்டு செல்ல முயன்றாள்... அவள் என்ன தான் தைரியமான பெண்ணாக இருந்த போதிலும் தனியாக நான்கு ஆண்களைச் சமாளிப்பது என்பது நடவாத காரியம்...

அதற்குள் அந்த ஆடவர்களில் ஒருவன் வேகமாக அவள் கழுத்தில் இருந்த ஷாலை பிடித்து இழுத்தான்... வண்டியோ முன் பக்க செல்ல, அவனோ அவளது ஷாலை பின்பக்கம் இருந்து வேகமாய் இழுக்க அடுத்த நொடி முத்துபேச்சி வண்டியிலிருந்து தூக்கி எறியப்பட்டு நடு ரோட்டில் விழுந்தாள்...

அவள் கழுத்தில் இருந்த ஷால் இரண்டு துண்டாகக் கிழிந்து அந்த ஆடவனின் கையில் ஒரு துண்டும், ரோட்டில்

ஒரு துண்டுமாய்க் கீழே விழுந்து கிடந்தது... மல்லாக்க தூக்கியெறியப்பட்டதில் அவளது பின்னந்தலையில் அடிப்பட்டு இரத்தம் வழிந்தது...

"ம்மா..." வலியில் முனங்கியவளை அந்தக் கயவர்கள் கூட்டம் வேகமாக அள்ளி சென்று தாங்கள் வந்த காரில் திணித்தது...

அந்த நிலையிலும் அவள் விடாது அவர்களின் பிடியில் இருந்து திமிறத்தான் செய்தாள்... அவள் திமிறுவதைக் கண்டு ஒருவன் மயக்க மருந்தை எடுத்து அவளது மூக்கில் வைத்து அழுத்த அடுத்த நொடி அவள் ஆழ்ந்த மயக்கத்திற்குச் சென்றுவிட்டாள்...

மனவுறுதி கொண்ட அந்தத் தைரியமான பெண்ணை மயக்க மருந்து செயலிழக்க செய்திருந்தது...

சற்று தள்ளி ஒதுக்குப்புறமாய் இருந்த அந்தப் பாழடைந்த கட்டிடத்தை நோக்கி அவர்களது கார் விரைந்து சென்றது... சமூக விரோத செயல்களைச் செய்து வரும் கும்பல்களின் புகலிடம் அந்தக் கட்டிடம்... அதனால் அந்தக் கட்டிடத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தனர் தாங்கள் செய்யப் போகும் காரியத்திற்கு...

அங்கு முத்துபேச்சியைத் தூக்கி சென்றனர் அந்த நால்வரும்...

"டேய் இவளோட திமிரை அழிக்கணும்டா... ஒரு பொட்ட நாயி என்னைக் கையை நீட்டி அடிச்சிட்டா டா... ஒரு ஆம்பிளையை அடிச்சா என்னவாகும்ன்னு நான் இவளுக்குக் காட்ட வேண்டாம்... ஆம்பிளை நினைச்சா என்ன வேணும்ன்னாலும் செய்வான்ங்கிறதை இவ இன்னைக்குத் தெரிஞ்சிக்கணும்..." என்று வன்மம் கலந்த குரலில் கூறியவன் வேறு யாருமில்லை சாட்சாத் நேற்று முத்துபேச்சியிடம் அடிவாங்கியவன், விஜய்யால் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டவன்...

நேற்றிரவே தந்தையின் செல்வாக்கால் அவன் வெளியில் வந்துவிட்டான்...

அவன் பெயர் சந்தோஷ்... அவனின் தந்தை சுந்தரலிங்கம் பெரிய தொழிலதிபர்... ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று எல்லாக் கட்சியிடத்திலும் நிரம்பச் செல்வாக்கு பெற்றவர்... யார் ஆட்சிக்கு வந்தாலும் அவரது தொழிலுக்கு எந்தவித தொந்திரவும் வராது... அந்தளவுக்கு அவர் எல்லாக் கட்சிக்கும் தேர்தலின் போது பணத்தைத் தண்ணியாய் வாரியிறைத்து செலவழிப்பார்... அதனால் எல்லாக் கட்சிகளும் அவருடன் நட்பு பாராட்டி வந்தது... அந்தத் தைரியம் தான் அவர் பெற்ற மகனை மேலும் மேலும் குற்றங்களைச் செய்யத் தூண்டியது...

அவன் முத்துபேச்சியை வன்புணர்வதற்கு முனைந்த போது அந்த ஆழ்மயக்கத்திலும் அவளது பெண்மை விழித்துக் கொண்டது... தொடக்கூடாத உடல் பாகங்களை ஒரு அந்நிய ஆண் தொடுகையில் உடல் கூசி அருவருப்பில் சிலிர்க்க அவளுள் உறங்கி கிடந்த நினைவுகள் மெல்ல மேலெழும்ப ஆரம்பித்தது...

அவளது மனதில் தன்னவனுடன் தான் முழுமனதோடு, காதலோடு கூடிய கூடல் நினைவில் எழுந்தது... அதே சமயம் மனம் ஒன்றாத அந்நிய ஆணின் தொடுகையையும் அவளது அறிவு உணர்ந்தது... அடுத்த நொடி பட்டென்று கண் விழித்தவள் முயன்று தன் சக்தி எல்லாவற்றையும் ஒன்று திரட்டி தனது முழங்காலால் அவனது உயிர்நாடியில் ஓங்கி ஒரு உதை விட்டாள்...

காம சுகத்தில் மூழ்கி திளைத்துக் கொண்டு இருந்தவனோ அவளது இந்தத் திடீர் செய்கையை எதிர்பாராது வலியில் அலறினான்...

அவனது பிடி தளரவும் அவள் தப்பித்து எழுந்து ஓட முயற்சிக்கும் போது மற்ற மூவரும் அவளைப் பிடித்துக் கொண்டனர்... அவர்களிடம் இருந்து திமிறி விலகியவள் தான் கற்றிருந்த தற்காப்பு கலையைப் பயன்படுத்தி அவர்களை அடித்து வீழ்த்திவிட்டு அங்கிருந்து ஓடினாள்...

அவர்கள் நால்வரும் அவளை விடுவதாய் இல்லை... அவளைப் பின் தொடர்ந்து ஓடி வந்தனர்...

சிறிது தூரம் சென்றதும் அங்கு ஆறு பேர் அடங்கிய கும்பல் ஒன்று சாராயத்தை ஊற்றி குடித்துக் கொண்டிருந்தனர்... அவர்களைக் கண்டதும் தைரியம் வரப் பெற்றவளாய் நேரே அவர்களிடம் சென்றவள்,

"அண்ணாத்தை... அங்கன நாலு பொறுக்கிங்க என்னைய தொரத்திக்கிட்டு வாரானுங்க... காப்பாத்துங்க அண்ணாத்தை..."

மூச்சு வாங்க கூறியவளால் மேலே ஓட முடியவில்லை... சாதாரணமாக இருந்திருந்தால் ஓடி போயிருந்திருப்பாள்... ஆனால் தலையில் அடிப்பட்டு இரத்தம் வழிந்ததால் அவளால் நிலையாய் நிற்க முடியாது உடல் தள்ளாடியது பலவீனத்தில்...

அதற்குள் அந்த நால்வரும் அவளை நெருங்கி வந்திருந்தனர்... முத்துபேச்சி ஒருவித மயக்க நிலையில் இருந்ததால் அவளால் அவர்களைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை... அப்படி அவள் அவர்களைக் கவனித்துப் பார்த்திருந்தால் அவனை நன்கு அடையாளம் கண்டிருப்பாள்...

சந்தோஷ் அந்த ஆறு பேரை கண்டு பேச ஆரம்பித்தான்...

"பேசாம அவளை எங்க கிட்ட ஒப்படைச்சிட்டு போயிருங்க... இல்லாட்டி எங்க கூடச் சேர்ந்து நீங்களும் அவளைப் பங்கு போட்டுக்கோங்க..." என்று கூறியபடி அவன் விகாரமாகச் சிரித்தான்...

அதைக் கேட்டு அவளுக்குப் பக்கென்று ஆனது... இப்போது தன் நிலை அவளுக்கு மிகவும் பயங்கரமாய்த் தெரிந்தது... அப்போது அவளின் கண்முன் மகளின் மலர் முகம் தான் நினைவிலாடியது... மகளுக்காகவாவது அவள் உயிர் வாழ்ந்தே ஆக வேண்டும் என்கிற வைராக்கியம் மனதில்

எழ தெம்பை வரவழைத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிக்க முயன்றாள்...

"முத்துத் தங்கச்சி... நீ பயப்படாதேம்மா... இவங்களை நாங்க பார்த்துக்கிறோம்..." அந்த ஆறு பேரில் ஒருவன் அப்படிச் சொன்னதும் அவள் நிம்மதி அடைந்தவளாய் அங்கிருந்த மரத்தின் மீது சாய்ந்து கொண்டாள்...

அந்த ஆறு பேரும் அவர்கள் நால்வரையும் அடித்து நையப்புடைத்து விட்டனர்... அவர்களது புஜபலத்தின் முன் செல்லமாய் வளர்க்கப்பட்ட அந்த நால்வரும் தாக்குப்பிடிக்க முடியாது அலறியடித்துக் கொண்டு ஓடி போயினர்... விரட்டி சென்று மற்றவர்கள் அவர்களைப் பிடிக்கும் முன் அவர்கள் தங்களது காரிலேறி தப்பிச் சென்றனர்...

மீண்டும் முத்துபேச்சி அருகில் அந்த ஆறு பேரும் வந்தனர்...

"தங்கச்சி... நீ எப்படி இங்கே..." என்று கேட்டான் அவர்களில் ஒருவன்...

அங்கிருந்த மெல்லிய விளக்கொளியில் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் அவள், "நீங்க யாரு அண்ணாத்தை...?" என்றாள் கண்களைச் சுருக்கி கொண்டு...

"நான் மாணிக்கம்... என்னைய அடையாளம் தெரியலையா தங்கச்சி... போன தபா எம் புள்ளைக்கு ஸ்கோலு பீஸ் கட்டினியே... நினைவு இல்லையா...?"

அவன் சொல்லவும் மாணிக்கத்தை அவளுக்கு நினைவு வந்தது... அவன் அவளது ஏரியாவில் வசிப்பவன்... அடிதடி தான் அவனது தொழில் என்றாலும் அவனது மனதிலும் ஈரம் இருப்பதை உணர்ந்து அவளது கண்கள் கரித்தது...

"ரொம்பத் தேங்க்ஸ் அண்ணாத்தை... ஸ்கூட்டியில் வரும் போது என்னைய கீழே தள்ளி மயக்க மருந்து கொடுத்து தூக்கிக்கினு வந்துட்டாங்க இந்தப் பன்னாடை பரதேசிங்க..." என்று அவள் அவர்களைத் திட்டினாள்...

"யாருன்னு தெரியுமா...?"

"தெரியலையே அண்ணாத்தை..."

"வர வர பொட்டை புள்ளைங்களுக்குப் பாதுகாப்பே இல்லாம போயிருச்சு..." என்று அங்கலாய்த்த மாணிக்கம்,

"வாம்மா... வீட்டாண்ட வரை இட்டாந்துட்டு போறேன்..."

"வேணாம் அண்ணாத்தை... நானே போய்க்கிறேன்..." என்றவள் தட்டுத் தடுமாறி நடந்தாள்...

அவள் தடுமாறுவதைக் கண்டு அவள் அருகில் வந்தவன், "ஐயோ... என்னம்மா இது தலையில் இருந்து இவ்வளவு ரத்தம் வருது... வா டாக்டர் கிட்ட காட்டி மருந்து போட்டுட்டு வீட்டுக்கு போவலாம்..." என்றவன் தனது சகாக்களிடம் விடைப்பெற்று அவளுடன் நடந்தான் துணையாக...

இருபத்தினாலு மணி நேர மருத்துவமனையில் அவளது தலைக் காயத்திற்கு மருந்து போட்டு விட்டு பிறகு வீடு வரை கொண்டு வந்து விட்ட பின்னரே மாணிக்கம் அவனது வீடு சென்றான்...

அவளைக் காணாது பாண்டியன் குடியிருப்பின் வாயிலில் நின்று கொண்டிருந்தான் தவிப்புடன்... இவளை கண்டதும் வேகமாய் அருகில் வந்தவன்,

"ஏன் புள்ள இம்புட்டு நேரம்...? ஃபோன் பண்ணாலும் எடுக்கலை..." என்று கேட்டவன் அப்போது தான் அவளது நலுங்கிய தோற்றம் மற்றும் அவளது தலைக்கட்டை கவனித்தான்...

"என்ன புள்ள ஆச்சு...?" என்று பதறி போய்த் துடிதுடித்துப் போய்விட்டான் அவன்...

அவனது அன்பு கண்டு அவளது மனம் நெகிழ்ந்த போதும், "இங்கேயே எல்லாத்தையும் பேசணுமா...? வீட்டுக்குப் போய்ப் பேசலாம் வா..." என்று அவனை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி சென்றாள்...

அங்கு வரவேற்பறையின் மூலையில் உறங்கி கொண்டிருந்து மகளைப் பரிவுடன் பார்த்தவள், "கயலு என்னைய ரொம்பத் தேடினாளோ பாண்டி...?"

"ஆமாம் புள்ள... இவ்வளவு நேரம் நீ எங்கேன்னு கேட்டு அனத்திட்டு இப்பத்தே செத்த நேரத்துக்கு முந்தி கண் அசந்துச்சு..."

அதைக் கேட்டவள் கண்ணும், மனமும் கலங்கியது... தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அம்மா எங்கே...?"

"அது எப்பயும் போலச் சரக்கு அடிச்சிட்டு தூங்குது..." என்று பதில் கூறியவன், "என்ன நடந்தது புள்ள...?" என்றான் பதற்றம் தணியாத குரலில்...

"கொஞ்சம் இரு பாண்டி... உடுப்பு மாத்திட்டு வந்து பதில் சொல்றேன்..." என்றவள் உள்ளே சென்று முகத்தைக் கழுவி விட்டு வேறு உடை மாற்றிக் கொண்டு அங்கு வந்து அமர்ந்தவள் மகளைத் தனது மடியில் படுக்க வைத்து கொண்டாள்...

"இப்பயாச்சும் சொல்லு புள்ள..." கவலையுடன் கேட்டான் பாண்டியன்...

மீண்டும் அவன் கேட்டதும் நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் கூறியவள், "அந்த நேரம் என் கண்ணுக்குள்ள நின்னது என் மக மட்டும் தான் பாண்டி... நான் இல்லைன்னா அம்மா பிச்சை எடுத்து கூடப் பிழைச்சிக்கும்... நீயும் உன் உழைப்பில் வாழ்ந்திருவ... ஆனா நான் இல்லாம என் கயலு எப்படி இருப்பா...?" என்று கூறியவளின் கண்களில் இருந்து கண்ணீர் சொட்டியது...

முத்துபேச்சி அழுது அவன் அவ்வளவாகப் பார்த்தது இல்லை... இத்தனை நாள் வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்களை அவள் சந்தித்திருக்கிறாள்... அப்போது எல்லாம் அவள் ஒரு போதும் இப்படிக் கண் கலங்கியது

இல்லை... அப்படிப்பட்டவள் இப்போது கண் கலங்குகிறாள் என்றால்...?

"ஏன் புள்ள இப்படி எல்லாம் பேசுற... கயலுக்கு நானில்லையா... ஆத்தாவையும் நான் பார்த்துக்க மாட்டேனா... ஆனா இது எதுவும் அவசியமே இல்லை புள்ள... உனக்கு ஒண்ணுன்னா அவங்களை நான் சும்மா விட மாட்டேன்... வெட்டி பொலி போட்டுருவேன் புள்ள..." என்று அய்யனாராய் சிலிர்த்து நின்றான் பாண்டியன்...

"அந்த நாதாரிங்களை உனக்கு அடையாளம் தெரியுமா...? சொல்லு புள்ள... அவங்களை வெட்டி சாய்ச்சிட்டு ஜெயிலுக்குப் போகவும் நான் ரெடி... உனக்காக என் உசிரையும் கொடுப்பேன் புள்ள..." உணர்ச்சிவசப்பட்டு அவன் கூற,

அந்தச் சத்தத்தில் கயல்விழி லேசாக அசைந்தாள்... அதைக் கண்டு முத்துபேச்சி அவளைத் தட்டி கொடுக்க அன்னையின் இதமான தட்டலில் கயல்விழி மீண்டும் உறங்க ஆரம்பித்தாள்...

"கொஞ்சம் சத்தத்தைக் குறை பாண்டி... புள்ள எழுந்திரிக்கிறா இல்ல..." என்று நண்பனை சத்தம் போட்டவள் அவனிடம் தனது ஸ்கூட்டி இருக்கும் இடத்தைச் சொல்லி,

"யாராவது அதை எடுத்துட்டு போயிர போறாங்க பாண்டி... வெரசா போய் எடுத்துட்டு வந்திடு..."

"சரி புள்ள... கதவை தாழ்ப்பா போட்டுட்டு பத்திரமா இரு புள்ள... நான் ஸ்கூட்டியை எடுத்துட்டு வந்துட்டு வீட்டு வாசலில் தான் படுத்திருப்பேன்... எந்த ஒரு ஆபத்தும் என்னைய தாண்டி தான் உன்னை அண்டணும்..." என்றவன் வெளியில் சென்றான்...

அவன் சென்றதும் கதவை தாழ்ப்பாள் போட்டு விட்டு வந்து மீண்டும் மகள் அருகில் வந்து அமர்ந்தாள் முத்துபேச்சி... மகளைப் பார்க்க பார்க்க தன்னவனின் ஞாபகம் வந்தது...

அன்று அவனது தொடுகையில் உடல் நெகிழ்ந்து தன்னை அவனுக்கு அர்ப்பணம் செய்தது இன்றும் அவளது நெஞ்சில் தித்திப்பாய் இனித்தது...

அதே நேரம் அந்த இதமான சுகம் தனக்கு நீடிக்காத தனது தூரதிர்ஷ்டத்தை எண்ணி அவளது கண்கள் கலங்கியது...

'வேண்டாம் எதையும் நினைத்து கலங்காதே மனமே... முடிந்து போன எதையும் மாற்ற முடியாது... இது தான் எனக்குக் கிடைத்த வாழ்க்கை... இதைச் சந்தோசமாக வாழ பழகிக் கொள்ள வேண்டும்... கயல் மட்டுமே என் வாழ்க்கை...' என்று மனதை தேற்றி கொண்டாள்...

எல்லாப் பெண்களையும் போல் சாதாரணக் குடும்ப வாழ்க்கை வாழ வேண்டும் என்று அவளது உள்மனது ஏங்கிய போதும்... எப்போதும் அவளிடம் இருக்கும் 'போதும்' என்கிற குணம் இந்த வாழ்க்கை போதும் என்று எண்ணி தன்னைத் தானே தேற்றிக் கொண்டது...

அவள் எப்போதுமே இல்லாத ஒன்றிற்காக ஏங்க மாட்டாள்... இருப்பதை வைத்துச் சந்தோசப்பட்டுக் கொள்கிறவள் அவள்... அதனால் இப்போதும் அதையே நினைத்தாள்...

மகளை அணைத்துக் கொண்டு படுத்தவள் மனதில் மீண்டும் மீண்டும் தன்னவன் கொடுத்த கதகதப்பான சூடான முத்தங்களின் ஞாபக ஊர்வலங்களே... அத்தோடு அன்று அவன் பிதற்றிய காதல் மொழிகளும் சேர்த்து நினைவில் எழுந்தது...

அவனின் நினைவை தாங்க முடியாது எழுந்தமர்ந்தவள் தலையை இரு கைகளால் பிடித்துக் கொண்டாள்...

'என்றும் இல்லாத திருநாளாய் இன்று ஏன் அவனது நினைவுகள் அதிகமாய் என்னை ஆட்டுவிக்கிறது...?' என்று யோசித்தவளுக்கு அப்போது தான் ஞாபகம் வந்தது அந்த அந்நிய ஆடவனின் தொடுகை...

அருவருப்பில் முகம் சுளித்தவளுக்கு உமட்டி கொண்டு வருவது போல் இருந்தது... குளியலறைக்குச் சென்றவள்

அருவருப்பு தாங்காது உடலுக்குக் குளித்துவிட்டு வந்தாள்...

'அந்த நாய் மட்டும் யார்ன்னு அடையாளம் தெரியட்டும்... முதல்ல அவனோட ..... அறுத்துட்டு தான் மறு ஜோலி...' என்று நினைத்தவளின் முகம் ஆங்காரத்தில் ஜிவுஜிவெனச் சிவந்தது...

****

மறுநாள் விடியல் மிகவும் சோம்பலாக விடிந்தது முத்துபேச்சிக்கு... அவள் எழுந்த போது பாண்டி வெளியில் இருந்து வந்தான்...

"பாண்டி... எந்திருச்சிட்டியா... இரு காபி தண்ணி போட்டு தாரேன்..."

"புள்ள இப்ப மணி எத்தினின்னு தெரியுமா...? மணி ஒன்பது... கயலு புள்ள கூட ஸ்கோலுக்குக் கிளம்பி போயிருச்சு..."

"அடி ஆத்தி..." அடித்துப் பிடித்துக் கொண்டு அவள் எழுந்தாள்...

"ஒண்ணும் அவசரமில்ல புள்ள... மெதுவா எழுந்திரு..." என்றவன் சமையலறைக்குச் சென்று காபி எடுத்து வந்து முகம் கழுவி விட்டு வந்த அவளிடம் நீட்டினான்...

"நீ போடுற காபி தண்ணி மாதிரி இல்லாம சூப்பரா இருக்கும்... குடிச்சி பாரு புள்ள..." என்று தான் போட்ட காபி பற்றி அவன் தற்பெருமை பேச...

"அடேய்... நான் போடுற காபி உனக்குத் தண்ணியா..." என்று நாக்கை மடித்துக் கொண்டு அவள் அவன் அருகில் வர...

"நான் அப்படிச் சொல்லலையே புள்ள... நீ தானே அப்படிச் சொன்ன..." என்றான் அவன் அப்பாவியாக...

"நானா...? எப்போ...?" என்று யோசித்தவளுக்குச் சற்று முன் தான் கூறியது ஞாபகம் வர...

"டேய் உன்னை..." என்று அவனது முதுகில் இரண்டு அடி போட்ட பின்னரே ஓய்ந்து அமர்ந்தாள்...

"புள்ள... எதுக்கும் தலையில ஸ்கேனு பண்ணி பார்த்திடலாமா... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு..."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் பாண்டி... சின்னக் காயம் தான்..." என்று அவள் அதை மறுத்துவிட்டாள்...

அவனிடம் பேசியபடி தனது அலைப்பேசியை எடுத்து பார்த்தவள் அதில் விஜய்யிடம் இருந்து வந்த அத்தனை அழைப்புகளைக் கண்டு திகைத்து போனவளாய் அவனை உடனே அழைத்தாள்...

"நேத்து நான் உன் கிட்ட என்ன சொன்னேன்... வீட்டுக்குப் போனதும் எனக்கு ஃபோன் பண்ண சொன்னேனா இல்லையா...?"

அவளைப் பேச விடாது மறுமுனையில் அவன் படபடத்தான் கோபமாய்...

"அது ஒண்ணுமில்லை சாமி... கயலுக்கு மேலுக்குச் சொகமில்லை... அந்த டென்சன்ல ஃபோன் பண்ண மறந்திட்டேன்..." என்றாள் அவள் சமாளிப்பாய்...

"ஓ சாரி பேச்சி... இப்போ கயல்க்கு பரவாயில்லையா...?"

"இப்ப பரவாயில்லை..."

"ஈவினிங் நான் பார்க்க வர்றேன்..."

"ஐயோ வேண்டாம் சாமி..." என்று அவள் பதற...

"ஏன்...?" காவல்துறை அதிகாரியின் மூளை வேகமாய்க் குறுக்கே யோசித்தது...

"ஐய்யே... சாதாரணச் சளிக்குப் போய்ப் பெரிய விசயமா அலட்டுறியே சாமி..." என்று அவள் கேலி செய்யவும் தான் அவன் நிம்மதி பெருமூச்சு விட்டான்...

"சரி பேச்சி... நேரம் இருக்கும் போது பேசுறேன்..." என்று அவன் அழைப்பை வைத்ததும் தான் அவளுக்கு நிம்மதி வந்தது...

"நம்ம விசய் தம்பி கிட்ட இதைப் பத்தி சொல்லலாமா...? அவரு பெரிய போலீசு தானே..." என்று பாண்டியன் அவளிடம் கேட்க...

"சொல்லி...?" என்று கேள்வியாய் அவனைப் பார்த்தவள் பின் நக்கலாய்,

"எனக்குப் பந்தோபஸ்து போட சொல்லி ஏற்பாடு பண்ண போறியோ... வேணும்ன்னா அதுக்கு ஏசிபி சாரையே வர சொல்லலாமா...? போடா டேய்... அவங்க அவங்களுக்கு ஆயிரம் வேலையிருக்கும்... இதுல நாம வேற எதையாவது தொந்திரவு பண்ணிக்கிட்டு... விடு பார்த்துக்கலாம் பாண்டி..."

அந்த நேரத்துக்கு அவள் சொன்னது கேட்டு பாண்டியன் சமாதானமானாலும் அடுத்த வந்த நாட்களில் அவன் எப்போதும் முத்துபேச்சியுடன் துணைக்குச் சென்றான்...

"இந்தா... சும்மா என் பின்னாடி வராதே பாண்டி... வீட்டுல போய்க் கயலை பாரு... அம்மா சரக்கடிச்சிட்டு மல்லாக்க படுத்துக்கப் போகுது..."

"ஆத்தா கையில சொல்லிக்கினு தான் வந்திருக்கேன்... கயலை பத்திரமா பார்த்துக்கிட்டா தான் உனக்குச் சரக்கு வாங்கியாருவேன்னு... அதனால ஆத்தா கயலை பத்திரமா பார்த்துக்கும்..."

"சரக்குக்காகச் சொந்த பேத்தியை பார்த்துக்கிற அம்மா உலகத்திலேயே எனக்கு மட்டும் தான் வந்து வாய்ச்சிருக்கு..." என்று தலையில் அடித்துக் கொண்டாள் முத்துபேச்சி...

அதனாலேயே அவள் தன் மகளுக்காகத் தனது இரவு பணிகளை வெகுவாகக் குறைத்துக் கொண்டு நேரத்துடன் வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தாள்...

பாண்டியன் உடன் வருவதாலோ என்னமோ முத்துபேச்சிக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் அடுத்து வந்த நாட்கள் அமைதியாகக் கழிந்தது...

ஆனாலும் அந்தச் சம்பவம் அவளது மனதின் ஒரு மூலையில் உறுத்தி கொண்டே இருந்தது... அவ்வளவு எளிதில் அவளால் அதை மறந்து விட முடியவில்லை...

****

உணவு மேசையில் அமர்ந்திருந்த விஜய்க்குப் பொறுமை எல்லையைக் கடந்து கொண்டிருந்தது... அவனது அன்னை ஒரு தோசை சுட்டு எடுத்துக் கொண்டு வருவதற்கு அவன் அரை மணி நேரமாகக் காத்திருந்தான்...

முதலில் தம்பி வெங்கட் வந்து சாப்பிட அமர்ந்தான்... இவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... வழக்கம் போல் இவனும் அதைப் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... ஹாட் கேசில் இருந்த தோசையை இவன் எடுக்கப் போகும் முன் அதைக் கைப்பற்றிய சியாமளா அதிலிருந்த தோசைகளைத் தனது கணவனுக்கு வைத்துவிட்டாள்...

அடியில் ஒரே ஒரு தோசை சற்று ஈரப்பதத்துடன் சொதசொத என்று பிசுபிசுப்பாய் இருந்தது... விஜய்க்கு அது போல் உண்பது பிடிக்காது என்பதால் அன்னையிடம் வேறு தோசை ஊற்றி தர சொன்னான்... அந்த அன்னை என்னடா என்றால் இந்த நொடி வரை அவனுக்குத் தோசை சுட்டுக் கொண்டு வரும் வழியைக் காணவில்லை...

"அம்மா... நான் வெளியில் சாப்பிட்டுக்கிறேன்..." என்றபடி அவன் நாற்காலியை பின்னுக்குத் தள்ளிவிட்டு எழுந்தான்... மனதில் இருந்த கோபம் எல்லாம் அவன் அந்த நாற்காலியை நகர்த்திய விதத்தில் தெரிந்தது...

"ஒரு தோசை சுட்டுக்கிட்டு வர்றதுக்குள்ள எதுக்கு இத்தனை கோபம்டா...?" என்றபடி வியர்க்க விறுவிறுக்க அங்கு வந்து சேர்ந்தார் மைதிலி...

அவரது கையில் தோசை கரண்டி இருந்தது... அதன் மீது இவனுக்கான தோசை பொன்முறுவலுடன் அழகாய் வீற்றிருந்தது...

அவர் வரவை கண்டு தனது கோபத்தை அடக்கியபடி மீண்டும் நாற்காலியில் அமர்ந்தான் விஜய்...

அவனது மனதில் பெரும் புயல் மையம் கொண்டிருந்தது... இதே இது முன்பு என்றால் இவனைக் கண்டாலே அப்படி மரியாதையுடன் நடந்து கொள்வர் அவனது வீட்டினர்... இப்போதாவது இவன் காவல்துறை அதிகாரி... ஆனால் அப்போது வெறும் கல்லூரி மாணவன் தான்... அப்போது இருந்த அவர்களது மரியாதை இப்போது எங்கே காணாமல் போனது...?

அன்றிருந்த விஜய்க்கு அளவுக்கு அதிகமாகக் கோபம் வரும்... அவனது வாய் பேசுவதை விட அவனது கை தான் முதலில் பேசும்... அதனால் என்னவோ எல்லோருமே அவனிடத்தில் சற்று பயத்துடன் ஒதுங்கி போயினர்...

அதை விட அவனின் திறமையின் மீது அத்தனை மரியாதை இருந்தது... வீட்டினரை நன்கு வசதியாக வாழ வைப்பான் என்று அவன் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர்... அதனால் மரியாதையோடு எட்ட நின்றனர்...

ஆனால் இப்போது அது எல்லாம் கானல் நீராய் மாறிப் போனது... அவனும் அமைதியாய் மாறிவிட்டான்... அதே போல் அவனது வீட்டினரது சுபாவமும் மாறிவிட்டது... அவன் எதிர்த்துப் பேசாமல் அடங்கிச் சென்றுவிடுவான் என்றெண்ணி இப்போது எல்லாம் இந்த மாதிரி சின்னச் சின்ன உதாசீனங்கள் அதிகமாகி விட்டது...

'எல்லாம் உன்னால் தான்டி... உன்னால் தான் இந்த அவஸ்தையைத் தினமும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன்... இல்லை என்றால்...?'

தன் கண்ணம்மாவிடம் மனதோடு பேசியவன் பெரும் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தான்...

அவன் முன்னிருந்த தட்டில் தோசையை வைத்த மைதிலி, "புள்ளத்தாச்சி பொண்ணு பசி தாங்க மாட்டா விஜய்... அதான் காயத்ரிக்குத் தோசை சுட்டு கொடுத்துட்டு அதுக்கு அப்புறம் உனக்குச் சுட்டு எடுத்துட்டு வந்தேன்..."

அன்னை சொன்னதும் தான் நேற்று தங்கை வந்த விசயமே அவனுக்கு ஞாபகத்தில் வந்தது... அவளைப் பற்றி நலம் விசாரிக்க நினைத்தவன் முயன்று அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்... தான் தான் வேலை வேலை என்று நேரம் காலம் தெரியாமல் வெளியில் சுற்றிக் கொண்டு இருக்கிறோம்... ஆனால் அவள் வீட்டில் தானே இருக்கிறாள்... இதோ இப்போது கூடத் தான் உணவு உண்ண வந்தது தெரிந்து இருந்தும் தன்னைக் கண்டு கொள்ளாது இருக்கிறாள் என்றால்...?

'அந்தளவுக்கு உன் மேல் அக்கறை...' மனம் விரக்தியாய் நினைத்துக் கொண்டது...

'இந்தக் குடும்பத்துக்காகவா நீ பாவம் பார்த்தடி...?' தனது கண்ணம்மாவிடம் மானசீகமாகக் கேள்வி கேட்டான்... தன்னவளை நினைத்து அவ்வளவு கோபம் வந்தது அவனுக்கு...

அது என்னவோ தெரியவில்லை... போதை ஏறினால் மட்டும் அவனுக்குத் தன் கண்ணம்மா மீது அத்தனை காதல் பொங்கும்... இதே இது அவன் சாதாரணமாய் இருக்கும் போது அவள் மீது அத்தனை கோபம் எழும்...

அந்நேரம் அவனது தங்கை காயத்ரி அவனது எதிரில் வந்து அமர்ந்தாள்... வாயும் வயிறுமாய் இருக்கும் தங்கையிடம் அதற்கு மேல் அவனாலும் பாராமுகம் காட்ட முடியவில்லை...

"எப்படியிருக்கக் காயூ...?" என்று கேட்டான் புன்னகையுடன்...

"எங்கே நல்லாயிருக்க...? நீ ஏன் என்னோட வளைகாப்பு விசேசத்துக்கு வரலை...?" எடுத்த எடுப்பிலேயே தங்கை அண்ணனை குற்றம் சாட்டினாள்...

'என்னை யாரும் அழைக்கவில்லையே காயூ... நீ கூட என்னை மறந்துவிட்டாயே...' மனதுக்குள் நினைத்தவன் வாய் விட்டு சொல்லவில்லை... அமைதியாக இருந்தான்...

"நீ வரலைன்னதும் எங்க வீட்டாளுங்க 'ஏன் உன் அண்ணா வரலைன்னு' என்னைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைச்சு எடுத்துட்டாங்க..."

'உனக்கு உன் கவலை...'

"இருந்தாலும் நீ வராம இருந்தது ரொம்பத் தப்புண்ணா..." என்று அண்ணனின் தவறை சுட்டிக் காட்டியவள்,

"இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போற...? கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோண்ணா... என் பெரிய நாத்தனார் பொண்ணு காலேஜ்ல லெக்சரரா இருக்கிறாள்... கை நிறையச் சம்பளம், நல்ல அழகும் கூட... உனக்குக் கொடுக்கணும்ன்னு ஒத்தை காலில் நிற்கிறாங்க..."

"பாவம் காயூ கால் வலிக்கப் போகுது... இன்னொரு கால் மாத்தி நிக்கச் சொல்லு..." சிரியாமல் உரைத்த அண்ணனை கண்டு கோபமாய் முறைத்தாள் தங்கை...

அங்கிருந்த அனைவரும் இருவரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாலும் ஒன்றும் பேசவில்லை...

"இந்த இடக்கு பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை... எத்தனை பட்டும் திருந்தாத ஜென்மம் நீ..."

காயத்ரி பேசுவதைக் கண்டு அவனுள் கொதித்துக் கொண்டிருந்த கோபம் அப்படியே பீறிட்டுக் கொண்டு வெளிவந்தது...

"காயூ... இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசின நல்லாயிருக்காது... டெலிவரிக்கு வந்தேன்னா அந்த வேலையை மட்டும் பார்த்துட்டு போ... அதை விட்டுட்டு தேவையில்லாம என் விசயத்தில் மூக்கை நுழைக்காதே..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் அவன் சீறினான்...

"அப்போ எனக்கு இந்த வீட்டில் உரிமை இல்லையா... உன் கிட்ட எனக்கு உரிமை இல்லையா...?" என்று அவள் கண்ணைக் கசக்க...

"பாவம்டா விஜய்... வாயும் வயிறுமா இருக்கிற பொண்ணை அழ வைக்காதேடா..." என்ற மைதிலி மகளை ஆதரவாய் அணைத்துக் கொள்ள...

அவர்களை வெறுப்புடன் பார்த்தவன் சுற்றிலும் உள்ளவர்களை நோக்கி ஒரு பார்வை பார்த்துவிட்டு, "இவளுக்கு மட்டுமில்ல இங்கே உள்ளவங்களுக்கும் சேர்த்து தான் சொல்றேன்... இந்த வீட்டில் யாருக்கும் உரிமை கிடையாது... ஏன்னா இந்த வீடு எங்களுக்கு மட்டும் உரியது... அதுக்கு அர்த்தம் எனக்கும், என் மனைவிக்கும் மட்டுமே உரியது... இது என் சுய சம்பாத்தியத்தில் வாங்கியது... உங்க உதாசீனத்தையும், தேவையில்லாத பேச்சுக்களையும் நான் கேட்டுக்கிட்டு பேசாம இருக்கேன்னா அது அவளுக்காகத் தான்... அவள் சொன்னதுக்காகத் தான்..." என்றவன்,

"அதே போல் என் மீதும் உங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை... ஏன்னா இப்போ நான் இந்த வீட்டு மகன் இல்லை... அவளோட கணவன்... இனி கல்யாணம், கருமாதின்னு யாராவது ஏதாவது என் கிட்ட பேசினீங்க நான் மனுசனா இருக்க மாட்டேன்..." என்று கர்ஜித்தவன் சாப்பிட பிடிக்காமல் அதில் கையைக் கழுவ போனான்...

ஆனால் அவனது மனக்கண்ணில் நேற்று உணவில்லாது பட்டினியுடன் இருந்தவர்களின் முகம் வந்து நிழலாட தனது கோபத்தைக் கைவிட்டவனாய் அமைதியாகத் தட்டிலிருந்த ஒரு தோசையை மருந்து போல் இயந்திரகதியில் உண்டு விட்டு வேகமாய் எழுந்து சென்றான்...

அவன் போட்ட போடில் அதற்கு மேல் யாரும் வாயை திறக்கவில்லை...

சியாமளாவிற்கு இந்த வீட்டை விட்டு போகும் எண்ணம் எல்லாம் சுத்தமாய் இல்லை... இங்கு இருப்பதால் தான்

அவளது கணவனின் சம்பளப் பணம் அப்படியே வங்கியில் சேமிப்பாகச் சேருகிறது... நகரத்தில் பிரதான இடத்தில் தனி வீடு வாங்க வேண்டும் என்பது அவளின் லட்சியம்... சூடு, சொரணை பார்த்தால் இது எல்லாம் நடவாத காரியம்... அதனால் விஜய்யின் பேச்சை கண்டு கொள்ளாது உள்ளே சென்றுவிட்டாள்... வெங்கட்டும் மனைவி பின்னே சென்றுவிட்டான்...

ரகுராமன், மைதிலி இருவரின் தேவைக்கு ஓய்வூதிய தொகை போதுமானதாக இருந்தாலும் மகள்களின் புகுந்த வீட்டு செலவுக்கு அவர்கள் விஜய்யை தான் மலை போல் நம்பியிருந்தனர்... அதனால் மகனை எதிர்த்து பேச அவர்களால் முடியவில்லை...

"நீ இப்படியே விட்டுப் பிடிக்கப் போய்த்தான் அவன் இந்த ஆட்டம் ஆடுறான்..." என்று காயத்ரி அன்னையிடம் சண்டை பிடித்தாள்...

"அவன் முரட்டுச் சுபாவம் தெரிஞ்சும் நீ ஏன் வாயை கொடுக்கிற காயூ...? அவன் என்னவோ பண்ணிட்டுப் போறான் விடு..." என்று மகனின் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தார் மைதிலி...

அன்று முழுவதும் விஜய் தனது மனதில் கனன்ற கோபத்தை எல்லாம் சிறையிலிருந்த குற்றவாளிகளிடம் வெளிப்படுத்தி அவர்களை ஒருவழியாக்கி விட்டான்...

இதுநாள் வரை அவன் வீட்டினரிடத்தில் இப்படி எல்லாம் ஒரு போதும் பேசியது இல்லை... தன்னவளின் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு இத்தனை நாள் அவன் அமைதியாகத் தான் இருந்தான்... ஏனோ இன்று அவனது மனம் கொதித்து விட்டது... எத்தனை நாள் அழுத்தமோ இன்று ஒரேடியாய் வெடித்துச் சிதறிவிட்டது...

ஏனோ வாழ்க்கையே நரகமாய் இருந்தது அவனுக்கு... தன் சுயத்தை ஒழித்து வாழ்வது என்பது மிகவும் கடினமான காரியம்... அத்தகைய கடின நிலையில் அவன் இருந்தான்... இது அவனது இயல்பில்லை... முன்பிருந்த அந்தக்

கட்டுப்பாடற்ற விஜயாய்ச் சுதந்திரமாக வலம் வர விரும்பினான் அவன்...

அவனது கைகளையும், கால்களையும் அன்பு என்னும் பூவிலங்கு போட்டு கட்டுப்படுத்தி வைத்திருப்பவள் அவனது கண்ணம்மா... அந்தப் பூவிலங்கை அவன் உடைத்துவிட ஒரு நொடியாகாது... ஆனாலும் அவனுக்கு அதற்கு மனம் வரவில்லை...

எதற்கும் கட்டுப்படாதவன் அவளது காதலுக்குக் கட்டுப்பட்டுத் தலைவணங்கி நின்றான்...

****

"என்னாத்துக்கு இப்படி எல்லாரும் பதறியடிச்சிட்டு ஓடுறாங்க..." தங்களுக்குள் பேசியபடி புலம்பி கொண்டு செல்லும் கூட்டத்தைக் கண்டு முத்துபேச்சி பாண்டியனிடம் விசாரித்தாள்...

"அதான் புள்ள எனக்கும் தெரியலை..." என்று தலையைச் சொரிந்த பாண்டியன், "நான் விசாரிச்சிட்டு வர்றேன்... நீ வூட்டுக்கு போ புள்ள..."

அவன் சொல்லும் போதே அங்கு வந்த ஒருவர் முத்துபேச்சியைக் கண்டு, "உன்னைத் தான் தங்கச்சி தேடிக்கினு இருந்தேன்... நல்லவேள நீயே வந்துட்ட..."

"எதுக்கு அண்ணாத்தை என்னை நீ தேடுன...?"

"அங்க நம்ம மாரியம்மா பொண்ணு தூக்கு மாட்டிக்கினு செத்து போச்சு... உனக்குத் தெரியாதா...?"

மாரியம்மாளை அவளுக்கு நன்கு தெரியும்... அவ்வப்போது போகும் போது, வரும் போது அவரைப் பார்த்து ஏதாவது பேசுவது உண்டு... ஆனால் அவரது மகளை அவள் நேரில் பார்த்தது இல்லை...

"என்னாது மெய்யாலுமா அண்ணாத்தை...?"

"ஆமா தங்கச்சி... வெரசா வா..."

அவர் சொன்னதும் அவளும், பாண்டியனும் அங்கு விரைந்து சென்றனர்... அங்குத் தூக்கில் தொங்கிய அந்தப் பெண்ணைக் கண்டதும் அவளுக்கு நன்கு அடையாளம் தெரிந்தது... போன சனிக்கிழமை இரவு ஒரு பெண்ணிடம் ஒருவன் வம்பு செய்தானே... அந்தப் பெண் தான் இவள் என்று...

'ஏன், எதற்காகத் தற்கொலை செய்து கொண்டாள்...?' முத்துபேச்சியின் மனதில் சந்தேகம் முளைவிட ஆரம்பித்தது...

அந்தச் சந்தேகத்திற்கான விடை தான் அவளது வாழ்க்கையையே அடியோடு புரட்டி போட போகிறது என்பதை அந்நேரம் அவள் அறிந்து இருக்கவில்லை...!!!

வாசம் நேசமாகும்...!!!

அறைக்கதவு திறந்திருக்க, தூக்கில் தொங்கி கொண்டிருந்த அந்தப் பெண்ணின் கால்கள் இரண்டும் கட்டிலை தொட்டுக் கொண்டு இருந்தது... பொதுவாக இது போல் தற்கொலை செய்து கொள்பவர்களின் கால்கள் அந்தரத்தில் அல்லவா தொங்கி கொண்டிருக்கும்... அந்த அறையில் இருந்த பொருட்கள் எல்லாம் கலைந்து கிடந்தது அலங்கோலமாய்... அதை விட அந்தப் பெண்ணின் உடலில் சிறு சிறு நகக்கீறல்கள் தென்பட்டது... உடை கூடச் சில இடங்களில் கிழிந்து தொங்கியது...

அதுவே சொல்லாமல் சொல்லியது இறப்பதற்கு முன் அந்த அறையில் பெரும் போராட்டம் நடந்திருக்கிறது என்று... யாருக்கு இடையில் நடந்திருக்கும் இந்தப் போராட்டம்...? ஒரு நபர் இந்தப் பெண்... அப்படி என்றால் மற்றொரு நபர் யார்...? அவர் ஆணா இல்லை பெண்ணா...?

அந்தக் காட்சியைப் பார்த்ததும் முத்துபேச்சியின் மூளை வேகமாக இதை எல்லாம் யோசித்துப் பார்த்தது...

ஏனோ அவளால் இந்த மரணத்தைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை... ஏனெனில் இன்று நாட்டில் தொடர்ந்து நடக்கும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் மிக அதிகம்...

அந்நேரம் அந்தப் பெண் செல்வியின் தாயார் மாரியம்மாள் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுது கொண்டே புலம்பிய வார்த்தைகள் அவளது காதில் விழுந்தது...

"காலையில் நான் கோயிலுக்குப் போகும் போது நல்லா தானே சிரிச்சு பேசி வழியனுப்பி வச்சா... வீட்டுக்கு தூரம்ன்னு அவளை விட்டுட்டு போனேன்னே... வந்து பார்க்கிறப்போ இப்படி உசிரில்லாம பொணமா கெடக்காளே... எல்லாத்துக்கும் காரணம் அந்தப் படுபாவி தான்... அவன் நல்லா இருப்பானா... நாசமா தான் போவான்..." என்று கைகளை நெட்டி முறித்து யாருக்கோ சாபம் கொடுத்தார் அவர்...

அதைக் கேட்டதும் முத்துபேச்சி அவசரமாகத் தனது அலைப்பேசியில் செல்வியின் உடலை புகைப்படம் எடுத்து கொண்டாள்...

அடுத்த ஐந்தாவது நிமிடம் விசயம் கேள்விப்பட்டுக் காவல்துறையினர் அங்கு விரைந்து வந்தனர்... அவர்கள் ஏரியா காவல்துறை அதிகாரி செந்தில் அவளுக்கு நன்கு பரிச்சயம்... அதனால் அவள் அவரைப் பார்த்து புன்னகைத்தாள்...

அவரும் தனது தொப்பியை கழட்டி விட்டு அவளைப் பார்த்து புன்னகைத்தவர், "இந்த ஏரியாவில் கல்யாண வீடா இருந்தாலும் சரி, இழவு வீடா இருந்தாலும் சரி முதல் ஆளா உன்னைய தான்ம்மா பார்க்க முடியுது..."

"இது நமக்கு வேண்டப்பட்டவங்க பொண்ணு சாரே..." என்றவளை பார்த்து அவர்,

"அப்படியாம்மா...?" வருத்தமாய்க் கேட்டு கொண்டவர் கூட்டத்தினரை பார்த்து,

"யார் முதல்ல பார்த்தது...?" என்றதும் மாரியம்மா எழுந்து முன் வந்தார் அழுது கொண்டே...

"இவங்க பொண்ணு தான் சார்..." முத்துபேச்சி அவரிடத்தில் பதில் சொன்னாள்...

"கடைசியா உங்க பொண்ணை எப்போ பார்த்தீங்கம்மா...?" என்று செந்தில் கேட்டதும்,

முதலில் கூறியதை அப்படியே உரைத்தவர், "சார் நான் வெளியில் போயிட்டு ஒரு பத்து மணி வாக்கில வீட்டு முன் வாசக்கதவை திறந்துட்டு உள்ளே வரும் போது அந்தப் படுபாவி பின் வாசக்கதவு வழியா வெளியில் போனான்ங்க... துரத்தி பிடிக்கிறதுக்குள்ள தப்பிச்சி ஓடிட்டான்ங்க... அவன் தான் இந்தக் கொலையைப் பண்ணியிருக்கணும்... என் பொண்ணு தற்கொலை பண்ணியிருக்கச் சான்சு இல்லைங்க சாரே..." என்று முகத்தை மூடி கொண்டு அழுதவரை பார்த்து,

"யார்ம்மா அது...?" என்று செந்தில் கேட்க...

"என் பொண்ணு வேலை செய்ற கம்பெனி ஓனரோட பையன்... ரொம்ப நாளா அவ பின்னாலே வந்து டார்ச்சர் கொடுத்துட்டு இருந்தான்... இன்னைக்கு வீட்டுக்கே வந்து இப்படிப் பண்ணிப்புட்டான்ங்க... அவன் தான் இதைச் செஞ்சிருக்கணும்..."

அவர் சொன்னதைக் கேட்டுச் செந்தில் தாடையைத் தடவி கொண்டு யோசித்தார்... ஏனெனில் அந்த நிறுவனம் தொழிலதிபர் சுந்தரலிங்கத்திற்குச் சொந்தமானது என்று அவருக்கு நன்கு தெரியும்... இது பெரிய இடத்து விவகாரம்... இதை எப்படிக் கையாள்வது என்று குழம்பி போய் யோசித்தார்...

அவர் நேர்மையானவர் தான்... ஆனால் அவரைச் சுற்றி இருப்பவர்கள் அது மாதிரி இருக்க வேண்டும் அல்லவா...

"சார்... அவன் அந்தப் பொண்ணு கிட்ட தகராறு பண்றதை நானும் பார்த்திருக்கிறேன்... ஒரு வாரத்துக்கு முந்தி எங்கையால ரெண்டு அடி கூட அவனை அடிச்சியிருக்கேன்..." என்று முத்துபேச்சியும் சொல்ல...

"சரிம்மா... நான் பார்த்துக்கிறேன்... நீங்க கவலைப்படாதீங்க..." என்று மட்டுமே செந்திலால் சொல்ல முடிந்தது...

இந்த வழக்கின் முடிவு நிச்சயம் அவர் கையில் இல்லை என்பதை அவர் உணர்ந்தே இருந்தார்... இந்தக் கணம் அவரால் செய்ய முடிந்த ஒரே விசயம் வெறும் ஆறுதல் வார்த்தைகள் கூறுவது மட்டுமே...

செல்வியின் உடலை அமரர் ஊர்தியில் ஏற்றி மருத்துவமனை பரிசோதனைக்காக எடுத்துக் கொண்டு செல்லப்பட்டது... உயிரற்ற பிணமாக மகளைக் கொண்டு செல்வதைக் கண்டு மாரியம்மாள் நெஞ்சிலடித்துக் கொண்டு அழுதார்... ஒற்றைப் பெண்ணாகக் கணவன் இல்லாமல் அருமை பெருமையாக வளர்த்த மகளை இப்படி

அநியாயமாய் இளம் வயதில் பலி கொடுத்த வேதனை அவரது அழுகையில் தெரிந்தது...

அதைப் பார்த்து முத்துபேச்சிக்கும் கண்கள் கலங்கியது... அந்த இடத்தில் அவள் தன்னையும், தன் மகளையும் வைத்து பார்த்தாள்... பெண் பிள்ளையைப் பெற்ற பெற்றொருக்கே வரும் இயல்பான பரிதவிப்பு அவளுள் எழுந்தது...

இந்தத் தேசத்தில் சொந்த வீட்டில் கூடப் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லையா? என்று அவளது மனம் மருகியது... வீட்டினுள் பூட்டிய அறைக்குள் பாதுகாப்பாய் இருக்கிறோம் என்ற நிம்மதியில் தானே ஒவ்வொரு மனிதனும் நிம்மதியாக உறக்கம் கொள்கிறான்...

அந்த நிம்மதியான உறக்கம் கூடப் பெண்களுக்கு மறுக்கப்படும் அநீதி கண்டு அவளது உள்ளம் துடித்தது... அந்தக் கணம் அந்த அநீதியை எதிர்த்து போராட வேண்டும் என்று அவளுள் ஒருவித போராட்ட குணம் எழுந்தது...

அங்கு வெகு நேரம் இருந்து மாரியம்மாளுக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளியில் வந்தவளுடன் பாண்டியனும் உடன் சேர்ந்து நடந்தான்...

"முத்து... எனக்கு என்னம்மோ அந்தப் புள்ளையை ரேப் பண்ணி கொன்னுட்டானோன்னு தோணுது..." என்றான் தனக்குள் யோசித்தபடி...

"ஆமா பாண்டி... எனக்கும் அது தான் தோணுது..."

"மனுச உசிரு அவ்வளவு சல்லிசா போச்சு இவங்களுக்கு..." என்றான் ஆற்றாமையுடன் அவன்...

"அதுவும் பொட்டை புள்ள உசிரு பாண்டி... இப்போ நடக்குற அநியாயத்தைப் பேப்பருல, டிவியில நீ பார்க்குற தானே..."

"ஆமாம் புள்ள நீ சொல்றதும் வாஸ்தவம் தான்..." என்று அதை ஆமோதித்தவன்,

"அதுக்குள்ள அந்தப் புள்ளய பத்தி தப்பா பேச ஆரம்பிச்சுட்டாங்க... அவ யார் கிட்டேயாவது ஏமாந்து போயிருப்பா... அதை மறைக்க இந்தம்மா நாடகம் ஆடுது... இல்லாங்காட்டி அவளே அந்தப் பையன வீட்டுக்கு வர சொல்லியிருப்பா... இப்படி நிறையக் கதைய கட்டி விடுறானுங்கோ..."

அதை எல்லாம் கேட்டு முத்துபேச்சிக்கு எரிச்சலாக வந்தது... ஒரு பெண்ணை இறந்த பிறகும் நிம்மதியாக இருக்க விட மாட்டேங்குதே இந்தச் சமூகம் என்று...

ஒரு பெண் உயிர் வாழும் போது எப்படிச் சந்தேகமாகப் பார்த்ததோ அது போல் ஒரு பெண்ணின் இறப்பையும் இந்தச் சமூகம் சந்தேகமாகக் கேவலமாகப் பார்ப்பதை நினைத்து அவளுக்கு உள்ளுக்குள் பற்றிக் கொண்டு வந்தது...

"நாளைக்கு இவன்களுக்கும் இதே கதி தான்ங்கிறதை மறந்துட்டு அடுத்த வீட்டு சங்கதிய நாற அடிக்கிறாய்ங்க பேடி பசங்க..." என்று பல்லை கடித்தவள்,

"பாண்டி... நாளைக்கு நீயும் இப்படி எல்லாம் நடந்துக்காதே... உனக்கு வாரவளை சக மனுசியா மதிச்சு நடந்துக்கோ..." என்று அவள் நண்பனுக்கு அறிவுரை கூற...

"அட போ புள்ள... நீ வேற சோக்கு அடிச்சிக்கிட்டு... என்னைய மனுசனா மதிச்சு ஒருத்தி கூடத் திரும்பி பார்க்க மாட்டேங்கிறா..." என்று கவலையாய் சலித்துக் கொண்டான் பாண்டியன்...

"உனக்கு என்னோ பாண்டி... நல்லா அம்சமா, அழகா தான்டா இருக்க... பார்த்துட்டே இரு அழகு ரதி போல ஒரு பொண்ணு உன்னைத் தேடி வர போகுது..."

"இங்கே ஒரு அழுக்கு பொண்ணுக்கே வழியில்லை... இதில் அழகு ரதியாக்கும்... ஆனாலும் ரொம்பத்தே ஆசை உனக்கு..." என்று சிரித்தவனுக்கும் அந்த ஆசை மனதினுள் தோன்றத்தான் செய்தது...

அவன் தனக்கு வர போகிற பெண்ணை நினைத்துக் கனவு காண... அவளோ செல்வியின் மரணத்தைப் பற்றி யோசித்துக் கொண்டு வந்தாள்...

அதே சமயம் அவளுக்கு விஜய் மீது கடும் கோபம் வந்தது... அன்றே அவன் அந்த ஆடவனைக் கண்டித்து நடவடிக்கை எடுத்து இருந்தால் இந்த அசம்பாவிதம் நடந்திருக்காது அல்லவா என்று அவன் மீது ஆத்திரம் வந்தது...

அதனால் அவள் விஜய்க்கு அழைத்துப் பேசவில்லை... அவனின் அழைப்பையும் எடுக்கவில்லை... அவனுக்குமே வேலை அதிகமாக இருந்த காரணத்தால் அவளை நேரில் சந்திக்க முடியவில்லை... இப்படியாகக் கண்ணாமூச்சி ஆட்டம் அவர்களிடையே நடந்து கொண்டிருந்தது...

****

அன்று வழக்கம் போல் டிராபிக் சிக்னலில் தனது ஸ்கூட்டியில் காத்திருந்தாள் முத்துபேச்சி... அவளது கண்கள் உன்னிப்பாகச் 'சிக்னல் லைட்'டை பார்த்துக் கொண்டு இருந்தது... அப்போது அவளது கைப்பையை யாரோ பற்றி இழுக்கும் உணர்வில் திரும்பி பார்த்தவள் அங்கு நின்றிருந்த அந்த எட்டு வயது சிறுவனைக் கண்டு அவனின் நோக்கம் புரிந்தவளாய் அவனின் கையை இறுக பற்றிக் கொண்டாள்...

அவளின் கைப்பையைப் பறிக்க வந்த அந்தச் சிறுவனோ மாட்டி கொண்ட பயத்தில் அவளது கையைக் கடித்து விட்டுத் தப்பித்துச் செல்ல முயற்சித்தான்... அவள் வலியை பொறுத்துக் கொண்டு ஒரு கையால் அந்தச் சிறுவனைப் பிடித்தபடி மறுகையால் ஸ்கூட்டியை மெதுவாகச் செலுத்தி சாலையின் ஓரத்தில் நிறுத்திவிட்டு அவன் புறமாய்த் திரும்பினாள்...

எங்கே அவள் தன்னை அடித்துவிடுவாளோ என்ற பயத்தில் அந்தச் சிறுவன், "அக்கா... தெரியாம பண்ணிட்டேன்க்கா... இனிமே இப்படிப் பண்ண மாட்டேன்க்கா..." என்று அழுகை குரலில் கூற...

அவளோ புன்சிரிப்புடன், "நீ தெரிஞ்சு பண்ணினேன்னு நான் சொல்லவே இல்லையே..." என்றாள் தன்மையுடன்...

அவளின் சிரிப்பு, இதமான பேச்சு கண்டு திகைத்து ஆச்சிரியப்பட்ட அந்தச் சிறுவன், "அக்கா..." என்றான் விரிந்த விழிகளுடன்...

"உன் பேரு என்ன...?"

"துரை..."

"உன் வீடு எங்கேயிருக்கு..."

அவள் அப்படிக் கேட்டதும் அவனது முகம் சோகமாய்ச் சுருங்கி போனது...

"எனக்கு வீடில்லைக்கா..." சொல்லும் போதே அவனது கண்களில் கண்ணீர் துளி...

அதைக் கண்டதும் அவளுக்கும் இரக்கமாய் இருந்தது...

"சாப்பிட்டியா நீ...?"

"இல்லைக்கா..."

அவன் அப்படிச் சொன்னதும் அருகில் இருந்த டீக்கடையில் அவனுக்கு உண்ண வாங்கிக் கொடுத்தவள் அவனைப் பற்றி மெல்ல விசாரித்தாள்...

"ரெண்டு மாசத்துக்கு முன்னே அம்மா செத்திருச்சுக்கா... அப்பா வேற கல்யாணம் பண்ணிக்கிட்டாரு... அம்மா செத்ததுக்கு அப்புறம் யாருமே என்னைக் கவனிக்கலை... சாப்பாடு கூடச் சரியா கிடைக்காது... ஒரு நாள் சித்தி சூடு வச்சிருச்சு..." என்றவன் தனது காலை காட்டினான்...

விரல் அகலத்திற்கு நீளமாய் இருந்தது அந்தச் சூடு... அதைக் கண்டு முத்துபேச்சியின் கண்கள் கலங்கியது... மெல்ல அந்தக் காயத்தை வருடி கொடுத்தாள்...

"அதான் வீட்டை விட்டு ஓடி வந்திட்டேன்... ரொம்பப் பசிச்சது... அப்பத்தான் இங்கே இருந்த அண்ணா ஒருத்தன்

இது மாதிரி திருடினா நிறையத் துட்டு கிடைக்கும்.... வயிறு நிறையச் சாப்பிடலாம்ன்னு சொன்னான்..." என்று சொல்லும் போதே அந்தப் பிஞ்சின் தலை தானாகக் கவிழ்ந்தது குற்றவுணர்வில் தவறு செய்துவிட்டோமோ என்று...

அவனது முகத்தை நிமிர்த்திய முத்துபேச்சி, "நீ எந்தத் தப்பும் பண்ணலை... அப்புறம் எதுக்கு நீ தலை குனியணும்..." என்று புன்னகையுடன் கூறியவளை கேட்டு அவனது முகத்திலும் புன்னகை அரும்பியது...

"திருடறது தப்பு தானேக்கா... ஆனா பசி தாங்க முடியலையே..." என்று வயிற்றைத் தடவியபடி சொன்னவனின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

"உனக்கு ஒண்ணு தெரியுமா... நானும் உன்னை மாதிரி இப்படி நிறையத் திருடியிருக்கேன்... பிச்சை எடுத்து இருக்கேன்... நிறையத் தப்புகள் பண்ணியிருக்கேன்..." என்றவளை கண்டு அவன்,

"போக்கா சும்மா பொய் சொல்லாதே..." என்றான் கேலியாய்...

"டேய்... உண்மையா தான் சொல்றேன்... அப்படி இருந்த என் வாழ்க்கையை ஒரு அழகான தேவதை வந்து இப்படி மாத்திட்டாங்க... அதுக்கு அப்புறம் தான் நான் இப்படி மாறிட்டேன்..."

முத்துபேச்சியின் நவநாகரீக தோற்றத்தை உள்வாங்கியவனாய் துரை, "அக்கா... நானும் அந்தத் தேவதையைப் பார்க்கலாமா...? எனக்கும் உன்னைய மாதிரி ஆகணும்ன்னு ஆசையாயிருக்கு..." என்று கண்களில் ஆர்வம் மின்ன கேட்டவனை அவள் தன்னோடு அணைத்து கொண்டாள் அன்போடு...

"இப்பவே கூட்டிட்டு போறேன் துரை..." என்றவள் அவனை அழைத்துக் கொண்டு அந்தத் தொண்டு நிறுவனத்திற்குச் சென்றாள்...

'உதிரிப்பூக்கள்' என்ற அந்தத் தொண்டு நிறுவனம் முப்பது வருடங்களுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டது... மார்ட்டினா என்கிற இங்கிலாந்து பெண் ஒருவர் தனது இருபத்தைந்தாவது வயதில் அதை ஆரம்பித்தார்... நடைப்பாதையில் வசிக்கும் குழந்தைகளைப் பற்றிக் குறும்படம் எடுக்கச் சென்னை வந்தவர் நாளடைவில் அவர்களுக்காகத் தொண்டு செய்யும் நல்ல உள்ளத்தோடு இங்கேயே தங்கிவிட்டார்...

அப்படி அவர் கண்டுபிடித்த பல உதிரிப்பூக்களில் ஒருத்தி தான் இந்த முத்துபேச்சியும்... அவளுடன் பாண்டியனையும் சேர்த்து தான் அவர் அழைத்து வந்தார்... ஆனால் அவனுக்குப் படிப்புத் தலையில் ஏறவில்லை என்பதால் படிக்காமல் ஓடிவிட்டான்... அதே போல் தான் முத்துபேச்சியும்... நண்பன் ஓடியதும் அவளும் அடிக்கடி படிக்கப் பிடிக்காமல் ஓடி போய்விடுவாள்...

பள்ளியில் இவளை மாதிரி பிள்ளைகளை மற்ற பிள்ளைகள் ஒதுக்குவதைக் கண்டு இவளுக்குக் கோபம் வரும்... மற்றவர்களுடன் சண்டை போடுவாள்... பள்ளிக்கு போக மாட்டேன் என்று அடம்பிடிப்பாள்... அப்படி மூர்க்கத்தனமாய் இருந்தவளை மெல்ல மெல்ல தனது அன்பால் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றினார் மார்ட்டினா...

கல்வியின் முக்கியத்துவத்தை அவளுக்கு எடுத்து கூறி புரிய வைத்தார்... அவளும் சீக்கிரமே அதைப் புரிந்து கொண்டு தன்னை மாற்றிக் கொண்டாள்... மார்ட்டினாவிடம் கற்றது தான் இந்த ஆங்கிலமும் கூட... இயல்பிலேயே அவளுக்கு அடுத்தவர்கள் செய்வதை அப்படியே பிரதிபலிக்கும் குணம் இருந்ததால் மார்ட்டினா பேசும் இலண்டன் ஆங்கிலத்தை அப்படியே உச்சரித்துப் பேசி கிண்டலடிப்பாள்... அதைக் கண்டு அவர் தான் ஆங்கிலத்தை இலக்கணப் பிழையில்லாமல் பேசுவதற்கும், எழுதுவதற்கும் அவளுக்குச் சொல்லி கொடுத்தார்...

அந்த ஆங்கிலம் இன்றும் அவளுக்குக் கைக்கொடுக்கிறது... அவளை மரியாதை இல்லாமல்

பார்க்கும் இடங்களில் எல்லாம் அவளது ஆங்கிலப் புழமை அவளுக்குத் தேவையான மரியாதையைத் தானாகப் பெற்றுக் கொடுத்தது...

அங்குத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்த அந்த நடுத்தர வயது பெண்மணியை "ஹாய் மார்ட்டினா..." என்றழைத்தபடி சந்தோசமாய்க் கட்டிப்பிடித்துக் கொண்டாள் முத்துபேச்சி...

அவர் தான் மார்ட்டினா... எப்போதுமே எல்லோரும் அவரைப் பெயர் சொல்லித்தான் அழைக்க வேண்டும் என்று அவர் தீர்மானமாய்க் கூறிவிட்டார்... 'மேடம்' என்ற சொல் அங்கு வரும் பிள்ளைகளுக்கும் அவருக்கும் இடையில் பெரிய இடைவெளி ஏற்படுத்திவிடும் என்பதால் அவர் தன்னைப் பெயர் சொல்லி கூப்பிட சொன்னார்...

"வா முட்டுபேட்டி..." கிள்ளைத் தமிழில் அழகாய் அவளை வரவேற்றார் மார்ட்டினா...

"அதான் வரலைல்ல விடேன் மார்ட்டினா... பாவம் தமிழ் பிழைச்சு போகட்டுமே..." என்று கண்சிமிட்டி மார்ட்டினாவை கேலி செய்தவள் துரையைப் பற்றிக் கூறினாள் தெளிவான ஆங்கிலத்தில்...

அவள் அழகாக ஆங்கிலம் பேசுவதைக் கண்டு துரை வியப்பாய் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்... தானும் அவளைப் போலாக வேண்டும் என்கிற ஆசை சடுதியில் அவனது மனதில் விருட்சமாய் வளர்ந்தது...

"ஹாய் டுரை..." என்று புன்னகையுடன் மார்ட்டினா அவனை நோக்கி கையை நீட்ட...

"கையைக் கொடு துரை..." முத்துபேச்சி அவனிடம் சொல்ல...

அவன் கூச்சத்துடன் நெளிந்தபடி தன் கையை நீட்டினான் அவர் புறமாய்... மார்ட்டினா அவனது கைப்பற்றிக் குலுக்கியவர் அவனை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டார்...

"கவலைப்படாதே... நாங்க இருக்கிறோம் உனக்கு..." என்று அவர் ஆங்கிலமும், தமிழும் கலந்து சொல்ல...

அதை அப்படியே அவனுக்கு மொழி பெயர்த்து கூறினாள் முத்துபேச்சி...

"இங்கே இருந்து படிக்கிறியா துரை... இவங்க உன்னை நல்லா பார்த்துக்குவாங்க..."

"உன்னைய மாதிரியாக்கா...?" ஆவலாய் கேட்டவனின் முடியை விளையாட்டாய் கலைத்துவிட்டு சிரித்தவள்,

"என்னை விட நல்லா..."

"எனக்கும் உன்னைய மாதிரி இங்கிலீஷ் பேசணும்ன்னு ஆசையா இருக்குக்கா..."

"கட்டாயம் பேசலாம்... நானே உனக்குச் சொல்லிக் கொடுக்கேன் என்ன..." என்று அவனிடம் உரைத்தவள் மார்ட்டினாவிடம்,

"நானே இங்கே வரணும்ன்னு நினைச்சேன்... ஐயா இந்தச் செக்கை கொடுத்துட்டு வர சொன்னாரு..." என்றவள் தனது கைப்பையில் இருந்து காசோலையை எடுத்து அவரிடம் நீட்டினாள்...

செல்வநாதன் இவள் மூலம் இந்த அமைப்பை கேள்விப்பட்டு இதற்கு மாதந்தோறும் பணம் கொடுக்கிறார்... அவளுக்குத் தெரியும் தனக்கு அவர் செய்ய நினைப்பதை தான் வாங்க மறுப்பதால் அதை அவர் பணமாக இங்குக் கொடுக்கிறார் என்று...

வாழ்க்கையில் செல்வநாதன், மார்ட்டினா இவர்களை மாதிரியான நல்ல மனிதர்களை அவள் சந்தித்தது போன ஜென்மத்தில் அவள் செய்த புண்ணியம்... அத்தோடு அவளது தோழன் பாண்டியனையும் சேர்த்து தான்...

அப்படி நினைக்கும் போதே அவளுக்குத் தன்னவனின் தன்னலம் இல்லாத காதல் நினைவில் எழுந்தது... அவளை அவளுக்காகவே நேசித்தவன்... அவளின் பிறப்பின்

அடையாளங்களைப் புறக்கணித்து அவளின் மனதை மட்டும் காதலித்தவன்...

அவனை நினைத்ததும் அவளின் கண்களும், மனமும் கசிந்துருகியது காதலில்... சட்டென்று கண்ணீரை உள்ளிழுத்து தன் எண்ணப் போரட்டங்களை அடக்கியவள் மார்ட்டினாவிடமும், துரையிடமும் விடைப்பெற்று வெளியில் வந்தாள்...

இன்று ஒரு நல்ல காரியம் செய்ததில் அவளின் மனதுக்கு அத்தனை நிறைவாய் இருந்தது...

நேரே தனது ஸ்கூட்டியை அவளின் ஏரியா காவல்நிலையத்திற்குச் செலுத்தினாள்... செல்வி விசயம் என்னவானது என்பது பற்றி அவளுக்குத் தெரிய வேண்டியிருந்தது...

அவளைக் கண்டதும் வரவேற்ற செந்தில், "இங்கே வச்சு எதையும் பேச முடியாதும்மா... ஈவினிங் வீட்டுக்கு வாம்மா..."

அவரது குடும்பத்தை அவளுக்கு நன்கு தெரியும்... அதனால்,

"சரி சாரே..." என்றபடி எழுந்து வெளியில் வந்தாள்...

செந்திலின் முகத்தில் இருந்த கலக்கம் அவளது மனதையும் கலக்கமடையச் செய்தது... ஏதோ தவறாக இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது...

சொன்னது போல் அன்று மாலை ஏழு மணியளவில் செந்திலை அவரது வீட்டில் சந்திக்கச் சென்றாள்... அங்கு அவர் இல்லை... அவரது மனைவி மட்டுமே இருந்தார்...

"அக்கா... சார் வர நேரமாகுமா...?"

"இல்லை இப்ப வந்திருவாரு முத்து... நீ உள்ளே வா..." என்று அவளை வரவேற்றவர்,

"காபி குடிக்கிறியா...?" என்று கேட்க...

"இப்பத்தான்க்கா குடிச்சிட்டு வந்தேன்... சில்லுன்னு தண்ணி மட்டும் குடுங்க..."

அவள் சொன்னதும் தண்ணீர் கொண்டு வந்து அவர் கொடுத்தார்... அதை அவள் குடிக்கும் போது செந்தில் வீட்டினுள் நுழைந்தார்...

"ஒரு கேஸ் விசயமா வெளியில் போக வேண்டியிருந்துச்சு முத்து..." தனது தாமதத்திற்குக் காரணம் கூறியவாறு உள்ளே வந்தவர் நாற்காலியில் அமர்ந்தார்...

"செல்வி விசயம் என்னாச்சு சாரே..."

அதைக் கேட்டதும் அவரது முகம் இருண்டது... பின் மெல்ல பேச ஆரம்பித்தார்...

"இதை ஒரு அதிகாரியா நான் உன் கிட்ட சொல்லக் கூடாது தான்... ஆனா மனசாட்சி உள்ளவனா, ஒரு பெண்ணைப் பெத்த தகப்பனா இதை நான் உன் கிட்ட சொல்லுறேன் முத்து... அந்தப் பொண்ணு மானப்பங்கப் படுத்தப்பட்டுத் தான் சாகடிக்கப்பட்டு இருக்கிறாள்... அது அவளோட உடல் காயத்தைப் பார்த்தாலே தெரியுது... ஆனா போஸ்மார்ட்டத்தில் தூக்கு போட்டு தற்கொலை பண்ணிக்கிட்டதா தான் சொல்லியிருக்கு... அத்தோடு கேசில் அந்தப் பொண்ணு எழுதியதா ஒரு லெட்டரும் சேர்க்கப்பட்டு இருக்கு... தீராத வயிறு வலி காரணமா தான் தற்கொலை பண்ணிக்கப் போறதா அந்தப் பொண்ணு எழுதின மாதிரி அதில் எழுதியிருக்கு..."

அதைக் கேட்டு முத்துபேச்சி அதிர்ந்து போனாள்... எவ்வளவு அழகாக எல்லாவற்றையும் மாற்றியமைத்து விட்டார்கள்...

"பணமும், அதிகாரமும் இங்கே தன்னோடு வேலையைக் கச்சிதமா செஞ்சு முடிச்சிருச்சு முத்து... நீதி, நேர்மை, தர்மம் எல்லாம் செத்து போச்சு புள்ள..." என்ற செந்தலின் முகம் தாங்கொண்ணா வருத்தத்தில் ஆழ்ந்தது...

"இதை இப்படியே விட முடியாது சாரே... இப்படியே விட்டா நாட்டில் ஒரு பொண்ணுங்க கூட மிஞ்ச மாட்டாங்க... இதே

கதி நாளைக்கு நம்ம புள்ளைங்களுக்கும் நடக்கலாம்..." ஆக்ரோசமாய்க் கொதித்தவளை கண்டு கவலையாய் பார்த்தவர்,

"அவங்களோட மோதுற அளவுக்கு நம்ம கிட்ட பணமோ, அதிகாரமோ இல்லையே முத்து..."

"எதுவுமே இல்லைன்னாலும் போராடுற குணம் நம்ம கிட்ட இருக்கில்ல சாரே... அது ஒண்ணு போதும் இந்தப் பணம், அதிகாரம் எல்லாத்தையும் ஒண்ணும் இல்லாமல் செய்றதுக்கு..."

அவளின் கோபம் இன்னமும் குறையவில்லை...

"எது செய்றதா இருந்தாலும் யோசிச்சு செய் முத்து... மத்தவங்களுக்காகப் போராட நீ இருக்க... நாளைக்கு உனக்காகப் போராட யாருக்கா...?"

"அப்படிப் பார்த்து பார்த்து தான் இன்னைக்கு யாருமே எதையுமே தட்டி கேட்காம எனக்கு என்னன்னு தேமேன்னு இருக்கிறோம்... அந்த மாதிரி எல்லாம் என்னால் இருக்க முடியாது சாரே..." என்றவள்,

"அவங்களா...? நாமளான்னு ஒரு கை பார்த்துடலாம்..." சவாலாய் கூறியவள் பின் அவரிடம் விடைப்பெற்று வெளியில் வந்தாள்...

அவள் மாரியம்மாள் வீடு சென்ற போது அவர் மகளை இழந்த துக்கத்தில் இருந்து இன்னமும் மீளாமல் அழுது கொண்டிருந்தார்...

எல்லா விசயத்தையும் அவரிடம் கூறிய முத்துபேச்சி, "இப்போ என்னா பண்ணலாம்ன்னு நீயே சொல்லுக்கா...?"

"உசிரோட என் மகளைக் கொன்னுட்டு... அவளே நாண்டுக்கிட்டு செத்துட்டான்னு எப்படிச் சொல்ல போச்சு... நான் இதை லேசில் விட மாட்டேன் முத்து... இதை இப்படியே விடக் கூடாது முத்து..." என்று அவர் ஆவேசமாய்க் கூறவும்...

"உன் கூட நானிருக்கேன்க்கா... நீ கவலைப்படாதே என்ன..." என்று அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு தனது வீட்டிற்கு வந்தாள்...

சோர்ந்து போய் வீட்டிற்கு வந்தவளுக்கு உணவை தட்டில் எடுத்து வந்து கொடுத்தான் பாண்டியன்... அதை நன்றியுடன் பெற்று கொண்டவள் வேக வேகமாய் உண்ண ஆரம்பித்தாள்... அருகில் கயல்விழி அமர்ந்து வீட்டுப் பாடம் செய்து கொண்டிருந்தாள்...

"கயலு... இன்னைக்கு ஸ்கூலில் என்ன நடந்துச்சு...?" அன்னை கேட்கவும், மகள் அன்று நடந்ததை ஒன்று விடாமல் ஒப்புவித்தாள்...

வெளியில் எது நடந்தாலும் தனக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று அவள் கயல்விழிக்கு அறிவுறுத்தி தான் வளர்க்கிறாள்... அதன்படி மகள் எல்லாவற்றையும் கூறினாள்...

மகளிடம் பேசி கொண்டே வேக வேகமாய் உண்டதால் திடீரென்று அவளுக்குப் புரையேறியது... அதைக் கண்டு கயல்விழி குடுகுடுவென்று சமையலறைக்கு ஓடி போய்த் தண்ணீரை எடுத்து வந்து அன்னையிடம் நீட்டினாள்...

முத்துபேச்சி அதை வாங்கியதும் அன்னை தனக்குச் செய்வது போல் அவளது தலையில் மெல்ல தட்டி கொடுத்தாள்...

மகளின் அன்பான செயலில் அவளது கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... அவனும் அப்படித்தான் அவனது ஒவ்வொரு செய்கையிலும் அவள் மீதான அக்கறை வெளிப்படும்... ஒரு ஆணால் இந்தளவுக்கு அன்பு செலுத்த முடியுமா என்று அவள் அவனைக் கண்டு பிரமித்து இருக்கிறாள்...

அவனின் வாரிசும் அவனைப் போல் தான் இருக்கிறாள்... மனம் நெகிழ மகளை அருகில் இழுத்து அணைத்து கொண்டாள்...

"ம்மா... அழுறீங்களா...?" முத்துபேச்சியின் கண்ணோரம் துளிர்த்த நீர்த்துளிகளைக் கண்டு மகள் கேட்க...

"இல்லைடா கண்ணு... அம்மா கண்ணுல தூசி விழுந்திருச்சு..."

"கொஞ்சம் இருங்க..." என்ற மகள் அவளது கண் இமையைக் கைவிரலால் பிரித்துப் பிடித்து வாயால் 'ப்பூ' என்று ஊதினாள்...

அன்று அவனும் இப்படி நெருக்கத்தில் அவள் அருகில் வந்து அவளது கண்ணில் இருந்த தூசியை ஊதிய காட்சி அவளது நினைவில் எழுந்தது... தன்னை ஒரு பெண்ணாக உணரச் செய்தவனின் அருகாமையை இப்போது நினைக்கும் போதும் அதே உணர்வு அவளது அடிவயிற்றில் இருந்து கிளம்பி அவளது உடல் முழுவதும் பரவியது இன்பமாய்...

அவளது உயிர் உள்ளவரை அவனை மறக்க இயலாது அவளால்... மகளை இறுக அணைத்து கொண்டாள் அவனது நினைவில்... அருமை மகள் அவன் கொடுத்த பரிசு அல்லவா...

"ம்மா... ஹோம்வொர்க் பண்ணணும்..."

கயல்விழி அவளது கையைச் சுரண்டவும் தான் அவள் மகளை விடுவித்தாள்... இதை எல்லாம் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் பாண்டியன்...

கயல்விழியின் பிறப்பு பற்றி அவனுக்கு முழுவதும் தெரியவில்லை என்றாலும் இலைமறை காயாகச் சில விசயங்களை அவனாக ஊகித்து இருந்தான்... ஆனால் தோழி அவளாகச் சொல்லாத வரை தானாக எதுவும் கேட்க கூடாது என்று அவன் அமைதி காத்தான்... இப்போதும் அதைத் தான் அவன் செய்து கொண்டிருந்தான்...

முத்துபேச்சி அவனின் மனம் புரிந்தவளாய் பேச்சை மாற்ற எண்ணி செல்வி பற்றிப் பேசினாள்... அவள் நினைத்தபடி பாண்டியனின் கவனம் அதில் சென்றது...

"இதைச் சும்மா விடக்கூடாது புள்ள... ரெண்டுல ஒண்ணு பார்த்துடலாம்..." என்று அவனும் ஆவேசமாய்க் கூறினான்...

"நிச்சயமா ஒரு கை பார்க்கலாம் பாண்டி..." என்றவள் உண்டு முடித்துவிட்டு மகளுக்குப் பாடம் சொல்லி கொடுக்கப் போனாள்...

தினமும் ஒரு மணி நேரம் மகளுக்கு ஆங்கிலம் எழுத, பேச கற்று தருவாள் அவள்... மகளின் ஆங்கிலப் புலமையை வளர்ப்பதற்காக...

****

மறுநாள் செல்வநாதனின் பேரன் தருணுக்கு பிறந்தநாள்... அதனால் முதல் வேலையாக முத்துபேச்சி காலையில் எழுந்ததும் குளித்து முடித்து அவரின் வீட்டிற்குக் கிளம்பிவிட்டாள்...

அங்கு அவளைக் கண்டதும் உற்சாகமாக வரவேற்றாள் அவளது கல்லூரி தோழியும், செல்வநாதனின் மகளுமான நித்யா...

"முத்து... வா... வா..."

"நித்தி... எப்படியிருக்க...?" என்று அவளும் தோழியைக் கட்டி அணைத்து கொண்டாள்...

கமலாவிற்கு முத்துபேச்சியைப் பிடிக்காத போதும் நித்யாவிற்கு அவளை நிரம்பப் பிடிக்கும்...

"நான் நல்லாயிருக்கேன்... நீ தான் பெரியாளாகிட்ட போல..." நித்யா சிரித்தபடி கேட்க...

"எல்லாம் ஐயாவோட ஆசிர்வாதம் தான்... அண்ணா எப்படியிருக்காங்க...? வந்திருக்காங்களா...? தருண் எங்கே...?"

"ஒவ்வொண்ணா கேளேன் எருமை..." தோழியின் தோளில் தட்டிய நித்யா,

"அவர் வரலை... தருண் இங்கே தான் இருந்தான்..." என்றவள் உள்பக்கம் பார்த்து, "தருண்... இங்கே வா... முத்து ஆன்ட்டி வந்திருக்காங்க பாரு..."

அன்னை அழைக்கவும் நான்கு வயது தருண் அங்கு ஓடி வந்தவன் முத்துபேச்சியைக் கண்டதும்,

"ஹாய் ஆன்ட்டி..." என்று அவளை அணைத்துக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டான்...

பதிலுக்கு முத்தமிட்டு அவனது கையில் தனது பரிசு பொருளை கொடுத்த முத்துபேச்சி, "ஹேப்பிப் பேர்த்டே கண்ணா..." என்று வாழ்த்த...

"தேங்க்யூ ஆன்ட்டி..." என்றபடி அதை ஆசையாய் வாங்கிக் கொண்டான் சின்னவன்...

"கயல் அக்கா வரலையா ஆன்ட்டி..."

"இல்லடாம்மா... அவளுக்கு ஸ்கூல் இருக்கு..."

"இப்ப எங்களுக்கு லீவ் தானே..."

இருவரும் வேறு வேறு பாட நிலையைப் பின்பற்றும் பள்ளியில் படிப்பவர்கள்... அதை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் அவள் விழிக்க... நித்யா வந்து அவளைக் காப்பாற்றினாள்...

"நாம நாளைக்குக் கயலை பார்க்க போகலாம்... இப்போ நீ போய் விளையாடு..." என்று அவனை அனுப்பியவள்,

"முத்து..." என்றாள் தயக்கமாய்...

"என்னடி சொல்லு...?" என்று தோழியைக் கண்டு அவள் சிரித்தாள்...

"விஜய் இங்கே மாத்தி வந்திருக்கிறாராமே..."

அதைக் கேட்டதும் முத்துபேச்சியின் முகம் இறுகி போனது...

"இப்போ அவனைப் பத்தின பேச்சு உனக்கு எதுக்கு...?"

"என்னடி இப்படிச் சொல்ற...?" பரிதாபமாய் அவளைப் பார்த்தாள் நித்யா...

"நித்தி... நீ இன்னும் சின்னப் பொண்ணு இல்லை... உனக்குக் கல்யாணமாகி ஒரு பையனும் இருக்கான்... இப்போ வந்து பழைய காதலை பத்தி பேசுறது அபத்தமா இல்லை உனக்கு..."

அதைக் கேட்டு அவளது கண்களில் கண்ணீர் துளிர்த்தது...

"நீ சொன்ன மாதிரி இது பழைய காதல் தான்... ஆனால் முதல் காதல் இல்லையா...? அதை மறக்க முடியலை முத்து... அது ஏற்படுத்திய தாக்கத்தை என்னால் மறக்க முடியாது... அதுக்காக நான் என் கணவருக்கு விசுவாசமா இல்லைன்னு நீ நினைச்சுக்காதே... அவருக்கு ஒண்ணுன்னா என் உயிரையும் விடத் துடிக்குது என் மனசு... அதே சமயம் எங்கிருந்தாலும் விஜய்யும் நல்லாயிருக்கணும் நினைக்குது இந்தப் பாழா போன மனசு..."

நித்யாவின் மனநிலை அவளுக்குப் புரிவதாய்...

"நீ கவலைப்படுற அளவுக்கு மோசமா நிலைமையில் அவனில்லை... பொண்டாட்டி, குழந்தைகள்ன்னு நல்லாத்தான் இருக்கான்..."

விஜய்யை பற்றிய உண்மையைச் சொன்னால் நித்யாவின் மனம் வேதனைப்படும் என்று நினைத்து அவள் மாற்றிச் சொன்னாள்...

"நீ அவரைப் பார்த்தியாடி...?" என்று ஆர்வமாகக் கேட்டவளை வெறித்துப் பார்த்தவள் 'ஆம்' என்பது போல் தலையாட்டியவள்,

"நல்லாயிருக்கான் போதுமா...?" என்றாள் வெடுக்கென்று...

முத்துபேச்சியின் வார்த்தையில் நிம்மதி அடைந்தவளாய் நித்யா வேறு கதைகள் பேச துவங்கினாள்... ஆனால்

முத்துபேச்சியின் மனம் தான் நித்யாவின் காதலில் நிலை கொண்டு இருந்தது...

செல்வநாதன் வீட்டில் இருந்து கிளம்பி வந்தவளை போகும் வழியில் விஜய் பார்த்துவிட்டான்... அவளைக் கண்டதும் தான் ஆரோகணித்து வந்த தனது இரு சக்கர வாகனத்தை அவன் ஓரம் கட்ட, அதைக் கண்டு வேறுவழியின்றி அவளும் தனது ஸ்கூட்டியை சாலையோரமாய் நிறுத்திவிட்டு கீழிறங்கி நின்றாள்...

அவன் காக்கி சீருடையில் இல்லாமல் வெள்ளை சட்டை, காக்கி பேண்ட் அணிந்திருந்தான்...

ஹெல்மெட்டை கழட்டியபடி தனது முடியை ஸ்டைலாகக் கோதி கொண்டவன் அவளைப் பார்த்து சிரித்தபடி, "அப்புறம் ரௌடி எப்படியிருக்க...? பார்த்து ரொம்ப நாளாச்சு..."

அவளோ அவனுக்குப் பதில் கூறாது வேறு எங்கோ பார்த்தபடி தனது கைவிரல் நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டு இருந்தாள்...

அதிலேயே அவளது கோபத்தின் அளவை புரிந்தவனாய், "இந்தக் கெட்டப் பழக்கத்தை விடுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன் உனக்கு..." என்று கடிந்தபடி அவளது கையை அவன் தட்டிவிட்டான்...

அதில் அவனைத் திரும்பி பார்த்து முறைத்தாள் அவள்...

"என்னைய கடிக்க முடியலைன்னு இப்படி நகத்தைப் போட்டு கடிக்கிறியா...?" அவன் புன்னகையுடன் கேட்க...

"உன்னைய கடிக்கவா...? விட்டா கொலையே பண்ணிடுவேன் கொலை..." என்று கோபத்தில் அவள் படபடக்க...

"ஐயோ பயமாயிருக்கே..." போலியாய் பயந்தவன் போல் நடித்தவனைக் கண்டு அவள் இன்னமும் முறைத்துக் கொண்டு நிற்க...

நிலைமை கொஞ்சம் தீவிரம் தான் என்பதை உணர்ந்தவனாய் அவனும் நகைச்சுவையைக் கைவிட்டவனாய்,

"என் மேல் உனக்கு அப்படி என்ன கோபம்...?" என்றான் தன்மையாக...

"அன்னைக்கு என் கண் முன்னாடி நீ ஜீப்பில் ஏத்தி கூட்டிட்டு போனியே அவனை என்ன பண்ணினே...?"

அந்தச் சந்தோசை காவல் நிலையத்திற்குக் கூட்டி சென்ற அரை மணி நேரத்தில் அவனது தந்தை வந்து எல்லோரையும் மிரட்டி விட்டு அவனை அழைத்துச் சென்றது நினைவில் எழுந்து அவனது கை முஷ்டியை இறுக செய்தது இயலாமையில்...

மேலிடத்து சிபாரிசுடன் வரும் அவர்களை மாதிரி ஆட்கள் மீது தகுந்த ஆதாரங்கள் இல்லாமல் இவன் கையை வைக்க முடியாது... அதனால் அவன் அந்த விசயத்தில் சற்று அமைதி காத்தான்...

தகுந்த ஆதாரம் மட்டும் கிடைக்கட்டும் அன்று இருக்கிறது அந்தச் சந்தோஷிற்கு... சந்தோஷை நினைத்து பல்லை கடித்தான்...

"உன்னால பதில் சொல்ல முடியாதுல்ல... வழக்கம் போலப் பணத்தைக் கண்டதும் சல்யூட் போட்டு ராஜ மரியாதையோட அவங்களை வழியனுப்பி வச்சியிருப்ப..."

அருவருப்பும் எரிச்சலுமாய் உரைத்தவளை கண்டு அவனால் பதில் பேச முடியவில்லை... ஏனெனில் உண்மையில் அது தான் நடந்தது...

"ப்ச்... இப்ப எதுக்கு அவனைப் பத்தி நீ கேட்கிற..."

யாரோ ஒருவனைப் பற்றிய பேச்சு நமக்கு எதுக்கு என்ற அர்த்தத்தில் அவன் கேட்டான்...

"அவன் பண்ணின காரியம் அப்படி..." என்று கோபமாய்க் கூறியவள் சந்தோஷ் செய்ததை ஒன்றுவிடாமல் கூற...

அதைக் கேட்டு திகைத்து தான் போனான் விஜய்... இது போல் இப்போது நிறைய நடப்பது உண்டு தான்... ஆனாலும் முத்துபேச்சியின் வாயிலாக இந்த விசயத்தைக் கேட்பதால் என்னவோ இது அவன் மனதை அதிகமாய்ப் பாதித்தது...

"அவன் பண்ணினதுக்கு நிறைய ஆதாரம் இருக்கு... ஆனா எல்லாத்தையும் அழிச்சு ஒண்ணுமே இல்லாம பண்ணிட்டாங்க... இப்போ நீ ஏசிபியா இருந்து இதுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போற...?" கைகளைக் கட்டி கொண்டு நிதானமாகக் கேட்டவளை கண்டு,

"நிச்சயம் தேவையான நடவடிக்கை எடுக்கப் பார்க்கிறேன்..."

அதைக் கேட்டு அவளது இதழ்கள் வளைந்தது இகழ்ச்சியாய்...

"பார்த்தியா இப்போதும் பார்க்கலாம்ன்னு தான் சொல்ற... நடவடிக்கை எடுக்கிறேன்னு உன்னால உறுதியா சொல்ல முடியலை... உன்னை மாதிரி போலீசை நம்பி நாங்க ஏமாந்தது எல்லாம் போதும்... இனி நாங்களே களத்துல இறங்கிறதா முடிவு பண்ணிட்டோம்..."

"நீ எதுக்குத் தேவையில்லாம இதில் இறங்கிற பேச்சி... அவனுங்க மோசமான ஆளுங்க... நீ ஒதுங்கி நில்லு... யாரோ ஒருத்திக்காக நீ தெருவுல இறங்கி போராடி உன் மகளை நடுத்தெருவில் நிக்க வச்சிடாதே... அவனுங்க உன்னைக் கொல்ல கூடத் தயங்க மாட்டாங்க..." என்றவனைக் கூர்ந்து பார்த்தவள்,

"சரி யாரோ ஒருத்திக்குன்னா எதுவும் செய்ய வேண்டாம், நீ சொல்றதை நான் அப்படியே கேட்டுக்கிறேன்... ஆனா பத்து நாளைக்கு முன்னாடி என்னை ஒரு நாலு பேர் கடத்திட்டுப் போய்க் கற்பழிக்கப் பார்த்தாங்களே அதுக்கு நீங்க என்ன பதில் சொல்ல போறீங்க ஏசிபி சாரே..."

நக்கலும் நையாண்டியுமாய் உரைத்தவளின் கேலி அவனின் காதில் விழவில்லை... தலையில் ஏறவில்லை... மாறாக அவளுக்கு நேர்ந்த ஆபத்தை மட்டுமே அவன் உணர்ந்தான்...

அடுத்த நொடி அவளின் தோளை தன் இரு கையாலும் இறுக பற்றியபடி அவன், "யாருடி உன்னைக் கடத்தினது...?" என்று கர்ஜித்தபடி ஆவேசமாய் உலுக்கினான் ஆத்திரத்தோடு...

அவனது முழுதேகமும் இரும்பாய் இறுகி போய், கண்கள் இரண்டும் கோவைப்பழங்களாய்ச் சிவந்திருந்தது அடக்கப்பட்ட ஆக்ரோசத்தில்...

வாசம் நேசமாகும்...!!!

விஜய் இறுக்கமாய்ப் பிடித்திருந்ததில் முத்துபேச்சியின் தோள்கள் இரண்டும் கழண்டு விடுவது போல் வலித்தது... ஆனால் அந்த வலியை கூட உணர முடியாதபடி அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்திருந்தாள்...

அவனது கோபம் அவள் அறிந்த ஒன்று தான் என்றாலும் அவனது இந்தத் தொடுகை அவளை அதிர்ச்சியில் வாயடைக்கச் செய்தது...

விழிகள் அகல அவனைப் பார்த்தபடி அப்படியே சிலையாய் நின்றிருந்தாள் அவள்...

"அவன்களை உனக்கு அடையாளம் தெரியுமா...?" என்று மீண்டும் கர்ஜித்தான் அவன்...

அவனின் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்க இயலாதவளாய் அவள் அவனையே பார்த்து கொண்டிருந்தாள்...

"சொல்லுடி... பதில் சொல்லுடி..." என்று ஆத்திரத்தில் வெறி பிடித்தவன் போல் கத்தினான் அவன்...

அந்நேரம் அவன் தன்னை மறந்தான், தன் பதவியை மறந்தான்... சுற்றி இருக்கும் இந்தச் சமூகத்தை மறந்தான்... எல்லாவற்றையும் அவன் மறந்தான்... அவன் நினைவில் இருந்தது எல்லாம் அவளுக்கு ஏற்பட்ட ஆபத்து மட்டும் தான்...

காவல்துறை அதிகாரியாகத் தான் இருக்கும் போது அவளுக்கு இப்படி ஒரு அவலம் நேர்வதற்குத் தான் விடலாமா...? அந்த எண்ணம் தான் அவனது உள்ளத்தில் விடாமல் ஓடி கொண்டது...

"மத்த நேரம் எல்லாம் எட்டூருக்கு வாய் கிழிப்பியே... இப்போ வாய் திறந்து பதில் சொல்லுடி..." என்றவனின் குரல் இப்போது ஆத்திரத்தில் இருந்து கீழே இறங்கி கெஞ்சி கொண்டு ஒலித்தது...

அதற்கும் அவள் பதில் பேசாது தன்னை வெறித்துப் பார்ப்பதை கண்டு அவன் தனது இரு கைகளிலும் தாமரை போன்ற அவளது பூமுகத்தை மென்மையாக ஏந்தியபடி,

"உனக்கு ஒண்ணும் ஆகலையே...?" என்றவனின் குரலோடு உடலும் சேர்ந்து நடுங்கியது...

அதை அவனது கைவிரல்கள் நடுக்கத்தில் அவள் உணர்ந்தாள்... அந்த நடுக்கம் கம்பீரமான அந்த ஆண்மகனின் மனதின் பதற்றத்தை அப்படியே பறைச்சாற்றுவதாய் இருக்கச் சிலையாய்ச் சமைந்திருந்த பெண்ணவளுக்கு உணர்வு வந்தது...

"முதல்ல கையை எடு சாமி..." என்றவளின் குரலிலும் முதலில் இருந்த கோபம் இல்லை... மாறாக ஏதோ ஒரு உணர முடியாத உணர்வு ஒன்று அதில் கலந்து இருந்தது...

"அது என்ன எப்பப்பாரு பொட்டப்புள்ளைய தொட்டு தொட்டு பேசிக்கிட்டு..."

அவன் இன்னமும் கைகளை விலக்காததால் அவளே அவனது கைகளைத் தட்டி விட்டாள்...

"ப்ச்... நான் என்ன கேட்கிறேன்... நீ என்ன பேசுற...?" என்றபடி அவன் இயலாமையில் தனது தலைமுடியை கை கொண்டு கோதியபடி அவளைத் திரும்பி பார்த்தான்...

"அதே தான் நானும் கேட்கிறேன் சாமி... முதல்ல நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு..."

இரு கைகளையும் கட்டி கொண்டு அவனை அமர்த்தலாய் பார்த்தாள் அவள்...

"ப்ளீஸ்டி... உனக்கு ஒரு ஆபத்தும் இல்லையே..."

இதற்கான விடை ஆரம்பத்தில் அவள் அவனிடத்தில் உரைத்த வார்த்தைகளில் பொதிந்து இருந்ததை அறியாத அறிவீலியாக அவளிடமே கேட்டான் அவன்...

"அப்படி மட்டும் ஏதாவது ஒண்ணு நடந்திருந்தா இந்நேரம் நான் செத்துப் போய்ப் பத்து நாள் ஆகியிருக்கும் சாமி..."

அவனது முகத்தைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்தபடி சொன்னவளின் குரல் மரத்து போய் ஒலித்தது...

அதைக் கேட்டு அவளுக்கு ஒன்றும் ஆகவில்லை என்று அவன் மனம் நிம்மதி அடைந்தாலும் அவளது வார்த்தைகளின் தாக்கத்தினால் எழுந்த மனதின் வலியை அவனது கண்கள் அப்படியே பிரதிபலித்தது...

"ஏன்டி இப்படி எல்லாம் பேசுற...? பெண் உரிமை பேசுற நீ ஏன் இப்படிப் பிற்போக்குத்தனமா யோசிக்கிற...?"

அதில் அவனைத் திரும்பி பார்த்தவளின் பார்வை அவனை ஊடுருவுவது போல் பார்த்தது...

"நான் பெண் உரிமை பேசுபவள் தான்... ஆனா பெண்களுக்கே உண்டான சில விசயங்களை என்னால் மாத்திக்க முடியாது... அதில் ஒண்ணு இது... ஒருத்தனை மட்டும் உயிருக்கு உயிராய் காதலிச்சு, அவனை மட்டும் உயிர் மூச்சா நேசிச்சு, அவனோட மட்டும் காதலோட வாழ்ந்து, சாகும் போதும் அவனை நினைச்சுக்கிட்டு சாகணும்ன்னு நினைக்கிற ஒரு சாதாரணப் பெண் ஜென்மம் நான்... எனக்குப் புரட்சி பெண் என்ற பட்டம் எல்லாம் வேண்டாம்... சாதாரணப் பெண் என்ற பட்டம் மட்டும் போதும்..."

அவள் கூறிய அத்தனை வார்த்தைகளும் அவனுக்கு மறந்து போனது... அவள் கூறிய 'ஒருத்தனை மட்டும் உயிருக்கு உயிராய் காதலிச்சு...' அந்த வார்த்தைகள் மட்டுமே அவனது காதில் ஒலித்தது... மனதில் தாங்கொண்ணா துயரம் பாரமாய் அழுத்த,

"அவ்வளவு காதலா உன் ஹஸ்பெண்ட் மேல...?"

அவனது வார்த்தைகள் அத்தனை வலியுடன் வந்து விழுந்தது... அதை அவள் உணர்ந்தாலும் வெளிக்காட்டி கொள்ளாது,

"இது என்ன அபத்தமான கேள்வி சாமி...? உன் பொஞ்சாதி மேல நீ உசிரை வச்சியிருக்கியா இல்லையா...?"

அதைக் கேட்டு அவளை ஒரு நொடி வெறித்துப் பார்த்தவன் பின்பு மௌனமாய் 'ஆம்' என்பது போல் தலையசைத்தான்...

"அதே மாதிரி நான் என் புருசன் மேல உசிரையே வச்சியிருக்கேன்..." என்று சிரிப்புடன் சொன்னவளை கேட்டு அவன் ஒரு நொடி அமைதியாக இருந்தான்...

பின்பு இயல்பு நிலைக்கு வந்தவனாய், "அவன்ங்களை உனக்கு அடையாளம் தெரியுமா...?"

அவன் சாதாரணமாக இதை அவளிடத்தில் கேட்ட போதும் அதில் அடக்கப்பட்ட கோபம் இருந்ததை அவள் உணர்ந்தாள்...

அவளுக்கு அந்த நான்கு பேரை அடையாளம் தெரியவில்லை என்றாலும் அந்த வித்தியாசமான வெளிநாட்டு காரை நன்கு அடையாளம் தெரியும்... இத்தனை நாளாய் அந்தக் காரை தான் அவள் தேடி கொண்டிருக்கிறாள்... ஆனால் இந்த நொடி வரை அது அவள் கண்ணில் அகப்படவில்லை...

ஏனோ இந்த விசயத்தை அவனிடத்தில் சொல்லி அவனின் கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய அவளுக்கு விருப்பமில்லை...

"ம்ஹூம்... தெரியாது... அப்படி மட்டும் அவனுங்களை எனக்கு அடையாளம் தெரிஞ்சியிருந்தா இந்நேரம் அவனுங்க சங்கை அறுத்திருக்க மாட்டேன்... இந்த முத்துபேச்சி மேல கை வைச்சிட்டு அவன் உசிரோட போயிர முடியுமா..." என்று கொஞ்சமும் ஆவேசமும் குறையாமல் பேசியவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது... ஆனாலும் அவனது விழிகள் அவளைக் கவலையுடன் பார்த்தது...

"எங்கே வச்சு இது நடந்தது...?"

அவன் கேட்டதும் அதன் விபரத்தை முழுவதுமாய் அவள் கூறினாள்... அப்போது தான் அதிலிருந்த ஆபத்தை அவனும் உணர்ந்தான்...

"அந்த மாணிக்கம் மட்டும் வரலைன்னா...? இல்லை அவனும் கெட்டவனா இருந்தா...?"

அந்த நினைவே அத்தனை பயங்கரமாய் இருந்தது...

"அதுக்குத் தான் பதில் சொன்னேனே... அப்படி எதுவும் ஆகியிருந்தா அவனுங்களைக் கொன்னுட்டு நானும் செத்து போயிருப்பேன்னு..."

திரும்பத் திரும்ப அதையே சொன்னவளின் வாயில் பட்டென்று ஒரு அடி போடலாமா என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது...

"இப்படியே பேசிட்டு இருந்தேன்னு வை உன் வாயில் அடி போட போறேன்..." என்றான் கோபமாய்...

"நெருப்புன்னா வாய் வெந்துடவா போகுது... அதெல்லாம் ஒண்ணும் ஆகாது சாமி..." என்றவளை இயலாமையுடன் பார்த்தவன்,

"இதுக்குத் தான் சொல்றேன்... இந்த மாதிரி விசயங்களில் நீ தலையிடாதேன்னு..."

"சாமி... நீயா இப்படி எல்லாம் பேசுற...? இதை உன் கிட்ட இருந்து சத்தியமா நான் எதிர்பார்க்கலை..." என்றவள் கோபத்துடன் தனது அலைப்பேசியை எடுத்து அவனிடம் நீட்டி அதிலிருந்த செல்வியின் புகைப்படத்தைக் காட்டி,

"நீயே பாரு சாமி... இந்த ஃபோட்டோ பார்த்தாலே தெரியலையா அந்தப் புள்ளய அநியாயமா கொன்னுட்டான்னு... இதைப் பார்க்கும் போது உன் மனசு பதறலையா...? அந்தப் பொண்ணு இடத்தில் என் பொண்ணை வச்சு பாரு... அப்போ என்னோட நியாயம் உனக்குப் புரியும்... எனக்காகச் சாதாரண மனுசனா நீ துடிக்கிற இல்ல... அது மாதிரி ஒரு ஏசிபியா

பொதுமக்களுக்காக நீ துடிக்க வேண்டாமா சாமி... இப்படியா ஒதுங்கி போன்னு அட்வைசு பண்றது... நான் உன் மேல நிறைய நம்பிக்கை வச்சிருந்தேன் சாமி... நீ பேசிய பேச்சில் எல்லாமே புஸ்ஸுன்னு புட்டுக்கிச்சு..."

ஆற்றாமையுடனும், அவநம்பிக்கையுடனும் பேசியவளை அமைதியாகப் பார்த்தான் அவன்...

"சாதாரண மனுசன்னா தப்பு செஞ்சவனை அருவாளால வெட்டி சாய்ச்சு கொன்னுட்டு அவனுக்குத் தண்டனை கொடுத்துட்டு போயிட்டே இருக்கலாம்... இதைத் தான் உன் விசயத்தில் நான் செய்ய நினைச்சது... ஆனா ஏசிபியா இதை என்னால் செய்ய முடியாது... என் பதவி அதுக்கு ஒத்துக்கவும் செய்யாது... ஏன்னா சட்டம் தண்டனை கொடுக்கணும்ன்னா அதுக்குத் தேவை காகித ஆதாரம், உயிருள்ள சாட்சி இது தான்... இது இருந்தா தான் குற்றத்தை நிரூபிச்சு குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியும்... நீ கொடுத்த இந்த ஃபோட்டோ, அந்தம்மாவோட வாக்குமூலம் மட்டும் இந்தக் கேஸ்க்கு போதாது... இன்னும் நிறைய வேணும்... அதனால் தான் நான் இதில் யோசிச்சு முடிவு எடுக்கிறேன்னு சொன்னேன்... நீ நினைக்கிற மாதிரி எமோசனலா எடுத்தேன் கவிழ்த்தேன்னு முடிவு பண்ண முடியாது பேச்சி..."

நீளமாய் விளக்கம் கொடுத்தவனின் குரலில் 'என்னைப் புரிந்து கொள்ளேன்' என்ற இறைஞ்சுதலே அதிகம் இருந்தது...

"அப்போ இதுக்கு என்ன தான் முடிவு சாமி... இப்படியே இவங்க தப்பு பண்ணிட்டுப் பணத்தை வச்சு எல்லாத்தையும் மறைச்சிட்டு சந்தோசமா, சுதந்திரமா வெளியில் சுத்துவாங்க... ஆனா எங்கள மாதிரி பொம்பளைங்க இவங்கள கண்டு பயந்து வீட்டுக்குள்ள பூட்டிக்கிட்டு இருக்கணுமா...? அப்படிப் பூட்டிக்கிட்டு பத்திரமா இருந்த பொண்ணைத் தானே இப்படி உருக்குலைய வச்சிட்டான் அந்தப் பாவி... அவனுக்குத் தண்டனையே கிடையாதா...?"

ஆத்திரத்தில் வெடித்தவளின் வார்த்தைகளில் இருந்த உண்மை ஆண் மகனான அவனையும் சுட்டது... தலை குனிந்து நின்றான் அவன் ஒரு ஆண் மகனாய் தன்னைத் தானே நொந்தபடி...

கம்பீரமான அவன் இப்படித் தலை குனிந்து நிற்பதை கண்டு அவளுக்கு என்ன தோன்றியதோ,

"நீ ஏன் சாமி தலை குனியற...? உன்னைய மாதிரி ஆம்பிளைங்களால தான் மத்த ஆம்பிளைங்களுக்குப் பெருமை..."

அவள் சொன்னதும் கண்கள் மின்ன நிமிர்ந்தவன் முகத்தில் சற்று நிம்மதியின் சாயல்...

"ஆனா நீ இப்படி ரொம்ப நல்லவனா இருக்கக் கூடாது சாமி..."

அதைக் கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"நான் நல்லவன்னு யார் சொன்னது...?" என்று கேட்டு அவன் குறும்பாய் சிரிக்கவும்...

அவளது மனக்கண்ணில் கல்லூரி கால விஜய் தோன்றி அவளின் இதழ்களிலும் புன்னகையை வரவழைத்தான்...

"எங்க டிபார்ட்மெண்ட்ல நடவடிக்கை எடுக்காம அமைதியா இருக்கிறதால தப்புச் செஞ்சவங்களை அப்படியே விட்டுறதா அர்த்தம் இல்லை... அதை எல்லாம் வேற மாதிரி டீல் பண்ணணும்... அதனால் இதை என் கிட்ட விட்டிரு... நான் பார்த்துக்கிறேன்..." என்றவன்,

"உனக்கு வேறு யாரும் எதிரிங்க இருக்காங்களா...?" என்று கேட்டான் காவல்துறை அதிகாரியாக...

"ஐய்யே என்ன சாமி நீ வேற... நான் எல்லாம் அந்தளவுக்குப் பெரிய ஆளு கிடையாது... இப்போ இருக்கிற உலகத்துல யாரையும் பகைச்சிக்கக் கூடாதுன்னு எனக்குத் தெரியும்... அதனால எல்லார் கிட்டேயும் ஒரு சிரிப்போட ஒதுங்கிக்குவேன்..."

"அப்போ அவங்க யாராயிருக்கும்...?" அவன் தனக்குள் யோசித்துக் கொண்டிருக்க...

"ஒரு பொட்டப்புள்ளய எதுக்குக் கடத்துவாங்க... அரிப்..." மேலே சொல்ல போனவள் அவனிடம் துடுக்குத்தனமாய்ச் சொல்ல இயலாது அமைதியானாள்...

என்ன தான் விளையாட்டுத்தனமாய் அவள் பேசிய போதும் ஒரு பெண்ணாய் அவளது வலி, வேதனையை அந்த ஆண்மகன் நன்கு உணர்ந்திருந்தான்...

"அதுக்குத் தான் சொல்றேன் பேச்சி... இந்த விசயத்தில் நீ தலையிட்டேன்னா அவங்க உன்னை அசிங்கப்படுத்திடுவாங்க..."

"அதையும் பார்த்திடலாம் சாமி..." என்றாள் சவாலாக...

"நானே உன்னை அரெஸ்ட் பண்ற நிலைமை வந்துருமோன்னு எனக்குப் பயமாயிருக்குடி... நான் எப்படி உன்னை அசிங்கப்படுத்த முடியும் நீயே சொல்லு..."

அதைக் கேட்டு அவள் திகைத்து போய் அவனைப் பார்க்க...

"உன்னைப் பார்த்துச் சல்யூட் அடிக்கணும்ன்னு நினைச்சு தான் இந்தக் காக்கி யூனிஃபார்மை நான் போட்டதே... உன்னை மரியாதையா நடத்தணும்ன்னு நினைச்சு தான் நான் ஐபிஎஸ் ஆனதே... அப்படி ஒரு குறிக்கோளோட இருக்கிற என்னை வேறு மாதிரி ஆக்சன் எடுக்கிற மாதிரி இக்கட்டான நிலைமையில் சிக்க வச்சிராதே..."

அவன் சொன்னதைக் கேட்டு அவளது கண்கள் பனித்தது... அவன் எதையும் மறக்கவில்லை... என்றோ அவள் கூறிய வார்த்தைகளை மறக்காமல் செயலாற்றியவன் இன்றும் அதை நினைவில் வைத்திருப்பதைக் கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"நான் அரசியல்வாதியாகவும், நீ போலீஸ்க்காரனாவும் ஆகணும்ன்னு நினைச்ச போதே இதை எல்லாம் எதிர்பார்த்தது தானே... அது எப்படி எப்பவும் நீ எனக்குச்

சல்யூட் அடிச்சிக்கிட்டு இருக்க முடியுமா... நான் ஊழல் பண்ணினா நீ என்னை அரெஸ்ட் பண்ணித் தானே ஆகணும்..."

மனதில் உணர்வுகள் ஆழிப் பேரலையாய் கரை புரண்ட போதும் அதைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு அவள் சிரித்தபடி அப்படிக் கேட்டாள்...

"நீ தப்பு பண்ண மாட்ட..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"ம்... அந்தளவுக்கு என் மேல் நம்பிக்கை இருக்குல்ல சாமி... அதே நம்பிக்கையோடு இனியும் இரு..." என்றவள் கிளம்பத் தயாரானாள்...

"அப்போ என் பேச்சை கேட்கிறதா இல்லை..."

"என் மனசாட்சி என்ன சொல்லுதோ அதை மட்டும் தான் நான் கேட்பேன்..."

அவள் தீர்மானமாய்க் கூறியதை கேட்டு பெருமூச்சு விட்டவன் தோளை குலுக்கியபடி அவள் முன் தன் கை நீட்டி, "ஆல் தி பெஸ்ட்..." என்றான்...

"தேங்க்ஸ் சாமி..." என்று சிரித்தபடி அவள் அவனது கையைப் பிடித்துப் பல முறை நன்கு குலுக்கினாள் விளையாட்டாய்...

அவளது குறும்பை கண்டு அவன் ரசித்தாலும் அவளை நினைத்து அவன் மனதுக்குள் பெருங்கவலை அரிக்கத்தான் செய்தது...

தன்னிடம் விடைப்பெற்று சென்றவளை அதே கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் அவன்... அதே சமயம் அவளுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராமல் காக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுள் வலுப்பெற துவங்கியது...

அன்றே முத்துபேச்சி செல்வநாதனிடம் தன்னுடைய போராட்டத்தைப் பற்றிச் சொல்லிவிட்டாள்... அவருக்குத்

தெரியாமல் அவள் ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டாள் அதனால் தான்...

"நீ சொல்ற கம்பெனி அந்தச் சுந்தரலிங்கத்தோடது ஆச்சே... அவன் பையனா இப்படிப் பண்ணினான்...?" என்று அவர் யோசிக்க...

"அவரை உங்களுக்குத் தெரியுங்களா ஐயா...?"

'ஐயாவுக்குத் தெரிந்தவங்களா இருந்தா இப்போ என்ன பண்றது...?' என்று அவள் குழம்பி போய் நின்றிருந்தாள்... செல்வநாதனை எதிர்த்து அவள் தன் சுண்டு விரலை கூட அசைக்க மாட்டாள்...

"ஆமாம் முத்து... நம்ம கட்சிக்கு எலெக்சன் டைம்ல நிறைய டொனேசன் கொடுத்திருக்கிறான்... இதோ இப்போ வர்ற எலெக்சன்லயும் அவன் கிட்ட போய்க் கேட்கத்தான் செய்வாங்க... நாம மட்டுமில்லை எல்லாக் கட்சிக்காரங்களும் தான்..."

அவளுக்கு அப்போதே புரிந்து போனது எதிரிகள் எத்தகைய செல்வாக்கு மிகுந்தவர்கள் என்று... ஆனாலும் அநியாயத்தைக் கண்டு அமைதியாக அடங்கிப் போவதா என்று அவளது மனம் குமுறியது...

அதையே தான் செல்வநாதனும் பிரதிபலித்தார்...

"அதுக்காக அவங்க செய்ற அநியாயத்தைத் தட்டி கேட்காம இருக்க முடியாது முத்து... மக்கள் நம்மளை நம்பி ஓட்டு போடுறதே நாம அவங்களுக்கு நல்லது பண்ணுவோம்ங்கிற நம்பிக்கையில் தான்... அந்த நம்பிக்கையை நாம காப்பாத்த வேண்டாமா..." என்றவர்,

"என்னோட ஆதரவு உனக்கு எப்போதும் உண்டு முத்து... அதனால் இதுக்கு எல்லாம் பயப்படாம தைரியமா இறங்கு..."

ஒரு அரசியல்வாதியாய், அவளின் வழிகாட்டியாய், குருவாய் அவர் அவளின் செயலை ஊக்குவித்தார்...

"என்னால ஐயாவுக்கு ஏதும் பிரச்சினை வந்துட கூடாதுங்களே..."

"அதை எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீ செய்யப் போற விசயம் நம்ம கட்சிக்கும் சேர்த்து தான் நல்ல பெயரை வாங்கித் தர போகுது..."

அவரின் ஆசிர்வாதத்தை வாங்கிக் கொண்டு அவள் தைரியத்துடன் வீட்டிற்கு வந்தாள்...

****

மறுநாள் பொழுது விடிந்ததும் முத்துபேச்சி, பாண்டியனுடன் நேரே மாநகரக் காவல்துறை ஆணையர் அலுவலகம் வந்துவிட்டாள்... ஏனெனில் போராட்டம் அங்கிருந்து தான் ஆரம்பிக்கப் போகிறது... அவர்களுடன் இன்னும் சில பேர்...

ஆனால் செல்வியின் அன்னை மாரியம்மாள் மட்டும் இன்னும் அங்கு வரவில்லை...

"என்னா புள்ள... அந்தம்மாவ இன்னும் காணல..." என்ற பாண்டியனுக்குச் சற்று எரிச்சலாக இருந்தது...

அவருக்காக அவர்கள் இருவரும் வேலை மெனக்கெட்டு இங்கே வந்து காத்திருந்தால் அவர் இன்னமும் வந்து சேரவில்லை...

"இரு பாண்டி... ஃபோன் பண்ணி பார்ப்போம்..." என்றவள் தனது அலைப்பேசியில் இருந்து மாரியம்மாளுக்கு அழைத்தாள்...

அழைப்புப் போய்க் கொண்டே இருந்தது... ஆனால் மறுபக்கம் அவர் அழைப்பை எடுக்கவே இல்லை...

"என்னாடா இது... இந்த அக்கா ஃபோனை எடுக்க மாட்டேங்குது..." இப்போது அவளுக்கும் எரிச்சல் வந்தது...

"நாம போராட்டத்தை ஆரம்பிக்கலாம் புள்ள... அவங்க பின்னால வந்து ஜாயிண்டு பண்ணிக்கட்டும்..."

பாண்டியன் சொல்லவும் தீவிரமாக யோசித்தவள், "இல்ல பாண்டி... அது சரி வராது... சம்பந்தப்பட்டவங்க அவங்க இல்லாம நாம போராட முடியாது... சும்மாவே இந்தக் கேசில நமக்குச் சாதகமா ஒரு விசயம் கூட இல்லை... இப்போ இந்தம்மாவும் இல்லைன்னா சுத்தமா சரி வராது..." என்றவள்,

"எதுக்கும் நாம அவங்க வீட்டுல போய்ப் பார்த்துட்டு வரலாம்..." என்றபடி அவர்கள் மாரியம்மாள் வீடு நோக்கி கிளம்பினர்...

அவர்கள் அங்கே சென்ற போது கண்ட காட்சியைக் கண்டு திகைத்து போய் நின்றனர்... அங்குச் செல்வியின் உடல் இறுதி ஊர்வலத்திற்குத் தயாராகப் பாடையில் ஏற்றப்பட்டுக் கொண்டு இருந்தது...

அதைக் கண்டு பதறி போய் இருவரும் அங்கு வீட்டு வாயிலில் அழுது கொண்டிருந்த மாரியம்மாள் அருகே சென்றனர்...

இவர்களைக் கண்டதும் அவரது முகம் மாறியது... தனது உரத்த குரலில் அங்கிருந்த சொந்தக்காரர்களிடம்,

"புள்ள உடலை இடுகாட்டுக்கு எடுத்துக்கினு போங்கப்பா..." என்று சொல்லும் போதே அவரது கண்களில் கண்ணீர் வழிந்தது... புடவை தலைப்பால் வாயை மூடி கொண்டு அழுதார்...

சற்று நேரத்திற்கு எல்லாம் கூட்டம் கலைந்து சென்றதும் மாரியம்மாள் மட்டுமே தனித்து இருந்தார்... அப்போதும் இவர்களைக் கண்டு பேசாமல் அவர் வீட்டினுள் செல்ல முயன்றார்...

அவரின் வழியை மறித்தபடி நின்ற முத்துபேச்சி, "அக்கா... இன்னாத்துக்கு இப்படிப் பண்ணின...? உன்னைய நம்பித்தானே நாங்க போராட்டத்துக்கு எல்லா ஏற்பாடு பண்ணோம்..." என்று ஆதங்கத்துடன் கேட்டவளை கண்டு

கண்ணீர் வடித்தவர் அக்கம்பக்கம் பயத்துடன் பார்த்துக் கொண்டு,

"வேணாம்மா இதை இத்தோட விட்டுடு... உசிரோட இருக்கும் போது தான் எம் மவளை நிம்மதியா இருக்க விடலை... செத்ததுக்கு அப்புறமாவது நிம்மதியா இருக்க விடும்மா..." என்று அழுதவர்,

"அந்தப் படுபாவிங்க நேத்து நைட் வந்து என்னை மிரட்டிட்டு போனாங்கம்மா... நான் போராட்டம் பண்ணினா எம் பொண்ணை நடத்தை சரியில்லாதவள்ன்னு கோர்ட்ல நிரூபிச்சு இந்தக் கேசை ஒண்ணும் இல்லாம பண்ணிருவாங்களாம்... அதை நிரூபிக்க ஆயிரம் பேரை கோர்ட்டுக்கு கூட்டிட்டு வருவோம்ன்னு மிரட்டுறாங்க முத்து... எம் மவளை அவிசாரின்னு சொல்லவா அப்படி அருமையா வளர்த்தேன்... அவ செத்தது செத்து போயிட்டா... இனி அவ உசிரோட வர போறதில்ல... கடைசியில அவளோட மானமாவது மிஞ்சட்டும் கண்ணு... இதை இத்தோட விட்டிரு முத்து..." என்று கதறியபடி அவர் வீட்டினுள் சென்றுவிட்டார்...

அதைக் கேட்டு இயலாத கோபத்துடன் வீட்டிற்கு வந்தாள் முத்துபேச்சி... அவளைப் பொருத்தவரை செல்வி யாரோ ஒருவள் தான்... ஆனால் அவளுக்கு நடந்த அநியாயம் அப்படி இல்லையே... மனம் கொதித்தது அவளுக்கு...

ஆனால் அவளால் இதற்கு ஒன்றும் செய்ய முடியவில்லை...

அவளின் இந்தச் செயலுக்கான எதிரொலி அவளை வேறு விதத்தில் வந்து தாக்கியது... ஆம் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தேர்வு செய்யப்பட்டு இருந்த முத்துபேச்சியின் பெயரை தேர்தல் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டது அவளது கட்சி மேலிடம்...

அதைக் கேட்டு அவள் மனம் குமுறிய போதும் சற்று அமைதி காத்தாள் செல்வநாதனுக்காக... அவரும் அவளுக்காகக் கட்சி மேலிடத்தில் போய்ப் பேசிவிட்டு தோல்வியுடன் திரும்பி வந்தார்...

"பணத்துக்கு விலை போய் விட்டது நம் கட்சி கொள்கைகள்..." என்று மனம் வெறுத்து சொன்னார் அவர்...

"நீ சுயேட்சையா நில்லு முத்து... அந்த ஏரியாவில் நீ தான் ஜெயிப்ப எனக்கு முழு நம்பிக்கை இருக்கு... என்னோட ஆதரவு உனக்கு எப்போதும் உண்டு..."

எல்லாம் கைவிட்டு போன அந்த நிலையிலும் அவர் தனக்காகப் பார்த்து பார்த்து பேசுவது கண்டு அவளது உள்ளம் நெகிழ்ந்தது...

கட்சி மேலிடத்தின் இந்த நடவடிக்கையைக் கண்டு அவள் மனதளவில் நம்பிக்கை இழந்து இடிந்து போன இந்த நிலையில் செல்வநாதனின் ஆறுதல் பேச்சு அவளுக்கு யானை பலத்தை அளித்தது...

"கொஞ்சம் டைம் கொடுங்க ஐயா... எனக்கு யோசிக்கணும்..." என்றாள் சிறிது குழப்பத்துடன்...

"யோசிச்சு நல்ல முடிவு எடும்மா..." என்றதோடு அவர் முடித்துக் கொண்டார்...

அவள் அந்தக் குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்தாள்... படித்த படிப்புக்கு ஏற்ற வேலைக்குப் போகாமல் அரசியல், அரசியல் என்று தன் வாழ்நாளின் முழு நேரத்தையும் அவள் அதற்காகத் தான் கழித்தாள்... அது எல்லாம் கானல் நீராய், கனவாய் மாறி போனதை நினைத்து அவளது மனம் வெகுண்டது...

அவள் வீட்டிற்கு வந்த நேரம் அங்கு விஜய் அவளுக்காகக் காத்திருந்தான்... அவனைக் கண்டதும் அவளது கலக்கம் இன்னமும் அதிகமாகியது... ஆனாலும் தனது கலக்கத்தை மறைத்துக் கொண்டு,

"வா சாமி... வந்து நேரமாச்சா..." என்று அவனை வரவேற்றபடி உள்ளே வந்தாள்...

அதைக் கவனிக்காதவனாய் அவளைக் கூர்ந்து பார்த்தவன்,

"இதுக்குத் தான் படிச்சு படிச்சு சொன்னேன்... கேட்டியா...?" என்றான் வருத்தத்தோடு...

"சாமி... இதுக்கு நீ வருத்தப்படக் கூடாது... கோபப்படணும்..." என்றாள் விளையாட்டாய் சிரித்தபடி...

அவளின் சிரிப்புக் கண்களை எட்டவில்லை என்பதை உணர்ந்தவனாய்,

"கடைசியில் உன் எதிர்காலத்தைத் தொலைச்சிட்டு நிற்கிறியே பேச்சி..." என்றான் ஆற்றாமையுடன்...

அதைக் கேட்டு அவனை உற்று நோக்கியவளின் முகம் தீவிரமாய் மாறியது...

"நீ சொன்னது அப்படியே தானே இருக்கு சாமி...? என்னைக்காவது ஒரு நாள் நான் ஆதாரத்தோட அந்த நாய்ங்களைப் பத்தின உண்மையை உன் கிட்ட நிரூபிப்பேன்... அப்போ நீ சட்டப்படி நடவடிக்கை எடுப்பத்தானே...?" என்று தீர்க்கமாய்க் கேட்டவள் முகத்தில் சிறிதும் அச்சத்திற்கான சாயல் இல்லை...

மாறாக எதையும் எதிர் கொள்ளும் தீவிரமும், தைரியமும் அதிலிருந்தது...!!!

வாசம் நேசமாகும்...!!!

முத்துபேச்சி கேட்டதைக் கண்டு விஜய்யின் முகம் மலர்ந்தது... இப்போதாவது இந்தக் கயமை நிறைந்த உலகத்தை அவள் புரிந்து கொண்டாளே என்ற மகிழ்ச்சியில் அவன்,

"இதை நீ கேட்கவும் வேண்டுமா பேச்சி... கட்டாயம் நடவடிக்கை எடுப்பேன்..." என்றுரைத்தவன்,

"நானும் சும்மாயில்லை... அவங்களை ஃபாலோ பண்ணிக்கிட்டு தான் இருக்கிறேன்... ஏதாவது ஒரு விசயம் அவங்களுக்கு எதிரா அமைஞ்சாலும் உடனே ஆக்சனில் இறங்கிற வேண்டியது தான்... அதனால் நீ கவலைப்படத் தேவையில்லை..."

அவன் கூறியதை கேட்டு அவளின் முகத்தில் சிரிப்பு வந்தது...

"ஏசிபி சாரே என் பக்கம் இருக்கும் போது எனக்கு என்ன கவலை..."

அவள் அணிந்திருந்த சட்டையின் காலரை தூக்கிவிட்டு கொண்டாள் பெருமிதமாக... அதைக் கண்டு அவனது முகத்திலும் புன்னகை அரும்பியது...

"ஆனாலும் பேச்சி உன் குறிக்கோள் இப்படிப் பாதியில் முடிஞ்சி போச்சே..."

அவளின் அரசியல் ஆர்வம் அவன் அறிந்த ஒன்று... அது அவளின் உயிர்மூச்சு என்று அவனுக்குத் தெரியும்... அதனால் அவனுக்கு மிகுந்த வருத்தமாய் இருந்தது...

"அப்படி எல்லாம் யாரும் என்னை அரசியலில் இருந்து துரத்திவிட முடியாது சாமி... கட்சி இல்லைன்னா என்ன...? தனியா சுயேட்சையா நின்னு போட்டியிடுவேன்... ஐயா கூட அப்படித்தான் சொன்னாரு..."

செல்வநாதன் பெயரை அவள் சொன்னதும் அவனது முகம் ஒரு நொடி மாறியது... ஆனாலும் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டான்...

"அவர் சொன்னா சரியா தான் இருக்கும்..." என்றான் ஆமோதித்தபடி...

குமாரி இருவரும் பேசுவதைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்... அவருக்கு விஜய்யை தெரியும்... ஆனால் அவ்வளவாகப் பேசி பழக்கம் இல்லை... படித்த பிள்ளையிடம் பேச கூச்சப்பட்டோ என்னமோ அமைதியாக ஒதுங்கி இருந்தார்...

அப்போது பாண்டியன் கயல்விழியுடன் வீட்டினுள் நுழைந்தான்...

"அடடே விசய்... என்ன இந்தப் பக்கம்...?" என்று அவனை வரவேற்பாய் வரவேற்ற பாண்டியன் முத்துபேச்சியிடம்,

"உம் புள்ளைக்கு லீவு விட்டாலும் விட்டாங்க... எனக்குத் தான் படு பேஜாராக்கீது புள்ள... இது கூட ஓடியாடி விளையாடி என் இடுப்பு பெண்ட்டு கழண்டிருச்சு... கயலு புள்ளைக்கு இன்னும் விளையாடணுமாம்... இந்தா நீயே உம் புள்ளைய கூட்டிக்கினு போ..." என்று அலுத்தபடி கயல்விழியை முத்துபேச்சியிடம் கொடுத்தவன்,

"உஷ்... அப்பாடா..." என்று விச்ராந்தியாய் கால்களை நீட்டி தரையில் அமர்ந்தான்...

"இன்னும் எங்கே கண்ணு போகணும்...?"

மகளின் முகத்தை வாஞ்சையுடன் பற்றியபடி கேட்ட முத்துபேச்சியையும், அவளது மகளையும் பார்த்தபடி நின்றிருந்தான் விஜய்...

"ம்மா... பீச், பார்க் போகலாமா...?" மகள் ஆசையுடன் கேட்க...

மகளை வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும் என்று ஆசை மனதில் இருந்த போதும் அவள் மிகுந்த சோர்வாக இருப்பது போல் உணர்ந்தாள்... மனச்சோர்வு அவளின்

உடலையும் சேர்த்து ஆட்டுவித்ததோ என்னவோ மிகவும் களைப்பாக உணர்ந்தாள்...

"நாளைக்குப் போவோமா கயலு...?"

மகளுக்கு மனதில் ஆசையிருந்த போதும் அன்னைக்காகச் சம்மதமாய்த் தலையாட்டினாள்... அம்மா, மகள் இருவரின் புரிதலான அன்பை பார்த்தபடி நின்றிருந்த விஜய்யின் மனம் நெகிழ்ந்தது...

"என் கூட வர்றியா கயல்... நான் உன்னைப் பீச், பார்க் எல்லாம் கூட்டிட்டு போகிறேன்..." அவன் ஆர்வமாய்ச் சின்னவளை பார்த்து கேட்டான்... அன்று அவனுக்கும் விடுமுறை... அதனால் அப்படிக் கேட்டான்...

கயல்விழியோ அன்னையைக் கேள்வியாகப் பார்த்தது...

"ம்... போயிட்டு வா கண்ணு..."

முத்துபேச்சி சம்மதித்தாலும் சின்னவள் மிகவும் தயங்கினாள் அவனுடன் செல்வதற்கு... சில தடவைகள் மட்டுமே நேரில் பார்த்த ஆடவன் அவன்... அதிலும் அவளைச் சுற்றி வசிக்கும் ஆண்களில் இருந்து சற்று மாறுபட்டு நாகரீகமாய் இருந்தவனைக் கண்டு அவள் கண்ணில் ஒரு ஒட்டாத தன்மை, புரியாத பாவனைத் தோன்றியது...

"வேணாம்..." என்று முனங்கியபடி மறுத்தாள் கயல்விழி...

"அம்மா மாதிரி உன்னைய நல்லா பார்த்துக்குவாங்க கயலு..."

முத்துபேச்சி சொன்னதும் சின்னவள் யோசித்தாள்...

"பாண்டி... நீயும் எங்க கூட வாயேன்..." என்று விஜய் பாண்டியனை உடன் வரும்படி அழைத்தான்...

ஏனோ கயல்விழியை வெளியில் அழைத்துப் போக வேண்டும் என்று அவனுக்கு அத்தனை ஆசையாக இருந்தது...

"வர்றேன் விசய்..." என்றபடி பாண்டியன் எழுந்தான்...

அவனுக்கு உடல் அலுப்பு இருந்த போதும் கயல்விழியின் கண்ணில் மின்னிய ஆசையைக் கண்டு அவன் உடன் வர சம்மதித்தான்...

தனது இருசக்கர வாகனத்தின் முன்பக்கம் கயல்விழியை உட்கார வைத்த விஜய் தானும் ஏறியமர்ந்து பாண்டியனையும் பின்பக்கம் ஏற சொன்னான்...

"பெம்மா..." என்று தன்னிடம் விடைப்பெற்ற மகளின் முகத்தில் இருந்த சந்தோசத்தைக் கண்டு அவளுக்கும் அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது...

அதிலும் விஜய்யின் உறுதியான, வலிமையான நீண்ட கைகளுக்கு இடையில் சின்னஞ்சிறு புறாவாகக் கயல்விழி மிகுந்த பாதுகாப்போடு அமர்ந்து இருப்பதைக் கண்டு அவளது மனதில் ஏதேதோ எண்ணங்கள் அலை அலையாய் அடித்துச் சென்றது...

மூவரும் விடைப்பெற்று செல்வதைப் பார்த்தபடி அங்கிருந்த சுவற்றின் மீது சாய்ந்து நின்றாள் முத்துபேச்சி மனதின் பாரம் தாங்க முடியாது...

வாழ்க்கையில் இழக்கக் கூடாததை இழந்தது போல் அப்படி ஒரு தவிப்பு அவள் மனதில் எழுந்தது... அவளின் கண்களில் நீர் கோர்த்தது...

"என்ன முத்து... சொவத்துல சாஞ்சிக்கினு தூங்குறியா...?" அங்குக் குடியிருக்கும் பெண்மணி ஒருத்தி அவளைக் கேலி செய்யவும் தான் அவளுக்குச் சுரணை வந்தது...

'ச்சு... என்னதிது...?' தன்னைத் தானே கடிந்து கொண்டவள் அலைப்பாயும் மனதை முயன்று கட்டுக்குள் கொண்டு வந்தவளாய் வீடு நோக்கி சென்றாள்...

வீட்டினுள் நுழைந்ததும் அந்த வீட்டினை பார்க்க பார்க்க மீண்டும் அவள் மனதினுள் பழைய ஞாபகங்கள் ... அவளை இன்றளவும் உயிர்ப்புடன் நடமாட வைக்கும் இனிமையான

நினைவுகள் அது... அவளின் உயிரோடு கலந்து விட்டவனின் உயிரோடு தான் கலந்த நினைவுகளை மறக்க முடியாது அப்படியே சரிந்து அமர்ந்தாள் தரையில் மிகவும் பலவீனமான மனநிலையுடன்...

அவனின் ஞாபகமாய்த் தான் அவள் இந்த வீட்டை வாங்கியது... அவளது தகுதிக்கு இது சற்று அதிகம் தான்... ஆனாலும் வங்கி கடன் வாங்கி இந்த வீட்டை வாங்கினாள்... அந்தளவுக்கு இந்த வீடு அவளின் உணர்வுகளோடு கலந்த ஒன்று...

அவள் என்ன தான் தன்னவனை மறந்துவிட்டதாய் தனது மனதினை சமாதானப்படுத்திய போதும் அவளின் ஆழ்மனதில் அவனின் நினைவுகள் ஆழமாய்ப் புதைந்து அவளது இதயத் துடிப்பாய், சுவாசமாய் நிறைந்திருப்பதை அவள் உணர்ந்தே தான் இருந்தாள்...

அப்படி அவனை மறந்துவிட்டதாய் தன்னைத் தானே அவள் ஏமாற்றிக் கொண்டாள்... அது தான் உண்மையும் கூட... மறக்கக் கூடியவனா அவன்... இல்லையே...

அவள் மரணிக்கும் போதும் அவனின் நினைவுகள் மட்டும் மரணிக்காது... அது அவளது ஆன்மாவோடு கூடவே சேர்ந்து அல்லவா பயணிக்கும்... அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருக்குமேயானால் அப்போதாவது அவள் நல்ல நிலையில் பிறந்து அவனைக் காதலோடு கைப்பிடித்துத் திகட்ட திகட்ட காதலித்து ஆயிரம் வருடங்கள் அவனுடன் வாழ வேண்டும்...

மனதின் ஆசை நிராசையாகி போனதில் அவளின் மனம் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தது...

****

விஜய் கயல்விழியை முதலில் 'தீம் பார்க்' அழைத்துச் சென்றான்... அதிலேயே அவள் மிகுந்த சந்தோசமாகி போனாள்... உற்சாகமாக அவள் ஒவ்வொரு விளையாட்டாய்

விளையாட விரும்ப, பாண்டியனோ தன்னால் முடியாது என்று ஒதுங்கி கொண்டான்...

ஆனால் விஜய் அவளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு அவளுடன் இணைந்து குழந்தையோடு குழந்தையாக மாறிப் போனான்... சிறிது நேரத்திலேயே தந்தை இல்லாது வளர்ந்த அந்தச் சிறுமியோ அவனிடத்தில் அப்படி ஒட்டி கொண்டாள்...

'அங்கிள், அங்கிள்' என்றழைத்தபடி அவனுடன் சேர்ந்து எல்லா விளையாட்டையும் விளையாடி மகிழ்ந்தவள் அதை விட்டு வெளியில் வரும் போது அவனுடன் பசை போட்டது போல் ஒட்டி கொண்டாள்...

"பக்கத்தில் தான் எங்க வீடு இருக்கு... போய் ரெஸ்ட் எடுத்துட்டு ஈவினிங் பீச் போகலாமா..."

உணவு விடுதியில் மதிய உணவை முடித்துக் கொண்டு விஜய் கேட்க, சின்னவள் சந்தோசமாய்த் தலையாட்டினாள்... பாண்டியன் தான் சற்றுத் தயங்கினான்...

"உங்க வூட்டுக்கா... வேணாமே விசய்..."

"ஏன்...?" என்று கூர்மையாய் பார்த்தான் விஜய்...

"என்னைய எல்லாம் உள்ளே விடுவாங்களா...?"

இன்னும் அவனுக்குச் சிறு வயதில் ஏற்பட்ட அவமானங்கள் மறக்கவில்லை போலும்... அவனின் சுற்றுப்புறம், அவனின் வாழ்க்கை முறை வேறு அல்லவா...

"நான் தானே கூட்டிட்டு போறேன்... அப்புறம் என்ன...? உள்ள விடாம என்ன பண்ணுவாங்க...?" என்றவன் இருவரையும் அழைத்துச் சென்றான்...

விஜய்யின் வீட்டிற்குள் தயக்கத்துடன் நுழைந்தான் பாண்டியன்... அவன் எதிர்பார்த்தது போல் இருவரையும் கண்டு விஜய்யின் அன்னை மைதிலி யோசனையாகப் பார்த்தார்...

"யாருடா இதுங்க ரெண்டும்...?” என்று இருவரையும் பார்த்து வினவியவர், பாண்டியனை மட்டும் தனித்து உற்று பார்த்து,

“அக்யூஸ்ட்டை எல்லாம் ஏன் வீட்டுக்குள்ள கூட்டிட்டு வர்ற...?" என்று சற்று கடுமையுடன் அவர் கேட்டார்...

"அம்மா... அவன் என்னோட பிரெண்ட்..." என்றான் அவன் சற்றுக் கண்டிப்பான குரலில் அழுத்தமாய்...

"அது எப்படிடா உனக்கு மட்டும் இப்படிப் பிச்சைக்கார பிரெண்ட்சா கிடைக்கிறாங்க...?" நக்கலும், நையாண்டியுமாய் உரைத்தவர்,

"அவன் உன் பிரெண்ட்டுன்னா, இவள் என்ன உன் குழந்தையா...?"

அதே கேலியுடன் கேட்டவரை ஆழ்ந்து பார்த்தவன் தனது வலது கையால் கயல்விழியை அணைத்து பிடித்தபடி,

"ஆமாம்..." என்றான் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு...

அவன் சொன்னதைக் கேட்டு மைதிலி மட்டுமல்ல பாண்டியனுமே திகைத்து தான் போனான்...

திகைத்து நின்ற மைதிலியோ அமைதியாய் வழி விட்டு நின்றார்... முடிந்து விட்டதாய் கருதிய அத்தியாயம் மீண்டும் தொடர போகிறதோ என்று அவருக்கு மனதுக்குள் அச்சமாக இருந்தது...

"நீ வா பாண்டி..." என்று விஜய் அழைக்கவும் திகைப்பில் இருந்து வெளியில் வந்த பாண்டியன் அவனுடன் சேர்ந்து அவனது அறைக்குச் சென்றான்...

கட்டிலை கண்டதும் உறக்கம் வருவதாய்க் கூறிய கயல்விழி படுத்து கொண்டாள் சோர்வாய்... அவள் உறங்குவதற்கு ஏதுவாக ஏசியைப் போட்டு விட்டு அமர்ந்த விஜய்யை பார்த்து பாண்டியன்,

"ஏன் விசய் இப்படிச் சொன்ன...? அம்மா முகம் மாறி போச்சு தெரியுமா...?"

"ஏன்... உண்மையைத் தானே சொன்னேன்..." என்று விஜய் கூறியதை கேட்டு மீண்டும் திகைத்தான் பாண்டியன்...

"பேச்சி எனக்குப் பிரெண்ட்... அவளோட மகள் எனக்கு மகளாக இருக்கக் கூடாதா...?"

எதிர் கேள்வி கேட்ட விஜய்யின் கூற்று புரிந்தவனாய் பாண்டியன் 'சரி தான்' என்பது போல் தலையசைத்தான்... அவனுக்குமே கயல்விழி மகள் போல் தானே... தன் உதிரத்தில் வந்தால் தான் சொந்தமா... நட்பில் வந்த பந்தமாக இருந்தாலும் அவளும் அவன் சொந்தம் தானே...

"அவங்களுக்கு எல்லாம் அப்படிச் சொன்னாத்தான் புத்தி வரும்..." எரிச்சலுடன் மொழிந்தவன் கயல்விழியின் தலையை வருடி கொடுத்தான் வாஞ்சையுடன்...

மீண்டும் மாலையில் கடற்கரைக்குச் சின்னவளை அழைத்துச் சென்று அவளை விளையாட வைத்து, இரவு உணவு முடித்துக் கொண்டு விஜய் அவர்கள் இருவரையும் வீட்டில் கொண்டு வந்து விடும் போது இரவு ஒன்பது மணிக்கு மேலாகியிருந்தது...

அதற்கு மேல் தொந்திரவு செய்ய மனமில்லாமல் உடனே விஜய் விடைப்பெற்று கிளம்பி விட்டான்...

போகும் போது அவனுடன் செல்ல தயங்கிய மகள் இப்போது அவனது கன்னத்தில் முத்தமிட்டு வழியனுப்பி வைப்பதை ஆச்சிரியமாகப் பார்த்துக் கொண்டு இருந்தாள் முத்துபேச்சி...

கயல்விழி உடை மாற்றிக் கொண்டே தான் பார்த்த இடங்களை, விளையாடிய விளையாட்டைப் பற்றி அன்னையிடம் ஒவ்வொன்றாய் சொல்லி கொண்டிருந்தாள்...

அப்போது விஜய் வீட்டிற்குத் தாங்கள் போனதை பற்றி அவள் கூற முத்துபேச்சியின் உடல் அதிர்ந்தது... ஆனால் எதையும் வெளிக்காட்டி கொள்ளாது அமைதியாக மகளை உறங்க வைத்தாள்...

பாண்டியன் எப்போதும் போல் வெளியில் சென்று படுப்பதற்காகத் தயாரானான்...

"புள்ள... கதவை சாத்திக்கோ..." என்றபடி அவன் கையில் பாயுடன் வெளியேற...

"பாண்டி... இன்னைக்குச் சாமி வீட்டுக்கு போனியா...?"

அதில் நின்று அவளைத் திரும்பி பார்த்தவன், "ஆமாம் புள்ள... உங்கையில சொல்லணும்ன்னு நினைச்சிக்கினு இருந்தேன் மறந்துபுட்டேன்..." என்றவன் அவள் அருகில் வந்து,

"விசய் அம்மா என்னைய பார்த்து ஒரு மாதிரியா பேசுச்சு... ஆனா அதுக்கு விசய் விடலையே... நல்லா திருப்பிக் கொடுத்துச்சு... அது மட்டுமில்ல நம்ம கயலு புள்ளைய 'என் பொண்ணு' அப்படின்னு சொல்லிச்சு பாரு... அந்தம்மா முகத்துல ஈயாடல..." என்று சொல்லி ஏதோ நகைச்சுவையைச் சொன்னது போல் வாய் விட்டுச் சிரித்தான் அவன்...

அவனது வார்த்தைகளில் முத்துபேச்சியின் கைகள் மகளை இறுக பற்றிக் கொண்டது... மனதில் உணர்வுகள் தீச்சுவாலையாய் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது...

"விசய் ரொம்ப நல்ல மாதிரி என்ன புள்ள... அவரு பிறப்பு என்ன, வளர்ப்பு என்ன... அப்படி இருந்தும் நம்மள எல்லாம் மனுசனா நினைச்சு மதிச்சு பேசுறாரே... 'என் பிரெண்ட்டோட புள்ள எனக்கும் புள்ள'ன்னு எங்கையில சொன்னாரு புள்ள... அப்படி ஒரு மனுசனோட பிரெண்ட்டுஷிப் கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும் புள்ள..."

பாண்டியன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவளது மனதை இளக்க துவங்கியது... ஆனாலும் முயன்று மனதை கடினப்படுத்திக் கொண்டாள்...

பாண்டியன் உறங்க சென்றதும் கதவை தாழ் போட்டுக் கொண்டு படுக்கையில் விழுந்த முத்துபேச்சியின்

கண்களில் கண்ணீர் வழிந்தது...

எப்பேர்ப்பட்ட வீரனையும் காதல் கோழையாக்கி விடுகிறது... இந்த வீரப்பெண்மணியையும் காதல் கோழையாக்கி அழ வைத்து வேடிக்கை பார்த்தது...

****

அடுத்து வந்த நாட்கள் எப்போதும் போல் அமைதியாகக் கழிந்தது... முத்துபேச்சி வழக்கம் போல் அவளது வேலைகளைப் பார்த்தாலும் அவளது மனதில் காதல் ஒரு பக்கம் மிகுந்த அழுத்தத்தைக் கொடுத்தது என்றால், அவளது வாழ்நாள் லட்சியம் அரசியல் வாழ்க்கை கானலாய் போன அவலம் இன்னொரு பக்கம் வேதனையைக் கொடுத்தது...

இந்த இரண்டும் சேர்ந்து அவளைப் பாடாய் படுத்திய போதும் முகம் மாறாமல் அவளது வேலைகளை, சேவைகளை வழக்கம் போல் செய்து கொண்டு தான் இருந்தாள்...

அந்த ஞாயிறு காலையில் முத்துபேச்சி அவர்கள் ஏரியாவில் அமைக்கப்பட்டு இருந்த 'போலியோ' சொட்டு மருந்து கொடுக்கும் முகாமில் சுறுசுறுப்பாய் சுற்றிக் கொண்டு இருந்தாள்...

அழும் குழந்தைகளைச் சமாதானப்படுத்துவது, குழந்தைகளைப் பிடிக்கத் தெரியாமல் தடுமாறும் இளம் தாய்மார்களின் அருகில் இருந்து அவர்களுக்குக் குழந்தைகளைப் பக்குவமாகக் கையாள சொல்லிக் கொடுப்பது, அடுத்து மீண்டும் எப்போது 'போலியோ' மருந்து கொடுக்க வேண்டும் என்று அவர்களுக்கு எடுத்துரைப்பது என்று பரபரப்பாய் பம்பரமாய்ச் சுழன்று கொண்டு இருந்தாள் அவள்...

ஒருவழியாய் எல்லாக் குழந்தைகளுக்கும் மருந்து கொடுத்து முடித்து எல்லோரும் சென்றபின் தான்

அவளுக்குத் தன்னுடைய களைப்புத் தெரிந்தது... அந்நேரம் அவள் முன் பழச்சாறு அடங்கிய குவளை நீண்டது...

'யாரது...?' என்று ஏறிட்டு பார்த்தவள் இனிமையாய் அதிர்ந்தாள்...

ஏனெனில் அங்குப் புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தது விஜய்...

"நீ எங்கே சாமி இங்கே...?" அவள் ஆச்சிரியமாய் அவனைப் பார்த்தாள்...

"முதல்ல இதைக் குடி..." என்று அவன் அதை அவளிடம் நீட்ட மறுக்காமல் அதை வாங்கிக் குடித்தவள்,

"வா சாமி வூட்டுக்கு போகலாம்..." என்று அவனை அழைக்க அவனும் மறுக்காமல் அவளுடன் இணைந்து நடந்தான்...

கதவை திறந்து உள்ளே வந்தவள் அவன் அமர்வதற்கு ஏதுவாக நாற்காலியை எடுத்து போட்டுவிட்டு தான் மட்டும் தரையில் அமர்ந்தாள்...

அதில் அமர்ந்தவன், "வீட்டில் யாருமில்லையா...?" சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு கேட்க...

"இல்லை சாமி... கயலு எங்கேயாவது போகணும்ன்னு அரிச்சிக்கிட்டே இருந்துச்சு... அதான் பாண்டி அவளையும், அம்மாவையும் கூட்டிக்கிட்டு மாங்காடு அம்மன் கோயில் வரை போயிருக்கான்..."

"ஓ..." என்றவன் அப்போது தான் கவனித்தான் அவளது முகத்தில் அரும்பியிருந்த வியர்வை துளிகளை...

சிறிதும் யோசிக்காமல் சட்டென்று அவனது கைக்குட்டையை எடுத்து அவளது முகத்தில் படிந்திருந்த வியர்வையைத் துடைத்து விட்டான்... எப்போதும் அவன் செய்யும் அன்பான செயல் தான்... ஆனால் இன்று ஏனோ அவளது மனதை வெகுவாய் தடுமாறச் செய்தது...

வீட்டில் யாருமில்லாத தனிமை, அவனது அருகாமை, அந்தக் கைக்குட்டையில் இருந்து வந்த அவன் எப்போதும் உபயோகப்படுத்தும் வாசனை திரவியத்தின் நறுமணம் எல்லாம் சேர்ந்து அவளை நிலைத்தடுமாறச் செய்தது...

அத்தோடு அன்று விஜய் வீட்டில் நிகழ்ந்ததாய் பாண்டியன் கூறிய வார்த்தைகள் எல்லாம் சேர்த்து அவளின் எண்ணங்கள் எங்கேங்கோ பறந்து சென்றது...

"பொட்டப்புள்ளைய தொட்டு பேசாதேன்னு உனக்கு எத்தினி வாட்டி சொல்றது சாமி..." என்று சலித்த குரலில் அவனின் கையைத் தட்டிவிட்டாள் அவள்...

அவனும் சிரித்தபடி தனது கையை எடுத்தவன், "பொட்டப்புள்ளையா... அது யாரு...?" என்று தன் கண்களால் தேட...

"ஏன் என்னைய பார்த்தா பொட்டப்புள்ளயா தெரியலையா...?" என்று அவள் சிணுங்க...

"யாரு நீயா...? உன்னைப் பார்த்தா ரெண்டு கொம்பு முளைச்ச ராட்சசி மாதிரியிருக்கு..."

நமட்டுச் சிரிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் முறைக்க முயன்று தோற்று பின்பு சிரித்தாள்...

"சொல்றது நீயாங்காட்டி விடறேன்... இதே இது வேறு எவனாவது சொல்லியிருந்தா குடலை உருவி மாலை போட்டிருப்பேன்..."

"நீ செஞ்சாலும் செய்வ ரௌடி..." என்றவனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது... அடக்க மாட்டாமல் சிரித்துவிட்டான்...

அவனது சிரிப்பை வாஞ்சையுடன் பார்த்து கொண்டிருந்தவள், "சாமி... நீ ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கக் கூடாது..."

அவள் அப்படிக் கேட்டதும் அவனது சிரிப்பு 'ஸ்விட்ச்' போட்டது போல் நின்று போனது...

"ப்ச்... இப்போ எதுக்கு இந்தப் பேச்சு..." என்றவனது குரல் சலித்தது...

"பொஞ்சாதி செத்து போனாக்க இப்படியே இருக்க முடியுமா சாமி... உனக்குன்னு தனிப்பட்ட வாழ்க்கை வேண்டாமா..." என்றவளை உற்றுப் பார்த்தான் அவன்...

அவளது கண்களில் அவன் மீதான உண்மையான அக்கறை இருந்ததைக் கண்டு பெருமூச்சு விட்டவனாய்,

"உன் புருசன் செத்தும் நீ ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலை...?"

"நானும் நீயும் ஒண்ணா சாமி... நான் பொம்பளை... அவுங்களை நினைச்சிட்டு மீதி காலத்தை ஓட்டிருவேன்... ஆனா நீ அப்படி இல்லையே சாமி..."

"கற்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் இருக்கா பேச்சி..."

ஆழ்ந்து ஒலித்த அவனது குரலில் திடுக்கிட்டு போய் அவனை உற்று நோக்கினாள்... அவன் மாறவே இல்லையோ என்று அவள் மனதில் மெல்லிய நடுக்கம் எழுந்தது...

"சரி சாமி... நீ கற்புக்கரசன் தான் ஒத்துக்கிறேன்..." என்று தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசியவள், "உன் காதல் கல்யாண வாழ்க்கையைப் பத்தி கொஞ்சம் சொல்லு... எனக்கு நேரமாவது போகும்..." என்றாள் கதை கேட்கும் ஆர்வத்துடன்...

"உனக்கு நேரம் போக என் கதையா கிடைச்சது..." என்று கிண்டல் அடித்தவனின் முகம் அடுத்த நொடி மாறியது,

"எனக்கு இன்னும் கல்யாணமாகலை பேச்சி..."

அவளிடம் பொய் சொல்லிவிட்டோமே என்ற குற்றவுணர்ச்சியில் அவன் தலை குனிந்தான்...

அவன் சொன்னதைக் கேட்டு அவள் அதிர்ச்சியாய் அவனைப் பார்த்தாள்... சொன்னது போலவே அவன் செயலிலும் செய்து காட்டிவிட்டானே...

"நீ ஃபீல் பண்ணுவியோன்னு தான் பொய் சொன்னேன்... சாரி..."

அவனது வார்த்தைகளில் தன்னை மீட்டு கொண்டவள், "பொய் சொன்ன உன் வாயில் நாலு அடி போடணும்ன்னு தான் இருக்கு... போனா போவுது பிரெண்ட் ஆச்சேன்னு உன்னைய சும்மா விடறேன்..." என்றவள்,

"உனக்கு ஒண்ணும் வயசாகலையே சாமி... சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கோ..."

அவளை இயலாமையுடன் பார்த்தவன் ஒன்றும் பேசாது எழுந்தான்...

"நான் வர்றேன்..."

பதில் சொல்லாது கிளம்பும் அவனைத் தடுத்து நிறுத்தி பதில் கேட்கும் தைரியமற்றவளாய் அவளும் அவனுடன் சேர்ந்து வெளியில் வந்தாள்...

அவளது எதிர்வீட்டு பெண்மணி விஜய்யை யோசனையாய் பார்த்தார்... புதிய ஆடவன் ஒருவன் அவளது வீட்டிற்கு அடிக்கடி வருவது குறித்து அவருக்குப் பெருத்த சந்தேகமாய் இருந்தது...

அவர் இந்த வீட்டிற்குக் குடி வந்து இரண்டு ஆண்டுகள் தானாகிறது... அதனால் அவருக்கு விஜய்யை தெரியவில்லை போலும்...

விஜய் சென்றதும் அவர் முத்துபேச்சியை அழைத்து, "யாரு முத்து இது...? ஆளு பார்க்க சோக்கா கீது...? பெரிய இடத்து புள்ளையோ...?"

அவரது குரலில் அத்தனை கேலியிருந்தது, சந்தேகம் இருந்தது... அதை உணர்ந்து அவளுக்கு அப்படி ஒரு கோபம் எழுந்தது மனதினுள்... ஆனாலும் அடக்கி கொண்டாள்...

"என்னோட பிரெண்ட்..." என்றாள் அமைதியாக...

"உனக்கு இப்படி ஒரு பிரெண்ட்டா...?"

அவர் அழுத்தி கேட்ட விதத்திலேயே தெரிந்தது 'யாரிடம் நீ கதை விடுகிறாய்...?' என்று...

"ஏன் இருக்கக் கூடாதா..." அதை விட அழுத்தமாய் உரைத்தவள் வீட்டினுள் சென்று கதவை அடைத்து கொண்டாள்...

அந்தப் பெண்மணி பேசியது எல்லாம் அவளின் மனதில் பதியவே இல்லை...

அவளது மனதில் இருந்தது எல்லாம் விஜய் பேசிய வார்த்தைகள் மட்டுமே... ஏனோ அவளின் மனதுக்கு ஒரே நேரத்தில் சந்தோசமாகவும், துக்கமாகவும் இருந்தது...

கண்களில் ஆனந்தக் கண்ணீரும் வழிந்தது... துயரக் கண்ணீரும் அத்துடன் சேர்ந்து வழிந்தது... அவளது நெஞ்சம் விம்மியது பெருமிதத்தில்...

அதே போல் நேரே வீட்டிற்கு வந்த விஜய் என்றும் இல்லாத அதிசயமாக அன்று பகலிலேயே மதுவின் துணையை நாடினான்... ஏனோ அவனது மனம் அந்நேரம் தன்னுடைய கண்ணம்மாவின் அருகாமையை வெகுவாய் நாடியது...

போதையில் மிதந்தவனின் மனதில் அவனது கண்ணம்மா பற்றிய நினைவுகள் நீர்க்குமிழ்களாய் அடுத்தடுத்து வேகமாய் எழுந்தது...

"விஜூ..." என்று காதலோடு அவனை அழைத்தபடி அவனது முகத்தைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்ட அவனது கண்ணம்மாவின் மேனியின் வாசத்தை அவன் இப்போதும் உணர்ந்தான்... அத்தோடு அவளது மார்புக்கூட்டின் கதகதப்பையும் சேர்த்து...

அவளது மென்மையான கைவிரல்கள் அவனது தலையை வருடி கொடுத்த இதத்தை இப்போதும் உணர்ந்தவனாய் கண்மூடி அந்தச் சுகத்தை அனுபவித்தான்...

அதற்கு அடுத்து நிகழ்ந்த நிகழ்வுகள் அனைத்தும் தான் அவனை இன்றளவும் உயிர்ப்புடன் வைத்து உற்சாகமாய் நடமாட வைத்துக் கொண்டிருக்கிறது...

அது கனவா இல்லை நிஜமா என்று இன்றும் அவனால் பிரித்தறிந்து உறுதியாய் சொல்ல முடியவில்லை...

கனவோ அல்லது நிஜமோ எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டு போகட்டும்... அது பற்றி அவனுக்குக் கவலையில்லை... ஏனென்றால் அது அவனுக்கு அப்படியொரு சந்தோசத்தை அள்ளி அள்ளி கொடுத்துக் கொண்டிருக்கிறது... அது மட்டும் போதும் அவனது வாழ்நாள் முழுவதும்...

தன் கண்ணம்மாவின் தேகத்தின் மென்மையை இப்போதும் உணர்ந்தவனின் சுவாசம் சீரற்று போய் அவனது உடலின் வெப்பம் தாறுமாறாய் எகிறத் துவங்கியது...

அவள் வேண்டும் என்கிற தாபத்தில் அவனது ஒவ்வொரு அணுக்களும் ஏக்கமாய்த் துடித்தது...

"ஏன்டி என்னை விட்டு போன...?" என்று அவளிடம் கோபமாய்ச் சண்டையிட எண்ணியவனின் குரலோ அதற்கு நேர்மாறாய் இறங்கி போய்க் கெஞ்சியது அவளிடத்தில்...

தன்னைக் கைவிட்டு போன காதலியை எண்ணி கண்ணீர் வடித்தான் ஊரை காக்கும் அந்தக் காவலன்...

****

அன்று புதிய வருடத்தை வரவேற்கும் பொருட்டு ஊரே உற்சாகமாய் விழித்துக் கொண்டிருந்தது... மணி பன்னிரெண்டை நெருங்கி கொண்டிருந்தது...

"பாண்டி எல்லாத்தையும் எடுத்துக்கிட்டியா..." என்றபடி முத்துபேச்சி மகளுக்குத் தலைவாரி கொண்டிருந்தாள்...

"எல்லா எடுத்தாச்சு... நீயும், கயலும் வர வேண்டியது தான் பாக்கி..." என்றான் பாண்டியன்...

"சரி போகலாம் பாண்டி..." என்றவள் மகளைத் திருப்பி அழகு பார்த்தாள்...

அவளைப் போல் கயல்விழியும் நல்ல நிறம்... மீன் போன்ற விழிகள், கூர்மையான நாசி எல்லாம் அவளைப் போல்... ஆனால் அழுத்தமான அந்த உதடுகளும், தாடை பகுதியும் அவனை நியாபகப்படுத்தியதோ...

இருவரும் இணைந்து பெற்றெடுத்த பிள்ளை இருவரையும் போல் தானே இருப்பாள் என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு அவள் கிளம்பினாள்...

"அம்மா உள்ளாற என்ன பண்ணுது பாண்டி..."

"ஃபாரின் சரக்கு அடிச்சிக்கினு தூங்குது..." சின்னவள் இருப்பதால் கிசுகிசுப்பாய் உரைத்தான் அவன்...

"வருச பொறப்பு அதுவுமாவா...?" அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது தன் அன்னையை நினைத்து...

"இன்னைக்குத் தான் கட்டாயம் வேணும்னு வாங்கியாற சொல்லி காலையில் இருந்து என் உசிரை எடுத்துருச்சு..." என்றவன்,

"ஆத்தாவை இந்த வயசுக்கு மேல திருத்த முடியாது முத்து... இப்போ நாம போகலாம் வா..." என்றவன் கயல்விழியை அழைத்துக் கொண்டு சென்றான்...

அவளும் கதவை மூடிவிட்டு வெளியில் வந்தாள்...

பாண்டியன் தன் நண்பனிடம் சொல்லி அவனது முச்சக்கர வாகனத்தை இன்று மட்டும் கேட்டு வாங்கி வந்திருந்தான்... அதில் அவர்கள் கொண்டு செல்ல வேண்டிய பொருட்களை ஏற்கெனவே ஏற்றியிருந்தான் அவன்...

அம்மா, மகள் அமர்ந்ததும் பாண்டியன் அதைக் கிளப்பினான்... அந்நேரம் விஜயிடம் இருந்து அவளுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது...

புது வருடத்திற்கு வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தான்... இப்போது வேலையில் பிசியாக இருப்பதால் நேரமிருக்கும் போது அழைப்பதாகக் கூறியிருந்தான்...

அவளும் பதிலுக்கு வாழ்த்து செய்தி அனுப்பிவிட்டு சாலையை வேடிக்கை பார்க்க துவங்கினாள்...

புது வருடம் பிறந்து இப்போது அரை மணி நேரமாகி இருந்ததால் சாலையில் சற்று ஆரவாரம் குறைந்திருந்தது...

அங்குச் சாலையோரமாய் நடைபாதையில் உறங்கி கொண்டிருந்த மக்களைக் கண்டதும் சற்று தள்ளி வண்டியை நிறுத்திவிட்டுத் தாங்கள் கொண்டு வந்திருந்த பொருட்களைக் கைகளில் தூக்கி கொண்டு மூவரும் நடந்தனர் அவர்களை நோக்கி... சின்னவளும் தனது இரு கைகளிலும் சிறிய இரு பைகளை வைத்திருந்தாள்...

"அம்மா... அங்கே ஒரு குட்டி பாப்பா தூங்குது... அதுக்கு இந்தக் கிலுகிலுப்பை கொடுக்கவா..."

அங்குத் தாயின் அருகில் ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்த அந்த ஒரு வயது குழந்தையைச் சுட்டிக்காட்டி கயல்விழி கேட்டாள்...

"கொடு கயலு... ஆனா சத்தம் வராம..."

அன்னை சொன்னதும் அன்ன நடை நடந்து வெகு ஜாக்கிரதையாக அங்குச் சென்றவள் அந்தக் கிலுகிலுப்பையை அந்தக் குழந்தை அருகில் வைத்து அதன் கன்னத்தில் முத்தமிட்டாள்...

மகளின் செயலை புன்னகையுடன் நிறைவாய்ப் பார்த்திருந்த முத்துபேச்சி ஏதோ தோன்ற பாண்டியனை திரும்பி பார்த்தாள்... அந்நேரம் அவனும் அவளைத் தான் பார்த்திருந்தான்...

இருவர் மனதிலும் தங்களது பால்ய காலம் ஞாபகத்தில் வந்தது... இது போல் தான் அவர்கள் சிறுவர்களாக இருக்கும் போது சில நல்ல உள்ளங்கள் இரவோடு இரவாக

இது போல் பரிசு பொருட்களை வைத்து விட்டுப் போவார்கள்...

காலையில் எழுந்து பார்க்கும் போது அவர்களுக்கு அப்படி ஒரு சந்தோசமாக இருக்கும்... அன்று முழுவதும் வானத்தில் பறப்பது போல் சிட்டுக்குருவியாய் சந்தோசத்தில் சிறகடித்துப் பறப்பார்கள்... அந்தப் பரிசு பொருளை கையில் வைத்து அப்படிக் கொண்டாடுவார்கள்...

அன்றைய நாளின் நினைவில் இருவரது கண்களும் பனித்தது...

"அம்மா..." மகள் அழைக்கவும் சுற்றுப்புறம் உணர்ந்தவள் பாண்டியனிடம்,

"நீயும் வா பாண்டி..." என்றழைக்க...

"நீயும் கயலும் கொடுங்க... நான் வீடியோ எடுக்கிறேன்..." என்று மறுத்தவன் தனது அலைப்பேசியை எடுத்துச் சாலையோரம் ஒளிவீசிய அலங்கார விளக்குகள், தோரணங்களைக் காணொளியாக எடுத்து கொண்டிருந்தவன் அடுத்து முத்துபேச்சியும், கயல்விழியும் எல்லோருக்கும் பரிசு பொருட்களை வைப்பதை தனது அலைப்பேசியில் படமாக்கி கொண்டிருந்தான்...

அப்போது தான் அந்த விபரீதம் நிகழ்ந்தது...

அந்த நேரத்தில் சாலையில் தாறுமாறாய் தறிக்கெட்டு வந்த அந்தக் கார் ஒன்று தனது முழுக் கட்டுப்பாட்டையும் இழந்து நேரே சாலையோரமாய் நடைபாதையில் படுத்திருந்தவர்கள் மீது விருட்டென்று ஏறியது...

அடுத்த நொடி அந்த இடத்திலேயே அவர்களின் பலரின் உயிர் உறக்கத்திலேயே பிரிந்து சென்றது...

முத்துபேச்சி, பாண்டியன், கயல்விழி மூவரும் அதிர்ந்து போய் அப்படியே சிலையாய் சமைந்து நின்றனர்... கண்முன் நிகழ்ந்த கொடூரமான மரணத்தைக் கண்டு அவர்களது கண்கள் அச்சத்தில் உறைந்து போனது...

வாசம் நேசமாகும்...!!!

கண்ணிமைக்கும் நேரம் என்று சொல்வார்களே... அது போல் கண்ணிமைக்கும் நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது... கார் வந்த வேகத்திற்குக் கட்டுப்படுத்த முடியாமல் அங்கு நடைபாதையில் படுத்திருந்த அந்தப் பதினைந்து பேரின் மீதும் ஒருசேர ஏறியிருந்தது...

நல்ல உறக்கத்தின் பிடியில் இருந்த அவர்கள் அனைவரும் ஏக நேரத்தில் ஒருசேர மரணத்தைத் தழுவியிருந்தனர் வயது வித்தியாசமின்றி...

காரை ஓட்டி கொண்டு வந்தவனுக்கும் அதிர்ச்சி தான் போலும்... தன் புறம் இருந்த கார் கண்ணாடியை இறக்கி விட்டு கீழே பார்த்தான்... இரத்தமும் சதையுமாய்க் கார் சக்கரத்தின் அடியில் நசுங்கியிருந்த மனிதர்களைக் கண்டு அவனுக்கு ஏறியிருந்த அத்தனை போதையும் சர்ரென்று இறங்கிவிட்டது என்றே சொல்லலாம்...

அத்தனை இரத்தத்தைக் கண்டு அவனுக்கு வாந்தி வருவது போல் உமட்டி கொண்டு வந்தது... தலையை வெளியில் நீட்டி வாந்தி எடுக்கப் போனான்...

"டேய் சந்தோஷ்... காரை எடுடா... யாராவது பார்த்துட்டா வம்பா போயிரும்..."

ஆம் அவன் சுந்தரலிங்கத்தின் மகன் சந்தோஷ் தான்... அவன் அருகில் அமர்ந்திருந்த நண்பன் தான் அவனை அவசரப்படுத்தினான்... காரில் இருந்த எல்லோருமே பணக்கார வீட்டுப் பிள்ளைகள்...

இன்று வருட பிறப்பு உற்சாகத்தில் உற்சாகப் பானம் அருந்தியவர்கள் தங்களுக்குள் கார் பந்தயம் வைத்துக் கொள்ள முடிவு செய்தனர்... நண்பர்களை முந்த வேண்டும் என்று சந்தோஷ் வேகமாகத் தனது காரை ஓட்டினான்... அதற்கு ஊக்கம் மூட்டியபடி அவனுடன் வந்த நண்பர்கள் அனைவரும் கைத்தட்டி அவனை ஆரவாரப்படுத்தினர்... அதில் மேலும் உற்சாகம் அடைந்த சந்தோஷ் மதுவின்

போதையில் காரின் வேகத்தை அதிகப்படுத்திய போது தான் அது தனது கட்டுப்பாட்டை இழந்து இந்தக் கோர விபத்து நிகழ்ந்துவிட்டது...

நண்பன் கூறியும் அவனால் உடனே காரை கிளப்ப முடியவில்லை... கைகள், கால்கள் அனைத்தும் நடுங்கியது பயத்தில்...

அதே போல் தான் முத்துபேச்சி, பாண்டியன், கயல்விழி மூவரின் நிலையும்... கண்முன் நிகழ்ந்த விபத்தைக் கண்ட அதிர்ச்சியில் அவர்கள் செய்வதறியாது நின்றிருந்தனர்...

முதலில் சுதாரித்தது முத்துபேச்சி தான்... மகளையும், பாண்டியனையும் மறந்தவளாய் அவள் அந்தக் காரை நோக்கி ஓடினாள்... அதில் தன்னுணர்வு அடைந்த பாண்டியன் அன்னிச்சை செயலாய் தனது அலைப்பேசியைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு தோழியை நோக்கி ஓடி போக நினைத்தவன் பின் நினைவு வந்தவனாய் கயல்விழியைத் திரும்பி பார்த்தான்...

சின்னவள் திக்பிரம்மை பிடித்தார் போன்று விழிகள் நிலைக்குத்தி அப்படியே நின்றாள்... அவளின் நிலை உணர்ந்தவனாய் அவளைத் தூக்கியவன்,

"கயலு... கயலு..." என்று அவள் கன்னத்தில் தட்ட... அடுத்த நொடி அவனது கரங்களில் மயங்கி சரிந்தாள் சின்னவள்...

அதற்குள் முத்துபேச்சி அந்தக் காரை நெருங்கி இருந்தாள்... கார் கண்ணாடி இறங்கியிருந்ததால் அவள் தன் கைகளை உள்ளே நுழைத்து காரை ஓட்டியவனின் சட்டையைப் பிடித்து இழுத்திருந்தாள் தைரியமாக...

சந்தோஷமே அச்சத்தில் இருந்ததால் அவளின் இழுப்பிற்கு உடனே வந்தான் தன்னை மறந்து... அவனது மூளை செயல்பட மறந்திருந்தது...

மெல்லிய தெரு விளக்கொளியின் வெளிச்சத்தில் அவனது முகத்தைக் கண்டவளோ அதிர்ந்து போனவளாய் தனது

ஒட்டு மொத்த ஆத்திரத்தையும் தனது கைகளில் இறக்கி அவனது கன்னத்தில் அப்படியே திருப்பிக் காட்டினாள்...

அதில் சந்தோஷின் அச்சம் அப்படியே இறங்கி அவனது மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்ய ஆரம்பித்தது...

"ஏன்டா நாயே.... பணம் இருக்குங்கிற திமிரில் தானே நீ இந்த ஆட்டம் போடுற... உன்னைக் கொன்னால் தான்டா என் மனசு ஆறும்..." என்று ஆத்திரத்தில் கத்தியவளை கண்டு அவன் அதே ஆத்திரத்தோடு அவளை நெட்டி கீழே தள்ளியவன் வேக வேகமாய்த் தனது காரை கிளப்பிக் கொண்டு சென்றான்...

அவனுக்கு இருந்த பதற்றத்தில் முத்துபேச்சியை அடையாளம் காணவில்லை... அந்த இடத்தில் இருந்து தப்பித்துக் கிளம்பினால் போதும் என்றே நினைத்தான்...

"முத்து..."

காரை பின் தொடர்ந்து ஓட முயன்ற முத்துபேச்சி பாண்டியனின் அலறலில் அப்படியே நின்று திரும்பி பார்த்தவள் அவனின் தோளில் சாய்ந்திருந்த மகளைக் கண்டதும் மற்றதை மறந்தவளாய் அவன் அருகில் ஓடி வந்தாள்...

"கயலுக்கு என்னாச்சி பாண்டி...?" பதற்றத்துடன் மகளைப் பார்த்தாள்...

"தெரியலை புள்ள... கன்னத்தைத் தட்டுனதும் மயங்கிருச்சு..."

அதிர்ச்சியில் மகள் மயங்கி இருப்பாள் என்றெண்ணியவள் நண்பனிடம், "நீ கயலை ஆட்டோவுக்குக் கூட்டிட்டு போய் மொகத்துல தண்ணி தெளி... நான் இங்கே யாரும் உசிரோட இருக்காங்களான்னு பார்த்துட்டு வர்றேன்..."

மகளின் நிலை தவிப்பாக இருந்த போதும் யாருமற்ற அநாதையாய் கிடந்த அந்த மக்களை நினைத்து அவளுக்கு இன்னமும் பரிதவிப்பு அடங்கவில்லை...

"பாண்டி... யோசிக்க நேரமில்லை... கயலை நீ பார்த்துக்குவ பாண்டி... ஆனா இவங்க நிலைமை அதை விடப் பாவமில்லையா...?" பரிதாபமாய்க் கேட்டவளை கண்டு அவனுக்குமே பாவமாக இருந்தது...

"நீ கயலை தூக்கிட்டு ஆட்டோவுக்குப் போ... நான் போய்ப் பார்க்கிறேன்..." என்றான் பாண்டியன்...

அங்கே இருந்த நிலையைப் பெண்ணவளின் மனதால் தாங்கிக் கொள்ள முடியாது என்று எண்ணி அவன் அப்படிச் சொன்னான்...

அதை ஏற்று அவளும் மகளைத் தூக்கி கொண்டு ஆட்டோ நோக்கி சென்றாள்...

அவள் சென்றதும் பாண்டியன் அங்கு அருகில் சென்று பார்த்தான்... ம்ஹூம் இந்த விபத்தில் ஒருவர் கூட உயிர் பிழைக்கவில்லை... தாறுமாறாய் ஏறியிருந்த காரின் சக்கரம் அனைத்து உயிர்களையும் பறித்திருந்தது...

அதிலும் சற்று முன் கயல்விழி கிலுகிலுப்பை கொடுத்த அந்த ஒரு வயது குழந்தையின் உடல் அந்தக் கிலுகிலுப்பையைப் போல் நொறுங்கி போயிருந்தது...

எந்தவொரு உணர்ச்சிக்கும் ஆட்படாத அந்த ஆண்மகனின் கண்கள் கலங்கி கண்ணீர் வழிந்தது அவனையும் அறியாமல்... இந்தக் குழந்தை என்ன பாவம் செய்தது...? வீடில்லாமல் இப்படி வறுமையில் பிறந்தது அதன் குற்றமா...? இல்லை இப்படிப்பட்டவர்களை இன்னமும் நடைபாதைவாசிகளாகவே வைத்திருக்கும் அரசாங்கத்தின் குற்றமா...?

அந்தக் குழந்தை மட்டுமல்ல இன்னமும் நான்கு குழந்தைகள் அந்த விபத்தில் உயிரை துறந்திருந்தது... எல்லோருமே பத்து வயதிற்குட்பட்டவர்கள் தான்... அதைக் கண்டு அவன் தாங்க முடியாது நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதுவிட்டான்...

பிறகு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அடுத்து என்ன செய்வது என்று யோசித்தவன் ஆம்புலன்ஸுக்கு அழைத்து விசயத்தைக் கூறினான்... அதன் பிறகு விஜய்க்கு அழைத்தான்...

ஏனெனில் பாண்டியன் சராசரி மனிதன்... அதுவும் கீழ்மட்ட நிலையில் உள்ளவன்... இதனால் தங்களுக்கு எந்தவித பாதிப்பும் வந்துவிடக் கூடாது என்கிற எண்ணத்தில் ஒரு தற்காப்பு செயலாக விஜய்யை அழைத்து விபரம் கூறினான்...

புது வருட கொண்டாட்டம் முடிந்து அப்பொழுது தான் 'அப்பாடா' என்று நிம்மதி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த விஜய்யை பாண்டியனின் அழைப்பு அடுத்த நொடி அவனை ஒரு காவல்துறை அதிகாரியாகச் சுறுசுறுப்பாய் செயல்பட வைத்தது...

விஜய்யுக்கு அழைத்துச் சொல்லிவிட்டு பாண்டியன் ஆட்டோவை நோக்கி வந்தான்... அதற்குள் கயல்விழி மயக்கம் தெளிந்து எழுந்து அன்னையை அணைத்துக் கொண்டு படுத்திருந்தாள்...

"யாருக்காச்சும் உசிரு இருக்கா பாண்டி...?" ஆவலுடன் கேட்டவளை கண்டு 'இல்லை' என்பது போல் தலையசைத்தவனைக் கண்டு அவளுக்கு வருத்தமாக இருந்தது...

"நாம போகலாம் புள்ள... விசய்க்கு ஃபோன் பண்ணி விசயத்தைச் சொல்லிட்டேன்... அவரு பார்த்துக்குவாரு..."

"எதுக்குச் சாமிக்கு ஃபோன் போட்டுத் தொந்திரவு பண்ணின...?"

முத்துபேச்சியின் பேச்சை கேட்டு அவன் அவளை நிதானமாகப் பார்த்தான்...

"இதுவும் அவரோட ட்யூட்டி தான் புள்ள... இதை நேருல பார்த்த சாட்சி நாம... போலீசுக்காரன் கேட்குற கேள்விக்கு

நம்மளால பதில் சொல்ல முடியாது... விசய்ன்னா இதைக் கவனமா டீல் பண்ணும்..."

சிறுவயதில் இருந்து காவல்துறையால் பட்ட அவதிகள் அவனை இது போல் பேச வைத்தது... அவன் கூறுவதும் உண்மை தான் என்பதால் அவள் மௌனமாய் இருந்தாள்...

"சரி புள்ள நாம கிளம்புவோம்... இங்கே இருந்தா வீண் பிரச்சினை தான்... நமக்கு மட்டுமில்லை... விசய்க்கும் சேர்த்து தான்..."

தனக்கு எந்தப் பிரச்சினை வந்தாலும் பரவாயில்லை என்று நினைத்தவளுக்குத் தன்னால் விஜய்க்குப் பிரச்சினை ஏற்படுவதை அவள் விரும்பவில்லை...

"போகலாம் பாண்டி..." என்று அவள் சொன்னதும் அவனும் ஆட்டோவை கிளப்பினான்...

முத்துபேச்சி தனது அலைப்பேசியை எடுத்து விஜய்யை அழைத்தாள்... உடனே அதை எடுத்தவன்,

"அங்கே தான் வந்துட்டு இருக்கேன்..." என்க...

"நாங்க கிளம்பிட்டோம்... நாங்க அங்கே இருந்தா தேவையில்லாம உனக்குப் பிரச்சினை வரும் சாமி அதனால தான்..."

அவள் சொன்னது அவனுக்குமே புரிந்தது... அவள் அங்கு இருந்தால் அவளைச் சாட்சியாகச் சேர்க்க வேண்டி வரும்... அவன் அதுக்கு விருப்பப்படவில்லை என்றாலும் அருகில் இருக்கும் மற்ற காவலர்களுக்கு அது தவறாகப் படலாம்... அதனால் அவள் அங்கிருந்து செல்வது தான் அவனுக்குமே நல்லதாகப் பட்டது...

"சாமி..." அவளது கலக்கமான குரலில் தன்னுணர்வு பெற்றவன்,

"சொல்லும்மா..." என்றான் ஆறுதலாய்...

தனது குரலை வைத்து தனது மனநிலையைக் கணித்தவனைக் கண்டு அவளுக்குக் கண்கள் கரித்தது...

"சாமி... மத்த நேரமா இருந்தா நான் அங்கேயே இருந்து சாட்சி சொல்லிட்டுத்தான் வந்திருப்பேன்... ஆனா இதில் சம்பந்தப்பட்டு இருப்பது ரொம்பப் பெரிய இடம்... நீ சொன்ன மாதிரி அவங்க எல்லாத்தையும் ஒண்ணும் இல்லாமாக்கி நம்மளையும் ஒண்ணுமில்லாம ஆக்கிருவாங்க பாவி பயலுங்க..."
அவளது வார்த்தையில் விஜய் மட்டுமல்ல ஆட்டோ ஓட்டி கொண்டிருந்த பாண்டியனும் திடுக்கிட்டுப் போனான்...

"ஆமாம் சாமி... இதுக்குக் காரணம் வேறு யாருமில்லை... அந்தச் செல்வி பொண்ணு கொலைக்குக் காரணமானவன் தான்... அவனை என் ரெண்டு கண்ணால பார்த்தேன் சாமி... நல்லா குடிச்சிப்புட்டு இப்படி ஒரு கொலைக்கார செயலை செஞ்சிட்டான்..." என்றவளுக்கு அழுகை முட்டி கொண்டு வந்தது...

"உன் மேல இருக்கிற நம்பிக்கையில் தான் இதை நான் சொல்றேன் சாமி... அவனுக்கு எப்படியாவது இதிலாவது தண்டனை வாங்கிக் கொடுத்துடு... அப்படியாவது அந்தப் பொட்டை புள்ள ஆன்மா சாந்தி அடையட்டும்..."

"என் மேல் நம்பிக்கை வைத்ததற்கு ரொம்பத் தேங்க்ஸ் பேச்சி... நிச்சயம் இதில் இருந்து அவன் தப்பிக்க முடியாது..." என்றான் விஜய் உறுதியான குரலில்...

அவன் மேலிருந்த நம்பிக்கையில் அலைப்பேசியைத் துண்டித்தாள் அவள்...

"முத்து... உண்மையாவா சொல்ற...?" இதைக் கேட்ட பாண்டியனின் குரலில் நடுக்கம் இருந்தது...

"உண்மையா தான் சொல்றேன் பாண்டி... அந்தப் பேமானி தான் இப்படிச் செஞ்சது..." என்றவளின் முகம் இறுக்கமாய் மாறி இருந்தது கோபத்தில்...

அந்த நொடி பாண்டியனுக்குத் தான் செய்த காரியம் சரியென்றே தோன்றியது... இது இவர்களைப் போன்றவர்களால் கையாள கூடிய எளிய பிரச்சினையல்ல... இதற்கு விஜய் மாதிரி பெரிய அதிகாரி தான் தேவை என்று...

அடுத்தப் பதினைந்தாவது நிமிடம் விஜய் விபத்து நடந்த இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டான்... ஆனால் அந்த நொடி வரை ஆம்புலன்ஸ் அங்கு வந்து சேர்ந்த பாடில்லை... மனித உயிர்களின் மீது அந்தளவுக்கு அலட்சியம் போலும்...

அந்த விபத்தை நேரில் கண்ட விஜய் கூட ஒரு நொடி கலங்கித்தான் போய்விட்டான் மனிதாபிமானமுள்ள மனிதனாக... விபத்தைக் கண்டு அல்ல... இப்படி நடைபாதையில் படுக்க வேண்டிய நிலையில் இருக்கும் அந்த மனிதர்களின் அவலநிலையைக் கண்டு...

ஆனாலும் அடுத்த நொடி தன்னை மீட்டுக் கொண்டு காவல்துறை அதிகாரியாக அடுத்துச் செய்ய வேண்டிய வேலைக்கு உத்தரவிட்டான் தன்னோடு வந்திருந்த ஏட்டுகளிடம்...

அவன் கூறியதும் அடுத்த ஐந்து நிமிடத்தில் ஆம்புலன்ஸ் அங்கு வந்து சேர்ந்தது... எல்லா உடல்களையும் கைப்பற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த விஜய் முதலில் சென்றது போக்குவரத்து துறையின் கட்டுப்பாட்டு அறைக்குத் தான்...

ஒரு நாள் தாமதித்தாலும் என்ன நடக்கும் என்பதை உணர்ந்தவனாய் உடனே அங்குச் சென்று அந்தப் பகுதியின் சிசிடிவி கேமிராவை பரிசோதித்தது தான்...

முத்துபேச்சி சொன்னது போல் அந்தக் கேமிராவில் எல்லாமே தெள்ளத் தெளிவாகப் பதிவாகி இருந்தது... முத்துபேச்சி ஓடி வருவது அவனது சட்டையைப் பிடிப்பது எல்லாமே பதிவாகி இருந்தது... இது போதும் அந்தச் சந்தோஷை குற்றவாளி கூண்டில் ஏற்றுவதற்கு என்று எண்ணி நிம்மதி கொண்டான்...

ஆனால் அது அவ்வளவு எளிதான விசயமல்ல என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை...

வீட்டிற்கு வந்தும் கயல்விழி முத்துபேச்சியை விட்டு அகலவில்லை... பயத்தில் அன்னையை அணைத்துக் கொண்டு படுத்திருந்தாள்... அவளது உடல் லேசாகச் சுட்டது...

"பாண்டி... அந்தக் காய்ச்ச மருந்தை எடு..." என்று அவள் கூற...

"என்ன காய்ச்ச அடிக்குதா...?" பாண்டியன் பதறித்தான் போனான்...

"லேசாத்தான்... நீ முதல்ல மருந்தை எடு..."

பாண்டியன் உடனே மருந்தை எடுத்து நீட்ட... அதை வாங்கி மகளுக்கு அவள் புகட்டி விட்டாள்... அடுத்த அரை மணி நேரத்தில் கயல்விழி ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்து போனாள்...

ஆனால் முத்துபேச்சியும், பாண்டியனும் ஒரு பொட்டு தூங்கவில்லை... விடிய விடிய விழித்திருந்தனர் அந்தச் சோக நிகழ்வை அசை போட்டபடி...

காலையில் எழுந்த குமாரி வீட்டில் ஒன்றும் சமைக்காமல் விட்டத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்த இருவரையும் கண்டு சத்தம் போட்டார்...

"ஒரு நல்ல நாளு அதுவுமா நல்ல சாப்பாட்டைக் கண்ணுல காட்ட வேண்டாமா... இப்படியா விடியா மூஞ்சியா ஒண்ணுஞ் செய்யாம உட்கார்ந்து இருக்கிறது..." என்று கத்தியவர்,

"ஏ புள்ள இன்னைக்காவது இனிப்பு, கவுச்சி எல்லாம் கண்ணுல காட்டு புள்ள... நாக்கு செத்துப் போய்க் கெடக்கு..." என்று நாக்கை சப்பு கொட்டி கொண்டு அவர் மகளிடம் கேட்க...

அதில் கோபம் அடைந்த முத்துபேச்சி, "இப்படி ராவா குடிச்சா நாக்கு செத்து போகாம என்னவாகும்...? இப்படியே இருந்தேன்னு வையி... ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீயும் செத்து தான் போகப் போற..."

எரிச்சலுடன் மொழிந்தவளை பாண்டியன் தான் அடக்கினான்...

"நல்ல நாளு அதுவுமா ஆத்தாவை ஏன் இப்படிப் பேசுற புள்ள...?"

"பின்னே என்ன பாண்டி...? நம்ம நிலைமைய புரியாம பேசுனா...? பேத்திக்கு உடம்பு முடியலையேன்னு கொஞ்சமாவது அக்கறை இருக்கா... திங்க வேண்டியது... குடிக்க வேண்டியது... இது ரெண்டத்தையும் தவிர ஒரு அம்மாவா இது எனக்கு என்ன செஞ்சியிருக்கு சொல்லு..."

மகளின் மற்ற வார்த்தைகளைப் புறக்கணித்த குமாரி, "கயலு புள்ளைக்கு மேலுக்கு முடியலையா...?" பதறி போய்ப் பேத்தி அருகில் வந்தவர் பின் நின்று உள்ளே சென்றுவிட்டார்...

"பார்த்தியா பாண்டி... இவ்வளவு தான் இதோட அக்கறை..." என்று முத்துபேச்சி சலித்துக் கொண்டாள்...

பாண்டியனுக்குமே குமாரியின் நடத்தை சற்று எரிச்சலை உண்டு பண்ணியது... ஆனால் அது தவறு என்பது போல் பத்து நிமிடத்தில் குளித்து முடித்துச் சுத்தபத்தமாக வந்த குமாரி பேத்தியின் அருகில் அமர்ந்து அவளது கழுத்தை தொட்டு பார்த்தார்...

"ஆமாம் புள்ள... சுடுது..." என்று கவலையுடன் சொன்னவர் பேத்தியை தூக்கி தனது மடியில் படுக்க வைத்துக் கொண்டார்...

அதைக் கண்டு மற்ற இருவரது மனமும் நெகிழ்ந்தது... முத்துபேச்சி எழுந்து சமையலறைக்குச் சென்று காபி போட்டுக் கொண்டு வந்து இருவரிடமும் நீட்டியவள் கையில்

கொண்டு வந்திருந்த பாலை மகளுக்குப் புகட்ட துவங்கினாள்...

"பாண்டி... நீ கடையில போய் அம்மா கேட்டது எல்லாம் வாங்கியாந்து கொடு..." என்க...

"நீ சமையேன் புள்ள..." என்று குமாரி மகளிடம் சொல்ல...

"அது வந்து..." அவள் மேலே சொல்லும் முன்,

"அது ஒண்ணுமில்ல ஆத்தா... நேத்துப் பொம்மை எல்லாம் கொடுத்துட்டு வர லேட்டாகிருச்சு... அந்தச் சடவுல முத்து கடையில வாங்கியாற சொல்லுது..." என்று சமாளித்துச் சொன்னவன் தோழியிடம் 'சொல்லாதே' என்பது போல் தலையாட்டினான்...

அதைக் கேட்டால் அவளது அன்னை ஒப்பாரி வைப்பார் என்று தெரியுமாதலால் அவளும் அமைதியாகி போனாள்...

குமாரிக்கு மட்டும் உணவை வாங்கிக் கொடுத்து விட்டு மற்ற இருவரும் மீதமிருந்ததை ஏதோ பேருக்கு உண்டுவிட்டு எழுந்தனர்...

அடுத்த ஒரு மணி நேரத்தில் கயல்விழியும் காய்ச்சல் சற்று குறைந்து எழுந்தமர்ந்து இருந்தாள்... ஆனாலும் மனதின் பயம் முற்றிலும் நீங்கவில்லை... அதனால் என்னவோ அன்னையின் பின்னாடியே சுற்றிக் கொண்டு இருந்தாள்...

****

விஜய் தனது அலுவலக வேலை முடிந்து கிடைத்த கொஞ்ச நேரத்தில் முத்துபேச்சியைக் காண அவளின் வீட்டிற்கு வந்திருந்தான்... அவனைக் கண்டதும் முகம் மலர வரவேற்றார்கள் முத்துபேச்சியும், பாண்டியனும்...

"இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்..." என்று ஆங்கிலத்தில் வாழ்த்து கூறி கையோடு தான் கொண்டு வந்திருந்த இனிப்புகளைக் கயல்விழியிடம் நீட்டினான் அவன்...

அவன் இது போல் தினமும் பல விபத்துகளைப் பார்ப்பதால் எளிதில் அதன் தாக்கத்தில் இருந்து வெளிவந்து விட்டான்...

அவனுக்குப் பதிலுக்கு வாழ்த்து சொல்லி ஒப்புக்கு சிரித்து வைத்தனர் முத்துபேச்சியும், பாண்டியனும்... அவர்களின் மனதில் கவலை அரித்துக் கொண்டிருந்தது...

கயல்விழியோ முந்தின நாள் பயத்தில் அன்னையுடன் ஒட்டி கொண்டு அவனிடம் வர மறுத்தாள்... அவளுக்குப் பதிலாக முத்துபேச்சி இனிப்புகளை வாங்கிக் கொண்டாள்...

"ஏன்...? பேபிக்கு என்னவானது...?" என்றான் விஜய் குழப்பமாய்...

"அது வந்து... நேத்து கயலும் எங்க கூட வந்திருந்தா..." என்றாள் முத்துபேச்சி சங்கடமாய்...

"உனக்குக் கொஞ்சமும் அறிவில்லையா பேச்சி... சின்னப் பொண்ணை எதுக்கு அந்த நேரத்தில் அங்கே கூட்டிட்டு போற...?"

கோபமும், எரிச்சலுமாய் அவன் கேட்டான்... பின்னே சின்னப் பெண் பார்க்கக்கூடிய காட்சியா அது... எத்தகைய கொடூரமான மரணங்கள் அவை...

"அங்கிள்... நான் பாப்பாவுக்குப் பொம்மை கொடுக்கப் போனேன்..." மெல்லிய குரலில் கூறிய கயல்விழியைக் கண்டு அவன் திடுக்கிட்டு கீழே குனிந்து அவளைப் பார்த்தான்...

"நான் அந்தப் பாப்பாவுக்குக் கிலுகிலுப்பை கொடுத்து அது கன்னத்துல முத்தம் கூடக் கொடுத்தேன்... அவ்வளவு அழகாயிருந்தது அது... ஆனா அந்தப் பாப்பா..."

மேலே சொல்ல முடியாது தேம்பி தேம்பி அழுதவளின் முகம் வேதனையில் கசங்கி போனது... அந்தச் சிசுவின் மரணத்தை நேரில் பார்த்த தாக்கம் சின்னவளை விட்டு இன்னமும் போகவில்லை...

அடுத்த நொடி விஜய் பாய்ந்து வந்து அவளைத் தன் கைகளில் அள்ளி கொண்டு தன்னோடு அணைத்துக் கொண்டான் ஆதரவாய்... சின்னவளின் மனநிலையை உணர்ந்தவனின் மனமும் பதறிப் போனது அந்த நிகழ்வை நினைத்து... சின்னவளும் அவனின் கழுத்தை இறுகக் கட்டி கொண்டது பயத்தில்...

"எப்போதும் வருசப் பொறப்புக்கு போற மாதிரி தான் அங்கே போனோம்... ஆனா இப்படி ஆகும்ன்னு நான் நினைக்கலையே சாமி..." என்று சொல்லும் போதே முத்துபேச்சியின் கண்களில் கண்ணீர் அரும்பியது...

நல்லவேளை குமாரி அங்கே இல்லை... அறையில் இருந்தார்...

முத்துபேச்சியின் கண்ணீரை துடைத்து ஆறுதல் சொல்ல விழைந்தது அவனது மனம்... ஆனாலும் அமைதியாய் கையாலாகாதவனாய் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் அவன்...

"புள்ள... இப்படியே அழுதுக்கிட்டு இருந்தா எப்படி...? விசய்க்கு காபி போட்டு கொண்டா..." பாண்டியன் தான் அந்த நிலைமையைச் சமாளித்தான்...

"கொஞ்சம் இரு சாமி..." என்று கண்களைத் துடைத்துக் கொண்டு முத்துபேச்சி சமையலறைக்குச் சென்றாள்...

தன்னை அணைத்துக் கொண்டிருந்த சின்னவளின் முதுகை ஆறுதலாய் நீவி விட்ட விஜய், "பேபி... நாம எங்கேயாவது வெளியில் போகலாமா...?"

"நான் வரலை..." என்றாள் அழுகையுடன் அவள்...

"அங்கிள் இருக்கேன்ல அப்புறம் எதுக்குப் பயப்படுற...?"

"வேண்டாம்..." மீண்டும் மறுத்தாள்...

"அங்கிள் போலீஸ் தான் பேபி... அதனால் பயப்படாம என் கூட வா... யாராவது தப்பு செஞ்சா அவங்களைப் பிடிச்சுப் பனிஷ்மென்ட் கொடுத்திடலாம்..."

அவன் கூறியதில் அவன் தோளில் இருந்து எழும்பி அவனது முகம் பார்த்த கயல்விழி, "அப்போ அவங்களுக்கும் பனிஷ்மென்ட் வாங்கிக் கொடுப்பீங்களா...?" என்றாள் ஆவலோடு...

அவள் எதைக் குறிப்பிடுகிறாள் என்பதை உணர்ந்தவனாய் அவளின் கன்னத்தில் முத்தமிட்டு, "கண்டிப்பா..." என்றான் உறுதியான குரலில்...

அதைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்த முத்துபேச்சி காபியை அவனிடம் நீட்டியபடி, "அவங்களைப் புடிச்சிட்டியா சாமி..." மகளுக்குச் சற்றும் குறையாத ஆர்வம் அவளிடத்திலும்...

காபியை வாங்கிப் பருகி கொண்டே அவனும்,

"ம்... சிசிடிவி கேமிராவில் பதிவான வீடியோவை ஆதாரமா வச்சு அடுத்த ஒரு மணி நேரத்தில் அவனையும், அவனோட இருந்த பிரெண்ட்சையும் அரெஸ்ட் பண்ணியாச்சு... இன்னைக்குக் கோர்ட் லீவு... நாளைக்கு அவங்களைக் கோர்ட்டில் ஹேண்ட் ஓவர் பண்ணணும்..."

"அவங்களுக்குத் தண்டனை கொடுப்பாங்க தானே சாமி... இல்லை போன தடவை மாதிரி..." அவளுக்குச் சற்றுச் சந்தேகமாக இருந்தது...

"நிச்சயம் தண்டனை உண்டு... இந்த முறை அவங்க இதிலிருந்து தப்ப முடியாது... ஸ்ட்ராங் எவிடென்ஸ் இருக்குது இல்லையா...?"

அதில் அவளின் முகம் மலர்ந்தது... அவன் கொண்டு வந்திருந்த இனிப்புகளில் இருந்து ஒன்றை எடுத்து அவனது வாயில் வைத்தாள் உரிமையுடன் உற்சாகமாய்...

"வருசப் பொறப்பு அதுவுமா நல்ல செய்தியை சொல்லியிருக்கச் சாமி..." என்று சந்தோசத்தோடு சொன்னவளை இமைக்காது பார்த்தான் அவன்...

அப்போது தான் அவளுக்குத் தனது செய்கை உறைத்தது... மனம் படபடக்கச் சட்டென்று அவனை விட்டு விலகி நின்றாள்...

"உண்மையில் ரொம்ப வருசம் கழித்து இந்த வருசம் தான் எனக்குச் சந்தோசமான வருசம்..." என்று மகிழ்ச்சியோடு இனிப்பை உண்டவனின் பார்வை அவளை விட்டு சற்றும் நீங்கவில்லை...

இருவரையும் புரிந்தும் புரியாமலும் பார்த்திருந்தான் பாண்டியன்...

"ம்மா... எனக்கு..." கயல்விழியும் அந்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் கலந்து கொள்ள விரும்பி இனிப்பு கேட்டாள்...

விஜய்யின் வார்த்தைகள் அவளைச் சற்று தெளிவடைய வைத்திருந்தது...

அதைக் கேட்டு விஜய் முத்துபேச்சி கையில் வைத்திருந்த இனிப்பு அடங்கிய பெட்டியில் இருந்து ஒரு இனிப்பை எடுத்து சின்னவளுக்கு ஊட்டி விட்டவன் அதே கையோடு பெரியவளுக்கும் ஊட்டி விட்டான் அவள் எதிர்பாரா தருணத்தில்...

அதில் அவள் திகைத்து போய் ஆவென வாயை திறந்து கொண்டு நிற்க, அதைக் கண்டு அவன் சிரித்தபடி அவளது தாடையில் கை வைத்து அவளது வாயை மூடினான்...

அதில் உணர்வு பெற்றவள் அவனது கையைத் தட்டிவிட்டபடி, "பொட்டப்புள்ளய தொட்டு பேசாதே சாமி..." என்றுரைத்தவள் அங்கு நிற்க முடியாமல் சமையலறைக்குச் சென்றாள்...

தன்னை ஏதோ அதிசயம் போல் பார்த்திருந்த பாண்டியனிடம், "அப்புறம் பாண்டி..." என்று அவன் வேறு கதைகள் பேச துவங்க... பாண்டியனின் கவனம் அவனது பேச்சில் சென்றாலும் மனதில் ஏதோ ஒன்று வித்தியாசமாகத் தோன்றியது...

சமையலறை சுவற்றில் சாய்ந்து நின்ற முத்துபேச்சிக்கு மனதின் படபடப்பு இன்னமும் நீங்கவில்லை... ஆனாலும் அவளுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது... அவன் ஊட்டிவிட்ட இனிப்பு நாவினில் மட்டுமில்லாது அவளது அடி நெஞ்சு வரை சென்று தித்தித்தது...

இனிப்பை ஊட்டிவிட்ட போது அவன் கைவிரல் அவளது இதழ்களை உரசி சென்றதில் அவளுள் தீ மூண்டது... அதன் தாக்கத்தைத் தாங்க முடியாது கண்களை மூடி கொண்டு அப்படியே நின்றிருந்தாள்...

"பேபி... உன் அம்மா சமையல் செய்ய வந்திருக்கிறாள் என்று பார்த்தால் இங்கே வந்து தூங்க வந்திருக்கிறாள் பார்... அதுவும் நின்னுக்கிட்டு..."

விஜய்யின் கிண்டலில் கண் திறந்தவளுக்கு அத்தனை வெட்கமாய்ப் போய்விட்டது... அவளின் வெண்ணிற முகம் அப்படியே சிவந்து போனது...

"நீ எதுக்கு இங்கே வந்த சாமி...?" என்று திணறியபடி கேட்டாள் அவள்...

"கயலுக்கு ட்ரெஸ் மாத்தி விடு... வெளியில் கூட்டிக்கிட்டு போயிட்டு வர்றேன்..." என்றவன் ஆவலாக அவளின் முகத்தைப் பார்த்து,

"நீயும் என் கூட வர்றியா...?"

அதைக் கேட்டு அவளின் முகம் மாறியது...

"இல்லை சாமி... வீட்டில் வேலையிருக்கு..." என்று அவனைப் பார்ப்பதை தவிர்த்து நிலம் நோக்கி கொண்டு கூறியவளை ஒரு நொடி ஆழ்ந்து பார்த்தவன் பின்,

"உன் விருப்பம்..." என்று கயல்விழியை அவளிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்...

அவனின் வார்த்தைகள் அவளுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது... இதுநாள் வரை எல்லாமே அவளது விருப்பத்திற்காக அவன் தான் விட்டு கொடுத்து

இருக்கிறான்... ஆனால் அவளால் இது போல் அவனுக்கு விட்டு கொடுக்க முடியவில்லையே... மனதுக்குப் பெரும் பாரமாய் இருந்தது தனது நிலையை எண்ணி...

அவனுள்ளும் பல யோசனைகள், குழப்பங்கள் எழுந்தது... இப்போது கொஞ்ச நாட்களாக அவன் ஒரு முடிவிற்கு வந்திருந்தான்... ஆனால் அதைப் பற்றிப் பேசுவதற்கோ, செயலாற்றுவதற்கோ அவனுக்குத் தைரியமில்லை... தைரியமில்லை என்பதை விட அவள் மனம் நோகும்படி நடக்க அவனுக்கு விருப்பமில்லை...

அதனால் பெருத்த யோசனையில் அமர்ந்திருந்தான்...

"போலாமா விசய்...?" என்றபடி பாண்டியன் தயாராகி வந்தான்...

அந்நேரம் கயல்விழியும் அங்குத் தயாராகி வர விஜய் முத்துபேச்சியிடம் கண்களால் விடைப்பெற, அதை உணர்ந்தவளாய் அவளும் கண்களால் அவனுக்கு விடை கொடுத்தாள்...

இரு நெஞ்சமும் தவித்தது தனது மனதில் இருப்பதை மற்றவரிடம் கொட்டி விட... ஆனால் அது முடியாமல் தவியாய்த் தவித்தது துன்பத்தில்...

அப்போது தான் நித்யா தனது மகன் தருணுடன் உள்ளே நுழைந்தாள்... தருணை கண்டதும் கயல்விழி விஜய்யை மறந்தவளாய் ஓடி போய்த் தருணின் கைகளைப் பற்றிக் கொண்டாள் மகிழ்ச்சியோடு...

எதிர்பாராமல் நித்யாவை அங்குக் கண்டதும் விஜய்யின் முகம் கடினமாய் மாறிப் போனது என்றால், நித்யாவின் முகம் முதலில் பேயறைந்தார் போல் மாறி பின் பரிதாபமாய் மாறியது...

"விஜய்... எப்படி இருக்கீங்க...?"

"நீ பண்ணிய காரியத்துக்கு நான் எப்படி நல்லாயிருக்க முடியும்..." என்றான் அவன் வெறுப்பாய்...

அதைக் கேட்டு நித்யாவின் கண்கள் கலங்கியது...

"நான் என்ன தப்பு பண்ணினேன்...?"

அதில் அவளை முறைப்பதற்குப் பதில் அவன் முத்துபேச்சியைப் பார்த்து முறைத்தான்...

"உன் பிரெண்ட் என்ன தப்பு பண்ணினாள்ன்னு நீயே சொல்லு... எனக்கு அவள் கிட்ட பேச விருப்பமில்லை..." என்றான் கோபத்தோடு...

முத்துபேச்சியோ கையாலாகாதவளாய் இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்...

"பாண்டி... கயல்லை கூட்டிட்டு வா... நாம போகலாம்..." என்றான் விஜய் இன்னமும் கோபம் குறையாமல்...

பாண்டியன் கயல்விழியை அழைக்க அவளோ அவளது தோழன் தருணை விட்டு வர மனமில்லாமல் வெளியில் வர மறுத்துவிட்டாள்...

"இட்ஸ் ஓகே பேபி..." என்று விஜய் சின்னவளின் கன்னம் தட்டி சொன்னவன் நித்யாவை முறைத்து விட்டு முத்துபேச்சியை ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியில் சென்றுவிட்டான் பாண்டியனை அழைத்துக் கொண்டு...

"நான் அப்படி என்னடி தப்பு பண்ணினேன்... காதலிச்சதை தவிர... எதுக்கு அவர் இப்படிக் கோபப்பட்டுட்டு போறாரு...? அது என்ன எப்போ பார்த்தாலும் என்னைய கண்டா மட்டும் எரிஞ்சு விழுறாரு... உன்னைய கண்டா மட்டும் ஈன்னு பல்லை காண்பிச்சுட்டு பேசறாரு... நான் மட்டும் என்ன பாவம் பண்ணினேன்..." என்று நித்யா கண்ணைக் கசக்க துவங்க...

"உஷ்... நித்தி... பிள்ளைங்க பார்க்கிறாங்க பார்..." என்று தோழியை அதட்டியவள் பிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமான்களை எடுத்து கொடுத்து விளையாட விட்டு விட்டு

தோழியின் அருகில் அமர்ந்து அவளது கையை வாஞ்சையுடன் பிடித்துக் கொண்டாள் முத்துபேச்சி...

"நீ ஒரு தப்பும் பண்ணலை நித்தி..."

"அப்புறம் எதுக்கு அவர் உன் கிட்ட கேட்க சொல்றாரு... என்னமோ அதுக்கான பதில் உன் கிட்ட இருக்கிற மாதிரி... அவருக்குப் பதில் சொல்ல முடியலை... அதுக்கு எதுக்கு உன்னைக் கையைக் காண்பிச்சுட்டு போகணும்..."

உண்மையில் அதற்கான பதில் அவளிடத்தில் தான் இருந்தது... அதைச் சொன்னால் தோழியின் மனம் வருத்தப்படும்... அதை விட அவளுக்குமே அதைச் சொல்ல விருப்பமில்லை...

"அவனுக்கு வேற வேலையில்லை... விடு நித்தி... நல்ல நாளும் அதுவுமா நீ அழாதே..." என்று தோழியைத் தேற்றியவள்,

"அப்புறம் அண்ணா பேசினாங்களா...?"

முத்துபேச்சி தன் கணவனைப் பற்றிக் கேட்டதும் நித்யா விஜய்யை மறந்தவளாய் தன் கணவனது புராணம் பாட ஆரம்பித்தாள்... தோழியின் வெகுளித்தனமான குணத்தை நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்டாள் முத்துபேச்சி...

ஆனாலும் சுருக்சுருக்கென்று முள் தைப்பது போல் ஒரு வலி அவள் மனதினுள்...

****

மறுநாள் சந்தோஷி நீதிபதி முன் ஆஜர் படுத்தினர் காவல்துறையினர்... இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி அவனைப் பதினைந்து நாட்களுக்குச் சிறையில் அடைக்கச் சொல்லி உத்தரவிட்டவர் வரும் பதினெட்டாம் தேதிக்கு மறுவிசாரணைக்கு உத்தரவு பிறப்பித்தார்...

இது தான் பொதுவாகக் குற்றம் சுமத்தப்பட்டது நிரூபணமானால் கொடுக்கும் உடனடி தண்டனை...

அதற்குப் பின் குற்றத்தின் தீவிரத்தை பொறுத்துத் தீர்ப்பு வழங்கப்படும்...

பதினைந்து நாள் என்றாலும் தன் ஒரே மகன் சிறைக்குச் சென்றதை சுந்தரலிங்கத்தால் ஜீரணிக்க முடியவில்லை... அடுத்தப் பதினைந்து நாட்களில் அவரால் நீதித்துறையை விலைக்கு வாங்கி அந்த நீதியை தன் பக்கமாய்த் திருப்பும் வல்லமை அவருக்கு இருக்கிறது தான்... ஆனாலும் இந்தப் பதினைந்து நாள் நெருக்கடியை அவரால் சமாளிக்க முடியாது போனது குறித்து அவருக்குப் பெரும் ஆத்திரம் எழுந்தது...

விபத்தை ஏற்படுத்திய மகன் அதைத் தன்னிடம் சொல்லாது அந்தக் காரிலேயே வெளியூர் தப்பித்துச் செல்ல முற்பட்ட போது தான் அந்த விஜய் அவனைக் கைது செய்து இருக்கிறான்... அதனால் தான் விஜய்க்கு இந்த வழக்குச் சாதகமாக அமைந்துவிட்டது...

சுந்தரலிங்கத்தின் ஒட்டு மொத்த கோபமும் விஜய்யின் மீது தான் திரும்பியது...

அன்று முத்துபேச்சியின் பகுதியில் இரத்த தான முகாம் நடைப்பெற்றது... வழக்கம் போல் முத்துபேச்சி அதில் கலந்து கொண்டு சுறுசுறுப்பாய் செயல்பட்டுக் கொண்டு இருந்தாள்...

"என்னோட ரத்தத்தையும் நான் கொடுக்கலாமா...?"

'யாருடா இது இப்படி ஒரு அபத்தமான கேள்வி கேட்கிறது...?' என்றபடி நிமிர்ந்து பார்த்தவள் அங்கு விஜய்யை கண்டதும் முகம் மலர்ந்தாலும்,

"நினைச்சேன் சாமி... யாருடா இப்படி லூசுத்தனமா கேள்வி கேட்குறதுன்னு... அது உன்னைய தவிர வேறு யாரு இருக்க முடியும்..." என்று கிண்டலடித்தவளை கண்டு,

"சந்தடி சாக்கில் என்னை லூசுன்னு சொல்லுறியா...?" அவளது தலையில் விளையாட்டாய் கொட்ட வந்தவன் பின்

தான் இருக்கும் சூழ்நிலையை உணர்ந்து கையை விலக்கி கொண்டான்...

"அது அந்தப் பயம் இருக்கட்டும்..." என்று சிரித்தவள் அங்கிருந்த செவிலிப்பெண்ணிடம் அவன் இரத்தம் கொடுப்பதற்கு ஏதுவாக ஊசியைக் குத்த சொன்னவள்,

"ஏஞ்சாமி... உங்க ஏரியாவில் எல்லாம் ரத்த தான முகாம் நடத்த மாட்டாங்களா...?" என்று கேலியாய் கேட்க...

"அங்கே எல்லாம் நீ இல்லையே..." என்றான் அழுத்தமான குரலில்...

அதில் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள் அவள்... இப்போது கொஞ்ச நாட்களாக அவனது பேச்சு, பார்வை எதுவுமே சரியில்லை என்றே அவளுக்குத் தோன்றியது... அதில் கொஞ்சமும் வெட்கம் இல்லாமல் இளகும் தனது மனதினை என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை...

அவனது பேச்சை கவனிக்காதது போல் அந்தப் பெண்ணிடம், "சாரோட இரத்தம் ரொம்ப ரேர் குரூப்... அதனால் சாரோட எல்லா இரத்தத்தையும் உறிஞ்சிட்டு விடுங்க..." என்று கேலி பேசியபடி அங்கிருந்து நகர்ந்தாள்...

தனக்குப் பதில் சொல்லாது செல்லும் அவளைப் பின் தொடர்ந்தது அவனது கண்கள் விடாமல்... அதை உணர்ந்தவளாய் அவளாலும் இயல்பாய் தனது வேலைகளைச் செய்ய முடியவில்லை... எங்குச் சென்றாலும் அவளது மனம் அவனையே சுற்றியே வந்தது...

சரியாக அவன் இரத்தம் கொடுத்து முடித்ததும் பழச்சாறு அடங்கிய குவளையுடன் அவனை நோக்கி வந்தவள்,

"முதல்ல இதைக் குடி சாமி..." என்று அவன் கையில் அதைத் திணித்தவள், "அப்புறமா எழுந்துக்கலாம்..." என்றாள் கண்டிப்பாக...

கண்டிப்பாய் சொன்னாலும் அதில் அவளது அக்கறை இருப்பதை உணர்ந்தவன் முகம் மலர அந்தப் பழச்சாறை அமிர்தமாக எண்ணி கொண்டு பருகினான்... ஆனால் அவனது விழிகள் இரண்டும் அவள் மீதே நிலைத்திருந்தது...

"உனக்கு வேலை முடிஞ்சதுன்னா என் கூட வர முடியுமா...?"

"இன்னும் கொஞ்சம் வேலையிருக்கு..." அவனைத் தவிர்ப்பதற்காக அவள் பொய் கூற...

"அப்படின்னா பரவாயில்லை... நீ உன் வேலையை முடிக்கும் வரை நான் காத்திருக்கிறேன்..." என்றவன் அங்கிருந்த நற்காலியில் அமர்ந்தான் சட்டமாக...

அதற்கு மேல் அவளாலும் ஒன்றும் பேச முடியவில்லை... அமைதியாகத் தனது வேலையைப் பார்த்தாள்...

அங்கு வந்த சிலர் அவனை அடையாளம் கண்டு அவனிடம் ஆர்வமாய்ப் பேச துவங்க அவனும் இன்முகத்துடன் பேச துவங்கினான்... அதைத் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த முத்துபேச்சி என்ன மாதிரி உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியாது...

அடுத்த அரை மணி நேரத்தில் தனது வேலைகளை வேகமாய் முடித்துக் கொண்டு அவனுக்காக அவசரமாகக் கிளம்பி வந்தாள் அவள்...

சாலையில் நடந்த இருவருக்கும் இடையில் கனத்த மௌனம் நிலவியது... இருவருமே அவரவர் யோசனையில் நடந்து கொண்டிருந்தனர்...

"சாமி... அந்தக் கேஸ்ல தீர்ப்பு குடுத்துட்டாங்களா...?" திடுமென அவளுக்கு அது ஞாபகம் வர அப்படிக் கேட்டாள்...

"பதினைந்து நாள் ரிமாண்ட் பண்ணியிருக்காங்க... பொங்கல் லீவு வருது இல்லையா... அது முடிஞ்சதும் தீர்ப்பு சொல்லுவாங்க..."

"கட்டாயம் தண்டனை கிடைச்சிடும் தானே சாமி..."

"உறுதியாய்..." என்றான் புன்னகையுடன்...

"கடங்காரன்... இப்படியா குடிச்சிட்டு ஏரோப்ளேன் மாதிரி காரில் பறப்பான்... எத்தனை உசிரு...? மனுச உசிரோட அருமை தெரியாத காவாலிப்பய அவன்... அப்படி என்னத்தான் இருக்கோ அந்தக் குடியில்...? குடிச்சு குடிச்சு குடல் வெந்து சாவறதுக்கு அத்தனை ஆசை போலிருக்கு..."

கோபத்தில் அவள் வாய்க்கு வந்த வார்த்தைகளில் திட்டி கொண்டே நடந்தாள்...

"எல்லோரும் சாவறதுக்காகக் குடிக்கிறது இல்லை பேச்சி... சிலர் வாழ்றதுக்காகவும் குடிப்பாங்க..."

அவனது வார்த்தையில் திகைத்து போய் அவனைப் பார்த்தாள் அவள்...

"சாமி என்ன சொல்ற...?"

அவளது கூர்மையான பார்வையைத் தாங்க முடியாது அவன் தனது பார்வையைத் திருப்பினான் வேறு பக்கமாய்...

"நீ இன்னும் குடிக்கிற பழக்கத்தை நிறுத்தலையா...?"

அதற்கு அவனால் பதில் பேச முடியவில்லை...

"உண்மையைச் சொல்லு சாமி..." அவனை உறுத்து விழித்துக் கொண்டு கேட்டவளை கண்டு மனம் தாங்காமல்,

"ஆமாம்டி குடிக்கிறேன்... ராத்திரியானா தண்ணி அடிக்காம என்னால இருக்க முடியலை... அதுக்கு இப்ப என்ன பண்ணணும்ங்கிற..." என்று கத்தினான் அவன்...

"வேணாம் சாமி இந்தக் கெட்ட பழக்கம்... அது கொஞ்சம் கொஞ்சமா உன்னைய அழிச்சிரும்..."

இதைச் சொல்லும் போதே அவளது கண்கள் கலங்கியது... அவனது நலம் அவளுக்கு மிக முக்கியம் அல்லவா...

"ஆனா அது இல்லைன்னா நான் கொஞ்சம் கொஞ்சமா செத்துருவேனேடி... அது உனக்குப் புரியலையா...? என்னை வாழ வைக்கிறது அந்தக் காதல் நினைவுகள் மட்டும் தான்... அதையும் மறக்க சொல்றியா நீ...?"

அவளுக்கு எதுவோ புரிந்தது போலிருந்தது... ஆனால் அதை வெளிப்படையாய் அவனிடத்தில் கேட்க முடியாது உதட்டை கடித்துத் தனது உணர்வுகளை அடக்கி கொண்டாள்...

அவளது முகத்தை வைத்தே அவளது மனநிலையை உணர்ந்தானோ என்னவோ... பேச்சை மாற்ற எண்ணி அவளது உதட்டினை பல்லில் இருந்து மெல்ல விடுவித்தவன்,

"இந்த உதடுகள் என்ன பாவம் பண்ணுச்சு... அதை ஏன் இப்படிக் கடிச்சு திங்கிற..." என்றான் தன் கோபத்தை மறந்து புன்சிரிப்புடன்...

அதில் அவளும் சகஜ நிலைக்கு வந்தவள், "உன்னைய கடிச்சு திங்க முடியலை அதான்..."

அவள் இதைச் சொல்லும் போதே அவனது பார்வை அழுத்தமாய் மாறி அவளது கேள்விக்குப் பதில் கூறியது... அதை உணர்ந்தவளோ வார்த்தைகளற்று தலையைக் குனிந்து கொண்டாள்...

"வேணாம் சாமி... இந்தக் குடிப் பழக்கத்தை விட்டிரு..."

தவிப்பாய் தன்னைப் பார்த்து சொன்னவளை கண்டு நிதானமாய்ப் பார்த்தவன்,

"சரி விட்டுர்றேன்... ஆனா நீ நான் கேட்பதை செய்வியா...?"

அவன் ஏதோ ஏடாகூடமாகக் கேட்க போகிறான் என்ற அச்சத்தில் வழிகள் விரிய அவள் அவனைப் பார்த்துக் கொண்டு நிற்க, அவனோ சளைக்காது அவளது பார்வையைத் தாங்கி நின்றான்...

அவர்கள் இருவரும் பேசி கொண்டிருப்பதை அந்த வழியாகக் காரில் சென்ற சுந்தரலிங்கம் பார்த்துவிட்டார்... அவரது முகம் யோசனையில் சுருங்கியது இருவரையும் சேர்த்து கண்டதில்...!!!

வாசம் நேசமாகும்...!!!

"உன் பொண்ணு கயலை எனக்குத் தத்து கொடுக்கிறியா...?"

முத்துபேச்சியின் கண்களை நேருக்கு நேர் பார்த்தபடி விஜய் கேட்க, அதுவரை சீரற்ற சுவாசத்தோடு தடுமாறி திணறி கொண்டிருந்தவள் இப்போது நிம்மதி பெருமூச்சு விட்டபடி அவனைப் பார்த்து நிம்மதியுடன் சிரித்தாள்...

"ப்பூ... இது தானா...? நான் என்னமோ ஏதோன்னு நினைச்சுப் பயந்துட்டேன் சாமி..."

அவள் என்ன தான் சிரித்தபடி கூறினாலும் மனதின் பயம் முகத்தில் வியர்வை பூக்களாய் மலர்ந்திருக்க அதைத் தனது கழுத்தை சுற்றியிருந்த ஷாலை எடுத்து லாவகமாய்த் துடைத்து மறைத்து கொண்டாள்...

வேக வேகமாய் ஏறியிறங்கும் அவளது நெஞ்சுக்கூடு மற்றும் முகத்தில் அரும்பி இருக்கும் வியர்வைத் துளிகள் எல்லாம் சொல்லாமல் சொல்லியது அவளின் மனதின் அச்சத்தை... அதைக் கண்டு அவனது உதட்டில் புன்னகை அரும்பியது...

"அப்படி நான் என்ன கேட்டுட போறேன்னு நீ இப்படிப் பயப்படற...?" என்று கேலியாய் ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி கேட்டவனைக் கண்டு தனது அச்சத்தை மறைத்துக் கொண்டு போலியாக முறைத்து பார்த்தாள் அவள்...

அவனும் விடாமல் அவளைப் பார்க்க கடைசியில் அவள் தான் தன் பார்வையைத் தழைக்க வேண்டியதாய் போயிற்று... என்ன தான் அவள் தைரியமான பெண்ணாய் இருந்தாலும் மனதுக்குப் பிடித்த ஆணின் ஒற்றைப் பார்வையில் உள்ளம் உருகி போய் அவளது தைரியம் எல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்றுச் சென்றுவிட்டது... அந்தத் தைரியத்தின் இடத்தை நாணம் வந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டது...

"நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லலையே..."

அவளின் முகத்தை ஆராய்ந்தவாறு அவன் கேட்டான்... அவளின் நடவடிக்கை அவனுக்குப் புதிராக இருந்த போதும் ஏனோ மனதுக்கு இதமாகத் தான் இருந்தது...

"என்ன சாமி கேட்ட...?" என்று தனது மோனநிலையில் இருந்து வெளி வந்தவள் சிறு திடுக்கிடலுடன் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"கயலை எனக்குத் தத்து கொடுக்கிறதை பத்தி கேட்டேன்..."

அதில் அவனை ஒரு உணர்வற்ற பார்வை பார்த்தாள் அவள்... அவளின் மனம் போல் அவளது பார்வையும் ஜீவனற்று போய் அவனை வெறித்துப் பார்த்தது...

"ஏஞ்சாமி உனக்குத் தத்து எடுக்க வேற புள்ளைங்களே கிடைக்கலையா...? போயும் போயும் இந்தப் பிச்சைக்காரி பெத்தெடுத்த பொண்ணு தான் உனக்கு வேணுமா..."

இதைச் சொல்லும் போது அவளது பார்வை அவனை நேர்க்கோடாய் சந்திக்கவில்லை... சற்று தள்ளி சென்று கொண்டிருந்த வயதான பெரியவரை பார்த்துக் கொண்டிருந்தது...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது இப்படி எல்லாம் பேசாதேன்னு..." சற்று கடுமையுடன் அவளை அதட்டியது அவனது குரல்...

"உண்மை சில சமயம் கசக்கத்தான் செய்யும் சாமி..." என்று அவனைப் பார்த்தவள் கண்ணில் அடிப்பட்டது போல் ஒரு வலி தெரிந்தது...

"ம்ப்ச்... திரும்பத் திரும்ப அதையே சொல்லாதே ப்ளீஸ்..."

அவனது வார்த்தையிலும், முகத்திலும் தான் எத்தனை வேதனை...!!!

அவனை வேதனைப்படுத்திப் பார்க்க அவளுக்கும் விருப்பமில்லை போலும்... அதனால் உடனே பேச்சை

மாற்றினாள்...

"எதுக்குச் சாமி இந்தக் கஷ்டம் எல்லாம்...? பேசாம ஒரு நல்ல பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணி சீக்கிரமா புள்ள குட்டி பெத்துக்கோ..."

இலவசமாக அறிவுரை கூறியவளை அவன் வெறித்துப் பார்த்தான்... அவனது பார்வையில் இருந்த குற்றச்சாட்டை அவள் உணர்ந்தாலும் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளாது அவனை நிமிர்வுடன் பார்த்தாள்...

அவளது இந்தத் தைரியம் கண்டு அவனது இதழ்களில் புன்னகை தவழ்ந்தது...

"ம்... நீ சொன்னது போல் நல்ல பெண்ணாய் பார்த்துக் கல்யாணம் பண்ணி புள்ள குட்டி எல்லாம் பெத்துக்கலாம் தான்..." என்று அழுத்தமாய்ச் சொல்லிவிட்டு அவளது முகத்தைக் கூர்ந்து கவனித்தான்...

அவன் சொன்னது கேட்டு அவளது முகத்தில் தெரிந்த தவிப்பை கண்டு அவனது மனம் சற்று ஆறுதல் அடைந்தது... விடை தெரியா கேள்வியோடு அலைப்பாய்ந்து கொண்டிருக்கும் அவனது மனதுக்கு விடை கிடைக்காத போதும் அவளது இந்தத் தவிப்பு இப்போதைக்குப் போதுமானதாக இருந்தது...

"ஆனா இது எதுவுமே உன் வயிற்றில் பிறந்த பெண்ணாகாது பேச்சி..." என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவனைக் கண்டு திகைத்து நின்றவள் சடுதியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"வேண்டாம் சாமி... உன் உசரம் எங்கே...? நான் எங்கே...? என் பொண்ணைப் போய் நீ தத்தெடுப்பதா... ச்சீ ச்சீ... வாயை கழுவு சாமி..."

முகத்தைச் சுளித்துக் கொண்டு பேசியவளை கண்டு அவனுக்குப் பெருத்த ஆயாசமாக இருந்தது... இருந்தாலும் அவளை ஒரு வழி பண்ணாமல் அவனும் விடப் போவதில்லை...

"ஏன் இப்படிச் சொல்ற...? உன்னைப் பார்த்தா அப்படி ஒண்ணும் அருவருப்பாய் தெரியலையே..." என்றவனின் பார்வை அவளை மேலிருந்து கீழாக ஊடுருவது போல் பார்த்து வைத்தது...

அதில் அவளது உச்சந்தலை முதல் கால்விரல் நுனி வரை சிவந்து தான் போனது வெட்கத்தில்...

"உண்மை அது தானே சாமி..." என்றாள் தன் மனதை மறைத்துக் கொண்டு...

"ஆமாம், ஆமாம்... நீ பெரிய உண்மை விளம்பி தான்..." என்று கிண்டலாய் உரைத்தவன், "நீ ஒரு பொய் புளுகினி... நீ வாயை திறந்தாலே பொய் தான்..."

அவன் நேரிடையாய் தன்னைக் குற்றம் சாட்டவும் அவளது கண்கள் கலங்கி போனது அவளது மனதினை போல்...

"என்ன சாமி இப்படிச் சொல்ற... நான் பொய் பேசுவேனா... அதுவும் உன் கிட்ட போய்... ஜோக் அடிக்காதே சாமி..."

கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு தன்னைக் கட்டுப்படுத்தியவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"நீ என் கிட்ட பொய் சொன்னதே இல்லை..." என்று கேட்டவனின் பார்வை ஊடுருவி சென்றது அவளின் மனதினை அறிவது போல்...

அவனது லேசர் பார்வை அவளது இதயத்தைச் சல்லடை சல்லடையாகத் துளைத்தெடுத்தது... அதன் வலியை அவளது கண்கள் பிரதிபலித்ததோ என்னமோ... அதைக் கண்டு அவனது முகம் மென்மையானது...

"உண்மை தான் நீ என் கிட்ட பொய் சொன்னது இல்லை தான்... ஆனால் அதுக்கு எல்லாம் சேர்த்து வச்சு நீ சொன்ன ஒரு பொய்..." என்று வேதனையுடன் நிறுத்தியவன்,

"என் வாழ்க்கை முழுவதும் மறக்காது..." என்றவனின் வார்த்தையில் இருந்தது எல்லாமே வலி, வலி, வலி மட்டுமே...

அதை உணர்ந்தவளாய் அவளும் வாயை திறந்தாள்...

"மறதி நல்ல மருந்து சாமி..."

அதைக் கேட்டு அவன் தன்னிலை மறந்து சிரித்து விட்டான்...

"அப்படியா அந்த மருந்து எந்தக் கடையில் கிடைக்கும்ன்னு சொல்லு... நானும் வாங்கிச் சாப்பிடுகிறேன்..."

அவனது கேலியை கண்டு அவனை முறைத்தாள் அவள்...

"அப்படி ஒரு மருந்து இல்லாத காரணத்தால் தான் என் உணர்வுகள் மரத்து போவதற்காக நான் குடிக்கிறேன்... அப்போது என்னோடு இருப்பது காதலின் வலி கிடையாது... காதலின் சுகம் மட்டுமே..."

இதைச் சொல்லும் போதே அந்த நினைவில் அவனது முகம் மலர்ந்தது மகிழ்ச்சியில்...

"திரும்பவும் சொல்றேன்... குடி வேணாம் சாமி..." என்று பரிதாபமாய்த் தன்னைப் பார்த்து கெஞ்சியவளை கண்டு அவனுக்குமே பாவமாகத் தான் இருந்தது...

ஆனால் மது இல்லை என்றால் தினமும் அவன் வேதனையில் உழன்று விரைவில் தன் உயிர் மூச்சை நிறுத்திவிடுவானே...

"சத்தியம் பண்ணு சாமி... இனிமே குடிக்க மாட்டேன்னு..."

தன் முன் நீண்ட அவளது சிவந்த வலது உள்ளங்கையைப் பார்த்தான்... சின்னஞ்சிறு குழந்தையின் பாதம் போல் அத்தனை சிவப்பாய், மிருதுவாய், அழகாய் இருந்தது அது... அதைக் கண்டதும் ஏதேதோ நினைவுகள் எழுந்து அவனை அலைக்கழித்தது...

உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தனது தலைமுடியை அழுந்த கோதி கொண்டவன்,

"சத்தியம் எல்லாம் வேணாமே பேச்சி..." என்றவனது குரல் அவனுக்கே கேட்கவில்லை... முனங்கலாய் ஒலித்தது... அது அவனது இயலாமையை அப்படியே பிரதிபலித்தது...

"ப்ளீஸ்..." கண்கள் கலங்க ஏறிட்டவளை கண்டு அவனது மனம் தடுமாறித்தான் போயிற்று...

அடுத்த நொடி சிறிதும் யோசியாது தனது கரத்தினை அவளது கரத்தின் மீது வைத்தான்... ஒரு நொடி தான் அவனது கரம் அவளது கரத்தினைத் தொட்டது... அந்தத் தொடுகையைக் கூடத் தாங்க இயலாதவளாய் மின்சாரத்தைத் தொட்டது போல் அதிர்ந்து போய் வெடுக்கென்று தனது கையை இழுத்து கொண்டாள்...

அதை அவன் வேறு விதமாய் எடுத்துக் கொண்டான்...

"ஓஹோ... பொட்டப்புள்ளைய தொட்டு பேச கூடாது இல்லையா...?"

தன்னைப் பார்த்து கிண்டலாய் கேட்டவனின் கண்களைச் சந்திக்க முடியாமல் அவள் தன் விழிகளை வேறு பக்கம் செலுத்தினாள்...

'ஐயோ... அவஸ்தைப்படுத்துறானே... நான் சொன்னது அதுக்கு இல்லையே...' அவளது மனம் தனக்குள் அரற்றித் தவித்தது...

"கடைசி வரை நான் சொன்னதுக்கு நீ சம்மதிக்கவே இல்லையே..." என்றவனைத் திடுக்கிட்டு பார்த்தவள்,

"என்னத்துக்குச் சம்மதிக்கலை...?" கேட்கும் போதே அவளது குரல் நடுங்கியது...

"அது தான் கயலை தத்துக் கொடுப்பது பற்றி...?"

"அவ தான் சாமி என் உசிரு... அவளை உன் கிட்ட கொடுத்துட்டு நான் எப்படிச் சாமி...?" கண்கள் கலங்க கைகள் இரண்டையும் விரித்துக் காட்டியபடி ஆதரவற்றவள் போல் நின்றவளின் நிலையைக் கண்டு அவனது இதயத்தில் இரத்தம் கசிந்தது...

தன்னை விட அவள் படும் வேதனையைக் கண்டு அவனது உள்ளம் உருகி போனது...

"சரி, சரி... வேண்டாம்... உன் மகளை நீயே வைச்சுக்கோ... அதுக்காக இப்படி எல்லாம் அழுது என்னைப் பயமுறுத்தாதே... பார்க்கவே அத்தனை பயங்கரமா இருக்கிற..."

கேலி பேசி அவளது மனதினை அவன் மாற்ற முயன்றான்...

"ஏஞ் சொல்ல மாட்ட நீ... நம்ம காலேஜ்ல எத்தனை பசங்க என்னைச் சுத்தி வந்தானுங்கன்னு உனக்குத் தான் தெரியுமே... அது எல்லாம் என் அழகை கண்டு தான்..." என்று அவள் கித்தாய்ப்பாய் சொல்ல...

"அத்தோடு அத்தனை பசங்களும் உன் சென்னை பாசை கண்டு மிரண்டு போய் ஓடிய கதையும் எனக்குத் தெரியுமே..."

அவனது கிண்டலில் அவள், "அரசியலில் இது எல்லாம் சாதாரணம்ப்பா..." என்று மிதப்பாய் கூற... அதைக் கண்டு அவன் சிரித்தான்...

அவன் சிரிப்பதை கண்டு அவளது முகமும் பூவாய் மலர்ந்து விகசித்தது...

அதன் பின் அந்தப் பேச்சை விடுத்து வேறு பேச்சிற்கு இருவரும் தாவி விட்டனர்... அது பற்றிப் பேசினால் இருவருக்குமே வீண் வேதனை தான் மிஞ்சும் என்று இருவருமே அறிந்து வைத்திருந்தனர்...

****

பொங்கல் அன்று காலை உற்சாகமாக விடிந்தது... முத்துபேச்சி காலையில் எழுந்து குளித்து முடித்துப் புது உடை அணிந்து பொங்கல் வைத்து முடித்து விட்டாள்... வெகுநாட்களுக்குப் பின் அவளது மனம் மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது...

மகளையும் குளிக்க வைத்துப் புதுப் பட்டுப்பாவாடை சட்டையை அணிவித்து அழகு பார்த்தாள் அவள்... அந்த உடையில் இளவரசி போல் தோற்றமளித்த மகளைக் காண காண பெருமிதத்தில் அவளது நெஞ்சம் விம்மியது...

குமாரி, பாண்டியனும் தயாராகி வர நால்வரும் சேர்ந்து கோவிலுக்குக் கிளம்பி சென்றனர்... போகும் வழியில் மகள் உற்சாகமாகப் பேசி கொண்டு வர முத்துபேச்சியும் அவளுக்குத் தக்க பதிலளித்துக் கொண்டு வந்தாள்...

கோவிலுக்குள் நுழையும் வரை எல்லாம் நன்றாகத் தான் சென்றது... ஆனால் உள்ளே கருவறை சென்று கடவுளை வணங்கும் போது தான் அந்த இதமான மனநிலை மறைந்தது அவளுக்கு... ஏனெனில் அவளுக்கு எதிர்ப்பக்கமாய் நின்றிருந்தது விஜய்யின் குடும்பத்தினர்...

மைதிலி, வெங்கட் இருவரையும் கண்டவள் மனதில் அனல் மூண்டது... அவளது பார்வை நெருப்பாய் அவர்களைப் பார்த்து தகித்து உயிரோடு சுட்டுப் பொசுக்கியது... அதைக் கண்டு அவர்களது மனதில் சிறிது பயம் தோன்றிய போதும் அதைக் காட்டி கொள்ளாது வெளியில் விறைப்பாய் நின்று கொண்டிருந்தனர்... அதைக் கண்டு அவளது முகத்தில் எள்ளலான புன்னகை தோன்றியது... வேண்டுமென்றே நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கர்வமாய் நின்றாள் அவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக...

அதே சமயம் அவளது பார்வை ரகுராமனை கண்டதும் அவளது அத்தனை உற்சாகமும், மகிழ்ச்சியும் நொடியில் மறைந்து போனது... மனதில் குற்றவுணர்ச்சி பெருக கூனிக்குறுகி போனாள்... அவளது மனம் மிகவும் உடைந்து போனது... பழையை நினைவுகளின் தாக்கத்தில் அவளது மனமும், மேனியும் நடுக்கம் கொண்டது...

"ஹேய் பேபி நீ எங்கே இங்கே...?"

அவளின் மனதினை உணர்ந்தார் போன்று அந்தக் குரல் ஆறுதலாய் அவளது காதில் விழுந்தது... சட்டென்று திரும்பி பார்த்தாள்... அப்போது தான் விஜய் அங்கு வந்திருந்தான்

போலும்... அவனது தந்தைக்கு அடுத்ததாய் நின்றிருந்தவன் கயல்விழியைக் கண்டு அப்படிக் கேட்டான்...

அப்போது தான் மைதிலியின் விழிகளில் கயல்விழி தென்பட்டாள்... அத்தோடு அவளது கையை இறுகப் பற்றியிருந்த முத்துபேச்சியும்... இருவரையும் மாறி மாறி பார்த்தவருக்கு நொடியில் எல்லாம் புரிந்து போனது...

தான் முடித்து வைத்த கதை இன்னமும் முற்றுப் பெறவில்லை, இனி தான் தொடர போகிறது என்று... பயத்தில் வியர்த்து வழிய தன் மகனை திரும்பி பார்த்தாள்...

அதைக் கண்டு முத்துபேச்சி தனக்குள் கேலியாய் சிரித்துக் கொண்டாள்...

இரு பெண்களின் மனதினை அறியாத விஜய்யோ கயல்விழியுடன் சைகையில் பேசி கொண்டிருந்தான்...

"அங்கிள்... நான் அங்கே வரவா..." என்று கயல்விழி ஆசையுடன் அவனிடம் கேட்க...

சின்னவளின் 'அங்கிள்' என்றழைப்பை கேட்டு மைதிலி திகைத்து போய் முத்துபேச்சியைப் பார்க்க, அவளோ உணர்வில்லாது அவரை வெறித்தாள்... அவளது பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாது மைதிலி தான் தலை குனிய வேண்டியதாய் போயிற்று... அதுவே தனக்குக் கிடைத்த வெற்றியாக மனதில் பட்டது முத்துபேச்சிக்கு...

ஆனால் வென்றுவிட்ட மனநிலையில் இல்லாது அவளது மனம் தோற்றுவிட்ட மனப்பான்மையில் அல்லவா கதறி அழுது கொண்டு இருக்கிறது...

"நீ அங்கேயே இரு... நான் அங்கே வர்றேன்..." என்று கயல்விழியிடம் உரைத்தவன் தன் குடும்பத்தினரை கண்டு கொள்ளாது முத்துபேச்சி பக்கம் விரைந்தான்...

புன்னகை முகமாய்க் கயல்விழியைத் தூக்கி கொண்டவன் முத்துபேச்சியுடன் இணைந்து நின்றான்... மூவரும் சேர்ந்து நின்றது ஒரே குடும்பம் போல் பார்ப்பதற்கு அத்தனை அழகாய் இருந்தது...

மைதிலி இந்தக் காட்சியை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருக்க... ரகுராமனோ அமைதியான பார்வையால் மூவரையும் அளவிட்டுக் கொண்டிருந்தார்... அவரது மனதிலும், முகத்திலும் துயரத்தின் சாயல் படிந்தது...

பாண்டியனும், குமாரியும் இவர்களுக்கு இடம் கொடுத்து ஒதுங்கி நின்றனர்...

அப்போது அர்ச்சகர் வந்து முத்துபேச்சியிடம் அர்ச்சனை தட்டை வாங்கிக் கொண்டு, "யார் பேருக்கு அர்ச்சனை...?" என்று கேட்க...

"சாமி பேருக்கு..."

இதை அவள் சொல்லும் போது அவளையும் அறியாது அவளது விழிகள் அவனது விழிகளை நொடி பொழுதில் சந்தித்து மீண்டது...

அப்போது தான் கவனித்தான் அவள் புடவை கட்டி இருப்பதை... அதுவும் அவளுக்குப் பாந்தமாகப் பொருந்தியிருப்பதைக் கண்டு வியந்தான்...

பொதுவாகப் பெண்கள் புடவை கட்ட வேண்டும், பூ வைக்க வேண்டும் என்று அசட்டுத்தனமாய் அவன் கற்பனை செய்வது கிடையாது... ஒரு பெண் தன்னியல்பு மாறாமல் இருந்தால் அதுவே அவளுக்கு அழகு என்று நினைப்பவன் அவன்... அதனால் தான் மற்ற பெண்களைக் காட்டிலும் முத்துபேச்சியிடம் அதிகப் பிடித்தம் உண்டு அவனுக்கு...

எந்த உடையிலும் அழகாய் இருப்பவளை கண்டு அவனது மனம் ஒரு நொடி தடுமாறி தான் போனது... முயன்று மனதை கட்டுப்படுத்திக் கொண்டு கடவுளிடம் கவனத்தைச் செலுத்தினான் அவன்...

சாமி கும்பிட்டு விட்டு அவன் கைகளில் கயல்விழியுடனேயே வெளியில் வந்தான்...

"விஜய்..." என்று மைதிலி அவனை அழைத்தார்...

"சாமி நீங்க போங்க..." என்று அவனைப் பார்த்து சொன்ன முத்துபேச்சி, "கயல்... வா போகலாம்..." என்று மகளைப் பார்த்து கூற...

"இருக்கட்டும் ஹனி..." ஏனோ மனதுக்கு மகிழ்ச்சியாய் இருந்ததாலோ என்னமோ அவனையும் அறியாது சட்டென்று அந்த வார்த்தை அவனது வாயில் இருந்து வந்துவிட்டது...

அதைக் கேட்டு பெண்ணவள் மனம் அதிர அப்படியே நின்றாள்...

‘ஐ லவ் யூ ஹனி...’ என்று காதலை சொல்லி தன்னுள் புதைந்தவனின் ஞாபகச் சுவடுகள் அவளது மனமெங்கும்...

"விஜய்... இங்கே கொஞ்சம் வந்துட்டு போ..." மைதிலி சற்று அழுத்தமாய் அவனைக் கூப்பிடவும்,

"கொஞ்சம் வெய்ட் பண்ணு..." என்று முத்துபேச்சியிடம் உரைத்தவன் கயல்விழியைத் தூக்கி கொண்டு தன் குடும்பத்தினரை நோக்கி சென்றான்...

அவன் செல்வதைப் பார்த்தபடி அவள் கோவில் பிரகாரத்தில் அமர்ந்தாள்... அவளைத் தொடர்ந்து பாண்டியனும், குமாரியும் அமர்ந்தனர்...

என்ன நடக்கிறது என்று அவர்களுக்குப் புரியவில்லை... ஆனால் ஏதோ நல்லது நடந்தால் சந்தோசம் என்ற மனநிலையில் அவர்கள் இருவரும் இருந்தனர்...

"இப்போ எதுக்கு என்னைக் கூப்பிட்டீங்க...?"

"நாங்க வர சொல்ல போய்த் தான் நீ கோவிலுக்கு வந்த விஜய்..." என்று கோபமாய் மைதிலி பேச...

"ஆமாம்... அதை இல்லைன்னு நான் சொல்லலையே... நீங்க சொன்னதால் தான் அவ்வளவு வேலையை விட்டுட்டு வந்தேன்... அதுக்கு என்ன இப்போ...?" என்றான் சிறு எரிச்சலுடன்...

'அதுவும் அவள் சொன்னதற்காகத் தான்' மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டான் அவன்...

"விஜய்... இப்போ இங்கே எதுக்கு இந்தச் சனியனை நீ தூக்கிட்டு வந்திருக்க...?" என்று வெங்கட் அவனிடம் கடுப்படுப்பாய் கேட்டான்...

அவனுக்கு முத்துபேச்சியைக் கண்டாலே ஆகாது... இதில் அவளது குழந்தையைக் கண்டதும் அவனது கோபம் இன்னமும் அதிகரித்தது...

"டேய்..." என்று ஒற்றை விரல் நீட்டி தம்பியை எச்சரித்த விஜய்,

"வார்த்தையை ஒழுங்கா பேசு வெங்கட்... சின்னக் குழந்தையைப் பார்த்து என்ன பேச்சு பேசுற..." என்று ஆத்திரத்துடன் சத்தம் போட்டான்...

"இதுங்களுக்கு இந்த மரியாதை போதும்..." என்று அலட்சியமாய் வந்து விழுந்தது வெங்கட்டின் வார்த்தை...

ஏதோ சரியில்லை என்றுணர்ந்த கயல்விழி அவனது கைகளில் இருந்து இறங்க பார்த்தாள்...

"நீ இரு பேபி..." என்று அவளைச் சமாதானப்படுத்தியவன்,

"இவள் ஒண்ணும் சனியன் இல்லை... இவள் என் மகள் போதுமா..."

மகன் கூறியதை கேட்டு தீச்சுட்டார் போன்று அவனை நிமிர்ந்து பார்த்தார் மைதிலி...

"இதற்கு என்ன அர்த்தம்ன்னு சொல்ல முடியாத நிலையில் நான் இருக்கிறேன்... அதுக்குக் காரணமும் நீங்க தான்...

அப்படி ஒரு நிலையில் என்னையும், அவளையும் வச்சிட்டீங்க..." என்று குடும்பத்தாரை குற்றம் சாட்டியவன்,

"சரி இப்போ எதுக்கு வர சொன்னீங்க... அதைச் சொல்லுங்க முதல்ல..."

அவன் அப்படிக் கேட்கும் போதே ஒரு குடும்பம் அவர்களை நோக்கி வந்தது... அப்பா, அம்மா, மகள் என்று மூவர் மட்டுமே அதில் இருந்தனர்...

வேறு சிலரும் அங்கு வருவதை உணர்ந்து முத்துபேச்சி தன் மகளை அழைத்து வர எண்ணி விஜய்யை நோக்கி சென்றாள்...

"இந்தப் பொண்ணைப் பார்க்க தான் உன்னை வர சொன்னேன் விஜய்..." என்று மைதிலி மகனது காதில் கிசுகிசுத்தவர் வந்தவர்களைப் பார்த்து வரவேற்பாய் சிரித்து வைத்தார்...

அன்னை கூறியது கேட்டு அவனது ஆத்திரம் அதிகரித்தது... ஆனாலும் அடக்கி கொண்டு அமைதியாய் நின்றிருந்தான்...

பெரியவர்கள் தங்களுக்குள் பேசி கொள்ள அந்தப் பெண்ணோ அவனையே விடாது பார்த்திருந்தாள்... அதில் அவனுக்கு இன்னமும் எரிச்சல் அதிகரித்தது...

அந்த நேரம் முத்துபேச்சி அவன் அருகில் வந்து கயல்விழியை அழைத்துப் போக வர இது தான் நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணிய விஜய் முத்துபேச்சியின் கையைப் பிடித்துத் தன்னருகில் நிறுத்தி கொண்டான்...

"ஐயோ... என்ன சாமி செய்ற நீ...?" கலக்கத்துடன் அனைவரையும் பார்த்த முத்துபேச்சி தனது கைகளை விடுவித்துக் கொள்ளப் போராடினாள்...

அந்தோ பரிதாபம் அவனது இரும்பு பிடி இளகுவதாய் இல்லை...

அங்குக் குழுமியிருந்த இரு வீட்டாரும் திகைத்து போய் அவர்கள் இருவரையும் பார்த்தனர்... அந்தப் பெண் அதிர்ந்து போய் விஜய்யை பார்த்தாள்...

அதைக் கண்டு விஜய்க்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... இது தானே அவனுக்கும் வேண்டும்...

"இந்தா கயலை வாங்கு..." அவளது கையை விடுவித்துக் கொண்டு அவன் சொல்ல... அவனது இந்த உரிமையான பேச்சு, செயல் கண்டு முத்துபேச்சி திகைத்து போய் நின்றாள்...

கயல்விழியை முத்துபேச்சியின் கைகளில் கொடுத்தவனின் கரங்கள் வேண்டுமென்றே அவளது உடலோடு உரசி கொண்டு சென்றது... அதில் அவள் அதிர்ந்து போய்ப் புரியாது விழித்துப் பார்த்தாள் அவனை...

"நீ கொஞ்சம் வெய்ட் பண்ணு ஹனி... நான் இப்போ வந்திர்றேன்..." அவளது அதிர்ச்சி கண்டு சிறு சிரிப்போடு கூறியவனின் கை விரல் அவளது கன்னத்தை மென்மையாய் வருடி சென்றது மயலிறகாய்...

அதில் அதிர்ச்சி தெளிந்தவள் அவனைப் பார்த்து முறைத்து விட்டு கயல்விழியைத் தூக்கி கொண்டு வேகமாய் நடந்து வந்துவிட்டாள்... அவள் வேகமாய்ச் செல்வதைக் கண்டு எங்கே வீட்டிற்குக் கிளம்பி சென்று விடுவாளோ என்று பயந்தவனாய் பெண்ணைப் பெற்ற தகப்பனிடம்,

"எனக்கு ஏற்கெனவே கல்யாணமாகி விட்டது... அதோ போகிறாளே அவள் தான் என் மனைவி... அது என் குழந்தை..." என்று வேகமாய் உரைத்தவன் அடுத்த நொடி முத்துபேச்சி பின்னால் ஓடியிருந்தான்...

"இப்படி எங்களைக் கேவலப்படுத்த தான் இங்கே வரச் சொன்னீங்களா...?" என்று பெண்ணைப் பெற்றவர்கள் சத்தம் போட்டு விட்டு செல்ல... விஜய்யின் குடும்பத்தினர் அவமானத்தில் தலை கவிழ்ந்தனர்...

"வினை விதைத்தால் வினையைத் தான் அறுக்க வேண்டும்..." என்று விரக்தியாய் சொன்ன ரகுராமன் குடும்பத்தினரை அங்கிருந்து கிளம்பும்படி கூறினார்...

"அம்மா... இனிமேல் அவனுக்குப் பொண்ணு பார்க்க போறேன்னு சொல்லி இப்படி எங்களையும் சேர்த்து அவமானப்படுத்தாதீங்க..."

வெங்கட் தன் அன்னையிடம் படபடவெனக் கோபமாய்ப் பொரிந்தவன் தனது மனைவி, மகனை அழைத்துக் கொண்டு விறுவிறுவென்று வெளியில் சென்றுவிட்டான்...

வேறுவழியின்றி அவனைப் பின் தொடர்ந்தனர் மைதிலியும், ரகுராமனும்...

முத்துபேச்சி அருகில் வந்த விஜய் அவளது கையை இறுக பிடித்தபடி, "பாண்டி... இங்கே வா...." என்று பாண்டியனை அழைத்தவன்,

"நீ பேபியை இங்கே இருக்கிற கடைக்குக் கூட்டிட்டு போ... நான் ஹனி கூடப் பேசணும்..." என்றான்...

அவனது 'ஹனி' என்றழைப்பு பாண்டியனுக்கு வித்தியாசமாய்த் தோன்ற அவன் தன் தோழியைப் பார்த்தான்...

அவளோ கோபத்தில் முறுக்கி கொண்டிருந்தாள்...

"எனக்கு அவங்கூடப் பேச எதுவும் இல்லைன்னு சொல்லிரு பாண்டி..." என்றவள் தனது கையை அவனது பிடியில் இருந்து விடுவித்துக் கொள்ளப் போராட...

"எனக்குப் பேச நிறைய விசயமிருக்கு... பாண்டி ப்ளீஸ்..." என்று விஜய் சொல்லவும் அவன் கயல்விழியையும், குமாரியையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்...

"முதல்ல கையை விடு சாமி..." மீண்டும் கையை உதறிக் கொண்டு அவள் பல்லை கடிக்க...

"சரி விடுறேன்... அப்படின்னா நீயும் நான் சொல்றதை கேட்கணும்..."

அதைக் கேட்டு அவள் அமைதியாக நின்றாள்... அதுவே சம்மதமாய் எண்ணி கொண்டவன் அடுத்தக் கணம் அவளது கையை விடுவித்தான்... மறு நொடி அவள் தனது இரு கைகளையும் நெஞ்சுக்கு குறுக்காக இறுக்கமாய்க் கட்டி கொண்டு விறைத்துக் கொண்டு நின்றாள்...

அவள் நின்றிருந்த தோரணை அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது... அப்போது தான் அவளை நன்கு உற்றுக் கவனித்தான்...

அந்த ஆரஞ்சு நிற புடவை அவளது தந்த நிற மேனியில் அழகுற பொருந்தியிருந்தது... பெண்களுக்கு உண்டான இளமை அழகு இந்தப் புடவையில் அழகுற தெரிந்து அவளை இன்னமும் பேரழகியாய்க் காட்டியது...

"இந்தப் புடவை உனக்கு ரொம்ப அழகாயிருக்கு ஹனி..."

"இதைச் சொல்லத்தான் என்னை நிக்கச் சொன்னியா...?"

அதைச் சொல்லும் போதே அவளது முகம் சிவந்து விட்டது... அது கோபத்தினாலா இல்லை வெட்கத்தினாலா என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனாலும் கோபமாகத் தான் இருக்கும் என்று தானாக எண்ணி கொண்டவன்,

"எதுக்கு இத்தனை கோபம்...?"

அவனை ஏறிட்டு பார்த்து உறுத்து விழித்தவள், "ஏன்னு உனக்குத் தெரியாது...?" என்று கோபமாய்க் கேட்க...

"ஏன்...?" என்று யோசனை செய்வது போல் பாவனைச் செய்தவன், "ஆங்... ஞாபகம் வந்திருச்சு... உன்னை ஹனின்னு கூப்பிட்டேன்... அதுக்கா...?" என்றவனது பார்வை விசமமாய் அவளது கன்னத்தைப் பார்த்தது...

அதை உணர்ந்தவளாய் அவளும், "எதுக்கு அவங்க முன்னாடி என் கிட்ட அப்படி ஒரு உரிமை எடுத்துக்கிட்ட...?"

அதில் அவனது விளையாட்டுத்தனம் முற்றிலும் மறைந்து முகம் சீரியசான நிலைக்கு மாறியது...

"வேறு யார் கிட்ட இந்த உரிமையை எடுத்துக்கச் சொல்ற...?" என்றான் அழுத்தமான குரலில்...

அதில் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள் அவள்...

"நான் வேறு ஒருத்தர் மனைவின்னு தெரிஞ்சிருந்தும் இப்படிப் பேச உனக்கு அசிங்கமா இல்லை..." என்று கோபத்தில் கூறியவளின் முகம் ஜிவுஜிவெனச் சிவந்து போனது...

அவள் கூறியதை கேட்டு அவனது ஆத்திரம் கண்டபடி எகிறத் துவங்கியது...

"இல்லைடி... அசிங்கமா இல்லைடி... நீ யாருக்கு வேணா பொண்டாட்டியா இருந்துட்டு போ அது எனக்குக் கவலையில்லை... நான் இப்படித்தான் இருப்பேன்..." என்று ஆத்திரத்துடன் கத்தியவன்,

"என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது நீ தான்... நீ மட்டும் தான்... எத்தனை அழகாய் வாழ்ந்திருக்க வேண்டிய வாழ்க்கையை இப்படிச் சின்னாப்பின்னமாக்கி விட்டது நீ தான்டி..." என்று அவளைக் குற்றம் சுமத்தினான் அவன்...

இத்தனை நேரம் கோபத்தில் கத்தியவளுக்கு இப்போது பேச வாய் வரவில்லை... அவன் சொல்வது போல் அனைத்தையும் கெடுத்தவள் அவள் தானே... அதனால் அவள் மௌனமாய் நின்றிருந்தாள் தலை குனிந்து...

அவளது வேதனை நிலை கண்டு அவனுக்குத் தான் அத்தனை வேதனையாய் இருந்தது... அவளுக்கு வலித்தால் அது அவனது வலி அல்லவா...

"இப்போ எதுக்குத் தெரியுமா அவங்க வந்துட்டு போறாங்க... என்னை மாப்பிள்ளை பார்க்க..."

அதைக் கேட்டு அவள் முகம் மலர அவனைப் பார்த்தாள்...

"உண்மையாவா சொல்ற சாமி..." என்று சந்தோசத்துடன் கேட்டவளை கண்டு,

"அப்படியே உன் கன்னத்தில் பளார்ன்னு நாலு அறை கொடுக்கணும்ன்னு போலிருக்கு..." என்று கோபத்தில் பல்லை கடித்தான் அவன்...

அதில் அவள் தன் வாயை கப்பென்று மூடி கொண்டாள்...

"அந்தக் கொடுமையில் இருந்து தப்பிக்கத்தான் அப்படிப் பேசினேன்... உன் கூடக் குடும்பம் நடத்துறதுக்கு இல்லை... அதனால் நீ தேவையில்லாம கோபப்படாதே..."

"அதுக்கு நான் தான் கிடைச்சேனா...?" அவள் முனங்கினாள்...

"எனக்கு நீ மட்டும் தான்... என்ன புரிஞ்சதா..." என்று சொன்னவன்,

"நீ போட்ட எல்லை கோட்டை தாண்டி நான் எப்போதுமே வர மாட்டேன்... என்னை நானே கஷ்டப்படுத்திக்குவேனே தவிர உன்னை நான் எப்போதுமே கஷ்டப்படுத்திப் பார்க்க மாட்டேன்... அதனால் நீ என்னைக் கண்டு பயப்படத் தேவையில்லை..."

தனது நிலையைத் தெளிவாக அவளிடத்தில் உரைத்தவன், "நான் கிளம்பறேன் ஹனி..." என்க...

"இப்படிக் கூப்பிடாதே சாமி..." மெல்லமாய் முணுமுணுத்தவளை கண்டு,

"ஏன்...?"

"வேண்டாம்ன்னா வேண்டாம்... இப்படிக் கூப்பிடற அளவுக்கு நமக்கு இடையில் எந்த நெருக்கமும் இல்லை..."

"உனக்கு இல்லாமல் இருக்கலாம்... ஆனால் எனக்கு இருக்கு..." என்றவனது பார்வை ஆழமாய் அவளை ஊடுருவி பார்த்தது...

"ப்ளீஸ் சாமி..." என்று கெஞ்சுதலாய் பார்த்தவளை கண்டு,

"அம்மா தாயே... அடுத்தச் சத்தியத்தைக் கேட்க ஆரம்பிச்சிராதே... அதுக்கு உன்னை நான் அப்படிக் கூப்பிடாமல் இருப்பதே எனக்கு நல்லது..." என்று சிரித்தபடி உரைத்தாலும் அவனது மனம் உள்ளுக்குள் ஊமையாய் அழுதது அவனுக்கு மட்டுமே தெரியும்...

"நான் வரட்டுமா..." என்று இடைவெளி விட்டு அவளைப் பார்த்தவன்,

"பேச்சி..." என்று அழுத்தமாய்க் கூறியபடி அவளிடத்தில் இருந்து அவன் விடைப்பெற...

எதிர்பார்ப்புடன் தன்னை நோக்கிய அவளது விழிகள் இரண்டிலும் ஏமாற்றம் கவிழ்ந்ததை அவன் உணர்ந்திருந்தாலும் அதற்காக எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கும் தன் நிலையை அறவே வெறுத்தவனாய் அவன் அங்கிருந்து விறுவிறுவென வேகமாய் வெளியேறினான்...

அவன் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவளின் கண்களில் கண்ணீர் மல்கி அவனது பிம்பத்தை மங்கச் செய்தது...

விஜய் சென்று விட்டதை உணர்ந்து பாண்டியன் கயல்விழி, குமாரியுடன் முத்துபேச்சி அருகில் வந்தான்... மகளைக் கண்டதும் அவளை வாரியணைத்து கொண்டாள் முத்துபேச்சி... மனதின் கலக்கத்தை மகளை அணைத்துக் கட்டுப்படுத்திக் கொண்டாளோ...

குமாரி மகளிடம் எதுவோ கேட்க போகப் பாண்டியன் அவரைத் தடுத்துவிட்டான்...

வரும் போது இருந்த குதூகலம் குறைந்திருந்தது மூவரிடத்திலும்... ஆனாலும் அதையும் மீறி அவர்களுள் ஒரு நிறைவு தோன்றியது என்றால் மிகையில்லை...

****

அன்று சந்தோஷின் வழக்கிற்கான தீர்ப்பு நாள்... வழக்கம் போல் காலை நேர பரபரப்புடன் நீதிமன்ற வளாகம் சுறுசுறுப்பாய் இயங்கி கொண்டிருந்தது...

அன்று அந்தத் தனி நீதிமன்றத்தில் சந்தோஷின் வழக்கு பத்தாவது வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது... நிச்சயம் அவனுக்குத் தண்டனை கிடைத்துவிடும் என்ற இறுமாப்பில் விஜய் அமர்ந்திருந்தான்...

அதே போல் பார்வையாளர் பகுதியில் சுந்தரலிங்கம் இன்று மகனுக்கு விடுதலை கிடைத்துவிடும் என்ற இறுமாப்பில் அமர்ந்திருந்தார்... இதற்காக அவர் கொடுத்த விலைகள் எவ்வளவு என்பது அவர் மட்டுமே அறிந்த ரகசியம்... அவரது செல்ல மகனை விட அவருக்குப் பணம் ஒன்றும் பெரிதல்ல... பணம் இருக்கும் பெருமையில் நீதித்துறையை விலைக்கு வாங்கிய கர்வத்தில் அவர் அமர்ந்திருந்தார்...

விஜய்யின் நினைப்பிற்கு எதிராக, சுந்தரலிங்கம் நினைவிற்குச் சாதகமாகத் தீர்ப்பு எழுதப்பட்டது... ஆம் சந்தோஷ் மற்றும் அவனது நண்பர்கள் விடுதலை செய்யப்பட்டனர் குற்றம் சரியாக நிரூபிக்கப்படாத காரணத்தால்...

விஜய் ஆதாரமாகக் கொடுத்திருந்த காணொளி அப்படியே உருமாறிப் போயிருந்தது... அதில் இருந்த சந்தோஷின் காருக்கு பதிலாக வேறு ஒரு கார் இருந்தது... எல்லாமே வெறும் கண்துடைப்பு என்பது இதை உற்று நோக்கும் சிறு குழந்தைக்கும் புரியும்... ஆனால் இப்படி முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்துத் தீர்ப்பு வழங்கும் நீதித்துறையைக் கண்டு விஜய்க்கு அத்தனை வெறுப்பாய் இருந்தது...

முதன்முறையாகக் காக்கி உடுப்பு போட்டதற்காக அவன் தலை குனிந்தான்... தலையில் மாட்டியிருந்த தொப்பியை கோபத்துடன் கழட்டியவன் நீதிமன்றத்தை விட்டு வேகமாய் வெளியேறி நேரே தனது ஜீப்பை நோக்கி போனான்... அவனது மனம் அப்படி ஒரு ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தது...

அதே நேரம் சுந்தரலிங்கமும் அங்கு வந்து காரிலேறினார்... அப்போது அவர் அவனைப் பார்த்த பார்வையில் இருந்த நக்கலையும் மீறி அதிலிருந்த ஏதோ ஒன்றில் விஜய்யின் கண்கள் யோசனையாய் இடுங்கியது...

அடுத்த நொடி அவரது கார் கிளம்பி சென்றுவிட்டது...

'அவர் ஏன் அப்படிப் பார்த்தார்...? அவரது பார்வையில் இருந்தது என்ன...?' விஜய் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவனின் அலைப்பேசி அழைத்தது...

எரிச்சலுடன் அதை எடுத்து பார்த்தவன் அதில் முத்துபேச்சியின் எண்ணை கண்டதும் அவனது கோபம் அப்படியே அடங்கிப் போனது... அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாது அவன் தவித்தான்...

மீண்டும் மீண்டும் அழைத்த அவளது அழைப்பை புறக்கணிக்க இயலாது அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"சாமி..." அவளது குரல் சற்று அழுகையுடன் ஒலித்ததோ...

அதை உணர்ந்தார் போன்று அவன் பதறிப் போனான்...

"சொல்லும்மா..." என்று உருகினான் அவன்...

"வேலையிருக்குதா சாமி..." என்று கேட்டவளின் குரல் நடுங்கியது...

'என்ன பெரிய வேலை...? இப்படிக் குற்றவாளி தப்பிச்சு போறதை வேடிக்கை பார்த்துட்டு கையைக் கட்டிட்டு இருக்க வேண்டிய உருப்படாத வேலையைத் தான் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்...' மனதுக்குள் விரக்தியுடன் முணுமுணுத்து கொண்டவன்,

"முதல்ல நீ விசயத்தைச் சொல்லு..."

"ஒரு எட்டு வீட்டுக்கு வந்துட்டு போ சாமி..."

என்றுமில்லாமல் இன்று அவளது குரலிருந்த பதற்றம் அவனையும் மனம் பதறச் செய்தது... 'வருகிறேன்' என்று அழைப்பு துண்டித்தவன் அடுத்த நொடி அவளது வீடு நோக்கி பயணித்தான்...

முத்துபேச்சி வீட்டு கதவை அவன் தட்டிய அடுத்த நொடி அதை எதிர்பார்த்தவள் போல் உடனே கதவை திறந்தவள், "வா சாமி..." என்றழைத்து அவன் அமர்வதற்கு ஏதுவாய் நாற்காலியை போட்டவள், அவன் அதில் அமர்ந்ததும் தானும் அவனது காலடியில் அமர்ந்து அவனது முகத்தைப் பரிதவிப்புடன் பார்த்தபடி,

"சாமி... நீ என் பொண்ணைத் தத்தெடுத்துக்கிறியா...?"

அதை அவனிடத்தில் அவள் கேட்கும் போதே அவளது கண்களில் இருந்து கரகரவெனக் கண்ணீர் வழிந்தது...

அதைக் கண்டு பதறி போனவனாய், "ஏன் இப்படி எல்லாம் பேசுற...?" என்று கடிந்தபடி அவன் அவளது விழிநீரை துடைத்துவிட...

அதில் மனமுடைந்தவளாய் அவள் அவனது கையில் முகம் புதைத்து அப்படியே அவனது மடியில் தலை சாய்ந்தாள் ஆறுதல் தேடி...

அவளது இந்த உரிமையான நெருக்கத்தில் விஜய்யின் மனதில் இத்தனை நாளாய்ச் சூழ்ந்திருந்த குழப்ப மேக மூட்டங்கள் மறைந்து இப்போது அவனது மனம் தெளிவாய் மாறியது...

அவனது மனதிலிருந்த எல்லாச் சந்தேகங்களையும் அப்படியே விரட்டியடித்தது அவளது இந்தச் செய்கை...

மனதில் எழுந்த சந்தோசத்தோடு அவனது இடது கை உரிமையோடு அவளது தலையை வருடி கொடுத்தது வெகு வருடங்கள் கழித்து...!!!

வாசம் நேசமாகும்...!!!

முத்துபேச்சியின் விழிகளில் இருந்து வழிந்த விழிநீர் சொட்டு சொட்டாய் விஜய்யின் கையினை விடாமல் நனைத்துக் கொண்டிருந்தது... அடுத்தடுத்து அருவியாய் பெருகிய அவளது கண்ணீரில் அவன் உள்ளம் பதறிப் போனான்...

"அழாதே பேச்சி... சொன்னா கேளு..." அவனது வார்த்தைகள் அவளின் துயரத்தை கண்டு பரிதவிப்புடன் ஒலித்தது...

அவ்வளவு எளிதில் அவள் தன் உள்ளத்து உணர்வுகளை இப்படி அப்பட்டமாய் வெளியில் காட்டிவிடுவது இல்லை... அதை அவனும் அறிவானே...

அவளது இந்தக் குணத்தால் தான் அவனுமே இன்று வரை துன்பத்தை அனுபவித்து வருகிறான்...

தனது துன்பத்தை விட இப்போது அவளது துன்பம் அவனுக்குப் பெரும் துன்பமாகத் தோன்ற, அவளது தலையை வருடி கொண்டிருந்த அவனது இடது கரம் அவனையும் அறியாது சற்று நீண்டு அவளது முதுகினை ஆதரவாய் நீவி விட்டது...

"இப்போ நீ அழற அளவுக்கு என்ன நடந்தது...?"

அவனது எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாது அவனது மடி சாய்ந்து தனது அத்தனை வருட துயரத்தையும் அழுகையில் கரைத்தாள் அவள்...

அவளின் அழுகையை நிறுத்தும் வகையறியாது அவன் அவளது முதுகை வருடி கொடுத்துக் கொண்டிருந்தான் அமைதியாக...

அப்போது எதிர் வீட்டு பெண்மணி வெளியில் செல்வதற்காகக் கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தவர் இந்தக் காட்சியைக் கண்டு திகைத்து நின்றார்...

'இப்படிப் பட்டப்பகலில் யாரோ ஒருவனின் மடியில் படுத்துக் கொண்டு... ச்சீ... ச்சீ...' என்று மனதுக்குள் அருவருப்பாய் நினைத்தவர் அதே அருவருப்புடன் முகத்தைச் சுளித்தார்...

தவறு செய்பவர்கள் இப்படி எல்லோரும் பார்ப்பதற்கு ஏதுவாகக் கதவை திறந்து வைத்துக் கொண்டு தவறு செய்ய மாட்டார்கள் என்று ஏனோ அவருக்குத் தெரியவில்லை...

அதிலும் விஜய் அணிந்திருந்த காக்கி சீருடை அவருள் ஆர்வத்தைக் கிளப்பியது... இப்போது முகநூல், வாட்ஸ் அப்பில் எல்லாம் இது போன்ற செய்திகள் தானே அதிகம் இடம் பெறுகிறது... அந்த ஆர்வக்கோளாறில் அவர் தனது அலைப்பேசியில் இருவரையும் இணைத்துப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்...

தங்களது துயரத்தில் கரைந்து கொண்டிருந்த இருவருமே அவரது செயலை உணரவில்லை...

'இனி இந்தப் போலீஸ்க்காரனை பார்த்து பிரெண்ட்டுன்னு மட்டும் அவ எங்கையில சொல்லட்டும்... அப்போ இந்த ஃபோட்டோவை காட்டி அவளை நாக்கை புடுங்கிக்கிற மாதிரி நாலு கேள்வி கேட்கிறேன்... அப்ப தெரியும் நான் யாருன்னு...'

மனதுக்குள் முத்துபேச்சியை நினைத்துக் கறுவி கொண்டவர் அடுத்தவர் படுக்கையறைக்குள் எட்டி பார்த்து அவர்களது அந்தரங்கத்தைத் தெரிந்து கொண்ட திருப்தியுடன் அவர் வெளியில் சென்றுவிட்டார்...

"இங்கே பார் பேச்சி... நான் கேட்டதுக்காக நீ கயலை எனக்குத் தத்து கொடுக்க வேண்டாம்... எப்படி இருந்தாலும் அவள் என் பொண்ணு தான்... நம் பொண்ணு தான்..." என்று அழுத்தம் திருத்தமாய் உறுதியான குரலில் கூறியவனின் வார்த்தையில் அவளது அழுகை ஸ்விட்ச் போட்டார் போன்று உடனே நின்றது... அடுத்த நொடி சிறு அதிர்வுடன் அவனை விட்டு விலகி அமர்ந்தாள்...

சிறிது நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு அவள் என்ன காரியம் செய்துவிட்டாள்...!!!

சின்ன விசயம் என்றாலும் அதில் பல அர்த்தத்தைத் தானாய் ஊகிப்பவனிடம் அவளே இப்படி அழுது தன்னைக் காட்டி கொடுத்து விட்டாளே என்று மனதுக்குள் தன்னைத் தானே நொந்து கொண்டு அமர்ந்திருந்தாள்...

அவளது விலகலை அவன் மனம் குறித்துக் கொண்டாலும் அதை வெளியில் காட்டாது, "சரி இப்போ சொல்லு... உன்னோட உயிர் கயல்ன்னு எனக்கு நல்லா தெரியும்... அப்படிப்பட்ட கயலை இப்படி அவசரமா எனக்குத் தத்து கொடுக்கும் முடிவை நீ எடுக்கும்படி இப்போ என்ன நடந்தது பேச்சி...?"

அதற்கு அவள் பதில் பேசாது அந்த அலைப்பேசியை எடுத்து அவன் முன் நீட்டினாள்...

அது பாண்டியனின் அலைப்பேசி... அவன் அதைச் சார்ஜரில் போட்டு விட்டு எடுக்காமல் வெளியில் சென்று விட்டான்... குமாரியும் அவனுடன் வெளியில் சென்றிருந்தார்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைக்கவும் அதை எடுத்து பேசிய முத்துப் பேச்சி பேசி முடித்து அதை அணைக்கப் போகும் போது அதன் திரையில் ஒளிர்ந்த மகளின் புகைப்படத்தைக் கண்டு மகிழ்ந்து போனாள்... பொங்கல் அன்று அவள் பட்டுப்பாவாடை கட்டியிருந்த போது எடுத்த புகைப்படம் தான் அது...

கொள்ளை அழகுடன் இருந்த மகளைப் பார்க்கும் ஆர்வத்தில் அதில் இருந்த 'கேலரி'க்குள் நுழைந்து அங்கிருந்த புகைப்படங்களைப் பார்வையிட்டாள்... மகளின் புகைப்படத்தோடு விஜய்யின் புகைப்படமும் ஒன்றிரண்டு அதில் இருந்தது...

கோவிலில் மகளை அவன் தூக்கி வைத்திருந்த போது எடுத்த புகைப்படம் தான் அவை எல்லாம்... மகளை ரசித்த

அவளது கண்கள் அவளையும் அறியாது தன் மனங்கவர்ந்த கள்ளவனையும் கள்ளத்தனமாய் ரசித்துப் பார்த்தது...

அடர்பச்சை நிற பருத்தி சட்டையும், பருத்தி வேட்டியும் அணிந்து விளம்பரத்தில் வரும் ஆணழகன் போல் கம்பீரமாக இருந்தவனைத் தனது விழிகளில் உள்வாங்கி இதயத்தில் சேமித்துக் கொண்டாள் பத்திரமாக...

வேட்டி, சட்டை அவனுக்குத் தனி அழகை கொடுத்திருந்தது... அதிலும் ஒற்றைக் கையில் மகளைத் தூக்கி கொண்டு அவன் நின்றிருந்த கம்பீரம் அவளது மனதினை பெரிதும் கவர்ந்தது...

அடுத்தப் புகைப்படத்தைப் பார்த்தவள் அப்படியே இனிமையாக அதிர்ந்து போனாள்... அது அவள், அவன் மற்றும் கயல்விழி மூவரும் இணைந்து நின்ற புகைப்படம்... சாமி கும்பிடும் போது அவர்களுக்குத் தெரியாமல் பாண்டியன் எடுத்திருக்கிறான் போலும்...

இதை எடுத்திருக்கிறான் என்றால் அவனது மனதில் சிறு சந்தேகம் தோன்றி விட்டது என்று தானே அர்த்தம்... அந்தச் சந்தேகத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும் என்று நினைத்தவள் இன்றே நண்பனிடம் அதைப் பற்றிப் பேசிவிட நினைத்தாள்... அதாவது விஜய்க்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று...

மூளையில் அது ஓடி கொண்டிருந்தாலும் அவளது கை அந்தப் புகைப்படத்தை வருடி கொடுக்கத் தவறவில்லை...

விஜய்யின் கையில் கயல்விழி பாந்தமாய் அடங்கியிருக்க, முத்துபேச்சி அவனைத் திரும்பி பார்க்க, அதே நேரம் அவனும் அவளைப் பார்க்க என்று அத்தனை அழகாய் ஒரு கவிதை போல் இருந்தது அந்தப் புகைப்படம்...

கணவன், மனைவி, குழந்தை என்று பார்ப்பதற்கு ஒரு குடும்பம் இருந்த அந்தப் புகைப்படத்தைக் கண்டதும் அவளையும் அறியாமல் ஒரு கேவல் எழுந்தது அவளிடம் இருந்து...

'இப்படிச் சந்தோசமாய் இருந்திருக்க வேண்டிய என் குடும்பத்தை நானே சிதறியடித்து விட்டேனே...' என்று மனதுக்குள் ஓலமிட்டு கதறி துடித்தாள்...

சிறிது நேரம் அதிலேயே உழன்றவள் முயன்று மனதை தேற்றிக் கொண்டு அடுத்தடுத்த புகைப்படங்களை வரிசையாகப் பார்த்துக் கொண்டு வரும் போது தான் அந்தக் காணொளியை காண நேர்ந்தது... அதைக் கண்டதும் அவளது உடலும், மனமும் ஒருசேர நடுங்கியது...

மனதில் என்றுமில்லாத அச்சம் முளைக்க அடுத்த நொடி தாமதிக்காது விஜய்யை அழைத்து விட்டாள்... அவன் ஒருவனால் மட்டும் தான் தனக்கு உதவ முடியும் என்று எண்ணினாள் போலும்...

"இதில் என்னயிருக்கு...?" அவன் புரியாது அவளைப் பார்த்து கேட்டான்...

"அந்த வீடியோவை போட்டு பார் சாமி..." என்றவள் குரல் நடுங்கியது...

அவள் சொன்னது போல் அதைப் போட்டு பார்த்தவனின் முகம் இறுகி போனது கற்பாறையாய்...

அந்தச் சந்தோஷ் விபத்தை ஏற்படுத்திய போது பாண்டியனின் அலைப்பேசியில் பதிவான காட்சிகள் தான் அவை... இதைத் தானே அவனும் ஆதாரமாக நீதிமன்றத்தில் கொடுத்திருந்தான்... அதைச் சாமர்த்தியமாக மாற்றியமைத்து சந்தோஷை வெளியில் எடுத்துவிட்டானே அவனது தகப்பன்...

அந்தக் கயவர்களை ஒன்றும் செய்ய முடியாதபடி இருக்கும் தனது நிலையை அறவே வெறுத்தான் அவன்...

"உனக்குக் கொடுத்த உறுதிமொழியை என்னால் காப்பாத்த முடியாமல் போயிருச்சுப் பேச்சி... இப்போ இவன் நிரபராதின்னு தீர்ப்பு வந்து வெளியில் வந்துட்டான்..." என்று மனம் குமுறியபடி அவன் கூற...

அதைக் கேட்டு அவளது உள்ளம் இன்னமும் நடுநடுங்கி போனது...

அப்போது தான் ஞாபகம் வந்தவனாய் விஜய், "இதுக்கும் கயலை தத்து கொடுப்பதற்கும் என்ன சம்பந்தம் பேச்சி...?"

"அந்தக் காரை கவனிச்சியா சாமி..." என்று நடுங்கும் குரலில் அவள் கேட்க...

"ஆமாம்... வெளிநாட்டுக் கார்... சில கோடி ரூபாய் விலை பெறும்... பணம் இருக்கு இல்லையா அதான் பணத்தை எதில் போடுவதுன்னு தெரியவில்லை போலும்..." எரிச்சலுடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"அந்தக் கார்ல தான் சாமி அன்னைக்கு என்னைக் கடத்திட்டு போனாங்க...?" கண்களில் அச்சத்தைத் தேக்கி கொண்டு சொன்னவளை கண்டு,

"நீ என்ன சொல்ற...?" என்று கண்கள் இடுங்க பார்த்தான் அவன்...

"இவங்க தான் என்னைய கடத்திட்டுப் போனது... இந்தக் காரை எனக்கு நல்லா ஞாபகமிருக்கு..."

அதைக் கேட்டு அவனது கண்கள் கோபத்தில் சிவந்தது... கை முஷ்டிகள் ஆத்திரத்தில் இறுகியது...

இது போன்ற வெளிநாட்டுக் கார்கள் ஒன்றிரண்டு தான் இந்தச் சென்னை நகரத்தில் இருக்கிறது... அன்று முத்துபேச்சியைக் கடத்தியது சந்தோஷின் கார் தான் என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்றாலும், அன்று அந்தச் சந்தோஷின் தவறை சுட்டிக்காட்டி முத்துபேச்சி அடித்த செயலானது உறுதிப்படுத்தியது இந்தக் கடத்தலை செய்தது சந்தோஷ் தான் என்று...

"தப்பு மேல தப்பு செஞ்சிட்டு அந்தத் தவறுக்காக அவன் பழிவாங்க வேற செய்வானா...?" என்று ஆத்திரத்தில் பல்லை கடித்தான் விஜய்...

அவனது உயிரின் மீது கை வைத்தால் அவன் சும்மாயிருப்பானா...? அவனைக் கொன்றுவிடும் வெறி எழுந்தது அவனுள்...

"இதுக்கு எல்லாமா நீ பயப்படுவது பேச்சி... நீ பயப்படத் தேவையே இல்லை... இவனை மாதிரி அயோக்கியன்களை வேறு மாதிரி தான் டீல் பண்ணணும்..." என்றவன் அதற்கான திட்டத்தை அப்போதே மனதினுள் வகுக்க ஆரம்பித்தான்...

"உனக்குத் தெரியாது சாமி... அந்த நாயி என்னைத் தொட்டப்போ என் உசிரு எங்கையில் இல்லை... எனக்கு ஏதாவது ஒண்ணு ஆகி செத்து போயிருவேனோன்னு மனசு கலங்கி போச்சு... அந்த நொடி எனக்கு யாரு முகமும் ஞாபகத்தில் வரலை... என் பொண்ணு முகம் மட்டும் தான் ஞாபகத்தில் இருந்தது... நான் இல்லாம அவ என்ன செய்வாளோன்னு தான் என் மனசு பதறுச்சு..."

அவள் சொல்ல சொல்ல அவனது மனம் கலங்கி கண்களும் கலங்கி போனது... அந்தக் கணம் அந்தச் சந்தோஷை கதற கதற உயிரோடு சுட்டு கொல்ல வேண்டும் என்ற ஆவேசம் அவனது மனதில் எழுந்தது...

அதே சமயம் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தவளை தன்னுடன் சேர்த்து அணைத்து ஆறுதல் கூற வேண்டும் என்று அவனது உள்ளம் பரபரத்தது... ஆனால் அதைச் செய்ய முடியாமல் அழும் அவளை வெறுமனே பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தான்...

அதை உணராத அவளோ மேலே பேசி கொண்டே போனாள்...

"நான் தைரியமான பொண்ணு தான் சாமி... ஆனா என் மகள்ன்னு வர்றப்போ நான் சராசரி அம்மா தான்... என்னை நம்பி பொறப்பு எடுத்துக்கிற ஜீவனை நான் எப்படிச் சாமி நிர்கதியா விட்டுட்டு போக முடியும்... எனக்கு என்னமோ மனசுக்கு ரொம்பப் பயமாயிருக்கு சாமி... அவன் காலை சுத்துன பாம்போன்னு என் மனசு கிடந்து அடிச்சிக்குது...

அதனால் தான் கயலை உனக்குத் தத்து கொடுத்துரலாம்ன்னு இருக்கேன்... நீன்னா அவளைப் பத்திரமா பார்த்துக்குவ சாமி... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றவளை இயலாமையுடன் பார்த்தவன்,

"கயலை மட்டுமில்லை பேச்சி, உன்னையும் சேர்த்து நான் பார்த்துக்க மாட்டேனா...?" ஏக்கத்துடன் வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

அதில் அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"உன்னை என் மனைவியா, கயலை என் பொண்ணா நான் பத்திரமா பார்த்துக்குவேன் பேச்சி... ப்ளீஸ் பேச்சி... நம்ம கல்யாணத்துக்குச் சரின்னு சொல்லு..."

அதில் அதிர்ந்து போனவள் மனதை கல்லாக்கி கொண்டு, "உன் கிட்ட ஏற்கெனவே சொல்லியிருக்கேன் சாமி... நீ இந்த மாதிரி என் கிட்ட காதல், கல்யாணம்ன்னு ஏடாகூடமா பேச கூடாதுன்னு... அதை விட நான் இப்போ வேறு ஒருத்தரோட பொஞ்சாதி... அதையும் நீ ஞாபகத்தில் வச்சு பேசு சாமி..."

"இப்படிப் பேசி பேசியே என் வாயை அடைக்கிறியே பேச்சி..." என்று எப்போதும் போல் அவளிடம் பேச முடியாது ஆயாசம் அடைந்தவன்,

"சரி உன் பேச்சுக்கே வர்றேன்... நீ வேறு ஒருத்தன் மனைவியாவே இருந்துட்டு போ... ஆனால் இப்போ அவன் உயிரோட இல்லையே... விதவைங்க மறுமணம் செய்திருக்கிறது இல்லையா... அது போல் நாம கல்யாணம் பண்ணிக்கலாம்..."

முயன்று பொறுமையைக் கடைப்பிடித்துச் சிறு குழந்தைக்கு எடுத்து சொல்வது போல் அவன் நிதானமாக அவளுக்குப் புரிய வைத்தான்...

"அதுக்கு எனக்கு விருப்பமில்லை சாமி... நான் இப்படியே இருந்துட்டு போறேன்..."

அவளது பிடிவாதத்தைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"உன் மனசில் நான் மட்டும் தான் இருக்கேன்னு எனக்குத் தெரியும்..." என்று அவளைக் கூர்மையாய் அளவிட்டவாறு அவன் சொல்ல...

அவன் சொன்னதைக் கேட்டு அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"அதே போல் என் மனசில் நீ மட்டும் தான் இருக்கேன்னும் உனக்குத் தெரியும்... நாம ரெண்டு பேரும் எந்தளவுக்கு ஒருத்தருக்கு ஒருத்தர் லவ் பண்றோம்ன்னு நம்ம மனசுக்கு தெரியும்... அப்படி இருந்தும் இந்தப் பிரிவு எதுக்குடி...? எதுக்கு இத்தனை பிடிவாதம் உனக்கு...? என் காதலை ஏத்துக்க முடியாத அளவுக்கு அப்படி என் கிட்ட என்ன குறையிருக்கு...?"

அவன் அப்படிக் கேட்டதில் அவள் உள்ளுக்குள் நொறுங்கி போய்விட்டாள்...

'நான் தான் குறை சாமி... என் கிட்ட தான் எல்லாக் குறையும் இருக்கு...' மனதுக்குள் கதறியழுதவள் வெளியில் ஒன்றும் பேசாது அவனை வெறித்துப் பார்த்தாள்...

"சொல்லுடி... பதில் சொல்லு... ஆறு வருசமா பைத்தியக்காரன் மாதிரி ஊர் ஊரா சுத்திட்டு இப்போ இங்கே மாத்தி வந்திருக்கேன்னா அதுக்குக் காரணம் உன்னை மறக்க முடியாதது தான்... அது ஏன் உனக்குப் புரிய மாட்டேங்குது..."

கோபமாய்ப் பேசியவனின் வார்த்தைகளில் மறைந்திருந்த அவனது ஆழமான காதல் அவளைச் சுகமாய்த் தாலாட்டியது... இத்தகைய அதீத காதலை அனுபவிக்க முடியாது பாவியாகி போனாளே அவள்... தன்னிரக்கம் மனதை தாக்க அவளது கண்களில் கண்ணீர் துளிர்க்க ஆரம்பித்தது...

முயன்று கண்ணீரை அவனுக்குக் காட்டாது உள்ளிழுத்து கொண்டவள் அவனை நேருக்கு நேராய் சந்தித்து,

"நீ கயலை மறந்துட்டு பேசுற சாமி..."

அவளது வார்த்தையில் அவனது கோபம் எல்லாம் அப்படியே வடிந்து போனது... குழப்பத்துடன் தனது நெற்றியை நீவி விட்டுக் கொண்டான்...

"அது தானே எனக்கும் புரிய மாட்டேங்குது..."

ஏனெனில் முத்துபேச்சியை உரித்து வைத்தார் போன்று இருக்கும் கயல்விழி அவனுக்குப் பெருத்த ஒரு கேள்விக்குறி தான்... அந்த இடத்தில் அவனது மனம் தடுமாறித்தான் போனது... நிச்சயம் அது முத்துபேச்சியைச் சந்தேகப்பட்டு இல்லை... கயல்விழி யாரென்ற குழப்பத்தில்...

அவனது காதலும் பொய்யில்லை... அவளது காதலும் பொய்யில்லை... அதை அவள் வாய்மொழியாகச் சொல்லாவிட்டாலும் அவளது ஒவ்வொரு அசைவிலும், பார்வையிலும் அவன் அதை உணர்ந்திருக்கிறான்... இது எல்லாம் மெய் என்றால் கயல்விழியின் பிறப்பு எப்படிச் சாத்தியமாகும்...

‘அப்படி என்றால்...???’ அதை நினைக்கும் போது அவனது மனம் நடுங்கி போனது...

"பேச்சி... நீ என்னிடம் சொன்னது போல்..." மேலே கேட்க முடியாது துக்கம் அவனது தொண்டையை அடைத்தது...

அவனது தடுமாற்றம் கண்டு அவளுள் பெருத்த நிம்மதி ஏற்பட்டது... அவனது காதலை தாங்க முடியாது தவித்தவள் அவனது இந்தத் தடுமாற்றத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள்...

"ஆமாஞ்சாமி... நான் தான் சொன்னேனே... என் மனசில் அப்படி ஒரு ஆசை எல்லாம் கிடையாதுன்னு... நீ தான் என்னைய நம்பலை... இப்பவும் நம்ப மாட்டேங்கிற... நான்

சொன்ன மாதிரி என் மனசுக்கு பிடிச்சவரை சந்திச்சேன்... அவரையே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... கயலும் பொறந்தா... அப்புறம் தான் அவர் ஆக்சிடெண்ட்ல இறந்து போயிட்டாரு..."

சரளமாக எந்தவித பிசிறும் இல்லாமல் சொன்னவளை வெறித்துப் பார்த்தவனின் மனம் கொஞ்சம் கொஞ்சமாய் மரித்துக் கொண்டு இருந்தது... அதை அறிந்தவளாய், கையாலாகாதவளாய் அவள் அவனை வெற்றுப் பார்வை பார்த்து கொண்டிருந்தாள்...

"ஏன் பேச்சி உனக்கு என்னைய பிடிக்கலை...? நான் அழகாயில்லையா, படிக்கலையா, நல்ல வேலையில் இல்லையா...? எதனால் என்னை உனக்குப் பிடிக்காம போச்சு...?"

அதைக் கேட்கும் போதே அவனது கண்கள் கலங்கியது... அவன் போட்டிருந்த காக்கி உடுப்பிற்கு எதிர்ப்பதமாய் அவனது மனம் கலங்கி தவித்தது காதல் தோல்வியில்...

"உனக்கு என்ன சாமி குறை... எல்லாமே அளவுக்கு அதிகமா இருக்கு..." அவசரமாய் இடைமறித்துச் சொன்னவளை கண்டு அவனது உதடுகளில் விரக்தி புன்னகை ஒன்று உதிர்ந்தது...

"அது எல்லாத்தையும் விட மனசுன்னு ஒண்ணு இருக்கே சாமி... அதுக்குப் பிடிக்கணுமே..."

"ஓ... அப்போ உன்னவரை உனக்கு ரொம்பப் பிடிக்குமோ...?" என்று கேட்டவனைத் தனது விழிகளில் நிறைத்துக் கொண்டு மனதில் எழுந்த காதலோடு,

"ரொம்ப ரொம்பப் பிடிக்கும் சாமி... அவரைப் போல் ஒரு நல்ல மனுசனை இந்த உலகத்தில் பார்க்க முடியாது..." என்றாள் அவள்...

கணவனை நினைத்து அவளது கண்களில் வழிந்த நேசத்தில் அவனது மனம் சுக்கு நூறாய் சிதறி தான் போனது... மனதில் தாங்கொண்ணா வலி எழுந்தது...

முயன்று அதைத் தாங்கி கொண்டான் அவன்... கடந்த ஆறு வருடங்களாக அதைத் தாங்கி கொண்டிருப்பவன் தானே... இன்று என்ன புதிதாய் அதிகம் வலிக்கப் போகிறது...

"உண்மையில் உன்னவர் ரொம்ப அதிர்ஷ்டம் செஞ்சவன் தான்... அவன் மேல் நீ இத்தனை காதல் வைத்திருக்கிறாயே..."

தன்னைத் தானே அதிர்ஷ்டக்காரன் என்று சொல்லிக் கொள்ளும் காதலனை கண்டு அவளது இதழ்களில் புன்னகை பூத்தது... அதே சமயம் தனது காதலை அவனிடத்தில் இருந்து மறைக்க வேண்டிய நிலையில் இருக்கும் தனது தூரதிர்ஷ்டத்தை எண்ணி அவளது மனதுக்குள் அத்தனை வேதனையாய் இருந்தது...

"சாமி இந்தப் பேச்சை விடு..." ஏனோ இந்தக் காதலை பற்றிப் பேச பேச இருவருக்குமே துயரம் மட்டுமே மிஞ்சும் என்ற அர்த்தத்தில் அவள் அதைத் தவிர்க்க எண்ணினாள்...

"நான் கேட்டபடி கயலை தத்து எடுத்துக்கோ சாமி..."

அவளது கணவன் மீதான காதலை அவளது கண்களில் பார்க்கத்தானே செய்கிறான்... அதே போல் மகள் மீதான பாசத்தையும் அவன் பார்த்திருக்கிறான் தானே... அப்படிப்பட்ட அவளது காதல் கணவன் கொடுத்த காதல் பரிசை அவனிடத்தில் தாரை வார்த்துக் கொடுப்பது என்றால் அவளது மனம் எத்தனை வேதனைப்படும் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்... அதனால்,

"அதுக்கு எந்தத் தேவையும் இல்லை பேச்சி... உனக்கு எந்த ஆபத்தும் நெருங்காமல் நான் பார்த்துக்கிறேன்... நீ உன் மகளோட சந்தோசமாய் இரு..."

"அதில்லை சாமி..."

அன்றைய சம்பவத்தின் தாக்கத்தில் கண்களில் பயத்துடன் அவள் அவனைப் பார்த்தாள்...

"நான் தான் பார்த்துக்கிறேன்னு சொல்றேனே... அப்புறம் என்ன... தைரியமாயிரு..." என்று அவளைத் தேற்றியவன் அவளிடம் விடைப்பெற்று அவளது வீட்டில் இருந்து வெளியில் வந்தான்...

இருவரது மனமும் தங்களது நிறைவேறா காதலை நினைத்து கனத்துப் போயிருந்தது...

****

அடுத்து வந்த நாட்களில் விஜய் சந்தோஷியும், சுந்தரலிங்கத்தையும் தொடர்ந்து கவனித்ததில் அவனுக்குப் பல விசயங்கள் சாதகமாக இருந்தது... அதை வைத்து அவனது மனதில் பல திட்டங்கள் எழுந்தது...

அதைச் செயலாற்றுவதற்காக மறுநாளே தனது மேலதிகாரியை சந்தித்துத் தனது திட்டத்திற்கு விஜய் அனுமதி கேட்டான்... நாட்டில் இருக்கும் சில புல்லுருவிகளை இது போல் களை எடுப்பது அவர்களது காவல்துறையின் வழக்கம் என்பதால் அவரும் அதற்கு உடனே சம்மதம் தெரிவித்துவிட்டார்...

அவருடைய சம்மதம் கிடைத்ததும் விஜய்யின் மனம் அத்தனை சந்தோஷமாய் இருந்தது... பின்னே தன்னவளின் மீது கை வைத்தவனை இன்னமும் உயிரோடு விட்டு வைத்திருப்பது அவனுக்கு அல்லவா இழுக்கு... அப்படிச் சந்தோஷை சும்மாவிட்டால் அவன் ஆண் என்பதற்கே அர்த்தம் இல்லையே...

ஆனால் விஜய் ஒன்றை செயலாற்ற முனைவதற்குள் சுந்தரலிங்கம் அதை விட வேகமாய்ப் பலவற்றைச் செயலாற்றுவார் என்பதை அவன் அறியாது போனது தான் பரிதாபம்...

அவன் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவன் அதனால் அவனது செயல்களுக்கு அவன் மீனம், மேஷம் பார்த்து நல்ல நாள் குறிக்க வேண்டும்... ஆனால் சட்டத்திற்குக் கட்டுப்படாத சுந்தரலிங்கத்திற்கு எல்லா நாளுமே நல்ல நாள் தான்...

****

முத்துபேச்சி வழக்கம் போல் செல்வநாதனிடம் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள்... ஆனால் அவரிடம் தனக்கு வந்த ஆபத்து பற்றியோ, அந்த விபத்து பற்றியோ அவள் மூச்சு விடவில்லை... ஏனெனில் தனக்காக ஏற்கெனவே கட்சி தலைமையைப் பகைத்துக் கொண்டிருக்கும் அவருக்கு மேலும் மேலும் சங்கடத்தைக் கொடுக்க அவள் விரும்பவில்லை...

"முத்து... சட்டமன்ற தேர்தல் நெருங்கிட்டு வருதேம்மா... நீ தொகுதியில் நிக்கப் போறியா இல்லையா...?" என்று செல்வநாதன் அவளைப் பார்த்து கேட்டார்...

அவளைக் கண்டு அவருக்குப் பெரும் கவலையாக இருந்தது...

"எனக்கு யோசிக்கணும் ஐயா..."

ஏனோ இப்போது எல்லாம் அவளால் முன்பு போல் தைரியமாகச் செயல்பட முடிவதில்லை... எதைச் செய்தாலும் அவளின் கண்முன் மகளின் மலர் முகம் தான் நினைவில் எழுந்து அவளது ஆவேசத்தைச் சற்றுக் கட்டுப்படுத்துகிறது... அதனால் தான் அவள் சூடு கண்ட பூனையின் ஒதுக்கத்தோடு ஒதுங்கி செல்கிறாள்...

"சீக்கிரம் யோசிச்சு சொல்லும்மா... இதோடு உன் தொகுதியில் நாடளுமன்ற தேர்தலும் வருது... அதுக்கு நீ நின்னா நேரே டெல்லிக்குப் போயிடலாம்... அதுவும் உன் எதிர்கால அரசியல் வாழ்க்கைக்கு நல்லது தான்..."

அவர் அறிவுரை கூறவும் அவள் யோசிப்பதாய் கூறிவிட்டு அமைதியாகி போனாள்... செல்வநாதனுக்கு அவளின் நடத்தை வித்தியாசமாக இருந்தது... ஆனாலும் அவளிடத்தில் எதுவும் கேட்காது அமைதி காத்தார்...

****

அன்று காலை கூட்டுறவு அங்காடியில் பொருட்கள் வாங்குவதற்காக முத்துபேச்சியும், பாண்டியனும் சேர்ந்து சென்றிருந்தனர்... கயல்விழி உடல்நலம் சரியில்லை என்று பள்ளிக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தாள்... குமாரி அவளுடன் துணைக்கு இருந்தார்...

கூட்டுறவு அங்காடியில் பொருட்களை வாங்கிச் சென்றவர்கள் எல்லோரும் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டு சென்றனர் எரிச்சலுடன்... அங்கு ஊற்றப்படும் மண்ணெண்ணெய் அளவு குறித்த அளவை விடச் சற்று குறைவாகவே இருந்தது... மற்ற பொருட்களின் எடையும் அவ்வாறே...

யாரும் அதைத் தட்டி கேட்காமல் தங்களுக்குள் ஆற்றாமையில் புலம்பி கொண்டு சென்றார்கள்... அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்...

ஆனால் நம் முத்துபேச்சியால் அது போல் சும்மா போக முடியவில்லை...

"அண்ணாத்தை... அளவு குறையற மாதிரியிருக்கு... சரியா நெறுத்து போடு..." என்று தராசில் வைக்கப்பட்டிருந்த சீனியை அவள் சுட்டிக்காட்ட,

"அதெல்லாம் சரியாத்தான் இருக்கும்..." என்று அலட்சியமாய்க் கூறியவன் சீனியை அவளது பையில் போட்டுவிட்டு,

"இந்தா நகரும்மே... அடுத்தவங்க வாங்க வேணாமா...?" என்று குரலை உயர்த்தினான்...

அவன் சொன்னதும் அப்படி நகர்ந்தால் அவள் முத்துபேச்சி இல்லையே... சட்டென்று தராசு தட்டினை தூக்கி அடியில் பார்த்தாள்... அதில் நூறு கிராம் எடை கொண்ட கல் காந்தம் போல் ஒட்டப்பட்டு இருந்தது...

"இதுக்கு என்னா சொல்ற நீ...?" என்று கோபமாய்க் கேட்டவளை அவன் இன்னமும் அலட்சியமாய்ப் பார்த்தான்...

'என் சர்வீசில் உன்னைப் போல் எத்தனை பேரை பார்த்திருப்பேன்...' என்பது போல்...

"செய்றது மொள்ளமாறித்தனம்... இதுல உனக்கு இவ்வளவு சவுண்ட்டு வேறயா..."

அவள் தன் குரலை உயர்த்தியதும் அங்கிருந்த மற்ற பொது மக்களுக்கும் சற்றுத் தைரியம் வரப் பெற்று அவனைத் தட்டி கேட்க, கொஞ்ச நேரத்தில் அந்த இடம் கலவர பூமியாகி போனது...

கூட்டுறவு ஊழியனின் மோசடிக்கு நடவடிக்கை எடுக்கக் கோரி அனைவரும் சாலை மறியலில் ஈடுபட்டனர்...

அதே நேரம் முத்துபேச்சியின் வீட்டின் கதவை தட்டினான் ஒருத்தன்... யாராக இருக்கும் என்ற யோசனையுடன் கதவை திறந்தார் குமாரி...

ஏனெனில் அந்த அடுக்குமாடி குடியிருப்பு எப்போதுமே கலகலப்புடன் இருப்பதால் பயம் என்பது சற்றும் கிடையாது... அதனால் தான் அவர் யார் எவர் என்று கேள்வி கேட்காமல் கதவை திறந்தது...

அவர் கதவை திறந்ததும் வேகமாய் உள்ளே நுழைந்தவன் உடனே கதவை சாத்தி தாளிட்டான்... அவனது செயலை கண்டு முதலில் திகைத்து நின்ற குமாரி பின் சுதாரித்துக் கொண்டு,

"யாருடா நீ...?" என்று கேட்டு அவனைச் சராமாரியாக அடிக்கத் துவங்கினார்...

அவரது ஆக்ரோசத்தைக் கண்டு ஒரு கணம் தடுமாறியவன் மறு கணம் சற்றும் தாமதிக்காமல் தனது கையில் இருந்த கத்தியை எடுத்து அவரது கழுத்தில் வேகமாய்ப் பாய்ச்சினான்... அதில் அந்த மூதாட்டி உயிர் துடிக்க அப்படியே சரிந்தார்...

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கயல்விழி பயத்துடன் சுவற்றுடன் சுவராகப் பல்லி போல் ஒட்டி

கொண்டு நின்றிருந்தாள்...

அவன் இங்கு வந்ததன் நோக்கமே இந்தச் சிறுமியை கொல்வதற்காகத் தான்... ஆனால் இடையில் தேவையில்லாமல் குமாரியை கொல்ல வேண்டியதாய் போயிற்று...

கண்களில் கொடூரத்துடன் தன்னை நோக்கி நெருங்கி கொண்டிருந்தவனைக் கண்டு, "வேண்டாம் அங்கிள்..." என்று பயத்தில் அலறினாள் அவள்...

சிறுமியின் கதறல் அவனது காதில் விழவில்லையோ... கொலை பாதகத்தைத் தினமும் செய்வதால் இரத்தத்தைப் பார்த்து பார்த்து அவனது மனம் கல்லாகி போயிருந்ததோ... அதனால் அவன் அவளது கதறலை கொஞ்சமும் பொருட்படுத்தாது நொடியில் அவளை நெருங்கி வந்து அவளது வாயில் கை வைத்து பொத்தியவன், அடுத்த நொடி ஒரு கோழியை அறுப்பது போல் சின்னவளின் கழுத்தை அறுத்து போட்டு விட்டு, கொஞ்சமும் பதறாமல் வீட்டிலிருந்த அலமாரியை உடைத்து அதில் இருந்த கொஞ்ச பணத்தையும், நகைகளையும் எடுத்துக் கொண்டு நிதானமாகக் கதவை திறந்து வெளியில் வந்தவன் மீண்டும் அந்தக் கதவை நிதானமாக மூடிவிட்டு சென்றுவிட்டான்...

அரை மணி நேரத்தில் சாலையில் போராட்டம் முடிந்து முத்துபேச்சியும், பாண்டியனும் வீட்டிற்குக் கிளம்பிய அதே நேரம் தான் இந்தக் கொடுமையும் அரங்கேறியிருந்தது...

இருவரும் வீட்டின் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்ததும் அவர்களின் கண்களில் அந்தக் கொடூர காட்சி விழுந்து அதிச்சியில் அப்படியே ஒரு நொடி சிலையாய் சமைந்து நின்றனர்...

மறு நொடி, "கயல், அம்மா, ஆத்தா..."

முத்துபேச்சி, பாண்டியன் இருவரின் அலறலும் அந்தக் குடியிருப்பு பகுதியை அதிரச் செய்தது... அடுத்தப்

பதினைந்தாவது நிமிடம் கயல்விழி, குமாரி இருவரும் ஆம்புலன்ஸில் ஏற்றப்பட்டுக் கூடவே முத்துபேச்சியும், பாண்டியனும் உடன் ஏறினர்...

இரத்த வெள்ளத்தில் கிடந்த அன்னையையும், மகளையும் காண காண முத்துபேச்சிக்கு அழுகை வெடித்துக் கொண்டு கிளம்பியது... நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதவளை,

"அழாத புள்ள... ஒண்ணுமாகாது..." என்று தேற்றிய பாண்டியனின் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தது நிற்காமல்...

இதயமே வெடித்து விடுவது போல் கதறியழுத முத்துபேச்சிக்கு அப்போது தான் அந்த வலி எழுந்தது... அவளுடைய பின்னந்தலையில் யாரோ சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போல் அப்படி ஒரு வலி தோன்றியது...

குற்றுயிராய் கிடக்கும் தாய் மற்றும் மகளின் நிலை கண்டு மனதில் எழுந்த வலியை விட அது ஒன்றும் அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை... பல்லை கடித்துக் கொண்டு அந்த வலியை பொறுத்து கொண்டவள் கவனம் முழுவதும் இரத்தம் தோய்ந்திருந்த மகளின் பூ முகத்திலேயே நிலைத்திருந்தது...

மருத்துவமனை கொண்டு வருவதற்குள் குமாரி தனது உயிரை விட்டிருந்தார்... முதுமையாலும், மதுவினாலும் அவரது உடலில் சக்தி இல்லாது போக அவரது உயிரை எமன் அவசர அவசரமாகப் பறித்திருந்தான்...

பெரிதாகப் பாசத்தை ஊட்டி அவளைப் பேணாத போதும் அன்னை என்ற ஒருத்தி துணை இருந்து இத்தனை நாள் அவளது கற்பை காத்து வந்தார்... இப்போது அந்தத் துணை இல்லாது போகவும் முத்துபேச்சியின் அடிவயிற்றில் இருந்து,

"அம்மா..." என்ற கதறல் தாயின் மடி தேடும் கன்று குட்டியாய் அவஸ்தையுடன் எழுந்தது...

மகளின் பாசமான அந்த அழைப்பை கேட்க அந்தத் தாய் உயிருடன் இல்லை...

அன்னையின் உடலை தேடி உடனே அவர்கள் இருவரும் போக முடியாதபடி கயல்விழியின் நிலை மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தது... அதனால் அவள் பின்னே இருவரும் ஓடினர்...

கயல்விழியின் உடலில் இருந்த இரத்தம் முழுவதும் வெளியேறி இருந்ததால் அவளுக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது...

"உடனே ஏபி நெகட்டிவ் ப்ளட்டுக்கு ஏற்பாடு பண்ணுங்க... உங்க ப்ரெண்ட்ஸ் சர்க்கிள்ல கேட்டு பாருங்க... நாங்களும் ப்ளட் பேங்க்கில் கேட்டு பார்க்கிறோம்..."

செவிலிப்பெண் அப்படிக் கூறிவிட்டுச் சென்றதும் பாண்டியன் என்ன செய்வது என்று தெரியாது முழிக்க, முத்துபேச்சியோ சிறிதும் யோசிக்காமல்,

"பாண்டி... சாமிக்கு ஃபோன் பண்ணி உடனே வர சொல்லு..." என்றாள் கண்களில் கண்ணீர் வழிய...

என்ன, ஏது என்று எல்லாம் யோசிக்க நேரமில்லாது அவன் உடனே விஜய்க்கு அழைத்து விசயத்தைக் கூறினான்...

அப்போது விஜய் வேலையில் தான் இருந்தான்... இரண்டு மணி நேரம் அனுமதி பெற்றுக் கொண்டு அவன் அடுத்த இருபது நிமிடங்களில் மருத்துவமனைக்கு ஓடி வந்தான்...

"சாமி... உன் ரத்தத்தைக் கொடுத்து எம் பொண்ணைக் காப்பாத்து சாமி..." என்று இரு கரம் கூப்பிக் கண்ணீர் வழிய தன்னிடம் வேண்டியவளிடம் என்ன நடந்தது என்று கேட்க கூட முடியாமல் அவசர நிலையை உணர்ந்தவனாய் அவன் நேரே கயல்விழிக்கு இரத்தம் கொடுக்கச் சென்றான்...

அவன் போவதை கண்ணீர் மல்க பார்த்து கொண்டிருந்தாள் முத்துபேச்சி... தனது இரத்தத்தைப்

பாலாக்கி கொடுத்த தாய் என்ற உறவாக அவள் இருந்த போதும் இந்தக் கணம் அவளால் அவளது மகளது உயிரை காக்க முடியவில்லையே...

மனம் நிறைய வேதனையுடன் அந்த ஐசியூ வாயிலில் நின்று கொண்டிருந்தாள் அவள்... அந்நேரம் மீண்டும் அவளது தலையில் அப்படி ஒரு வலி எழுந்தது... கைகளால் தலையை அழுத்தி பிடித்துக் கொண்டு அந்த வலியை தாங்கி கொண்டாள்... மனதில் மகளைப் பற்றின கவலை அழுத்தியதில் அவள் தன்னைக் கவனிக்க மறந்து போனாள்...

சிறிது நேரத்தில் இரத்தம் கொடுத்துவிட்டு விஜய் அங்கு வந்தான்... அழுது கொண்டிருந்த இருவரிடமும் எதையும் கேட்க மனமில்லாது அமைதியாகப் பாண்டியன் அருகில் அமர்ந்தான்...

உள்ளே சென்று பார்த்ததில் கயல்விழி நிலை கண்டு அவன் நெஞ்சு பதறித் துடித்தது... சின்னஞ்சிறு பெண்ணின் உயிரை பறிக்கும் அளவுக்கு என்ன நடந்தது என்று தெரியாது அவன் மனம் பரிதவித்தது... அதற்குக் காரணமானவன் மீது கொலைவெறி எழுந்தது அவனுள்...

அப்போது செலிவிப்பெண் ஒரு விண்ணப்ப படிவத்தைக் கையில் கொண்டு வந்து அவனிடம் நீட்டி அதில் நோயாளியின் விபரத்தை எழுதி பூர்த்திச் செய்து கொடுக்கச் சொன்னார்...

கயல்விழியின் பெயர், அன்னை பெயர் எல்லாம் சரியாக எழுதியவனின் கை, தந்தை பெயர் என்றிருந்த இடத்தில் மட்டும் அப்படியே தேங்கி நின்றது...

"பாண்டி... கயலோட அப்பா பேரு என்ன...?"

அருகில் அமர்ந்திருந்த பாண்டியனிடம் மெதுவே கேட்டான் விஜய்... பாண்டியனோ சற்றுத் தள்ளியிருந்த முத்துபேச்சியைக் கேள்வியாய் பார்த்தான்...

"பேச்சி..." என்று விஜய் அவளை அழைக்க, அவள் என்ன என்பது போல் அவனைப் பார்த்தாள்...

"கயலோட அப்பா பேரு..." என்று இழுத்தவனை எந்தவித உணர்வும் இல்லாது பார்த்தாள் அவள்... என்னவென்று இதற்குப் பதில் சொல்வாள்...

"அது வேண்டாம் சாமி... விட்டிரு..." என்றாள் மனதினை மறைத்துக் கொண்டு...

அவ்வளவு தான் பாண்டியனுக்கு எங்கிருந்து தான் அவ்வளவு ஆவேசம் வந்ததோ...

"அவ சொல்ல மாட்டா விசய்... இப்பவும் அவ வாயை திறந்து உண்மையைச் சொல்ல மாட்டா..." என்று அவளைப் பார்த்துக் கத்தினான்...

"பாண்டி... நீ பேசாம இரு..." என்று தோழனை அதட்டினாள் அவள்...

"இனியும் என்னால பேசாம இருக்க முடியாது புள்ள..." என்றவன் அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டே விஜய்யிடம்...

"கயலோட அப்பா பேரு..." என்று சொல்லியவன் நிறுத்திவிட்டு தன் தோழியைப் பார்க்க...

அவளோ 'சொல்லாதே' என்று அவனைப் பார்வையால் கெஞ்சி கொண்டிருந்தாள்... அவளது கெஞ்சல் பாண்டியனது மனதை சிறிது அசைத்துப் பார்த்தாலும் அவளது எதிர்கால நலனை முன்னிட்டு தன் மனதினை கடினப்படுத்திக் கொண்டு விஜயிடம் திரும்பி,

"விசய்..." என்றான் தனது கணீர் குரலில் சத்தமாய்...

வாசம் நேசமாகும்...!!!

"விஜய்"

கைகள் நடுங்க தனது பெயரை அந்த விண்ணப்ப படிவத்தில் எழுதிய விஜய்யின் கண்கள் கசிந்துருகியது அவனது மனதினை போல் பாசத்தில்... இந்தக் கணம் தனது பெயரை எழுதும் போது அவன் எந்த மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியாது... இத்தனை வருடங்களில் அவன் தனது பெயரை எத்தனையோ முறை எழுதியிருக்கிறான்... ஆனால் அப்போது எல்லாம் அவன் இது போல் உணர்ந்தது இல்லை...

மனம் முழுவதும் சந்தோசத்தில் நிறைந்திருக்க, வானத்தில் பறப்பது போல் ஒருவித பரவச நிலையில் அவன் இருந்தான்...

அடுத்து நோயாளியின் பிறந்த தேதி அந்த விண்ணப்பப் படிவத்தில் கேட்டிருந்தார்கள்... அதைப் பாண்டியனிடம் கேட்டு அறிந்து கொண்டவனின் மனம் சிலவற்றை வேக வேகமாகக் கணக்கு போட்டது... எல்லா விடையும் கயல்விழி அவனது மகள் என்ற உண்மையை அப்பட்டமாய் அவனிடத்தில் பறைச்சாற்றியது...

அவன் மனதில் நிழலோவியமாய்ப் படிந்திருந்த காட்சிகள் அனைத்தும் நிஜமாய் மாறிப் போனது அந்தக் கணம்... இத்தனை வருடங்கள் கழித்து அவனது கண்ணம்மாவை அவன் இனம் கண்டு கொண்டு விட்டான்...

கனவில் மட்டும் தன்னிடம் காதலில் கசிந்துருகிய கண்ணம்மாவாய் இல்லாமல் நனவிலும் காதலில் கசிந்துருகி தனது ஊனையும், உயிரையும் அவனுக்குப் பரிசாக அளித்த முத்துபேச்சியாய் அவளை அடையாளம் கண்டு கொண்டவன் மனதில் அந்த உலகை வென்றுவிட்டது போன்று ஒரு உவகை எழுந்தது...

எந்த மகளை அவன் தத்து கேட்டானோ, அவள் அவனது சொந்த இரத்தம் என்பதை அறிந்து கொண்ட இந்த நொடி

அவனது நெஞ்சம் பெருமையில் விம்மி பூரித்தது... தந்தையான ஆண்மகனுக்கே தோன்றும் கர்வம் அவனில் தோன்றியது... எத்தனையோ உறவுகள் ஒரு ஆணை சுற்றியிருந்த போதும் தன்னில் தோன்றிய வாரிசு அவனுக்கு என்றுமே 'ஸ்பெசல்' அல்லவா...

ஆனால் அதையும் மீறி அவனது மனதில் வேதனை நிறைந்திருந்தது... ஏனெனில் இந்தச் சந்தோசத்திற்குக் காரணமான அவனது உதிரம் இப்போது அபாயக் கட்டத்தில் மருத்துவமனையில் கண் மூடி படுத்திருக்கிறாளே...

'கயலின் இந்த நிலைக்கு யார் காரணம்...?' என்று அவனது காவல்துறை மூளை விடாமல் யோசித்துக் கொண்டிருந்தது... அதே சமயம் அவன் காவல்துறை அதிகாரியாய் செயல்பட முடியாமல் அவனது இரத்த பந்தம் அவனைப் பாசத்தால் கட்டி போட்டிருந்தது...

'முதலில் கயல் கண் விழிக்கட்டும்...' என்று நினைத்து கொண்டவன் மனதை தேற்றியபடி கண்களை இறுக மூடி நாற்காலியில் சாய்ந்தான்... அவனது மனமோ மகளுக்காகக் கடவுளிடம் வேண்டி கொண்டிருந்தது இடைவிடாது...

அதே சமயம் முத்துபேச்சி அவனைத் தான் பார்த்திருந்தாள்... பாண்டியன் கயல்விழியின் தந்தை 'விஜய்' என்றதும் அவன் கோபப்பட்டுத் தன்னிடம் சண்டை போட்டு கத்துவானோ என்ற அச்சத்தில் அவனை இமைக்காது பார்த்துக் கொண்டிருக்க, அவனோ அவளைக் கண்டு கொள்ளாது கண்களை மூடி அமைதியாக இருப்பது கண்டு அவளது மனதில் நிம்மதி எழுந்த போதும், மனதின் ஒரு மூலையில் அவளையும் அறியாது ஏமாற்றம் கவிழத்தான் செய்தது...

'அப்படியே அவன் உன் கிட்ட வந்து கேட்டாலும் நீயும் உண்மையை ஒத்துக்கிட்டு அவனோட போய்ச் சந்தோசமா வாழவா போற...? போடி பைத்தியக்காரி... அந்த நினைப்பை விட்டுட்டு வேற வேலையைப் பாரு...' என்று அவளது

மனசாட்சி அவளை எள்ளி நகையாடி நிதர்சனத்தை எடுத்துரைத்து அவளை எச்சரித்தது...

நிதர்சனம் மனதில் உறைத்ததும் அவள் விஜய்யை மறந்தவளாய் தனது மகளின் மீது கவனம் செலுத்தியவளாய் அந்தக் கடவுளிடம் விண்ணப்பம் போட்டு கொண்டிருந்தாள் மகளது நலம் வேண்டி...

இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்த பாண்டியனுக்கு ஒன்றும் புரியாமல் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது...

கயல்விழியின் பிறப்புச் சான்றிதழ், பள்ளி சான்றிதழ் எல்லாவற்றிலும் அவளது தந்தையின் பெயர் விஜய் என்றே இருந்தது... தனக்குத் தெரியாமல் முத்துபேச்சி வாழ்க்கையில் வந்த விஜய் யாராக இருக்கும் என்று பாண்டியனுக்குப் பெருத்த சந்தேகமாய் இருந்தது...

அந்த நேரத்தில் அவன் இந்த விஜய்யை முத்துபேச்சியுடன் இணைத்து கொஞ்சமும் சந்தேகிக்கவில்லை... ஏனெனில் இருவருக்கும் இடையில் நல்ல நட்பு இருந்தது... ஆனால் அவர்களுக்கு இடையில் காதல் என்ற ஒன்று இருந்தது போல் தெரியவில்லை அவனுக்கு... தன்னிடம் நட்புடன் பழகுவது போல் முத்துபேச்சி விஜய்யிடமும் நட்பாகத் தான் பழகுகிறாள் என்றே அவன் நினைத்தான்...

ஆனால் இத்தனை வருடங்கள் கழித்து மீண்டும் விஜய்யை கண்ட போது தான் இருவரின் தடுமாற்றம், பார்வை பரிமாற்றம், மர்மமான பேச்சுக்கள் எல்லாம் அவனுக்குப் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது...

அதை எல்லாம் விட விஜய் அவனது வீட்டில் தன் அன்னையிடம் கயல் தன் மகள் என்று சொன்னது, பொங்கல் அன்று விஜய் கோவிலில் முத்துபேச்சியிடம் நடந்து கொண்ட முறை, தானாக எடுத்துக் கொண்ட அதிகப்படியான சலுகைகள், இதோ இப்போது சற்று முன்பு தன்னிடம் பார்வையால் 'சொல்லிவிடாதே' என்று கெஞ்சிய முத்துபேச்சியின் பயந்த தோற்றம் எல்லாம் சேர்த்து இந்த

விஜய் தான் கயல்விழியின் தந்தை என்று இப்போது முழுதாக அவன் நம்பத் துவங்கினான்...

அதைத் தான் இப்போது முத்துபேச்சி வாய் திறக்காத போதும் அவளுக்காக அவன் அப்படிச் சொன்னது... அப்படியாவது அவளது வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான்...

அது எல்லாம் பொய்யாகும் படி இருவரும் எதுவும் பேசி கொள்ளவும் இல்லை... சண்டை போடவும் இல்லை... முத்துபேச்சி தான் அழுத்தக்காரி, அவ்வளவு சீக்கிரத்தில் வாயை திறந்து உண்மையை ஒத்துக் கொள்ள மாட்டாள் என்றால், விஜய்யும் அமைதியாக இருப்பதைக் கண்டு அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது...

மீண்டும் விஜய்யை பார்த்தவன் அவன் இருந்த நிலை கண்டு அமைதியாக இருந்து விட்டான்... இப்போது அவனது கவனம் முழுவதும் கயல்விழியிடம் திரும்பியது...

அவர்கள் இருவரும் நினைத்தது போல் விஜய் ஒன்றும் அமைதியாக இல்லை... ஆத்திரத்தில் அவனது நெஞ்சம் விடாது குமுறிக் கொண்டிருந்தது... தன் மகளை, தன் இரத்தத்தைத் தனக்குத் தெரியாமல் மறைத்து வைத்ததும் இல்லாமல் இதோ இந்தக் கணம் வரை அதை ஒத்துக் கொள்ள மனமின்றி நின்று கொண்டிருக்கும் முத்துபேச்சியின் மீது அவன் கடுங்கோபத்தில் இருந்தான்...

இப்போது அவளிடம் ஏதாவது கேட்க போய் நிலைமை இன்னும் மோசமாகப் போய்விடும் என்று எண்ணி அவன் அமைதி காத்தான்... ஏனெனில் அவனுக்கு இருக்கும் கோபத்திற்கு அவன் அவளிடத்தில் கையை நீட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை... ஆனால் அப்படிக் கை நீட்டி அவளை அடிப்பதற்கு அவனது காதல் மனம் இடம் கொடுக்கவில்லை... அதற்கான சூழலும் இது இல்லை... அதனால் மௌனத்தைக் கவசமாக்கி கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான்...

"சார்..." என்ற தயக்கமான குரலில் கண்களைத் திறந்தவன் தன் முன் நின்று வணக்கம் தெரிவித்த ராமனை கண்டு அவனுள் கோபம் எழ,

"மிஸ்டர். ராமன்... நான் உங்க கிட்ட என்ன வேலை கொடுத்திருந்தேன்... நீங்க என்ன பண்ணி வச்சியிருக்கீங்க...?" என்று கடுங்கோபத்தில் பல்லை கடித்தான் விஜய்...

முத்துபேச்சியின் பாதுகாப்பிற்காக அவன் தான் இந்த ராமனை அவளுக்குத் தெரியாமல் நியமித்து இருந்தான்... ஆனால் அவர் தன் கடமையைச் சரிவரச் செய்யாமல் போனதை கண்டு அவனது ஆத்திரம் அதிகரித்தது...

அவர் அங்கு இருக்கும் நம்பிக்கையில் தானே அவன் சுந்தரலிங்கம், சந்தோஷ் விசயத்தைத் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருந்தான்...

"சார்... என்னாச்சு...?" மேலதிகாரி கொடுத்த வேலையைத் தான் சரியாகச் செய்யவில்லையோ என்ற பயத்தில் ராமனுக்கு வியர்த்து வழிந்தது...

"உங்களோட அஜாக்கிரதையால இப்போ என் பொண்ணு உயிருக்கு போராடிக்கிட்டு இருக்கா..."

அவனது குரல் உயர்ந்ததில் முத்துபேச்சி அவனைத் திரும்பி பார்த்தாள்... வெகு வருடங்கள் கழித்து அவனது இந்தக் கோபத்தை அவள் பார்க்கிறாள்...

"சார்... நான் வேணும்ன்னு இப்படிச் செய்யலை சார்... கொஞ்ச நேரத்துக்கு முந்தி அப்பாவுக்கு ஆக்சிடெண்ட் சீரியசான கண்டிசன்னு வீட்டிலிருந்து ஃபோன் வந்தது... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை... அப்படி இருந்தும் நம்ம ஏட்டு கிட்ட சொல்லி வேற ஆளை ஏற்பாடு பண்ண சொல்லிட்டு தான் அங்கிருந்து கிளம்பினேன்... அப்பாவை இங்கே தான் சேர்த்து இருக்குது..."

அப்போது தான் விஜய் ராமனின் முகத்தை உற்றுக் கவனித்தான்... அவரின் முகத்தில் கவலை அப்படியே

தெரிந்தது...

அந்தக் கணம் அவனது துப்பறியும் மூளைக்குச் சட்டென்று விசயம் விளங்கி போனது... எல்லாம் திட்டமிட்ட சதி என்று... யார் இதற்குக் காரணமாக இருப்பார்கள் என்று அவன் மனம் வேகமாக யோசித்தது...

அவனுக்குத் தெரிந்து சுந்தரலிங்கம் முகம் தான் அவனது நினைவில் எழுந்தது... மேலே யோசிக்காமல் ராமனை பார்த்தவன்,

"அப்பா இப்போ எப்படி இருக்கிறார்...?"

"கொஞ்சம் சீரியஸ் தான் சார்... வயசாகிருச்சு இல்லையா..." வருந்தும் குரலில் சொன்னவரை கண்டு அவனுக்கு இரக்கமாக இருக்க, தனது பேண்ட் பையில் இருந்து பர்சை எடுத்து அதிலிருந்து ஆயிரம் ரூபாய் நோட்டுகள் சிலவற்றை எடுத்து அவரிடம் கொடுத்தவன்,

"அப்பாவை பத்திரமா பார்த்துக்கோங்க... எதுவும் தேவைப்பட்டா தயங்காம கேளுங்க..." என்றவனைப் பார்த்து நன்றியுடன் கும்பிட்டவர்,

"என்னால தானே பாப்பாவுக்கு இப்படியாகி போச்சு..." என்று அவர் கண் கலங்க...

"விதியை யாராலும் மாத்த முடியாது ராமன்... நீங்க கிளம்புங்க..." என்றவன் அவரை அனுப்பி வைத்து விட்டுப் பாண்டியனிடம் திரும்பினான்...

"என்ன நடந்துச்சு பாண்டி...? ஒண்ணு விடாம சொல்லு..." என்று கேட்க,

பாண்டியன் அன்று நடந்ததை ஒன்று விடாமல் கூறினான்...

அவனது காவல்துறை மூளை அடித்துச் சொன்னது இது ஒரு திட்டமிட்ட கொலை என்று... ஆனால் ஏன், எதற்காக, அதுவும் ஒரு சின்னக் குழந்தையைக் கொல்லும் அளவிற்கு...? அவனது கேள்விகளுக்கு விடை தெரியவில்லை... உடனே அந்த இடத்திற்குச் சென்று

விசாரணை செய்ய வேண்டும் என்று அவனது மனம் பரபரத்தது...

ஆனால் மகளின் நிலை அதற்கு முட்டுக்கட்டை போட தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான்...

அப்போது காவல்துறை மேலாளர் சரவணன் தன்னுடன் ஒரு ஆண் மற்றும் பெண் ஏட்டுடன் அங்கு வந்தான்... அவனைக் கண்டதும் விஜய்யின் புருவங்கள் சுருங்கியது யோசனையாக...

சரவணன் கொஞ்சம் வில்லங்கமான ஆள்... இவன் எதற்காக இங்கு வந்திருக்கிறான் என்று குழப்பமாக இருந்தது அவனுக்கு...

வந்தவனின் அடுத்தக் கட்ட செயல் அது உண்மை என்பதை நிரூபித்தது...

நேரே முத்துபேச்சி முன் சென்று நின்ற சரவணன், "உன் அம்மாவை கொலை பண்ண காரணத்துக்காக, உன் மகளை நீ கொலை செய்ய முயற்சி செய்ததற்காக உன்னை நாங்க அரெஸ்ட் பண்றோம்..." என்றவன் அந்தப் பெண் ஏட்டுவிடம் கண்களால் சைகை காட்டினான்...

அதைக் கண்டு பதறி போய் முத்துபேச்சி மீதிருந்த தன் கோபத்தைக் கை விட்டவனாய் விஜய் அவளை நோக்கி வந்தான்... அவனைத் தொடர்ந்து பாண்டியனும்...

"சரவணன்... என்ன உளர்றீங்க...? பெத்த அம்மாவை, பொண்ணைப் போய் யாராவது கொல்ல பார்ப்பாங்களா...?" சற்று உஷ்ணத்துடன் வந்தது விஜய்யின் வார்த்தைகள்...

முத்துபேச்சியோ இது எதையும் கவனிக்கும் மனநிலையில் இல்லாது அதிர்ந்து போய் நின்றிருந்தாள் சரவணன் அவள் மேல் சுமத்திய அபாண்ட பழியைக் கேட்டு...

"சாரே... முத்து ஆத்தாவை கொல்லலை சாரே... அது எங்க கயல் மேல உசிரையே வச்சியிருக்கு... அது போய் இது மாதிரி பண்ணுமா..." என்று பாண்டியன் பதறி போய்க் கதறினான்...

"எந்த ஆதாரத்தின் அடிப்படையில் நீங்க இவங்களைக் கைது பண்றீங்க...?" தான் அவனுக்கு மேலதிகாரி என்று விஜய் அவனிடத்தில் காட்ட சற்று சூடாக அவனிடம் கேட்டான்...

"ஆதாரம் தானே அது நிறைய இருக்கு... போலீஸ் ஸ்டேசன் வாங்க அங்கே அதை எல்லாம் நிதானமா காட்டுறேன்... இப்போ எங்க ட்யூட்டியை பார்க்க விடுறீங்களா ஏசிபி சார்..."

சரவணன் கடைசி வரியை சற்று அழுத்தி நக்கலாய் சொன்ன விதத்தில் விஜய்யின் இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது...

"என்ன காரணம்...?" மீண்டும் தன் மிடுக்கு குறையாது கேட்டான் விஜய்...

"கள்ளக்காதல்..." சிறிதும் அலட்டி கொள்ளாது கூறிய சரவணனை கண்டு அதிர்ந்து போய் நின்றனர் விஜய், முத்துபேச்சி, பாண்டியன் மூவரும்...

"மைண்ட் யுவர் வேர்ட்ஸ் மிஸ்டர். சரவணன்... யாரை பார்த்து என்ன வார்த்தை சொல்றீங்க...?" என்று அவனைப் பார்த்து சீறிய விஜய்,

"இந்தக் கேசை நான் டீல் பண்ணிக்கிறேன்... நீங்க உங்க வேலையைப் பார்த்துக்கிட்டு போங்க..."

"என்னோட ஏரியாவில் நடந்த கொலையை நான் தானே சார் டீல் பண்ணணும்..."

பணிவாய் கூற வேண்டிய வார்த்தையை அலட்சியமும், திமிரும் கலந்து கூறிய சரவணனை கண்டு விஜய்க்கு ஏதோ புரிவது போல்...

ஏனெனில் நேற்று வரை அந்த ஏரியாவின் காவல்துறை பொறுப்பில் இருந்தது செந்தில் அல்லவா... இரவோடு இரவாக அவர் வேறு இடத்துக்குத் தூக்கியடிக்கப்பட்டு அந்த இடத்திற்குச் சரவணன் வர வேண்டும் என்றால் இதில் ஏதோ ஒரு பெரிய இடம் சம்பந்தப்பட்டு இருப்பதாகத் தானே அர்த்தம்...

நிச்சயம் இது சுந்தரலிங்கத்தின் வேலை தான் என்று இப்போது அவனுக்கு உறுதியாக விளங்கி போனது...

"சார்..." சரவணன் பவ்யமாகத் தன்னை அழைப்பதை கண்டு அவன் யோசனையாகப் பார்க்க,

"நீங்க இந்தக் கேசை டீல் பண்ண நீங்க ஏசிபியா இருந்தா தானே சார் முடியும்..."

அதைக் கேட்டு விஜய் குழப்பமாய் அவனைப் பார்த்தான்... என்ன சொல்கிறான் என்று புரியாமல்...

"உங்களை வேலையை விட்டுச் சஸ்பெண்ட் பண்ணி அரை மணி நேரமாச்சு சார்... இன்னமும் உங்களுக்கு இன்பார்மேசன் வரலையா...?" என்றான் கேலியாய்...

இது விஜய்க்கு புதிய செய்தி... வேலையை விட்டு இடைநீக்கம் செய்யும் அளவுக்கு அப்படி என்ன தவறு செய்தான் அவன்...

"என்ன காரணம்ன்னு தானே யோசிக்கிறீங்க சார்... இதே சேம் காரணம் தான்... கள்ளக்காதல்... அதுவும் இவளுக்கும்..." அவன் முத்துபேச்சியைச் சுட்டிக்காட்டும் போதே விஜய் அவனது சட்டையைக் கொத்தாகப் பற்றயிருந்தான் ஆவேசமாய்...

"சார்... கையை எடுங்க சார்... இதுக்கே நான் உங்களை அரெஸ்ட் பண்ணணும்... என்ன இருந்தாலும் ஒரு காலத்தில் எனக்கு மேலதிகாரியா இருந்த காரணத்தால் உங்களைச் சும்மா விடறேன்..." என்று விஜய்யின் கையை அகற்றியவன்,

"உங்க ரெண்டு பேருக்கும் இடையில் இருந்த கள்ளக்காதலுக்குத் தடையா அந்தக் குழந்தை இருந்ததால, அந்தக் குழந்தையை இவ கொலை பண்ண முயற்சி பண்ணியிருக்கா... அதைத் தடுக்க வந்த அவங்க அம்மாவையும் கொலை செஞ்சிட்டாள்... இது வெளியில் தெரியாம இருக்கப் பீரோவை உடைச்சுப் பணத்தை, நகையை எடுத்துட்டு திருட்டு போன மாதிரி செட்டப் பண்ணியிருக்கிறா... நாங்க அங்கே போய் ஒண்ணு விடாம எல்லாத்தையும் விசாரிச்சிட்டு தான் இங்கு வந்ததே..."

சரவணன் கூற, கூற மூவருமே திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்றார்கள்... எவ்வளவு அழகாக இட்டுக்கட்டி பொய் கதை புனைகிறார்கள் என்று...

முதலில் சுதாரித்தது விஜய் தான்... இப்போது முத்துபேச்சியைப் பார்த்து கெஞ்சும் குரலில், "இப்போதாவது வாயை திறந்து சொல்லுடி... கயலுக்கு அப்பா நான் தான்னு..."

விஜய்யின் வார்த்தையில் அதிர்ச்சியில் இருந்து வெளியில் வந்த முத்துபேச்சி அவனை உணர்வில்லாது பார்த்தாள்...

"அப்படிச் சொல்லித்தான் நாம ரெண்டு பேரும் இந்தக் கேசில் இருந்து நிரபராதியா வெளிவர முடியுமா சாமி...?" தீர்க்கமான குரலில் கேட்டவளை கண்டு அவன் திகைத்து நின்றான்...

"இல்லை அவங்க சொன்னதை உண்மைன்னு நிரூபிக்க நீயும், நானும் கல்யாணம் பண்ணி இவங்க சொன்ன கள்ளக்காதலை நல்லக்காதல்ன்னு நிரூபிக்கணுமா சாமி...?"

சாட்டையடியாய் வந்து விழுந்த அவளது வார்த்தைகள் அவனுள் சூட்டை கிளப்பியது... அவள் சொல்வதும் நியாயம் தானே... மூட்டைப்பூச்சிக்கு பயந்து வீட்டை கொளுத்திய கதையாகி விடுமே அவர்களது கதை...

"உனக்கும் தெரியும், எனக்குத் தெரியும்... நமக்கு இடையில் இருந்த உறவு என்னன்னு...? அப்போ தைரியாம இவங்க சொன்னதைப் பொய்ன்னு நிரூபிச்சு வந்து என்னைய வெளியே கூட்டிட்டு போ சாமி... அதை விட்டுட்டு இவங்களுக்குப் பயந்து நாம பின்வாங்கினா இவங்க சொன்னது எல்லாம் உண்மையாகிருமே... நம்ம ரெண்டு பேர் மேலுள்ள களங்கத்தைப் போக்க நீ தான் சாமி இனி முயற்சி பண்ணணும்..."

அழுத்தம் திருத்தமாய்த் தைரியமாய் உரைத்தவளை கண்டு விஜய் அசந்து போய் நின்றான்... அவளைப் போல் தன்னால் ஏன் இத்தனை நிதானமாக இருக்க முடியவில்லை என்று...

"எனக்காக ஒரே ஒரு உதவி பண்ணு சாமி... நான் வர்ற வரைக்கும் என் மகளைப் பத்திரமா பார்த்துக்கோ சாமி... அவளுக்கு ஒண்ணுமாகாது... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றவளின் கண்களில் அவளையும் மீறி கண்ணீர் வழிந்தது... அதைத் துடைத்துக் கொண்டே,

"கயலு எழுந்திருச்சதும் முதல்ல என்னைத் தான் தேடுவாள்... நான் சீக்கிரம் வந்திருவேன்னு மட்டும் அவள் கிட்ட சொல்லு சாமி..." என்றவள் பாண்டியனிடம் திரும்பி,

"பாண்டி... நீ தான் அம்மாவுக்கு மகனா இருந்து எல்லாக் காரியமும் பண்ணணும்... அதுக்கு ஒரு குறையும் வச்சிராதே... வாழும் போது தான் அது ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைக்கலை... இடுகாட்டுக்கு போகும் போதாவது சந்தோசமா போகட்டும்..." மனதில் எழுந்த துக்கத்தை அடக்கி கொண்டு சொன்னவள் சரவணனிடம் திரும்பி,

"இப்போ என்னைய அரெஸ்ட் பண்ணுங்க சாரே..." என்றாள் தைரியமாக, நிமிர்வாக...

அவளது தைரியத்தைக் கண்டு சரவணன் கூட ஆச்சிரியம் அடைந்தான்...

'எப்பா... என்ன பொண்ணுடா சாமி...' என்று மனதில் வியப்பாய் நினைத்தபடி பெண் ஏட்டிடம் கடமையைச் செய்யச் சொன்னான்...

"நீ இப்போ ஜெயிச்சுப்புட்டதா ரொம்பச் சந்தோசப்பட்டுக்காதே சாரே... எஞ்சாமி நாங்க குற்றம் செய்யலைன்னு நிரூபிச்ச அன்னைக்கு இருக்கு உனக்கு..." என்றவளின் பார்வை திமிராய் சரவணனை பார்த்தது...

அதில் சரவணனின் கோபம் அதிகரிக்க, "உன்னைய எல்லாம் பேச விட்டு வேடிக்கை பார்க்கிறேன் இல்லையா... அதான் இந்தத் திமிர் உனக்கு..." என்று பல்லை கடித்தபடி அவள் கழுத்தில் கையை வைத்துத் தள்ளினான் முன் பக்கமாக...

"சரவணன்..." விஜய் கோபத்தோடு அவனது கைகளை முத்துபேச்சியின் கழுத்தில் இருந்து விலக்கியவன் அடுத்த நொடி அந்தக் கையைப் பிடித்து முறுக்கியிருந்தான் ஆத்திரத்தோடு...

"என் மேலேயே கையை வைக்கிறியா... போலீஸ்க்காரன் மேல கை வச்சா என்ன நடக்கும்ன்னு நான் காட்டவா...?" கோபத்தோடு சரவணன் விஜய்யின் சட்டையைப் பிடித்தான் தன் ஒற்றைக் கை கொண்டு...

"முதல்ல ஒரு போலீஸ்க்காரன் மாதிரி நீ நடந்துக்கோ... ஒரு பெண் கைதியை எப்படி ட்ரீட் பண்ணணும்ன்னு உனக்குத் தெரியாது..." என்று கடுமையான முகத்துடன் கூறிய விஜய் அருகில் இருந்த பெண் ஏட்டுவிடம்,

"நீங்க கூட்டிட்டு போங்கம்மா..." என்க...

அவனை அவருக்குத் தெரியுமாதலால், "சரிங்க சார்... என்று பணிவுடன் கூறினார்...

முத்துபேச்சி காவல்நிலையம் கிளம்பும் முன் விஜய்யிடம், "கயலை பத்திரமா பார்த்துக்கோ சாமி..." என்று மீண்டும் அறிவுறுத்த...

"என் மகளைப் பார்த்துக்க நீ சொல்லவும் வேணுமா...?" என்றவனது பார்வை அவளை அப்பட்டமாய்க் குற்றம் சாட்டியது...

அதைக் கேட்டு அவள் மௌனமாகி விட... அவளது மௌனத்தை வேதனையுடன் பார்த்தவன்,

"இப்ப கூட உன்னால உண்மையை ஒத்துக்க முடியலை இல்ல..."

துயரத்துடன் வந்த அவனது வார்த்தைகளின் துயரம் அவளையும் தாக்கி நிலைக்குலைய செய்தது... ஆனாலும் அந்த உண்மையை ஒத்துக் கொள்ள அவள் தயாராக இல்லை...

அதைக் கண்டு அவனுக்கு வருத்தமாக இருந்த போதும், "கவலைப்படாதே பேச்சி... நான் உன் பின்னாடியே வர்றேன்..." என்று அப்போதும் அவளுக்குத் தான் ஆறுதல் அளித்தான் தனது வருத்தத்தை மறைத்துக் கொண்டு...

"என்னைய பார்த்துக்க எனக்குத் தெரியும் சாமி... நீ கயலை பார்த்துக்கோ... நம்ம மேல சுமத்தப்பட்ட களங்கத்தை எப்படிப் போக்குறதுன்னு மட்டும் யோசி... என்னைப் பத்தி கவலைப்படாதே சாமி..."

அவன் அவளுக்கு ஆறுதல் தர நினைத்தால், அவள் அவனுக்கு ஆறுதல் தந்தாள்... அந்த நிலையிலும் அவளது தைரியத்தின் அளவை கண்டு அவனால் மனதுக்குள் மெச்சாமல் இருக்க முடியவில்லை...

அதன் பின் அவளைக் காவல்நிலையம் அழைத்துச் செல்ல, அதைத் தடுக்கும் வகையறியாது துன்பத்தோடு அவளைப் பார்த்திருந்தான் விஜய்...

"விசய்..." பாண்டியன் அழைக்கவும் தன்னுணர்வு அடைந்தவன்,

"பாண்டி... நீ இந்தப் பணத்தை வச்சுக்கோ..." என்று தனது பர்சில் மீதமிருந்த பணத்தை எடுத்து கொடுத்தவன்

அப்படியே தனது கடன் அட்டையையும் அவனிடத்தில் கொடுத்தான்...

"கயலை பார்த்துக்கோ... நான் இப்ப வந்திர்றேன்..." என்றபடி அவன் முத்துபேச்சியைத் தொடர்ந்து வெளியில் ஓடினான்...

****

பாண்டியன் சொல்லி விசயம் கேள்விப்பட்டுச் செல்வநாதன் உடனே மருத்துவமனைக்கு நேரில் வந்தார்... கயல்விழியின் நிலை கண்டு கவலை அடைந்தவர் முத்துபேச்சியின் நிலை அறிந்து துன்பம் கொண்டார்...

முத்துபேச்சியை அழைத்துச் சென்றிருக்கும் காவல்நிலையம் செல்லும் வழியில் செல்வநாதன் தனது செல்வாக்கால் அவளை வெளியில் கொண்டு வருவதற்குத் தேவையான முயற்சியை மேற்கொண்டார்...

அதற்குள் விஜய் அந்தக் காவல்நிலையத்தை அடைந்திருந்தான்... ஆனால் சரவணன் அவளைப் பார்க்க அவனை விடவில்லை... காவல்துறையில் இருக்கும் அவனுக்கே இந்தக் கதி என்றால் சாதாரண மக்களை நினைத்து அவனுக்கு மனம் வெம்பி போனது...

மக்களுக்காக உண்டாக்கப்பட்ட சட்டம் மக்களுக்குப் பயன்படாமல் பணம் படைத்தவர்களுக்கு ஆதரவாகச் செயல்படுவது கண்டு அவன் மனம் வெறுத்துப் போனான்...

உடனே தனது மேலதிகாரியை அவன் தொடர்பு கொண்ட போது அவரும் மிகுந்த வருத்தத்துடன் அவனிடம் பேசினார்...

"மேலிடத்தில் இருந்து ஒரே பிரசர்... என்னால் ஒண்ணும் செய்ய முடியலை மிஸ்டர். விஜய்... ஆனால் தனிப்பட்ட முறையில் என்னோட ஆதரவு உங்களுக்கு எப்போதும் உண்டு..."

அவரது வார்த்தையில் அவனுக்கு விரக்தி தான் எழுந்தது...

"எப்போதுமே குற்றவாளியை தப்பிக்க விட்டுட்டு நிரபராதியை பிடிப்பது தானே நம்ம டிபார்ட்மெண்ட்டோட வேலை... அதை இப்போதும் சரியா தான் செய்திருக்கு..."

அந்தக் கணம் தான் காவல்துறை பணியைத் தேர்வு செய்ததை மிகுந்த அவமானமாக அவன் உணர்ந்தான்...

"இந்த நொடி இந்த வேலையைத் தூக்கி எறிஞ்சிட்டு போகணும்ன்னு தான் என் மனசு துடிக்குது... ஆனா எங்க மேல் சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைக்கிறதுக்காகவாவது நான் இந்த வேலையில் இருந்தாகணும் சார்... முதன்முறையா நான் காக்கி யூனிபார்ம் போட்டதுக்காக வருத்தப்படுறேன்..." என்றவன் தனது அழைப்பை துண்டித்து விட்டான்...

அந்த நேரம் செல்வநாதன் அங்கு நுழைந்தார்... விஜய் அங்கிருப்பதை உணர்ந்து,

"நீ... நீங்க...?" என்று யோசனையாய் அவர் அவனைப் பார்க்க...

"உங்க பொண்ணோட சீனியர்..." என்றான் பட்டும் படாமல்...

அப்போது அவருக்கு அவனை நன்கு அடையாளம் தெரிந்தது...

"நல்லாயிருக்கியாப்பா..." என்றார் சம்பிராதயமாக...

"நல்லாயிருக்கேன் சார்..." என்றான் அவனும் சம்பிராதயமாக...

"நீ இங்கே எங்கேப்பா...?" அவனிடம் கேட்டுக் கொண்டே அவர் காவல்நிலையத்திற்குள் நுழைய...

"பேச்சியைப் பார்க்க வந்தேன்..."

அதில் ஒரு நொடி நின்றவர், "முத்துபேச்சியவா சொல்ற..."

ஆம் என்பது போல் அவன் தலையசைத்தான்... அவருக்கு ஒரே குழப்பமாக இருந்தது... ஆனாலும் அவனிடத்தில்

ஒன்றும் கேட்கவில்லை... இப்போது அவரது மனதில் முத்துபேச்சியை வெளியில் எடுப்பது மட்டும் தான் ஓடி கொண்டிருந்தது...

செல்வநாதனை பார்த்ததும் சரவணனிடம் அதுவரை இருந்த அலட்சியம், திமிர் எல்லாம் மறைந்து ஒருவித பரபரப்புத் தொற்றிக் கொள்ள அவரைப் பார்த்து ஈயென்று இளித்தபடி,

"வாங்க சார்... நீங்க என்ன இந்தப் பக்கம்...?" என்றான் வாயெல்லாம் பல்லாக...

"நீங்க அரெஸ்ட் பண்ணி வச்சியிருக்க முத்துபேச்சி என்னோட பொண்ணு மாதிரி... எதன் அடிப்படையில் அவளை நீங்க அரெஸ்ட் பண்ணினீங்க... இந்த நிமிசம் அவளை நீங்க வெளியில் விடணும்... இல்லைன்னா நடக்கிறதே வேற..." என்று அவனை மிரட்டியவர்,

"வேணும்ன்னா ஹோம் மினிஸ்டர் கிட்ட பேசுறீங்களா...?" என்று அவர் தன் அலைப்பேசியை எடுத்து நீட்ட...

"ஐயோ வேணாம் சார்... நீங்க சொன்னா கேட்டுக்கப் போறேன்..." என்று பதறி போனவனாய் தன் பக்கத்தில் இருந்த ஏட்டுவிடம் முத்துபேச்சியை அழைத்து வர சொன்னான்...

மேலிடத்தில் இருந்து அரசியல் ரீதியாக அழுத்தம் வந்ததால் தான் அவன் இந்தக் காரியம் செய்தது... அதே போல் அதே அரசியல் ரீதியாக மறுபடியும் அழுத்தம் வந்தால் அவனும் என்ன தான் செய்வான்...

'இந்தப் போலீஸ் உத்தியோகம் பார்க்கிறதுக்கு... பேசாம கார்ப்பரேசன்ல நாய் பிடிக்கிற வேலைக்குப் போயிருக்கலாம் போலிருக்கு...' என்று மனதுக்குள் கடுப்புடன் அலுத்துக் கொண்டான் சரவணன்...

இதை எல்லாம் அமைதியாகப் பார்த்திருந்தான் விஜய்... அவனது மூளையும், மனதும் செயலிழந்து போயிருந்தது...

மீண்டும் தன்னவளை பார்க்கும் வரை அவனால் உயிர்ப்புடன் செயல்பட முடியாது...

அந்நேரம் முத்துபேச்சியை அங்கு அழைத்து வந்தனர்... அவளை அழைத்து வந்த அந்த ஒரு மணி நேரத்திற்குள் அவளை அடிப்பின்னி எடுத்திருந்தனர்...

எளியவர்களிடம் பலத்தைக் காண்பிப்பது தானே மனித மிருகங்களின் இயல்பு...

நெற்றியில் இரத்தம் வழிய, உதடு கிழிந்து, கன்னம் வீங்கி பார்ப்பதற்கே அப்படி ஒரு பரிதாப நிலையில் இருந்தாள் அவள்...

அவளின் நிலை கண்டு தன்னிலை மறந்து விஜய், "பேச்சி..." என்று அலறியபடி அவளை நோக்கி ஓடினான்...

நிற்க முடியாமல் துவண்டு சரிந்தவளை தன் கைகளில் தாங்கி அங்கிருந்த நீண்ட மர இருக்கையில் அமர வைத்தவன் தானும் அவளருகில் அமர்ந்து கொண்டு அவளைத் தன் தோள் மீது சரித்துக் கொண்டான்...

முத்துபேச்சியைக் கண்டதும் அவனிடத்தில் தோன்றிய பதற்றம், அவனது பரிவான செயல் எல்லாம் பார்த்து செல்வநாதனுக்கு ஏதோ புரிவது போல் இருந்தது...

"நான் வேறு ஒரு பெண்ணை விரும்புகிறேன்... உங்கள் மகளை மணக்க எனக்குச் சம்மதமில்லை... சாரி சார்..." என்று அன்று இருகரம் கூப்பிக் கம்பீரமாக மன்னிப்பு கேட்ட விஜய் அவர் கண்முன் வலம் வந்தான்...

'அப்படி என்றால் இவன் காதலித்தது முத்துபேச்சியையா...? கயல் இவனது குழந்தையா...?' அவருக்குப் பெருத்த அதிர்ச்சியாக இருந்தது...

விஜய்யின் பரிவான செயலை முத்துபேச்சி உணர்ந்தாலும் சட்டென்று அவனிடத்தில் இருந்து விலகி அமர்ந்தாள்... அதைக் கண்டு அவனது முகம் சுருங்கி போனது...

"சாமி... உன்னைக் கயல் கூட இருக்கச் சொன்னேனே... இப்படி அவளைத் தனியா விட்டுட்டு வந்திட்டியே..."

அப்போதும் அவள் மகளை நினைத்து கவலையுடன் கேட்டாள்...

"என் மகளை நான் பார்த்துக்க மாட்டேன்னா... கட்டாயம் பார்த்துக்கிறேன்..." என்றவனைப் பார்த்து,

"அப்போ நீ கிளம்பு சாமி..." என்று மிகுந்த சிரமத்துடன் அவள் வார்த்தைகளை உதிர்த்தாள்...

அதற்குள் செல்வநாதன் அங்கு வந்தார்... அவரை எதிர்பாராது அங்குக் கண்டதும் திடுக்கிட்டு போன முத்துபேச்சி,

"ஐயா..." என்று தட்டுத் தடுமாறியபடி எழ முயற்சிக்க...

அதைக் கண்டு விஜய் அவளை ஆதரவாகப் பிடிக்க வர, மெல்ல அவனது கையை விலக்கியவள் சுவற்றைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றாள்...

அவளின் நிலையைக் கண்டு செல்வநாதன் கோபத்துடன் சரவணனிடம் திரும்பி, "இப்படித் தான் மாட்டைப் போட்டு அடிக்கிற மாதிரி அடிப்பீங்களா..." என்று கோபத்துடன் கர்ஜிக்க...

அதில் அந்தச் சரவணன் வெலவெலத்து தான் போனான்... இப்போது அவனுக்கு யார் பேச்சை கேட்பது என்று சத்தியமாகத் தெரியவில்லை...

"நீ வாம்மா முத்து... நாம போகலாம்..." என்று அவர் கூற...

முத்துபேச்சியோ அழுத்தமாய் அசையாது அங்கேயே நின்றாள் கல்லாய்...

"முத்து வாம்மா..." என்று மீண்டும் அவர் அழைக்க...

"பேச்சி... வா பேச்சி..." என்று அவனும் அழைத்தான்...

இருவரையும் மாறி மாறி பார்த்தவள் இறுதியில் தனது பார்வையை அழுத்தமாய் விஜய் மீது பதித்தவாறு,

"அவங்க என்ன செஞ்சாலும் தட்டி கேட்கிறதுக்கு ஆளில்லைன்னு தானே இத்தனை அக்கிரமத்தை செய்றாங்க... அதை நீ தட்டி கேட்கணும் சாமி... உனக்கும், எனக்கும் நீதி கிடைக்கிற வரை நான் இங்கிருந்து ஒரு அடி கூட நகர மாட்டேன்..."

நீதி கேட்டு மதுரையை எரித்த கண்ணகி போல் தனது கற்பிற்கான நீதி கேட்டு அவள் அந்தக் கண்ணகி போல் ஆக்ரோசமாய் விஸ்பரூபம் எடுத்து நின்றாள்...

"நான் ஒருத்தனுக்கு மட்டும் தான் முந்தி விரிச்சேன் சாமி... அது மாதிரி உன் மனசுலயும் ஒருத்தி மட்டும் தான் இருக்கிறாள்... இது சத்தியமான உண்மை... இங்கே இருக்கிற எல்லோரையும் விட நாம ஒண்ணும் கற்பில் தாழ்ந்து போயிடலை சாமி... நாம கற்புள்ளவங்க தான்னு இவங்களுக்கு எல்லாம் நீ நிரூபிக்கணும்... அதுவரை நான் இங்கிருந்து வர மாட்டேன்..."

அத்தனை பேர் நிறைந்த சபையில் கௌரவர்களால் துகிலுரியப்பட்ட போது அஞ்சாது சபதம் கொண்ட பாஞ்சாலி போல் அவள் கோபத்தில் சிலிர்த்துக் கொண்டு நின்றாள்...

அவள் கூறுவது அனைத்தும் அவனுக்குப் புரிந்து தான் இருந்தது... ஆனால் அதற்கு முன் அவளை வெளியில் எடுப்பது மட்டும் தான் அவனுக்கு மிக முக்கியமான வேலையாகத் தோன்றியது... அதனால்,

"அதை எல்லாம் நான் பார்த்துக்கிறேன் பேச்சி... இப்போ சார் சொன்ன மாதிரி வெளியில் வா..." என்று அவன் அவளிடத்தில் கெஞ்ச...

"இதே வார்த்தைகளைத் தான் அப்போதிருந்து நீயும் சொல்லிக்கிட்டு இருக்கச் சாமி... உன்னால என்ன செய்ய முடிஞ்சது... ஆனா அவன் சொல்லாம கொள்ளாம

எல்லாத்தையும் செஞ்சு முடிச்சிட்டானே... தான் யார் என்கிற அடையாளம் கூடக் காட்டாம உன்னையும், என்னையும் இப்படி உசிரோட கொன்னுட்டானே... என் அம்மாவை கொன்னு, என் மகளையும் இப்படி ஹாஸ்பிட்டல்ல குத்துயிரா படுக்க வச்சு, எனக்கும், உனக்கும் இப்படி ஒரு கெட்ட பெயரை உண்டாக்கிட்டானே..."

மகளை நினைத்து ஒரு நொடி அழுதவள், "தப்பு செய்றவனே அவ்வளவு யோசிக்கும் போது அதைத் தடுக்கிற நீ ஏன் கொஞ்சம் கூட யோசிக்க மாட்டேங்கிற சாமி... காலேஜ் படிக்கிறப்போ இருந்த அந்தத் தெனாவெட்டு விஜய் எங்கே போனான்...? அந்த விஜய்யாய் மாறி எதிரிகளைச் சம்ஹாரம் பண்ணிட்டு வந்து என்னைக் கூட்டிட்டு போ... அப்போ நான் சந்தோசமா வெளியில் வர்றேன்..."

பெற்ற அன்னையோ கொடூர மரணத்தைத் தழுவி இறுதி யாத்திரைக்குக் காத்திருக்க, தான் பெற்ற மகளோ மரணத்திற்கு எதிராக மருத்துவமனையில் உயிர் போராட்டம் நடத்தி கொண்டிருக்க, இந்த அவசர போர்க்காலச் சூழலிலும் தனது போராட்ட குணத்தை மாற்றிக் கொள்ளாமல், அதைக் கைவிடாமல் தனக்கான நீதி கேட்டு போராடினாள் அந்தப் பெண் போராளி...

தன் நிலையில் உறுதியாய் நின்று வெளியில் வர மறுத்தவளை கண்டு விஜய்யின் மனம் வெதும்பியது... தங்கள் மேல் களங்கம் சுமத்தியவர்களைப் போட்டு தள்ள வேண்டும் என்ற உத்வேகத்தில் அவனது இரத்தம் கொதித்தது...

"நிச்சயமா அவங்களைப் பிடிச்சு சட்டத்தின் முன் நிறுத்திவிட்டு மீண்டும் உன்னைத் தேடி வருவேன் பேச்சி... அப்போ நீ என் கூட வருவியா...?"

கண்களில் எதிர்பார்ப்புடன் கேட்டவனை வெறுமையாகப் பார்த்தவள், "கட்டாயம் அப்போ வெளியில் வருவேன் சாமி..." என்றவள் மறந்தும் அவனிடத்தில் 'அவனுடன் வருவேன்' என்று கூறவில்லை...

அந்த வார்த்தைகளை இப்போது மட்டுமல்ல, இனி வரும் நாட்களில் மட்டுமில்லாது, என்றுமே அவள் கூறப் போவதில்லை என்பதை அக்கணம் அவன் அறிந்திருக்கவில்லை...!!!

வாசம் நேசமாகும்...!!!

மறுநாள் காலையில் ராயபுரம் காவல்நிலையம் அந்தப் பகுதி மக்களால் முற்றுகையிடப்பட்டது... முத்துபேச்சிக்கு ஆதரவாக அங்குத் திரண்ட அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்...

ஏனெனில் பல வருடங்களாக முத்துபேச்சியை அந்த மக்களுக்கு நன்றாகத் தெரியும்... இன்முகத்துடன் அனைவருக்காகவும் ஓடி ஓடி உதவி செய்யும் அவளது நல்ல குணம் எல்லோரிடத்திலும் நன்மதிப்பை பெற்றுத் தந்திருந்தது... அந்த ஒரு காரணத்தினால் தான் அவள் சார்ந்திருந்த கட்சி இந்தத் தேர்தலில் அங்கு நிறுத்துவதற்கு அவளைத் தேர்ந்தெடுத்து இருந்தது...

அந்தளவுக்கு மக்களிடத்தில் அவளுக்குச் செல்வாக்கு அதிகம் இருந்தது...

கயல்விழியின் பிறப்பின் ரகசியத்தை அவளது நல்ல பண்புகள் மக்களிடையே மறக்கடிக்கச் செய்திருந்தது... முத்துபேச்சியைத் தங்கள் வீட்டு பெண்ணாக அவர்கள் பார்த்தது போல் கயல்விழியையும் தங்கள் வீட்டுக் குழந்தையாகத் தான் பார்த்தனர்...

ஆனாலும் அதில் சிலர் முத்துபேச்சியைத் தரக்குறைவாக விமர்ச்சிக்கவும் செய்தனர்... நூற்றில் எண்பது சதவீத மக்கள் அவளுக்கு ஆதரவு அளித்தாலும், மீதி இருபது சதவீத மக்கள் அவளை வேறு கண்ணோட்டத்தில் பார்க்க தவறவில்லை...

நல்லதும், கெட்டதும் கலந்தது தானே நமது சமுதாயம்...!!!

"எங்க முத்துவை நீங்க விடுதலை செய்யும் வரை நாங்க இங்கிருந்து ஒரு அடி கூட நகர மாட்டோம்..." என்று கூறிய மாணிக்கம் காவல் நிலையம் முன்பு அமர்ந்து சத்தியாகிரகம் செய்யத் துவங்கினான்...

நேற்று நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து அவன் தலைமையில் மக்கள் எல்லோரும் மருத்துவமனைக்குக்

கிளம்பி சென்ற போது தான் முத்துபேச்சியைக் கைது செய்த விபரம் அவர்களுக்குத் தெரிய வந்தது... அதைக் கேட்டுக் கொதித்துப் போனவர்கள் இரவோடு இரவாகக் காவல்நிலையத்திற்கு வந்து விட்டனர்...

அவர்கள் முத்துபேச்சியைப் பார்ப்பதற்கு மறுப்பு சொல்ல சரவணனால் முடியவில்லை... ஏனெனில் அவளின் உயரம் அவனுக்கும் தெரிந்து அமைதியாக மக்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றான்... அவனுக்குமே வேறுவழியில்லை... எல்லாப் பக்கமும் இருந்து ஆட்டுவிக்கும் நூலிலாடும் பொம்மையின் நிலையில் இருந்தான் அவன்...

விஜய்யிடம் கூறியதை தான் முத்துபேச்சி அவர்களிடமும் கூறினாள்... தனது களங்கத்தைப் போக்காமல் தான் அங்கிருந்து ஒரு அடி கூட நகர முடியாது என்று... அவளது அந்த வைராக்கியமே சொல்லாமல் சொல்லியது அவள் எந்தத் தவறும் செய்யவில்லை என்று...

அவளை யாருடன் இணைத்துப் பேசினார்கள் என்று எல்லாம் அந்த மக்களுக்குத் தெரியாது... ஆனாலும் அவள் மீது போட்ட வழக்கு பொய்யென்று அவர்களுக்குத் தெரியுமே... அதனால் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்...

பணம் இருப்பவன் தனது பணப் பலத்தால் நீதியை விலைக்கு வாங்குகிறான் என்றால், இந்த மாதிரி அடித்தட்டு மக்கள் தங்களது கௌரவத்தை மறந்து வீதியில் இறங்கி போராடுவதன் மூலம் தங்களுக்கான நீதியை போராடி கேட்டு பெற்று கொள்கின்றனர்...

ஆனாலும் இது மாதிரி விசயத்தில் போராடவும் முடியாமல், பணபலமும் இல்லாமல் தனக்கு நேர்ந்த அநீதியை நினைத்து மனம் குமுறி வெம்பி வாழ்பவர்கள் நடுத்தரவர்க்க மக்கள் மட்டுமே...

அந்தப் பக்கமாக வந்த முத்துபேச்சியின் எதிர்வீட்டுப் பெண் இந்தக் காட்சியைக் கண்டு பயந்து போனார்... முத்துபேச்சிக்கு ஆதரவாக இத்தனை மக்கள் இருப்பது

கண்டு அவருக்குச் சற்று திகைப்பாக இருந்தது... மற்ற சாதாரணப் பெண்கள் போல் அவளில்லை என்பதை உணர்ந்தவராய் அவர் தனது அலைப்பேசியை எடுத்து அதிலிருந்த விஜய் மற்றும் முத்துபேச்சி இணைந்த புகைப்படத்தை அவசர அவசரமாக அழித்தார்...

ஏனெனில் இதைக் கண்டு அவரை அடி யாராவது மொத்திவிட்டால்... அதற்குப் பயந்து சற்று அடக்கி வாசித்தார் அவர்...

இதுவே முத்துபேச்சிக்கு கிடைத்த பெரிய வெற்றி தான்...

பகல் பன்னிரெண்டு மணியளவில் விஜய் அந்தக் காவல்நிலையத்திற்கு வந்தான்... முத்துபேச்சிக்காகப் போராடும் அவளது பகுதி மக்களைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டே அவன் காவல்நிலையத்திற்குள் நுழைந்தான்... அந்த நேரம் பார்த்து சரவணன் அங்கு இல்லை... வேலை விசயமாக வெளியில் சென்றிருந்தான்...

விஜய்யை கண்டதும் அங்கிருந்த ஏட்டு அவனுக்கு விறைப்பாக வணக்கம் தெரிவித்தார்... பணியில் இருந்தாலும், இல்லை என்றாலும் அவனுக்கான மரியாதையைக் கொடுத்தார் அந்த ஏட்டு... அதைத் தலையசைத்து ஏற்றுக் கொண்ட விஜய்,

"நேத்து அரெஸ்ட் பண்ணின முத்துபேச்சிங்கிறவங்களைக் கூட்டிட்டு வாங்க..."

"சார்..." என்று தயங்கியபடி இழுத்தார் அவர்...

ஏனெனில் காவல்துறை செயலர் சரவணன் மீது அந்தளவுக்குப் பயம் அவருக்கு...

"உங்க இன்ஸ்பெக்டர் சொல்றதை தான் கேட்பீங்களா...? ஏசிபி நான் சொல்றதை கேட்க மாட்டீங்களா...?" என்று மிடுக்குடன் கம்பீரமாக உரைத்த விஜய்யை கண்டு அவருக்கு ஏதுவோ புரிவது போல்...

உடனே முகம் மலர புன்னகையுடன், "நீங்க சொல்லி கேட்காமல் இருப்பேனா சார்..." என்றபடி அவர் வேகமாய் உள்ளே விரைந்தார்...

விஜய் வெளியில் இறுக்கத்துடன் நின்றிருந்தாலும் அவனது மனம் தன்னவளை பார்க்கும் ஆர்வத்தில் பரபரப்புடன் காத்திருந்தது...

அந்நேரம் முத்துபேச்சியை அங்கு அழைத்து வந்தார்கள்... நேற்று அடி வாங்கியதன் விளைவால் அவளது முகத்தில் ஆங்காங்கே இரத்தம் கட்டி இருந்தது... அவளது முகத்திலிருந்த வீக்கம் இன்னமும் குறையவில்லை...

மெல்ல நடந்து வந்தவளை கண்டு அவனுக்கு அத்தனை கஷ்டமாக இருந்தது...

அவளைக் கண்டதும் தனது பதவியை மறந்து, தான் யார் என்பதை மறந்து வேக எட்டுக்கள் வைத்து அவள் புறம் வந்தான் அவன்...

தன்னவனைக் கண்டு அவளது மனம் போல் அவளது முகமும் மலர்ந்தாலும், "உன் கிட்ட என்ன சொன்னேன் சாமி... கயல் கூட இருக்கச் சொன்னேனா இல்லையா...?" என்று அவனைக் கடிந்தவள் பின் ஆவலுடன் அவனைப் பார்த்து,

"இப்போ கயலு எப்படியிருக்கா சாமி...?" என்று கேட்கும் போதே அவளது கண்கள் கலங்கி கண்ணீர் வடித்தது...

அவளது கண்ணீரை துடைக்க அவனது கைகள் பரபரத்த போதும் அது அவளுக்குப் பிடிக்காது என்ற காரணத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக நின்றவன்,

"ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டாள்... ஆனால் இன்னமும் கண் விழிக்கவில்லை..." என்றான் ஆறுதலாய்...

அதைக் கேட்டு அவளது விழிநீர் இன்னமும் பெருகி வழிந்தது... மகளின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை

என்பதை அறிந்ததும் அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... அவளது உயிர் மீண்டும் அவளிடமே திரும்ப வந்தது போல் அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது அவளுக்கு...

"ரொம்ப நன்றி சாமி..." என்று அவனைப் பார்த்து கைகூப்பியவளை கண்டு அவன் இயலாமையுடன் நின்றான்...

நன்றி தெரிவித்துத் தன்னை அந்நியப்படுத்தித் தள்ளி நிறுத்தும் காதலியிடம் நெருங்க முடியாது தவித்தான் அவன்... ஆனால் இப்போது இருக்கும் சூழ்நிலையில் இது முக்கியமாக அவனுக்குத் தோன்றவில்லை... அதனால் அவளிடம் திரும்பியவன்,

"வா போகலாம்..." என்க...

"எங்கே...?" என்று உடல் விறைக்கக் கேட்டவள் அசையாது அப்படியே ஆணி அடித்தார் போன்று அங்கேயே நின்றாள்...

"நீ சொன்னியே, கயல் கண் முழிச்சதும் உன்னைத் தான் தேடுவாள்ன்னு... அவளைப் பார்க்க நீ போக வேண்டாமா...?"

அவன் சொன்னதைக் கேட்டு அவளது கண்கள் ஒரு நொடி சந்தோசத்தில் மின்னியது... ஆனால் மறுநொடி அது மறைந்து போய்,

"நான் உன் கிட்ட ஏற்கெனவே சொல்லியிருக்கேன் சாமி... நான் நிரபாரதின்னு நிரூபிக்காம இங்கிருந்து நான் வர மாட்டேன்னு..."

மகளின் மீதான பாசத்தில் அவளது மனம் மெழுகாய் உருகி தவித்த போதும், அவளது வார்த்தைகள் இரும்பின் உறுதியோடு கணீரென்று ஆணித்தரமாய் வந்து விழுந்தது...

"நீ சொன்னதை மீறி எதையும் செய்யும் தைரியம் எனக்கு எப்போதுமே கிடையாது பேச்சி..." என்றான் அவன்

இருபொருள்பட...

அதைக் கேட்டு அவளது விழிகள் ஒரு நொடி அவனை ஆழ்ந்து பார்த்துவிட்டு மறுநொடி அவனது விழிகளைச் சந்திக்கத் தோற்று அப்படியே தாழ்ந்தது...

"நான் நிரபாரதின்னு எப்படி நிரூபிச்ச சாமி...?"

"உன்னைக் கைது பண்ண என்ன ஆதாரம் உருவாக்கி காட்டினாங்களோ... அது மாதிரி தான் இதற்கும் ஆதாரத்தைக் கொடுத்து உன்னை அழைச்சிக்கிட்டு போக வந்திருக்கிறேன்..." என்றவன் எப்படி என்பதை மட்டும் சொல்ல மறுத்துவிட்டான்...

"பேசிக்கிட்டு இருக்க நேரமில்லை பேச்சி... நாம போகலாம்..." என்று தன்னிச்சையாய் அவளது கையைப் பிடிக்க வந்தவன் பின் யோசித்தவனாய் தனது கையை விலக்கி கொண்டு முன்னால் நடந்தான்...

அவனது அந்தச் செயலில் அவளது மனம் வேதனை கொண்ட போதும், 'இது தான் தனக்கு நிரந்தரம்' என்று தனது மனவேதனை தேற்றிக் கொண்டு அவன் பின் நடந்தாள்...

அதையும் மீறி அவளது மனதின் மூலையில், 'அப்படி என்ன செய்து சாமி என்னை வெளியில் எடுத்திருக்கும்...?' என்ற கேள்வி விடாது ஓடி கொண்டிருந்தது... ஆனால் இப்போது அதைக் கேட்க அவளுக்கும் நேரமில்லை... அவளின் மனது மகளைக் காண வேண்டும் ஆவலில் அவளை விட வேகமாய் அந்தக் காற்றைப் போல் துரிதமாய்ப் பயணித்து மகளிடத்தில் போய் நின்றது...

அதைவிட அவன் மேல் நம்பிக்கை இருந்தது... அவன் தன்னிடத்தில் பொய் சொல்ல மாட்டான் என்று...

"ஏய்... என்னோட ஸ்டேசனில் நுழைஞ்சு எனக்கே தெரியாம நான் கைது பண்ணின குற்றவாளியை நீ எப்படி வெளியில் எடுத்து கூட்டிட்டு போவ..."

அந்நேரம் சரியாக அங்கு வந்து சேர்ந்த சரவணனின் அகங்கார குரல் இருவரின் மோனநிலையைக் கலைத்தது...

விஜய் வாய் திறந்து பதில் பேசுவதற்கு முன் சரவணன் வேகமாய் வந்து அவனது சட்டையைப் பிடித்திருந்தான்...

ஆனால் அடுத்த நொடி அந்தச் சட்டையைப் பிடித்த அதே வேகத்தில் தனது கையை விலக்கியும் இருந்தான் சரவணன்...

ஆம்... விஜய்யின் வலது கை சரவணனின் இடது கன்னத்தில் இடியாய் இறங்கியது... அதில் அவன் கன்னத்தில் கை வைத்தபடி ஸ்தம்பித்துப் போய் விஜய்யை பார்த்தான்...

பழைய கல்லூரி கால விஜயாய் தன்னவனைப் பார்த்த மகிழ்ச்சியில் முத்துபேச்சி இந்தக் காட்சியை ரசித்துப் பார்த்திருந்தாள்... இது தானே அவளுக்கும் வேண்டும்...

"ஏசிபி மேல் கையை வைக்கும் அளவுக்கு உனக்குத் தைரியம் இருக்கா...?" என்று ஆத்திரமாய்க் கேட்டவனைக் கண்டு சரவணன் பயந்து தான் போனான்...

விஜய் காவலதிகாரியின் சீருடையில் இல்லை... ஆனால் வெள்ளைச் சட்டையும், காக்கி பேண்ட்டும் அணிந்திருந்தான்... அதனால் சரவணனுக்கு அவன் மீண்டும் வேலையில் அமர்ந்தது தெரியவில்லை... அதை விட நேற்று பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டவன் இன்று மீண்டும் அந்தப் பதவியில் அமர்ந்ததன் மர்மம் தான் என்ன...? ஆனாலும் இதற்கு எல்லாம் அஞ்சினால் அவன் காவல்துறையில் வேலை செய்வதற்கு அருகதை அற்றவனாகி விடுவானே... அதனால் மனதில் எழுந்த தைரியத்துடன்,

"அதுக்காக நீங்க என்னோட ஸ்டேசனில் அத்துமீறி நுழையறதை என்னால் அனுமதிக்க முடியாது..." என்றான் விறைப்பாக...

அதைக் கேட்டு அவனை நக்கலாய் பார்த்த விஜய், "யார் சொன்னது இது உன் ஸ்டேசன்னு... இப்போ இந்த ஸ்டேசனுக்கு இன்ஸ்பெக்டர் மிஸ்டர். செந்தில்... இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர் இங்கே வந்துவிடுவார்..." என்றவன்,

"அப்போ இங்கே உனக்கு என்ன வேலைன்னு தானே யோசிக்கிற...?" என்று சரவணனை பார்த்து அவன் கேலியாய் கேட்க...

உண்மையில் அதை நினைத்து தான் சரவணனுக்கு மண்டை காய்ந்தது... தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

"உன்னோட வேலை போய் இரண்டு மணி நேரமாச்சு... தகுந்த ஆதாரம் இல்லாம நீ செஞ்ச இந்த வேலையானது உன்னோட வேலைக்கு உலையா மாறி போயிருச்சு... எந்த மேலிடம் உன்னை இப்படிச் செய்யச் சொன்னதோ அதே மேலிடம் தான் உன்னை வேலையை விட்டுச் சஸ்பெண்ட் பண்ணியிருக்கு... இது பொய்ன்னு நீ ஆதாரத்தோட நிரூபிச்சா தான் உனக்கு மறுபடியும் வேலை கிடைக்கும்... இல்லை உன்னோட வேலை அம்பேல் தான்..." என்று கேலி குரலில் கூறி அவனைச் சீண்டியவன்,

"என் மேல் சுமத்திய வீண் பழியை நான் பொய்ன்னு நிரூபிச்சிட்டேன்... உன் மேல் சுமத்தப்பட்டது வீண் பழியில்லை... அப்பட்டமான உண்மை... இதிலிருந்து நீ தப்பிக்க முடியாது... இது ஆரம்பம் தான் சரவணன்... இதோடு சேர்ந்து இன்னும் பல வழக்குகள் அனுமார் வால் போல் நீண்டுக்கிட்டு வரும்... அதையும் சேர்த்து சமாளிக்க நீ தயாராயிரு..." என்று எச்சரிக்கும் தொனியில் கூறியவன்,

"நீ வா பேச்சி... இனி யார் தடுக்கிறாங்கன்னு பார்க்கலாம்..." என்று சரவணனை முறைத்தவாறு அவளிடம் கூறிய விஜய் முன்னால் நடந்தான்...

ஆனால் முத்துபேச்சி அங்கிருந்து நகரவில்லை... அவளது பார்வை கர்வத்துடன் திமிராய் சரவணனை பார்த்தது...

"நான் சொன்ன மாதிரி எஞ்சாமி என் மேல குற்றமில்லைன்னு நிரூபிச்சிட்டாரு... இப்போ எனக்கு இருக்கிற சந்தோசத்திற்கு உனக்கு ஏதாவது பரிசு கொடுக்கணும் போலிருக்கே..." என்று ஒரு நொடி யோசிப்பது போல் பாவனைச் செய்தவள் மறுநொடி அவனது கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டாள்...

அவளது அந்தச் செயலை சரவணன் எதிர்பார்க்காதது போல் விஜய்யும் சற்றும் எதிர்பார்க்கவில்லை...

சரவணன் சுதாரிக்கும் முன் அவளின் அருகே வந்த விஜய், "பேச்சி... என்ன காரியம் பண்ணிட்டு இருக்க..." என்று அவளைக் கடிந்தான்...

"ஏய்... ஒரு பொட்டநாய் நீ என்னைய அடிக்கிறியா...?" தனது தன்மானம் சீண்டப்பட்டதில் சரவணன் அவளிடம் பாய்ந்தான்...

இருவருக்கும் இடையில் இடையில் புகுந்த விஜய் அடுத்து நடக்கவிருந்த அசம்பாவிதத்தைத் தடுத்து நிறுத்தினான்... அதற்குள் அங்கு வந்த ஆண் காலவர்கள் சரவணனை பிடித்துக் கொண்டனர்...

சரவணன் கோபத்தில் திமிறிக் கொண்டிருந்தான்...

"நான் பொட்டச்சி தான்டா... ஆனா அந்தப் பொட்டச்சி கிட்ட வீரத்தை காண்பிக்கிற நீயும் ஒரு பொட்டை தான்டா..." என்று முத்துபேச்சி விடாமல் எகிறினாள்...

"என்னை அசிங்கப்படுத்திய உன்னை நான் சும்மா விட மாட்டேன்டா... ஒரு நாள் இல்லை ஒரு நாள் இருக்கு உனக்கு..."

ஆக்ரோசமாய்க் கர்ஜித்த அந்தப் பெண் சிங்கத்தைக் கண்டு சரவணனுக்கே சற்றுப் பயமாகத் தான் இருந்தது... ஆனாலும் அதை வெளியில் காட்டி கொள்ளாமல் அவளை முறைத்தவன்,

"அப்படி என்னடி உன்னால் பண்ண முடியும்..." என்று அகந்தையோடு அவன் கேட்க...

"நான் சொல்லிட்டுச் செய்ய மாட்டேன்டா... செஞ்சிட்டு சொல்வேன்... அன்னைக்குப் புரியும் உனக்கு, நான் யார்ன்னு..." என்றவள் அவனைப் பார்த்து இகழ்வாய் சிரித்தாள்...

"பேச்சி... பேசிக்கிட்டே இருந்தா எப்படி...?" என்று விஜய் அவளை அவசரப்படுத்தவும் தான் அவள் மகளின் நினைவில் சற்று அடங்கினாள்...

"சார்... மேடம் கையெழுத்து போடலை..."

முத்துபேச்சியை அழைத்துக் கொண்டு வெளியேறிய விஜய்யிடம் பெண் ஏட்டு தயங்கியவாறு சொல்ல, அவன் சரவணனை உறுத்து விழித்துக் கொண்டே,

"முதல்ல எஃப்ஐஆர் போட்டு இருக்காங்களான்னு செக் பண்ணுங்க... அதுக்கு அப்புறம் கையெழுத்தை பற்றிப் பேசுங்க..."

விஜய் சொன்னதும் அங்கிருந்த கோப்பை எடுத்து அலசி ஆராய்ந்த அந்தப் பெண்மணி அசடு வழிந்தவாறு, "நீங்க சொன்ன மாதிரி எஃப்ஐஆர் போடலை சார்..." என்க...

"இனி மேலாவது நல்லா விசாரிச்சிட்டுக் கேசை ஃபைல் பண்ணுங்க..." என்று மேலதிகாரியாய் அவர்களுக்குக் கொட்டு வைத்த விஜய் தன்னவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்...

வெளியில் வந்த முத்துபேச்சியைக் கண்டு முதல் ஆளாய் ஓடி வந்தான் மாணிக்கம்... அவன் பின்னே மற்றவர்களும் வர விஜய் முத்துபேச்சியை விட்டு விலகி நின்றான் சற்று தள்ளி...

"தங்கச்சி... எப்படியிருக்கம்மா...? இப்படி அடிச்சுப்புட்டாங்களே பாவிங்க..." என்று மாணிக்கம் குரல் கமற கூற...

"இருக்கட்டும் அண்ணாத்தை... என்னைக்காவது ஒரு நாள் நம்ம கிட்ட மாட்டாமலா போவாங்க..." என்றவளின் விழிகள் அப்போது அங்கு வெளியில் வந்த சரவணனை உறுத்து விழித்தது... அவனோ அவளை அலட்சியமாய்ப் பார்த்தபடி அங்கிருந்து வெளியேறினான்...

அதற்குப் பின் அந்த மக்களோடு ஓரிரு வார்த்தைகள் பேசிய முத்துபேச்சி மகளைக் காண போக வேண்டும் என்று கூறி அவர்களிடம் இருந்து விடைப்பெற்று வந்தாள்...

அவளுக்காகத் தனது கார் பக்கத்தில் காத்திருந்தான் விஜய்... அவள் வந்ததும் ஏறுவதற்கு ஏதுவாக முன்பக்க கதவை அவன் திறந்து விட அவளோ காரின் பின்பக்க கதவை திறந்தபடி,

"ரொம்ப டயர்டா இருக்கு சாமி... கொஞ்ச நேரம் படுத்துக்கவா...?" என்று கேட்டாள் சோர்வுடன்...

அது மட்டும் காரணமில்லை... அவன் அருகில் அமர்ந்து வருவதைத் தவிர்ப்பதற்காகத் தான் அவள் அப்படிக் கூறுகிறாள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்... ஆனாலும் அவள் முகத்தில் இருந்த சோர்வை கண்டு சரியென்று தலையசைத்தவன் அவள் ஏறியதும் கார் கதவை மூடிவிட்டு ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்தான்...

காரை கிளப்பும் முன் முன்னால் இருந்த கண்ணாடி வழியே முத்துபேச்சியைப் பார்த்தவன் சட்டென்று காரில் இருந்து இறங்கி அவள் பக்கம் இருந்த கதவை திறந்தான்... பின் இருக்கையில் படுத்திருந்த முத்துபேச்சி என்ன என்பது போல் லேசாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தாள்...

அவன் பதில் பேசாது பின்னால் இருந்த தலையணையை எடுத்து லேசாகத் தூக்கியிருந்த அவளது தலையை நன்றாகத் தூக்கி அதன் கீழ் தலையணையை அவள் படுப்பதற்கு வாகாக வைத்து விட்டு அவளது தலையை மெல்ல அதில் வைத்தவன் அவளது திகைத்த பார்வையைச் சிறிதும் கண்டு கொள்ளாது கார் கதவை

மூடிவிட்டு ஓட்டுநர் இருக்கையில் ஏறியமர்ந்து காரை கிளப்பினான்...

அவனது அந்தச் செயல் அவளது மனதை உருக்கியது... ஆனாலும் அதை விட மகளின் உடல்நிலை மனதை கவலைக்குள்ளாக்க அதில் அவளது மனம் சோர்வடைந்தது... சோர்வுடன் விழிகளை மூடி கொண்டாள் அவள்...

அவளது நிலையை உணர்ந்தவன் மனதுக்குள்ளும் ஏதேதோ உணர்வுகள்... அதையும் மீறி மகளது உடல்நிலை அவனை அழுத்தியது... தனது மனவுணர்களைக் காட்ட வேண்டிய தருணம் இது இல்லை என்பதை உணர்ந்து அமைதியாகச் சாலையில் கவனத்தைப் பதித்தான்...

அந்நேரம் அவனது மனதில் நேற்று நடந்த சம்பவங்களின் ஞாபக ஊர்வலங்கள்...

****

நேற்று முத்துபேச்சியிடம் பேசிவிட்டு வெளியில் வந்த போது செல்வநாதன் அவனிடம் பேச விரும்பி வெளியில் காத்திருந்தார்... அவரின் எண்ணம் புரிந்து அவனும் தயக்கமாய் அவரிடம் வந்தான்...

"நீயும், முத்துவும் காதலிக்கிறீங்களா...?" எடுத்தவுடன் அவர் அப்படிக் கேட்க...

"ஆமாம் சார்... நானும் அவளும் காதலிக்கிறோம்..." என்றான் எந்தவித தயக்கமுமின்றி... ஏனெனில் அது தான் உண்மையும் கூட...

"அப்படி என்றால் கயல்...?"

அவர் அப்படிக் கேட்டதும் அவனின் முகம் ஒரு வினாடி கறுத்துப் போனது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"என்னுடைய மகள் தான் சார்..." என்றான் நிமிர்வாய்...

தன் மகளைத் தன்னுடைய வாரிசு என்பதில் அவனுக்கு அப்படி என்ன அவமானம் வந்துவிடப் போகிறது...

"எப்போ கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க...?" அவரது வார்த்தைகள் கூர்மையாய் வந்தது...

"நாங்க கல்யாணம் பண்ணிக்கலை... ஆனால் இந்த நொடி வரை என் மனசில் அவளும், அவள் மனசில் நானும் தான் இருக்கிறோம்... அது எனக்கு நல்லா தெரியும்... ஒரு மஞ்சள் கயிறு தான் எங்கள் பந்தத்தைத் தீர்மானிக்கணும்ங்கிற அவசியமில்லை..." எந்தவித தயக்கமுமின்றித் தைரியமாகச் சொன்னான் அவன்...

"ஆனா அது இல்லைன்னா நம்ம சமுதாயத்தில் இது மாதிரி பேச்சுக்களைக் கேட்க வேண்டி வரும் விஜய்... ஆண் நமக்கு இது எல்லாம் சகஜம்... ஆனால் பெண்ணான முத்துவை கொஞ்சமாவது யோசிச்சு பாரு..."

"நான் கல்யாணத்துக்குத் தயார் தான் சார்... ஆனா அவள் தான் கல்யாணம் மட்டுமில்லை... காதலுக்குக் கூடத் தயாராக இல்லை..." என்றான் வேதனையுடன்...

"அப்படி என்றால்...?"

"அவள் என்னைக் காதலிப்பதையே இன்னமும் ஒத்து கொள்ளவில்லை..." என்றவனின் பார்வை வெறுமையாகச் சுற்றுப்புறத்தை வெறித்தது அவனது மனதினை போல்...

அவன் சொன்னதைக் கேட்டு செல்வநாதனுக்கு அதிர்ச்சியாக இருந்தது... ஒருவேளை அதற்குத் தான் ஒரு காரணமாக இருக்கக்கூடுமோ என்கிற குற்றவுணர்வு அவர் மனதை அரித்துக் கொன்றது...

"சாரி விஜய்... இது தெரியாம நானும்..." அவரால் மேலே பேச முடியவில்லை...

"நீங்க என்ன பண்ணுவீங்க சார்... இது உங்களுக்குத் தெரியாம நடந்த விசயம்..."

தன் மகளுக்காக அவன் வீட்டில் மாப்பிள்ளை கேட்டு அவர் வந்ததை நினைத்து அவன் அப்படிச் சொன்னான்... அவரும் அதைப் புரிந்து கொண்டவராய் அமைதியாக இருந்தார்...

நித்யா அவரது மகள் என்றால், முத்துபேச்சி அவரது மகள் போன்றவள் அல்லவா... சிறுவயதில் இருந்து எந்தச் சுகத்தையும் அனுபவிக்காத அந்த இளம்பெண்ணை வாழ்க்கை தான் வஞ்சித்து விட்டது என்று நினைத்தால் தானும் அதையே அல்லவா அவளுக்குச் செய்திருக்கிறோம் என்று மனதுக்குள் வெம்பி போனார்...

"சார்..." விஜய்யின் அழைப்பு அவரின் எண்ணத்தைக் கலைத்தது...

"உங்களால ஒரு உதவி பண்ண முடியுமா...?"

ஏனெனில் அவன் அடுத்துச் செய்யப் போகும் இரு காரியத்திற்கும் அவரை மாதிரியான செல்வாக்கான ஆளின் அதிகார பலம் அவனுக்குப் பக்கபலமாகத் தேவை...

"கட்டாயம் செய்றேன்ப்பா... சொல்லு..."

அவன் முதலில் கேட்டது கயல்விழியைத் தனக்குத் தெரிந்த மருத்துவ நண்பனின் மருத்துவமனைக்கு மாற்ற வேண்டும் என்பதைத் தான்... ஏனெனில் அந்தப் பணம் படைத்தவர்களால் மகளுக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று மிகவும் பயந்தான்...

அடுத்த அரை மணி நேரத்தில் தனது செல்வாக்கால் அரசாங்க மருத்துவமனையில் இருந்து எந்தவித கெடுபிடியும் இல்லாமல் உடனே அதைச் செய்து கொடுத்தார் செல்வநாதன்...

அவரால் நேரிடையாகச் சுந்தரலிங்கத்திடம் மோத முடியாது... ஆனால் அவருக்கு இருந்த அதிகார பலத்தை வைத்து பல காரியங்களை அவரால் இன்றளவும் செய்ய முடியும்... அதை அவர் சாதித்தும் காட்டினார்...

அடுத்து அவன் அவரிடத்தில் கேட்டது... குமாரியின் இறப்பிற்கான நேர்மையான மருத்துவ அறிக்கை... ஏனெனில் இதை வைத்து தான் அவன் முத்துபேச்சியை நிரபராதி என்று நிரூபிக்க முடியும்...

இல்லை என்றால் கயல்விழி கண்விழித்துக் கொலையாளியை அடையாளம் காண்பித்து அவனைப் பிடிப்பதற்குள் நாட்கள் விரைந்தோடி விடும்... அதற்கான பொறுமை அவனிடத்தில் இல்லை...

எந்தவித தவறும் செய்யாமல் தன்னவள் சிறையில் இருப்பது அப்படியொரு வேதனையாக இருந்தது அவனுக்கு... அதற்குத் தானும் ஒரு காரணம் என்று அறிந்த போது அவனது இதயமே இரண்டாகப் பிளப்பது போல் வலித்தது அவனுக்கு...

முதலில் அவளை நிரபராதி என்று நிரூபித்துவிட்டு வெளியில் கொண்டு வர வேண்டும்... அதன் பின் மகளுக்குப் பாதுகாப்பாக அவளை வைத்து விட்டு தான் அவன் அந்தக் கயவர்களைக் களை எடுக்க வேண்டும்...

இது ஆத்திரத்தில் அறிவிழந்து செயல்பட வேண்டிய நேரமல்ல... புத்திசாலித்தனமாய்ச் செயல்பட்டு எதிரிகளை வீழ்த்த வேண்டிய நேரமிது... அதற்கு அவன் தனது பதவியின் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்... அதனால் அவன் சாணக்கியத்தனமாக நிதானமாக யோசித்தான்...

செல்வநாதன் முத்துபேச்சிக்காக எதையும் செய்பவர்... அதனால் உடனே மரண அறிக்கையை அதுவும் நேர்மையான அறிக்கையை அரசாங்க மருத்துவமனையில் இருந்து வாங்கிக் கொடுத்தார்...

அதன் பின் தான் விஜய்யின் மூளை சுறுசுறுப்பாகக் காவல்துறை அதிகாரி போன்று துப்பறிய துவங்கியது... அவன் ஏற்கெனவே யோசித்து வைத்தது போல் தான் மருத்துவ அறிக்கையும் சொல்லியது...

அது என்னவென்றால் குமாரி இறந்த அதே நேரத்தில் முத்துபேச்சி கூட்டுறவு அங்காடியில் நடந்த மோசடிக்காகத் தெருவில் இறங்கி போராடி கொண்டிருந்தாள்... அதற்கு அங்கிருந்த மக்களே சாட்சி...

அந்த நேரம் தான் அவனது மூளையில் அந்த நினைவு பளிச்சிட்டது... நிச்சயம் உள்ளூர் தொலைக்காட்சி இந்த விசயத்தைக் காணொளியாய் எடுத்திருப்பார்கள் என்று உறுதியாய் நம்பியவன் அந்தப் பகுதியில் இருந்து செயல்படும் தொலைக்காட்சியை அணுகி அவன் கேட்ட போது அவன் நினைத்தது போல் அதை அவர்கள் காணொளி காட்சியாகப் படம் பிடித்து வைத்திருந்தனர்... அதில் என்ன நேரம், நாள், தேதி முதற்கொண்டு சரியாகப் பதிவு செய்யப்பட்டு இருந்தது...

இரவோடு இரவாக இதை எல்லாம் சேகரித்து முடித்தவன் மறுநாள் காலையில் தனது உயரதிகாரியை சந்தித்து இந்த ஆதாரங்களை அவரிடம் சமர்ப்பித்து முத்துபேச்சி நிரபராதி என்று நிரூபித்தான்... முத்துபேச்சி நிரபராதி என்றான பின் அவன் மீது சுமத்தப்பட்ட களங்கமும் தானாகக் காணாமல் போனது...

அதற்குப் பின் அந்த உயரதிகாரியை விரைவாகச் செயல்பட வைத்தது செல்வநாதனின் செல்வாக்கு... அதன் விளைவு விஜய்யின் இடைக்காலப் பணி நீக்கத்தை ரத்துச் செய்து அவனை உடனே வேலையில் சேர சொல்லி உத்தரவிட்டது... அதே போல் சரவணனின் செயலுக்கான காரணம் கேட்டு அறிக்கை விடுத்ததோடு அவனைப் பதவியில் இருந்து இடைநீக்கம் செய்ய வைத்தது...

காவல்துறை உதவி ஆணையராய் கம்பீரமாய்த் தனக்கு வணக்கம் தெரிவித்த விஜய்யை கண்டு புன்னகைத்த மேலதிகாரி,

"நூலில் ஆடும் பொம்மைகள் மாதிரி காவல்துறை மாறி போய்விட்டது..." என்றார் வருத்தத்தோடு...

ஏனெனில் ஒரு நிரபராதி மேல் எந்தவொரு வழக்கும் பதிவு செய்யாமல் கைது செய்து துன்புறுத்திய செயல் அவருக்குப் பெருத்த அவமானமாக இருந்தது... ஆனால் காவல்துறையில் இருந்து கொண்டு இது போல் நடப்பதை தவிர்க்கவும் இயலாது என்பதை உணர்ந்தே இருந்தார் அவர்...

"சில சமயம் அது நன்மைக்கும் பயன்படுகிறதே சார்..." என்ற விஜய்யின் கூற்றை அவர் ஒத்துக் கொள்ளத் தான் வேண்டியிருந்தது...

"சார்... அடுத்து வரும் நாட்களில் என்னோட ப்ளானை நான் செயல்படுத்தலாம்ன்னு இருக்கிறேன்..."

அவருக்குமே தனது நிலையைக் குறித்துத் தலைக்குனிவாக இருந்ததோ என்னவோ... அதனால் ஊரை காக்கும் காவல்துறை அதிகாரியாய்க் கம்பீரமாக,

"நிச்சயம் அதைச் செயல்படுத்துங்க விஜய்... அப்படியாவது இவங்களை மாதிரியான ஆட்களோட ஆட்டம் குறையுதான்னு பார்ப்போம்..." என்று அவர் அதற்கு அனுமதி அளித்தார்...

சாலையில் ஒலித்த ஒலிப்பான் சத்தத்தில் தனது நினைவு கலைந்த விஜய் காரை மருத்துவமனை நோக்கி விரைவு படுத்தினான்...

****

மருத்துவமனையில் கார் நின்றதும் அதுவரை கண்களைச் சும்மா மூடி கொண்டிருந்த முத்துபேச்சியும் எழுந்து அமர்ந்தவள் கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தாள்... மகளைக் காணும் அவசரம் அவளுக்கு...

அதை உணர்ந்தவனாய் விஜய்யின் முகம் மென்மையானது...

"சாமி... ஹாஸ்பிட்டல் வேறயா இருக்கே..."

அந்தத் தனியார் மருத்துவமனையைக் கண்டு அவள் குழம்பி போய் நிற்க...

"இது என்னோட பிரெண்ட்டோடது... கயலோட பாதுகாப்புக்காக..."

அவன் சொன்னதைக் கேட்டு அவளது தேகம் இறுகி போனது... அதற்கு மேல் அவள் ஒன்றும் பேசவில்லை... மகளைக் காண இருவருமே வேகமாய்ச் சென்றனர்...

அங்கு ஐசியூ வாசலில் நின்றிருந்த பாண்டியன் அவளைக் கண்டதும், "முத்து... வந்துட்டியா புள்ள...?" என்று சந்தோசத்துடன் அவளைப் பார்த்து கேட்டவன் அவளது காயங்களைக் கண்டு,

"என்ன இது புள்ள... இப்படிப் போட்டு உன்னைய அடிச்சியிருக்காங்க..." என்று அழ துவங்க...

"பாண்டி அழாதே..." என்று நண்பனுக்கு ஆறுதல் உரைத்தவளின் கண்கள் ஐசியூ வாசலிலேயே நிலைத்து இருந்தது...

"பாண்டி... முதல்ல அவள் கயலை பார்த்துட்டு வரட்டும்..." அவளின் மனநிலையை ஊகித்தவனாய் விஜய் சொல்ல...

பாண்டியனும் சரி என்றபடி அவளை விட்டு விலகி நிற்க...

"பேச்சி... நீ போய்க் கயலை பார்..." விஜய் சொன்னதும் வேகமாய் ஓடினாள் முத்துபேச்சி...

அவள் செல்வதை வேதனையுடன் பார்த்தபடி அவளைப் பின் தொடர்ந்தான் விஜய்...

வாடி வதங்கிய கொடி போல் படுத்திருந்த மகளைக் கண்டதும் முத்துபேச்சியின் கண்கள் கார்கால மேகங்களைப் போன்று கண்ணீரை பொழிந்தது...

கழுத்தில் பெரிதாகக் கட்டுப் போடப்பட்டிருக்க, மூக்கின் மீது செயற்கை சுவாசக்குழாய்ப் பொருத்தப்பட்டிருக்க விழிகள்

மூடி உணர்வற்று கிடந்த மகளைக் கண்டு அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது...

ஓவென்று கதறியழ துடித்தது அவளது மனது... ஆனால் இருக்கும் சூழ்நிலையோ அப்படிச் செய்ய விடாது அவளைத் தடுக்க, வாயை மூடி கொண்டு அழுகையைக் கட்டுப்படுத்த முயன்றும் அவளது கண்கள் கண்ணீரை பொழிவதை நிறுத்தவில்லை...

அவளின் அநாதரவான மனதை உணர்ந்தவனாய் விஜய் அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்... தந்தை அவனுக்கே மகளின் நிலை கண்டு மனம் பரிதவிக்கத்தான் செய்கிறது... பத்து மாதம் கஷ்டப்பட்டுச் சுமந்து பெற்றெடுத்து இத்தனை வருடங்கள் அருமை பெருமையாய் வளர்த்த தாயான அவளுக்கு மனதில் எத்தகைய துன்பம் இருக்கும் என்பதை உணர்ந்தவனாய் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான் அவன்...

அந்த நிலையிலும் அவள் அவனை விட்டு விலக எண்ணி அவனின் அணைப்பில் இருந்து திமிற முயன்றாள்...

"ஷ்... ஹனி..." என்றபடி அவளைத் தடுத்தவன் தனது அணைப்பினை சிறிதும் விலக்கவில்லை...

அவனது அழைப்பு, அணைப்பு எல்லாம் சேர்ந்து அவளின் பழைய ரணத்தைக் கீறிவிட்டது... அத்தோடு மகளை நினைத்து எழுந்த துன்பம் வேறு சேர்ந்து கொள்ள அவள் தானாய் அவனது நெஞ்சில் முகம் புதைத்தாள்...

அவனது சட்டைக் காலரை இரு கையால் பற்றியபடி அவனுள் புதைந்து கண்ணீர் விட்டவளின் மனதில் அத்தனை துயரம் இருந்தது...

அதை உணர்ந்தவனாய் அவனும் அவளது முதுகை வருடி ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தான்... ஆனால் அவள் அழுகையை நிறுத்தும் வழியில்லாது போகவும்,

"இது ஐசியூ... ரொம்ப நேரம் இருக்க முடியாது..." தனது அணைப்பை விலக்காது கூறியவனை மெல்ல தனது விழி

மலர்த்தி ஏறிட்டாள் அவள்...

"கயல் பிழைச்சிருவாள் தானே சாமி..."

உயிரை கையில் பிடித்துக் கொண்டு கேட்டவளின் கண்கள் மகளை ஒரு நொடி நோக்கிவிட்டு மீண்டும் அவனை நோக்கி திரும்பியது...

"பேபிக்கு ஒண்ணுமாகாது... இன்னும் இரண்டு, மூன்று நாளில் நினைவு திரும்பி விடும்ன்னு சொல்லியிருக்காங்க... பயப்படத் தேவையில்லை..."

பயத்தில் அவளது நெற்றியில் துளிர்த்த வியர்வை முத்துக்களைத் தனது கையால் பரிவுடன் துடைத்தபடி அவன் கூற, அதில் தீச்சுட்டார் அவனிடம் இருந்து அவள் விலகினாள்...

அதைக் கண்டு அவனது மனம் வலித்தது... ஆனாலும் எதையும் வெளியில் காட்டி கொள்ளவில்லை... மௌனமாக அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்...

ஐசியூவுக்குப் பக்கத்தில் அவர்கள் இருவருக்கும் அறை ஒதுக்கி கொடுக்கப்பட்டு இருந்தது... நேற்றிரவு பாண்டியன் அவளுக்குத் தேவையான உடைகளை வீட்டில் இருந்து எடுத்து வந்துவிட்டான் விஜய்யின் உதவியுடன்... அவன் காவலர்களிடம் சொன்னதால் தான் பாண்டியனால் வீட்டினுள் நுழையவே முடிந்தது...

அறையில் இருந்த கட்டிலில் அமர்ந்த முத்துபேச்சி முழங்காலை கட்டி கொண்டு அதில் தலை கவிழ்ந்து அமர்ந்துவிட்டாள்... விஜய்யோ அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன் விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்... அவனது முகம் சொல்லொண்ணா வேதனையில் ஆழ்ந்திருந்தது...

இருவரையும் வருத்தத்தோடு பார்த்திருந்தான் பாண்டியன்... விஜய் முத்துபேச்சிக்காகப் பார்த்து பார்த்துச் செய்வது கண்டு பாண்டியன் மனம் கூட அவனுக்காகப் பரிதாபப்பட்டுத் துடித்தது...

"ஏம்புள்ள நீ இப்படி இருக்க...? விசய்யை பார்த்தா பாவமாயிருக்கு புள்ள... இப்பவாவது ஒத்துக்கோ புள்ள விசய் தான் கயலோட அப்பான்னு..."

திடுமெனத் தோழியின் தோளை உலுக்கிய பாண்டியன் அப்படிக் கேட்க, திடீரென்று அவன் அப்படிக் கேட்டதில் அர்த்தம் புரியாதவளாய் அவள் மலங்க மலங்க விழித்தாள்...

அவளது நிலை கொண்டு விஜய்க்கு இரக்கமாக இருந்தது...

"பாண்டி... அவளை அமைதியாயிருக்க விடு..." என்று அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினான்...

"இனியும் அமைதியாயிருக்க என்னால் முடியாது விசய்... அவளுக்காக இல்லாங்காட்டியும் அங்கே கண் முழிக்காம கெடக்குதே கயலு, அதுக்காகவாவது ஒத்துக்கச் சொல்லு விசய்... நாங்க தான் தகப்பன் இருந்தும் அநாதை மாதிரி வாழ்ந்தோம்... அது மாதிரி கயலும் வாழணுமா...?" என்று குமுறிய பாண்டியனை நிதானமாய் ஏறெடுத்து பார்த்த முத்துபேச்சி,

"கயலோட அப்பா விஜய்ன்னா அது இந்த விஜய்யா தான் இருக்கணுமா...?" என்றாள் கூர்மையாய் பாண்டியனை அளவிட்டவாறு...

"முத்து..." அதில் பாண்டியன் சற்றுத் திணறித்தான் போனான்...

ஆனால் இதற்கு எல்லாம் விஜய் அசந்துவிடவில்லை... அவளையே இமைக்காது பார்த்திருந்தான்...

"அப்போ அந்த விஜய் யாரு...?" என்று அழுத்தமாய்க் கேட்டான் விஜய்...

"நிச்சயம் நீ இல்லை சாமி..." என்று அதை விட அழுத்தமாய்ச் சொன்னவள், "நீ என்ன சூரியக்கடவுளா சாமி... பார்வையால புள்ள கொடுக்கிறது..." என்று அவள் கிண்டல் வேறு அடிக்க...

அதில் விஜய்யின் ஆத்திரம் எல்லையைக் கடந்தது... அதே ஆத்திரத்தோடு அவளருகில் வந்தவன் அவளது இரு தோள்களையும் பற்றி உலுக்கியபடி,

"ஒரு டிஎன்ஏ டெஸ்ட் பண்ணி பார்த்தா தெரியும்... கயல் என்னுடைய குழந்தையா இல்லையான்னு..."

அவனது வார்த்தையில் அவள் வாயடைத்து போய் நின்றாள்...

"நிரூபிச்சு காண்பிக்காவாடி.... அவள் என்னோட மகள் தான்னு... அப்போ ஒத்துக்குவியா நான் அந்தச் சூரியக்கடவுள் மாதிரி பார்வையால புள்ளை தந்தேன்னா இல்லையான்னு...?"

அவனது ஆவேச பேச்சில் அவளையும் அறியாது அன்றைய நாள் நினைவு அவளது மனதில் எழுந்தது... தன்னிலை மறந்த அந்த நிலையிலும் கண்ணியத்தோடு தன்னை விட்டு விலகியவனை வற்புறுத்தி அவனுள் தான் புதைந்த கதையை நினைத்து பார்த்தவளுக்கு வெட்கத்தில் முகம் அந்தக் கீழ்வானம் போல் சிவந்து போனது...

"விசய்... இனியும் முத்துவை நம்பி எந்தப் பிரயோஜனமும் இல்லை... அந்த டெஸ்ட்டு எடுத்து பார்த்துட்டு கயலையும், முத்துவையும் உன் கூடக் கூட்டிட்டு போ..." என்று பாண்டியன் அவனுக்கு ஆதரவாகப் பேச, தனது வெட்கத்தினை மூட்டை கட்டி வைத்துவிட்டு நண்பனை முறைத்து பார்த்தாள் அவள்...

பாண்டியனின் பேச்சில் மனம் சோர்ந்து போனவனாய் விஜய் அவளிடம் இருந்து விலகி மீண்டும் நாற்காலியில் வந்து அமர்ந்தான்...

"அதைச் செய்ய எனக்கு ஒரு நிமிசமாகாது பாண்டி... ஆனால் அந்த டெஸ்ட்டை செஞ்சு நான் பேச்சியைக் களங்கப்படுத்த விரும்பலை... எங்களோட காதலையும் களங்கப்படுத்த விரும்பலை... எங்களோட உறவையும் அசிங்கப்படுத்த விரும்பலை..."

"அவளோட காதலையே என்னிடம் சொல்லாதவள், கயலையா என்னோட மகள்ன்னு ஒத்துக்கப் போகிறாள்... அவள் வாயை திறக்க மாட்டாள் பாண்டி... அவள் வாய் திறந்து சொன்னால் தான் எனக்கு அவளோட காதல் புரியுமா...? அவள் சொல்லாமலே எனக்கு அவளோட காதல் புரியும்... என் மேல் காதலில்லாமலா அவள் தன்னையே எனக்கு அர்பணிச்சு இருக்கிறாள்... அதிலேயே அவளின் காதலின் அளவு புரியலையா... எந்தப் பொண்ணும் இழக்காததைப் பேச்சி எங்க காதலுக்காக இழந்திருக்கிறாள்... அப்படிப்பட்ட தியாகம் பண்ணின அவளை அசிங்கப்படுத்த சொல்லுறியா பாண்டி... என்னால் அது செய்ய முடியாது..."

கண்கள் கலங்க மறுத்தவனின் காதல் முத்துபேச்சியின் மனதை சுகமாய்த் தாலாட்டியது... அத்தகைய காதலை இழப்பது அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது...

'கடவுளே... என்னை ஏன் பூமிக்குப் பாரமாய்ப் படைச்ச...' என்று மனதுக்குள் கடவுளிடம் சண்டை போட்டாள் தனது தூரதிர்ஷ்டத்தை எண்ணி...

விஜய் அவன் பாட்டிற்குப் பேசிக் கொண்டே போனான்... அவனின் புரிதலான காதலின் ஆழம் அவனது ஒவ்வொரு வார்த்தையிலும் தெரிந்தது... வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவன் ஒரு கோழையாகத் தெரியலாம்...

நல்ல புரிதல் கொண்ட அன்பான ஆண் ஒருவன் தன்னவளிடம் மட்டும் காதலில் கோழையாகத் தான் மாறிப் போகிறான்... அது போல் தான் அவனும் இருந்தான்... அந்த நிலையிலும் அவளுக்காகத் தான் யோசித்தானே தவிர... அவனுக்காக இல்லை...

அவனுக்கும் வருத்தம் இருக்கிறது தான்... ஆனால் அதை விட வருத்தம் பெண்ணவளுக்கும் உண்டு என்பதை மிகச் சரியாகக் கணித்தான் அந்த நல்ல காதலன்...

"தனியா ஒரு பெண் குழந்தையைச் சுமந்து, பெத்தெடுத்து, வளர்ப்பது என்பது எவ்வளவு கஷ்டம்ன்னு எனக்கும்

தெரியும்... அதையும் பேச்சி துணிஞ்சு செஞ்சிருக்காள்ன்னா அதுக்குக் காரணம் என் மேல் அவள் வைத்த காதல் தான்னு புரியாத அளவுக்கு நான் ஒண்ணும் முட்டாளில்லை... அந்தக் கஷ்டத்தையும் அவள் விரும்பி அனுபவிக்கிறாள் என்றால் அதுக்குக் காரணம் நான் தான்... நான் மட்டும் தான்..." என்றவனின் பார்வை அவளை உற்று நோக்கியது...

அவனின் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாது அவள் தலையைக் குனிந்து கொண்டாள்... அவன் கூறியது அனைத்தும் உண்மை தானே... அதை மறுக்க அவளால் இயலாதே... தனது இயலாமையை நினைத்து அவளுக்கு அழுகை வந்தது...

"பேச்சியைப் பத்தி எனக்கு நல்லா தெரியும் பாண்டி... பிடிக்குது, பிடிக்கலைன்னு எதையும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு செஞ்சு பழக்கப்பட்டவள்... அப்படிப்பட்டவள் என் விசயத்தில் இப்படி இருக்கிறதுக்குக் காரணம் தான் எனக்குத் தெரியலை... ஆனால் அவளது மௌனத்துக்குப் பின்னால் ஏதோ பெருசா இருக்கு... அது என்னன்னு தான் எனக்கும் புரியலை..." என்றவனது விழிகள் அவளை அழுத்தமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது விடாது...

எதற்கும் பதில் பேசாது தலையைக் குனிந்து இருக்கும் அவளின் நிலை கண்டு அவனுக்குப் பரிதாபமும் வந்தது... அதே சமயம் சிறிது கோபமும் எழுந்தது... எதற்காக இந்த வேதனையான மௌனம் என்று...

"என் காதல் உண்மைன்னா அது அவளது மனசை தட்டி அவளை என்னிடம் வரவழைக்கும்... அப்போ அவளே சொல்வாள் நான் தான் அவளோட காதலன், கணவன்னு... அது வரைக்கும் நான் காத்து கொண்டிருப்பேன்..." என்று முடித்தவனுக்குக் காதலின் தோல்வி மனதை பெரிதாய்த் தாக்கியது...

இருவரின் மௌனப் போராட்டத்திற்கு இடையில் அவர்களது வாரிசின் வளமான வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து அவனுக்கு மிகுந்த கஷ்டமாக

இருந்தது... ஆனாலும் தன்னவளின் மனதை நோகடித்துக் கொண்டு எதையும் செய்ய அவனால் முடியவில்லை...

அவளின் தைரியத்தின் அளவை அவன் அறிந்தவன் தானே... அப்படிப்பட்டவள் காதலில் மட்டும் ஏன் இப்படிக் கோழையாகி தவிக்கிறாள் என்று அவனுக்கு ஆயாசமாக இருந்தது...

காதலுக்காக வீட்டையும் எதிர்க்க தயாராக இருப்பவன் அவன்... அவளும் அப்படியே... ஆனாலும் 'இன்னமும் காதலையும் சொல்ல மாட்டேன், உன் வாரிசையும் அடையாளம் காட்ட மாட்டேன்' என்று அவள் பிடிவாதம் பிடிப்பது ஏன் என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

சிறிது நேரம் அங்குக் கனத்த மௌனம் நிலவியது...

"நாளைக்கு அத்தையோட உடல் கையில் கிடைச்சிரும்... பாண்டி... நீயும், முத்துவும் போய் இறுதி சடங்கை முடிச்சிட்டு வாங்க... அதுவரைக்கும் நான் இங்கே கயலுக்குத் துணையாக இருக்கிறேன்..." என்று விஜய் சொல்ல...

தனது அன்னையை அவன் 'அத்தை' என்று விளித்ததைக் கேட்டு முத்துபேச்சியின் உடல் கூசி போனது... எத்தகைய உயர்வான இடத்தில் இருப்பவன் அவன்... தன்னால் தானே அவனுக்கு இந்த இழிவான சொந்தங்கள் ஏற்பட்டது என்று அவள் தனக்குள் குமைந்து போனாள்...

"ஏன்டா என்னை விட்டு போகாம என் உயிரை எடுக்கிற... இதுக்கு நீ என்னைத் திட்டி, நாலு அடி கூட அடிச்சிருக்கலாம்...' என்று மனதுக்குள் அரற்றி கதறினாள் அவள், அவனது காதலை நினைத்து...

****

மறுநாள் விஜய் மகளுக்குத் துணையாக இருக்க முத்துபேச்சி, பாண்டியனுடன் தனது வீட்டிற்குச் சென்றாள்... அவர்கள் சென்ற அதே நேரம் குமாரியின் உடலும் வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டது...

அடுத்தச் சில மணி நேரங்களில் குமாரியின் உடல் சகல மரியாதையுடன் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது... அதைக் கண்டு முத்துபேச்சியின் கண்கள் கலங்கியது...

பாண்டியன் மகனாக மாறி குமாரிக்கான இறுதி காரியங்களைச் செய்தான்....வளர்த்த பாசம் அவனது கண்களையும் கலங்கச் செய்தது...

அங்குத் துக்கம் கேட்க வந்த செல்வநாதன் தனிமையில் முத்துபேச்சியிடம் விஜய்யை பற்றிக் கேட்டார்... அதற்குப் பதில் பேசாது அவள் மௌனம் காத்தாள்...

"நித்திக்காக உன் காதலை நீ மறுத்தியாம்மா..."

அவர் கேட்டதற்கு அவள் அமைதியாக இருக்க...

"நித்தி மாதிரி நீயும் என் பொண்ணு தானேம்மா... நீ உன் காதலை என்னிடம் சொல்லியிருந்தா நானே உனக்காக விஜய் வீட்டில் பேசியிருப்பேனே..."

அவர் பாசத்தோடு கூறிய போது அவள் விலுக்கென்று அவரை நிமிர்ந்து பார்த்தாள்... பின்பு எதையோ நினைத்து விரக்தி புன்னகை சிந்தியவாறு அப்படியே நின்றிருந்தாள் அவள்...

அதற்கு மேல் அவளது மௌனத்தைக் கலைக்க முடியாது செல்வநாதன் தோல்வியோடு அங்கிருந்து கிளம்பினார்...

முத்துபேச்சியும், பாண்டியனும் மீண்டும் மருத்துவமனை வந்த பின்பே விஜய் தனது வீட்டிற்குக் கிளம்பினான்... இப்போது கயல்விழியின் உடல்நிலை வேகமாக முன்னேறி வருவதை அறிந்த பின்னரே அவன் அங்கிருந்து கிளம்பினான்...

ஏனெனில் இனி தானே அவன் களையெடுக்க வேண்டிய பணி இருக்கிறது... அதற்கான வேலையில் அவன் இறங்கினான்...

தனது மகளைக் குற்றுயிராய் கண்டு அவன் துடித்தது போல் அந்தச் சுந்தரலிங்கமும் துடிக்க வேண்டாமா...?

புத்திர இழப்பினால் உண்டாகும் சோகம் என்னவென்று என்பதை அந்தக் கயவனுக்குப் புரிய வைக்க வேண்டாமா...?

அதற்கு அந்தச் சந்தோஷின் கதையை ஒரேடியாய் முடிக்க வேண்டும்... அதற்கான ஆயத்த பணிகளைத் திட்டமிட்டு முடித்தவன் நேரிடையாய் களத்தில் இறங்கினான்...

வாசம் நேசமாகும்...!!!

ஏதேதோ எண்ணங்களில் மூழ்கியபடி நாற்காலியில் அமர்ந்திருந்த விஜய் சுத்தமாய்த் தனது தூக்கத்தினைத் தொலைத்திருந்தான்... இது போன்று உறக்கத்தைத் துறந்திருப்பது என்பது அவனது வேலையில் சகஜமான ஒரு விசயம் தான்... ஆனாலும் இத்தனை மனவேதனையுடன் உறங்காமல் தவித்திருப்பது இது தான் முதல் தடவை...

எத்தனையோ இரவுகள் தன்னவளின் நினைவுகள் அவனை வாட்டி வதைத்த போதும் அந்த நினைவுகளே அவனைச் சுகமாய்த் தாலாட்டி உறங்கவும் வைத்திருக்கிறது... ஆனால் இன்று மகளின் நிலை அவனுக்கு அத்தனை வேதனையை அளித்தது...

அதற்குக் காரணமானவர்களைத் தண்டித்தால் மட்டுமே அவனது வேதனை முழுதாய் அடங்கும்... அந்தக் கயவர்களை நினைத்த மாத்திரத்தில் தனது யோசனைகளைத் தள்ளி வைத்தவன் தனது கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தான்...

விடியற்காலை ஐந்து மணியாகி இருந்தது... வீட்டிற்குச் சென்று குளித்துச் சீருடை மாற்றிக் கொண்டு வேலைக்குக் கிளம்ப வேண்டும்... ஏற்கெனவே திட்டமிட்ட செயல் தான் என்றாலும் அதற்கு இன்னமும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதால் இன்று அவன் கட்டாயம் வேலைக்குச் சென்றாக வேண்டும்...

நாற்காலியில் இருந்து எழுந்தவன் அங்கிருந்த இன்னொரு கட்டிலில் உறங்கி கொண்டிருந்த பாண்டியனை வாஞ்சையுடன் பார்த்தான்... தன்னவளின் இன்பத்திலும், துன்பத்திலும் உடன் இருப்பவன் அவன் அல்லவா...

பின் தன் கண்களைத் திருப்பி மற்றொரு கட்டிலில் கால்களையும், கைகளையும் குறுக்கி கொண்டு படுத்திருந்த முத்துபேச்சியைக் கண்டதும் அவனது முகம் மென்மையுற அவள் அருகில் வந்தான்...

எப்போதும் அணிந்திருக்கும் ஜீன்ஸ் பேண்ட்டும், ஆண்கள் அணியும் பருத்தி முழுக்கை சட்டையும் அணிந்திருந்தாள் அவள்... நீண்ட முழுக்கையை முழங்கை வரை ஏற்றி சுருட்டி விட்டிருந்தாள்... காதில் சின்னக் கடுக்கன் அளவு தங்கத் தோடு ஒன்று மட்டுமே அணிந்திருந்தாள்... மற்றபடி கழுத்து, கைகளில் எந்தவித ஆபரணமும் இல்லை...

காவல்நிலையத்தில் அடி வாங்கியதில் ஆங்காங்கே சிவந்து கன்றிப் போயிருந்தது அவளது மாசுமருவில்லாத பால்நிலா முகம்... நேற்று இரத்தக் காயத்திற்கு மருந்து போட்டதன் அடையாளமாக அவளது முகத்தில் ஆங்காங்கே பிளாஸ்திரி ஒட்டப்பட்டு இருந்தது...

அந்த நிலையிலும் அவள் அவனது மனதை கவரத்தான் செய்தாள்... அவன் ஒன்றும் அவளது புற அழகை கண்டு காதலிக்கவில்லையே... அவளது அக அழகை கண்டு தானே காதலித்தான்... அதனால் தான் அவனது மனதிலிருந்த காதல் அவளை எந்த நிலையிலும் ரசித்துப் பார்த்தது...

என்ன தான் அவள் வெளியில் தைரியமான பெண்ணாகத் தன்னைக் காட்டி கொண்டாலும், அவள் இப்படி உடலை குறுக்கி கொண்டு படுத்திருப்பதன் மூலம், அவளது மனதின் அநாதரவான நிலையை அப்பட்டமாய் அது எடுத்துக் காட்டியது...

அதில் அவனது மனமும், விழிகளும் கசிந்தது அவளது தனிமை துயரை எண்ணி...

அவளது தலையை வருடி கொடுக்க ஆவல் கொண்டு எழுந்த கைகளை முயன்று கஷ்டப்பட்டு அடக்கி கொண்டான்... அங்கிருந்த போர்வையை எடுத்து அவள் மீது போர்த்திவிட அவன் முயன்ற போது சட்டென்று அவள் விழித்து எழுந்தமர்ந்தாள்...

"என்ன சாமி...?"

மகளின் நினைவில் அரைகுறை தூக்கத்தில் இருந்திருப்பாள் போலும்... அவள் மீது இரக்கம் சுரந்தது அவனுக்கு...

"ஒண்ணுமில்லை... நீ தூங்கு..." என்றவன் போர்வையை அவளிடம் கொடுத்தான்...

"இல்லை... வேண்டாம்..." என்க...

"பேச்சி... இன்னைக்கு நான் வேலைக்குக் கிளம்பணும்... கயலுக்குத் தேவையானதை எல்லாம் பிரெண்ட் கிட்ட பார்த்துக்கச் சொல்லியிருக்கேன்... ஏதாவது அவசரம்ன்னா எனக்கு ஃகால் பண்ணு..."

அவன் கூறியதற்கு அவள் சரி என்பது போல் மௌனமாய்த் தலையசைத்தாள்...

அவன் ஒன்றும் பேசாது அவளது முகத்தைப் பார்த்தவன் பின் அறையை விட்டு வெளியேற, அவளும் அவன் பின்னேயே வந்தாள்...

"என்ன வேணும்...?" அவளின் வருகையை உணர்ந்தார் போன்று அவன் அப்படிக் கேட்க...

"கயலை பார்க்கலாம்ன்னு..."

"சரி வா..." என்றவன் அவளை ஐசியூவிற்கு அழைத்துச் சென்றான்...

ஏனெனில் அவனும் மகளைப் பார்த்துவிட்டு தான் செல்ல எண்ணியிருந்தான்... அங்கு வாசலில் அமர்ந்திருந்த ராமனை அவளுக்கு அறிமுகப்படுத்திவிட்டு,

"உனக்கு என்ன தேவைன்னாலும் இவர் கிட்ட சொல்லு... உடனே ஏற்பாடு செஞ்சு கொடுப்பார்..." என்றவன் அவரிடம் திரும்பி,

"இப்போ அப்பா எப்படி இருக்கிறார்...?" என்று கேட்க...

மேலதிகாரியின் அக்கறையில் மனம் நெகிழ்ந்தது ராமனுக்கு... விஜய்யின் இந்தக் கனிவான குணத்திற்காகத் தானே மருத்துவமனையில் இருக்கும் தந்தை அருகில் கூட இருக்காமல் அவர் வேலைக்குக் கிளம்பி வந்தது... தனது தவறால் இந்தப் பிஞ்சு குழந்தை பாதிக்கப்பட்டு விட்டதோ என்ற குற்றவுணர்ச்சி வேறு அவரது மனதை அரித்தது... அதனால் தான் அவர் உடனே இங்கு வந்துவிட்டார்...

"இப்போ பரவாயில்லை சார்... வீட்டில் எல்லோரும் அவருக்குத் துணைக்கு இருக்காங்க... அதான் நான் இங்கே வந்துட்டேன்... திரும்ப இன்னொரு முறை தவறு நடக்காம நான் பார்த்துக்கிறேன் சார்..."

அவர் உறுதியளித்ததைக் கண்டு புன்னகை புரிந்த விஜய் முத்துபேச்சியுடன் ஐசியூவினுள் நுழைந்தான்...

நேற்று முத்துபேச்சியுடன் மகளைக் காண வந்த போது தன்னவளின் நிலையைப் பற்றித் தான் யோசித்தானே தவிர... தன் மனதின் வேதனையை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

ஆனால் இப்போது அவனது அத்தனை வேதனையும் ஒருங்கே எழுந்து அவனது மனதில் பெரிதாய் வலிக்கச் செய்தது...

கைகள் நடுங்க மகளின் முகத்தை மென்மையாய் வருடி கொடுத்தான்... அவளின் சுவாசத்திற்காகப் பொருந்தியிருந்த கவசம் அவளது மலர் முகத்தைப் பாதி மறைத்திருந்தது...

முத்துபேச்சியைப் போன்று கயல்விழியும் நல்ல நிறம்... கண்கள் மூடியிருந்த போதும் அதுவே சொல்லாமல் சொல்லியது உருவத்தில் அவள் தன் அன்னையைப்

போன்று என்று... அன்னையைப் போன்றே அதே கூரான நாசி...

அதற்குக் கீழே உற்று கவனித்தவன் சற்று திகைத்து தான் போனான்... கயல்விழியின் உதடுகள், அவளது தாடை பகுதி, மோவாயில் இருக்கும் சிறு பிளவு, அதில் சிறியதாய் இருக்கும் மச்சம் என்று எல்லாம் சொல்லாமல் சொல்லியது அவள் அவனது மகவு என்று...

அவளைச் சாதாரணமாகப் பார்க்கும் எவரும் அவள் தனது அன்னையைப் போன்று இருக்கிறாள் என்று தான் கூறுவர்... ஆனால் கவனித்துப் பார்த்தால் தான் தெரியும் இந்தச் சிறு வேறுபாடு...

கண்கள் கலங்க அந்த மச்சத்தை வருடி கொடுத்தவனின் மனவுணர்வுகளைக் கண்டு கொண்டவளாய் முத்துபேச்சி உதட்டை கடித்துக் கொண்டு தலைக்குனிந்து மௌனமாய் நின்றிருந்தாள்... அவளது மனதிலும் ஆழிப்பேரலையாய் உணர்வுகள் எழுந்து அவளை உயிரோடு கொன்றது...

அந்தக் கணம் அவனது பார்வையும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தது... உணர்வுகளை அடக்கி கொண்டு இருந்தவளின் துன்பம் அவனுக்கும் புரிவதாய்... இப்படித் துன்பத்தைத் தாங்கினாலும் தாங்குவேன், உண்மையை மட்டும் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்று அடம்பிடிக்கும் அவளை என்ன செய்து தனது வழிக்குக் கொண்டு வருவது என்று அவனுக்குச் சத்தியமாய்த் தெரியவில்லை...

உணர்வுகள் மனதினை போட்டு உழட்டியதாலோ என்னமோ திடுமென அவளது தலையில் அப்படியொரு வலி ஏற்பட்டது... தன்னையும் அறியாது பின்னந்தலையில் கையை வைத்து அழுத்தி கொண்டவளின் முகம் வலியில் கசங்கியது...

அவளது முக மாறுதலை கண்டு பதற்றத்துடன் அவள் அருகில் வந்தவன்,

"பேச்சி... என்ன செய்யுது...?"

"தலை வலிக்கிற மாதிரி இருக்கு..."

"தூங்காம இருக்கிறதால இருக்கும்..." என்று அவளிடம் உரைத்தவன் மகள் புறம் திரும்பி அவளது முகத்தைப் பாசத்தோடு வருடி கொடுத்துப் பின் நெற்றியில் முத்தமிட்டு,

"சீக்கிரம் கண் முழிச்சுப் பாருடா பேபி..." என்று கலங்கிய குரலில் கூறியவன் பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு முத்துபேச்சியை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்...

வெளியில் இருந்த ராமனிடம் தலைவலிக்கான மருந்தையும், காபியும் வாங்கி வர சொல்லிவிட்டு அங்கிருந்த நாற்காலியில் அவளை அமர செய்து தானும் அவள் அருகில் அமர்ந்தான்...

அவனது கரிசனையில் அவளது மனதின் அலைப்புறுதல் சற்றுக் குறையத் தலைவலியும் சிறிது குறைந்தது... ஏனோ அவனிடம் பேச வேண்டும் போலிருந்தது அவளுக்கு...

"சாமி..." என்று அவள் அவனை அழைக்க...

அந்த அழைப்பில் திரும்பியவன் அவளை ஆழ்ந்து பார்க்க... அதன் அர்த்தம் புரிந்தவளாய் அவள் முகம் சிவந்து தலை கவிழ்ந்தாள்... அவன் அவளது காதல் அழைப்பான 'விஜூ'வை எதிர்பார்க்கிறான் என்பதைப் பெண்ணவளும் உணர்ந்து தான் இருந்தாள்... ஆனாலும் அவளால் அந்த அழைப்பை அழைக்க முடியவில்லை...

அது எதனால் என்ற காரணம் அவளது மனதில் எழுந்து அவளை அலைக்கழிக்க ஆரம்பிக்க முயன்று அந்த நினைவை புறம் தள்ளிவிட்டு அவனிடத்தில் சாதாரணமாகப் பேசலானாள்...

"எப்படிச் சாமி... என்னைய நிரபாரதின்னு நிரூபிச்ச...?" ஆவலுடன் கேட்டவளை ஏமாற்ற மனமில்லாது நடந்ததை அப்படியே அவன் உரைத்தான்...

அதைக் கேட்டு அவளது முகம் பூவாய் மலர்ந்தது...

"ஆமாமில்ல... அப்படி ஒண்ணு இருக்குல்ல..." என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள் பின் அவனைப் பார்த்து,

"உன்னைய நான் என்னமோ நினைச்சேன் சாமி... ஆனா உனக்கும் கொஞ்சம் மூளை வேலை செய்யுது..." என்று கேலியாய் சொன்னவளை அவன் உணர்வில்லாது பார்க்க...

அவனது அந்தப் பார்வையில் பாவையவள் அப்படியே பனியாய் உறைந்தாள்...

"எதை எல்லாமோ துப்பறிஞ்சு கண்டுபிடிக்கிற என்னால் உன் மனசில் என்ன இருக்கு, நீ இப்படி இருக்கிறதுக்கு என்ன காரணம்ன்னு கண்டுபிடிக்க முடியலையே..." என்று ஆதங்கமும், விரக்தியுமாய்ச் சொன்னவன்,

"சும்மாவா சொன்னாங்க பெண்களோட மனம் அந்த ஆழ்கடலை விட ஆழமானதுன்னு..." என்று துயர் கலந்த குரலில் கூறியவனைக் கண்டு அவளது மனம் வேதனையுடன் அரற்றித் துடித்தது...

'அந்த ஆழ்கடல் போன்ற என் மனம் முழுவதும் நீ தானே விஜூ நிறைஞ்சிருக்கே... அதைச் சொல்ல முடியாத அளவுக்குத் தூரதிர்ஷ்டசாலியா இந்தப் பாவி போயிட்டேனே...' மனதுக்குள் தவித்தவளின் விழிகளில் விழிநீர் சுரந்தது...

அதை அவனுக்குக் காட்டாது தவிர்க்க அவள் தனது முகத்தினைத் திருப்பிக் கொண்டாள் வேறு பக்கமாய்...

அதற்குள் ராமன் காபி, மருந்துடன் அங்கு வந்து சேர்ந்தார்... அவரிடம் இருந்து காபியை வாங்கி அவளிடம் கொடுத்தவன் அத்தோடு தலைவலி மருந்தையும் போட சொல்லி சொல்ல... அதைப் போடாமல் கையில் வைத்துக் கொண்டு அவனை ஏறிட்ட முத்துபேச்சி,

"நீ காபி குடிக்கலையா சாமி...?" என்று அக்கறையுடன் கேட்க...

அவளது இந்த அக்கறை அவனுக்குத் தித்திப்பாய் இனித்த போதும் அதையும் மீறி அவனது மனதில் விரக்தி எழத்தான் செய்தது...

"உன்னோட இந்த அக்கறை என் வாழ்நாள் முழுவதும் வேணும்னு நான் விரும்பறேன்... உன்னால் அதைக் கொடுக்க முடியுமா ஹனி...?"

அவளது விழியோடு விழி கலந்தபடி கூறியவனின் பார்வையைச் சந்திக்க முடியாமல் அவள் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்... அதைக் கண்டு பெருமூச்சு விட்டவனாய்,

"கயலை பத்திரமா பார்த்துக்கோ..." என்றவன் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் தனது வேகநடையுடன் அவன் அங்கிருந்து அகன்றான்...

அவன் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவள் மனம் சொல்லொண்ணா துயரத்தில் குமுறிக் கொண்டிருந்தது...

****

விஜய் வீட்டிற்கு வரும் போது மணி ஆறரையாகி இருந்தது... அப்போது செய்தித்தாள் போடும் பையன் வர, அதைக் கையில் வாங்கிக் கொண்டு அவன் வீட்டினுள் நுழைந்தான்...

அந்நேரம் தந்தைக்கும், தம்பிக்கும் காபி கொடுத்துக் கொண்டிருந்த அவனது அன்னை மைதிலி அவனைக் கண்டதும் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கக் கோபமாய்ப் பார்த்தார்...

"என்னடா இது... இவ்வளவு நாள் நம்ம குடும்பத்தில் நடக்காத கூத்து எல்லாம் இப்போ நடக்குது... உனக்கும், அவளுக்கும் கள்ளக்காதல்ன்னு சொல்லி உன்னை

வேலையில் இருந்து சஸ்பெண்ட் பண்ணிட்டாங்களாமே..." என்று அவர் கோபத்தோடு அவனைப் பார்த்து கேட்க...

அன்னையின் கோபம் அவனுக்கு ஆத்திரத்தை அளிக்கவில்லை... மாறாக அது அவனது மனதின் ரணத்திற்கு மருந்து போட்டதோ என்னமோ... கூல்லாக அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து அன்றைய செய்தித்தாளை பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்...

"என்னடா... நான் பாட்டுக்கு கேட்டுட்டு இருக்கேன்... நீ பாட்டுக்கு பேப்பர் படிச்சிட்டு இருந்தா என்ன அர்த்தம்...?"

மைதிலியின் கூற்றை ஆமோதிப்பது போல் வெங்கட் அவனைக் கேள்வியாய்ப் பார்த்திருக்க, ரகுராமனோ எந்தவித உணர்வும் இல்லாமல் அமைதியாய்ப் பார்த்திருந்தார்... அவர் எப்போதுமே அப்படித்தான் அதிகம் பேச மாட்டார்...

"எங்களோட நல்லக்காதலை கள்ளக்காதலாக்கியது நீங்க தானே... அதனால் இந்தப் புண்ணியம் எல்லாம் உங்களைத் தான் போய்ச் சேரணும்..." என்று கேலி குரலில் கூறியவனைக் கண்டு அவரது ஆத்திரம் அதிகரித்தது...

"என்னடா பெரிய காதல்... காதலாம் காதல்... நமக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு... கண்ட கண்ட கழிசடையை எல்லாம் என்னோட மருமகளா வர நான் சம்மதிக்க மாட்டேன்... அவ என்ன சாதின்னு அவளுக்கே தெரியாது... அப்படிப்பட்ட ஒருத்தியை போய்ப் போயும், போயும் காதலிச்ச உன்னை எல்லாம்..." என்று அவர் கோபத்தில் பல்லை கடித்தார்...

வசதி இருக்கிறதோ இல்லையோ கௌரவமிக்கக் குடும்பத்தில் பிறந்து, அதே போல் கௌரவமிக்கக் குடும்பத்திற்கு வாக்கப்பட்டு வந்ததால் என்னமோ அவரது இரத்தத்தில் குடும்பக் கௌரவம் சற்று அதிகமாகவே ஓடியது...

"ஓ... நீங்க சாதி, கௌரவம் எல்லாம் பார்ப்பீங்க இல்லையா...?" என்று இகழ்ச்சியான குரலில் கேட்டவனைக் கண்டு உறுத்து விழித்தார் மைதிலி...

ஏனெனில் அவன் அடுத்து என்ன பேச போகிறான் என்பது தான் அவருக்கு நன்கு தெரியுமே...

"அப்போ அந்தச் செல்வநாதன் என்ன சாதின்னு உங்களுக்குத் தெரியுமா...? அவரோட அந்தஸ்து நமக்குச் சமதையான அந்தஸ்தான்னு உங்களுக்குத் தெரியுமா...? அவர் வீட்டில் பெண் எடுத்தால் மட்டும் உங்க கௌரவம் தாழ்ந்து போயிடாதா...?"

மகனது இளக்கார குரலை கேட்டு அவரது முகம் கறுத்துப் போனது...

"ஏன்னா அப்போ அவர் மினிஸ்டரா இருந்தார்... பணப் பலத்தோட செல்வாக்கா இருந்தார்... அவரோட சாதி, அந்தஸ்து, கௌரவம் எல்லாம் உங்களுக்கு முக்கியமா படலை... அதனால் தான் அவரோட மகளை மருமகளாக்கிக்க நீங்க அப்படித் துடிச்சிங்க இல்லையா...?"

சாட்டையடியாய் வந்த விழுந்த மகனது வார்த்தைகளைப் புறம் தள்ளியவராய் அவனைத் தைரியமாய் நிமிர்ந்து பார்த்தவர்,

"உன்னோட நன்மைக்காகத் தான் நான் அதைச் செய்தேன்... ஆனா நீ என் பேச்சை கேட்காம கண்ட கழிசடையைக் காதலிச்சு தொலைச்சா நான் என்ன பண்ண முடியும்... கொஞ்சமாவது புத்தி இருந்தா பொழைச்சிருப்ப... உன்னோட புத்தியை தான் நீ அந்த மேனாமினுக்கி கிட்ட அடகு வச்சிட்டியே..."

ஏமாற்றமும் எரிச்சலுமாய் அவர் முணுமுணுத்தார்...

"யாரோட நன்மைக்காக நீங்க இதைச் செய்தீங்கம்மா... என்னோட நன்மைக்காகவா... இல்லவே இல்லை... உங்களோட நன்மைக்காகத் தான் நீங்க அப்படிச் செஞ்சீங்க..."

அவன் கூறுவதும் உண்மை தான்... அமைச்சரோடு சம்பந்தம் செய்து கொண்டால் அது விஜய்க்கு மட்டுமா நன்மை தரும், அவனது ஒட்டு மொத்த குடும்பத்திற்கும் அல்லவா நன்மை தரும்... அதனால் தான் மைதிலி சாதியை மறந்து விட்டு நித்யாவிற்குப் பச்சை கொடி காண்பித்தார்...

"என்னோட நன்மைக்காகன்னா நீங்க பேச்சிக்கு தானே சம்மதம் சொல்லியிருக்கணும்..."

'பேச்சி' என்ற பெயரில் அவர் முகத்தை அருவருப்பாய் சுளித்தார்...

"அவளோட பெயர் கூடக் கொஞ்சமாவது நம்ம குடும்பத்து பெயரோட ஒத்து போகுதா...? அப்படிப்பட்டவளை நான் எப்படி என் மருமகளாக்கிக்க முடியும்... இனிமேலும் அதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன்... உனக்கு அப்படி ஒண்ணும் வயசாகி போயிடலை... நீ சரின்னு சொல்லு நாளைக்கே நம்ம சாதி சனத்தில் இருந்து ஒரு நல்ல பொண்ணா பார்க்கிறேன்..." என்று அசராது பேசிய அன்னையைக் கண்டு அவனுக்கு ஆத்திரம் எழுந்தது...

ஆனாலும் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

"எனக்குக் கல்யாணம் தான் ஆகலை... ஆனா எனக்கு மகள் இருக்கிறாள்... இனி என்னோட வாழ்க்கை அவளுக்காக மட்டும் தான்..."

"ஓஹோ... அவளால ஒண்ணும் பண்ண முடியலைன்னு மகளை வச்சு உன்னை மயக்க பார்க்கிறாளா... அன்னைக்குப் பெருசா என் கிட்ட சத்தியம் பண்ணாத குறையா சொன்னா... 'எந்தச் சூழ்நிலையிலும் இது உங்க மகனோட குழந்தை தான்னு நான் அவர் கிட்ட சொல்ல மாட்டேன்... என்னால் அவரோட வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் வராது'ன்னு... இப்போ எதுக்குத் திடீர்ன்னு வந்து நின்னு பிரச்சினை பண்றாள்... இப்போ நீ ஏசிபின்னதும் உன்னை வளைச்சுப் போடணும்ன்னு அவளுக்கு ஆசை வந்திருச்சோ..."

அன்னையின் வார்த்தையில் அவன் திக்பிரம்மை பிடித்து நின்றான் அவன்...

"அவள் குழந்தை உண்டாகி இருந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்...?" அவனது குரல் இறுகி போய் ஒலித்தது...

அதை உணர்ந்த ரகுராமன் மனைவியைக் கட்டுப்படுத்த முயன்று அவரது கையைப் பிடிக்க, மைதிலியோ அதைக் கண்டு கொள்ளாது,

"ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடி அவ வயித்தை தள்ளிக்கிட்டு ஹாஸ்பிட்டல் வந்தப்போ பார்த்தேன்..."

அன்று முத்துபேச்சியைத் தான் கேவலமாகப் பேசியதை ஏனோ மகனிடத்தில் சொல்லாமல் மறைத்து அமைதியாகிவிட்டார்...

"ஏம்மா அதுக்கு அப்புறம் உங்க கிட்ட எத்தனை தடவை நான் ஃபோன் பண்ணி பேசியிருப்பேன்... ஒரு தடவை கூட அதைப் பத்தி சொல்ல உங்களுக்கு மனசு வரலைல்ல..." என்று வலியுடன் கேட்டவனைக் கண்டு,

"எதுக்குடா அந்தக் கர்மத்தை நான் உன் கிட்ட சொல்லணும்... நீயே அவளை மறந்து வடக்கே டிரான்ஸ்பர் வாங்கிட்டு போயிட்ட... இந்த நேரத்தில் நான் எதுக்கு அவளை உனக்கு நியாபகப்படுத்தணும்... ஒருவேளை அது உன் குழந்தையா இல்லாம கூட இருக்கலாம்... என்ன நடந்ததுன்னு யார் கண்டது...?"

மகனது வலியை கண்டு கொள்ளாது அவர் பேசினார்... அவரது நிலையில் அவர் சரியாக இருந்தார்...

அவர் கூறியதை கேட்டு விஜய், "அம்மா..." என்று அலறிவிட்டான்...

தன்னை என்ன வேண்டுமானாலும் சொல்லி கொள்ளட்டும்... ஆனால் முத்துபேச்சியைப் பற்றி அவர் எப்படி அப்படிக் கூறலாம்...? அவளைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்...

அவரைத் தீர்க்கமாய்ப் பார்த்தவாறு உறுதியான குரலில், "கயல் என்னோட பொண்ணு தான்... இனிமேல் பேச்சியைப் பத்தி தப்பா பேசினீங்க நான் மனுசனா இருக்க மாட்டேன்..." என்று கோபத்தில் அவன் கர்ஜிக்க...

"அவளைக் காதலிக்கிற உன்னை எல்லாம் எப்படிடா மனுசப் பிறவின்னு சொல்றது...?" அருவருப்போடு சொன்னவரை கண்டு அவன் மனமுடைந்து தான் போனான்... என்ன மாதிரியான மனிதர்கள் இவர்கள் என்று...

"ஒரு பொண்ணா இருந்துட்டு ஒரு பொண்ணோட வாழ்க்கையை இப்படி அழிக்கப் பார்க்கிறீங்களேம்மா..."

மேலே பேச முடியாது அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது...

"உன் வாழ்க்கை நல்லா இருக்கணும்ன்னு நான் நினைச்சதுக்கு நீ இதுவும் பேசுவ... இன்னமும் பேசுவ..." என்று அவர் எரிச்சல் பட...

"என் வாழ்க்கை நல்லா இருக்கணும்ன்னா இதைச் செஞ்சீங்க... என் வாழ்க்கையை அழிக்கத் தான் நீங்க இதை எல்லாம் செஞ்சியிருக்கீங்க..." என்று மனம் குமுறியவன்,

"எனக்கு மனைவின்னு ஒருத்தி வர்றதா இருந்தா அது பேச்சி ஒருத்தி தான்... அது போல் தான் எனக்கு மகள் கயல்விழி மட்டும் தான்..."

உறுதியான குரலில் கூறியவனை உறுத்து விழித்த மைதிலி, "அப்படின்னா நீ எங்களை எல்லாம் மறந்திர வேண்டியது தான்..." என்றார் தீர்மானமாய்...

அவரின் தீர்மானத்தைக் கண்டு அவனது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

"அட இப்போ உங்களை எல்லாம் நான் ஞாபகம் வச்சிருக்கேன்னு உங்களுக்கு யார் சொன்னது...?

என்னைக்கு நீங்க சுயநலமா முடிவு எடுத்து என் வாழ்க்கையில் விளையாடினீங்களோ அப்பவே நான் உங்களை எல்லாம் மறந்தாச்சு... அப்படி இருந்தும் நான் ஏன் உங்க கூட இருக்கேன்னு நீங்க நினைக்கலாம்..." என்றவன் மூவரையும் பார்த்து,

"நான் உங்க கூட இல்லை... நீங்க தான் என் கூட இருக்கிறீங்க... அதுவும் அவள் வேண்டி கேட்டுக்கிட்டதால் தான்... இப்போ இந்த நொடி வரை என் கடமையை சரியா செஞ்சிட்டேன்னு தான் நான் நினைக்கிறேன்... அதனால் இனிமேல் என் குடும்பத்துக்காக நான் என்னோட கடமையைச் செய்றதுக்கு நீங்க வழி விட்டு நின்னா எனக்குப் புண்ணியமா போகும்... அதுக்கு நீங்க எல்லோரும் இந்த வீட்டை விட்டுப் போனால் நல்லது..." என்றான் சிறிதும் தயவு தாட்சண்யமின்றி...

அவர்கள் தன் நலம் பேணாத போது அவன் மட்டும் ஏன் மற்றவர்கள் நலன் பேண வேண்டும் என்ற விரக்தியில்...

"வெங்கட் இத்தனை நாள் இந்தக் குடும்பப் பாரத்தை நான் தூக்கி சுமந்தாச்சு... நீயும் இந்த வீட்டில் ஒரு மகன் தான்... உனக்கும் கடமைகள் இருக்கு... அதனால் நீயும் என் பாரத்தைப் பங்கு போட்டுக்குவன்னு நான் நம்பறேன்..."

தம்பியை பார்த்து விஜய் அப்படிச் சொல்ல, அந்த நேரத்திலும் சரியென்று சொல்லாமல் யோசனையுடன் அமர்ந்திருந்த சின்ன மகனை கண்டு மைதிலிக்குப் பயம் பிடித்துக் கொண்டது... சின்னவனை நம்பி போனால் தன் கதி அதோ கதி தான் என்று மனம் பதறியவராய்,

"நீ சொன்னா நாங்க போயிருவோமாடா... அப்படி எல்லாம் நாங்க வெங்கட் கூடப் போக மாட்டோம்... எங்களுக்கு மூத்த மகன் நீ தான்... உனக்குத் தான் எங்களைப் பார்த்துக்கிற கடமை இருக்கு..."

தன்னைச் சமாளித்துக் கொண்டு படபடத்தவரை கண்டு விஜய்க்குக் கோபம் வந்த போதும் அவனால் மேலே கடிந்து பேச முடியவில்லை... அவனது இந்த இரக்க சுபாவம் தானே

அவருக்குச் சாதகமான விசயம்... மகனது அமைதி கண்டு அவருக்குப் பெருத்த நிம்மதியாய் இருந்தது...

இங்கே வீட்டில் இருந்து கொண்டு அவனது அன்னை முத்துபேச்சியை மருமகளாக வர விட மாட்டேங்கிறார் என்றால், அவனது சண்டிராணியோ அவனுடன் வாழ மறுத்து தனியே தள்ளி நின்று அவனை உயிரோடு கொல்கிறாள்... ஆக மொத்தம் அவனது வாழ்வில் வந்த இரண்டு பெண்களும் அவனைப் போட்டு படுத்தி எடுக்கின்றனர்... மூன்றாவது பெண்ணான அவனது மகளாவது அவனது வாழ்வில் வெளிச்சத்தைக் காட்டுவாளா...?

இயலாமையில் என்ன செய்வது என்று தெரியாமல் அவன் தன் தலையைக் கோதி கொண்டு அன்னையைப் பார்த்தான்...

அவனது அன்னையைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... அவனது காதல் விசயம் தெரிந்ததும் நிச்சயம் முத்துபேச்சியை நேரில் சந்தித்துத் தகாத வார்த்தைகளால் அவளைக் காயப்படுத்திவிட்டு வந்திருப்பார் என்று... ஆனால் அதற்கு எல்லாம் அசரும் ஆள் அவள் கிடையாது என்பதால் தான் அவன் சற்றுத் தைரியமாக இருந்தது அவர்களது காதல் விவகாரத்தில்...

ஆனால் இப்படி அவனை விட்டு ஒரேடியாய் விலகி நிற்கும் முடிவை அவள் எடுக்கும்படி அப்படி என்ன தான் நடந்திருக்கக் கூடும்...? அதற்கு விடை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை...

ஒருவேளை நித்யாவாக இருக்கக்கூடுமோ...? அவளுக்காக இவள் தன் காதலை தியாகம் செய்ய முன் வந்திருப்பாளோ...? என்று யோசித்தவனுக்கு இறுதியாக அது தான் விடையாகத் தோன்றியது...

'முட்டாள்... அவளை நினைத்து இவள் காதல் தியாகம் செஞ்சதால இவளுக்கு என்ன தியாகின்னு பட்டமா கொடுத்துட்டாங்க... அவளுக்கு என்ன கணவன்,

குழந்தைன்னு நல்லா சந்தோசமா இருக்கிறாள்... இங்கே இவள் கிடந்து துன்பத்தை அனுபவித்து வருகிறாள்... நட்பு இருக்க வேண்டியது தான்... அதற்காகத் தன் வாழ்க்கையை அழிக்க நினைக்கும் நட்பு என்ன தேவைக்கு...?'

அவனின் கோபம் எல்லாம் நித்யாவின் மீது தான் திரும்பியது...

யார் இடையில் வந்தாலும் அவனது காதல் மீது அவனுக்கு நம்பிக்கை இருக்கிறது... அந்தக் காதல் தன்னவளை தன்னிடம் தானாகக் கொண்டு வந்து சேர்க்கும் என்று அவன் உறுதியாக நம்பினான்...

அந்த நம்பிக்கையில் மீண்டும் அன்னையை அழுத்தமாய்ப் பார்த்தவன், "தாராளமா நீங்க இங்கே இருக்கலாம்... அதே சமயம் என் மனைவியும், மகளும் இனி இங்கே தான் வந்து இருப்பாங்க... கூடிய சீக்கிரம் அது நடக்கத்தான் போகிறது... அதுக்கும் தயாரா இருந்துக்கோங்க..." என்றவன் தன் கையிலிருந்த செய்தித்தாளை மேசை மீது போட்டபடி,

"நான் திரும்பவும் வேலையில் ஜாயிண்ட் பண்ணிட்டேன்... நம்பலைன்னா பேப்பர் படிச்சு தெரிஞ்சுக்கோங்க..."

என்றவன் அன்னையின் பதிலை எதிர்பாராது தனது அறைக்குச் சென்றுவிட்டான் அவன்...

"கொஞ்சமாவது வாயை திறந்து பேசுறீங்களா...? எல்லாத்தையும் நான் ஒருத்தியா தனியா கிடந்து சமாளிக்க வேண்டியிருக்கு..." கணவனைக் கடிந்து கொண்டே மைதிலி சலித்துக் கொண்டார்...

"இதுவரைக்கும் செஞ்ச பாவங்கள் போதாதா...? இதுக்கு மேலயும் பேசி பாவத்தை அதிகரிக்கச் சொல்லுறியா..."

ரகுராமன் அமைதியாக மனைவியைப் பார்த்து கேட்க, அதைக் கேட்டு மைதிலி, வெங்கட் இருவரின் முகமும் பேயறைந்தார் போன்று மாறியது...

"அந்தப் பொண்ணு நல்லவளா இருக்கப் போய் நடந்த எதையும் அவன் கிட்ட சொல்லாம இருக்கிறாள்... இல்லை இதே இது வேறு ஒரு பொண்ணா இருந்திருந்தா நடந்து இருப்பதே வேறு..." என்று வேதனையுடன் கூறியவர் கண்களை மூடி கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தார்...

முன்பு போல் மகனது காதலை நினைத்து இப்போது எல்லாம் அவர் வருந்துவது இல்லை... அதற்குப் பதிலாகத் தன்னைத் தானே வருந்தி கொள்கிறார்... அவனது காதலை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் தனக்கு ஏன் இன்னமும் வரவில்லை என்று...

அவர்களது குடும்பத்திற்கும், முத்துபேச்சி குடும்பத்திற்கும் உள்ள அந்தஸ்து பேதத்தைத் தாண்டி அவரால் பயணிக்க முடியவில்லை...

இதுநாள் வரை ஊரில் கௌரவமாய் வாழ்ந்தவர், மூன்று சம்பந்தம் செய்து இப்போதும் மரியாதையுடன் வாழ்ந்து வருபவர்... அப்படிப்பட்டவர் முத்துபேச்சியைத் தனது மூத்த மருமகளாய்க் கொண்டு வருவதன் மூலம் தன்னுடைய சமூக மரியாதையை இழக்க அவர் விரும்பவில்லை... இது தான் நிதர்சனமான உண்மை... பெற்றோரின் நிலையில் அவரது எண்ணமும் சரியே...

ஆனாலும் உள்ளுக்குள் மகனுக்காக வேதனையுடன் மருகிய மனம் அந்த வேறுபாட்டுக் கோட்டினை தாண்டிவிடச் சொல்லி துடித்தது... ஆனாலும் அந்தக் கால மனிதரால் அவ்வளவு எளிதில் அதைத் தாண்டி செல்ல முடியவில்லை...

இது எதையும் அறியாத விஜய் எப்போதும் போல் அலுவலகத்திற்குச் செல்வதற்காகக் கிளம்பி அறையை விட்டு வெளியில் வந்தான்... அவன் வரவை எதிர்பார்த்து காத்திருந்தவர் போன்று மைதிலி அவனிடத்தில் காபி கோப்பையை நீட்டினார்...

அவனையும் அறியாமல் காலையில் தன்னிடம் முத்துபேச்சி காட்டிய அக்கறை அவனின் ஞாபகத்தில் எழுந்தது... இருவருக்கும் அவன் மேல் அக்கறை இருக்கிறது... ஆனால் அவரவர் நிலையில் பிடிவாதமாய் இருந்து அதைத் தாண்டி வர யோசிக்கின்றனர்...

காதலுக்கு யார் யாரெல்லாமோ எதிரியாய் இருப்பது கண்டு அவன் பார்த்திருக்கிறான்... ஆனால் இங்கே அவனது காதலுக்கு அவனது காதலியே அல்லவா எதிரியாக இருக்கிறாள்... இதில் அன்னையைப் போய்க் குற்றம் சொல்லி என்னவாகப் போகிறது...?

அதனால் மறுபேச்சுப் பேசாமல் அவர் கொடுத்த காபியை பருகி விட்டு கோப்பையை அவரிடத்தில் கொடுத்தான்...

"சாப்பிட்டுட்டு போடா..."

"வேண்டாம்..." என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்து விட்டு அவன் அங்கிருந்து நகர முற்பட...

"குழந்தை எப்படியிருக்கு...?" தந்தை ரகுராமனின் வார்த்தையில் அவன் அப்படியே தேங்கி நின்றான்...

கண்கள் பனிக்கத் தந்தையை நோக்கி வந்தவன் அவர் புறமாய் மண்டியிட்டு அமர்ந்தான்... அவனது காதலுக்குத் தந்தை வாய் வார்த்தையாய் எதிர்ப்பு தெரிவிக்காத போதும் அவரது இந்த மௌனமே அவனுக்குச் சொல்லாமல் சொல்லியது அவரது விருப்பமின்மையை... அப்படிப்பட்டவர் இன்று அவனது மகளைப் பற்றிக் கேட்கிறார் என்றால்...?

"இப்போது பயமில்லை... நல்லாயிருக்கிறாள்..." என்றவன்,

"நான் விரும்பியது எல்லாத்தையும் என் கண் பார்த்து நிறைவேத்தி வச்சீங்களேப்பா... ஆனா நான் வாய் திறந்து கேட்ட என் காதலுக்கு மட்டும் ஏன்ப்பா இப்படி அமைதியா இருக்கீங்க... உங்களோட இந்த அமைதி என்னை எங்கே கொண்டு வந்து நிறுத்தி வச்சியிருக்குன்னு பார்த்தீங்களா... என் மனைவி, என் மகள்ன்னு என்

குடும்பத்தைப் பத்தி பெருமையா வெளியில் சொல்லிக்க முடியாம இப்போ கள்ளக்காதல்ன்னு அவமானப்பட்டு நிக்கிறேன்..."

கண்கள் கலங்க தன் முன்னிருந்த மகனை ஏறெடுத்து பார்க்க முடியாமல் குற்றவுணர்வு மனதை கொல்ல அப்போதும் அவர் அமைதியாக இருந்தார்... மீண்டும் மௌனப் போர்வையின் பின்னே மறைந்து கொண்ட தந்தையைக் கண்டு ஆயாசம் அடைந்தவன் மேலே ஒன்றும் பேசாது எழுந்து வெளியில் சென்றான்...

கம்பீரமான மகனது நடை சற்று தளர்ந்திருந்ததோ... அதை உணர்ந்தார் போன்று அவரது விழிகளிலும் விழிநீர் கசிந்தது...

****

மறுநாள் இரவு அந்த நேரத்தின் ஏகாந்த வேளையில் கிழக்கு கடற்கரை சாலையில் சந்தோஷின் கார் காற்றை விட வேகமாய்ப் பறந்து கொண்டிருந்தது... காரில் அவனது மூன்று நண்பர்களும், கூடவே அவர்களுக்குக் 'கம்பெனி' கொடுக்கவென்று ஒரு பெண்ணும் இருந்தனர்... அவள் அந்த மாதிரி பயணத்திற்குப் பழக்கப்பட்டவள் ஆதலால் இவர்களைக் கண்டு அவள் ஒன்றும் பயப்படவில்லை...

காரின் பின் இருக்கையில் இரு ஆண்களுக்கு மத்தியில் அவள் சகஜமான மனநிலையில் சிரித்துப் பேசியபடி வந்தாள்... அந்த ஆடவர்களின் வாய் மொழிக்கு ஏற்றவாறு அவளது வாய் பதில் கொடுத்தது என்றால், அவர்களது உடல்மொழிக்கு ஏற்றவாறு அவளது உடலும் பதில் சொல்லியது...

யாருமில்லா அந்தக் கடற்கரையில் அவனது கார் நின்றது... சிரிப்பும் கும்மாளமுமாய் உற்சாகமாய் ஐவரும் இறங்கி நடந்தனர் கடற்கரை மண்ணில்... சிறிது தூரம் சென்றதும் அங்கேயே அமர்ந்து தாங்கள் கொண்டு வந்திருந்த மது பானங்களைத் திறந்து குடிக்க ஆரம்பித்தனர்...

போதை ஏற ஏற அவர்களது பேச்சும், செய்கையும் எல்லை மீறி சென்று கொண்டிருந்த போது தான் அந்தச் சம்பவம் நடந்தது... எங்கிருந்தோ வந்த இருவர் முதலில் சந்தோஷை தாக்க, அதைக் கண்டு அவனது நண்பர்கள் அவர்கள் மீது பாய்ந்தனர்... அந்தப் பெண்ணோ பயத்தில் தப்பித்தால் போதும் என்று அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள்...

போதையில் இருந்த நால்வராலும் அந்த இருவருடனும் மோத முடியாமல் போக அவர்கள் இருவரும் இவர்களை அடித்துப் போட்டு விட்டு இவர்கள் போட்டிருந்த நகை, வைத்திருந்த பணம் என்று எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தனர்...

"டேய்... அவங்க நாம யாருன்னு தெரியாம நம்ம மேல கையை வச்சிட்டாங்கடா... அவங்களுக்கு நாம யாருன்னு காட்ட வேண்டாம்... அவங்க ரெண்டு பேரு, நாம நாலு பேருடா... வாங்கடா அவங்களை ஒரு கை பார்க்கலாம்..." என்று சந்தோஷ் தனது நண்பர்களைப் பார்த்துக் கத்தினான் அடிவாங்கிய வெறியில்...

செல்லமாய் வளர்ந்த அவன் கண்டவனிடத்தில் அடிவாங்கியதை பெருத்த அவமானமாகக் கருதினான்...

அவனது நண்பர்களோ பயந்து போய் வேண்டாம் என்று மறுக்க, வலுக்கட்டாயமாய் அவர்களை அழைத்துக் கொண்டு அந்த இருவரை பின்தொடர்ந்து ஓடினான் சந்தோஷ்...

கொஞ்ச தூரம் சென்றதும் அவர்கள் செல்வதை அடையாளம் கண்டு கொண்டு இவர்கள் அவர்களை நோக்கி ஓட துவங்க... நால்வரும் துரத்தி வருவதை உணர்ந்து மற்ற இருவரும் வேகமாக ஓட துவங்கினர்...

சற்று தள்ளி சென்றதும் அவர்கள் இருவரையும் காணவில்லை... ஆனால் சிறிது தூரத்தில் ஆட்கள் நடமாட்டம் தெரிந்தது...

"டேய்... அங்கே தான்டா அவங்க இருக்கணும்..." என்ற சந்தோஷ் நண்பர்களை அழைத்துக் கொண்டு அங்குச் சென்றான்...

அந்த இடத்திற்குச் சென்றதும் தான் சந்தோஷிற்குத் தெரிந்தது அது என்ன மாதிரியான இடம் என்று...

அச்சத்தில் வியர்வை வழிய அவனும், அவனது நண்பர்களும் உடலும், மனமும் நடுங்க நின்றிருக்கும் போது தான் விஜய்யும், அவனது தலைமையில் காவல்துறையைச் சேர்ந்த காவலர்கள் சிலரும் அவர்கள் எல்லோரையும் சுற்றி வளைத்து பிடித்தனர்...

வாசம் நேசமாகும்...!!!

மறுநாள் தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் செய்தித்தாள்களில் எல்லாம் இது தான் தலைப்புச் செய்தியாக இருந்தது...

"பிரபல தொழிலதிபரின் மகன் ஆயுதம் மற்றும் போதை பொருட்கள் கடத்த முயன்ற போது கைது... தொழிலதிபருக்கும் இதில் தொடர்பு இருக்குமோ என்று சந்தேகம்..." என்று சந்தோஷின் புகைப்படத்துடன் அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது...

அதைப் படித்ததும் ஆத்திரம் அதிகரிக்கக் கைகளில் இருந்த அந்தச் செய்தித்தாளை தூக்கியெறிந்தார் சுந்தரலிங்கம்...

இதுநாள் வரை அவருக்குத் தெரியாமல் தமிழ்நாட்டில் ஒரு அணுவும் அசைந்தது இல்லை... அந்தளவுக்கு மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை எல்லா இடத்திலும் தனக்குச் சாதகமான ஆட்களை வைத்திருந்தார் அவர்... அப்படி அவருக்கு அடிபணிய மறுப்பவர்களை எல்லாம் தனது பாணியில் மிரட்டி பணிய வைத்திருக்கிறார்...

அப்படிப்பட்ட அவரின் மகனை அவருக்குத் தெரியாமல் அதுவும் அவன் செய்யாத தவறு ஒன்றுக்கு கைது

செய்வதா... அவரது இரத்தம் கொதித்தது ஆத்திரத்தில்...

எத்தனையோ தவறுகள் அவரும், அவரது மகனும் செய்திருக்கின்றனர்... ஆனால் அதிலெல்லாம் மாட்டி கொள்ளாமல் அதிர்ஷ்டவசமாக இதுநாள் வரை தப்பித்துக் கொண்டு இருக்கின்றனர்... அந்தளவுக்கு அவரது பணம் பலம் எல்லா இடத்திலும் விளையாடியது...

'என்னோட பலம் என்னன்னு தெரியாம என் கூட மோதுற அளவுக்கு இங்கே யாருக்குடா தைரியம் இருக்கு...?' மனதுக்குள் ஆவேசம் பொங்க கேள்வி கேட்டபடி அமர்ந்திருந்தார் அவர்...

அந்நேரம் அவரது மனைவி காலை உணவிற்காக அவரை அழைக்க வர, அவரைக் கோபத்துடன் பார்த்த சுந்தரலிங்கம்,

"சந்தோஷ்... வீட்டில் இருக்கானா...?" என்று கேள்வி கேட்க...

"தெரியலைங்க..." என்றார் அந்த அப்பாவி மனைவி...

அவ்வளவு தான் அதைக் கேட்டதும் ஆத்திரம் அதிகரிக்க மனைவியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார்...

"பிள்ளை வீட்டில் இருக்கானா, இல்லையான்னு பார்க்காம நீ வீட்டில் அப்படி என்னத்தை வெட்டி முறிக்கிற...?" என்று கோபத்துடன் கத்தினார் அவர்...

அப்போது அங்கு வந்த அவரது செயலாளருக்கும் அதே திட்டு தான் விழுந்தது...

"இப்படி ஒரு விசயம் மீடியாவுக்கு லீக் ஆகுறதுக்கு முந்தி நமக்குத் தெரிஞ்சிருக்க வேண்டாமா...? அதைத் தெரிஞ்சிக்கிறதை விட்டுட்டு நீ என்னய்யா பண்ணிக்கிட்டு இருந்த...?"

ஏனெனில் அந்தச் செய்தித்தாளின் ஆசிரியர் சுந்தரலிங்கத்தின் நண்பர்... அப்படிப்பட்டவர் தனது ஊடகத்திற்குப் பரபரப்பு தேவை என்பதற்காகச் சுந்தரலிங்கத்திடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாது இந்தச்

செய்தியை வெளியிட்டு இருப்பது அவருக்குப் பெருத்த கோபத்தை ஏற்படுத்தி இருந்தது...

"என்ன செய்வியோ, ஏது செய்வியோ எனக்குத் தெரியாது... இன்னும் அரை மணி நேரத்தில் என் மகன் வீட்டில் இருந்தாகணும்..." என்று அவர் தனது செயலாளருக்கு உத்தரவிட...

"சார்..." என்று தயங்கி இழுத்தவரை கண்டு முறைத்தபடி,

"என்னய்யா...?"

"நம்ம தம்பியை ஸ்பாட்டில் வச்சு அரெஸ்ட் பண்ணியிருக்கிறதால அவருக்கு எதிரான எவிடென்ஸ் ஸ்ட்ராங்கா இருக்கு... இந்தக் கேசில் நம்மளால ஒண்ணும் பண்ண முடியாது... இதில் உங்களையும் இணைச்சு வச்சு பேசவும் சான்ஸ் இருக்கு..."

"அதுக்காக என் பையனை அப்படியே அம்போன்னு விடச் சொல்றியா...?" என்று கோபமாய் இரைந்தவர்,

"இந்தக் கேசை யார் டீல் பண்றது...?"

"ஏசிபி விஜய்..."

அதைக் கேட்டு அவர் திகைப்புடன் தனது செயலாளரை பார்த்தார்...

"அவன் எப்போய்யா ட்யூட்டியில் ஜாயிண்ட் பண்ணினான்..."

இது அவருக்குப் புதிய செய்தி... அதனால் அப்படிக் கேட்டார்...

"மூணு நாளாகுதாம்... வெளியில் யார் கிட்டேயும் சொல்லலை சார்... இல்லைன்னா எனக்குத் தெரிஞ்சிருக்கும்..."

"அந்தச் சரவணன் பயலுக்குமாய்யா தெரியாது..."

அதைக் கண்டு அந்தச் செயலாளர் தலையைச் சொறிந்தார்...

"அவரு ரெண்டு தடவை உங்களைப் பார்க்க வந்தாரு... நான் தான் உங்களைப் பார்க்க விடாம திருப்பி அனுப்பிட்டேன்..."

அதைக் கேட்டு அவரை முறைத்த சுந்தரலிங்கம்,

"எல்லாத்தையும் நீயே பண்ணிட்டா... உனக்கு முதலாளியா நான் ஏன்ய்யா இருக்கேன்... அந்த வேலையையும் நீயே பார்க்கிறியா...?" என்று அவர் கிண்டலும், கோபமாய்க் கேட்க... அதில் தலை குனிந்தார் அந்தச் செயலாளர்...

"திரும்பப் பணத்துக்கு வந்திருக்காரோன்னு நினைச்சு தான்..."

அவர் கூறுவது உண்மை தான் என்றாலும் இப்போது உள்ளே மாட்டி கொண்டு இருப்பது அவரது மகன் அல்லவா...

"மினிஸ்டர் இல்லை சீஃப் மினிஸ்டர்க்கு ஃபோனை போடு... ஏதாவது செஞ்சு இன்னைக்குள்ள என் பையன் வீட்டில் இருந்தாகணும்..." என்று உத்தரவிட்ட சுந்தரலிங்கம் அடுத்துச் செய்ய வேண்டிய செயல்களைப் பட்டியிலிட ஆரம்பித்தார்...

ஆனால் அந்தோ பரிதாபம்... எல்லோருமே அவருக்கு உதவ முடியாது என்று கையை விரித்து விட்டனர்... ஏனெனில் இது பத்திரிக்கையில் வருவதற்கு முன் என்றால் அவர்களால் எதுவும் செய்திருக்க முடியும்... ஆனால் பத்திரிக்கையில் வந்த பின் சந்தோஷை விடுதலை செய்தால் அது மக்கள் மத்தியில் தங்கள் ஆட்சியின் மீது அதிருப்தியை ஏற்படுத்திவிடும், அது போக இப்போது தேர்தல் சமயத்தில் இது போன்ற செயல்களில் ஈடுபடுவது கட்சி மீது மக்களுக்கு இருக்கும் நல்ல எண்ணத்தை மாற்றிவிடும், அதனால் தங்களது ஓட்டு வங்கி சரிந்துவிடும் என்று கூறி அவருக்கு உடன்பட மறுத்துவிட்டனர்...

நேற்று வரை தனது தாளத்திற்கு ஆடி வந்த அரசியல் கட்சி இன்று அப்படியே எதிர்மறையாகப் பேசுவது கண்டு ஆத்திரத்தில் தனது கையிலிருந்த அலைப்பேசியைத் தூக்கி போட்டு உடைத்தார் சுந்தரலிங்கம்...

இதற்கு எல்லாம் காரணமான விஜய்யை தூக்கி போட்டு மிதிக்க முடியாத ஆத்திரம் அவரது கண்களில் தெரிந்தது...

அவன் தான் ஏதோ செய்து தனது மகனை இப்படி மாட்ட வைத்திருக்க வேண்டும் என்று சத்தியமாக அவர் நம்பினார்...

முத்துபேச்சியைச் சிறையில் தள்ளி, விஜய்யின் வேலைக்கு உலை வைத்ததோடு அவர்களது ஆட்டம் முடிந்து விட்டது என்று எண்ணி அவராய் ஒரு தப்புக்கணக்கு போட்டு அதைப் பற்றி மேலே யோசிக்காமல் அப்படியே விட்டது இன்று அவருக்கு எதிராகப் போய்விட்டது...

எப்போதுமே அவர் அப்படித்தான்... எதிரியின் மேல் நேரடியாகக் கை வைக்க மாட்டார்... சுற்றி வளைத்து சென்று அவர்களது செயல்பாடுகளை முடக்கி விடுவார்... அப்படித்தான் விஜய், முத்துபேச்சி விசயத்தில் அவர் செய்தது...

ஆனால் அது இப்படிக் கைமீறி போகும் என்று அவர் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

"சார்... எப்படியும் நம்ம தம்பியை இன்னைக்குக் கோர்ட்டுக்கு கூட்டிட்டு வந்தாகணும்... நாம நம்ம லாயரை அழைச்சிக்கிட்டு அங்கே போகலாம் சார்..." என்று செயலாளர் சொன்னதும் கனத்த மனதுடன் மகனை பார்ப்பதற்காக அவர் கிளம்பினார்...

அவரது மனைவியோ அழுது கொண்டு நின்றிருந்தார்... கணவன், மகன் செய்யும் தவறுகள் அவருக்குத் தெரியும்... ஆனாலும் அதற்கு அவரால் ஒன்றும் செய்ய முடியாது...

அன்று காலையில் இருந்து விஜய் ஒரே பரபரப்பாக இருந்தான்... இன்று சந்தோஷை நீதிமன்றத்துக்கு

அழைத்துச் சென்று ஒப்படைக்க வேண்டும்... அங்கு நீதிபதி குற்றத்தை விசாரித்து விட்டு அதன் பின்னர் அவனைப் பதினைந்து நாள் காவலில் வைக்கச் சொல்வார்...

அந்தப் பதினைந்து நாளில் தான் சந்தோஷின் தலையெழுத்தை மட்டுமல்லாது அவனது தந்தையின் தலையெழுத்தையும் மாற்ற வேண்டும்... அதற்காக வேண்டி அவன் முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தான்...

நேற்றிரவு கடற்கரையில் சந்தோஷ் காரில் இருந்து இறங்கி வந்து மது அருந்தியது எல்லாம் தற்செயலாய் நடந்தது தான்... ஏனெனில் சந்தோஷின் நடவடிக்கைகளை விஜய் தொடர்ந்து கண்காணித்ததில் அவனது இந்தப் பழக்கம் தெரிய வந்தது... அப்போதே விஜய் திட்டம் தீட்டிவிட்டான் சந்தோஷிற்கு எதிராக...

ஆனால் இடையில் குமாரி இறந்தது, முத்துபேச்சி சிறை சென்றது, அவன் வேலை நீக்கம் செய்யப்பட்டது, கயல்விழி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் இருப்பது என்று எதிர்பாராத பல விசயங்கள் நடந்து இந்தத் திட்டத்தை அவன் செயல்படுத்த விடாமல் முடக்கிவிட்டது...

அதன் பின் நேற்று தான் அதற்கான நேரம் வந்தது... விஜய் தனது திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக அவன் தான் அந்த இருவரை சந்தோஷிடம் அனுப்பியது... அவர்கள் வேண்டுமென்றே இவர்கள் நால்வரையும் அடித்து நகை, பணத்தைப் பறித்து விட்டு அவர்களது தன்மானத்தைச் சீண்டி விட்டு செல்ல, விஜய் நினைத்தது போல் அடிவாங்கிய சந்தோஷ் பொங்கி விட்டான்...

ஏனெனில் முத்துபேச்சியிடம் அடிவாங்கியதற்காகச் சந்தோஷ் அவளை மானபங்கப்படுத்தும் அளவிற்குச் சென்றவன்... அதனால் அவனது இந்தக் குணத்தை நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டு விஜய் களம் இறங்கினான்... கடைசியில் அவன் நினைத்தது போல் தான் நடந்தது...

அந்த இருவரை தேடி வந்த நால்வரும் கடைசியில் வந்து சேர்ந்த இடம் ஆயுதம் மற்றும் போதை பொருட்களைச் சட்ட விரோதமாக வெளிநாட்டில் இருந்து இந்தியாவிற்குக் கடத்தி கொண்டு வரும் இடத்திற்கு...

வெகுநாட்களாகவே காவல்துறைக்கு அந்த இடத்தைப் பற்றித் தகவல் வந்து கொண்டே இருந்தது... அதைக் கண்டுபிடித்து அழிக்க நினைத்த போது தான் அதில் சந்தோஷையும் திட்டமிட்டு சிக்க வைத்தான் விஜய்...

நாச வேலைகளைச் செய்து வருபவனை இப்படிச் சதி செய்து தான் பொறியில் சிக்க வைக்க வேண்டியிருந்தது... அவனுடன் அவனது நண்பர்களையும் சேர்த்து...

ஆனால் அவனது நண்பர்கள் மூன்று பேரை மட்டும் அடித்துத் துவைத்து எடுத்துவிட்டு வெற்றுத் தாளில் கையெழுத்து வாங்கி விட்டு அனுப்பிவிட்டான் விஜய்... அந்த அடி கூடத் தன்னவளின் மீது அவர்கள் கை வைத்ததினால் தான்...

தனக்கு எதிராக ஏதாவது பேசினால் கடுமையான சட்டம் அவர்கள் மீது பாயும் என்று அவன் அவர்களை எச்சரிக்க, அவர்களோ தப்பித்தால் போதும் என்று கையெடுத்து கும்பிட்டு விட்டு ஓடி போய்விட்டனர்...

ஏதோ உல்லாசமாய் இருக்க ஆசைப்பட்டு அவர்கள் மூவரும் சந்தோஷுடன் ஊரை சுற்றி கொண்டிருந்தனர்... அதற்காக அவனுக்காகத் தங்களது எதிர்கால நலனை அடகு வைக்கும் அளவிற்கு அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை... அவர்களை நம்பியிருக்கும் அவர்களது குடும்பம் கண்முன் தோன்றியதும் மூவரும் கல்லெறிந்த காக்கை கூட்டமாய்ச் சிதறி ஓடி போயினர்... சந்தோஷ் மட்டும் விஜய் விரித்த வலையில் அழகாய் மாட்டி கொண்டான்...

தனக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று அவன் பிடிவாதமாய் மறுத்தான்... 'அப்படி என்றால் உனக்கு அங்கே என்ன வேலை...?' என்ற கேள்விக்கு அவனால் பதில் கூற முடியவில்லை... சந்தோஷ் கூறிய பதிலும்

பொருத்தமாய் இல்லை என்று கூறி காவல்துறை அவனது பதிலை புறக்கணித்தனர்...

அப்படி இருந்தும் சந்தோஷ் அடங்காமல், "நான் யார்ன்னு தெரியுமா...? என் அப்பா யார்ன்னு தெரியுமா...?" என்று திமிராய் கேட்க...

அதைக் கண்டு அவனை அடித்துத் துவைக்க வேண்டும் என்று ஆத்திரம் எழுந்தது விஜய்க்கு... ஆனால் நாளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் வரை அவன் மேல் கை வைக்க முடியாது என்பதால் பல்லை கடித்துக் கொண்டு அமைதியாக இருந்தான்...

"அதை நாளைக்குக் கோர்ட்ல வந்து சொல்லு..." என்றதோடு விட்டு விட்டான்...

நேற்று அந்த இரவு நேரத்திலும் தனது ஊடக நண்பர்களை அழைத்து வந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள், போதை பொருட்களுடன் குற்றவாளிகளையும் சேர்ந்து நிற்க சொல்லி புகைப்படம் எடுக்கச் சொல்லியவன் மறுநாள் அதைத் தலைப்புச் செய்தியாக மாற்றிவிட்டான்...

ஊடகங்கள் தானே ஒரு விசயத்தைத் தானாய் ஊகித்து, ஊகித்துப் பெரிதாக்கின்றது... அதனால் முதல் வேலையாய் அதைச் செய்தான் அவன்...

இதோ சொன்னது போல் சந்தோஷை தனி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியாகி விட்டது... அவர்கள் வருவதற்கு முன் அங்கு வந்து காத்திருந்த சுந்தரலிங்கத்தைக் கண்டு விஜய்க்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... ஆனாலும் எதையும் வெளிக்காட்டி கொள்ளாது ஒருவித விறைப்புடன் அவரைக் கடந்து சென்றான்...

அதே நேரம் சுந்தரலிங்கமும் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்... அவரது கண்களில் கொலைவெறித் தெரிந்தது... ஆனாலும் மகன் மீதான பாசம் அவரை எதுவும் செய்ய விடாமல் தடுத்தது... இல்லை என்றால் அவரது மகனது கையில் விலங்கு மாட்டிய விஜய்க்கு இந்நேரம்

அவர் மலர் வளையம் வைத்திருப்பார்... போன முறையே அவர் அதைச் செய்திருக்க வேண்டியது... ஏனோ விஜய்க்கு நல்ல காலம் அதனால் அவர் அவனது வேலையைப் பறித்ததோடு விட்டு விட்டார்...

சந்தோஷின் வழக்கை விசாரித்த நீதிபதி குற்றத்திற்கான ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு பதினைந்து நாள் அவனைச் சிறைக் காவலில் வைக்கச் சொல்லி உத்தரவிட்டார்...

ஏனெனில் சந்தோஷுடன் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோருமே சட்டவிரோத காரியங்களில் ஈடுபட்டு வந்தவர்கள்... சர்வதேச அளவில் குற்றவாளிகளுடன் தொடர்பு உடையவர்கள்... அதனால் சந்தோஷும் இதிலிருந்து தப்ப முடியவில்லை...

சந்தோஷை மற்ற காவலர்கள் அழைத்துச் சென்ற போது சுந்தரலிங்கம் மகன் அருகில் வந்து கண் கலங்கினார்... அந்தச் சமயம் அங்கு வந்த விஜய் காவலர்களிடம்,

"அக்யூஸ்ட்டை வேனில் ஏத்தாம இங்கே என்ன பண்ணிட்டு இருக்கீங்க...? ட்யூட்டி ஃபர்ஸ்ட்..." என்று அவசரப்படுத்த...

அவனது உத்தரவை ஏற்று அந்தக் காவலர்கள் சந்தோஷை அப்புறப்படுத்த முயல, அவனோ தனது தந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு கதறினான்...

"டாடி... எனக்குப் பயமாயிருக்கு..." என்று...

பிறந்தது முதல் சொகுசாக வளர்ந்தவன்... அதனால் சிறை பற்றிய பயம் அவனது கண்களில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

அதைக் கண்டு சுந்தரலிங்கத்திற்கு மனம் வலித்தது... கதற, கதற தனது மகனை இழுத்துச் செல்லும் காவலர்களைக் கண்டு அவரது கோபம் அதிகரித்தது... அது எல்லாம் அப்படியே விஜய் மீது திரும்ப அவனைப் பார்த்து உக்கிரமாய் முறைத்தார் அவர்...

"உன் பையன்னுடனே உனக்கு வலிக்குதோ... இது மாதிரி தானே தூக்கு போட்டுக்கிட்ட அந்தப் பொண்ணுக்கும் வலிச்சியிருக்கும்... அன்னைக்கு அநியாயமா ரோட்டில் செத்தாங்களே அந்த மக்களுக்கும் வலிச்சியிருக்கும்... வலின்னா என்னன்னு இப்பவாவது அப்பனுக்கும், புள்ளைக்கும் தெரியுதா...?"

முத்துபேச்சி விசயத்தைக் கூறாமல் அவன் மறைத்துவிட்டான்... தனக்கும் அவளுக்குமான உறவு பற்றிப் பேச இது தகுந்த நேரமில்லை என்று அவன் அதை அவரிடத்தில் சொல்லாது மறைத்தான்... ஆனால் அவருக்கு அது பற்றி ஏற்கெனவே தெரியும் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை...

கிண்டலாய் கேட்டவனைக் கண்டு அவரது இரத்தம் கொதித்தது...

"உனக்கும் அந்த வலியை நான் காட்டுறேன்டா..." என்று அவர் கத்த...

'இப்போ நான் அதை அனுபவித்துக் கொண்டு தான்டா இருக்கிறேன்... அதுக்குத் தான் இந்தப் பழிக்கு பழி...'

மனதில் நினைத்துக் கொண்ட விஜய் வெளியில் புன்னகையுடன் தன் கையிலிருந்த தொப்பியை எடுத்துத் தலையில் மாட்டியவன் சுந்தரலிங்கத்தை அன்று அவர் பார்த்தது போல் நக்கல் பார்வை பார்த்தபடி கம்பீரமாக நடந்து சென்றான்... அவனது பார்வைக்கு அர்த்தம் புரியாது நின்றிருந்தார் அவர்...

இனி தானே அவனது ஆட்டம் ஆரம்பம்...!!!

****

அடுத்து வந்த இரு நாட்களும் சந்தோஷின் வழக்கு விசயமாக விஜய்யின் பொழுது வேகமாக ஓடியது... அந்த இரு நாட்களும் விசாரணை என்கிற பேரில் சந்தோஷை அடித்துத் துவைத்து எடுத்துவிட்டான் அவன்... எல்லாமே ஊமை அடி தான்... எதுவுமே வெளியில் தெரியாது...

செல்லமாய் வளர்ந்த சந்தோஷ் அடி தாங்க முடியாமல் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் அளவிற்கு இறங்கி வந்து விட்டான்...

அந்தளவிற்கு விஜய்யின் அடி இடியாய் அவனது தேகத்தில் இறங்கி அவனை ஆதியோடு அந்தமாய்க் கதிகலங்க செய்தது... விஜய்க்கு இது மட்டும் போதாதே... இன்னமும் வேண்டுமே... அதனால் மெதுவே தனது காய்களை நகர்த்தினான் சாணக்கியனின் சாமர்த்தியத்தோடு...

அவன் விரிக்கும் வலையில் சுந்தரலிங்கம் என்கிற திமிங்கலம் தானாய் வலிய வந்து மாட்டினால் தானே அவனுக்கு நல்லது...

அன்று விஜய் ரோந்திற்காக நகரத்தை சுற்றிக் கொண்டிருக்கும் போது அவனது அலைப்பேசி அழைத்தது...

"கண்ணம்மா கண்ணம்மா அழகு பூஞ்சிலை
என்னுள்ளே என்னுள்ளே பொழியும் தேன் மழை
உன்னை நினைத்திருந்தால் அம்மம்மா நெஞ்சமே
துள்ளிக்குதித்துத் தான் எங்கெங்கும் செல்லுமே"

நந்தினி ஸ்ரீகர் குரலில் வித்தியாசமான இனிமையான அந்தப் பாடல் அவனது மனதை மிகவும் கவர்ந்ததால் தனது கண்ணம்மாவின் அழைப்பிற்காக என்று அவன் இந்தப் பாடலை பிரத்யேகமாக வைத்தது...

அதில் வரும் பாடல் வரிகள் எல்லாமே அவனுக்கு மிகவும் பிடிக்கும்... அதிலும் இந்த இரண்டு வரிகள் அவனுக்கு மிகவும் பிடிக்கும்...

"பாரதி உன் சாயலை பாட்டாக மாற்றுவான்
தேவதை நீ தான் என வாயாரப் போற்றுவான்"

தனது கண்ணம்மாவிற்காகவே எழுதப்பட்டது போலிருந்தது அந்த வைர வரிகள்... அவளும் பாரதி கண்ட புதுமை பெண் தான்... அவனுக்குத் தேவதை பெண் தான்...

தன்னவளை நினைத்த மாத்திரத்தில் அத்தனை நேரம் கடமையின் காரணமாகக் கடுகடுவென இருந்த அவனது முகம் மென்மையுற உடனே அவளது அழைப்பை ஏற்று அலைப்பேசியைக் காதில் வைத்தான்...

"சாமி... கயல்... கயல்..."

மறுமுனையில் திணறலாய் ஒலித்த அவளது குரலை கேட்டு அவன் மிகவும் பயந்து போனான்...

"கயலுக்கு என்னம்மா ஆச்சு...?" என்று பதறியவாறு அவன் கேட்க...

அவனது பதற்றம் உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட முத்துபேச்சி,

"கயல் கண் முழிச்சிட்டா சாமி..." என்றாள் சந்தோசமாய்க் கண்களில் கண்ணீர் மல்க...

அதைக் கேட்ட விஜய்யின் விழிகளிலும் மெல்லிய நீர்ப்படலம்... அவன் அணிந்திருக்கும் சீருடையின் கம்பீரத்தையும் மீறி அவனது விழிகள் கசிந்தது பாசத்தினால்...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்றவனுக்குச் சந்தோசத்தில் மேலே பேச முடியவில்லை...

அவனது உணர்வினை புரிந்து கொண்டவளாய் அவள், "கண் முழிச்சு என்னைய, பாண்டிய பார்த்து சிரிச்சா... ஒரு ஐஞ்சு நிமிசம் முழிச்சிருந்தா... அதுக்கு அப்புறம் மயக்கமாகிட்டா..."

"மயக்கமா...?" அவன் மீண்டும் பதற...

"பயப்பட ஒண்ணுமில்லை... மருந்தோட வீரியத்தில் அப்படித்தான் இருக்குமாம்... இல்லைன்னா காயம் வலிக்கும் இல்லையா..."

அதை அவனும் புரிந்து கொண்டான்...

"எனக்கும் அவளைப் பார்க்கணும் போலிருக்கு... ஆனா இப்போ நிறைய வேலையிருக்கு... நைட் எந்த நேரமானாலும் நான் கயலை பார்க்க வர்றேன்..."

"ஐயோ சாமி... நீ உன் வேலையைப் பாரு... இங்கே எல்லாரும் நல்லா பார்த்துக்கிறாங்க... ஒரு குறையும் இல்லை..." என்றாள் அவள் நிறைவாய்...

"ம்... இது போல் தான் என் வாழ்நாள் கடைசி வரைக்கும் உன்னையும், கயலையும் எந்தவித குறையும் இல்லாம பார்த்துக்கணும்ன்னு நான் நினைக்கிறேன்..."

அவனது வார்த்தைகளுக்கு அவள் எப்போதும் போல் மௌனத்தைப் பதிலாகக் கொடுத்தாள்...

அவளது மௌனம் ஏனோ இன்று அவனது மனதை வாள் கொண்டு அறுத்தது... மனம் வலிக்க ஒன்றும் பேசாது அழைப்பை துண்டித்தான் விஜய்...

அடுத்து சில மணி நேரங்களுக்கு அவனது பணி அவனை ஆக்கிரமித்துக் கொண்டது... ஆனால் அவனது மனம் எப்போதோ பறந்து சென்று மகளிடம் தஞ்சம் அடைந்திருந்தது...

ஒருவழியாய் தனது வேலைகளை முடித்துக் கொண்டு மகளைப் பார்க்க மருத்துவமனைக்கு அவன் கிளம்பினான்...

விஜய்யை கண்டதும் ஐசியூ வாயிலின் முன் அமர்ந்திருந்த முத்துபேச்சி அவனை நோக்கி ஓடி வந்தாள்... அவளைக் கூட அவனால் பார்க்க முடியவில்லை... அவனது கண்கள் இரண்டும் ஐசியூ வாயிலிலேயே நிலை கொண்டு இருந்தது...

மகளைக் காண வேண்டும் என்று அத்தனை தூரம் விரைந்து வந்தவனுக்கு அந்த ஐசியூ வாயிலை தாண்டி உள்ளே செல்ல முடியாமல் இரும்பு குண்டை பிணைத்து வைத்துக் கட்டியது போல் அவனது கால்கள் இரண்டும் கனமாய் மாறி நகர மறுத்தது...

அது ஏனென்று அவனுக்குப் புரிந்து தான் இருந்தது... இதுநாள் வரை மகளின் பார்வையில் தான் யாரோ ஒரு 'அங்கிள்'ளாக இருந்தது பற்றி அவனுக்குக் கவலையில்லை... ஆனால் இந்தக் கணம் அவனால் அதை அப்படிச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை...

எங்கே தன் மகள் தன்னை 'அங்கிள்' என்றழைத்து விடுவாளோ என்று பயந்தான் அந்த அஞ்சா நெஞ்சம் கொண்ட காவல்காரன்...

முத்துபேச்சி தனது காதலை மறுத்த போது கூட அவன் இது போல் பயங்கரமாய் உணர்ந்தது இல்லை... ஆனால் இந்த நொடி அத்தனை பயங்கரமாய், கொடியதாய் உணர்ந்தான் தனது தூரதிர்ஷ்டமான நிலையை எண்ணி...

அவனது ஒரு மனம் மகளைக் காண தவித்துத் துடித்தது, ஆனால் மறு மனமோ அவள் தன்னை 'அப்பா' என்று அழைக்க மாட்டாளா என்று எண்ணி பரிதவித்தது...

"சாமி..." முத்துபேச்சியின் அழைப்பில் அவளைத் திரும்பி பார்த்தவன் விழிகள் என்றும் இல்லாத அளவுக்கு இன்று அவளைக் கண்டு வெறுப்பை உமிழ்ந்தது...

அவனது இத்தகையை நிலைக்கு இவள் தானே காரணம்... ஏனோ அவனுக்கு மனம் விட்டுப் போனது அவளிடத்தில்... இயலாமையில் எழுந்த கோபத்தை அடக்கும் வழி தெரியாது அவளை உறுத்து விழித்தான்...

அவனது பார்வையின் உக்கிரத்தை தாங்க முடியாது அவள் பேந்த பேந்த விழித்தபடி ஓரடி பின்னே நகர்ந்தாள்...

அவனோ அவளைச் சிறிதும் கண்டு கொள்ளாது ஐசியூவினுள் நுழைந்தான்...

"முத்து..." பாண்டியன் அவளை அழைக்க, அதில் சுயவுணர்வு அடைந்தவள்,

"என்ன பாண்டி...?" என்று மனதின் கலக்கத்தை மறைத்துக் கொண்டு அவள் கேட்க...

"விசய் கயலை பார்க்க போயிருக்கு..."

அவன் சொன்னதும் அவளும் ஐசியூவினுள் நுழைந்தாள்...

கண்களை மூடி படுத்திருந்த மகளைக் கண்டதும் விஜய்யின் மனதில் அவனையும் அறியாது ஒரு நிம்மதி எழத்தான் செய்தது... ஆனால் அதையும் மீறி மகள் கண் விழித்துத் தன்னைப் பார்க்க மாட்டாளா என்ற ஏக்கமும் அவனை அதிகமாய்த் தாக்கத்தான் செய்தது...

அப்படி அவள் விழித்துத் தன்னைப் பார்த்தால் அந்த நொடி எத்தனை மோசமானதாக இருக்கும் என்று நினைத்து பார்த்தவனுக்குத் தன் மீதே கழிவிரக்கம் பொங்கியது...

அந்நேரம் அங்கு வந்து நின்ற முத்துபேச்சியைக் கண்டு அவனது கோபம் அதிகரிக்க அவளை இழுத்துக் கொண்டு வெளியில் வந்தவன் நேரே அவர்களுக்கு என்று ஒதுக்கி வைத்திருந்த அறைக்குள் அவளை அழைத்துச் சென்றவன் அதன் பின்பே அவளது கையை விடுவித்தான்...

அவர்களுக்கு இடையில் பேச முடியாது பாண்டியன் வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான் துயரத்தோடு...

"ஏன்டி என்னை இப்படிச் சித்ரவதை பண்ணி கொல்ற...?" அவளது இரு தோள்களையும் உலுக்கியபடி கேட்டவனைக் கண்டு அமைதியாகத் தலை குனிந்து நின்றாள் அவள்...

அவனது காதலை தாங்க முடியாது தவித்தவளுக்கு அவனது இந்தக் கோபம் சற்று ஆறுதலாக இருந்தது... அவனது இந்தக் கோபம் கூடக் குறைவு தான்... அவன் கோபத்தில் அவளது உயிரை எடுத்தால் கூடத் தகும்... ஏனென்றால் அவள் செய்த காரியம் அப்படி...

"எனக்கு என் பொண்ணு வேணும்டி... அவள் என்னை அப்பான்னு வாய் நிறையக் கூப்பிடணும்ன்னு ஆசையா இருக்குடி... அப்படிக் கூப்பிட வைக்க உன்னால் முடியுமா...?" என்று ஆத்திரத்தில் கத்தியவன்,

"உனக்கும், என் அம்மாவுக்கும் இடையில் கிடந்து போராடி போராடி நான் அவஸ்தைப்பட்டுச் செத்துக்கிட்டு இருக்கேன்... எனக்கு நீயும் வேண்டாம், என் அம்மாவும் வேண்டாம்... என்னைப் புரிஞ்சிக்காத நீங்க ரெண்டு பேரும் எனக்கு வேண்டவே வேண்டாம்... எனக்கும், என் பொண்ணுக்கும் இடையில் நீங்க ரெண்டு பேரும் வராதீங்க... எங்களுக்கான வாழ்க்கையை எங்களை வாழ விடுங்க... அப்பா நான் கல்லுக்குண்டாட்டம் உயிரோட இருக்கும் போது அவள் எதுக்குடி அப்பன் இல்லாத அநாதையா வளரணும்... இனிமேல் நீ ஒதுங்கிக்கோ... என் மகளை நான் பார்த்துக்கிறேன்..."

அப்போதும் வாயை திறந்து பேசாமல் அமைதியாய் இருந்தவளை கண்டு அவனது அடக்கப்பட்ட கோபம் எல்லாம் இன்னமும் எகிறத் துவங்கியது...

அவள் மேலிருக்கும் காதல் அவனை அவளிடத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்கச் சொல்லியது... ஆனால் இதே இது அவனது தந்தை பாசம் 'பொறுத்தது போதும் பொங்கி எழு' என்று அவனைத் தட்டி எழுப்பி ஆவேசமாய் உத்தரவிட்டது...

மகன், சகோதரன், கணவன் என்கிற எல்லாப் பந்தத்தையும் விடத் தந்தை என்ற பந்தம் தனித்துவம் வாய்ந்தது அல்லவா... அந்தப் பந்தத்திற்காக அவன் எல்லாச் சொந்தங்களையும் விட்டு விலகி வர தயாராக இருந்தான்...

இவ்வளவு ஏன் அதற்காகத் தனது காதலையும் கூட உதறித் தள்ள அவன் தயாராக இருந்தான்...

"வாயை திறந்து பேசுடி..." என்று மீண்டும் அவன் கர்ஜிக்க...

அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் அப்படியொரு வலி தெரிந்தது... அவளது கண்கள் கலங்கி சிவந்திருந்தது... இன்று ஏனோ அதைக் கண்டும் அவனுக்கு அவள் மேல் இரக்கம் வரவில்லை... ஏனெனில் அதை விட அதிக வலியை இப்போது அவன் அனுபவித்துக் கொண்டிருக்கிறானே...

"எதுக்குச் சாமி இப்படிக் கோபப்படுற...? நீ பேசுறது உனக்கே அபத்தமா இல்லையா...?"

அதைக் கேட்டு அவன் கோபத்துடன் அவளை உறுத்து விழித்தான்...

"ஊரில் இருக்கிற எல்லா அநாதை விடுதிகளிலும் போய்ப் பாரு... முக்கால்வாசி பிள்ளைங்க உன்னை மாதிரி ஆண்களால் கைவிடப்பட்ட பெண்களால் பெத்து போட்ட பிள்ளைங்க தான்... ஆனா உன்னைய மாதிரி யாரும் பிள்ளைங்களுக்காக இப்படித் துடிக்கிறது இல்லையே சாமி... அவங்களுக்கு ஒத்து வராத வாழ்க்கையைக் கழட்டி விட்டுட்டு வேற புது வாழ்க்கையைத் தேடி போயிர்றாங்க... அது மாதிரி நீயும் உனக்கு ஒரு புது வாழ்க்கையைத் தேடிக்கோ சாமி... கயல் மாதிரி நூறு பிள்ளைங்க உனக்குப் பிறப்பாங்க..."

அவள் கூறியதை காதில் வாங்கிக் கொள்ளாமல், "எனக்குக் கயல் தான் வேணும்..." என்றான் அவனும் படிவாதமாய்...

இத்தனை அழகாய் விளக்கம் சொன்ன அவளைக் கண்டு அவன் அசந்து போனாலும், மகள் விசயத்தில் அவன் பிடிவாதமாய்த் தன் நிலையில் உறுதியாய் நின்றான்...

"ஏஞ்சாமி நான் சொல்றதை புரிஞ்சிக்க மாட்டேங்கிற... உனக்குக் கயல் மாதிரி எத்தனையோ பிள்ளைங்க பிறக்கும்... ஆனா எனக்குக் கயல் மட்டும் தான்..." என்று கெஞ்சும் குரலில் கூறியவளை உறுத்து பார்த்தவன்,

"உன்னைப் போல் தான் எனக்கும் கயல் மட்டும் தான்... வேணும்ன்னா நீ வேணா யாரையாவது கல்யாணம் பண்ணி நூறு பிள்ளையைப் பெத்துக்கோ... என் கயலை என் கிட்ட கொடுத்துரு..." சிறிதும் அசையாமல் இரும்பாய் இறுகி போய்ப் பேசியவனின் வார்த்தைகள் அவளை உயிரோடு கொன்று வதைத்தது...

'யாரை பார்த்து என்ன வார்த்தை சொல்லிவிட்டான்...?' என்று மனம் குமுறியது அவளுக்கு...

ஆனாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது திடமாய் இருப்பது போல் நிமிர்ந்து நின்றவள், "அது முடியாது சாமி..." என்றாள் உறுதியான குரலில்...

"அப்போ என்னாலையும் என் மகளை விட்டு கொடுக்க முடியாது..." என்று அவனும் திடமாய் மறுத்தான்...

அதைக் கண்டு அவள் தளர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"இப்போ கூட உன்னால கயல் என் பொண்ணுன்னு சொல்ல முடியலைல்ல... ஆனா எங்கம்மா கிட்ட மட்டும் உன்னால் அதைச் சொல்ல முடியும் அப்படித்தானே..."

அவனது வார்த்தையில் நெஞ்சமும், தேகமும் பதற அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்...

"நீ அவங்க கிட்ட கொடுத்த வாக்குறுதி எல்லாத்தையும் என் கிட்ட சொல்லிட்டாங்க... அப்போ நீயே ஒத்துக்கிட்டு இருக்கக் கயல் என் பொண்ணுன்னு... என் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் பண்ண மாட்டேன்னு நீ அவங்க கிட்ட சத்தியம் பண்ணியிருக்க... அப்படித்தானே..."

அதைக் கேட்டு திகைத்து போய் அவள் நிற்க, அதில் மனம் கவரப்பட்டு அவளது முகத்தைத் தனது இரு கைகளில் தாங்கியவன்,

"இதுக்கு மேல என்ன ஆதாரம் வேணும்டி... கயல் என் மகள்ங்கிறதுக்கு... அதுவும் நீயே சொன்னன்னு கேட்டப்போ எனக்கு எவ்வளவு சந்தோசமா இருந்தது தெரியுமா... ஆனா அந்தச் சந்தோசத்தை எல்லாம் அனுபவிக்க விடாம ஏன்டி இந்த விசயத்தை என் கிட்ட இருந்து மறைச்ச..."

இப்போது அவனிடத்தில் கோபம் மறைந்து போய்த் தவிப்பு அதிகரித்து இருந்தது...

அதற்கும் அவள் அசைந்து கொடுக்கவில்லை... மாறாகப் புன்னகையுடன் அவனைப் பார்த்தவள்,

"நீ சூரியக்கடவுள் இல்லை சாமி..." என்றாள் சிரிப்புடன்...

"ஓ... அன்னைக்கு நடந்தது எதுவும் எனக்கு ஞாபகத்தில் இல்லைங்கிற தைரியத்தில் தானே நீ இப்படி எல்லாம் பேசுற... ஆனா அன்னைக்கு நடந்த ஒவ்வொரு அசைவும் எனக்கு அப்படியே ஞாபகம் இருக்கு... அதை நான் சொல்லவா...? அதை எல்லாம் நான் சொன்னா நீ தாங்க மாட்ட..." என்றவன் சில அந்தரங்கமான வார்த்தைகளை உதிர்க்க அதில் அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"அன்னைக்கு என் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை தான்... ஆனா உன் மேல் நம்பிக்கை இருந்தது... இப்படி ஒரு நிகழ்வு நமக்கிடையே நடந்திருக்காதுன்னு உறுதியா நம்பினேன்... அந்த எண்ணத்தை என்னோட ஆழ்மனசோட ஆசைன்னு நினைச்சு என்னை நானே தேத்திக்கிட்டேன்... இப்போ என் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு... ஆனா உன் மேல் எனக்குச் சுத்தமாய் நம்பிக்கை இல்லை..."

அன்று நடந்த நிகழ்வுகள் எதையும் மறக்காமல் நினைவு கூறும் அவனைக் கண்டு அவளது மனம் உவகைக் கொண்ட அதே நேரம், வேதனையும் அடைந்தது... யாருக்குமே பயன்படாத வெறும் நினைவுகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று...

ஒன்றும் பேசாது அவனது கைகளை விலக்கி கொண்டு அமைதியாக அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள் அவள்...

அவளது அந்த அமைதி அவனை வருத்தியதோ என்னமோ...

"நீ என்னைக் காதலிக்கணும், கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நான் எந்த விதத்திலும் உன்னை

வற்புறுத்த மாட்டேன்... அதே சமயம் நீ என் மகளுக்கும், எனக்கும் இடையில் வர கூடாது..."

அவன் கூறியதை கேட்டு அவனை நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் கூறவில்லை... அவளது அந்த அமைதியை எப்படி எடுத்துக் கொள்வது என்று அவனுக்கும் தெரியவில்லை...

அந்நேரம் கதவை தட்டி கொண்டு உள்ளே வந்த பாண்டியன் சந்தோசமாய் அவர்களைப் பார்த்து, "கயலு புள்ள கண் முழிச்சி உன்னைய கூப்பிடுது முத்து..." என்க...

அவர்கள் இருவரும் தங்களது மனஸ்தாபத்தினை மறந்து மகளைக் காண விரைந்தனர்...

அன்னையைக் கண்டதும் கயல்விழியின் விழிகளில் மகிழ்ச்சி தெரிந்தது...

"மா..." என்ற ஒற்றை வார்த்தையைக் கூடக் கஷ்டப்பட்டு உச்சரித்தபடி அம்மாவை நோக்கி தனது கையை நீட்டினாள்...

குரல்வளையில் வெட்டு விழுந்ததினால் அவள் பேசுவதற்குச் சற்று சிரமப்பட்டாள்... மற்றபடி அவளின் குரல் எந்த விதத்திலும் பாதிப்படையவில்லை...

பேச தடுமாறும் மகளைக் கண்டு பெற்றோரின் கண்களில் நீர் நிறைந்தது...

பாண்டியனை அடையாளம் கண்டு சின்னவள் சிரித்தாள்... அப்போது தான் தனது அன்னைக்குப் பக்கத்தில் நின்றிருந்த விஜய்யை கண்டாள்... அவனைக் கண்டதும் அவளது கண்களில் மின்னல் வந்தது...

அன்று அவன் கூறியது அவளது நினைவில் எழுந்தது... 'அங்கிள் போலீஸ் தான் பேபி... அதனால் பயப்படாம என் கூட வா... யாராவது தப்பு செஞ்சா அவங்களைப் பிடிச்சுப் பனிஷ்மென்ட் கொடுத்திடலாம்' என்பது தான் அது...

அதே நேரம் அவனும் மகளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவளால் கோர்வையாய் பேச

முடியாது என்று தெரிந்திருந்த போதும் எங்கே அவள் தன்னைக் கண்டு 'அங்...' என்று 'அங்கிளின்' முதல் இரு வார்த்தையையும் கூறிவிடுவாளோ என்று பயத்தில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு மகளைப் பயத்துடன் பார்த்திருந்தான் வாழ்க்கையில் பயமே அறியாது வளர்ந்த அந்தக் காவல்காரன்...

கயல்விழி அவனைப் பார்த்து ஏதோ கூற வர, அவளது இதழ்கள் மீது தனது கரத்தினை வைத்து பொத்தி தடுத்த முத்துபேச்சி,

"அப்பான்னு கூப்பிடு கயல்..." என்றாள் கண்களில் கண்ணீர் வழிய...

அவன் சொல்வது போல் அவளுக்கான வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் வாழ அவளுக்கு உரிமை இருக்கிறது... அது போல் தந்தைக்கும், மகளுக்கும் இடையில் இருக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்குத் தான் தடையாக இருக்க வேண்டாம் என்று எண்ணி தான் அவள் அப்படிக் கூறினாள்...

அவன் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்து தான் அவனது வாழ்க்கையை விட்டு அவள் ஒதுங்கி சென்றது... இதோ இப்போதும் அவன் மனது கஷ்டப்படக் கூடாது என்று தான் இதையும் அவள் செய்கிறாள்...

அவள் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் பின்னும் அவன் மீதான நன்மை தான் இருக்கிறது என்பதை அவன் எப்போது தான் புரிந்து கொள்ளப் போகிறானோ...!!!

முத்துபேச்சியின் வார்த்தையில் விஜய்யின் விழிகளில் நீர் திரண்டது... கண்ணீரின் ஊடே மங்கலாய் தெரிந்த மகளை விடாது பார்த்திருந்தான் அவன்...

தாய் கூறியதை கேட்டு வியப்பில் கயல்விழியின் வழிகள் இரண்டும் அகல விரிந்தது... மனதில் எழுந்த சந்தோசத்தில் தனது உடல் வலியை கூடப் பொருட்படுத்தாது அவனைக் கண்டு ஆசையுடன்,

"ப்... பா..." என்று கஷ்டப்பட்டு அவனை அழைத்தவள் தனது பிஞ்சு கரத்தை அவன் புறமாய் நீட்டினாள்...

அடுத்த நொடி வேகமாய் மகள் அருகே வந்தமர்ந்த விஜய் அவளது கரத்தை எடுத்து தன் கன்னத்தோடு அழுத்தி வைத்துக் கொண்டான் மனதில் எழுந்த பாசத்தோடு... அவனது கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் உருண்டோடியது...

அவனது அந்தக் கண்ணீர் துளிகளைக் கயல்விழியின் தளிர் கரம் மென்மையாய்த் துடைத்துவிட்டது... அதில் அவனது இத்தனை வருட மனத்துயரும் சேர்ந்து துடைக்கப்பட்டது...

தந்தை, மகள் இருவரையும் அப்படிப் பார்ப்பதற்கு அத்தனை கவிதையாக, அழகாக இருந்தது...

வாசம் நேசமாகும்...!!!

தனது கண்ணீரோடு தனது மனத்துயரையும் துடைத்தெறிந்த மகளின் பிஞ்சு கரத்தின் மீது அழுத்தமாய் முத்தம் பதித்தான் விஜய்... தந்தையின் முகத்தை ஆசையுடன் வருடி கொண்டிருந்தது கயல்விழியின் விழிகள்...

"என்ன பேபி...?" மகளின் பார்வையை உணர்ந்து அவன் கேட்க...

அவள் அவனை அருகில் அழைக்க, உடனே அவள் தலைமாட்டிற்கு அருகில் வந்தமர்ந்தவன் அவளது முடியை மென்மையாய் வருடி கொடுத்தபடி,

"என்னம்மா...?" என்றான் அத்தனை அன்பையும் அந்த ஒற்றை வார்த்தையில் தேக்கி...

இதுநாள் வரை தந்தையைக் காணாது, அவன் பாசம் அறியாது வளர்ந்தவளுக்குத் தந்தையைக் கண்டதும் எத்தனை சந்தோசமாய் இருந்ததோ, அதை விட அதிகப் பெருமையாய் இருந்தது அவன் காவல்துறையில் வேலை பார்ப்பது கண்டு...

தனது இரு கைகளால் அவனது அணைத்துக் கொள்ள அவள் முயன்ற போது கழுத்தில் இருந்த காயம் அவளுக்கு வலியை கொடுக்க,

"மா..." என்றபடி முகத்தைச் சுளித்தாள்...

அவளது மனதினை உணர்ந்தவனாய் விஜய் அவளைத் தன்னோடு சேர்த்து மென்மையாக அணைத்துக் கொண்டான்... அவளும் தகப்பனின் அணைப்பில் பாந்தமாய் அடங்கிக் கொண்டாள்...

இந்தக் காட்சியைக் கண்டு பாண்டியனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... இறுதியில் கயல்விழிக்கு தந்தை கிடைத்துவிட்டானே... இப்போதைக்கு அதுவே அவனுக்குப் போதுமானதாய் இருந்தது...

முத்துபேச்சியின் நிலையோ சொல்லவே வேண்டாம்... அந்தக் காட்சியைக் கண்டு கண்கள் பனிக்க, உள்ளம் உருக அவள் நின்றிருந்தாள்... தானும் அவர்களுள் ஒரு அங்கமாக மாறிவிட அவளது மனம் துடித்தது... ஆனால் அதைச் செய்ய முடியாமல் தன்னைக் கட்டி போட்டிருக்கும் அந்தத் தழையை அந்தக் கணம் அவள் மனமார வெறுத்தாள்...

எந்த நிலையிலும் அவளை மனதார நேசிக்கும் அன்பு காதலன் விஜய்... இதை விட அவளுக்கு வேறு என்ன வேண்டும்... இத்தகையை இன்பத்தை அனுபவிக்க விடாமல் செய்யும் தனது நிலையை மாற்றிவிட அவள் துடித்தாள்... அவளுக்கு மட்டும் அத்தகைய சக்தி இருக்குமேயானால் இந்தக் கணம் அதை மாற்றியமைத்து காதலனோடு சந்தோசமாக வாழ்ந்திருப்பாள்...

இப்படி மனம் நிறையக் காதலை சுமந்து கொண்டு தனக்குள் குமுறிக் கொண்டு தனித்து இருந்திருக்க மாட்டாள்...

தந்தையின் அருகாமையும், அவனது சுகமான வருடலும் கயல்விழியை நல்ல உறக்கத்தில் ஆழ்த்தியது...

ஆழ்ந்து உறங்கியவளை கண்டதும் அவர்கள் மூவரும் வெளியில் வந்தனர்...

பாண்டியன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்... அவன் அருகில் அமைதியாய் அமர்ந்த முத்துபேச்சி ஏதோ தோன்ற விஜய்யை நிமிர்ந்து பார்த்தாள்...

அந்த நேரம் அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது கண்கள் அவளிடம் எதையோ யாசித்துக் கொண்டிருந்தது...

"என்ன சாமி... எதுவும் வேணுமா...?" என்னவென்று புரியாமல் அவள் கேட்டாள்...

"உன் கிட்ட பேசணும்..." என்று அவன் தன் கண்களால் அறையைச் சுட்டிக்காட்ட... அவள் மறுப்பேதும் சொல்லாமல் அவனுடன் சென்றாள்...

அறைக்குள் நுழைந்த அடுத்தக் கணம் விஜய் அவளை ஆரத்தழுவி இருந்தான்... பேச வேண்டும் என்றழைத்து வந்துவிட்டு இப்படி அணைத்துக் கொண்டு இருப்பவனைக் கண்டு முதலில் விக்கித்து நின்றவளின் மனம் மெல்ல இளகத் தொடங்கியது அவன் பால்...

கற்பாறையாய் தனக்குள் இறுகி போயிருந்தவளின் இதயத்தில் அவன் மீதான காதல் என்னும் ஈரம் மெல்ல கசிய ஆரம்பித்தது...

அவனுக்கோ அந்தக் கணம் மனதில் காதல் எதுவும் இல்லை... அவன் மனதில் இருந்தது எல்லாம் மகள் தன்னைக் கண்டு 'அப்பா' என்றழைத்ததில் வந்த மகிழ்ச்சி மட்டும் தான்... உலகையே வென்றுவிட்டது போன்றதொரு உவகையில் அவன் இருந்தான்...

இதுநாள் வரை துக்கத்தையோ, மகிழ்ச்சியையோ பகிர்ந்து கொள்ள ஆள் இல்லாமல் ஒற்றை ஆளாய் அனைத்தையும் சுமந்து வந்தவனுக்கு மனதில் இருந்த அழுத்தம் தான் கூடியதே தவிர... அவனுக்கு என்று தனியே ஆறுதல் தர யாருமே இல்லை...

இன்று மகளுக்குத் தன்னைத் தந்தையாக அடையாளம் காட்டிய தன்னவள் மட்டுமே இப்போது அவனது கண்களுக்குத் தன்னுடைய ஒரே உறவாகத் தெரிந்தாள்... பாலை நிலத்தில் சுடும் மணலில் நடப்பவனுக்குப் பசுஞ்சோலையாக அவள் காட்சியளித்தாள்...

அதனால் தான் இப்போது அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டி தான் அவளைத் தனியே அழைத்து வந்தது... அத்தனை சந்தோசம் அவனுக்கு...

மேலும் மேலும் அவன் தனது அணைப்பை இறுக்கி மன மகிழ்ச்சியை வெளிப்படுத்த, பாவையவள் தான் மிகவும் திண்டாடி போனாள் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாது...

"என்ன சாமி... உனக்கு எத்தனை தடவை சொல்றது... பொட்டப் புள்ளையைத் தொட்டு பேசாதேன்னு..."

அவளது குரல் அவளுக்கே கேட்கவில்லை... அத்தனை மெதுவாய், முனங்கலாய் ஒலித்தது...

அதில் அவளை விட்டு விலகியவன் அவளது முகத்தைக் கூர்ந்து பார்த்தான்... முகம் சிவக்க, அவளையும் மீறி இதழ்களில் நெளிந்த புன்னகையுமாய் நின்றிருந்தவளின் தோற்றம் அவனுக்கு உற்சாகத்தைத் தருவதாய்...

"நான் உன்னைத் தொட்டு பேசலையே... உன்னைக் கட்டித்தானே பிடிச்சேன்... அதுவும் எதுவும் பேசாம..." என்று உல்லாச குரலில் கூறியவனைக் கண்டு அவள் 'பே'வென விழித்தாள்...

அவளது திகைப்பை உணர்ந்தவனாய் அவளது மோவாயை ஒற்றை விரலால் தொட்டு முகத்தை நிமிர்த்தியவன், "ரொம்பச் சந்தோசமாயிருக்கு ஹனி..." என்றான் மனதார...

"எங்கே கயல் என்னைப் பார்த்து அங்கிள்ன்னு சொல்லிருவாளோன்னு ரொம்பப் பயந்தேன்... கடவுள் மாதிரி வந்து என்னைக் காப்பாத்திட்ட..." என்றவன் மனம் நெகிழ அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு,

"தேங்க்ஸ் ஹனி..." என்றான்...

சாக்கடையில் வசிக்கும் புழுவான தன்னைப் போய் அவன் கடவுள் என்கிறானே என்று மனதில் ஆயாசமாய் நினைத்தவளின் கண்கள் கலங்கியது...

"என்னைப் போய்க் கடவுள் அது இதுன்னுட்டு..." என்று அவனைக் கடிந்தவள்,

"நீ சொன்ன மாதிரி உனக்கும், கயலுக்கும் இடையில் வர நான் யாரு சாமி...? இனிமேல் உங்க ரெண்டு பேர் பாசத்தையும் நான் தடுக்க மாட்டேன்..."

"நீ யாரா...? இது என்ன அபத்தமான கேள்வி...? என் மகளுக்கு அம்மா நீ... அப்படி என்றால் நீ எனக்கு என்ன

வேணும்...?"

அதற்குப் பதில் பேசாது அழுத்தமாய் இருந்தவளை கண்டு இப்போது அவன் மனம் கலங்கவில்லை...

"நீ வாயை திறக்க மாட்ட... ஆனா நீயே வாய் திறக்கும் காலம் வரும்... இப்போ எப்படிக் கயலை என் மகள்ன்னு ஒத்துக்கிட்டியோ... அது போல் என்னை உன் கணவனா நீ ஏத்துக்குவ... அப்போ என் உறவுக்கான உரிமையை நீ சொல்லாம நான் எடுத்துக்குவேன்... அப்போ நீயே நினைச்சாலும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது..."

தீர்க்கமாய், ஆணித்தரமாய்ப் பேசியவனைக் கண்டு அவள் திகைத்து போய் விழித்தாள்... அந்தத் திகைப்பையும் மீறி அவளது கண்களில் சிறு எதிர்பார்ப்பு எட்டிப் பார்த்தது என்னவோ உண்மை... தனது வாழ்வில் அப்படி ஒரு நாள் வந்துவிடாதா என்று அவளது மனம் ஏங்கி தவித்தது...

அவளது தவிப்பை உணர்ந்தவனாய் அவன், "எதுக்குடி இத்தனை கஷ்டம்...? யாருக்காக இப்படிப் பிரிஞ்சி இருக்கிற...? என் குடும்பத்துக்காகவா...? நானே அவங்களை எல்லாம் தூக்கி எறிஞ்சிட்டு வர தயாரா இருக்கும் போது நீ எதுக்காக இவ்வளவு யோசிக்கணும்...?" என்றவன் அவள் அருகில் வந்து அவளது முகத்தைத் தன் கைகளில் தாங்கி,

"நமக்கே நமக்குன்னு ஒரு குடும்பம்... அதில் நீ, நான், நம்ம கயல்ன்னு சந்தோசமா வாழ முடியாதா...? இத்தனை வருசங்களை வீணடிச்ச மாதிரி இனி வரும் காலத்தையும் வீணடிச்சு விடாதே ஹனி... கடந்து போன நமது இளமை காலங்கள் இனி வரவே வராது... இருக்கும் கொஞ்ச காலம் நாம சந்தோசமா வாழலாமே... யார் என்ன சொன்னாலும் நான் உன் கூட இருக்கேன் ஹனி... எந்த நேரத்திலும், எந்த நிலையிலும் நான் உனக்குத் துணையா இருப்பேன்... எந்தச் சூழ்நிலையிலும் நான் உன்னைக் கைவிட மாட்டேன்..."

"இது எல்லாம் நடக்கணும்ன்னா நீ சம்மதம்ன்னு ஒரு வார்த்தை சொல்லுடி.. ப்ளீஸ்..."

சற்று நேரத்திற்கு முன் மகளுக்காக அவளிடத்தில் கோபம் கொண்டதை எல்லாம் மறந்து போனவனாய் அவளிடத்தில் கெஞ்சி கொண்டு இருந்தான் அவன்...

அவனது கோபத்தை விட, காதலை விட, அவன் இப்படித் தன்னிடத்தில் கெஞ்சி கொண்டிருப்பது கண்டு அவள் அப்படியே உடைந்தாள்... அவனது கைகளை விலக்கி விட்டு தனது கைகளால் முகத்தை மூடி கொண்டு அழுதவளை கையாலாகாதவனாய் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்...

"என்ன தான்டி உன் மனசில் இருக்கு... என் கிட்ட சொல்லு... தீர்க்க முடியாத பிரச்சினைன்னு எதுவும் இல்லை..."

இது அவளோ, அவனோ தீர்க்கக்கூடிய பிரச்சினை இல்லையே... மனம் தாங்காது கண்ணீர் உகுத்தவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது...

கல்லூரி காலத்தில் சிட்டுக்குருவியாய் உற்சாகமாய்ப் பறந்து திரிந்த முத்துபேச்சி அவன் நினைவில் வந்தாள்... அவளுக்கு என்று தனிக்கோட்பாடு, தனி வழி என்று சந்தோசமாய் இருந்தவளை காதல் என்கிற பெயரில் அவளது சிறகுகளைத் தான் வெட்டி விட்டதாய் எண்ணி அவன் மனம் துடித்துப் போனான்...

அவளது வாழ்க்கையை அவள் விருப்பப்படி வாழ விட்டு விட்டு தான் ஒதுங்கி சென்றிருக்க வேண்டுமோ என்று முதன்முறையாய் அவள் பக்கம் இருந்து யோசித்தான்...

அழகாய் மலர்ந்த நட்பில் காதலை விதைத்தவன் அவன் தானே... தவறு முழுவதும் அவன் பேரில் இருக்க அவளைக் குறை கூறுவது எந்த விதத்தில் சரி...

அவளின் நிலையில் இருந்து பார்த்தவனுக்கு அவளை நினைத்துப் பாவமாக இருக்க அவள் அருகில் வந்து ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

அவனது கை அவளது தலையை வருடி, முதுகை நீவி ஆறுதல்படுத்த முயல, வஞ்சியவளோ அதில் ஆறுதல் கொள்வதற்குப் பதிலாக மனமுடைந்து இன்னமும் கதறியழுதாள்...

எத்தகைய சொர்க்கத்தை இழந்து தவிக்கிறாள் அவள்... அதன் அருமையை அருகில் இருந்து உணரும் போது தான் அதனின் இழப்பின் மதிப்புப் பெரிதாய்த் தெரிகிறது...

சிறிது நேரம் சென்று மெல்ல அழுகை குறைந்து அவள் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு அவனிடம் இருந்து விலகினாள்... அவளின் மனம் உணர்ந்து அவனும் தள்ளி நின்றான்...

"சாரி ஹனி... நான் உன்னை எதுவும் கேட்கலை... நீ இப்போ இருக்கிற மாதிரி இருந்துக்கோ... ஆனா தயவுசெய்து இன்னொரு முறை இப்படி அழ மட்டும் செய்யாதே... உன்னைக் கஷ்டப்படுத்திப் பார்க்க என்னால் முடியலை... நீ எப்பவும் சிரிச்ச முகத்தோட சந்தோசமா இருக்கணும்..." என்று கெஞ்சும் குரலில் இறைஞ்சுதலாய் கூறியவனைக் கண்டு அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு சரி என்பது போல் தலையசைத்தாள் அவள்...

அதைக் கண்டு நிம்மதி அடைந்தவனாய், "அப்போ நான் கிளம்பறேன்..." என்க...

அவளையும் அறியாது தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தவள், "இந்த நேரத்திலா...?" என்றாள்...

ஏனெனில் இப்போது இரவு மணி பன்னிரெண்டை தாண்டியிருந்தது...

"காலையில் நிறைய வேலையிருக்கு... இங்கே இருந்தா சரி வராது..."

அவன் சொன்னதும் தான் அவளுக்குமே அது ஞாபகம் வந்தது...

"அவனை ஆயுத கடத்தலுக்குப் போய் அரெஸ்ட் பண்ணியிருக்கியே சாமி... அவன் உனக்கும், எனக்கும் பண்ணிய துரோகத்துக்கு இல்ல நீ அவனை அரெஸ்ட் பண்ணியிருக்கணும்... எனக்கு ரொம்ப ஏமாத்தமா இருக்கு சாமி..."

அவள் சொன்னதைக் கேட்டு அவனது உதடுகள் மர்மமாய்ப் புன்னகைத்தது...

"எதுக்குச் சாமி சிரிக்கிற...?"

"போகப் போக உனக்கே புரியும்..." என்றவனைக் கண்டு,

"அட போ சாமி... நீ பண்றது, பேசுறது எதுவுமே எனக்குப் புரிய மாட்டேங்குது..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"உன் மௌனம் போல் இதுக்குப் பின்னாலும் பெரிய காரணம் இருக்கு..." என்றவனைக் கண்டு அவள் பட்டென்று வாயை மூடி கொண்டாள் அழுத்தமாய்...

"இது நல்ல பிள்ளைக்கு அழகு..." என்று கூறி சிரித்தவன்,

"இன்னும் கொஞ்ச நாளில் உனக்கே எல்லாம் தெரிந்துவிடும்..." என்றவன் அவளிடம் இருந்து விடைப்பெற்று வெளியில் வந்தான்...

அவளும் அவன் பின்னே வந்தாள்...

"பாண்டி... பேச்சியையும், கயலையும் பத்திரமா பார்த்துக்கோ... நீயும் பத்திரமாயிரு... எந்த நேரம்ன்னாலும் அவசரம்ன்னா உடனே எனக்கு ஃபோன் பண்ணு..." என்று பாண்டியனிடம் எச்சரித்துவிட்டு அவன் கிளம்ப, அவளும் அவனுடன் வந்தாள்...

இருவரிடத்திலும் ஒருவித அமைதி நிலவியது...

தனது இருசக்கர வாகனத்தைக் கிளப்பியபடி அவளைப் பார்த்த விஜய், "இங்கே வா..." என்று அவளை அழைக்க...

அவள் என்னமோ ஏதோ என்று அவன் அருகில் வந்தாள் பரபரப்பாய்...

"என்ன யோசனை...? எதுவா இருந்தாலும் கேளு..." என்றான் அவளது குழப்பமான முகத்தினைக் கண்டு...

"நீயும் பத்திரமாயிரு சாமி... அவங்க மோசமானவங்க..." என்றாள் கண்ணில் பயத்துடன்...

"இவங்களை விட மோசமானவங்களை எல்லாம் நான் பார்த்துட்டேன்... அதனால் நீ பயப்படத் தேவையில்லை..." தனது கையால் அவளது கன்னத்தில் தட்டியபடி சொன்னவன் தனது வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு சென்றான்...

அவள் தனது கன்னத்தில் கை வைத்தபடி அவன் செல்வதை இமைக்காது பார்த்திருந்தாள்... அவளின் உறைந்த நிலையைத் தனது வாகனத்தின் கண்ணாடியின் வழியே பார்த்தவன் மனம் அத்தனை சந்தோசமாய் இருந்தது...

ஏனோ ஒருவிதத்தில் மனதால் வாழும் இந்தக் காதல் கூட அவனுக்குப் பிடிக்கத்தான் செய்தது... மனதில் உற்சாகம் கொப்பளிக்கத் தனது வண்டியை முடுக்கினான் வேகமாய்... அடுத்த நொடி அது சாலையில் சீறிப் பாய்ந்தது அவனது மனதினை போல் உற்சாகமாய்...

****

மறுநாள் விஜய் விசாரணை என்கிற பெயரில் சுந்தரலிங்கத்தின் வீட்டிற்கே நேரே சென்றான்... அவனது இந்தத் தைரியத்தைக் கண்டு உள்ளுக்குள் மனம் கொதித்தாலும் வெளியில் விசாரணைக்கு ஒத்துழைப்பது போல் சாதாரணமாகக் காட்டி கொண்டார் சுந்தரலிங்கம்...

மகன் விஜய்யின் பிடியில் இருக்கும் வரை அவராலும் அவனை ஒன்று செய்ய முடியவில்லை... அந்த ஆத்திரம் வேறு சேர்ந்து கொள்ளப் பல்லை கடித்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார் அவர்...

"உங்களுக்கும், இந்த ஆயுதக் கடத்தலுக்கும் சம்பந்தம் இருக்கிறதா உங்க மகன் சொல்றாரே..." என்று எடுத்த எடுப்பிலேயே அவன் கிடுக்கிப்பிடி போட...

மகன் பொய் கூறுகிறான் என்று சொல்லி மகனை மாட்ட வைக்க அவரால் முடியவில்லை... அதே சமயம் மகன் கூறியது உண்மை என்று சொன்னால் மகனை மட்டுமல்லாது அவரையும் சேர்த்து கைது செய்து அழைத்துச் சென்றுவிடுவர் என்று இரண்டையும் நினைத்து அவர் வாயை திறக்கவே பயந்து போய் அமர்ந்திருந்தார்...

முதன்முறையாய் வாயடைத்த நிலையில் அவர் இருந்தார்... இதுநாள் வரை அவர் பேசி தான் எல்லோரும் கேட்டிருந்தனர்... ஆனால் இன்று விஜய் பேசுவதை அவரால் வெறுமனே வேடிக்கை மட்டும் தான் பார்க்க முடிந்தது...

அடுத்தடுத்து அவன் கேட்ட எந்தக் கேள்விக்கும் அவரிடத்தில் பதில் இல்லை... அப்படியே அதற்குப் பதில் கூறினாலும் அவை எல்லாம் அவரைக் குற்றவாளி கூண்டில் ஏற்ற வைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை... அதனால் அவர் அமைதி காத்தார்...

அவரது வீட்டில் இருந்து வெளியில் வந்த விஜய் அங்குக் கூடியிருந்த ஊடகவியாளர்களிடம்,

"மிஸ்டர். சுந்தரலிங்கம் எங்களது விசாரணைக்குப் போதுமான ஒத்துழைப்பு அளிக்கவில்லை... அதனால் இதை நாங்கள் வேறு மாதிரி தான் டீல் செய்ய வேண்டும்..." என்று கூறிவிட்டு செல்ல...

அடுத்து அந்த ஊடகவியாளர்கள் சுந்தரலிங்கத்தைப் பிடித்துக் கொண்டனர்...

அதுவரை அடக்கி வைத்திருந்த கோபத்தை எல்லாம் அவர் அங்கே கொட்டி கவிழ்த்தார்... ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதை அவர் சரியாக நிரூபித்தார்...

"இது ஏசிபியின் தனிப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கை... இதை எப்படிச் சட்டரீதியாகச் சந்திப்பது என்று எனக்குத் தெரியும்..." என்று கோபத்தில் அவர் வீராவேசமாய் முழங்கினார்...

யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல் அவர் அந்த இடத்தில் தனது வார்த்தைகள் மூலம் சற்றுச் சறுக்கித்தான் போனார்...

மறுநாள் அது செய்தித்தாளில் வந்த போது விஜய்யின் உதடுகளில் ரகசியப் புன்னகை ஒன்று தோன்றியது...

இதற்காகத் தானே அவன் காத்திருந்தது... இனி ஆட்டம் அவனது கைகளில் அல்லவா...!!!

****

கயல்விழியை இப்போது ஐசியூவில் இருந்து அறைக்கு மாற்றியிருந்தார்கள்... சின்னவள் உடல்நலம் வேகமாய் முன்னேறி வருவதால் இன்னும் சில நாட்கள் மட்டுமே மருத்துவமனையில் இருந்தால் போதும் என்று சொல்லியிருந்தார்கள்...

அவளைப் பார்ப்பதற்கு மார்ட்டினா வந்திருந்தார்... அங்கேயே அவளுக்காகப் பிரார்த்தனை பண்ணியவர் சின்னவளை ஆசிர்வதித்து விட்டு சென்றார்...

அவர் சென்றதும் முத்துபேச்சியின் அலைப்பேசி அலறியது... நித்யா தான் அழைத்திருந்தாள்... நிச்சயம் அவளுக்குத் திட்டு இருக்கிறது... பயந்து கொண்டே தான் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள்...

அவள் நினைத்து போல் மறுமுனையில் நித்யா படபடவெனப் பொரிய துவங்கினாள்...

"என்னடி... பெரிய தியாகின்னு உனக்கு நினைப்பா...? ஏன்டி நீ விஜய்யை காதலிக்கிறதை என் கிட்ட சொல்லலை... சரி அதைக் கூட விடு... விஜய் உன்னைக் காதலிப்பதையும் ஏன்

சொல்லலை...? அப்படிச் சொல்லியிருந்தா நான் என் மனசில் வீணே ஆசையை வளர்த்திருக்க மாட்டேன்ல..."

கோபமாய் ஆரம்பித்துக் கழிவிரக்கத்தோடு பேசி முடித்தவளை கண்டு முத்துபேச்சியின் கண்கள் கலங்கியது...

"ப்ச்... இப்போ எதுக்கு அதைப் பத்தி பேசுற நித்தி..." என்று பேச்சை மாற்ற எண்ணி முத்துபேச்சி பேச...

"வேற எதைப் பத்தி பேச சொல்ற...? இப்போ கூட வாயை திறக்கிறியா பாரு... சரியான அழுத்தம்டி நீ... எதுக்குடா விஜய் இப்படித் தேவையில்லாம என் மேல கோபப்படுறாருன்னு நினைச்சேன்... ஆனா இப்போ தானே அதுக்குக் காரணம் தெரியுது... அவர் என்னை உங்க காதலுக்கு வில்லி மாதிரி நினைச்சு பார்த்து இருக்கிறார்... நீயே சொல்லுடி, என்னைப் பார்த்தா வில்லி மாதிரியா இருக்கு...?" என்று குரல் கமற கேட்டவளை கண்டு என்ன பதில் பேசுவது என்று முத்துபேச்சிக்கு தெரியவில்லை...

"விஜய் ரொம்பப் பாவம்டி..." என்று நித்யா அடுத்து தொடங்க...

"நித்தி... அவனைப் பத்தி நீ எதுக்குக் கவலைப்படற... நீ உன் குடும்பத்தைப் பத்தி மட்டும் யோசி..." என்று எப்போதும் போல் அவள் தோழியைக் கடிந்து பேச...

"நான் எதுக்கு விஜய்யை பத்தி கவலைப்படணும்... அதான் இனிமேல் அவரைப் பார்த்துக்க நீ இருக்கியே..." என்ற நித்யாவின் குரலில் சிறிதும் பொறாமை இல்லை... மாறாக மகிழ்ச்சியே நிறைந்திருந்தது...

அதை உணர்ந்தார் போன்று முத்துபேச்சியின் கண்கள் பனித்தது தோழியின் அன்பை நினைத்து...

"அப்புறம் கயல் எப்படியிருக்கா...?" என்று நித்யா கேட்க...

"இப்பவாவது உனக்குக் கயலை பத்தி விசாரிக்கணும்ன்னு தோணுச்சே..." என்று முத்துபேச்சி தோழியைக்

கிண்டலடிக்க...

"கயலை நீ நல்லா பார்த்துக்குவன்னு எனக்குத் தெரியும்... ஆனா உன்னைப் பார்த்துக்க யாருடி இருக்கா...?" என்று உரிமையுடன் கேட்ட தோழியைக் கண்டு அவளுக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

"அம்மா இறந்ததுக்கு வர முடியலை முத்து... அதுக்கு அப்புறம் ஏதேதோ நடந்ததா அப்பா சொல்லி கேள்விப்பட்டேன்... சாரிடி..." என்று அவள் வருத்தம் தெரிவிக்க...

நித்யா கூட்டுக் குடும்பத்தில் வசிப்பவள்... நினைத்த மாத்திரம் எங்கும் கிளம்பி சென்றுவிட முடியாது... அவளின் நிலை முத்துபேச்சிக்கும் தெரியுமாதலால்,

"அதான் ஐயா என் கூட இருந்து கவனிச்சிக்கிட்டாங்களே... ஐயா தயவு இருக்கிற வரைக்கும் எனக்கு எந்தக் குறையும் இல்லை நித்தி... என்னைப் பத்தி கவலைப்படாம நீ உன் வாழ்க்கையைப் பார்..." என்று தோழிக்கு அவள் அறிவுரை கூற...

"எனக்கு மட்டும் நீ அட்வைஸ் பண்ணு... ஆனா நான் சொல்றதை மட்டும் நீ கேட்டுவிடாதே..." என்று முணுமுணுத்தபடி நித்யா அழைப்பை துண்டித்தாள்...

நித்யாவின் நினைவில் முத்துபேச்சியின் முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது...

அந்நேரம் செல்வநாதன் அவளுக்கு அழைத்தார்... அவள் எடுத்ததும்,

"முத்து... தலைவர் கயலை பார்க்க ஹாஸ்பிட்டல் வர்றதா சொல்லியிருக்கிறார்..." என்று சந்தோசத்துடன் அவர் சொல்ல...

"ஓ..." என்று அசுவாரஸ்யமாய்ச் சொன்ன முத்துபேச்சியின் குரலிலேயே அவளது மனதை கணித்தவராய்,

"முத்து... அரசியலில் எதிரி நண்பனாவதும், நண்பன் எதிரியாவதும் சகஜம் மா... எப்போதுமே நமக்குக் கிடைக்கிற வாய்ப்பை நாம கெட்டியா பிடிச்சிட்டு முன்னேறி வர்றதை மட்டும் தான் யோசிக்கணும்... மத்தது எதைப் பத்தியும் யோசிக்கக்கூடாது... தலைவர் கயலை பார்க்க வர்றாருன்னா நிச்சயம் உனக்கு இந்த எலெக்சன்ல சீட் கொடுக்கிறதுக்காகத் தான் இருக்கும்..."

அவர் சொல்வதைப் பணிவுடன் கேட்டுக் கொண்ட முத்துபேச்சி அமைதியாக, "சரிங்க ஐயா... நீங்க சொன்னது போல் செய்றேன்..." என்றாள்...

"இது தான் எங்க முத்துக்கு அழகு... இந்த எலெக்சன்ல நீ நிக்கிற, ஜெயிக்கிற..." என்று சந்தோசமாய்ச் சொன்னவரின் சந்தோசம் அவளையும் தொற்றிக் கொண்டது...

அழைப்பை துண்டித்தவள் பாண்டியனிடம் விசயத்தைச் சொல்ல அதைக் கேட்டு அவன் மகிழ்ந்து போனான்...

அன்னையின் சந்தோசமான மனநிலையைப் பார்த்தவாறு இருந்த கயல்விழி அவளிடம், "பா..." என்று சொல்ல...

"அப்பாக்கு என்ன கண்ணு...?" மகளின் தலையை வருடியபடி அவள் கேட்க...

'பார்க்க வேண்டும் போலிருக்கிறது...' என்று மகள் சைகையில் சொல்ல, அதைக் கண்டு முத்துபேச்சியின் கண்கள் கலங்கியது...

விஜய்யின் வேலை பற்றி அவளுக்குத் தெரியும்... அதை எப்படி மகளிடத்தில் கூறுவது என்று தெரியாமல் திணறியவள்,

"வர சொல்றேன் கண்ணு..." என்று மகளைச் சமாளித்து அவளை உறங்க வைத்தாள்...

மகள் உறங்கிய பின் அவனுக்கு அழைத்தாள் அவள்...

"நானே ஃபோன் பண்ணணும் நினைச்சேன்... நீயே பண்ணிட்ட... கயல் எப்படியிருக்கா...?" என்று விடாமல் அவன் பேசினாலும் அவனது குரல் சற்று சோர்வுடன் ஒலித்தது...

"நல்லாயிருக்கா..." என்று பதில் உரைத்தவள்,

"வேலை அதிகமோ சாமி..." என்று அவனது சோர்வு புரிந்தார் போன்று கேட்டாள் அவள்...

குரலை வைத்து தனது மனதினை அறிந்து கொள்ளும் அவளது காதல் அந்த நிலையிலும் அவனைச் சந்தோசப்படுத்த தான் செய்தது...

"கொஞ்சம் அதிகம் தான்..."

உண்மையில் சந்தோஷ் விசயமாக அவனுக்கு வேலை சற்று அதிகமாகத் தான் இருந்தது... கூடவே வழக்கமான பணிகள் வேறு...

"இல்ல... கயல் உன்னைய பார்க்கணும்ன்னு சொல்லுது..." என்று தயங்கி தயங்கி உரைத்தவளை கண்டு,

"இதுக்கு எதுக்கு இத்தனை தயக்கம் பேச்சி... எந்த ராத்திரியானாலும் இன்னைக்குக் கட்டாயம் நான் அவளைப் பார்க்க வர்றேன்னு அவள் கிட்ட சொல்லு..."

அவன் கூறியதும் அவளது மனதிலும் மகிழ்ச்சி குமிழிடத்தான் செய்தது... சரி என்று பதிலுரைத்தவள் அவனின் வரவிற்காக ஆவலுடன் காத்திருந்தாள்...

சொன்னது போல் இரவு பத்து மணிக்கு தான் விஜய்யால் அங்கு வர முடிந்தது... அவனது நல்ல நேரம் கயல்விழி முழித்திருந்தாள்...

அவனைக் கண்டதும் முகம் மலர்ந்த கயல்விழி, அன்னையைக் கண்டு முகச்சிணுக்கம் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"என்னோட பேபிக்கு யார் மேல் கோபம்...?" மகளது தாடையைப் பற்றி அவன் கேட்க...

அவள் அன்னையை நோக்கி கை காட்ட...

"ஏன்டா...?"

அவன் கேட்டதற்கு அவள் சைகையில் ஏதோ சொல்ல, அவன் புரியாது முத்துபேச்சியைப் பார்த்தான்...

"என்ன சொல்றா...?"

"அது ஒண்ணுமில்லை சாமி... ட்ரிப்ஸ் ஏத்துறது எல்லாத்தையும் கழட்டணுமாம்... வலிக்குதுன்னு அழுதா... நான் எடுத்து சொன்னேன், கேட்கலை... அதான் சத்தம் போட்டேன்... அதுக்குக் கோபம் பொத்துக்கிட்டு வருது..." என்று சலித்துக் கொண்டாள் அவள்...

"அம்மா உன்னைச் சத்தம் போட்டாளா... நான் அவளை அடிச்சிடறேன்... நீ கவலைப்படாதே என்ன...?" என்று மகளை அவன் சமாதானம் செய்ய...

அதற்குக் கயல்விழி அவனிடத்தில் அன்னையை அடிக்கச் சொல்லி சைகை காட்ட... அதற்கு முத்துபேச்சி விளக்கம் கொடுக்காமல் சின்னவளை முறைத்து பார்த்தாள்...

"இதுக்கு நீ விளக்கம் கொடுக்கத் தேவையில்லை ஹனி... உன்னைய அடிக்கச் சொல்லி கயல் சொல்றா... அப்படித்தானே... அடிக்க நான் ரெடிப்பா... அடி வாங்குவதற்கு உங்கம்மா ரெடியான்னு கேளு கயல்...?" என்று குறும்பு குரலில் கண்சிமிட்டி வினவியவனைக் கண்டு மகள் சந்தோசத்தில் கைத்தட்டி ஆர்ப்பரித்தாள் என்றால்,

முத்துபேச்சியோ தன்னை மறந்து அவன் முதுகில் இரண்டு அடி போட்டவள், "நீ அடிக்கிற வரை என் கை என்ன பூவா பறிச்சிக்கிட்டு இருக்கும்..." என்றுரைத்தபடி மேலும் இரண்டு அடிகளை இலவசமாக அவனுக்குக் கொடுத்தாள்...

அவளது இலகுவான மனநிலை அவனுக்கு உற்சாகத்தைக் கொடுக்க மகளிடம், "பாருடா பேபி... உன் அம்மா என்னைய அடிக்கிறாள்..." என்று மகளிடம் குற்றப்பத்திரிக்கை வாசித்தவன் முத்துபேச்சியின் இரு கைகளையும் சேர்த்து தனது ஒற்றைக் கையால் பிடித்துத் தடுத்தவாறு,

"அடிக்காதேடி ராட்சசி... வலிக்குது..." என்றபடி மறு கையால் அவளது இடையில் கைக் கொடுத்து அவளைத் தன்னருகில் இழுத்தான்...

கட்டிலில் அமர்ந்திருந்த அவனது முகம் அவளது வயிற்றில் புதையும்படி நெருங்கி வந்ததும் தான் அவள் தன்னிலை உணர்ந்து அவனிடம் இருந்து விலகினாள் அவசரமாய்... அவளது அவசரம் அவனுக்கு இல்லை போலும் மிக மிக மெதுவாய் அவளது இடையைப் பற்றியிருந்த தனது கையை எடுத்தான்...

அதில் அவள் ஊனும், உயிரும் உருக நின்றிருந்தாள்... அப்போது அவன் அவளது முகத்தைத் தான் பார்த்திருந்தான்...

அவன் மகளோடு சிரித்துப் பேசியிருந்ததில் அவளது ஆழ்மனதில் புதைந்திருந்த 'என்னவன்' என்ற உரிமை எண்ணம் மேலெழ தன்னை மறந்து அவனிடத்தில் அவள் அப்படி நடந்து கொண்டாள்... இப்போது அதை நினைத்து பார்த்தவளுக்கு மனம் பதறிப் போனது...

'என்ன காரியம் செய்யத் துணிந்தாய்...?' என்று மனம் அவளைக் கடிந்து கொண்டது...

தன்னை மறந்த நிலையில் அவனுடன் இணக்கமாய் இருப்பவள், தன்னிலை உணர்ந்ததும் விலகி போவது ஏனோ...? என்று விடை தெரியாது குழப்பமாய் அவளைப் பார்த்திருந்தான் விஜய்...

பெற்றோரின் மௌனமான நிலை கயல்விழிக்குப் போரடித்தது போலும்...

"பா..." என்று மெல்லமாய் ஒலியெழுப்ப...

அதில் கவனம் கலைந்த இருவரும் மகளைப் பார்த்தனர்...

அவள் ஏதோ சைகையில் சொல்ல வர, அதைப் புரியாது பார்த்த விஜய் முத்துபேச்சியைத் திரும்பி பார்த்தான்...

முத்துபேச்சியோ மகள் சைகையில் கூறியதன் அர்த்தம் புரிந்து திகைத்து போய் நின்றாள்...

மகள் கூறியதன் அர்த்தம் இது தான்...

'பாட்டியை கொலை செய்து, என் கழுத்தை அறுத்த கொலையாளிக்கு எப்போ தண்டனை வாங்கிக் கொடுக்கப் போறீங்கப்பா...?'

வாசம் நேசமாகும்...!!!

"பேபி என்ன சொல்றா...?"

திகைத்து நின்ற முத்துபேச்சியின் முகத்தை அளவிட்டவாறு விஜய் யோசனையுடன் கேட்க, அதில் நிகழ்காலத்திற்கு வந்த முத்துபேச்சி மகளைப் பெருமையாய் நோக்கியவாறு,

"அம்மாவை கொன்னு, அவளை இந்தக் கதிக்கு ஆளாக்கின கொலையாளியை எப்போ கண்டுபிடிச்சுத் தண்டனை வாங்கிக் கொடுக்கப் போறன்னு கேட்கிறா சாமி..."

அவள் கூறியதை கேட்டு அவன் ஆச்சிரியமாய் மகளைப் பார்த்தான்... இந்தச் சிறுவயதில் என்ன ஒரு தைரியமான சிந்தனை... அவனது மனம் கர்வம் கொண்டது ஒரு தந்தையாய்...

அவனது சிந்தனையிலும் அந்த எண்ணம் தான் விடாது ஓடி கொண்டு இருக்கிறது... இத்தனை நாளில் அவனும் அதைக் கண்டுபிடிக்கத் தான் முயற்சித்துக் கொண்டு இருக்கிறான்...

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட செயல்முறை இருக்கும் அல்லவா... அது போல் தான் ஒவ்வொரு கொலையாளிக்கும் அவரவர் செய்யும் கொலைகளில் சிறு சிறு வேறுபாடு இருக்கும்... அவன் இந்தத் துறையில் இருப்பதால் யார் எதை, எப்படிக் கையாள்வார்கள் என்று அவனுக்கு நன்கு தெரியும்...

குமாரியை கொன்ற விதம், கயல்விழியின் கழுத்தை அறுத்தவிதம் இதை எல்லாம் வைத்து யார் இந்தக் கொலையைச் செய்திருக்கக் கூடும் என்று பல குற்றவாளிகளைச் சந்தேகப்பட்டு அதில் சிலரை மட்டும் சலித்துத் தனித்துத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தான்...

அப்படிச் சலித்து எடுத்தவர்கள் பத்து பேரின் மீதும் அவன் எப்போதும் ஒரு கண் வைத்துக் கொண்டு தான்

இருக்கிறான்... அவர்களில் ஒருவனைச் சரியாக அடையாளம் காட்ட அவனது மகளால் மட்டும் தான் முடியும்...

ஆனால் இப்போது அவள் இருக்கும் நிலையில் அந்தச் சம்பவத்தை மீண்டும் ஞாபகப்படுத்தி அவளைப் பயமுறுத்தி பார்க்க அவனுக்கு விருப்பமில்லை... அதனால் தான் அதைப் பற்றிப் பேசாது அமைதி காத்தான்... ஆனால் மகளோ தைரியமாக அதைப் பற்றிப் பேசவும் அதற்கு மேல் அவன் சற்றும் தாமதிக்கவில்லை...

"என்னுடைய பேபியை இந்தக் கதிக்கு ஆளாக்கியவனுக்கு நிச்சயம் தண்டனை உண்டு..." என்று உறுதியாக மகளிடம் உரைத்தவன்,

"அதுக்கு உன்னோட உதவி அப்பாவுக்கு வேணுமே..."

தந்தை உதவி என்றதும் கயல்விழி கண்களால் 'என்ன' என்பது போல் அவனைப் பார்க்க... விஜய் தனது அலைப்பேசியில் இருந்து அந்தப் பத்து குற்றவாளிகளின் புகைப்படத்தை எடுத்து ஒவ்வொன்றாய் மகளிடம் காட்ட ஆரம்பித்தான்...

"இவங்கள்ள யாரு அன்னைக்கு வீட்டுக்கு வந்தது பேபி... நல்லா பார்த்து சரியா அடையாளம் சொல்லு..."

அவன் காண்பித்த முதல் ஐந்து புகைப்படத்தைச் சாதாரணமாகப் பார்த்துக் கொண்டு வந்த கயல்விழி ஆறாவது புகைப்படத்தைக் கண்டதும் அப்படியே விழிகள் நிலைக்குத்த அதை வெறித்துப் பார்த்திருந்தாள்...

அதை உணராத விஜய் அடுத்தப் புகைப்படத்தை அவளிடம் காட்டுவதற்காக அலைப்பேசியின் திரையைத் தொட போக, அவனது கையைத் தடுத்த கயல்,

"பா..." என்று அவனை அழைத்து அலைப்பேசியைச் சுட்டிக் காட்டினாள் விழிகளில் அச்சத்தைத் தேக்கி...

என்ன தான் தைரியமானவளாக இருந்தாலும் அவள் ஒரு சிறுமி தானே... அன்றைய நாளின் பயங்கரம் அவளுள்

எழுந்தது போலும்... அன்று அவள் அனுபவித்த பயத்தை அப்படியே அவளது கண்கள் பிரதிபலித்தது...

அவளது மனதில் பயம் எழுந்ததும் அருகில் அமர்ந்திருந்த தந்தையின் வயிற்றில் தனது முகத்தைப் புதைத்து கொண்டாள்... மகளின் மனதை உணர்ந்தவனாய் அவன் அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்...

"அப்பா உன் கூட இருக்கேன்ல... எதுக்கும் பயப்படக் கூடாது பேபி... இனி உன்னை யாரும் ஒண்ணும் பண்ண முடியாது..."

தந்தையின் வார்த்தையில் மெல்ல அவனை ஏறிட்டு நோக்கிய மகளின் விழிகளில் நிம்மதியின் சாயல் படர்ந்தது... அவளது இதழ்களில் புன்னகை மலர்ந்தது...

"பா..." என்று மீண்டும் அவனைக் கட்டி கொண்டாள் மகிழ்ச்சியோடு, பாதுகாப்பாய்...

தந்தை, மகள் பாசப்பிணைப்பை கண்டு மனம் நெகிழ்ந்தவளாய் அதில் தலையிடாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள் முத்துபேச்சி...

கயல்விழி விஜய்யிடம் ஏதோ கூற முயன்றாள்... அவன் புரியாது முத்துபேச்சியைப் பார்த்தான்...

"அவளோட பிறந்தநாள் வருது... அன்னைக்கு நீ அவ கூட இருக்கணும்ன்னு சொல்லுறா..." என்றாள் அவள் சிரிப்புடன்...

அவனுக்குமே அது ஞாபகத்தில் இருந்தது... மகளின் பிறந்தநாளை அவனால் மறக்க முடியுமா...? அன்று விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திச் செய்யும் போது அந்த நாளை அவன் அந்தக் காகிதத்தில் மட்டும் எழுதவில்லை... அவன் மனதிலும் அல்லவா கல்வெட்டாய் செதுக்கி கொண்டான்...

"பேபி பேர்த்டேயை அப்பா மறப்பேனாடா... அப்பாக்கு நல்லா ஞாபகம் இருக்கு பேபி..." என்று கண் கலங்க

கூறியவன்,

"பேபிக்கு பேர்த்டே கிப்ட் என்ன வேணும்...?" என்று அவன் கேட்க...

சின்னவளோ கண்களில் ஒருவித தீவிரத்துடன் அவனது அலைப்பேசியைச் சுட்டிக் காட்டினாள்... முத்துபேச்சி சொல்லாமலே அவனுக்கு மகளின் மனம் புரிந்தது...

"நிச்சயமாய்ப் பேபி..."

அவன் உறுதி அளித்ததும் மகளின் முகம் பூவாய் மலர்ந்தது... படுத்திருந்த வாக்கில் அவனது வயிற்றில் முத்தமிட்டு அணைத்து கொண்டாள்...

அவனும் மகளின் செயலை கண்டு மனம் நெகிழ அவளை அணைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

"கயலு... தூங்க வேண்டாமா...?" என்று முத்துபேச்சி கேட்க...

அன்னை சொன்னதும் சமத்தாய் சரி என்றாள் கயல்விழி... இந்த வயதில் மகளுக்கு இருக்கும் அறிவு, குணம் எல்லாம் அவனை வியக்க வைத்தது...

கயல்விழிக்கு போர்வை போர்த்திவிட்டு அவள் அருகில் வந்தமர்ந்தாள் முத்துபேச்சி... அப்போது கயல்விழி அவளிடம் ஏதோ கூற...

"கதை சொல்லணுமா...? சரி சொல்றேன்..." என்றவள் மகளுக்கு நீதி போதனை கதைகளைச் சொல்ல ஆரம்பித்தாள்...

அதைப் பார்த்துக் கொண்டிருந்த விஜய் அவள் அருகே வந்து அவளுக்கும் மட்டும் கேட்கும் குரலில், "நம் மகளை ரொம்ப நல்லா வளர்த்திருக்கிற... உன்னைப் போல்..." என்றான் பெருமிதக் குரலில்...

அவனது வார்த்தையில் முத்துபேச்சியின் மனமும், முகமும் அப்படியே மலர்ந்து போனது...

"நல்லா வளர்க்கலைன்னா நாளைக்கு நீ வந்து என்னைய குறை சொல்லக்கூடாது பாரு... அதுக்குத் தான்..." என்று நமட்டுச் சிரிப்புடன் அவள் கூறினாலும் அவளது வார்த்தைகளில் மகிழ்ச்சி மட்டுமே இருந்தது...

"குறையா...? அதுவும் உன்னையவா...? ம்ஹூம் அதுக்குச் சான்சே இல்லை ஹனி..." என்றவனின் குரல் நெகிழ்ந்து ஒலித்தது...

அதில் அவள் அவனை நிமிர்ந்து பார்க்க, "நீ உன் கதையைத் தொடர்ந்து சொல்லு..." என்றவன் அறையை விட்டு வெளியில் வந்தான்...

பாண்டியனும், ராமனும் அங்குத் தான் அமர்ந்திருந்தார்கள்... அவர்களைப் பார்த்து புன்னகையைச் சிந்திவிட்டு சற்று தள்ளி சென்றவன் அந்தக் கொலைக் குற்றவாளியை கண்காணிக்க என்று தான் வைத்திருந்த ஆளை அலைப்பேசியில் அழைத்து அவனைக் கைது செய்யச் சொல்லி உத்தரவிட்டவன் இரவோடு இரவாக அவனைச் சென்னைக்கு அழைத்து வர சொன்னான்...

ஆம் அந்தக் கொலையாளி இப்போது தென்மாவட்ட கிராமம் ஒன்றில் பதுங்கி இருந்தான்... விஜய் முதலில் இருந்தே அந்தப் பத்து பேரை பின்தொடர்ந்ததால் இப்போது எளிதாக அவனைக் கண்டுபிடிக்க முடிந்தது...

காவல்துறையில் வேலை செய்தால் உடல் முழுவதும் கண் இருக்க வேண்டும் போலும்...

மீண்டும் அறைக்குள் நுழைய போனவன் பாண்டியனை பார்த்து, "உள்ளே வந்து படுக்க வேண்டியது தானே..." என்றான்...

விஜய் தனது குடும்பத்துடன் தனித்து இருக்கட்டும் என்று விரும்பிய பாண்டியன், "நான் இங்கேயே படுத்துக்கிறேன் விசய்..." என்றான்...

"இங்கே எப்படி...?" என்றவனின் கண்கள் சுற்றும் முற்றும் பார்த்தது...

"அதோ அந்தப் பெஞ்சில் படுத்துக்குவேன்..." என்றவனிடம் சரியென்று தலையசைத்த விஜய் அறைக்குள் நுழைந்தான்...

இன்றைக்கு ஏனோ வீட்டிற்குச் செல்லவே அவனுக்கு மனம் வரவில்லை... முத்துபேச்சி, கயல்விழியுடன் சேர்ந்து ஒரு குடும்பமாய் இருந்தது அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது... அதனால் அவர்களுடன் இருக்கவே அவனது மனம் மிகவும் விரும்பியது...

அவன் வந்த போது கயல்விழி நன்கு உறக்கத்தில் இருந்தாள்... முத்துபேச்சி குளியலறையில் இருந்தாள் போலும்... அறையில் அவளைக் காணவில்லை... அதனால் அங்கிருந்த சிறிய தொலைக்காட்சியை உயிர்ப்பித்து விட்டு நாற்காலியில் அமர்ந்தான் அவன்... மகளுக்காக வேண்டி அதன் சத்தத்தைக் குறைத்து வைத்தவன் செய்தி பார்ப்பதற்காக ஒவ்வொரு அலைவரிசையாக மாற்றிக் கொண்டு வந்தான்...

அப்போது ஒரு 'மியூசிக் சேனல்'இல் அந்தப் பாடல் ஒளிபரப்பாகி கொண்டிருந்தது... அதைக் கண்டதும் அவனது கைகள் அடுத்த அலைவரிசையை மாற்றாது அப்படியே நின்றது...

"நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி கண்ணம்மா
தன்னையே சகியென்று சரணமெய்தினேன்"

அந்நேரம் முத்துபேச்சியும் குளியலறையை விட்டு வெளியில் வந்தாள்... அவளும் அந்தப் பாடலை கேட்டு உறைந்து போய் அப்படியே நின்றாள்...

கதவு திறக்கும் சத்தத்தில் திரும்பி பார்த்த விஜய் தன்னவளை தான் இமைக்காது பார்த்தான்...

"பொன்னையே நிகர்த்த மேனி மின்னை ய, நிகர்த்த சாயற் பின்னை ய!-நித்ய கன்னியே! கண்ணம்மா!"

இருவரின் மனதிலும் தங்களது கல்லூரி கால வாழ்க்கை இனிமையாய் எழுந்தது... கலை விழா ஒன்றில் தன்னை இமைக்காது பார்த்தபடி விழிகளால் காதல் வலை வீசிய விஜய் அவளது மனக்கண்ணில் வலம் வந்தான்...

அன்று இந்தப் பாடலை தான் பாடிய போது முதலில் திகைத்துப் பின் கண்களில் காதல் கசிய நின்றிருந்த தன் கண்ணம்மாவின் தோற்றம் அவனது மனக்கண்ணில் வலம் வந்தது...

"மார னம்புக ளென்மீது வாரி வாரி வீச நீ-கண்
பாரா யோ? வந்து சேரா யோ? கண்ணம்மா?"

அன்றைய நாளில் பிரதிபலித்த அதே காதலை இன்றும் குறையாது பிரதிபலித்தது விஜய்யின் விழிகள்... விழிகளாலேயே மாரன் அம்புகளைத் தொடுத்த தன்னவனின் பார்வையில் அன்று போல் இன்றும் உள்ளம் தடுமாற அவள் நின்றிருந்தாள்...

அவளின் நிலையை உணர்ந்தவனாய் அவன் தனது இரு கைகளையும் அவளை நோக்கி நீட்ட, அடுத்த நொடி வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் அவன் அருகில் விரைந்து வந்தவள் பெரும் கேவலுடன் அவனது காலடியில் அமர்ந்து அவனது மடியில் தலை சாய்ந்தாள் ஆறுதல் வேண்டி...

உரிமையுள்ளவளாய் அவனது நெஞ்சில் சாய்ந்து ஆறுதல் தேட வேண்டியவள் இப்படி அவனது காலடியில் யாசிப்பது போல் அமர்ந்திருப்பது கண்டு அவனது மனம் சுக்குநூறாய் உடைந்து சிதறியது... அந்த நேரத்திலும் அவனது கரங்கள் அவளுக்கு ஆறுதல் அளிக்க மறக்கவில்லை... அவனது கரம் ஆறுதலாய் அவளது தலையை வருடி கொடுத்தது...

அவளது கண்களில் பெருகி வழிந்த கண்ணீர் வெள்ளத்தை அவனது மடி உணர்ந்தது...

"ஷ்... ஹனி... இப்போ எதுக்கு இந்த அழுகை...? நான் தான் உன் கூட இருக்கேன்ல..."

மகளுக்கு ஆறுதல் சொன்னது போல் தன்னவளுக்கும் அவன் ஆறுதல் சொல்ல, அதில் சட்டென்று தலையை நிமிர்த்திப் பார்த்தவள் முகத்தில் தான் எத்தனை துயர்...

தனது மடியில் நாடி பதித்துச் சிறு பிள்ளை போல் கண்கள் இரண்டும் அலைப்புற தன்னைப் பார்த்தவளின் பார்வையில் அவன் மனம் அப்படியே உருகி போனது... மெல்ல குனிந்து அவளது இமைகளில் மீது முத்தமிட்டான்...

கண்களை மூடி அவனது இதழொற்றலை மனதில் உள்வாங்கிக் கொண்டவளின் கண்கள் கண்ணீரை விடாது பொழிந்தது... கிடைக்கவே கிடைக்காதோ என்று ஏங்கிய தன்னவனின் அருகாமை, இதழொற்றல் எல்லாம் இந்தக் கணம் கிடைத்த போது அதை ஆழ்ந்து அனுபவிக்கச் சொல்லியது அவளது காதல் மனம்...

வறண்ட பாலை நிலமாய் இருந்த அவளது மனதில் அவனது காதல் சுகமாய் மழைச் சாரலாய் வந்து போனது...

இனி இது போல் அவனது அருகாமை கிடைக்குமா என்ற கலக்கம் அவள் மனதை போட்டு அலைக்கழிக்க மீண்டும் அவளது விழிகள் உடைப்பெடுத்தது...

அவளது மனத்துயரை துடைப்பது போல் அவனது கைகள் அவளை நோக்கி நீண்டு அவளது விழிநீரை துடைத்துவிட்டது...

அவளது துயருக்கு ஆறுதல் அளிக்க வார்த்தை கிடைக்காது தனது செயலால் ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தான் அந்தக் காதலன்...

அதில் தன்னைச் சற்று தேற்றி கொண்டவள் மீண்டும் அவனது மடியில் தலை சாய்ந்து கொண்டாள்...

விஜய்யின் கை அவளது தலையை வருடி கொடுத்துக் கொண்டிருக்க, அவனது கண்களோ துயரத்துடன் விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது...

சிறிது நேரம் சென்றதும் அவன் தன் நினைவு கலைந்து அவளை அழைத்தான்...

"ஹனி..."

அவனது அழைப்பிற்கு அவளிடத்தில் இருந்து பதில் எதுவும் வரவில்லை... குனிந்து அவளைப் பார்த்தான்... அவனது வருடலில் அவள் சுகமாய்த் தூங்கி போயிருந்தாள்...

அதைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டவன் அவளை அலுங்காமல் தூக்கி அருகில் இருந்த மற்றொரு கட்டிலில் படுக்க வைத்தான்... அந்த ஆழ்ந்த உறக்கத்திலும் தனது கையை விடாது பற்றியிருந்தவளின் செயலில் அவனது காதல் மனம் உருகித்தான் போனது...

தனது காதலுக்குச் சற்றும் சளைக்காத காதலை கொண்டிருந்த காதலியை கண்டு அவனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது... அந்தக் கணம் அவளது அத்தனை காதலையும் ஒட்டு மொத்தமாய் அனுபவிக்கச் சொல்லி தூண்டியது அவனது பேராசை கொண்ட காதல் மனம்...

அடக்கப்பட்ட அவளது காதல் பீறிட்டுக் கொண்டு வெளியில் வரும் போது அது சுனாமியாய் எழுந்து அவனைச் சுகமாய்த் தாக்கும் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்... அந்தப் பொன்னான தருணத்திற்காகத் தானே இன்றுவரை அவன் காத்திருக்கிறான்...

"அந்த நாள் எப்போ வரும் ஹனி...?"

நிச்சயமில்லாத அந்த நாள் நிச்சயமாக அவனது வாழ்வில் ஒரு நாள் இல்லை ஒரு நாள் வரும் என்று அவன் நம்பிக்கை கொண்டு காத்திருக்கிறான்...

தன்னவளை விட்டு செல்ல மனமில்லாது அவள் அருகிலேயே அமர்ந்தான்... அவனது மனதில் பழைய நினைவுகள் ஆழிப் பேரலையாய் எழுந்து அவனைப் போட்டுப் பாடாய்ப் படுத்தியது...

கட்டுப்படுத்த முயன்ற மனதை கட்டுப்படுத்த முடியாமல் அதன் போக்கில் விட்டு விட்டான் அவன்...

வெகுநேரம் கழித்துத் தனது நினைவலைகள் அறுபட நிகழ்காலத்திற்கு வந்தவன் மணியைப் பார்த்தான்... அதிகாலை நான்கு மணியாகி இருந்தது... இப்போது கிளம்பினால் தான் உண்டு என்று நினைத்தவன் கட்டிலில் இருந்து எழுந்தான்...

இன்னமும் ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்த தன்னவளை கண்டதும் அவனது முகம் மென்மையுற அவள் புறமாய்க் குனிந்தவன் அவளது நெற்றியில் தனது இதழ்களை மென்மையாய் பதித்துவிட்டு நிமிர்ந்தான்...

அவனது ஸ்பரிசம் உணர்ந்தோ என்னமோ அவளது இதழ்களில் புன்னகை தவழ்ந்தது...

அவளது இதழ்களைத் தனது கைவிரல் கொண்டு மென்மையாய் வருடியவன், "எத்தனை நாளைக்கு நீயும், நானும் இப்படிக் கனவிலேயே குடும்பம் நடத்துவது...?" என்று வருத்தத்துடன் கேட்டான்...

விழித்திருக்கும் போதே இதற்கு அவளிடத்தில் இருந்து பதில் வராது... இதில் தூங்கும் போது கேட்டால் மட்டும் எப்படிப் பதில் வரும்...? கசந்த புன்முறுவலோடு அவளை விட்டு விலகியவன் மற்றொரு கட்டிலில் படுத்திருந்த மகளைப் பார்த்தான்...

மகள் கேட்ட பிறந்தநாள் பரிசு அவனது ஞாபகத்தில் வந்தது...

"பேர்த்டே கிப்டோடு உன்னை வந்து சந்திக்கிறேன் பேபி..." என்று சூளுரைத்தவன் மகளது நெற்றியில் முத்தமிட்டு இருவரையும் எழுப்ப மனமில்லாமல் வெளியில் வந்தான்...

அங்கு உறங்கி கொண்டு இருந்த பாண்டியனை எழுப்பி இருவரையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, விழித்திருந்த ராமனிடம் அதையே சொல்லிவிட்டுக் கிளம்பினான்...

****

அன்று சென்னைக்கு அழைத்து வரப்பட்ட கொலையாளியிடம் நடத்திய விசாரணையில் சுந்தரலிங்கம் நேரிடையாக இதில் சம்பந்தப்படவில்லை என்றாலும் அவரது செயலாளர் இதில் நேரிடையாகச் சம்பந்தப்பட்டு இருந்தார்...

அன்றிரவே இரவோடு இரவாக ரகசியமாக அவரைக் கைது செய்து விசாரித்ததில் அவர் சுந்தரலிங்கம் சொல்லித்தான் தான் இதைச் செய்ததாக ஒத்துக் கொள்ள, மறுநாள் கைதாணை பத்திரத்தோடு சென்று சுந்தரலிங்கத்தைக் கைது செய்தான் விஜய்...

அவ்வளவு பெரிய தொழில் ஜாம்பவான் மீது அத்தனை எளிதில் யாரும் கை வைத்துவிட முடியாது... அந்தளவுக்கு அவருக்குச் செல்வாக்கு இருந்தது... ஆனால் இப்போது அந்தச் செல்வாக்கு சற்று சரிந்து இருந்ததால் விஜய்யால் அவரை எளிதில் அணுக முடிந்தது... இதற்காகத் தானே அவன் சந்தோஷை பொறி வைத்துப் பிடித்தது...

அந்நேரம் சுந்தரலிங்கத்தால் தனது வழக்கறிஞரை கூடத் தொடர்பு கொள்ள முடியவில்லை... எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்துவிட்டது...

மறுநாள் சுந்தரலிங்கம், அவரது செயலாளர் மற்றும் அந்தக் கொலையாளி மூவரும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டனர்...

குற்றவாளிக்கு எதிராக இருந்த ஆதாரங்களை விசாரித்த நீதிபதி அவர்களைக் காவலில் வைத்து விசாரிக்கச் சொல்லி உத்தரவிட்டவர், அடுத்தப் பதினைந்தாம் நாள் மீண்டும் வழக்கு விசாரிக்கப்படும் என்று முடித்துக் கொண்டார்...

சந்தோஷின் ஆயுத கடத்தல் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் முன் இந்த வழக்கில் அவன்

முக்கியக் குற்றவாளியாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பதில் விஜய் முனைப்பாகச் செயல்பட்டான்...

குமாரி கொலை, கயல்விழியைக் கொல்ல பார்த்தது எல்லாம் எதற்கு என்ற ரீதியில் ஆரம்பித்த விசாரணை வந்து நின்ற இடம் செல்வியின் மரணம்...

அது தான் இவ்வளவு சம்பவங்கள் நடப்பதற்கும் காரணம் அல்லவா...

சந்தோஷ் செல்வியிடம் வம்பு செய்தது, அதை முத்துபேச்சி தட்டி கேட்டது, அப்படித் தட்டி கேட்டதற்காக அவளைக் கடத்தி கொண்டு போய் மானப்பங்கப்படுத்த முயன்றது, அதன் பின் சந்தேகத்துக்கு இடமான முறையில் செல்வி தற்கொலை செய்து கொண்டது, கொலையாளி சந்தோஷ் தப்பித்துச் சென்ற காட்சியை அவள் அன்னை பார்த்து அதைக் காவல்துறையிடம் சொல்லியும் அதை வழக்கில் சேர்க்காதது, அதற்காகப் போராட முயன்ற முத்துபேச்சியின் அரசியல் வாழ்க்கைக்கு உலை வைத்தது, அதன் பின் சாலையோரம் தூங்கி கொண்டிருந்த மக்கள் மீது காரை ஏத்தி சந்தோஷ் கொன்றது, அதற்குச் சாட்சியாய் இருந்த காணொளியை அழித்து வேறு காணொளியை மாற்றியமைத்தது, அந்த வழக்கை எடுத்து நடத்திய விஜய்யை, முத்துபேச்சியுடன் பொய்யாய் சம்பந்தப்படுத்தி அவர்களது உறவை கொச்சைப்படுத்தி அவனை வேலையை விட்டு இடைநீக்கம் செய்தது, அந்த உறவுக்கு இடைஞ்சலாக இருந்ததற்காகத் தனது அன்னையைக் கொன்றதற்காகவும், மகளைக் கொல்ல முயற்சித்ததற்காகவும் முத்துபேச்சியைக் கைது செய்தது என்று சுந்தரலிங்கம், சந்தோஷ் மீதிருந்த குற்றங்கள் பெருகி கொண்டே போனது...

அவர்கள் இருவருக்கும் துணையாக இருந்த அவரது செயலாளர், காவல்துறையில் வேலை செய்து கொண்டு அதற்குத் துரோகம் இழைத்த கறுப்பாடு சரவணன் ஆகிய மூவர் மீதும் வழக்குத் தொடுக்கப்பட்டது...

ஆனால் இதற்கு மறைமுகமாக உதவிய முக்கியப்புள்ளிகளுக்கு எதிராக ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் அதிர்ஷ்டவசமாக இதிலிருந்து தப்பித்துவிட்டனர்... இவர்களைப் போன்றவர்கள் இருக்கும் வரை நம் நாட்டில் நீதியை நிலைநாட்ட முடியாது... முதலில் இவர்கள் தான் களை எடுக்க வேண்டும்... ஆனால் குற்றத்தை நிரூபிக்கச் சட்டத்திற்கு ஆதாரம் தேவையே... அதனால் அவர்கள் எந்தவித சேதாரமும் இல்லாமல் தப்பித்தனர்...

இந்த வழக்கில் முக்கியச் சாட்சியாக முத்துபேச்சி, பாண்டியன், கயல்விழி மற்றும் முத்துபேச்சியைக் காப்பாற்றிய மாணிக்கமும் சேர்க்கப்பட்டனர்... அதிலும் குட்டி பெண் கயல்விழியின் சாட்சி முக்கியமானதாகக் கருதப்பட்டது...

ஆதாரங்களாக அந்தச் சாலை விபத்து காணொளி மற்றும் அன்று கொலை நடந்த நேரத்தில் முத்துபேச்சி கூட்டுறவு அங்காடி முறைக்கேட்டை எதிர்த்து சாலை மறியலில் ஈடுபட்டதற்கு ஆதாரமாக இருந்த அந்தத் தொலைக்காட்சியின் காணொளியும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது...

ஆயுதக் கடத்தல் வழக்கில் சந்தோஷ் பிணை ஜாமீனில் விடுவிக்கப்பட்ட அடுத்த நொடி இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு அவனது தந்தையோடு சேர்த்து மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டான்...

'உன்னால் நான் கெட்டேன்... என்னால் நீ கெட்ட...' என்பது போலிருந்தது அவர்கள் இருவரது நிலைமையும்...

சுந்தரலிங்கத்தின் மனைவி தான் தனியாளாகக் கிடந்து இந்த வழக்குக்காக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்... என்ன இருந்தாலும் கட்டிய பாசம், பெற்ற பாசம் அவரை விடாது அல்லவா...

அடுத்து வந்த சில நாட்களில் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது... அன்று சாட்சி சொல்ல கயல்விழி

தள்ளு வண்டியில் தனது அன்னை, பாண்டியனுடன் அங்கு வந்துவிட்டாள்...

சாட்சிகள் மற்றும் காணொளி ஆதாரங்கள் எல்லாம் சுந்தரலிங்கம் மற்றும் சந்தோஷிற்கு எதிராக அமைந்து அவர்களது குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை உறுதி செய்யப்பட்டது...

ஆனாலும் சுந்தரலிங்கத்தின் வழக்கறிஞர் அடங்காது, "அப்படி என்றால் ஏசிபி விஜய்க்கும், முத்துபேச்சிக்கும் எந்தவித தொடர்பும் இல்லையா...? பிறகு எதற்கு முத்துபேச்சி மகளைப் பார்ப்பதற்கு ஏசிபி சார் தினமும் மருத்துவமனைக்குச் செல்கிறார்...?" என்று எடக்குமடக்காகக் கேள்வி கேட்க...

"இது வழக்குக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி..." என்று நீதிபதி அவரைக் கண்டித்து அவரது கூற்றைத் தள்ளுபடி செய்தார்...

ஆனாலும் அவரது வழக்கறிஞர் கொஞ்சமும் பயப்படாமல் ஊடகங்களிடம், "இந்த வழக்கை நாங்க உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போகிறோம்..." என்று கூற...

அதைக் கேட்டு விஜய்யின் முகம் கடினமாய் இறுகியது... உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அவர்கள் விடுதலை அடைவதற்காகவா அவன் கஷ்டப்பட்டு இத்தனை வேலைகள் செய்தது...

'உங்க இரண்டு பேரையும் அவ்வளவு சீக்கிரத்தில் வெளியில் விட்டால் தானே...' என்று மனதில் கறுவி கொண்டான் அவன்...

வேனில் ஏறுவதற்கு முன் சுந்தரலிங்கம் அவனை முறைத்துக் கொண்டு தான் ஏறினார்... ஏனெனில் ஒரே நாளில் அவரது கௌரவத்தைக் கொன்று புதைத்து விட்டானே இந்த விஜய்... அந்த ஆத்திரம் அவருக்கு...

'உன்னைப் போல் எத்தனை பேரை நான் பார்த்திருப்பேன்டா...' என்ற அலட்சிய பார்வையால் அவரது கோபப் பார்வையைப் புறம் தள்ளினான் அவன்...

விஜய் கிளம்பும் முன் அவனைத் தேடி முத்துபேச்சி, கயல்விழி, பாண்டியன் மூவரும் வந்தனர்... மகளைக் கண்டதும் அவனது முகம் மென்மையுற அவள் புறம் மண்டியிட்டு அமர்ந்தவன்,

"இப்போ உனக்குச் சந்தோசமா பேபி..." என்று கண்கள் கலங்க கேட்க...

அதற்கு அவள் தனது இரு கைகளையும் அகல விரித்து, "ரொ...ம்...ப..." என்றாள் ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனியாய் உச்சரித்து...

இப்போது அவளால் கொஞ்சம், கொஞ்சம் பேச முடிகிறது...

"பேர்த்டே கிப்ட் பிடிச்சிருக்கா..."

"ம்..." என்று மகிழ்ச்சியோடு தலையாட்டியவள் அவனது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்...

அவனும் மகளை அணைத்துக் கொண்டு கண்கள் கலங்க முத்துபேச்சியை ஏறிட்டுப் பார்த்தான்...

அவளும் மனம் நெகிழ, கண்கள் கலங்க நின்றிருந்தாள்...

உடல் பலவீனமான நிலையிலும் அநீதியை தட்டி கேட்க சொல்லிய மகளின் தைரியம், மகளுக்காகக் குற்றாவளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வாங்கிக் கொடுத்த தந்தையின் வீரம்... இரண்டையும் கண்டு அவள் மலைத்து போய் அதிசயித்து நின்றிருந்தாள்...

அவர்கள் இருவரும் தனக்கு மட்டுமே சொந்தம் என்பதில் அவளது மனதில் அத்தனை கர்வம் எழுந்தது...

அடுத்தச் சில நொடிகளில் கடமை தன்னை அழைப்பதை உணர்ந்து மகளிடம் இருந்து விலகி எழுந்து நின்றவன்,

"நான் வரட்டுமா பேபி..." என்று மகளிடம் கேட்க...

அவள் சந்தோசமாய்த் தலையாட்டினாள்...

மகளிடம், பாண்டியனிடமும் வார்த்தைகளால் விடைப்பெற்றவன், தன்னவளிடம் கண்களால் விடைப்பெற்று ஜீப்பில் ஏறினான்...

கம்பீரமாகச் சென்ற தன்னவனை விழியில் நிரப்பி இதயத்தில் நிறைத்து கொண்டாள் அந்தப் பேதை பெண்...

****

அன்று தலைவர் தனது மகளைக் காண வருகிறார் என்று முத்துபேச்சி பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள்...

நிறைய முறை தமிழக முதலமைச்சராக இருந்தவர் அவர்... அவருக்கு என்று ஒரு தகுதி இருக்கிறது... அந்தத் தகுதியை விட்டு கீழிறங்கி இப்படிச் சாதாரணத் தொண்டனை தேடி வந்து பார்க்கிறார் என்றால் நிச்சயம் அதில் அரசியல் ஆதாயம் இல்லாமல் இல்லை... இத்தனை வருட அரசியல் வாழ்க்கையில் அரசியல் சதுரங்கத்தில் எப்படிக் காய்களை நகர்த்திச் சென்று வெற்றிக் கனியை பறிக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியாதா என்ன...?

கயல்விழியைப் பார்க்க வரும் சாக்கில் ஆளுங்கட்சியின் ஆட்சிக்கு ஒரு கொட்டு வைப்பதற்காகவும், முத்துபேச்சியின் இன்றைய மக்கள் ஆதரவை தனது கட்சியின் தேர்தல் வெற்றிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும் தான் இன்று அவர் மருத்துவமனைக்கு வருகை தருவது...

அதை அவளும் உணர்ந்தே தான் இருந்தாள்... செல்வநாதன் சொல்வது போல் எல்லாம் நன்மைக்கே என்று இதையும் தனது நன்மைக்காக என்று நல்லவிதமாக எடுத்து கொண்டாள்... அதனால் அவள் எந்தவித உறுத்தலும் இல்லாமல் தலைவரை வரவேற்க தயாராய் இருந்தாள்...

"புள்ள... இதுல ஜூசு இருக்கு, இது காபி, பால், டீ..." என்று ஒவ்வொன்றையும் சுட்டிக்காட்டி விளக்கிய பாண்டியன் முத்துபேச்சியை விட மிகவும் பரபரப்பாய் இருந்தான்...

சொன்ன நேரத்திற்கு ஒரு மணி நேரம் தாமதமாக அங்கு வந்து சேர்ந்தார் தலைவர்... அவருடன் செல்வநாதனும் சேர்ந்து வந்தார்...

இருவரையும் கைக்கூப்பி இன்முகத்துடன் வரவேற்றனர் முத்துபேச்சியும், பாண்டியனும்... கயல்விழி அந்த நிலையிலும் பெரியவர்களைக் கண்டதும் எழுந்து நிற்க முயற்சித்தாள்...

சின்னவளின் இந்த நல்ல பண்பு கண்டு அந்தத் தலைவர் மனம் நெகிழ்ந்து போனார்... அவருக்குக் கயல்விழியை மிகவும் பிடித்துப் போனது... அந்தக் கணம் அவர் தனது அரசியல் சாணக்கியத்தனத்தை மறந்து மனிதநேயம் உள்ள மனிதராக அவள் அருகில் அமர்ந்து உண்மையான அன்போடு அவளது உடல்நலம் விசாரித்தார்... உடன் செல்வநாதனும் இருந்தார்...

கள்ளம்கபடமற்ற அன்பு எல்லோரின் மனதையும் மாற்றும் வல்லமை உடையது போலும்...

ஐந்து நிமிடத்தில் கிளம்பிய தலைவர் முத்துபேச்சியிடம், "இந்த எலெக்சன்ல ராயபுரம் தொகுதி உனக்குத் தான்ம்மா..." என்று உறுதியளித்து விட்டு சென்றார்...

அதைக் கேட்டு செல்வநாதன், முத்துபேச்சி, பாண்டியன் மூவரும் சந்தோசப்பட்டனர்...

முத்துபேச்சி உடனே விஜய்க்கு அழைத்து விசயத்தைக் கூற, அவனும் அவளை மகிழ்ச்சியோடு வாழ்த்தினான்... அவளது நெடுநாள் கனவு அல்லவா இது... எந்தப் பெண்ணிடத்திலும் தோன்றாத இலட்சியம் அவளது அல்லவா... அவனுக்குத் தன்னவளை நினைத்து அத்தனை பெருமையாக இருந்தது...

அன்று கயல்விழியின் பிறந்தநாள்... இரண்டு மணி நேரம் விடுப்பு எடுத்து விட்டு விஜய் மகளைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தான்... இன்னும் சில நாட்கள் தான் அதன் பின் கயல்விழி வீட்டிற்குச் சென்றுவிடலாம் என்று கூறியிருந்தான் அவனது மருத்துவ நண்பன்... அது வேறு அவனை மகிழ்ச்சியில் திளைக்க வைத்தது...

மகள், தன்னவள், பாண்டியன் மூவருக்கும் அவன் உடை எடுத்து வந்திருந்தான்... அது போக மகளுக்காகப் பெரிய கேக், நிறைய இனிப்புகள், சாக்லேட் என்று வகை வகையாக வாங்கி அள்ளி குவித்திருந்தான்...

மகள் மீதான பாசம் அந்தக் கம்பீரமான தகப்பனையும் வெல்லப்பாகாய் இளக வைத்திருந்தது...

அத்தனை பொருட்களையும் இரு கைகளிலும் அள்ளி கொண்டு மகளது அறைக்குள் நுழைந்தான் விஜய்... அங்கே அறையில் மகள் இல்லை... அவளது அன்னை மட்டுமே தனித்திருந்தாள்...

"பேபி எங்கே...?" என்று சந்தோசமாய்க் கேட்டுக் கொண்டே கையில் இருந்த பொருட்களைக் கட்டிலில் வைத்தான்...

"வெளியில் விளையாண்டுக்கிட்டு இருக்கா..." என்று அவள் பதிலுரைக்க...

அதில் அவளைத் திரும்பி பார்த்தவன் தன்னவளின் தோற்றத்தை கண்டு இனிமையாய் அதிர்ந்து நின்றான்...

அப்போது தான் கோவிலுக்குச் சென்று வந்திருப்பாள் போலும்... கையில் பிரசாத கூடையோடு புன்னகை முகமாய் இவனைப் பார்த்திருந்தாள் முத்துபேச்சி...

அதிசயமாய்ப் புடவை கட்டியிருந்தவளின் அழகை அவனது கண்கள் விரும்பி ரசித்துப் பார்த்தது...

இளம் ஊதா நிற புடவை அவளது தாழம்பூ மேனியில் வெகு பொருத்தமாய்த் தழுவியிருந்தது... முகத்தில் இருந்த காயங்கள், தழும்புகள் எல்லாம் மறைந்து இப்போது

அவளது முகம் அந்த மாசுமருவில்லாத பால்நிலா போல் பளபளப்பாய் வசீகரமாய்க் காட்சியளித்தது...

புடவையில் பெண்ணவளின் இளமைகள் இலைமறை காயாய் அவனது கண்களுக்கு விருந்தளிக்க, வெகுநாட்களுக்குப் பின் அவனது பார்வை சொந்தத்துடன் தன்னவளை வருடியது...

விழுங்கிவிடுவது போல் தன்னைப் பார்த்தவனைக் கண்டு பனிக்கட்டியாய் உறைந்து நின்றாள் பாவையவள்... அவனது தகிக்கும் பார்வையில் பனிக்கட்டியாய் உறைந்திருந்த பாவையவளின் மனம் அப்படியே உருகி கரைந்தது காதலில்...

அவளது உருகிய மனநிலையை உணர்ந்தார் போன்று அவன் நிதானமாக அவளை நோக்கி முன்னேறினான்... அவன் வரவை உணர்ந்தவளோ அச்சத்தில் கண்கள் அகல விரிய தன்னையும் அறியாது பின்னால் நகர்ந்தாள்...

அந்தச் சிறிய அறையில் எத்தனை நேரம் பின்னால் செல்ல முடியும்... நாலே எட்டில் சுவர் அவளைத் தடுக்க அதன் மீது சாய்ந்து நின்று கொண்டு மேனி நடுங்க அவனைப் பார்த்திருந்தாள் அவள்...

சிறிது அசைந்தாலும் தொட்டு விடும் தூரத்தில் வந்து நின்றவனின் மூச்சு காற்றின் உஷ்ணத்தை அவளது முன் நெற்றி உணர்ந்தது...

அந்த உஷ்ணத்தைத் தாங்க முடியாது பாவையவளின் மேனியும் தகிக்க ஆரம்பித்தது...

தன்னைக் கண்டு மெழுகாய் கரைந்து உருகும் தன்னவளின் நிலை கண்டு ஆணாய் கர்வம் கொண்டவனின் உணர்வுகளும் பேயாட்டம் போட அடுத்த நொடி அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவனது அருகாமையைத் தாங்க முடியாது அவள் தனது கண்களை இறுக மூடி கொண்டாள்...

அவளது செர்ரிப்பழ இதழ்கள் இரண்டும் தண்ணீரில் இருந்து வெளிவந்த மீன் போல் துடிக்க, அவளது தேகம் கடும் குளிரை தாங்காது நடுங்குவது போல் நடுங்கி கொண்டிருக்க, அவள் நின்றிருந்த கோலம் அவனைச் சற்று நிதானிக்க வைத்தது...

ஒரு முறை அவன் அவளுக்குச் செய்த பாவத்தின் சுமையை, அது சுகமான சுமையாக இருந்தாலும் கூடப் பெண்ணவள் அதைச் சுமக்க எத்தனை பாடுப்பட்டிருப்பாள் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்... அதற்காக அவள் அடைந்த கஷ்டங்கள், அவமானங்களை நினைத்து பார்த்தவனுக்கு ஆணாகத் தன்னை நினைத்து அத்தனை வெட்கமாக இருந்தது...

இன்னொரு முறை அவளது உணர்வுகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர்காய விரும்பாதவனாய் அவளை விட்டு விலகி நின்றான் அவன்... அவன் தொட்டால் அவள் மறுக்கப் போவதில்லை... ஆனால் அதன் பின் எழும் வேதனை இருவரையுமே அதிகம் பாதிக்கும் என்பதை உணர்ந்தவனாய் அவன் தள்ளி நின்றான்...

ஒரு முறை அவளைத் தொட்டு விட்டு இதோ இந்தக் கணம் வரை இருவரும் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனை போதாதா...?

இனி அவளைத் தொடுவது என்றால் ஆயுள் முழுவதும் அவளைக் கைவிடக்கூடாது என்று உறுதி எடுத்த பின்னரே அவளைத் தொட வேண்டும்... அதற்குத் திருமணப் பந்தம் அவசியம் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

அவனிடம் இருந்து எந்தவித சத்தமும் வராது போகவும் ஏமாற்றத்தோடு விழிகளைத் திறந்தாள் பெண்ணவள்...

தன்னையே இமைக்காது பார்த்து கொண்டிருந்தவனைக் கண்டு அவளது முகம் செங்கொழுந்தாய் மாறிப் போனது...

அதில் அவனுள் தோன்றிய இறுக்கம் மறைந்து இளக்கம் தோன்றியது... ஒற்றைப் புருவத்தைத் தூக்கி 'என்ன'

என்பது போல் கேட்டவனின் இதழ்கள் நமட்டுச் சிரிப்பை தாங்கி நின்றது...

அதில் தலையைக் குனிந்தவள் தன் உணர்வுகளைச் சமாளிக்கத் தெரியாது விழித்தவள் செய்வதறியாது தனது கையில் இருந்த கோவில் பிரசாதத்தை அவன் முன் நீட்டினாள்...

"நீயே வச்சு விடு..." என்று புன்னகையுடன் கூறியவன் அவள் முன் குனிந்து தன் நெற்றியை காண்பிக்க...

மற்ற நேரமாக இருந்தால் அவன் சொன்னதை அவள் செய்திருப்பாள் தான்... ஆனால் இப்போது மனம் நிறைய நேசத்தைச் சுமந்து கொண்டு அவன் அருகில் செல்லவே பயந்தாள் அவள்...

எங்கே தன்னையும் அறியாது தனது மனவுணர்களைத் தான் வெளிப்படுத்தி விடுவோமோ என்று பயந்து தயங்கி நின்றாள்...

அவள் அமைதியாய் இருப்பதை உணர்ந்தவன் அவள் நெற்றியோடு தனது நெற்றியை வாகாய் பொருத்த, அதில் பாவையவள் அதிர்ந்து போய் விழியகல அவனைப் பார்க்க...

அவளது விழிகளுக்குள் ஊடுருவது போல் பார்த்தவன் தனது பார்வையை அங்குமிங்கும் வேறு எங்கும் திருப்பாது அவளது நெற்றி மீது வைத்திருந்த தனது நெற்றியை இன்னமும் அழுத்தமாய் அழுத்தினான்...

அதில் இருவரது கூர்மையான நாசியும் ஒன்றோடு ஒன்று சண்டையிடும் போர் வாள்கள் போல் அழுத்தமாய் முத்தமிட்டுக் கொள்ள, இருவரது இதழ்களும் லேசாக உரசி சென்றது...

அதில் அவளது உள்ளம் தீக்குச்சி போல் பற்றியெரிந்தது தாபத்தில்... நிமிட நேரத்தில் இது அத்தனையும் நடந்து முடிந்திருந்தது...

அவளது நிலையைக் கண்டு தனக்குள் சிரித்தபடி நிமிர்ந்தவன் உடனே அவளை விட்டு விலகி நின்றான்... இப்போது அவளது நெற்றியில் இருந்த விபூதி, குங்குமம் எல்லாம் இப்போது அவனது நெற்றியில் ஒட்டி கொண்டிருந்தது...

அதைக் கண்டு மீண்டும் அவளது முகம் செவ்வானமாய்ச் சிவந்து போனது...

"இப்போ உனக்கு எந்த ஏமாற்றமும் இல்லையே..."

திடுமென அப்படிக் கேட்டவனைக் கண்டு அவள் என்ன கூறுவது என்று தெரியாமல் பேந்த பேந்த விழித்தாள்...

"இல்லை அன்னைக்கு நான் செஞ்சது ரொம்ப ஏமாற்றமா இருந்ததுன்னு சொன்னியே... அதைக் கேட்டேன்..." என்று கூறியவனின் கண்கள் சிரித்தது விசமமாய்... அதுவே கூறியது அவன் சொல்ல வந்த விசயம் வேறு என்று...

அன்று சந்தோஷை ஆயுத கடத்தலில் அவன் கைது செய்ததைப் பற்றித் தான் சொன்னது அவளுக்கு நினைவில் வர மறுப்பாய் தலையசைத்தவள்,

"இப்போ ஏமாத்தமா இல்லை சாமி..." என்று வெகுளியாய் கூறியவளை கண்டு அவனது முகம் கனிந்தது காதலில்...

"இது தான் எனக்கு வேண்டும்..." என்றான் இரு பொருள்பட...

"நீ என்ன சொல்றன்னு எனக்குப் புரியலை சாமி..." என்று அவள் புரியாமல் முழிக்க...

இதற்கு மேலே அவளை யோசிக்க விட்டால் அது தனக்குத் தான் ஆபத்து என்று எண்ணியவன்,

"கயலை பார்க்க போகலாமா...?" என்று அவளிடம் கேட்டான்...

சரி என்றவள் அவனை அழைத்துக் கொண்டு மகளைக் காண சென்றாள்...

அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறும் குழந்தை நோயாளிகளுக்காக விளையாடுவதற்கு என்று தனியே ஒரு இடம் ஒதுக்கியிருந்தனர்... கயல்விழி அங்குத் தான் மற்ற குழந்தைகளுடன் விளையாடி கொண்டு இருந்தாள்... கூடவே துணைக்குப் பாண்டியனும், ராமனும்...

மகளைக் கண்டதும் அவனது முகம் மலர்ந்தது மகிழ்ச்சியில்... அப்போது தான் அந்த வித்தியாசத்தை உணர்ந்தவனாய் மகளைக் கூர்ந்து கவனித்தவன் திகைத்து போய் முத்துபேச்சியைப் பார்த்தான்...

"என்னடி இது கோலம்...?" ஆதங்கமும், கோபமும் கலந்த குரலில் அவளைப் பார்த்து கேட்டான்...

கயல்விழி மொட்டை அடித்து இருப்பதைக் கண்டு தான் அவன் திகைத்து நின்றது... தோள் வரை வெட்டிய முடியுடன் அழகாய் இருந்த குழந்தை பிறந்தநாள் அதுவுமாய் இப்படி மொட்டை தலையுடன் இருப்பது கண்டு அவனுக்குக் காண சகிக்கவில்லை...

முத்துபேச்சியின் கண்கள் அவனைப் பார்க்காமல் மகளை ஆதுரமாய் நோக்கி கொண்டிருந்தது...

"கயலு விவரம் தெரிஞ்சதில் இருந்து ஒவ்வொரு பிறந்தநாளைக்கும் ஏதாவது ஒரு நல்ல காரியம் பண்ணணும்ன்னு நினைப்பாள்..." என்றவளை பார்த்து,

"ரொம்ப நல்ல விசயம் தான் பேச்சி... அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்..."

"போன வருசம் அவள் கூடப் படிக்கிற பசங்களுக்கு அவளோட சேமிப்பிலிருந்து பாட புத்தகம், பேனா எல்லாம் வாங்கிக் கொடுத்தாள்..."

அவள் சொல்லவும் மகளை நினைத்து அவனுக்குப் பெருமையாக இருந்தது...

"அது மாதிரி இந்த வருசம் அவளோட முடியை கொடுத்திருக்கிறாள்..." என்றவளை அவன் புரியாது

பார்க்க...

"இங்கே ஹாஸ்பிட்டலில் கேன்சரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பார்த்ததில் இருந்து அவளுக்கு இதே எண்ணம் தான்... அவங்களோட முடி எல்லாம் எங்கே போச்சும்மான்னு என் கிட்ட கேட்டுக் கவலைப்பட்டுக் கிட்டே இருந்தாள்... அப்போ அவங்களுக்காக விக் செஞ்சு கொடுக்கிறவங்க இங்கே வந்தப்போ அதைப் பார்த்தவள் தனது முடியையும் கேன்சரில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கணும்ன்னு முடிவு பண்ணி நேத்து தான் மொட்டை போட்டுக்கிட்டாள்..."

மகளது உயர்ந்த சிந்தனையை அறிந்தவன் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்குத் தெரியாது... பெருமை, கர்வம் இதை எல்லாம் தாண்டிய ஒரு உணர்வு இருக்குமேயானால் அத்தகைய ஒரு உணர்வை அந்தக் கணம் அவன் அனுபவித்தான்...

இத்தகைய வரத்தை தன் மகளாய் தான் பெற கிடைத்தது தனது முந்தைய ஜென்மத்தின் தவத்தின் பலனே என்று மனம் நெகிழ்ந்து போனான் அவன்...

அந்த வரத்தை தனக்குப் பரிசளித்த தன்னவளை பெருமையுடன் பார்த்தவன் அவளைத் தோளோடு சேர்த்து தன்னுடன் அணைத்துக் கொண்டான் மகிழ்ச்சியோடு...

அவனது மகிழ்ச்சியை உணர்ந்தார் போன்று அவனது அணைப்பில் பாந்தமாய் அடங்கி நின்றவளின் மனமும் எல்லையில்லா உவகையில் திளைத்திருந்தது...

இருவரது கண்களும் தங்களது மகளைப் பெருமையுடன் பார்த்திருந்தது...!!!

வாசம் நேசமாகும்...!!!

"இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்"

என்று எல்லோரும் கயல்விழியை வாழ்த்தி பிறந்தநாள் பாடலை பாட, பெற்றோர் இருவருக்கும் இடையில் நின்றிருந்த கயல்விழி ஒருவித பெருமிதத்துடன் தன் முன் இருந்த அந்தப் பெரிய கேக்கை வெட்டினாள்... இத்தனை நாள் தந்தை இல்லாமல் கொண்டாடிய பிறந்தநாள் இன்று தந்தையுடன் கொண்டாடியது கண்டு அவள் மனதிலும், முகத்திலும் அத்தனை மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது... தந்தையைப் பற்றியிருந்த தனது இடது கையை அவள் விடவே இல்லை...

விஜய்யும் மகளைப் பிடித்திருந்த கையை விடாது பற்றியபடி தனது வாரிசை பூரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்... தான் வாங்கி வந்திருந்த உடை மகளுக்கு அத்தனை பொருத்தமாய் இருப்பதைக் கண்டு சந்தோசத்துடன் அவளை வருடியது அவனது விழிகள்...

இதுநாள் வரை மகள் இருப்பதையே அறியாத அவன் இன்று தான் முதன்முதலாக மகளின் பிறந்தநாளை கொண்டாடுகிறான்... அதனால் ஒருவிதமான நெகிழ்ச்சியான மனநிலையில் அவன் இருந்தான்...

அவனைப் போல் தான் முத்துபேச்சியும் மன நெகிழ்வுடன் நின்றிருந்தாள்...

அவர்கள் மூவரையும் ஒரு குடும்பமாய்க் கண்டு ஆனந்தம் கொண்டவனாய் பாண்டியன் அவர்களைச் சந்தோசமாய்ப் பார்த்திருந்தான்...

மருத்துவமனையில் இருக்கும் ஊழியர்கள், அங்கு இருக்கும் குழந்தைகள் என்று எல்லோரும் கயல்விழியின் பிறந்தநாளுக்காக விளையாடும் இடத்தில் கூடியிருந்தனர்...

கேக் துண்டை வெட்டிய கயல்விழி அதை எடுத்து தனது பெற்றோர் இருவரையும் மாறி மாறி பார்க்க...

"அப்பாவுக்குக் கொடு கயல்..." என்று முத்துபேச்சி கூற...

"ம்ஹூம்... முதலில் அம்மாவுக்குத் தான்..." என்ற விஜய் மகளின் கையைப் பிடித்து மகளோடு தானும் சேர்ந்து கொண்டு தன்னவளுக்கு ஊட்டிவிட, அதில் அவளது மனம் நிறைந்தது...

இத்தனை நாள் கண்ட கனவு இன்று நனவானதில் அவளது விழிகள் இரண்டும் கலங்கியது... அதைக் கண்டு கொண்டவனாய் அவன் அவளது கரத்தை பிடித்து ஆறுதல்படுத்தினான்... அதில் தன்னைத் தேற்றிக் கொண்டு மகளைப் பார்த்து அவள் புன்னகை சிந்தினாள்...

அடுத்து தந்தைக்குக் கேக் ஊட்டிய கயல் பின் பாண்டியனுக்கும் ஊட்டி விட்டாள்...

அங்கு இருந்தவர்களுக்கும் அவள் இனிப்பை பங்கிட்டுக் கொடுக்கக் குதூகலம் நிரம்பி வழிந்தது அங்கே...

சிறிது நேரம் மகளை விளையாட விட்ட முத்துபேச்சி, "விளையாண்டது போதும் கயல்... கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கலாம்..." என்றழைக்க...

சின்னவளோ, "அப்பா..." என்று தந்தையைப் பாவமாகப் பார்த்தாள்...

"கொஞ்ச நேரம் இருக்கட்டுமே..." மகளுக்காகத் தன்னவளிடத்தில் அவன் சிபாரிசுக்கு வர...

"அதெல்லாம் கிடையாது... கயல், சொல் பேச்சு கேளு..." என்று அவள் சற்று குரலை உயர்த்தி மகளை அதட்ட,

அதைக் கண்டு தனது காதுகளைக் கரம் கொண்டு பொத்தி கொண்ட கயல்விழி தந்தையைப் பார்த்து, "அப்பா... அம்மாவை இப்படிச் சத்தம் போட்டு பேச சொல்லாதீங்க... என் காது ரெண்டும் வலிக்குது..." என்று விளையாட்டாய் புகார் அளிக்க...

மகள் சொன்னதைக் கேட்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான் என்றால், முத்துபேச்சியோ தந்தையும், மகளையும்

முறைத்து பார்த்தாள்...

"உன் அம்மா பிறக்கும் போதே ஸ்பீக்கரை முழுங்கிவிட்டு பிறந்து விட்டாள் என்று நினைக்கிறேன் பேபி..." என்று சொன்னவனுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை... மேலும் மேலும் சிரித்துக் கொண்டே இருந்தான்...

"ஆமா விசய்... எனக்கும் ரொம்ப நாளா இந்த டவுட்டு இருந்துக்கிட்டே இருக்கு... இப்போ நீ சொல்லவும் தான் எனக்கு விசயம் புரியுது..." என்று கேலியாய் கூறிய பாண்டியனும் விஜய்யுடன் சேர்ந்து கொண்டு சிரித்தான்...

"உங்களுக்கு எல்லாம் என்னைய பார்த்தா கிண்டலா இருக்கா...? கொழுப்பு..." என்று பல்லை கடித்துக் கொண்டு கோபம் போல் கூறியவளின் முகத்திலும் புன்னகையின் சாயல்...

"நான் இன்னும் அரை மணி நேரம் தான் இருப்பேன் பேச்சி... அதுவரை பேபி என் கூட இருக்கட்டுமே..." என்று விஜய் கூறவும் அவள் சரி என்று தலையசைத்தாள்...

சிறிது நேரம் தந்தையும் மகளும் விளையாடுவதை மகிழ்வோடு பார்த்து கொண்டிருந்தவள் அறைக்குத் திரும்பினாள்... மகள் இல்லாத நேரம் அறையைச் சுத்தம் செய்ய நினைத்தாள்...

அறைக்குள் நுழைந்ததும் சற்று முன் நிகழ்ந்த சம்பவங்கள் அவள் மனதில் அணிவகுத்து நின்றது...

அவளையும் அறியாது அவளது முகத்தில் நாணத்தின் சுவடுகள்...

விஜய்யை பற்றி நினைத்துக் கொண்டே அவள் அறையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்க, அவளது எண்ணத்தின் நாயகனே அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்...

"அவசரமா ஃபோன் வந்துச்சுப் பேச்சி... நான் கிளம்பறேன்..." என்று கூறியவனை ஏறெடுத்து பார்க்க

முடியாதபடி வெட்கம் பாவையவளை தடுக்க, தலையைக் குனிந்து கொண்டு,

"ம்... சரி..." என்று அவள் பதிலளிக்க...

அவளது இந்தச் செயலில் அவனது கண்களில் சுவாரஸ்யம் கூடியது... நிதான நடையுடன் அவள் அருகில் அவன் நெருங்கி வர, அவனது வரவை உணர்ந்து அவளது இதயம் தொம்தொமென்று மத்தளம் வாசித்தது வெட்கத்தில்... அருகில் வந்தவனோ அமைதியாய் அப்படியே நிற்க, அவள் தனது விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள் கேள்வியாய்...

அடுத்த நொடி வேகமாய்த் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள் அவள்... ஏனெனில் அவனது இமைக்காத பார்வை வீச்சினை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை... முழுதாய் அப்படியே விழுங்கி விடுவது போல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்...

"அளவு சரியா இருக்குது இல்லையா...?"

அவனது கேள்வியில் அவனைத் தயக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தவள் அவனது பேச்சின் உட்பொருளை அவனது பார்வையில் உணர்ந்தவளாய் முகம் செவ்வானமாய்ச் சிவக்க, சட்டென்று அவனுக்கு முதுகு காட்டி திரும்பி நின்று கொண்டாள்...

ஏனெனில் அவள் அணிந்திருந்த புடவை, இரவிக்கை அவன் வாங்கித் தந்தது...

'நீ என்ன செய்தாலும் உன்னை நான் விட மாட்டேன்...' என்பது போல் அடுத்து அவனது குரல் உல்லாசமாய் ஒலித்தது...

"பெர்பெக்ட்..." என்று சொன்னவனின் பார்வை அவளது முதுகை துளைத்து விடுவது போல் தோன்ற,

"ஐயோ விஜூ... படுத்தாதேடா..." என்று நாணத்துடன் கூறியவள் அங்கிருந்த கட்டிலில் அமர்ந்து தனது கரங்கள் கொண்டு முகத்தை மூடி கொண்டாள்...

மனதின் படபடப்பில் மூச்சுக் காற்று வேகமாய் வெளிவர அவளது நெஞ்சோ அதை விட வேகமாய் ஏறியிறங்கியது...

"என்னை விஜூன்னு கூப்பிட உனக்கு இத்தனை நாளானதா ஹனி..."

மிக அருகில் கேட்ட அவனது குரலில் அவளது மனதின் படபடப்பு அப்படியே அடங்கிவிட, முகத்திலிருந்த கையை விலக்கி கொண்டு அவனை ஏறிட்டு பார்த்தாள் அவள்...

அவளது அந்த நெருக்கமான அழைப்பில் விஜய்யின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடினாலும் அதையும் மீறி சிறிதளவு வேதனை எட்டி பார்க்கத்தான் செய்தது... அவனது அந்த வேதனை அவனை விட அவளை அதிகம் வேதனைப்படுத்தியது...

அவனது வேதனையைப் போக்கும் விதம் தெரியாது ஒரு கணம் விழித்தவள் அடுத்த நொடி அவனது வலக்கரத்தை எடுத்து தனது கன்னத்தோடு சேர்த்து வைத்து அழுத்தியபடி,

"எனக்கு மட்டும் ஆசை இல்லைன்னா நினைக்கிற விஜூ...?"

அவளது வேதனையைக் கண்டு தன்னை மீட்டு கொண்டவன், "அப்படி ஆசை இருக்கிறவள் நம்ம கல்யாணத்துக்குச் சம்மதிக்கலாமே...?" என்று சாதாரணக் குரலில் கேட்டான்...

என்ன தான் சாதாரணம் போல் அவன் காட்டி கொண்டாலும் அவனது வருத்தம் வார்த்தையில் வெளிப்படத்தான் செய்தது...

அதற்கு எப்போதும் போல் அவள் மௌனத்தைக் கவசமாக்கி கொண்டு அமைதி காக்க... அவளது மௌனம் அவனது மனதை வாள் கொண்டு அறுத்த போதும் மகளின் பிறந்தநாள் அதுவுமாய் அவளைக் கலங்கச் செய்வதில் விருப்பம் இல்லாதவனாய்,

"உனக்கு எப்போ சம்மதிக்கத் தோணுதோ அப்போ நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... என்ன சரியா...?" என்று அவன் சமாதானமாய்க் கேட்க...

அதில் அவனைப் பார்த்தவளின் பார்வையில் மகிழ்ச்சி, காதல் எல்லாம் நிரம்பி வழிந்தது... ஆனால் இந்த இரண்டையும் தாண்டி மூன்றாவது ஒன்றையும் அவளது பார்வை அவனிடத்தில் உணர்த்தியது...

தன்னை இந்தளவுக்குப் புரிந்து வைத்திருக்கும் அவனைப் பெருமிதத்துடன் பார்த்தது அவளது விழிகள்... அதை அவனும் உணர்ந்தவனாய் அவள் புறம் குனிந்தவன் அவளது முன்னுச்சியில் மென்மையாய் இதழ் பதித்துவிட்டு நிமிர்ந்தவன்,

"சாகும் போதும் உனக்காக நான் காத்திட்டிருப்பேன் ஹனி..."

அவன் கூறிய வார்த்தைகள் அவனது காதலை உணர்த்துவதற்காகத் தான் என்றாலும் அதன் அர்த்தம் அவள் மனதை இடியாய் தாக்கி நிலைக்குலையச் செய்தது...

'கடவுளே... அப்படி ஒரு நிலை ஏற்பட்டுவிட்டால்...?'

அவளால் அப்படி ஒரு சூழ்நிலையைக் கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை... அப்படி ஒரு நிலை தனக்கு வராது என்று அவளது ஒரு மனம் தைரியமாக நினைத்தாலும், இன்னொரு மனம்,

‘அப்படி ஒரு நிலை வந்தால் உன் பதில் என்ன...? அப்போதும் அவனை இப்படித்தான் துடிக்க விடுவாயா...? வாழும் காலம் கொஞ்சம்... அதை அவனுக்காக வாழாமல் இப்படி யாரோ ஒருத்தருக்காக வாழ்கிறாயே...?' என்று அவளைக் கடிந்து கொண்டது...

இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்துப் போனாள் அவள்...

"அப்படி ஒரு நிலைமை வராது என்றே நினைக்கிறேன்..." அவளது தவிப்பை உணர்ந்தார் போன்று கூறியவன்,

"இன்னைக்குச் சந்தோசமான நாள்... அதை மட்டும் அனுபவி... நம்ம பிரச்சினையைப் பிறகு பார்க்கலாம்... என்ன சரியா...?"

அதில் சற்று மனதை தேற்றி கொண்டவள், "ம்... ம்..." என்றாள் சமாதானமாய்...

"பை ஹனி..." என்று அவளிடம் அவன் விடைப்பெற...

அதில் அரை மனதாய் தலையாட்டி அவனுக்கு விடை கொடுத்தவளுக்கு உள்ளுக்குள் தவிப்பாக இருந்தது அவனை நினைத்து...

"அம்மா..." என்றழைத்தபடி அந்த நேரம் கயல்விழி அங்கே வர, தனது அலைப்புறுதலை தள்ளி வைத்தவள் மகளைத் தனது கைகளில் அள்ளி கொண்டாள்...

கைகள் அது பாட்டுக்கு மகளை உறங்க வைக்கும் வேலையைப் பார்த்தாலும், அவளது மனமோ தன்னவனிடத்தில் மையம் கொண்டு சிக்கித் தவித்தது...

அடுத்து வந்த நாட்கள் அமைதியாகக் கழிந்தது... கயல்விழியை மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்லும் நாள் நாளை என்றளவில் நெருங்கிவிட்டது...

மறுநாள் பொழுதை சின்னவளோடு சேர்ந்து பெரியவர்கள் மூவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்... மறுநாள் பொழுது அழகாக விடிந்தது... விடிந்ததுமே விஜய் மகளைக் காண மருத்துவமனைக்கு வந்துவிட்டான்...

அவன் வருவதற்கு முன்பே கிளம்புவதற்கு ஏதுவாக முத்துபேச்சி தங்களது உடைமைகளை எல்லாம் தயார் நிலையில் வைத்திருந்தாள்...

"கயல்... வீட்டுக்கு போகலாமா...? இப்போ உனக்குச் சந்தோசமா...?" என்று விஜய் மகளிடம் கேட்க...

சின்னவள் சந்தோசமாய்த் தலையை வேகமாய் ஆட்டினாள்...

அப்போது பாண்டியன் முத்துபேச்சியிடம் பணத்தை நீட்டி, "ஹாஸ்பிட்டல் பில் கட்டணும் தானே புள்ள... அதான் ஏடிஎம்மில் இருந்து எடுத்தாந்தேன்..." என்று கூற...

பாண்டியனின் வார்த்தையில் விஜய்யின் மனம் துணுக்குற்ற போதும் முத்துபேச்சி என்ன பதில் சொல்லப் போகிறாள் என்று தனது காதை தீட்டி வைத்துக் கொண்டு காத்திருந்தான் மனதில் எழுந்த தவிப்புடன்...

ஒற்றை வார்த்தையில் அவனை உயிர்ப்பிக்கச் செய்வாளா... இல்லை அவனை உயிரோடு கொல்வாளா அவனது ராட்சசி என்று தடதடக்கும் மனதோடு அவளது பதிலுக்காக அவன் காத்திருந்தான்...

"நான் எதுக்குப் பில் கட்டணும் பாண்டி...? அதான் கயலோட அப்பா இருக்காங்களே..."

விஜய்யை பார்த்தபடி அவள் கூற, அதில் அவனது முகம் சந்தோசத்தில் மலர்ந்தது... அவனது மகிழ்ச்சி அவளையும் தொற்றிக் கொண்டது... அவனுடன் வாழ்ந்து அவனைச் சந்தோசப்படுத்த இந்த ஜென்மத்தில் அவளால் முடியாது... அதனால் தான் அவனுக்கு இந்தச் சின்னச் சந்தோசத்தையாவது கொடுப்போமே என்று நினைத்தாள் அவள்...

முத்துபேச்சியின் குணம் தெரிந்து தான் பாண்டியன் பணத்தை எடுத்து வந்தது... ஆனால் அவள் இப்படிச் சொன்னது அவனுக்குமே சந்தோசமாகத் தான் இருந்தது... தனது தோழி அவளது கணவனுடன் சேர்ந்து வாழும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை உணர்ந்தவனாய் மகிழ்வோடு இருவரையும் நிறைவாய்ப் பார்த்திருந்தான்...

மருத்துவமனையில் இருந்து கிளம்பியவர்கள் வந்து இறங்கிய இடம் ஒரு புதிய வீட்டின் முன்... இதுவும்

அவர்களது ராயபுரம் ஏரியாவாய் இருந்த போதிலும் பழைய வீட்டில் இருந்து இந்த வீடு சற்றுத் தூரம் அதிகம் தான்...

முத்துபேச்சி விஜய்யை கேள்வியாய் பார்க்க,

"இப்போ வேணாம்... பிறகு சொல்கிறேன்..." என்றவன் மகளைத் தூக்கி கொண்டு காரிலிருந்து இறங்கினான்...

முத்துபேச்சி பாண்டியனை பார்க்க, அவனும் அவளைப் போல் புரியாது நின்றிருந்தான்...

கார் வந்த சத்தம் கேட்டு ஆரத்தி தட்டுடன் வெளியில் வந்தாள் ஒரு இளம்பெண்... இவர்களைக் கண்டதும் முகம் கொள்ளா புன்னகையுடன்,

"வாங்கம்மா... வாங்க ஐயா..." என அவள் வரவேற்க...

"இவள் பெயர் மீனா... எனக்குத் தெரிஞ்ச பொண்ணு தான்... கயலை பார்த்துக்கிற வேலைக்கு வந்திருக்கிறாள்... இனி நீ கயலை பத்தி கவலைப்படாம உன் வேலையைப் பார்க்க போகலாம்..." என்று அவன் கூற...

அவனது அக்கறை அவள் அடிமனது வரை சென்று இனிக்கச் செய்ய நன்றியோடு அவனைப் பார்த்தாள் முத்துபேச்சி...

"ஐயாவோட சேர்ந்து நில்லுங்கம்மா..." என்று கூறிய மீனா மூவருக்கும் சேர்த்து ஆரத்தி சுற்ற...

"கயலுக்கு மட்டும் எடுத்தா போதாதா...?" என்று முத்துபேச்சி முணுமுணுக்க...

"ஒருவேளை நீயும், நானும் இந்த வீட்டில் வாழ்க்கை நடத்தினாலும் நடத்தலாம் இல்லையா...? அதுக்கான தொடக்கம் தான் இது..." என்று மெல்லிய குரலில் கண்சிமிட்டியபடி குறும்பாய் விஜய் கூற...

அதில் திகைத்து அவனைத் திரும்பி பார்த்தவள் அவனது ஆளை உருக்கிவிடும் பார்வையில் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள்...

"இது நல்ல பிள்ளைக்கு அழகு..." என்று அவளை மெச்சியபடி அவளை ஒரு கையால் அணைத்து பிடித்தவன், மறுகையில் மகளைத் தூக்கியபடி வீட்டினுள் அடி எடுத்து வைத்தான்...

அவர்கள் செல்வதைப் புன்னகையுடன் திரும்பி பார்த்தவாறு வாயிலுக்குச் சென்ற மீனா அங்கு வந்து கொண்டிருந்த பாண்டியன் மீது நச்சென்று மோதி கொண்டாள்...

"இந்தா... பார்த்து வரக் கூடாதா...?" சிடுசிடுவென்று பாண்டியன் மீனாவை பார்த்து கடிய...

அய்யனார் சிலை போன்று ஆஜானுபாகுவாய் நின்றிருந்தவனைக் கண்டதும் விழிகளில் பயத்தைத் தேக்கியவளாய் பார்த்தவளின் இமைகள் இரண்டும் படபடவென அடித்துக் கொண்டது...

தன்னைப் பயத்துடன் பார்த்த மீனாவை கண்டதும் பாண்டியனின் விழிகள் கூர்மையாய் அவள் மீது படிந்தது... அவனது கண்கள் அவளை மேலிருந்து கீழாக அழுத்தமாய் அவளை எடை போடுவது போல் பார்த்தது...

மாநிறம் என்றாலும் திருத்தமான முக அமைப்புடன், மனதை சுண்டியிழுக்கும் அழகோடு இருந்தவள் அவனது மனதில் சொல்லாமல் கொள்ளாமல் அழுத்தமாய்ப் பதிந்தாள் அவனையும் அறியாது...

"புள்ள... உன் பேரு என்ன...?" தன்னை ஒரு மாதிரியாய் பார்த்தபடி கேட்டவனைக் கண்டு ஏதோ ஜந்து போல் விசித்திரமாய்ப் பார்த்தவள் பயத்துடன் அங்கிருந்து ஓடி விட்டாள்...

"பேரு தானே கேட்டேன்... இவ சொத்தையா கேட்டேன்..." தனக்குள் பேசியபடி அங்கிருந்து அகன்றான் பாண்டியன்...

விஜய் அவளது பெயரை முத்துபேச்சியிடம் சொன்ன போது அவன் காரிலிருந்து சாமான்களை எடுத்துக் கொண்டு இருந்ததால் அவன் கவனித்துக் கேட்கவில்லை...

சிறிது நேரம் மகளுடன் இருந்துவிட்டு விஜய் தனது வேலையைப் பார்க்க கிளம்பினான்... கிளம்பும் முன் மகளிடம்,

"பேபி... அப்பா வெளியூருக்கு போறேன்ம்மா... அதனால் இது மாதிரி அடிக்கடி உன்னைப் பார்க்க வர முடியாது... ஆனா நேரம் இருக்கும் போது நான் கண்டிப்பா உன்னைப் பார்க்க வருவேன் பேபி..."

கயல்விழி புரிந்துணர்வு கொண்ட அருமையான குழந்தை... அதனால் உடனே சரியென்று சம்மதம் தெரிவித்தவள்,

"ஆனா தினமும் ஃபோன் பண்ணனும்..." என்று அன்பு கட்டளை விதித்தாள் தனது தந்தைக்கு...

இப்போது ஒவ்வொரு வார்த்தையாக என்றாலும் சற்று இடைவெளி விட்டு பேசுகிறாள் அவள்... திக்கித் திணறி பேசும் மகளைக் கண்டு அவனது உள்ளம் இரத்தக் கண்ணீர் வடித்தது... இதற்குக் காரணமான சுந்தரலிங்கத்தைத் துவம்சம் பண்ணுவதற்கு அவனது மனம் துடித்தது...

"கண்டிப்பா பேபி... தினமும் வீடியோ ஃகால்லில் பேசுறேன்..." மகளின் சிரமத்தை உணர்ந்தவனாய் அவன் அப்படிக் கூறினான்...

அதைக் கேட்டு சின்னவள் மகிழ்ச்சியோடு தலையாட்டினாள்... மகளிடம் விடைப்பெற்று வெளியில் வந்தவனைப் பின்தொடர்ந்த முத்துபேச்சி,

"ஏதாவது கேஸ் விசயமா வெளியூர் போறியா சாமி...?" என்று கேட்க...

அதில் அவளைத் திரும்பி பார்த்தவன் பார்வை அவளை ஊடுருவி துளைத்தெடுத்தது...

"என்ன சாமி...?" அவனது பார்வையைச் சந்திக்க முடியாமல் திணறியபடி அவள் கேட்க...

ஒரு பெருமூச்சுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன், "ஆமாம்..." என்றான் அவளது முந்தைய கேள்விக்குப் பதிலாக...

"ஓ... பார்த்துப் பத்திரமா போய்விட்டு வா சாமி..." என்று அவள் விடை கொடுத்தாள்...

"கயலுக்கு அப்பாவா அங்கீகாரம் கொடுத்ததுக்கு ரொம்பத் தேங்க்ஸ் பேச்சி..."

தன்னை உறவாய் எண்ணாமல் விலக்கி வைத்திருக்கும் அவளைக் கண்டு அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது... அதனால் நன்றி கூறி அவளைத் தள்ளி வைத்தான் தனது வலியை அவள் புரிந்து கொள்வதற்காக வேண்டி...

அவனது நன்றி ஏற்படுத்திய பெரும் வலியை அவள் உணர்ந்தாலும் அதை வெளியில் காட்டி கொள்ளாது, "உண்மையைத் தானே சொன்னேன் சாமி..." என்று சமாளித்துச் சிரித்து வைத்தாள்...

"இது மாதிரி எல்லா உண்மைகளையும் ஒத்துக்கிட்டா எல்லோருக்குமே சந்தோசம்..."

அவன் கூறுவதன் அர்த்தம் புரிந்தாலும் அமைதியாக நின்றவள் பேச்சை மாற்றும் விதமாய், "ஏன் சாமி பழைய வீட்டுக்கு போகாம இங்கே கூட்டிட்டு வந்திருக்க...?"

அவளது எண்ணம் புரிந்தவனாய் அவனும், "அங்கே போனா பேபிக்கு வேண்டாத நினைவுகள் வரும்..."

மகளின் நலன் முன்னிட்டே அவன் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறான் என்பதை உணர்ந்தவள் மனம் பெருமையில் பூரித்தது... என்ன தான் தாய் பார்த்து பார்த்துச் செய்தாலும் தந்தையின் அன்பான அரவணைப்பை, அக்கறையை அவளால் ஒரு போதும் கொடுக்க முடியாது தான் இல்லையா...

"ரொம்பத் தேங்க்ஸ் சாமி..." என்றாள் அவள் மனமார...

"பதிலுக்குப் பதிலா...?" ஒரு மாதிரி குரலில் அவன் வினவ...

"ஐயோ... அப்படி எல்லாம் இல்லை..." இரு கரம் கொண்டு தனது வாயை பொத்தியபடி அவள் பதற...

அவளது வாயிலிருந்து கையை எடுத்தவன், "உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா...?" என்று அவன் புன்னகைக்கவும் தான் அவளுக்கு நிம்மதியாய் இருந்தது...

விஜய் கிளம்பி சென்றதும் உள்ளே வந்தவள் நேரே மகளைச் சென்று பார்க்க, அங்கே மீனா கயல்விழிக்கு கதை கூறியபடி உணவு ஊட்டி கொண்டு இருந்தாள்... சின்னவளும் கதை கேட்டபடி உணவை மெதுவாக உட்கொண்டு இருந்தாள்... கழுத்துக் காயம் காரணமாகக் கூழ் போன்று உணவை கரைத்துக் கொடுக்கச் சொல்லியிருந்தார் மருத்துவர்...

அதை நிறைவாய் பார்த்தபடி சத்தம் செய்யாது வெளியேறியவள் வீட்டை சுற்றி பார்க்க ஆரம்பித்தாள்... அவளுடன் பாண்டியனும் இணைந்து கொண்டான்... வீட்டிற்குத் தேவையான அனைத்து பொருட்களையும் விஜய் வாங்கிப் போட்டிருந்தான்... ஒன்று கூட அவளது பழைய வீட்டில் இருந்து எடுத்து வரவில்லை...

தன்னவனின் அக்கறையை நினைத்து அவளுக்கு அத்தனை மகிழ்வாய் இருந்தது...

"இந்த விசய்யை பாரேன் புள்ள... எத்தினி கருத்தா சாமான் செட்டு வாங்கிப் போட்டிருக்கு..." என்று அதிசயித்தான் அவன்...

"சாமியை பார்த்து நீயும் கத்துக்கோ பாண்டி... பிற்காலத்துல உனக்கு உதவும்..." என்று தோழனை கண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தாள் முத்துபேச்சி...

"அட போ புள்ள..." என்று வெட்கப்பட்டவனின் மனக்கண்ணில் மீனாவின் முகம் மின்னி மறைந்தது...

தலையைக் குலுக்கி அந்த நினைவை விரட்டி அடித்தான் அவன்...

****

காலை உணவு உட்கொண்டிருந்த விஜய் முன் மைதிலி தயக்கமாய் வந்து நின்றார்... மற்ற குடும்ப உறுப்பினர்களும் அங்குத் தான் இருந்தனர்...

"விஜய்... காயத்ரியை செக்கப்புக்கு கூட்டிட்டு போகணும்டா..."

அதைக் கேட்டு எழுந்து சென்று கையைக் கழுவி விட்டு வந்தவன் தன்னிடம் இருந்த பணத்தை வழித்தெடுத்து அவரிடம் நீட்டினான்... அதை வாங்கி எண்ணிப் பார்த்தவர்,

"இன்னும் கொஞ்சம் கூடுதலாய் வேணும் விஜய்... நிறைமாசம் இல்லையா ஸ்கேன் அது இதுன்னு ஒரு பெரிய தொகையைப் பிடுங்கிருவாங்க..."

அவர் கூறுவதும் நியாயம் தான்... ஆனால் அவருக்குத் தரும் அளவுக்கு இப்போது அவனிடத்தில் பணம் இல்லை... ஏனெனில் இப்போது தான் மகளுக்கு மருத்துவச் செலவு, அவர்களுக்காக வீடு பார்த்து, பொருட்கள் வாங்கிய செலவு என்று அவனது தகுதிக்கு மீறிய செலவுகள் நிறைய இந்த மாதத்தில் ஏற்பட்டு விட்டது... இப்போது மீண்டும் பணம் என்றதும் அவனது விழி பிதுங்கியது...

நேர்மையான காவல்துறை அதிகாரியின் உண்மை நிலை இது தான்...

"அம்மா... இப்போ என் கிட்ட பணம் இல்லை..." என்றவன் தனது தம்பியிடம்,

"வெங்கட்... உன் கிட்ட இருந்தா அம்மாவுக்குக் கொடு..."

அதைக் கேட்டு வெங்கட் வாய் திறக்கும் முன் சியாமளா தனது திருவாய் திறந்தாள்...

"எங்க செலவுக்கே அவரோட சம்பளம் பத்த மாட்டேங்குது... மீதி பணம் நான் என் அம்மா வீட்டில் இருந்து தான் வாங்கிட்டு வர்றேன்... இதில் நாங்க எங்கே இருந்து பணம்

கொடுக்கிறது..." என்று அவள் கணவனை முந்தி கொண்டு பதில் சொல்ல...

"ஐடி பீல்டில் லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறவன் சம்பளம் உங்களுக்குப் பத்த மாட்டேங்குதா...? குட் ஜோக்..." என்று கோபத்தில் பல்லை கடித்தான் விஜய்...

"அதே மாதிரி நானும் உங்களைக் கேட்கலாம் இல்லையா...? உங்க சம்பளம் எல்லாம் எங்கே போகுதுன்னு...?" என்று சியாமளா பதிலுக்குப் பேசினாள் அடாவடியாய்...

"அதானே... அண்ணி கேட்கிறதும் சரி தானே... ஒத்தை ஆள் உனக்கு எதுக்கு இத்தனை பணம்...? ஒருவேளை அவளுக்கு வாரி கொடுத்துட்டு வெறுங்கையா நிக்கிறியா...? நல்ல குடும்பத்து பொம்பளையா இருந்தா இப்படி எல்லாம் பண்ணுவாளா...? தாலி கட்டாமலேயே ஒருத்தன் கூடக் குடும்பம் நடத்தி குழந்தையைப் பெத்துக்கிறது... த்தூ என்ன ஜென்மமோ..."

முத்துபேச்சியைத் தரக்குறைவாய் பேசுவது போல் தனது அண்ணனையும் சேர்த்து தரக்குறைவாய் காயத்ரி பேசினாள்...

"காயத்ரி..." அடிக்குரலில் உறுமியவன் தனது கையை ஓங்கி இருந்தான் தங்கையை அடிப்பதற்காக...

நிறைமாத கர்ப்பிணியாய் வயிற்றைத் தள்ளி கொண்டு நிற்கும் தங்கையின் நிலையை உணர்ந்தவனாய் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தனது கையைக் கீழே இறக்கினான் அவன்...

"முத்துபேச்சி உன்னோட அண்ணி... தேவையில்லாமல் அவளை இப்படிப் பேசுறதை இன்னையோட விட்டிரு..." என்று கோபத்தில் கர்ஜித்தவன்,

"நான் மட்டும் உனக்கு அண்ணன் இல்லை... இதோ இருக்கிறானே அவனும் உன் அண்ணன் தான்... எனக்கு இருக்கிற கடமை அவனுக்கும் இருக்கு தானே... அதை அவனிடமே கேள்... அது போல் பேச்சியைப் பேசின மாதிரி

தைரியம் இருந்தா இந்த அண்ணியை..." சியாமளாவை சுட்டிக்காட்டியவன்,

"முடிந்தா பேசி பாரு..." என்று நக்கலாய் கூறியவன் வேலைக்குக் கிளம்பி சென்றுவிட்டான்...

காயத்ரி சின்ன அண்ணனிடம் ஏதோ பேச வாய் திறக்கும் முன் கண்களால் மகளை அடக்கிய மைதிலி மகனிடம்,

"வெங்கட்... தேவைப்படும் மீதி பணத்தை நீ தான் கொடுக்கணும்..." என்று கட்டளையாய் சொன்னார்...

"அவர் கிட்ட பணம் இல்லை..." என்று சொன்ன மருமகளை எரித்துவிடுவது போல் பார்த்தவர்,

"நான் என் மகன் கிட்ட பேசறேன்..." என்று அவளை அடக்கியவர்,

"வெங்கட்..." என்று மகனை அழைக்க...

"இப்போ என் கிட்ட பணம் இல்லையேம்மா..." மனைவிக்குப் பயந்து அவன் குரல் கீழே இறங்கி ஒலித்தது...

"நான் உன் கிட்ட கொடுக்க முடியுமா, முடியாதான்னு கேட்கலை...? கண்டிப்பா கொடுத்தே ஆகணும்ன்னு தான் சொல்லுறேன்... இந்த மாசத்தில் இருந்து உங்க மூணு பேர் சாப்பாட்டு செலவுக்குத் தனியா பணம் கொடுத்திரு..." என்று கறார் குரலில் அவர் கூற...

"பெத்த புள்ளைக்குச் சாப்பாடு போட பணம் கேட்பீங்களா...?" சியாமளா கண்ணைக் கசக்கி கொண்டு ஒப்பாரி வைக்க முயல...

"பெத்தவங்களுக்கான கடமையை ஒழுங்கா செய்யாத மகன் கிட்ட பணம் கேட்கிறதில் தப்பில்லை..." என்று வெட்டும் பார்வையுடன் பதிலுரைத்த மைதிலி மகனிடம் பணத்தை வாங்கிய பிறகே ஓய்ந்தார்...

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரகுராமன் முகத்தில் எப்போதும் இருக்கும் வேதனையையும் மீறி சிறு

புன்னகை தோன்றியது... பெரிய மகனின் பாரம் சிறிது இறங்கியதில் ஏற்பட்ட மகிழ்ச்சியின் விளைவே இந்தச் சிறு புன்னகை...

****

என்ன தான் விஜய் தனது அலுவலக வேலையில் முழு கவனத்தையும் செலுத்தினாலும் அவனது அடிமனதில் எந்நேரமும் சுந்தரலிங்கத்தைத் திருப்பி வலிக்க அடிப்பதை பற்றித் தான் யோசனை ஓடி கொண்டிருந்தது...

அதற்கான வாய்ப்பு வரும் என்று காத்திருப்பதில் எந்தவித பிரயோஜனமும் இல்லை என்பதை உணர்ந்தவனாய் அதற்கான வாய்ப்பை தானாக உருவாக்கிக் கொள்ள முனைந்தான்...

சிறைச்சாலையின் உள்ளே கைதிகளுக்கான வேலைகளை அவரவர் பார்த்துக் கொண்டிருக்கச் சந்தோஷ் மட்டும் அங்கிருந்த மரநிழலில் விச்ராந்தியாக அமர்ந்திருந்தான்...

அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை அவனது தந்தை சுந்தரலிங்கம் பார்த்துக் கொண்டிருக்க, அவன் நிம்மதியாக இருந்தான்... தனது செல்ல மகன் வேலை பார்ப்பதை கண்டு மனம் சகிக்காத சுந்தரலிங்கம் அவனது பாரத்தைத் தான் சுமக்கலானார்... அவரது இந்த அதீத பாசம் தான் அவனைக் கெட்டு குட்டிச்சுவராய் மாற்றி இருக்கிறது என்பதை அவர் இன்னமும் உணரவில்லை...

அவரைப் பொருத்தவரையில் சந்தோஷ் ஒரு இளவரசன் மாதிரி... தான் என்ன கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை, ஆனால் மகன் கஷ்டப்படுவதை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது...

அதனால் தான் உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கிற்காக மேல் முறையீடு செய்திருக்கிறார்... வழக்கு இரண்டு வாரத்தில் நடக்கவிருக்கிறது...

"ஏய்... நீ என்ன வேலை செய்யாம இங்கே உட்கார்ந்துட்டு இருக்க...?" ரௌடி போலிருந்த ஒருவன் அங்கு வந்து

சந்தோஷை பார்த்துச் சத்தம் போட்டான்...

"நீ யாருடா அதைக் கேட்க...? உன் வேலையைப் பார்த்துட்டு போடா..." என்று அலட்சியமாய்ச் சொன்ன சந்தோஷ் கால் மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டு அவனைத் திமிராய் பார்த்தான்...

அதைக் கண்டு ஆத்திரம் அடைந்த அந்த ரௌடி சந்தோஷின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்... சந்தோஷிற்குத் தான் சிறிது சீண்டினாலே பிடிக்காதே... அதனால் அந்த ரௌடி அடித்ததும் பொங்கிவிட்டான் ஆத்திரத்தில்...

"என்னையவா அடிக்கிற...? உன்னை..." என்று அவன் மீது பாய்ந்தான் ஆக்ரோசமாய்...

இருவரும் கட்டிப் புரண்டு சண்டை போட... அந்தச் சத்தம் கேட்டுச் சுந்தரலிங்கம் அங்கு ஓடி வந்தார்... ஆனால் அவர் மகன் அருகில் செல்லாதவாறு மூன்று பேர் அவரை இழுத்துப் பிடித்துக் கொண்டனர்...

மகன் அடிவாங்குவதைக் கண்டு சகிக்க முடியாது அவர், "டேய் விடுங்கடா..." என்று கோபமாய் அவர்களது பிடியில் இருந்து திமிறியவர் சற்று தள்ளி நின்றிருந்த காவலர்களை உதவிக்கு அழைத்தார்...

"சார்... என் மகனை காப்பாத்துங்க..."

அதுவரை அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த காவலர்கள் அவர் அழைத்ததும் கண்டு கொள்ளாதது போல் அங்கிருந்து செல்ல, அப்போது தான் சுந்தரலிங்கத்திற்கு அந்த விபரீதம் புத்தியில் உறைத்தது...

"சந்தோஷ்..." என்று அலறியபடி மகனை அவர் பார்க்க...

அவர் நினைத்த விபரீதம் அவர் கண் முன்னே அரங்கேறியது மிகவும் கொடூரமாக... செய்த பாவத்திற்கான சம்பளத்தை அவர் நேரிடையாய் பெற்றுக் கொண்டார்...

சந்தோஷுடன் கட்டிப்பிடித்துச் சண்டை போட்டுக் கொண்டிருந்த ரௌடியின் கையில் திடுமெனக் கத்தி முளைத்தது... அடுத்து கண நேரம் கூடத் தாமதியாது அந்தக் கத்தி சந்தோஷின் உடலில் பல இடங்களில் இறங்கி குதறியது வேகமாய்...

"அப்பா..." என்று அலறியபடி தந்தையிடம் உதவி கேட்டு கதறிய சந்தோஷ் அடுத்தச் சில நிமிடங்களில் தனது உயிரை விட்டிருந்தான் பரிதாபமாய்...

தன் கண் முன்னே மகன் துடிக்கத் துடிக்க உயிர் விட்டதைக் கண்டும் எதுவும் செய்ய முடியாதபடி இருக்கும் தன் கையறு நிலையை அறவே வெறுத்தவராய் நின்றிருந்தவரின் கண்கள் நடந்து முடிந்த விபரீதத்தை நம்ப முடியாது அதிர்ச்சியில் அகன்றபடி அப்படியே நிலைக்குத்தி நின்றது...

எத்தனை பணம் இருந்தும், எத்தனை செல்வாக்கு இருந்தும் பெற்ற மகனை காப்பாற்ற முடியாத துயரத்தில் அவர் தொய்ந்து போய்க் கீழே சரிய, அவரைப் பிடித்திருந்த மூவரும் அவரை அப்படியே விட்டு விட்டு அங்கிருந்து சென்றனர்... சந்தோஷை கொன்ற ரௌடியும் அங்கிருந்து அகன்றான் தைரியமாக...

மகன் அருகில் கூடச் செல்ல கூட முடியாதபடி திக்பிரம்மை பிடித்தார் போன்று அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தார் அவர்...

இரண்டு நாட்கள் கழித்து எல்லாச் சட்டரீதியான சம்பிரதாயங்களும் முறைப்படி முடிந்து சந்தோஷின் உடல் அவனது வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டது... அவனது உயிரற்ற உடலை கண்டு அவனது அப்பாவி தாய் கதறியழுதார்...

மகனது இறுதி காரியத்திற்காகச் சுந்தரலிங்கம் நேரே இடுகாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்... மகனது உயிர் பிரிந்ததில் இருந்து அவர் ஒரு வார்த்தை பேசவும் இல்லை... அழவும் இல்லை... தனக்குள் இறுகி போயிருந்தார்...

மகனுக்கு இறுதி காரியம் அவர் செய்வதைக் கண்டு அன்று தான் விஜய்யின் மனம் எல்லையில்லா நிம்மதி கொண்டது... தனது மகளுக்கும், தன்னவளுக்குமான நியாயத்தை அவன் கிடைக்கச் செய்துவிட்டான்... தனது குடும்பத்திற்காக மட்டுமா...? இவர்களால் பாதிக்கப்பட்ட எல்லாக் குடும்பத்திற்காகவும் சேர்த்து தான்...

பழிக்கு பழி என்பது தானே இந்த மாதிரி அயோக்கியர்களுடனான போரின் இறுதி முடிவு... அதைத் தான் அவன் செய்தது... இவர்களைப் போன்ற ஈனப்பிறவிகளிடம் இரக்கம் காட்டுவது என்பது கூடவே கூடாது... இவர்கள் எல்லாம் சமுதாயத்தைச் செல்லரிக்கும் கரையான்கள்... இவர்களை இப்படியே வளர விட்டால் இந்தச் சமுதாயத்தை அழித்து விடுவார்கள்... அதற்குப் பதில் அவர்கள் அழிவது தான் நல்லது...

மீண்டும் சுந்தரலிங்கத்தை அழைத்துக் கொண்டு போகும் போது அவர் விஜய்யை அழுத்தமாய், ஆழ்ந்து பார்த்துக் கொண்டு வந்தார்... அவருக்குத் தெரியும் இது விஜய்யின் திட்டமிட்ட சதி என்று... இந்தச் சதிக்கான கூலியை அவனுக்குக் கொடுத்தே ஆகவேண்டும் என்கிற வெறி அவருள் வேகமாய் எழுந்தது ஆழிப் பேரலை போல்...

****

அன்று மகளிடம் அலைப்பேசியில் விஜய் பேசி கொண்டு இருக்கும் போது முத்துபேச்சி அங்கு வந்தாள்... அலைப்பேசி திரையில் தெரிந்த அவனைக் கண்டு புன்னகைத்தவள்,

"என்ன சாமி... இன்னுமா நீ ஊருக்கு திரும்பி வரலை..." என்று கேட்க...

அவளது கேள்விக்குப் பதில் அளிக்க விரும்பாதவனாய், "உனக்கு ஒரு விசயம் தெரியுமா பேச்சி...? சந்தோஷ் இறந்துவிட்டான்..."

அவன் சொன்னதும் அவளது முகம் தாமரை மலராய் விகசித்து மலர்ந்தது...

"நெசமாலுமா சாமி..." என்று கேட்டவளின் முகத்தில் தான் எத்தனை மகிழ்ச்சி...

"உண்மையா தான் சொல்லுறேன்..." என்று பதில் உரைத்தவனின் முகத்திலும் அவளுக்குக் குறையாத மகிழ்ச்சி இருந்தது...

"எப்படிச் சாமி...?"

அவள் கேட்டதற்கு அவன் எப்படி என்று விளக்கம் கொடுக்க... அதைக் கேட்டு அவள்,

"அவன் செஞ்ச அக்கிரமத்துக்குத் தான் இந்த மாதிரி ஒரு முடிவு தேடி வந்திருக்கு..." என்று சந்தோசமாய்ச் சொன்னவள் பின் நிதானித்து யோசித்தவளாய்,

"சாமி... இது உன் வேலை தானே...?"

ஆள்காட்டி விரலை அவன் புறமாய் நீட்டியபடி இதழில் அவனைத் தெரிந்து கொண்ட பாவனையில் தவழ்ந்த நமட்டுச் சிரிப்புடன் கேட்டவளை காண காண அவனுக்குத் தெவிட்டவில்லை...

"ஐயோ... நான் எதுவும் செய்யலைப்பா..." என்று சன்னச் சிரிப்புடன் கூறியவனின் கண்ணில் வழிந்த கள்ளத்தனம் சொல்லாமல் சொல்லியது அவன் செய்த திருட்டுத்தனத்தை...

"என் கிட்டேயே பொய்யா..." என்று போலியாய் அவனிடம் அவள் கோபம் கொள்ள...

"இப்போ சொல்லு ஹனி... நான் உனக்கான நியாயம் செய்தேனா இல்லையா...?"

அவன் அப்படிக் கேட்டதும் அவளது மனம் தன்னவனின் வீரத்தை எண்ணி கர்வம் கொண்டது... அவனை

நினைத்துப் பெருமை கொண்டவளின் கண்கள் கலங்கி தேங்கியது விழிநீரால்...

"ம்... ம்..." கண்கள் கலங்க தலையாட்டியவளை கண்டு அவன் மனம் நிறைந்தது என்றால், அவனது மகளோ ஒரு படி மேலே போய்,

"ம்மா... அழாதே..." என்று கூறியபடி அன்னையின் கண்களைத் துடைத்துவிட்டாள்...

தன்னவனை ஞாபகப்படுத்தும் மகளின் செயலில் முத்துபேச்சியின் கண்கள் திரையில் தெரிந்த விஜய்யை நோக்க, அவனும் அவர்கள் இருவரின் பாசப் பிணைப்பை தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவர்களின் பாச வளையத்தில் தானும் ஐக்கியமாவது எப்போது என்று அவனது மனம் மிகவும் ஆவலாய் ஏங்கியது...

முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் வேறு பேச்சு பேச... அதை உணர்ந்தார் போன்று அவளும் மகளின் கவனத்தை அவனிடத்தில் திசை திருப்பினாள்...

****

அன்று முத்துபேச்சி வேலை முடிந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள்... அப்போது இரு சக்கர வாகனத்தில் விஜய் போன்று ஒருவன் செல்வதைக் கண்டு குழப்பமுற்றவளாய் அவள் அந்த வண்டியின் எண்ணை பார்க்க அது அவனுடையது தான்...

'உள்ளூரில் இருந்துக்கிட்டே சாமி ஏன் பொய் சொல்லணும்...?' என்று குழப்பமுற்றவளாய் அவனைப் பின் தொடர்ந்தவள் அடுத்து வந்த திருப்பத்தில் வேகமாய் அவனது வண்டியை முந்தி கொண்டு சென்று தனது வாகனத்தை வழிமறிப்பது போல் நிறுத்திவிட்டு கீழே இறங்கினாள்...

இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு அவனைக் கோபமாய் முறைத்து பார்த்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்த போதும் அதை அடக்கி கொண்டு

தனது வண்டியை நிறுத்திவிட்டு இறங்கியவன் தலையில் இருந்து ஹெல்மெட்டை கழற்றியபடி அவளை நோக்கி வந்தான்...

"என்னோட ஹனிக்கு இந்தக் கோபம் எல்லாம் செட்டாகலையே..." என்று சிறு சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு இன்னமும் அதிகமாய் முறைத்து பார்த்தவள்,

"நீ வெளியூருக்கு போறேன்னு ஏன் பொய் சொன்ன சாமி...?" என்று நேரே அவள் விசயத்துக்கு வந்தாள்...

அதில் சிரிப்பை கைவிட்டவனாய் அவளை நிமிர்ந்து பார்த்தவன், "ஒரு பொய்யால் நன்மை ஏற்படுதுன்னா பொய் நல்லது தானே..." என்று அவன் கூற, அவள் புரியாமல் அவனைப் பார்த்து முழித்தாள்...

"இப்போ கயல் என்னைத் தேடினாளா...?"

"இல்லை..." என்றாள் அவள் புரியாது...

பாண்டியனும், அவளுமாய்த் தனித்து வளர்த்த காரணத்தினாலோ என்னமோ கயல்விழி தனது தந்தையைத் தேடி ஒரு போதும் அழுதது இல்லை... அவன் வேறு வேலை விசயமாய் வெளியூர் சென்றிருப்பதாய் அவளிடம் கூறியிருந்ததால் அவனை அதிகம் தேடவில்லை அவள்...

"அதுக்காகத் தான் பொய் சொன்னேன்..." என்றவனை மீண்டும் முறைத்து பார்த்தவள்,

"அப்போ மகள்ங்கிற பாசம் அவ்வளவு தானா உனக்கு...?"

அவளது சாட்டையடி வார்த்தைகளில் அவனது உடல் விறைத்தது... அவனது முகத்தில் இதுவரை இருந்த இளக்கம் மறைந்து அது கல் போல் பாறையாய் இறுகி போனது...

"எனக்கா கயலை மேல் பாசம் இல்லைன்னு சொல்லுற...? உங்க ரெண்டு பேருக்காக உயிரை கொடுக்கிற அளவுக்கு எனக்குப் பாசம் இருக்கு... ஆனா இப்போ நான் என் உயிரை

கொடுத்தா கூட அது உனக்கும், கயலுக்கும் தகுந்த மரியாதையைக் கொடுக்குமான்னு தான் எனக்குத் தெரியலை... நிச்சயம் ஊரார் கண்ணுக்கு நம்ம உறவு தவறான ஒரு உறவா தான் தெரியும்... ஏற்கெனவே உன்னையும், என்னையும் சேர்த்து வச்சு அசிங்கப்படுத்தியாச்சு..."

"அதை உண்மைன்னு நிரூபிக்கிற மாதிரி தினமும் நான் அங்கே வந்து உங்களைப் பார்த்துட்டுப் போகச் சொல்லுறியா...? எந்த உறவு முறையைச் சொல்லிக்கிட்டு நான் அங்கே வர்றது, நீயே சொல்லு...? நம்மைப் புரிஞ்சிக்கிட்டவங்களுக்கு நம்மைப் பத்தி தெரியும்... ஆனா புரியாதவங்க ஒவ்வொருத்தர் கிட்டேயும் தனித்தனியா போய் நம்ம உறவை பத்தி விளக்கி சொல்லச் சொல்லுறியா...?"

"இதுக்குத் தான் சொல்றேன்... எந்த உறவும் முறையா இருந்தா தான் மரியாதை... இங்கே மனசுக்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கிறது இல்லை... ஆனா இதே இது மஞ்சள் கயிறுக்கு மதிப்பு இருக்கு... அதை நான் உன் கழுத்தில் கட்டுறதுக்கு நீ நல்ல நாள் பார்த்து சொல்லு... அப்போ அதை உன் கழுத்தில் கட்டிட்டு முறையா வந்து உன்னையும், நம் மகளையும் நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்... இனி நான் உன்னைச் சந்திப்பதும், சந்திக்காம இருப்பதும் உன் கையில் தான் இருக்கு... முடிவு உன் கையில்..." என்று உறுதியான குரலில் கூறி முடித்தவன் இறுதியாக,

"என்னால் கயலை பார்க்காம ரொம்ப நாள் இருக்க முடியாது பேச்சி... இனிமேல் நம்மைப் பத்தி மட்டும் யோசிக்காம கொஞ்சம் கயலோட எதிர்காலத்தைப் பத்தி மட்டும் யோசிச்சு பார்..." என்றவன் அவளைத் திரும்பியும் பாராமல் நடந்து தனது வண்டியை கிளப்பிக் கொண்டு வேகமாய் அங்கிருந்து சென்றுவிட்டான்...

முத்துபேச்சி தான் திக்பிரம்மை பிடித்தார் போன்று அங்கேயே நின்றிருந்தாள்... அவனது ஒவ்வொரு

வார்த்தைகளும் அவளுள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருந்தது...

இந்த நிலையிலும் அவன் தனக்குக் கெட்டப் பெயர் வந்துவிடக் கூடாது என்று ஒதுங்கி செல்வது கண்டு அவளது மனம் வலித்தது...

அவன் கூறியது போல் இதுநாள் வரை இருவருக்குமாய் முடிவு எடுத்து ஒதுங்கி இருந்தது போல் இனியும் ஒதுக்கியிருக்க அவளால் முடியாது... கயல்விழியின் எதிர்காலத்திற்காகவாவது அவள் ஒரு முடிவை எடுத்து தான் ஆகவேண்டும்...

இப்போதைக்குக் கயல் தந்தை தன்னைக் காண வரவில்லை என்பதைப் பற்றி அதிகம் கேட்காமல் இருந்தாலும், இன்னும் சில தினங்கள் கழித்து அவள் தந்தை எங்கே என்று கேள்வி கேட்கத்தான் போகிறாள்... அவளுக்கு என்ன பதில் கூறிச் சமாளிப்பது என்று முத்துபேச்சிக்கு தெரியவில்லை... அடுத்து என்ன செய்வது என்றும் அவளுக்கு விளங்கவில்லை...

திக்குத் தெரியாத காட்டில் தொலைந்து போன சிறுகுழந்தையைப் போல் திகைத்து போய் நின்றிருந்தாள் அவள்...!

அந்நேரம் அவளது தலையில் இடி போல் ஒரு வலி இறங்கி அவளைப் பெரிதாய் நிலைக்குலைய செய்தது...!!!

வாசம் நேசமாகும்...!!!

பூஜையறையில் விளக்கேற்றி வைத்துவிட்டுக் கண்களை மூடி கடவுளிடம் வேண்டி கொண்டிருந்த முத்துபேச்சியின் மனம் மிகுந்த சந்தோசத்தில் இருந்தது... ஆம், இன்று தான் அவள் சட்டமன்ற வேட்பாளராக வேட்பு மனு தாக்கல் செய்யப் போகிறாள்... கயல்விழியின் உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தால் அது தள்ளி போய்க் கொண்டே இருந்தது... இன்று தான் கடைசி நாள் என்பதால் அதற்காக அவள் தயாராகிக் கொண்டிருந்தாள்...

ஆனால் இந்தச் சந்தோசத்தையும் மீறி அவள் மனதில் முணுமுணுக்கென்று சிறு வலி இருந்து கொண்டே இருந்தது... விஜய்யை பார்க்காததால், பேசாததால் ஏற்பட்ட வலி அது... அதை அவள் உணர்ந்தே தான் இருந்தாள்... அவன் தினமும் மகளிடம் மட்டும் பேசுகிறான்... அவளிடம் பேசுவதில்லை... அவளும் அதற்கு முயற்சிக்கவில்லை...

நடவாத ஒன்றை நடக்க வைப்பதற்காக அவன் போராடுவது கண்டு அவளுக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது... அவனும், அவளும் சேரக் கூடாது என்பது இந்த ஜென்மத்துச் சாபம் என்பதை அவனிடத்தில் எப்படிச் சொல்லி புரிய வைப்பது என்று தெரியாமல் அவள் விழித்தாள்...

அந்தச் சாபம் பற்றி அவனிடத்தில் சொல்லிவிட அவளுக்கு ஒரு நொடியாகாது... ஆனால் அதன் பின் ஏற்படும் விளைவுகளை நினைத்து பார்த்தவளுக்குத் துக்கத்தில் நெஞ்சு வெடிப்பது போல் இருந்தது...

'என்ன பாவம் செய்தேனோ இந்த ஜென்மத்தில் இப்படி ஒரு கேவலமான பிறப்பை எனக்கு அளித்து விட்டாய் கடவுளே... இப்போது தெரிந்தே மேலும் ஒரு பாவத்தைச் செய்ய என்னால் எப்படி முடியும்...? என்னைப் புரிந்து கொள்ளாமல் விஜூவும் படுத்தி எடுக்கிறான்... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை கடவுளே...'

துயரத்தில் அவளது கண்கள் கலங்கியது... அவனைக் காணாத போது ஒதுங்கியிருந்த மனது இப்போது அவனை நேரில் கண்டதும் அவன் எப்போதும் உடனிருக்க வேண்டும் என்று பேராசை கொண்டது... இப்போது எல்லாம் அவளது அடக்கப்பட்ட காதல் காலம் நேரம் தெரியாமல் பீறிட்டுக் கொண்டு வெளிவருகிறது... எங்கே தன்னையும் அறியாமல் அவனிடத்தில் தன் மனதினை வெளிப்படுத்தி விடுவோமோ என்று சிறிது பயமாகக் கூட இருந்தது அவளுக்கு...

ஆண்டவனைப் பிரார்த்தித்து விட்டு வெளியில் வந்தவளின் அலைப்பேசி இன்னிசை பாடி அழைத்தது... அவளது மனம் போல் விஜய் தான் அழைத்திருந்தான்... இன்றைய சந்தோசத்தை அவனிடத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவள் ஆசைப்பட்ட போதும் ஏதோ ஒன்று அவளைத் தடை செய்ய அவனை அழைத்துப் பேசாது அமைதி காத்தாள்...

அவளது மனதை புரிந்தவனாய் அவனே அவளை அழைத்தது கண்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

ஆவலாய் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள் அவள்...

"ஆல் த பெஸ்ட் ஹனி..." அவனது கம்பீரமான குரல் அழுத்தமாய் அவளது காதில் விழுந்து அவளது மேனியை சிலிர்க்கச் செய்தது...

அதை விட அவள் மீதான அவனது அக்கறை அவளது இதயத்தை ஊடுருவி சென்று கண்களையும், உள்ளத்தையும் ஒருங்கே கலங்கச் செய்தது...

"தேங்க்ஸ் சாமி..." என்றவளின் குரலே சொல்லாமல் சொன்னது அவளது மனம் அழுகையில் கரைவதை...

அதை உணர்ந்தார் போன்று அவன், "சந்தோசமான சமயத்தில் வேறு எதையும் போட்டு நீ குழப்பிக்கக் கூடாது..."

என்றான் ஆறுதலாய்...

"நீ என் பக்கத்தில் இல்லையேன்னு தான் கவலையா இருக்கு..."

இத்தனை நாள் அவன் இல்லாது அவனது மகளைக் கஷ்டப்பட்டுச் சுமந்து, பெற்றெடுத்து, வளர்த்தவள் இப்போது மட்டும் இப்படிக் கூறுவதன் காரணம் அவனுக்கும் புரியாமல் இல்லை...

ஏனெனில் அவளை மாதிரியான ஒரு மனநிலையில் தான் அவனும் இருந்தான்... அவளைக் கண்ணில் காணாத இத்தனை வருடங்களில் இல்லாத தவிப்பு, இப்போது அவளைக் கண்ட கொஞ்ச நாட்களாக அதிகம் எழுவதை அவனும் உணர்ந்து தான் இருந்தான்...

"நீ மனசு வச்சா அதுவும் நடக்கும் ஹனி..." என்றவன் குரலில் இருந்த எதிர்பார்ப்பில் அவளது மனம் சுகமாய் நனைந்தது...

ஆனாலும் தன் சூழ்நிலை உணர்ந்து அமைதி காத்தாள் அவள்...

"இதுக்கு மட்டும் பதில் பேச மாட்டியே..." என்று அவன் சலித்துக் கொண்டான்...

"இதுக்குப் பதில் சொல்லும் அருகதை எனக்கு இல்லை விஜூ..." என்றவள் லேசாக விசும்பினாள்...

"ஹேய்... அழுறியா...?" என்று மறுமுனையில் அவன் பதறித்தான் போனான் அவளது அழுகையில்...

ஆனாலும் அவளது வார்த்தைகள் அவனது இதயத்தில் ஆழப்பதிந்து அதற்கான அர்த்தத்தைப் பற்றி யோசிக்கலானது...

அவனது பதற்றம் உணர்ந்து தனது அழுகையை அடக்கி கொண்டு, "இல்லை சாமி... நான் அழலை..." என்றாள் அவனை ஆறுதல்படுத்தும் விதமாய்...

அதில் அவனும் ஆறுதல் அடைந்தவனாய் நிம்மதி பெருமூச்சு விட்டவன்,

"நல்லபடியா வேட்பு மனு தாக்கல் செய்து விட்டு வா..." என்று மீண்டும் ஒரு முறை அவளை வாழ்த்திவிட்டு அலைப்பேசியை அணைத்தான்...

தன்னவன் தன் மனம் உணர்ந்து வாழ்த்தியது அவளுக்கு யானை பலம் பெற்றது போல் அத்தனை தெம்பாக இருந்தது... மிகவும் சந்தோசமாக உணர்ந்தாள்...

"முத்து... ரெடியா...?" என்றபடி பாண்டியன் அங்கு வந்தான்...

"நான் ரெடி தான் பாண்டி..." என்றவள் அவன் இன்னமும் தயாராகாமல் இருப்பதைக் கண்டு,

"நீ கிளம்பலையா பாண்டி..." என்று கேட்க...

"இல்லை முத்து... நீ மட்டும் போயிட்டு வா..."

"பாண்டி... நீ இல்லாமலா...?" என்று திகைப்புடன் கேட்டாள் அவள்...

அவளது அத்தனை துன்பத்திலும் உடனிருந்த தோழன் இப்போது அவளது மகிழ்ச்சியிலும் உடனிருக்க வேண்டுமா, இல்லையா...?

"அதான் ஐயா உன் கூட வர்றார் இல்ல..."

"நீ ஏன் வரலைன்னு தான் நான் கேட்டேன்...?"

அவளிடத்தில் சிறிது கோபம் எட்டி பார்த்தது...

"என்ன புள்ள புரிஞ்சிக்காம பேசுற...? கயலை தனியா விட்டுட்டு போக எனக்குப் பயமாயிருக்கு..." என்றவனது கண்களில் அத்தனை பயம் தெரிந்தது...

அவளுக்குத் தெரிந்து எதற்கும் பயப்படாதவன் இந்தப் பாண்டியன்... அவனது கண்களில் கண்ட பயத்தில் அவள் உணர்ந்தாள் அன்று மகளுக்கு நேர்ந்த ஆபத்தின் தீவிரத்தை...

அன்று நடந்த சம்பவத்தின் தாக்கத்தில் இருவரும் சிறிது நேரம் அப்படியே நின்றிருந்தனர்...

"நீ சொல்றது சரி தான் பாண்டி... நீ கயலு கூடத் துணைக்கு இரு..." என்றாள்...

அப்போது அங்கு வாயிலில் கார் நிற்கும் சத்தம் கேட்டு வெளியில் எட்டி பார்த்த பாண்டியன் மகிழ்ச்சியுடன் கூவினான்...

"புள்ள... ஐயா நம்ம வீட்டுக்கே வந்துட்டாரு..."

"அப்படியா...?" என்று பரபரத்தபடி முத்துபேச்சி வீட்டு வாயிலுக்குச் சென்றாள்... அவளைப் பின்தொடர்ந்து பாண்டியனும் சென்றான்...

காரில் இருந்து இறங்கிய செல்வநாதனை கண்டு இருவரும், "வாங்கய்யா..." என்று உற்சாகமாய் வரவேற்றனர்...

"நீங்க எதுக்குங்கய்யா இங்கே வந்து அலைஞ்சிக்கிட்டு... நானே நம்ம வீட்டுக்கு வந்திருப்பேனே..." என்று அவள் கூற...

"என் பேத்தியை பார்க்க நான் வர கூடாதா...?" என்று செல்வநாதன் கேட்க...

"தாராளமா..." என்று ஒரு சேர கூறினர் இருவரும்...

அந்நேரம் மறுபக்கம் இருந்து இறங்கிய கமலாவை கண்டு இருவரும் ஆனந்த அதிர்ச்சி அடைந்தனர்...

"உங்க ஐயாவுக்கு மட்டும் தான் வரவேற்பு எல்லாமுமா...? எனக்குக் கிடையாதா...?" என்று அவர் புன்னகை முகமாய்க் கேட்டதைக் கண்டு இருவருக்கும் மயக்கம் வரும் போலிருந்தது...

முதலில் சுதாரித்துக் கொண்ட முத்துபேச்சி, "வாங்கம்மா..." என்று அவரை வரவேற்க...

அவளது அழைப்பில் முகம் மலர்ந்த கமலா அவளது கையை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டு, "என்னை மன்னிச்சிரு முத்து... நான் ஏதேதோ தப்பா நினைச்சிட்டு உன்னைக் கேவலமா பேசிட்டேன்... இப்பத்தான் ஐயா உன் புருசனை பத்தி என் கிட்ட சொன்னாரு... நம்ம ஏசிபி தான் உன் புருசனாமே... இவ்வளவு நாள் ஏன் என் கிட்ட சொல்லலைன்னு அவர் கிட்ட சத்தம் போட்டேன்... நீ நித்திக்காகத் தான் அவரைப் பிரிஞ்சி இருந்தியா முத்து...?"

நீளமாய்ப் பேசியவரை கண்டு அவள் ஆச்சிரியமாகப் பார்த்தாள் என்றால், விஜய்யை தனது கணவன் என்று சொன்னதைக் கேட்டு திகைத்து போனவளாய் அவள் செல்வநாதனை பார்க்க, அவரோ அவளிடத்தில் 'எதுவும் சொல்ல வேண்டாம்' என்பது போல் விழியசைத்தார்... அவளும் புரிந்து கொண்டார் போன்று அமைதியாக இருந்தாள்...

அவர்கள் இருவரும் உள்ளே வந்து கயல்விழியைப் பார்த்து நலம் விசாரித்துவிட்டு, முத்துபேச்சியின் விருந்தோம்பலையும் ஏற்றுக் கொண்டு வேட்பு மனு தாக்கல் செய்வதற்காகக் கிளம்பினர்...

"ஐயா, அம்மா... ஒரு நிமிசம்..." என்று அவர்களைப் பூஜையறைக்கு அழைத்த முத்துபேச்சி அங்கு அவர்களது கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க...

அன்று அவளது பிறந்தநாளின் போது தான் ஆசிர்வாதம் செய்யாது அவளை உதாசீனப்படுத்தியதை இப்போது நினைத்து பார்த்த கமலாவுக்குக் கண்கள் கரித்தது... தனது மகளுக்காக வாழும் இளம் வயதில் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டு நிற்கும் முத்துபேச்சியைக் கண்டு அவரது உள்ளம் உருகி போனது...

"இனியாவது உன் புருசன் கூடச் சேர்ந்து நீ சந்தோசமா, அமோகமா பல்லாண்டு வாழணும் முத்து..." என்று கண் கலங்க கூறியவர் அவளை வாரியணைத்துக் கொண்டார்...

"முத்து, அரசியலில் சாதிக்கப் பிறந்தவள்... அவளைப் போய்க் குடும்பம், புருசன்னு ஒரு வட்டத்துக்குள் கட்டுப்படுத்தாதே கமல்..." என்று செல்வநாதன் மனைவியைக் கிண்டலடிக்க...

"பெண் எத்தனை சாதனை செய்தாலும் கணவன், குழந்தைன்னு குடும்பம் சகிதமா சந்தோசமா வாழ்வதில் தான் அவளது உண்மையான வாழ்க்கை இருக்கு... இது பெண்களுக்கு மட்டுமேயான சூட்சம உணர்வு... ஆண்கள் உங்களுக்குப் புரியாது... அதனால் தான் உங்களை மாதிரியான ஆண்கள் எப்போதும் வேலையைக் கட்டிக்கிட்டு அழுறீங்க... ஆனா பெண்கள் நாங்க இரண்டையும் அழகா பேலன்ஸ் பண்ணுகிறோம்..."

"சரியா சொன்னீங்கம்மா..." என்று முத்துபேச்சியும் கமலாவுக்கு ஒத்து ஊத...

"பாண்டி... இதுக்கு மேல நாம பேச ஒண்ணும் இல்லை... நீ வா..." என்று செல்வநாதன் பாண்டியனை அழைத்துக் கொண்டு வெளியில் செல்ல... பெண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து நகைத்து கொண்டனர்...

"முத்து... பேச்சளவில் இல்லாது நீ சொன்னது போல் செயலளவிலும் செய்து காட்டு... அப்போ தான் எனக்குச் சந்தோசம்..."

விஜய்யுடன் அவள் சேர்ந்து வாழ்வதைக் குறித்து அவர் குறிப்பாய் உணர்த்த, அதை உணர்ந்தவளாய் பேச்சை மாற்ற எண்ணி,

"அம்மா... நேரமாகுது நாம கிளம்பலாமா...?" என்று அவள் கேட்க...

அவரும் அப்பாவியாய் சரியென்றபடி அவளுடன் கிளம்பினார்...

மீனாவிடம் கயல்விழியைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மகளிடமும், பாண்டியனிடமும்

விடைப்பெற்றுப் பெரியவர்களுடன் கிளம்பி சென்றாள் அவள்...

பாண்டியனுடன் தனித்து இருந்த மீனாவுக்கு மனதிற்குள் மிகவும் பயமாக இருந்தது... அவனது முரட்டுத்தனமான தோற்றம் கண்டு அவளையும் அறியாத அச்சம் அவனிடத்தில்... அவளது கைகள் அது பாட்டிற்குத் தனது வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும் அவளது கண்கள் அவனைத் தான் சுற்றி சுற்றி வந்து கொண்டு இருந்தது சந்தேகமாய்...

அவள் பயந்தது போல் எதுவும் நடக்கவில்லை... முத்துபேச்சி வெளியில் சென்றதில் இருந்து பாண்டியன் வீட்டினுள் வரவே இல்லை... வெளியில் இருந்த வாசப்படியில் அமர்ந்து கொண்டு செய்தித்தாளில் தனது கண்களைப் பதித்திருந்தான்... மறந்தும் கூட அவளை ஏறெடுத்து பார்க்கவில்லை... எந்தவித திருட்டுத்தனமும் இல்லாமல் அவனது செயல் அத்தனை இயல்பாய் இருந்தது...

அதில் நிம்மதி அடைந்தவளாய் கயல்விழிக்கு உணவு ஊட்டி முடித்தவள் மெல்ல சின்னவளிடம், "கயல்... உன்னோட மாமாவை சாப்பிட கூப்பிடும்மா...?" என்க,

சின்னவளும் சரியென்று தலையாட்டியவள் நேரே பாண்டியனிடம் வந்து நின்றாள்...

"கயலு... என்ன கண்ணு வேணும்...?" சின்னவளை கண்டு தான் படித்துக் கொண்டிருந்த செய்தித்தாளை மடித்தபடி அவன் கேட்டான்...

"மாமா... சாப்பிட வாங்க..." என்று அவள் அழைக்க...

அவள் சொல்லவும் தான் அவன் உள்ளே எட்டி பார்த்தான்... அங்கே சமையலறை வாசலில் நின்று கொண்டு மீனா தன்னைப் பார்ப்பதை உணர்ந்து சின்னவளிடம் சொல்வது போல்,

"நான் இங்கேயே சாப்பிடறேன்னு அந்தக்கா கிட்ட போய்ச் சொல்லு கண்ணு..." என்று அவன் சொல்ல...

கயல்விழி அங்கிருந்தபடியே மீனாவை பார்த்தாள்... மீனா புரிந்தது போல் ஒரு தட்டில் தோசைகளையும், இன்னொரு தட்டில் சட்னி, மிளகாய் பொடி, எண்ணெயும் வைத்து எடுத்துக் கொண்டு வந்தவள் குனிந்து அதை அவன் முன் வைத்தாள்...

அவன் மிகவும் கவனமாக அவளைப் பார்ப்பதை தவிர்த்தவனாய் தட்டில் கவனம் வைத்து உணவை உட்கொள்ள ஆரம்பித்தான்...

ஏனோ இப்போது அவனது செயல் அவள் மனதினை மிகவும் பாதித்தது... தன்னை ஏன் அவன் இப்படி உதாசீனப்படுத்துகிறான் என்று அவளது மனம் யோசித்தது...

பாண்டியன் முத்துபேச்சியின் நெருங்கிய தோழனாக இருந்த போதும் அவளது கண்ணியத்திற்குச் சிறு குறைபாடு வந்துவிடக் கூடாது என்பதில் அவ்வளவு கவனமாக இருப்பான்... தோழி அவளிடமே அப்படி இருப்பவன் அவன்... அதனால் தான் யாரோ ஒரு மீனாவிடம் அவன் இன்னமும் கவனமாக இருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியவில்லை...

முதன்முறை அவனைப் பார்த்த போது தான் அவனைப் பற்றிக் கணித்தது தவறோ என்ற எண்ணம் அவளுள் வலுப்பெற துவங்கியது அவனது செயல் கண்டு...

இத்தனையும் அவள் யோசித்து முடிக்கும் முன் பாண்டியன் உணவு உண்டு முடித்துக் கை கழுவி கொண்டு வந்து விட்டான்...

அதைக் கண்டு மனம் பதறியவளாய், "இன்னும் தோசை வேணுமா...? சுட்டு எடுத்துட்டு வரவா...?"

தனது தயக்கத்தை விட்டொழித்து அவள் அவனிடத்தில் நேரிடையாகக் கேட்டாள்...

"இல்லை... போதும்..." என்று ஒரு நொடி அவள் முகம் பார்த்து சொன்னவன் அடுத்த நொடி கயல்விழியிடம் திரும்பி பேசலானான்...

மீனா ஒன்றும் பேசாது தட்டுக்களை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்... அதன் பின் வேலை செய்து கொண்டே அவனைத் தான் கவனித்துக் கொண்டிருந்தாள்...

சின்னவளுக்கு இணையாக அவனும் சிறு குழந்தை போல் கீழிறங்கி வந்து விளையாடுவது கண்டு பெருத்த ஆச்சிரியமாக இருந்தது அவளுக்கு... ஒரு ஆணிடம் இத்தனை பொறுமை கண்டு அதிசயித்துப் போனாள் அவள்...

ஒரே நாளில் பாண்டியன் அவள் மனதில் அழுத்தமாய்த் தனது தடத்தைப் பதித்து உள்ளே நுழைந்தான்...

****

ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்து முடித்தபின் செல்வநாதன், கமலா இருவரும் முத்துபேச்சிக்கு வாழ்த்துக்கள் கூறினர்... வெளியில் வந்த மூவரையும் பத்திரிக்கையாளர்கள் பிடித்துக் கொண்டனர்...

இந்த முறை செல்வநாதன் தான் தேர்தலில் நிற்காமல் முத்துபேச்சியைக் களத்தில் இறக்குவதைப் பற்றித் தான் எல்லாக் கேள்விகளுமே இருந்தது...

"அப்படி என்றால் திருமதி. முத்துபேச்சி வெற்றி பெற்றால் கட்சி மேலிடத்தில் பேசி அவருக்கு அமைச்சர் பதவியை வாங்கிக் கொடுப்பீர்களா...?" என்று செய்தியாளர் ஒருவர் கேட்க...

"இனி நான் அரசியலில் இருந்து ஓய்வு பெற விரும்புகிறேன்... என்னுடைய அரசியல் வாரிசு முத்துபேச்சி தான்... அப்படி என்றால் உங்களது கேள்விக்கான பதிலை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்..." என்று செய்தியாளரின் கேள்விக்குப் பூடகமாகப் பதில் கூறினார் செல்வநாதன்...

அதைக் கேட்டு அந்தச் செய்தியாளர் திகைத்தாரோ இல்லையோ முத்துபேச்சி பேச்சற்று திகைத்து போய் அவரைப் பார்த்தாள்... மகள், மகள் என்று வெறும் வார்த்தையில் சொல்லாமல் உண்மையில் அதைச் செயலில் நிரூபித்துக் காட்டிய செல்வநாதனை கண்டு அவளது கண்கள் பனித்தது பாசத்தில்...

அவளது கலங்கிய நிலையைக் கண்டு அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்ட கமலா, "இதற்கான முழுத்தகுதியும் உனக்கு இருக்கும்மா..." என்று பெருமையோடு கூறினார்...

காரிலேறி வீடு வரும் வழியில் செல்வநாதன் முத்துபேச்சியின் புறம் திரும்பி, "இந்த எலெக்சனில் நீ ஜெயிச்சு அமைச்சராகிற முத்து... ஏற்கெனவே அதைப் பத்தி நான் தலைவர் கிட்ட பேசிட்டேன்..." என்க...

"ஐயா..." அவள் கண்கள் கலங்கி, கைக்கூப்பி நன்றி தெரிவிக்க...

"நான் உனக்குச் செஞ்ச அநியாயத்துக்கு இதெல்லாம் சாதாரணம்மா... இன்னும் நிறையச் செய்யணும்ன்னு மனசில் ஆசையிருக்கு... நிச்சயம் செய்வேன்..."

அவரது வார்த்தையில் அவள் மனம் அப்படியே உடைந்தது...

"ஐயா... என் வாழ்க்கை இப்படி இருக்கிறதுக்கு நீங்க காரணம் இல்லை... நான் மட்டும் தான் காரணம்..." என்று கூறியவளின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது...

"நல்ல சந்தோசமா இருக்க வேண்டிய நேரத்தில் ஏன் தேவையில்லாம பேசிக்கிட்டு..."

கமலா இருவரையும் கடிந்து கொள்ள... அங்கே அமைதி நிலவியது... அந்நேரம் நித்யா கமலா அலைப்பேசிக்கு அழைக்க, அவர் அதை முத்துபேச்சியிடம் நீட்டினார்... தோழியிடம் பேசிய முத்துபேச்சியின் முகம் சந்தோசத்தில் மலர்ந்தது... அது போல் பேரனிடம் பேசிய செல்வநாதனும் மகிழ்ச்சியடைய அங்கே மீண்டும் சந்தோசமான சூழ்நிலை நிலவியது...

செல்வநாதன், கமலா இருவருக்கும் முத்துபேச்சியின் வீட்டில் மதிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்க அவர்கள் இருவரும் உணவு உண்டுவிட்டு சிறிது நேரம் அங்கிருந்து விட்டே தங்களது வீட்டிற்குக் கிளம்பி சென்றனர்...

****

இரவு நேரம்... அந்த நடுநிசி நேரத்தில் சிறைச்சாலை ஆழ்ந்த அமைதியில் இருந்தது... ஆனால் சுந்தரலிங்கம் மட்டும் அமைதியில்லாமல் தன்னுடைய அறையில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்... அவருடன் இருந்த சக கைதி கூட உறங்கி விட்டான்... ஆனால் அவருக்குத் தான் உறக்கம் வரவில்லை...

அவர் எதிர்பார்த்த செய்தி மட்டும் அவருக்குக் கிடைத்து விட்டால் போதும் அடுத்த நொடி அவர் நிரந்தரமாக உறங்குவதற்குத் தயாராக இருந்தார்...

சொல்லி வைத்தது போல் அவரது கையிலிருந்த அலைப்பேசி மௌனமாய் அலறியது... பெருமளவு பணம் லஞ்சமாகக் கொடுத்து அந்த அலைப்பேசியை அவர் கைப்பற்றி இருந்தார்...

வேகமாய் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தார் அவர்... மறுபுறம் சொன்ன செய்தியில் அவரது முகத்தில் அப்படியொரு ஆனந்தம் தாண்டவமாடியது...

வெற்றி களிப்போடு, எதையோ சாதித்த திருப்தியில் அலைப்பேசியை அணைத்தவர் அமைதியாக அமர்ந்தார்...

அருமை பெருமையாய் செல்லமாய் வளர்த்த மகன் துடிக்க, துடிக்கத் தன் கண் முன்னே உயிர் விட்டதை எண்ணி அவரது மனம் இப்போதும் துயரத்துடன் துடித்தது... தன்னுயிர் கொடுத்து மகனது உயிரை காப்பாற்ற முடியாத தன்னுடைய தூரதிர்ஷ்டத்தை எண்ணி மனம் வெதும்பியவராய் அவர் இருந்தார்...

என்ன தான் கெட்டவனாக இருந்தாலும் மனம் என்பது ஒன்று தான் போலும்... அதில் அன்பும், பாசமும் தான்

நிறைந்திருக்கும் போலும்...

மகன் இறந்த போது வராத கண்ணீர் இப்போது அவரது கண்களில் இருந்து பெருகி பொங்கி வழிந்தது...

'சந்தோஷ்... உன்னோட உயிர் போவதற்குக் காரணமாக இருந்தவனின் உயிரை நான் காவு வாங்கிட்டேன்... இப்போது தான் நான் உனக்கு நியாயம் செய்திருக்கிறேன்... இந்தத் திருப்தி ஒண்ணு எனக்குப் போதும் சந்தோஷ்... நீயில்லாத இந்த உலகத்தில் எனக்கு வாழ விருப்பமில்லை... நானும் உன்னுடன் வருகிறேன் மகனே...'

மனம் கலங்க தன் மகனுடன் மானசீகமாக உரையாடியவர் அடுத்தக் கணம் தனது கையில் இருந்த அந்தச் சிறு பிளேடை கொண்டு தனது மணிக்கட்டில் அழுத்தமாய்க் கீறினார்... மகன் வலியில் துடித்ததை நேரில் கண்டதாலோ என்னவோ அவருக்கு இந்தக் கீறல் வலிக்கவில்லை... மாறாகச் சுகமாக இருந்தது... ஏனெனில் அவர் தன் மகன் சென்ற பாதையில் பயணிக்கப் போகிறார் அல்லவா... அதனால் தான்...

அவரது மணிக்கட்டில் இருந்து பொங்கிய இரத்தம் தரையை நனைத்தது... அதைப் பார்த்து கொண்டிருந்தவரின் விழிகள் இரண்டும் மயக்கத்தில் சொருகியது... காலன் தன்னை நெருங்கிவிட்டதை உணர்ந்தவரின் மனதில் எந்தவொரு வருத்தமும் இல்லை... மாறாக அது மிகவும் சந்தோசப்பட்டுப் போனது...

"வந்துவிட்டேன் மகனே..." என்று மெல்லமாய் முணுமுணுத்தபடி அவர் தனது கண்களை நிரந்தரமாய் மூடினார்...

கடைசியில் புத்திர பாசம் அவரை வென்றுவிட்டது... அவரை நம்பியிருக்கும் அவரது அப்பாவி மனைவியை அவர் மறந்து தான் போனார் அந்தக் கணம்... அந்தளவுக்கு மகன் மீதான பாசம் அவரது உயிரையே ஆட்டிப்படைத்து அவனுக்காக அதை இழக்கவும் செய்துவிட்டது...

மறுநாள் காலையில் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த பாண்டியன், "முத்து..." என்று பெரிதாய் அலறினான்...

அப்போது மகளைப் பால் அருந்த செய்து கொண்டிருந்த முத்துபேச்சி அவனது அலறலில் அலறியடித்துக் கொண்டு வந்தாள் என்னவோ ஏதோ என்ற பயத்தில்...

அங்கே குத்துக்கல்லாட்டாம் உட்கார்ந்து இருந்த நண்பனை கண்டு நிம்மதி கொண்டவளாய், "இப்ப எதுக்கு இந்தக் கத்து கத்துற...? எப்பவும் நான் தானே கத்துவேன்... இன்னைக்கு என்ன நீ புதுசா கத்துற...?" என்றபடி அவன் அருகில் அவள் வர...

அவனோ ஒன்றும் பேசாது கண்கள் கலங்க செய்தித்தாளை அவள் புறம் நீட்டினான்... குழப்பத்துடன் செய்தித்தாளை வாங்கிப் பார்த்தவள் அப்படியே அதிர்ந்து போய் நின்றாள்...

"சென்னை மாநகரத் துணை ஆணையர் நேற்றிரவு பன்னிரெண்டு மணியளவில் ரோந்து முடிந்து ஜீப்பில் வந்து கொண்டிருந்த போது, எதிரில் வந்த தண்ணி லாரி தனது கட்டுப்பாட்டை இழந்து ஜீப்பின் மீது பலமாக மோதியது... அதில் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே இறந்து விட, ஏசிபி திரு. விஜய் அவர்கள் பலத்த காயத்துடன் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்... பின்னால் அமர்ந்திருந்த மற்றொரு காவலர் லேசான காயத்துடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்... லாரி ஓட்டுநர் பயத்தில் அங்கிருந்து தப்பியோட்டம்... அவனுக்குப் போலீஸ் வலைவீச்சு..."

ஆம்... ஜீப்பின் மீது மோதிய லாரி ஓட்டுநர் தான் விஜய் இறந்துவிட்டதாக எண்ணி கொண்டு சுந்தரலிங்கத்திற்கு அழைத்து அந்தத் தகவலை சொன்னது... அவரும் விஜய் இறந்துவிட்டதாய் எண்ணி தன் உயிரை மாய்த்துக் கொண்டார் சந்தோசமாய்... ஆனால் அவரது கடைசி ஆசை கூட நிறைவேறவில்லை என்பது பற்றி அவருக்குத் தெரிய இனி வாய்ப்பு இல்லாது போனது தான் அந்தோ பரிதாபம்...

விஜய்க்கு ஆபத்து என்றதும் அந்த விசயம் முத்துபேச்சியின் மனதில் ஏறிய அடுத்த நொடி அவளது மூளைக்கு ஏறியது வேகமாய்... அதைத் தாங்க இயலாது பெருத்த வலி ஒன்று அவளது தலையில் தோன்ற, மறுநொடி அவள் மயங்கி கீழே சரிந்தாள் வேரறுந்த மரம் போல்...

"முத்து..." என்று அலறியபடி அவள் கீழே விழும் முன் தனது கைகளில் ஏந்தி கொண்ட பாண்டியன் உள்ளே திரும்பி,

"ஏ புள்ள மீனா... தண்ணியை எடுத்தாந்து வா..." என்று கத்த...

உடனே தண்ணி சொம்புடன் பதட்டமாய் வந்த மீனா முத்துபேச்சியின் நிலையை உணர்ந்து அவளது முகத்தில் தண்ணியை விசிறியடித்தாள்... கயல்விழியும் இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பயந்து போய் அங்கு வந்தவள் அன்னையின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதாள்...

தண்ணி தெளிக்கப்பட்டதில் சுரணை அடைந்து மெதுவே கண்விழித்த முத்துபேச்சி நண்பனை கண்டு, "பாண்டி... நான் சாமியை பார்க்க போகணும்..." என்று கண்ணில் வலியுடன் கூற...

"வா புள்ள..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்...

அதே நேரம் மீனாவையும், கயல்விழியையும் உடன் கிளம்பச் சொல்லி நேரே செல்வநாதன் வீட்டில் அவர்களைப் பாதுகாப்பாய் விட்டு விட்டு இருவரும் விஜய்யை காண சென்றனர்... போகும் வழியெல்லாம் முத்துபேச்சி மௌனமாய் அழுது கொண்டு வர, அவளுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகளற்று பாண்டியன் அமைதியாக வந்தான்...

அரசாங்க மருத்துவமனைக்குள் நுழைந்ததும் முத்துபேச்சி தன்னையும் அறியாது பயத்தில் பாண்டியனின் கையைப் பிடித்துக் கொண்டாள்... அவளது கரத்தின் மேல் தனது

கரத்தை வைத்து ஆறுதல் படுத்தியவன் விஜய் இருக்கும் இடத்தை விசாரித்து விட்டு அங்கே அவளை அழைத்துச் சென்றான்...

தன்னவனை நேரில் காணும் வரை அவளது உயிர் அவளது கையில் இல்லை... உயிரை கையில் பிடித்துக் கொண்டு அவன் இருக்கும் இடம் நோக்கி வேகமாய் விரைந்தாள்...

அங்குக் கட்டிலில் படுத்திருந்த விஜய்யின் கோலம் கண்டு அவள் இதயம் வெடிக்கும் அளவுக்கு அழுகையில் வெடித்துச் சிதறினாள்... சொல்லொண்ணா துயரம் வந்து அவளைத் தாக்கியது... தனக்கு மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது என்று மிகவும் வருத்தமாக இருந்தது அவளுக்கு...

விஜய்யின் வலது கை, வலது கால் இரண்டும் மிகவும் அடிப்பட்டு இருந்தது... எலும்பு முறிவு ஏற்பட்டிருக்க வேண்டும் போலும்... இரண்டிலும் கனமாய் மாவு கட்டு போடப்பட்டு இருந்தது...

"விஜூ..." என்று கதறியபடி அவன் அருகில் வந்தமர்ந்தாள்...

அவன் அருகில் இருந்த அவனது தந்தை ரகுராமன் கூட அவளது கண்ணுக்கு தெரியவில்லை... அவளது கண்ணுக்குத் தெரிந்தது எல்லாம் அவளது காதலன் விஜய் மட்டும் தான்...

பாண்டியன் கனத்த மனதுடன் இருவரையும் பார்த்திருந்தான்...

மருந்துகளின் வீரியத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த விஜய் முத்துபேச்சியின் அழைப்பில் மெதுவே கண்களைத் திறந்தான்... அவளது அந்தப் பிரத்யேக அழைப்பு அவன் எந்த ஆழ் மயக்கத்தில் இருந்தாலும் அவனை உயிர்ப்பிக்கும் ஆக்சிஜன் அல்லவா...

தன்னவளை கண்டதும் அவனது முகம் மலர்ந்தது மகிழ்ச்சியில்...

"வந்துட்டியா...?" என்று அவளைப் பார்த்து கேட்டவன் சிரிக்க முயன்று தோற்றவனாய் வலியில் முகம் சுளித்தான்...

அவன் கண் விழித்தது கண்டு முகம் மலர்ந்தவள் அவனது வலியில் துடிதுடித்தவளாய், "விஜூ..." என்று பதற...

"உன் விஜூ தான்..." என்றவன் அந்த நிலையிலும்,

"இப்பவாவது நாம கல்யாணம் பண்ணிக்கலாமா ஹனி...?" என்று கேட்க...

அதைக் கேட்டு அவள் திகைத்து போனவளாய் அவனைப் பார்த்தாள்... அன்று அவன் கூறிய வார்த்தைகள் அவளது செவியில் திரும்பத் திரும்ப ஒலித்தது...

'சாகும் போதும் உனக்காக நான் காத்திட்டிருப்பேன்...'

அவளது மனதில் தாங்க முடியாத வலி எழுந்தது...

"விஜூ..." என்றபடி பதில் பேசாது அழுதவளை கண்டு அவனது விழிகள் வேதனையுடன் மூடி கொண்டது...

அதில் முத்துபேச்சி பயந்து போனவளாய் அவனைப் பற்றி உலுக்கியபடி, "விஜூ... கண்ணைத் திறந்து என்னைப் பாரு... என்னை ஏமாத்திடாதே விஜூ..." என்று கதற...

'நீ என்னை ஏமாத்தியதை விடவா...?' என்று மனதில் நினைத்தவன் விழிகளைத் திறக்கவில்லை...

"நான் உயிர் வாழ்றதே உனக்காகவும், கயலுக்காகவும் தான் விஜூ... நீயில்லைன்னா நான் செத்து போயிருவேன் விஜூ..."

வார்த்தைக்கு வார்த்தை அவனுக்குப் பிடித்த 'விஜூ' என்றழைப்பில் அழைத்தவளின் அழைப்பு அவனது காதில் ஏறவில்லை போலும்...

'நானும் தான் நீயில்லைன்னா செத்து போவேன்... அதை விட உன்னைப் பிரிந்து இப்போ தினமும் செத்து

கொண்டிருக்கிறேனே அதுக்கு நீ எப்போ பதில் சொல்லப் போற...?' அவனது துயரத்திலேயே அவன் உழன்றான்...

"நான் உன்னைத் தான்டா காதலிக்கிறேன்... உன்னை மட்டும் தான்டா காதலிக்கிறேன்... ஐ லவ் யூ விஜூ..." என்றபடி அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கியபடி முகமெங்கும் அவள் தன் இதழ்களை வேகமாய்ப் பதித்தாள் அவனை இழந்து விடுவோமோ என்ற பயத்தில்...

அதைக் கண்டு ரகுராமனும், பாண்டியனும் சங்கடப்பட்டுக் கொண்டு முதுகு காட்டி திரும்பி நின்றனர்...

அவளது அந்த வார்த்தையில் இதுவரை வாடியிருந்த அவனது உயிர்ப்பூ, உயிர்ப்புடன் மலர்ந்து சுகமாய் மணம் வீச பட்டென்று தனது விழிகளைத் திறந்தான் அவன்...

அவளது முகத்தைத் தனது இடது கரத்தில் தாங்கியவன், "என் மகளை வயிற்றில் சுமந்து, பெற்றெடுத்து இதோ அவளுக்கு ஆறு வயதும் முடிந்து விட்டது... விளையாட்டு போல் ஏழு வருடம் ஓடியும் போய்விட்டது... ஆனால் இப்போது தான் நீ என்னைக் காதலிக்கும் விசயம் உனக்குத் தெரிந்ததா கண்ணம்மா... நீ இப்படி மெதுவாக இருந்தால் எனக்கு ரொம்பக் கஷ்டமே..." என்று அவன் கண்சிமிட்டி சிரிக்க...

அவன் கண் விழித்துப் பேசியதில் பயம் அகன்றவள் அவனைப் பார்த்து புன்னகைக்க முயன்று தோற்றவளாய் ஆறுதல் வேண்டி அவனது அடிபடாத தோளில் அவள் முகம் புதைக்க, அதில் மனம் நிறைந்தவனாய் விஜய் தனது ஒற்றைக் கையால் அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான்...

"ஏழு வருடம் கழித்துக் காதலை சொன்னது போல்... இன்னும் ஏழு வருடம் கழித்துக் கல்யாணத்திற்குச் சம்மதிப்பாயா கண்ணம்மா...?" என்று ஏக்கத்துடன் அவனது குரல் ஒலித்தது அவளது காதருகில்...

அதில் கண்கள் கலங்க அவனை நிமிர்ந்து பார்த்தவள் மீண்டும் அவனை அணைத்து கொண்டாள் எந்தவித பதிலும் சொல்லாமல்... மௌனமாய்க் கண்ணீர் வடித்தவளின் கண்ணீரின் ஈரத்தை உணர்ந்தான் அவன்...

விபத்தில் ஏற்பட்ட உடல் வலியை விட அவளது கண்ணீரால் ஏற்பட்ட மனவலியானது அவனுக்கு மிகவும் வலித்தது...

மகனின் குழந்தையைப் பெற்றெடுத்து வளர்த்த போதும் இன்னமும் தன் காதலை சொல்லாத முத்துபேச்சியைக் கண்டு ரகுராமனுக்குப் பிரமிப்பாய் இருந்தது...

ஆண் ஏமாற்றி விட்டால் நீதிமன்றம், வழக்கு என்று அந்த ஆணை நாறடிக்கும் பெண்கள் மத்தியில் முத்துபேச்சி வித்தியாசமாகத் தெரிந்தாள் அவரது கண்களுக்கு...

ஒருவருக்காக ஒருவர் உருகும் இருவரின் மாசற்ற காதல் அவரைப் பிரமிக்கச் செய்த போதும், ஏனோ அவரால் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

மனம் கனக்க செய்வதறியாது இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார் அந்தப் பழங்கால மனிதர்...!!!

வாசம் நேசமாகும்...!!!

"ஐயோ... ஐயோ... பட்டப் பகல்ல இது என்ன கூத்து...?" என்று வாயில் அடித்தபடி உள்ளே நுழைந்தார் மைதிலி...

விஜய்யும், முத்துபேச்சியும் அணைத்திருந்த காட்சியைக் கண்டு தான் அவர் அப்படி அலறியது...

திடீரென்று ஒலித்த அவரது குரலில் முத்துபேச்சி திகைத்து போய் விஜய்யை விட்டு விலகினாலும் அவனை விட்டு எழுந்து செல்லவில்லை... மாறாக மைதிலியின் வரவை உணர்ந்தும் திரும்பி பார்க்காமல் சட்டமாய், அழுத்தமாய் அவள் அமர்ந்திருந்தாள்... அவளது முகத்தில் அப்படியொரு கோபம், வெறுப்பு எல்லாம் கலந்திருந்தது...

தாயின் அலறலை சிறிதும் சட்டை செய்யாமல் விஜய் தன்னவளின் முகத்தைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவளது முகமாற்றத்திலேயே அவன் உணர்ந்து கொண்டான் மைதிலி ஏதோ தேவை இல்லாததை அவளிடம் பேசியிருக்கிறார் என்பதை...

"நீங்க இங்கே தானே கல்லுக்குண்டாட்டம் நிக்கிறீங்க...? பெரிய மனுசன்னு பெத்த பேரு மட்டும் தான்... இந்தக் கர்மத்தை எல்லாம் தட்டி கேட்கணும்ன்னு உங்களுக்குத் தோணலையா...?..." என்று கணவரை கண்டு அவர் நொடித்துக் கொள்ள...

விஜய், முத்துபேச்சி காதலை கண்டு பிரமிப்பில் இருந்த ரகுராமன் மனைவியின் பேச்சில் நிகழ்காலத்துக்கு வந்தவர்,

"மைதிலி... இது ஹாஸ்பிட்டல்... இங்கே வந்து இப்படிக் கூப்பாடு போடாதே..." என்று அவரைக் கடிந்தார்...

மைதிலியை கண்டு விறைத்துக் கொண்டு அமர்ந்திருந்த முத்துபேச்சி ரகுராமனின் குரலை கேட்டதும் பதட்டத்துடன் கட்டிலில் இருந்து எழுந்தவள் விஜய்யை விட்டு தள்ளி நின்றாள்...

ரகுராமனை கண் கொண்டு பார்க்க முடியாமல் குற்றவுணர்ச்சியில் தலைக்குனிந்து நின்றாள் அவள்...

இப்போதும் விஜய்யின் கண்கள் அவளைத் தான் கூர்மையாய் அளவிட்டுக் கொண்டிருந்தது... தனது தந்தையைக் கண்டு அவளுக்கு ஏன் இவ்வளவு பதற்றம் என்று... அதிர்ந்து பேச கூடத் தெரியாதவர் அவர்... அவரிடத்தில் இவளுக்கு எதற்கு இத்தனை பயம்...? யோசனையாய் இருவரையும் பார்த்தான்...

"ஹாஸ்பிட்டல்லுன்னு எனக்குத் தெரியுது... ஆனா இதுங்களுக்குத் தெரியலையே... இப்படியா கூத்தடிக்கிறது...?" என்று முத்துபேச்சியை முறைத்துக் கொண்டே கத்தியவர் நேரே மகனிடம் வந்தார்...

"ஏன்டா... உனக்குமாடா அறிவில்லாம போச்சு..." என்று அவனையும் கடிந்தவர்,

"ஆமா... உனக்கு அறிவிருந்தா போயும் போயும் இப்படி ஒருத்தியை காதலிச்சு தொலைச்சிருப்பியா..." என்று அவர் முத்துபேச்சியைச் சாட...

அதில் பாண்டியனுக்குக் கோபம் வந்தது... அவன் ஏதோ பேச வாய் திறக்கும் முன் முத்துபேச்சி அவனது கையைப் பிடித்துத் தடுத்துவிட்டாள்...

அதைக் கண்டு மைதிலியின் கண்கள் அருவருப்புடன் இருவரின் மீதும் படிந்தது... அவரது பார்வையே சொல்லாமல் சொல்லியது அவர் இருவரை பற்றியும் நல்லவிதமாக எண்ணவில்லை என்பதை...

பின்பு அவர்கள் இருவரையும் கண்டு கொள்ளாதவாறு, "சாப்பிடறியா விஜய்...?" என்றபடி வீட்டில் இருந்து தான் கொண்டு வந்திருந்த உணவை கூடையில் இருந்து வெளியில் எடுத்து வைத்தார் மைதிலி...

"பிறகு..." என்றவன் மேலே ஒன்றும் பேசவில்லை...

"காயூக்கு பிரசவமாகி இருக்கும் இந்தச் சமயம் பார்த்து உனக்கு இப்படியாகி போச்சே... நான் காயத்ரியை பார்ப்பேனா... உன்னைப் பார்ப்பேனா...? எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை...?" என்று அவர் புலம்ப...

"நீங்க அவளைப் பாருங்க... நான் தனியா சமாளிச்சுக்குவேன்..." என்று விஜய் கூற...

"நான் விஜய்யை பார்த்துக்கிறேன் மைதிலி..." என்று ரகுராமன் சொல்ல...

"உடம்புல இத்தனை அடிப்பட்டிருக்கு... உன்னை நீயே எப்படிடா பார்த்துப்ப..." என்று மகனை கடிந்தவர் கணவனிடம்,

"உங்களுக்கு என்ன இளமை திரும்புதுன்னு நினைப்பா... ஊர்ல உள்ள எல்லா வியாதியும் உங்க உடம்புல இருக்கு... உங்களைக் கவனிக்கிறதுக்கே ஒரு ஆளு வேணும்... இதுல நீங்க எப்படி இவனைக் கவனிச்சிக்கப் போறீங்க...? பேசாம ஒரு ஆம்பளை நர்ஸை ஏற்பாடு செஞ்சிரலாம்..." என்று அவர் ஆலோசனை சொல்ல...

வேறுவழியின்றி ரகுராமன் அதை ஏற்றுக் கொண்டார்... விஜய் ஒன்றும் பேசாது அமைதியாய் இருந்தான்... இப்போது அவன் எதைப் பேசினாலும் அது அப்படியே தன்னவளுக்கு எதிராகத் திரும்பும் என்று எண்ணி அவன் அமைதி காத்தான்...

அந்நேரம் முத்துபேச்சி மைதிலியிடம் நேரிடையாகப் பேசினாள்...

"நான் சாமியை பார்த்துக்கிறேன்..."

ஏனோ தெரியவில்லை அவளது வார்த்தைகள் மிகவும் தயக்கத்துடன் வெளிவந்தது... ஏனெனில் உரிமையில்லாத அவளது உறவு நிலையை அவள் உணர்ந்து இருந்தாளோ என்னவோ...

"அதெல்லாம் வேண்டாம்..." என்றார் மைதிலி பட்டென்று...

"எப்படியும் நர்ஸ் வச்சுத்தானே பார்க்க போறீங்க...? அந்த நர்சா என்னை நினைச்சுக்கக் கூடாதா..." என்று இறைஞ்சும் குரலில் கூறியவளை விஜய்யின் கண்கள் உணர்வில்லாது பார்த்தது...

அவளது இந்த வார்த்தையில் மைதிலி சற்று நிதானித்து யோசித்தார்... இப்போதைக்கு மகளைத் தனியே விட்டு விட்டு அவரால் இங்கு வந்திருக்க முடியாது... அதற்காக மகனை இப்படி அம்போவென விடவும் அவருக்கு மனசில்லை... அதனால் அவளது விருப்பத்திற்கு இசைந்து கொடுக்க எண்ணினார்...

"ம்... சரி... ஆனா நர்ஸ்க்குக் கொடுக்கிற சம்பளத்தை நீ வாங்கிக்கணும்... சம்பளத்துக்கு வேலை செய்றதா இருந்தா மட்டும் இதை நீ செய்யலாம்... இல்லை நாங்க வேறு ஆளை பார்த்துக்கிறோம்... இதைச் சாக்கு வச்சுக்கிட்டு நீ திரும்ப விஜய் கூடச் சேரலாம்ன்னு பகல் கனவு காணாதே..." என்று அவர் திட்டவட்டமாகக் கூறினார்...

காதல் என்பது மனம் சம்பந்தப்பட்டது... வேறு எதைக் கொண்டும் அதை அளவிட முடியாது... அணை போட்டு தடுக்கவும் முடியாது... அதை மைதிலி உணரவில்லை...

மைதிலி கூறியதை கேட்டு அதிர்ச்சி அடைந்த முத்துபேச்சி வேகமாய் விஜய்யை திரும்பி பார்த்தாள்... அப்போது அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்...

அவளது உயிரை அவள் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதற்கு அவளுக்குக் கூலி கொடுக்கிறார்களா...? 'ஐயோ, இது என்ன கொடுமை...!' என்று அவளது மனம் ஓலமிட்டு அழுதது... ஆனாலும் இதை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவளுக்கும் வேறுவழியில்லை...

"இதுக்கு நான் சம்மதிக்கிறேன்..." மனம் நிறைய வேதனையைச் சுமந்து கொண்டு அவள் அப்படிக் கூறினாள்...

அதில் திருப்தியுற்றவராய் மைதிலி சிறிது நேரம் அங்கு இருந்துவிட்டு கையோடு கணவனையும் ஓய்வுக்காக அழைத்துச் சென்றுவிட்டார்...

"முத்து... அந்தம்மா பேசுறது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கலை..." என்று பாண்டியன் தனது ஆட்சேபணையை வெளிப்படையாய் வெளிப்படுத்தினான்...

"பாண்டி..." என்று அவனை அதட்டியவள் விஜய்யை கண்ணால் சுட்டி காண்பிக்க...

அதில் அவன் சற்று அடங்கிப் போனான்... என்ன இருந்தாலும் மைதிலி விஜய்யின் அன்னை அல்லவா...

"பாண்டி... நான் சாமியை பார்த்துக்கிறேன்... நீ வீட்டுக்குக் கிளம்பு... அப்புறம் கயலை பத்திரமா பார்த்துக்கோ..."

"சரி புள்ள... கயலை நினைச்சு நீ கவலைப்படாதே... நான் பார்த்துக்கிறேன்..." என்று அவளிடத்தில் சொன்னவன் விஜய்யிடம்,

"உடம்பை பார்த்துக்கோ விசய்..." என்று கூறிவிட்டுக் கிளம்பினான்...

பாண்டியன் சென்றதும், "சாப்பிடறியா சாமி...?" என்றபடி விஜய் அருகே அவள் செல்ல... அவனோ அதே உணர்வில்லாத பார்வையை அவள் மீது செலுத்தி கொண்டிருந்தான்...

"என்ன சாமி... அப்படிப் பார்க்கிற...?"

"விஜூ எப்படிச் சாமியா மாறி போச்சுன்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன்..."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் தனது உதட்டினை கடித்துக் கொண்டாள் தவறு செய்த சிறுகுழந்தையைப் போல்...

"உரிமையா என் கூடயிருக்க வேண்டியவள் இப்படி உரிமையில்லாம சம்பளத்துக்கு ஆயா வேலை பார்க்க

சம்மதிச்சு இருக்கியே... எனக்காக இதை நீ ஏத்துக்கிட்டதுக்குச் சந்தோசப்படுறதா... இல்லை துக்கப்படுறதான்னு எனக்குத் தெரியலை..." என்று வெறுமையான குரலில் கூறியவன்,

"போடி..." என்று ஒற்றை வார்த்தையில் தனது கோபத்தையும், வேதனையையும் வெளிப்படுத்தியவன் களைப்புடன் தனது விழிகளை மூடி கொண்டான்...

அவனது வார்த்தைகளைக் கேட்டு வேதனையுற்ற அவளும் ஆயாசத்துடன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

இருவரின் மனதிலும் தங்களது கவலையில்லா கல்லூரி காலம் ஞாபகத்தில் வந்தது... எத்தனை இனிமையான நினைவுகள் அவை... புண்பட்டிருந்த அவர்களது மனதிற்கு அந்த நினைவுகள் பெருத்த ஆறுதலாக இருந்தது...

****

கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்பு...

கோடை விடுமுறைக்குப் பின் அந்தத் தனியார் பொறியியல் கல்லூரி அன்று தான் திறக்கப்பட்டது... பழைய மாணவர்கள் எல்லாம் தங்களது தோழர்களைச் சந்திக்கப் போகும் உற்சாகத்தில் துள்ளலுடன் கல்லூரிக்கு வர, முதலாம் ஆண்டு மாணவர்கள் முதல் நாள் கல்லூரிக்குச் செல்லும் ஆர்வத்துடன் வந்தாலும் அவர்களது மனதில் தங்களையும் அறியாது பயம் எழ ஒருவித படபடப்புடன் கல்லூரிக்குள் அடி எடுத்து வைத்தனர்...

வழக்கம் போல் முத்துபேச்சி அன்றும் தாமதமாகக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தாள்... பள்ளி படிக்கும் காலத்தில் இருந்து அவள் அப்படித்தான்... இப்போது கல்லூரிக்கு வந்தாலும் அவள் என்ன திருந்தவா போகிறாள்... இரவெல்லாம் தொலைக்காட்சியில் அவளும், பாண்டியனும் திரைப்படம் பார்த்துவிட்டுக் காலையில் எழும் போதே மிகவும் தாமதமாகத் தான் எழுந்தாள்...

"ஐயோ... நித்தி சீக்கிரம் வர சொன்னாளே... இன்னைக்குப் பார்த்து நான் இப்படித் தூங்கிட்டேனே..." என்று முணுமுணுத்துக் கொண்டே கல்லூரி வளாகத்தில் காலடி வைத்தாள் அவள்...

நித்யாவிற்காகத் தான் முத்துபேச்சி இந்தத் தனியார் கல்லூரியில் சேர்ந்தது... அவளது மதிப்பெண்ணிற்கு முதன்மை அரசாங்க கல்லூரியில் இடம் கிடைக்கத்தான் செய்தது... ஆனால் நித்யாவின் குறைந்த மதிப்பெண்ணிற்கு இங்குத் தான் இடம் கிடைத்தது... வேறுவழியின்றி அவளுக்காக இவளும் இங்கே வந்து சேர்ந்தாள்...

செல்வநாதன் அவளது படிப்புச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்டார்... அரசியலில் தீவிரமாய் இருந்தவளை அவர் தான் இந்தப் பொறியியல் படிப்பை தேர்வு செய்யச் சொன்னது... அவர் சொல் பேச்சு தான் அவள் என்றும் தட்ட மாட்டாளே...

கல்லூரிக்குள் வந்த முத்துபேச்சி நித்யாவின் பயமறிந்தவளாய் நாலாப்பக்கமும் தனது விழிகளைச் சுழற்றினாள் அவளைத் தேடி... அவள் நினைத்தது போலவே நித்யா சீனியர் மாணவர்களிடம் மாட்டி கொண்டு விழித்துக் கொண்டிருந்தாள்... வேகமாக அவளை நோக்கி விரைந்தாள் இவள்...

நேரே நித்யாவிடம் சென்று நின்றவள் அங்கிருந்த சீனியர் மாணவர்களைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாது, "வா நித்தி... கிளாஸ்க்கு போகலாம்..." என்று அவள் கைப்பிடித்து இழுத்தாள்...

"ஏய்... நாங்க ராகிங் பண்றது உன் கண்ணுக்கு தெரியலை... நீ பாட்டுக்கு வந்து அவளை இழுத்துக்கிட்டு போற..." என்ற அதட்டலான குரலில் முத்துபேச்சி திரும்பி பார்த்தாள்...

மரத்தடி திண்டின் மீது கால் மேல் கால் போட்டுக் கொண்டு இடது கையில் சிகரெட்டும், வலது கையில்

அலைப்பேசியுமாகத் திமிராய், தோரணையாய் அமர்ந்திருந்த விஜய்யை கண்டு எரிச்சலுடன் முகத்தைச் சுளித்தாள் அவள்...

"நீ வா நித்தி..." என்று மறுபடியும் அவனைக் கண்டு கொள்ளாது அவள் தனது தோழியை அழைக்க...

அவ்வளவு தான் அவளது அலட்சியத்தில் அவனுக்குச் சுர்ரென்று கோபம் தலைக்கேறியது...

"என்ன லந்தா பண்ணிக்கிட்டு இருக்க...? நான் சொல்ல சொல்ல கேட்காம நீ அவளைக் கூப்பிட்டுட்டு போனா என்ன அர்த்தம்... இதுக்கு முன்னாடி உன்னை நான் இங்கே பார்த்ததில்லையே... ஆமா, நீயும் ஃபர்ஸ்ட் இயரா... அப்போ அவள் கூடச் சேர்ந்து நில்லு..." என்று கட்டளையிடுவது போல் அவன் கூற...

"ஏய்... இங்கே பாரு... அவ, இவன்னு பேசின பல்லை பெயர்த்துடுவேன்..." ஆள்காட்டி விரல் நீட்டி அவனை மிரட்டினாள் முத்துபேச்சி...

ஆளுக்கும், பேச்சுக்கும் சிறிதும் சம்பந்தம் இல்லாமல் இருந்தவளை கண்டு அவனுக்கு எரிச்சல் வந்தது...

"எங்கே பல்லை பெயர்த்து காண்பி பார்ப்போம்... நீ என் பல்லை பெயர்க்கிற வரை நான் என்ன மாங்காயா பறிச்சிக்கிட்டு இருப்பேன்..." என்று அவனும் பதிலுக்கு எகிற...

அவளோ அவனைக் கண்டு சிறிதும் பயப்படாது முறைத்து பார்த்தாள்...

"நித்தி... கிளம்பு..." என்று தோழியைக் கைப்பிடித்து அழைத்தவள் அங்கிருந்து நகர முயல...

அவனோ சட்டென்று நித்யாவின் கையைப் பிடித்துக் கொண்டான் மேலே நகர முடியாதபடி... ஒரு ஆணின் தொடுகையில் உறை நிலைக்குச் சென்ற நித்யா அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றாள்...

நகராமல் சிலையாய் சமைந்து நிற்கும் தோழியைக் கண்டு திரும்பி பார்த்த முத்துபேச்சியின் கண்களில் நித்யாவின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த விஜய்யின் கரம் தென்பட, அவ்வளவு தான் அடுத்த நொடி அவனது கன்னத்தில் ஓங்கி விட்டாள் ஒரு அறை...

அதில் அவன் திகைத்து போய் நின்றது ஒரு நொடி தான்... மறுநொடி அவனும் ஓங்கி ஒரு அறை விட்டான் அவளது கன்னத்தில்...

அந்தச் சத்தத்தில் சிலையாய் சமைந்த நித்யாவிற்கு உயிர் வர, நேருக்கு நேர் மோதி கொள்ளும் இருவரையும் பயத்துடன் பார்த்தாள்...

"ஆம்பிளை மேல கையை வைக்கிறியா...? என்ன திமிர் உனக்கு..." என்று அவன் அவளிடத்தில் எகிறினான்...

ஏனெனில் அவனது பெற்றோர் கூட அவனை அடித்தது கிடையாது... அந்தளவுக்கு அவன் மீது பயம் கலந்த மரியாதை அவர்களுக்கு... வீட்டிற்கு மூத்த ஆண்மகன் அவன் என்பதால் வீட்டின் ஆணிவேரே அவன் தான் என்கிற எண்ணம் அவர்களது மனதில் ஆழப்பதிந்து தானாக அவனுக்கு மரியாதை கொடுக்கச் செய்தது... அவன் வெளிநாடு சென்று சம்பாதித்துத் தங்களைக் காப்பாற்றுவான் என்று நம்பிக்கையோடு இருந்தார்கள் அவனது பெற்றோர்...

விஜய்யும் அதற்கேற்றார் போல் தான் பொறுப்புடன் நடந்து கொள்வான்... என்ன அந்த வயதிற்குரிய குறும்பும், முன்கோபமும் சற்று அதிகம் உண்டு அவனுக்கு... மற்றபடி அவன் நல்லவன் தான்... இப்போதும் நித்யாவிடம் வரம்பு மீறாமல் தான் ராகிங் செய்து கொண்டிருந்தான்... அவள் தான் பயத்தில் திக்கித் திணறி கொண்டிருந்தாள்...

அவன் அடித்ததில் கொதித்துப் போன முத்துபேச்சி, "நீ பொம்பளை மேல கை வைப்பியா...?" என்று பதிலுக்கு எகிற...

அதற்குள் வகுப்பு ஆரம்பிப்பதற்காக மணியடிக்க விஜய் அவளை முறைத்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தான்...

"சரியான ரௌடியா இருப்பா போலிருக்கு..." என்று வேண்டுமென்றே சத்தமாய்ச் சொல்லிக் கொண்டே சென்றான்...

"நானாடா ரௌடி... நீ தான்டா ரௌடி..." என்று அப்போதும் அடங்காது முத்துபேச்சி கத்த...

"ஷ்... முத்து... நீ நினைக்கிற மாதிரி அவங்க ரொம்ப எல்லாம் ராகிங் பண்ணலை... ஜஸ்ட் பேர் என்ன, எங்கே இருந்து வர்றேன்னு தான் கேட்டாங்க..." என்று சொன்ன நித்யாவின் கண்கள் விஜய் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தது...

ஏனோ தெரியவில்லை அவன் அவளது கையைத் தொட்டதும் அவளுள் ஒருவித படபடப்பு எழுந்தது... இப்போதும் அது அவளிடத்தில் மிச்சம் இருந்தது...

"என்ன கேட்டாலும் ராகிங் ராகிங் தானே... அரசாங்கமே ராகிங்கை தடை பண்ணியிருக்கு... இவன் என்ன .....க்கு ராகிங் பண்றான்..." என்று கெட்ட வார்த்தையில் அவனைத் திட்டினாள் முத்துபேச்சி...

அவளது வளர்ப்பு முறையில் அந்த வார்த்தை எல்லாம் சகஜம்... ஆனால் நித்யாவிற்கு அந்த வார்த்தையில் உடல் கூச தோழியின் தோளில் ஒரு அடி போட்டவள்,

"என் கூட இருக்கும் போது இப்படி எல்லாம் பேசின நான் உன் கூடப் பேச மாட்டேன்..." என்று கண்டிப்புடன் கூறியவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கோபமாய்...

"சரி... சரி... நீ சொன்ன மாதிரி நல்லவிதமா பேசி தொலைக்கிறேன்... நீ கோபப்படாதே..." என்று முத்துபேச்சி சமாதானமாகப் போக... அதில் முகம் மலர்ந்தாள் நித்யா...

அவளது சந்தோசத்தைப் பார்த்தபடி முத்துபேச்சி, "உனக்காக நான் என்னோட இயல்பை தொலைத்து யாரோ

மாதிரி நடிக்க வேண்டியிருக்கு... எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு நித்தி..."

தோழியின் மனவருத்தம் நித்யாவிற்குப் புரியத்தான் செய்தது...

"சாரிடி முத்து... ஆனா நீ பேசுறதை வச்சு உன்னை யாரும் கேவலமா பார்த்தா என்னால தாங்க முடியாதுடி... ப்ளீஸ் புரிஞ்சுக்கோ..."

நித்யாவின் மனம் தெரியுமாதலால் அவள் அமைதியாக இருந்தாள்... இருவரும் பேசிக் கொண்டே வகுப்பறைக்கு வந்துவிட்டனர்...

முதல் நாள் வகுப்புச் சுவாரஸ்யமாகச் சென்றது இருவருக்கும்... மதிய நேர உணவு இடைவெளியில் மீண்டும் விஜய்யை சந்தித்தாள் முத்துபேச்சி... அவனைக் கண்டும் காணாதவாறு அவள் இருக்க, நித்யா தான் அவனைக் கண்டதும் அவளின் கையைச் சுரண்டினாள்...

"முத்து... அங்கே பாரேன்... காலையில் ராகிங் பண்ணினானே... அவன் அங்கே தான் இருக்கான்..."

"ஆமா... அவனைப் பார்த்து எனக்கு என்னவாகப் போகுது...?" என்று சலிப்பாய் கூறிய முத்துபேச்சி நித்யா கொண்டு வந்திருந்த பிரியாணியை ஒரு கை பார்த்து கொண்டிருந்தாள்...

"ஆனாலும் அவன் செம ஹேண்ட்சம்டி முத்து..." என்ற நித்யாவின் விழிகள் விஜய்யை ஆர்வமாய்ப் பார்த்து வைத்தது...

"நித்தி... ராங் ரூட்ல போற மாதிரியிருக்கு... நீ எக்குத்தப்பா யாரையாவது பார்த்த உடனே நான் ஐயா கிட்ட போட்டு கொடுத்துடுவேன்... நான் உன் கூடப் படிக்க வர்றதே உன்னைக் கண்காணிக்கத் தான்... அதை நல்லா நினைவில் வச்சுக்கோ..." என்று அவள் தோழியை எச்சரித்தாள்...

அதில் நித்யா ஜாக்கிரதை உணர்வு அடைந்தவளாய் தனது விழிகளை மிகவும் சிரமப்பட்டு விஜய்யிடம் இருந்து பிரித்தெடுத்தாள்...

சற்றுத் தள்ளியிருந்த விஜய்யும் அவர்களைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... ஆனால் அவன் பார்த்தது நித்யாவை அல்ல... முத்துபேச்சியைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது கை அடிவாங்கிய தனது கன்னத்தைத் தடவி கொண்டது வன்மத்துடன்...

'என்னைக்காவது என் கிட்ட மாட்டாமலா போயிருவ... அன்னைக்கு இருக்குடி உனக்கு...' என்று மனதில் கறுவி கொண்டான் அவன்...

அதற்கான சந்தர்ப்பம் அவனுக்குச் சீக்கிரமே கிடைத்தது... கல்லூரி கால் பந்தாட்டத்தின் பயற்சியாளராக விஜய் தான் நியமிக்கப்பட்டு இருந்தான்... ஏனெனில் இளங்கலையில் இருந்து அங்குத் தான் அவன் பயிலுகிறான்... ஐந்து ஆண்டுகளாக அவன் இந்தக் கல்லூரிக்கு கால் பந்தாட்டத்தில் பல வெற்றிக் கோப்பைகளை வாங்கிக் குவித்திருக்கிறான்... அதனால் அவனுக்குப் பகுதி நேர வேலை வாய்ப்பாகக் கல்லூரி நிர்வாகம் அதை ஏற்பாடு செய்திருந்தது...

ஆண்கள், பெண்கள் இருவருக்குமே அவன் தான் பயிற்சி அளித்தான்... அங்குத் தான் முத்துபேச்சி அவனிடம் வசமாக மாட்டி கொண்டாள்... நித்யாவிற்கு விளையாட்டு பிடிக்காததால் இதில் எல்லாம் அவள் சேரவில்லை... வகுப்பு முடிந்ததும் நேரே வீட்டிற்குச் சென்றுவிட்டாள்...

முதல் நாள் பயிற்சியிலேயே அவனது உதாசீனம் அவளுக்குப் புரிந்து போனது... நன்றாக விளையாடிய அவளைச் சரியாக விளையாடவில்லை என்று கூறி தண்டனையாக அந்தப் பெரிய விளையாட்டு மைதானத்தை இருபது தடவை சுற்றி வர சொன்னான்...

அவள் பல்லை கடித்துக் கொண்டு அவனை முறைத்து பார்த்தாள்... அவனோ அவளைக் கண்டு கொள்ளாது

மற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் துவங்கினான்...

வேறுவழியில்லாது அவள் மைதானத்தைச் சுற்றி ஓடத் துவங்கினாள்... அவளது மனம் அவனைக் கண்டபடி வசைப்பாடி கொண்டிருந்தது... அப்படி ஓடி வரும் போது தான் அவனது இருசக்கர வாகனம் அவளது கண்ணில் பட, சத்தம் செய்யாது அதன் டயரில் இருந்த காற்றை இறக்கி விட்டு விட்டு ஒன்றும் தெரியாதவள் போல் தனது ஓட்டத்தைத் தொடர்ந்தாள்...

பயிற்சி முடிந்து கிளம்பும் போது தான் விஜய் கவனித்தான் டயரில் காற்று இல்லாததை...

"நல்லா தானே இருந்தது..." என்று தனக்குத் தானே பேசியபடி அவன் கீழே குனிந்து பார்க்க...

"நல்லா தான் இருந்தது... ஆனா நான் இதை வச்சு குத்தி கிழிச்சிட்டேனே..." என்று தனது கையிலிருந்த சிறு பேனா கத்தியை அவனிடத்தில் காட்டி ஆட்டியவள் எகத்தாளமாய்ச் சிரிக்க...

"ஏய்... இது உன் வேலை தானா...?" என்று கோபமாய்க் கேட்டபடி அவன் அவளை அடிக்க வர...

அவளோ சிரித்தபடி அவன் கையில் அகப்படாது ஓட துவங்கினாள்... அவனும் விடாப்பிடியாய் அவள் பின்னே தொடர்ந்து ஓடியவன் நாலே எட்டில் அவளைப் பிடித்து விட்டான்...

"உன்னைக் கொல்லாம விட மாட்டேன்டி..." என்று கூறிக் கொண்டே அவளைத் தன்புறம் திருப்பினான் வேகமாய்...

அவன் திருப்பிய வேகத்தில் அவளது வலக்கையில் இருந்த அந்தச் சிறு கத்தி அவளது இடது கையின் மேற்புறத்தில் லேசாகக் கீறிவிட்டது...

"ஷ்... ஆ..." என்று அவள் வலியில் கத்த...

அந்தச் சிறு கீறலில் துளிர்த்த இரத்தத்தைக் கண்டு விஜய் திகைத்து போனவனாய் தனது பிடியை தளர்த்தினான்...

அவன் இயல்பில் முரடன் அல்லவே... அதனால் இரத்தத்தைக் கண்டதும் சற்று பயந்து தான் போனான்...

அவனது பிடி தளர்ந்ததும் அவனிடம் இருந்து தப்பி ஓடியவள், "தம்பி... உனக்குத் தில்லு பத்தாது... அதனால் தினமும் ஐந்து கிலோ தில்லு சாப்பிட்டுத் தைரியத்தை வளர்த்துக்கோ என்ன... இது இந்த அக்காவோட அன்பான வேண்டுகோள்..." என்று கூறிக் கொண்டே அவனைப் பார்த்துப் பழிப்பு காட்டியபடி கேலியாய் சிரித்தவள் சிட்டாகப் பறந்து சென்றாள்...

அவளது பேச்சை கேட்டு திகைத்து நின்றவன் முகத்தில் அவனையும் அறியாது புன்னகையின் சாயல்...

"ரௌடி ரங்கம்மா தான்..." என்று முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து கிளம்பினான் பொடி நடையாக...

நாட்கள் அது பாட்டிற்கு இனிமையாக நகர்ந்து சென்றது... விஜய்க்கும், முத்துபேச்சிக்கும் இடையில் இருந்த மோதல் அப்படியே தான் இருந்தது... கால் பந்தாட்ட பயிற்சியின் போது அவன் என்ன தண்டனை கொடுத்தாலும் அதை அவள் கண்டு கொள்வதே இல்லை... அவள் முகத்தைச் சுளித்தாலோ, இல்லை கோபம் கொண்டு திட்டினாலோ அது அவன் வெற்றிப் பெற்றது போலாகிவிடும் என்று எண்ணி அமைதியாக அவன் கொடுக்கும் தண்டனையை ஏற்பவள், வீட்டிற்குக் கிளம்பும் முன் அன்று போல் அவனுக்குத் தக்க பதிலடியை திருப்பிக் கொடுத்துவிட்டே கிளம்பி செல்வாள்...

விவேக் நடித்த ஒரு திரைப்படத்தில் டாக்டர் மாத்ருபூதம் தனது பெயரை ஒவ்வொன்றாக மாற்றி வைத்துக் கொண்டு அதற்கு விவேக் சொல்லப் போகும் 'ரைமிங்' பெயருக்காக ஆவலோடு காத்திருப்பாரே... அது போல் விஜய்யும் இப்போது எல்லாம் 'இன்று முத்துபேச்சி என்ன குறும்பு செய்து அவனை வம்பிழுக்கப் போகிறாள்' என்று தெரிய அதிக ஆர்வமாய் இருந்தான்...

தன்னைக் கை நீட்டி அடித்த ஒரு பெண்ணிடம் தனக்கு ஏன் இப்படிப்பட்ட ஆர்வம் தோன்றுகிறது என்பதைப் பற்றி அவன் யோசிக்கவே இல்லை...

அன்று அந்தப் பெரிய அறையில் தேர்வு நடைப்பெற்றுக் கொண்டிருந்தது... எல்லா மாணவர்களும் அமைதியாகத் தேர்வு எழுதி கொண்டிருந்தனர்... அவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒரு மாணவியின் நாற்காலியின் கீழே துண்டு காகிதம் ஒன்று கிடப்பதை கண்டு அதை எடுத்து பார்க்க, அதில் அந்தப் பாட தேர்வுக்கான விடைகள் நுணுக்கி நுணுக்கி சிறிதாக எழுதப்பட்டு இருந்தது...

"வெளியில் போ..." என்று அவர் அவளிடம் கடுமையாகச் சொல்ல...

"சார்... எனக்கு எதுவும் தெரியாது... நான் இதை எடுத்துட்டு வரலை..." என்று அழுது விடுவது போல் அவள் கூற...

"தப்பு செஞ்சவங்க என்னைக்குத் தப்பை ஒத்துக்கிட்டு இருக்காங்க..." என்று கோபமாய் மொழிந்தவர் அந்த மாணவியை மீண்டும் வெளியில் போகச் சொல்ல...

"சார்..." என்றபடி முத்துபேச்சி நாற்காலியில் இருந்து எழுந்தாள்...

"அவன் தான் காப்பி அடிச்சது..." என்று அந்த மாணவிக்குப் பின்புறம் அமர்ந்திருந்த மாணவனை அவள் சுட்டிக்காட்டினாள்...

"நீ பார்த்தியா...?" என்று அந்த ஆசிரியர் அவளிடத்தில் கேட்க...

"ஆமா சார்... இப்போ கூடச் செக் பண்ணுங்க... அவன் கிட்ட பிட் பேப்பர் இருக்கும்..." என்று முத்துபேச்சி சொல்ல...

அந்த ஆசிரியர் மாணவனைப் பரிசோதனை செய்ததில் அவனிடத்தில் நிறையத் துண்டு காகிதங்கள் இருப்பதைக்

கண்டு அவனைத் தேர்வு எழுத விடாமல் வெளியில் துரத்தினார்...

அந்தப் பெண் முத்துபேச்சிக்கு நன்றியுரைத்து விட்டுத் தேர்வு எழுத துவங்கினாள்... முத்துபேச்சியும் தனது தேர்வை தொடர்ந்தாள்...

தேர்வு எழுதி முடித்து வந்த முத்துபேச்சியை அந்த மாணவன் கோபத்தோடு எதிர் கொண்டான்...

"எதுக்குடி என்னைக் காட்டி கொடுத்த...?"

"பிட் அடிக்கத் தைரியம் இருக்கிறவன் எதுக்கு அடுத்தவங்க மேல குற்றத்தை சுமத்தணும்... அதே தைரியத்தோடு அந்தக் குற்றத்தை ஒத்துக்கவும் செய்யணும்... அது செய்யத் துப்பில்லாத நீ என்னைக் கேள்வி கேட்கிறியா...?" என்று அவனை எதிர்த்துக் கேள்வி கேட்டாள் தைரியமாய்...

உடனிருந்த நித்யா தான் பயந்து போனாள்...

"முத்து... பேசாம வா..."

"நீ பேசாம இரு நித்தி..." என்று தோழியை அதட்டியவள் அவனைப் பார்த்து முறைக்க...

"உன்னை என்ன பண்றேன் பார்..." என்றபடி அவன் கையை ஓங்க...

ஓங்கிய அவனது கையை இடக்கை கொண்டு வளைத்து பிடித்த முத்துபேச்சி வலக்கையால் அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்...

"இன்னொரு தடவை என் முன்னாடி கையை நீட்டின, நீட்டிய உன் கையை உடைச்சு போடுவேன்..." என்று அவள் மிரட்ட...

"இருடி உன்னைக் கவனிச்சிக்கிறேன்..." என்று அவன் கூறிக் கொண்டே செல்ல...

"போடா தொடை நடுங்கி..." என்று அவனைப் பார்த்து கத்தியவள் நித்யாவை அழைத்துக் கொண்டு

கிளம்பினாள்...

அப்போது அவள் முன் வழி மறிப்பது போல் வந்து நின்ற விஜய்யை கண்டதும் மனதுக்குள் துணுக்குற்றவள், பின் அவனைக் கண்டு கொள்ளாது செல்ல துவங்கினாள்...

"கை நீட்டுறதை இன்னும் நீ விடவே இல்லையா..." என்று அவன் கேட்க...

அதில் அவனை ஏறிட்டுத் தீர்க்கமாய்ப் பார்த்தவள், "தப்பு செஞ்சா அடிப்பேன்..."

"ஓஹோ... அன்னைக்கு நான் என்னம்மா தப்பு செஞ்சேன்..." என்று தாடையைத் தடவியபடி கூர்மையாய் அவளைப் பார்த்தவாறு அவன் கேட்க...

"எங்க நித்தி கையைப் பிடிச்சு இழுத்தது தப்பு..."

அவள் கூறியதும் தான் அவனுக்கே அது புரிந்தது... தன்னிச்சை செயல் போல் அன்று நித்யாவை தடுத்து நிறுத்துவதற்காகத் தான் அவளது கையைப் பிடித்தது அவனது நினைவில் வந்தது... இரு பெண்களுடன் பிறந்ததாலோ என்னமோ அவன் தனது தவறை சட்டென்று ஏற்றுக் கொண்டான்...

நித்யா புறம் திரும்பி, "சாரி..." என்று அவன் சொல்ல...

அவன் தன்னிடம் பேசியதில் நித்யா சிறகில்லாமல் வானத்தில் பறந்தாள்... முத்துபேச்சியோ அவன் மன்னிப்பு கேட்டதைக் கண்டு அதிசயமாக அவனைப் பார்த்தாள்...

முத்துபேச்சி தன்னை உற்று பார்ப்பதை கண்டு அவள் புறம் திரும்பியவன், "ஆனா நீ அடிச்சதுக்கு உனக்கு மன்னிப்பே கிடையாதுடி..." என்று கோபத்துடன் சீற...

"ஆங்... இது போங்காட்டம்... பதிலுக்கு நீயும் தான் என்னை அடிச்ச... அது எந்தக் கணக்குல சேர்த்தியாம்... பதிலுக்குப் பதில் சரியா போச்சு... கூட்டி கழிச்சு பாரு எல்லாம் சரியா வரும்..."

அவள் பேசியதை கண்டு அவனது கோபம் சற்றுக் குறைந்தது... அவனது இதழோரம் துடித்தது அடக்கப்பட்ட புன்னகையில்...

"சிரிப்பு வந்தா சிரிச்சிடணும்... இப்படி அடக்கி வச்சா நோய் தான் வரும்..." என்று அவனைப் பார்த்து கேலி செய்தவள் அவன் கோபமாய்ப் பேச துவங்கும் முன் அங்கிருந்து ஓடி சென்றுவிட்டாள்...

"நித்தி... வாடி..." என்று வேறு கத்தி கொண்டே ஓடினாள்...

"அவள் சார்பா நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்..."

முத்துபேச்சி செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த விஜய்யிடம் நித்யா மன்னிப்பு கேட்க... அவனோ அவள் முகம் பாராது,

"பரவாயில்லை விடு... நான் செய்ததும் தவறு தான்..." என்றுவிட்டு தனது பாதையில் சென்றான்...

கம்பீரமாகச் செல்லும் அவனைத் தனது விழிகளால் பருகி இதயத்தில் பத்திரமாகச் சேமித்து வைத்து கொண்டாள் அவள்... தோழி அருகில் இல்லாத தைரியம் வேறு சுதந்திரமாய் அவனை ரசிக்கச் செய்தது... மனதில் காதல் புகுந்தால் கள்ளத்தனமும் புகுந்துவிடும் போலும்... அதனால் அவளது காதலை முத்துபேச்சிக்குத் தெரியாமல் மறைத்து வைத்தாள்...

படிப்பு, விளையாட்டு மட்டுமில்லாது தனது அருமையான குரல் வளத்தால் கல்லூரியில் பல இளம்பெண்களின் தூக்கத்தினைக் கெடுத்துக் கொண்டிருந்தான் விஜய்... கல்லூரியில் நாயகன் அந்தஸ்தோடு வலம் வந்து கொண்டு இருந்தவனிடம் நித்யாவின் மனமும் மயங்கத் துவங்கியது...

எல்லோரையும் வசியம் செய்யும் அவனின் மனமோ அந்தக் குறும்புக்காரியிடம் நிலை கொண்டிருந்தது...

'என்ன பொண்ணுடா இவள்...!' என்று தனக்குள் சிரித்துக் கொண்டவன் தனது வேலையைக் கவனிக்கலானான்...

****

அன்று மிரட்டிவிட்டு சென்ற மாணவன் சொன்னது போல் முத்துபேச்சியை நன்றாகக் கவனித்து விட்டான்... எந்த நிர்வாகத்திடம் அவன் காப்பி அடித்ததை முத்துபேச்சி போட்டு கொடுத்தாளோ அதே நிர்வாகத்திடம் அவன் அவளை வேறு மாதிரி போட்டுக் கொடுத்தான்...

அவளுக்குப் பதினைந்து வயதாக இருக்கும் போது அங்குச் சாலையோரமாய் இருந்த சிறு குடிசை ஒன்றில் தான் குமாரி, அவள், பாண்டியன் மூவரும் வசித்து வந்தனர்... ஒரு நாள் இரவு அங்கு வந்த காவல்துறையினர் அவளையும், அவளது அன்னையையும் விபச்சார வழக்கில் கைது செய்து கொண்டு போய் விட்டனர்... பாண்டியனை திருட்டு வழக்கில்...

அன்று எந்த வழக்கும் கிடைக்காத காரணத்தால் அவர்களது பொறியில் அப்பாவி குடிசைவாசிகள் வசமாகச் சிக்கிக் கொண்டனர்... பெண்களை விபச்சார வழக்கில் கைது செய்தவர்கள், ஆண்களைத் திருட்டு வழக்கில் கைது செய்தனர்...

முத்துபேச்சி பதினைந்து வயது பெண் ஆதலால் அவள் சிறுமி என்று அவளைத் தனித்து அமர வைத்திருந்தனர்... இப்படிப் பொய் வழக்கு போடும் காவல்துறையினர் மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது... கோபத்தில் மூக்கு விடைக்க அவள் அமர்ந்திருந்தாள்...

அங்கு வந்த ஒரு பெண் காவலதிகாரி அவளைக் கண்டு இரக்கம் கொண்டவராய், "பாப்பா... நீ மட்டும் தப்பிச்சு போயிரு... இந்தக் கும்பல்ல உன்னை யாரும் கண்டுபிடிக்க முடியாது..." என்று சொல்ல...

கயவர்கள் கையில் இந்த அப்பாவி இளங்குருத்துச் சிக்கிவிடக் கூடாதே என்று தாய்மையின் தவிப்போடு அவர்

கூறினார்...

"எனக்கு ஒரு ஃபோன் பண்ணணும்... உங்க ஃபோனை கொடுக்கறீங்களா...?"

"யாருக்குப் பாப்பா பேச போற...?"

"எங்க ஐயாவுக்கு..."

"உங்க ஐயா பேர் என்ன...?"

செல்வநாதன் பெயரை சொன்னதும் அந்த அதிகாரியின் முகத்தில் பயம் கலந்த மரியாதை தோன்றியது... உடனே தனது அலைப்பேசியை எடுத்து அவளிடம் நீட்டினார்... அதில் இருந்து செல்வநாதனுக்கு அவள் அழைத்துப் பேசினாள்... அவரும் தான் உடனே அங்கு வருவதாகக் கூறினார்...

ஆனால் அவர் வருவதற்கு முன்னர் அங்கிருந்த பத்திரிக்கையாளர்கள் அவர்களை எல்லாம் புகைப்படம் எடுத்துவிட்டனர்... திடுமென நடந்த இந்த நிகழ்வில் முத்துபேச்சியால் தனது முகத்தினை மறைக்க இயலாது போனது...

அடுத்த அரைமணி நேரத்தில் அங்கு விரைந்து வந்த செல்வநாதன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி எல்லோரையும் விடுவித்தார்...

"இதுக்குத் தான் சொன்னேன் முத்து... இப்படி ரோட்டோரமா வசிக்காதீங்கன்னு..." என்று அவர் அவளைப் பார்த்து கடிய...

"இதுக்கு நாங்க காரணம் இல்லையே ஐயா... அரசாங்கம் தானே காரணம்..."

சுளீரென்று தாக்கிய அவளது வார்த்தையில் அவர் அப்படியே திகைத்துப் போனார்... அப்போது அவரது கட்சி தான் ஆட்சியில் இருந்தது...

அவரது தலை தானாகக் குனிந்தது... ஆனாலும் அவளை அப்படியே விட்டு விட மனமில்லாது உடனடியாக அந்தப் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் அவர்கள் மூவரையும் இடம்பெயரச் செய்தார்... இப்போதைக்கு அவரால் அதை மட்டும் தான் செய்ய முடியும்...

இப்போது அவள் குடியிருக்கும் வீடு தான் அது... அன்றிலிருந்து அவளுக்குக் காவல்துறை என்றாலே மிகுந்த வெறுப்பு...

அன்று செய்தித்தாளில் வந்த அந்தப் புகைப்படத்தைத் தான் இப்போது அந்த மாணவன் கல்லூரி நிர்வாகத்திடம் கொடுத்தது... முத்துபேச்சியைப் பழிவாங்குவதற்காக அவளின் வரலாறை அந்தளவுக்கு அலசி ஆராய்ந்து இருக்கிறான் அந்தச் சண்டாளன்... அதை வைத்து இப்போது அவளுக்கு எதிராகத் தகராறு செய்தான் அவன்...

"விபச்சாரம் செய்யும் அவளே இந்தக் கல்லூரியில் படிக்கும் போது என்னை ஏன் நீங்க டிஸ்மிஸ் பண்ணினீங்க..." என்று அவன் வீரமுழக்கமிட...

விசயம் மாணவர்களிடையே காட்டுத்தீ போல் பரவ ஆரம்பித்தது... எல்லோரும் முத்துபேச்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்க ஆரம்பித்தனர்...

நிர்வாகம் அவளைக் கல்லூரியில் இருந்து நீக்கும் நடவடிக்கையை எடுத்தது...

இந்த விசயத்தால் முத்துபேச்சி மனதிற்குள் மிகுந்த அவமானப்பட்டு மனவுளைச்சலுக்கு ஆளானாள்... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாது தனக்கான நியாயத்திற்காக நிர்வாகத்திடம் போராடினாள்...

நான்கு வருடங்கள் கழித்து இந்த விசயம் இப்படிப் பூதாகரம் எடுக்கும் என்று அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை... இப்போது முத்துபேச்சிக்கு பத்தொன்பது வயது... மிகவும் தாமதமாகப் பள்ளிக்கு சென்றதால்

பத்தொன்பது வயதில் தான் அவள் கல்லூரியில் அடியெடுத்து வைத்திருந்தாள்...

விஜய்க்கு விசயம் தெரிந்ததும் அவனும் அவளைக் கண்டு மற்ற மாணவர்களுடன் சேர்ந்து கேலியாகச் சிரித்தான்... அருவருப்புடன் பார்த்தான்...

யாரெல்லாமோ அவளைக் கேலி பேசிய போது அமைதியாகச் சென்றவளுக்கு அவனது கேலியான பார்வையினைத் தாங்க இயலாது போனது... போயும் போயும் அவன் முன் இப்படி ஒரு தலைகுனிவை ஏற்படுத்தி விட்டாயே என்று அவளது மனம் கடவுளை நித்தமும் நிந்தித்தது...

முதன்முறையாகத் தன் பிறப்பை நினைத்து வருந்தினாள் அவள்... இனி காலம் முழுவதும் இப்படித்தான் வருந்த போகிறோம் என்பதை அந்நேரம் அவள் அறியவில்லை...

கோபத்தில் மூக்கு விடைக்க, முகம் சிவக்க அவன் முன் வந்து நின்றவள், "என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்... என்னைய மாதிரி ரோட்டோரமா படுத்திருந்து, ஒருவேளை சாப்பாட்டுக்கு கஷ்டப்பட்டு வாழ்ந்திருந்தேன்னா என்னோட கஷ்டம் உனக்குப் புரியும்... அன்னைக்கு என்ன நடந்ததுன்னு தெரியாம நீ பேசாதே..." என்று அன்றைய நிகழ்வை அவனிடத்தில் அப்படியே சொல்லியவள்,

"இனியாவது நீ என்னைப் பார்க்கும் பார்வையை மாத்திக்கோ..." என்று படபடத்தவள் அவனது பதிலை எதிர்பாராது அங்கிருந்து சென்றுவிட்டாள்...

ஆனால் அவளது பேச்சு தாக்கிய தாக்கத்தில் இருந்து அவனால் தான் மீள முடியவில்லை... திகைத்து போய் அமர்ந்திருந்தான்... ஆனால் அவனது மனது அவள் கூறிய வார்த்தைகளை அசை போட்டுக் கொண்டிருந்தது மீண்டும் மீண்டும்...

அந்தச் சமயம் பார்த்து டெல்லி சென்றிருந்த செல்வநாதனுக்குச் சென்னை திரும்பிய பின்னர்த் தான் இந்த விசயம் தெரிந்தது... உடனே அங்கு விரைந்து வந்தவர் நேரிடையாய் நிர்வாகத்திடம் பேசி இந்தப் பிரச்சினையை ஓயச் செய்தார்... ஏனெனில் அன்று காவல்நிலையத்தில் அவள் மீது எந்த எஃப்ஐஆர் உம் போடப்படவில்லை... அது ஒன்றை ஆதாரமாகக் கொண்டு மீண்டும் அவளைக் கல்லூரியில் சேர வழிவகைச் செய்தார்...

சாதித்துக் காட்ட வேண்டும் என்ற வெறி ஏற்கெனவே முத்துபேச்சியின் இரத்தத்தில் ஊறியிருப்பதால் தான் அவமானப்பட்ட அதே கல்லூரியில் தான் சாதித்துக் காட்ட வேண்டும் என்கிற வெறி அவளுள் விருட்சமாய் விஸ்வரூபம் எடுத்தது... முன்னை விடப் படிப்பில் மிகுந்த கவனத்தைச் செலுத்த துவங்கினாள்...

****

அன்று வகுப்பு ஆரம்பிப்பதற்கு இன்னமும் நேரமிருந்தது... அதனால் விஜய் தனது நண்பர்களுடன் மரத்தடியில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தான்... அப்போது அவனது நண்பன் ஒருவன்,

"டேய் மச்சி... சூப்பர் பிகர் வருதுடா..." என்று சொல்ல...

"எங்கேடா...?" என்று எல்லோரும் ஆர்வமாய்த் திரும்பி பார்க்க...

விஜய்யும் அந்த வயதிற்கே உரிய ஆர்வத்துடன் திரும்பி பார்த்தான்... அங்கே முத்துபேச்சியும், நித்யாவும் வந்து கொண்டிருந்தனர்...

"பொண்ணுன்னா இது தான்டா பொண்ணு... என்ன அடக்கம்... என்ன அடக்கம்... மினிஸ்டர் பொண்ணு வேற... இவளை வளைச்சு போட்டா நம்ம லெவலே வேறடா... பணத்துக்குப் பணம்... அழகுக்கு அழகு..." என்று அந்த நண்பன் நித்யாவை கண்டு ஜொள்ளு விட...

விஜய்யின் கண்களோ முத்துபேச்சியை இமைக்காது பார்த்தது...

முரட்டு ஜீன்சும், பருத்தி சட்டையுமாய், ஆண் பிள்ளை போன்று முடி வெட்டி கொண்டு வித்தியாசமாக இருந்தவளின் தோற்றம் அவனது மனதில் ஆழப்பதிந்தது...

எந்தப் பெண்ணிடத்திலும் இல்லாத ஏதோ ஒன்று அவளிடத்தில் இருப்பதை அந்த ஆண்மகன் உணர்ந்து கொண்டான்...

அவனைச் சுற்றி வந்த பெண்களைக் கண்டு கொள்ளாது, தன்னைக் கண்டு கொள்ளாது இருந்த முத்துபேச்சியைத் தான் சுற்றி சுற்றி வந்து வம்பிழுத்தது எதனால் என்பதை அந்தக் கணம் அவன் இனம் கண்டு கொண்டான்...

எந்தப் பெண்ணிடமும் மயங்காதவன் அவளிடத்தில் விரும்பியே மயக்கம் கொண்டான்...!!!

அவளைப் பற்றி முற்றிலும் அறிந்து, தெரிந்து தான் அவன் அவளிடத்தில் காதல் கொண்டான்... காதல் நோய் அந்தக் கம்பீரமான ஆண்மகனின் மனவுறுதியையும் பரிசோதித்துப் பார்த்து, அவன் மனதை பலமாய் அசைத்து, இறுதியில் அவனைக் காதலில் விழச் செய்து அதில் வெற்றியும் கண்டது...!!!

வாசம் நேசமாகும்...!!!

"ஃகோல்..." என்று ஆர்ப்பரித்துக் கத்தியபடி விளையாட்டு மைதானத்தைச் சுற்றி ஓடினாள் முத்துபேச்சி...

எதிரணியினரிடம் இருந்து பந்தை மிகவும் லாவகமாகச் சாமர்த்தியமாய்த் தட்டி பறித்த முத்துபேச்சி அதே லாவகத்துடன் பந்தை வலைக்குள் குறி பார்த்து அடித்துத் தனது அணியினருக்கு வெற்றி வாய்ப்பை பெற்றுத் தந்துவிட்டாள்...

மகிழ்ச்சியில் இரு கைகளின் கட்டை விரலை உயர்த்தியபடி காற்று போல் அங்குமிங்கும் வேகமாய் ஓடியவளின் பின்னே அவளது அணியினரும் ஆர்ப்பரித்துக் கொண்டு ஓடினர்... இதை எல்லாம் சற்று தள்ளி நின்று கொண்டு புன்னகை முகமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்...

அவளது வெற்றியை கண்டு அவனது முகத்திலும் பெருமிதப் புன்னகை...

அவன் அருகில் வந்ததும் அவனைப் பார்த்து முத்துபேச்சி 'எப்படி...?' என்பது போல் கண்களால் கேட்டு சிரிக்க, அவனும் தனது வலக்கை கட்டை விரலை உயர்த்திக் காட்டி 'சூப்பர்' என்று சத்தமில்லாமல் சொன்னவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

அதற்கு மேல் அவள் அவனைக் கண்டு கொள்ளாதபடி அவளது அணியினர் அவளைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆர்ப்பரிக்க, அவளும் அவர்களின் குதூகலத்தில் அவனை மறந்து போய் அவர்களோடு ஒன்றி போனாள்...

அதைப் பார்த்துக் கொண்டே அவன் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான்...

முத்துபேச்சியின் நட்பை பெற அவள் பின்னே தான் அலைந்தது அவன் நினைவில் எழுந்தது... ஒரு முறையா, இரண்டு முறையா எத்தனை முறை அவனை அவள் பின்னால் அலையவிட்டாள் அவனது செல்ல ராட்சசி...

அவ்வளவு சீக்கிரத்தில் அவள் அவனிடத்தில் நட்பு கரம் நீட்டி விடவில்லை...

முத்துபேச்சியை அவன் காதலிப்பதை உணர்ந்தது முதல் அவன் அவளிடத்தில் பல முறை பேச முயன்றான்... அதுவும் நித்யா இல்லாத சமயம் பார்த்து... ஆனால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அமைவது மிகவும் குறைவு... அதனால் தான் கால்பந்தாட்ட பயிற்சி நேரத்தை அவன் தேர்ந்தெடுத்தான் அவளுடன் தனியே பேசுவதற்காக...

முதலில் அவள் மீது தனக்கு எந்தக் கோபமும் இல்லை என்பதை அவளுக்குத் தண்டனை கொடுக்காது இருந்து ஜாடைமாடையாக உணர்த்தினான்... அவளோ அவனது மனநிலையைக் கண்டு கொள்ளாது விளையாடுவதில் தீவிரமாக இருந்தாள்...

அவன் பயிற்சியளிக்க, அவள் விளையாட என்று நாட்கள் தான் சென்றதே ஒழிய அவள் அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை... அப்படி ஒருத்தன் இருப்பதையே மறந்தவளாய் அவள் எப்போதும் போல் இயல்பாய் இருந்தாள்...

கடைசியில் பொறுத்து பொறுத்து பார்த்தவன் வேறுவழியின்றி அன்று பயிற்சி முடிந்து வீட்டுக்கு கிளம்பியவளை தடுத்து நிறுத்தினான்... அதில் அவள் நின்றாலும் அவனைப் பார்க்காது வேறு எங்கோ பார்த்தபடி அலட்சியமாய் நின்றிருந்தாள்...

அந்த நிலையிலும் அவளது தெனாவெட்டான தோற்றத்தை அவன் மனம் ரசிக்கத்தான் செய்தது... அவனைக் கண்டதும் வெட்கம் கொள்ளும் பெண்களை விட, நிமிர்வாய் நிற்கும் இந்தப் பெண்ணை அவனுக்கு மிகவும் பிடித்தது...

"பிரெண்ட்ஸ்..." என்று கூறி புன்னகைத்தான் தனது கையை நீட்டியபடி...

நீட்டிய அவனது கையை ஒரு நொடி பார்த்தவள் பின் ஒன்றும் பேசாது அங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டாள்...

அதில் எல்லாம் அவன் மனம் தளராமல் விக்கிரமாதித்தன் போன்று விடாது முயற்சி செய்தான்... அவளும் விடாது அவனைக் கண்டு கொள்ளாது சென்றாள்...

அன்றும் எப்போதும் போல் அவளைத் தடுத்து நிறுத்தியவன், "மத்த பசங்களோடு சேர்ந்துக்கிட்டு உன்னை நான் கேலி பண்ணினது தப்பு தான்... நான் தான் தப்பை உணர்ந்து உன் கிட்ட மன்னிப்பு கேட்கிறேன்ல... அப்புறமும் எதுக்கு இன்னமும் கோபமாயிருக்க...?"

"ஆனா நீ பேசியது உண்மை தானே..." என்று கோபத்தில் முகம் சிவக்க கேட்டவளை கண்டு அவன் அமைதியானான்...

தான் செய்த தவறின் அளவு அவனுக்குப் புரியத்தான் செய்தது...

"சாரி..." என்று அவன் முணுமுணுத்தான்...

"நீ எதுக்கு மன்னிப்பு கேட்கிற...? அது எனக்குத் தேவையில்லை... நான் இப்படித்தான்... என்னோட வாழ்க்கை முறையும் இது தான்... இன்னைக்குப் பிரெண்ட்டுன்னு சொல்லி என் கிட்ட பழகிட்டு நாளைக்கு என்னைய நீ கேவலமா பேச மாட்டேன்னு என்ன நிச்சயம்...? நீ உன் உயரத்தில் இருந்துக்கோ... நான் என்னுடைய தராதரத்தில் கீழே இருந்திருக்கிறேன்..."

"ச்சேச்சே... இனிமேல் அப்படி எல்லாம் பேச மாட்டேன்... என்னை நீ நம்பலாம்... ஐ பிராமிஸ் யூ..." என்று அவன் சத்தியம் செய்து தன்னை அவளுக்கு உணர்த்திட நினைத்தான்...

அதில் அவனை உறுத்து விழித்துப் பார்த்தவளின் முகம் மெல்ல மெல்ல புன்னகையில் மலர்ந்தது... பின்பு வெடிச்சிரிப்பு சிரித்தவள்,

"என்ன பயந்துட்டியா...?" என்று கேட்க...

அவள் பேசிய பேச்சை கேட்டு உண்மையில் அவன் பயந்து தான் போனான்... மனம் நிறைய அவள் மீதான காதலை சுமந்து கொண்டு இருப்பவன் அதை அவளிடத்தில் சட்டென்று சொல்ல தைரியம் இல்லாதவனாய் அவளிடத்தில் தோழமை வேண்டி நின்றான்... இப்போது அந்தத் தோழமை நிலையே கேள்விக்குறியாக மாறிவிடும் அபாயம் இருப்பதை உணர்ந்து மிகவும் பயந்து தான் போனான், எங்கே அவளை இழந்து விடுவோமோ என்று...

ஆனால் அவள் சிரித்தவுடன் அந்தப் பயம் அவனிடத்தில் இல்லாது போனது...

"என் மேல் உனக்கு ஒண்ணும் கோபம் இல்லையே...?"

"கோபம் இல்லைன்னு எல்லாம் சொல்ல மாட்டேன்... இருந்துச்சு... என்னை மாதிரியான ஆட்களை உங்களை மாதிரியான ஆட்கள் கேவலமா பார்க்கிறதை பார்த்து எப்போதும் வரும் கோபம் வந்துச்சு... ஆனா என்னைய பத்தி தெரிஞ்சு இருந்தும் இத்தனை நாள் என்னோட பிரெண்ட்ஷிப்க்காக என் பின்னாடி நீ அலைஞ்சியே அப்பவே உன் மேலுள்ள கோபம் போயிருச்சு... நீ கொஞ்சமே கொஞ்சம் நல்லவன்னு புரிஞ்சிக்கிட்டேன்..."

கண்களைச் சுருக்கி கொண்டு கையால் அபிநயம் பிடித்தபடி பேசியவளின் அழகை அவனது மனம் ரசித்தது... அவளது வார்த்தைகள் அவனுள் ஜில்லென்று சுகமாய்ப் பரவியது... தன்னை அவள் நன்றாகப் புரிந்து வைத்திருப்பது கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"நான் சொன்ன மாதிரி என்னைப் பார்க்கிற உன் பார்வையை நீ மாத்திக்கிட்டப்பவே நான் உன்னை என் பிரெண்ட்டா ஏத்துக்கிட்டேன்..."

"அடிப்பாவி... பிரெண்ட்டா ஏத்துக்கிட்டு தான் இத்தனை நாள் என்னைச் சுத்தலில் விட்டியா...?"

"நீ பிரெண்ட்ஷிப்பில் எந்தளவுக்கு ஸ்ட்ராங்கா இருக்கிறன்னு நான் பார்க்க வேண்டாமா...? அதுக்குத் தான்..." என்றாள் அவள் கெத்தாக...

'நான் காதலிலும் ஸ்ட்ராங் தான்...' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவன் அவளிடம், "அதைப் போகப் போக நீயே புரிஞ்சுப்ப..." என்றான்...

"இப்பவே புரிஞ்சிக்கிட்டேன்... டோன்ட் வொர்ரி..."

அன்றிலிருந்து இருவரின் நட்பும் மெல்ல மெல்ல வளர்ந்தது... கல்லூரி நேரத்தில் எந்நேரமும் நித்யா அவளுடன் இருப்பதால் கால்பந்தாட்ட பயிற்சியின் போது தான் அவன் அவளிடத்தில் அதிகம் பேசுவது...

அது போல் தான் விஜய் மீதான நித்யாவின் காதலும் மெதுவாய் வளர்ந்தது...

"சாமி..." என்று யாரோ கத்தி அழைத்ததில் விஜய் தனது பழைய நினைவுகளில் இருந்து விடுபட்டான்...

"சாமி... என்ன உட்கார்ந்துட்டே கனவு காண்கிறியா...?" என்று இடுப்பில் இரு கைகளை வைத்துக் கொண்டு அவனை உற்று பார்த்தபடி கேட்டாள் முத்துபேச்சி...

"என்ன சொல்லி என்னைக் கூப்பிட்ட...?" என்று அவன் அவசரமாய்க் கேட்க...

விளையாடி முடித்துவிட்டு அவனைத் தேடி வந்தவள் அவன் ஏதோ நினைவில் அமர்ந்திருப்பதைக் கண்டு அவன் முன் தன் கையை ஆட்டினாள்... அவனோ தன் கனவுலகில் இருந்து இப்போதைக்கு வெளிவருவதாய்த் தெரியவில்லை... அதனால் தான் அவள் அவனைச் 'சாமி' என்று அழைத்தாள்...

"சாமின்னு கூப்பிட்டேன்..."

"என் பேரு சாமி இல்லை... என் பேர் விஜய்..." என்றான் கோபமாய்...

அதைக் கேட்டு அவள் சிரித்தபடி அவனுக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்தவள், "இதுக்குத் தானா இந்தக் கோபம்...? உயர்ந்த சாதியில் பிறந்த நீ என்னை மாதிரியான ஆட்களோடு கௌரவம் பார்க்காம பழகிறியே அதுவே பெரிய விசயம்... நீ உண்மையில் அந்தக் கடவுள் மாதிரி தான் எனக்கு... ஏன்னா கடவுள் தானே சாதி, அந்தஸ்து எல்லாம் பார்க்காது எல்லாத்துக்கும் எல்லாக் கொடுக்கும்..."

'காதலும் சாதி, அந்தஸ்து பார்க்காது...' மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டான் அவன்...

"இந்தச் சாமி எனக்குப் பிடிக்கலை..."

"ஆனா எனக்குப் பிடிச்சியிருக்கே..." என்று அவள் சொல்ல, அவன் ஒன்றும் பேசாது விட்டு விட்டான்...

திடுமென முத்துபேச்சி எதையோ நினைத்து சிரிக்க ஆரம்பித்தாள்...

"சொன்னா நானும் சிரிப்பேன்ல..."

"இந்தப் பாண்டி இருக்கான்ல..."

அவள் பாண்டியனை பற்றிச் சொன்னதும் அவனது மனதில் மெல்லியதாய் பொறாமை எழுந்தது... அவளுக்கு அவன் நல்ல தோழன் என்று இவனுக்கு நன்கு தெரியும்... இருந்தாலும் அவள் பேச்சுக்கு பேச்சு பாண்டியன் என்று கூறுவதை அவன் அறவே வெறுத்தான்...

தன்னை விட அந்தப் பாண்டியன் எப்படி அவளிடத்தில் அத்தனை நெருக்கமாய் இருக்கலாம் என்று பாண்டியன் மீது கோபம் வந்தது...

"அவன் மழைக்குக் கூட ஸ்கூல் பக்கம் ஒதுங்கியது இல்லைன்னு உனக்குத் தான் தெரியுமே... ஆனா நான் அவனை அப்படியே விடலை... தமிழ்ல எழுத, படிக்கச் சொல்லிக் கொடுத்தேன்... அவனும் தமிழ் நல்லா எழுத, படிக்கக் கத்துக்கிட்டான்... ஆனா பாரு சாமி, இந்த

இங்கிலீஷ் அவன் கிட்ட படாதபாடு படுது... அது எழுத வரலைன்னு விட்டுட்டான்... ஆனா பேசுறதுக்கு முயற்சி பண்றான்... அப்படித்தான் நேத்து எங்க ஏரியா பொண்ணு கிட்ட போய் 'ஐ லவ் யூ' சொல்றேன்னு 'ஐ ஹேட் யூ' ன்னு சொல்லி அந்தப் பொண்ணு அவன் கன்னத்தில் அடிச்சு ஏக களேபரமா ஆகிபோச்சு..." என்று சொன்னவள் அதை நினைத்து மேலும் மேலும் சிரிக்கத் துவங்கினாள்...

தாமரை பூ போல் முகம் மலர சிரிப்பவளை அவன் ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்... மனம் நிறையக் காதலை வைத்துக் கொண்டு இப்படி நட்புடன் பழகுவது என்பது முதலில் அவனுக்குக் கஷ்டமாகத் தான் இருந்தது... ஆனால் எந்த விகல்பமும் இல்லாது வெள்ளை மனதுடன் பழகும் அவளின் தூய்மையான அன்பின் முன் அவனது காதல் மனது சற்று அடக்கித்தான் வாசிக்கிறது... இப்போது எல்லாம் தோழமை உணர்வே அவனிடத்தில் மேலோங்கி இருக்கிறது...

இந்த உணர்வால் தான் பிற்காலத்தில் அவனை விட்டு அவள் பிரிந்தாலும் அவளிடம் எப்போதும் போல் அன்பு பாராட்ட அவனால் முடிந்ததோ என்னவோ...

சிரித்து முடித்தவள் அவனை வாஞ்சையுடன் பார்த்தபடி, "உன் கிட்டேயும், பாண்டி கிட்டேயும் தான் நான் என் இயல்பு மாறாம இருக்கேன் சாமி... நீயும் பாண்டி மாதிரி தான், என்னைய ஒண்ணும் சொல்றது இல்லை..." என்றாள் நன்றியோடு...

முதலில் எல்லாம் அவனிடம் நாகரீகமாகப் பேசுவதற்குச் சற்றுத் திணறித்தான் போனாள் அவள்... சிறிது நேரம் பழகுபவர்களிடம் அவள் நடிக்கலாம்... ஆனால் நட்பாகப் பல மணி நேரம் பேசுபவனிடம் அவளால் அப்படித் தொடர்ந்து நடிக்க முடியவில்லை...

அவளது சிரமத்தை கண்டோ என்னவோ அவன் அவளைத் தன்னிடம் அவளது இயல்பு மாறாமல் இருக்கச் சொல்லிவிட்டான்...

"நீ பேச்சின்னு தெரிஞ்சி தானே பிரெண்ட்டா பழகிறேன்..." என்று அவன் நமட்டு சிரிப்போடு கூற...

"சாமி... பேச்சின்னு சொல்லாதே..." என்று அவள் சிணுங்கினாள்...

"எனக்கு நீ எப்போதும் பேச்சி தான்..." என்றவன் வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமாக, அவளும் விடைப்பெற்று கிளம்பினாள்...

செல்லும் அவளைப் பார்த்தபடி தனது வண்டியை கிளப்பியவன் மனதில் பெருத்த யோசனை... அவனுக்குப் படிப்பு முடிய இன்னும் சில மாதங்களே இருந்தது... அதற்குள் அவன் அவளிடத்தில் எப்படித் தன் காதலை சொல்லப் போகிறான் என்று தெரியவில்லை...

****

மறுநாள் தனியாய் மரத்தடியில் அமர்ந்து கொண்டு கையில் இருந்த பாட புத்தகத்தில் கண்களைப் பதித்து இருந்த முத்துபேச்சி டென்சனில் நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தாள்... அதைக் கண்டு அவள் அருகில் வந்தமர்ந்தான் விஜய்...

"இது என்ன கெட்டப் பழக்கம்..." என்று அவள் கையை அவன் தட்டி விட...

"பொட்டப் புள்ளைய தொட்டு பேசாதே..." என்று கண்டிப்புடன் ஒலித்தது அவளது குரல்...

என்ன தான் ஆண், பெண் என்று பாராமல் நட்பு பாராட்டினாலும் அவள் தனக்கு என்று சில எல்லைகளை வகுத்துக் கொண்டு எல்லோரிடமும் அளவோடு தான் பழகினாள்... அவளிடம் நட்புடன் பழகும் விஜய்க்கு கூட அந்த எல்லையைத் தாண்ட அனுமதி அளித்தது இல்லை...

"சாரி..." என்று தனது இரு கரம் கொண்டு காதுகளைப் பிடித்தபடி உடனே மன்னிப்பு கேட்டவனைக் கண்டு அவள் சமாதானமாய்ப் புன்னகைத்தாள்...

"தப்பா நினைச்சுக்காதே சாமி... எனக்கு இது எல்லாம் பிடிக்காது..."

"உன்னைப் பத்தி தான் எனக்குத் தெரியுமே..." என்றவன்,

"என்ன டென்சனா படிச்சிட்டு இருக்க... சாப்பிட போகலையா...?"

"ம்ஹூம்... இல்லை... லன்ச் பிரேக் முடிஞ்சு டெஸ்ட் இருக்கு..." புத்தகத்தில் கண்ணைப் பதித்தபடி அவள் கூற...

"அதுக்கு நீ ஏன் இவ்வளவு டென்சனா இருக்க...? உன் பிரெண்ட் டென்சனா இருந்தாலும் ஓகேன்னு சொல்லலாம்..."

ஏனெனில் நித்யாவின் அறிவை பற்றி அவனுக்கு நன்கு தெரியும்...

"சாமி... நித்தி பத்தி பேசாதே... எனக்குக் கோபம் வரும்..."

"உண்மைய சொன்னா கோபம் வருதா உனக்கு..." என்று நொடித்துக் கொண்டவன்,

"எங்கே அவளைக் காணோம்... உன் கூடவே ஒட்டுப்புல் போல் சுத்திக்கிட்டு இருப்பாளே..."

"இன்னைக்கு அவள் லீவு..."

"டெஸ்ட்ன்னு சொன்னவுடனே லீவு எடுத்துட்டாளே... செம ப்ளான்..." என்று அவன் நித்யாவை கிண்டலடித்து முத்துபேச்சியிடம் முறைப்பை பரிசாகப் பெற்றுக் கொண்டான்...

"சரி அவளை விடு... உன் டென்சனை பத்தி சொல்லு..."

"இது புரிய மாட்டேங்குது..." என்று பாட புத்தகத்தை அவனிடம் நீட்டினாள்...

"கைவசம் ஒரு வாத்தியாரை வச்சிக்கிட்டு நீ இப்படிக் கவலைப்படலாமா...?" என்றபடி அந்தப் புத்தகத்தை

வாங்கியவன் எளிய முறையில் அதை அவளுக்கு விளக்கி சொல்லலானான்...

"இவ்வளவு தானா..." என்று அவள் அதிசயிக்க...

"இவ்வளவே தான்..."

அப்போது அவனது நண்பர்கள் அவனை உணவு உண்ண அழைத்தனர்...

"நீ சாப்பிட போ..." என்று அவன் சொல்ல...

"ம்..." என்றவள் பாட புத்தகத்தில் கவனமானாள்...

அவன் நண்பர்களோடு சேர்ந்து உண்டு விட்டு கிளம்பும் போது மறக்காமல் அவளுக்கு உணவு வாங்கிக் கொண்டு கிளம்பினான்... அவளைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்...

"சாப்பிட்டு விட்டு படி..." என்று அவன் அதை அவளிடம் நீட்ட...

எந்தவித பந்தாவும் பண்ணாமல் நன்றியோடு வாங்கிக் கொண்டவள் அதை வேக வேகமாய் உண்ண துவங்கினாள்... அவளின் பசியின் அளவை அறிந்தவனின் மனம் கனிந்தது அவள் பால்...

வேகமாய்ச் சாப்பிட்டதில் அவளுக்குப் புரையேற அன்னிச்சை செயலாய் அவன் அவளது தலையில் தட்டியவன், தண்ணீர் பாட்டிலை அவளிடத்தில் நீட்டினான்... அவன் தன்னைத் தொட்டுத் தலையில் தட்டியதில் அவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"பொட்டப் புள்ளைய தொட்டு பேசாதே... அடுத்து இதைத் தானே சொல்லப் போற... அதை நானே சொல்லிட்டேன்... முதல்ல நீ தண்ணியைக் குடி..." என்று அவன் சிறு எரிச்சலுடன் சொல்ல...

அதில் அவளுக்குச் சிரிப்பு வந்தது... தண்ணியைக் குடித்து முடித்தவள் அவனைப் பார்த்து,

"ஆபத்துக்குப் பாவமில்லை..." என்றாள் அவனைச் சமாதானப்படுத்தும் விதமாக...

"பெண்கள் உங்களுக்கு ஏற்ற மாதிரி எல்லாத்தையும் மாத்திக்கிறீங்க... ஆண்கள் நாங்க தான் என்ன பண்ணணும், பண்ணக் கூடாதுன்னு தெரியாம உங்க கிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கிறோம்..." என்று அவன் வேண்டுமென்றே சலித்துக் கொண்டான்...

"அது உங்க தலையெழுத்து..." என்று சிரித்தபடி சொன்னவள் உணவில் கவனமானாள்...

அவனும் ரிலாக்சாக ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான்... அதைக் கண்டு அவள் முறைத்து பார்த்தாள்... அவளது முறைப்பை கண்டு கெஞ்சுதலுடன் அவளைப் பார்த்தவன்,

"நீ சொன்னதுக்காகக் கொஞ்சம் கொஞ்சமா குறைச்சிட்டு வர்றேன்... இப்ப எல்லாம் ஒரு நாளைக்கு மூணே மூணு சிகரெட் தான்..."

ஒரு நாளைக்கு ஆறேழு சிகரெட் பிடிக்கும் அவன் இந்தளவுக்குக் குறைத்திருப்பது அவளுக்கும் தெரியும்... அதிகம் பிடித்தாலும், குறைத்துப் பிடித்தாலும் உடலுக்குக் கேடு தருவதை ஏன் பிடிக்க வேண்டும்...? என்பதே அவளது எண்ணம்...

"ஆறோ, மூணோ கெடுதல் எல்லாம் ஒண்ணும் தான்... முதல்ல இந்தக் கர்மத்தை தூக்கி போடு..." கறார் குரலில் கூறியவளை எதிர்த்து பேச அவனால் முடியுமா...? சத்தமில்லாமல் அவள் சொன்னதைச் செய்தான்...

மீண்டும் அவள் படிக்க ஆரம்பிக்க அவன் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்... மதிய உணவு இடைவெளி முடிய இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தது... அதுவரை அவளுடன் இருக்க விரும்பினான் அவன்...

"சாமி... அந்தப் பிங்க் சுடிதார் அழகாயிருக்கு இல்ல..."

திடுமென ஒலித்த முத்துபேச்சியின் குரலில் அவன் தூக்கிவாரி போட அவளைத் திரும்பி பார்த்தான்... ஏனெனில் அவன் அந்தப் பெண்ணைத் தான் இவ்வளவு நேரம் சைட் அடித்துக் கொண்டிருந்தான்... காதல் வேறு, சைட் வேறு என்பது அவனது எண்ணம் மட்டுமல்ல... பெரும்பாலான ஆண்களின் எண்ணமும் அது தான்... அதைத் தான் அவன் செய்து கொண்டிருந்தான்...

"என்ன அழகா இருக்காளா...? நான் வேணா உனக்காக அவள் கிட்ட போய்ப் பேசி பார்க்கவா...?" கண்சிமிட்டி கேட்டவளை கண்டு அவன் திகைத்துப் போய்ப் பார்த்தான்...

"அவள் கிட்ட நீ எதுக்கு எனக்காகப் பேச போகணும்...?"

"நீ இவ்வளவு நேரம் அவளைத் தானே சைட் அடிச்சிக்கிட்டு இருந்த..." என்று கேலியாய் கேட்டாள் அவள்...

"அது வந்து..." உண்மையை ஒத்துக் கொள்ள முடியாமல் அவன் திணற...

"இதுக்கு ஏன் இவ்வளவு தயங்கிற... உன்னை மாதிரி பசங்க சைட் அடிக்காம இருந்தா தான் தப்பு... ஹார்மோன்ல ஏதோ ப்ராப்ளம்ன்னு அர்த்தம்... நீ ஜமாய் ராஜா..." என்று அவள் க்ரீன் சிக்னல் கொடுத்தாள்...

புரிதலான அவளது பேச்சில் அந்தக் கணம் அவன் தனது சைட் அடிக்கும் பழக்கத்தை முற்றிலும் மாற்றிக் கொண்டான்...

"அவ்விடம் எப்படியோ...? நீ யாரையாவது சைட் அடிச்சியிருக்கியா...?"

"எங்கே சாமி... என்னோட வெள்ளத்தோலை பார்த்து ஆசையா கிட்ட வாறவன் கூட என் பேச்சை கேட்டு பயந்து போய் ஓடி போயிர்றான்... நான் என்ன செய்ய...?" என்றாள் வேண்டுமென்றே சோகமாய்...

'ஏன் என்னைப் பார்த்தா உனக்குச் சைட்டடிக்கத் தோணலையா...?' என்று கேட்க அவனது மனம் துடித்தது...

"எனக்கு இந்தக் காதல், கல்யாணத்தில் எல்லாம் விருப்பம் இல்லை சாமி... நான் அரசியலில் பெரியாளா வந்து என்னை மாதிரி மக்களுக்கு நிறைய உதவிகள் செய்யணும்... அவங்களோட வாழ்க்கையை மாத்தி அமைக்கணும்... இப்படி நிறைய இருக்கு... இப்படிச் சைட் அடிக்கிறது, கல்யாணம் பண்ணி குழந்தை குட்டி பெத்துக்கிறது எல்லாம் எனக்குச் செட்டாகாது சாமி..."

அவள் சொன்னதைக் கேட்டு அவன் வாய் வரை வந்த வார்த்தைகள் வந்த வேகத்தில் உள்ளே சென்றுவிட்டது...

அவளது இலட்சியம், குறிக்கோள் எல்லாம் தான் அவனுக்குத் தெரியுமே... அதனால் அமைதியாய் இருந்தான்... அதற்குள் வகுப்பு ஆரம்பிப்பதற்காக மணியடித்தது...

"சரி சாமி... நான் கிளம்பறேன்..." என்று விடைப்பெற்று அவள் சென்றாள்... அவனும் தனது வகுப்பிற்குச் சென்றான்...

****

அன்று விடுமுறை தினம் என்பதால் திரைப்படம் பார்ப்பதற்காகத் திரையரங்கிற்கு வந்திருந்தான் விஜய்... அங்கு எதிர்பாரா விதமாக முத்துபேச்சியைச் சந்தித்தான்...

"லீவு நாள் ஒரு நாள் நிம்மதியா இருக்கலாம்ன்னு நினைச்சேன்... இங்கேயும் வந்துட்டியா..." அவளிடம் அவன் சலித்துக் கொண்டாலும் அவளைப் பார்த்ததில் அவனது கண்கள் மகிழ்ச்சியில் மின்னியது...

"இப்படிச் சொன்னதுக்காகவே இன்னைக்கு உன்னைய படம் பார்க்க விடக் கூடாதே..." என்று அவள் குறும்புக் குரலில் கூற...

அதைக் கேட்டு அவன் சிரித்தான்... அப்போது அங்குப் படத்திற்கான சீட்டுக்களை வாங்கிக் கொண்டு வந்தான் பாண்டியன்...

"புள்ள... வா போகலாம்..." என்று அவன் அவளை அழைக்க...

உரிமையான அவனது பேச்சில் விஜய்யின் கண்கள் முத்துபேச்சியையும், அவனையும் கூர்மையாய் அளவெடுத்தது... மனமோ பொறாமையில் வெந்தது அவனது உரிமையான பேச்சு கேட்டு...

"கொஞ்சம் இரு..." என்று அவள் சொல்ல...

"நான் போறேன்..." என்றவன் தனது அபிமானத் தலைவரை திரையில் பார்க்கும் ஆசையில் திரையரங்கிற்குள் வேகமாய் ஓடினான்...

"யாரவன்...?"

பாண்டியன் போவதை பார்த்துக் கொண்டிருந்த முத்துபேச்சி விஜய்யின் அழுத்தமான குரலில் கவனம் கலைந்து அவனைப் பார்த்தாள்... அவனது குரலில் இருந்த பேதம் அவளை யோசிக்க வைத்தது...

"ஏன் அப்படிக் கேட்கிற...?"

"முதல்ல நான் கேட்டதுக்குப் பதில் சொல்..." கண்டிப்பும், கறாருமாய் ஒலித்த அவனது குரலில் மறுபேச்சு பேசாது அவள் பாண்டியனை பற்றிக் கூறினாள்...

'ஓ... இவன் தான் பாண்டியனா...' விஜய்யின் மனதில் எல்லையில்லா நிம்மதி ஏற்பட்டது...

"நம்ம பாண்டியா... இதை நீ முதல்லேயே சொல்லியிருக்கக் கூடாது... சரி வா வா, அவரைப் போய்ப் பார்க்கலாம்..." என்று சந்தோசமாய் அவளை அவன் அழைக்க...

முதலில் தோன்றிய குரல் பேதம் அவளுக்குப் பொய்யோ என்று நினைக்கத் தோன்றியது அவனது இந்த ஆர்வத்தில்... அதன் பிறகு விஜய் பாண்டியனிடன் நன்கு பாசப்பயிரை வளர்த்து விட்டே கிளம்பி சென்றான்...

தன்னவளுக்கு நண்பன் என்றால் அவனுக்கும் நண்பன் அல்லவா...

நாட்கள் அது பாட்டிற்குச் சென்று கொண்டிருந்தது... விஜய் தனது காதலை முத்துபேச்சியிடம் சொல்லாது தவித்தான்... நட்பு என்ற எல்லை கோட்டை தாண்டாமல் பழகும் அவளிடத்தில் அவனாலும் தானாக அந்த எல்லையைத் தாண்ட முடியவில்லை...

அது போல் தான் நித்யாவிற்கும்... விஜய் மீதான அவளது காதல் விருட்சமாய் வளர்ந்து கொண்டு போனது... அவன் முத்துபேச்சிக்கு நல்ல நண்பன் என்று அவளுக்குத் தெரியும்... பேசாமல் தனது காதலை முத்துபேச்சியிடம் கூறி அவனிடத்தில் அவளைத் தூது அனுப்புவோமா என்று கூட யோசித்தாள்...

ஏற்கெனவே மிரட்டும் தொனியில் கூறியிருந்த முத்துபேச்சியின் வார்த்தைகள் அவளை வாயடைக்கச் செய்தது... தனது காதலை அவளிடம் சொல்லி அவள் அப்படியே தனது தந்தையிடம் போட்டு கொடுத்துவிட்டால்...? அதற்குப் பயந்தே அமைதியாக இருந்தாள் நித்யா...

அதே சமயம் விஜய்யிடம் சென்று தனது காதலை சொல்லும் தைரியமும் அவளுக்கு இல்லை... மௌனக்காதலில் தினமும் கரைந்து போனாள் அவள்...

அன்று கல்லூரியில் கலை விழா கொண்டாட்டம் களை கட்டியது... ஒரு வாரமாக அது நடைப்பெற்றுக் கொண்டிருந்தது...

அதில் முத்துபேச்சி 'நாக்குமுக்க'ப் பாடலுக்குக் குத்து நடனம் ஆட அதில் அரங்கமே அவளுடன் சேர்ந்து ஆடி அதிர்ந்தது... இதை எல்லாம் சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்...

அவள் என்ன செய்தாலும் ரசித்துப் பார்க்கும் மனநிலை அவனிடத்தில் இருந்தது... அந்தளவுக்கு அவள் மீதான காதல் அவனை ஆட்டுவித்தது...

அடுத்து விஜய் பாடுவதற்காக எழுந்தான்... அவன் மேடைக்குப் போவதை கண்டு அங்கு முன்னால் நின்றிருந்த முத்துபேச்சி,

"சாமி... நீ கலக்கு..." என்று கத்த...

அவன் புன்னகையுடன் அவளைப் பார்த்தபடி மைக்கை கையில் வாங்கினான்... முத்துபேச்சியின் அவ்வளவு நேர ஆர்ப்பாட்டம் எல்லாம் அப்படியே அடங்கிப் போனது அடுத்து அவன் பாடிய பாடலில்...

"நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி கண்ணம்மா
தன்னையே சகியென்று சரணமெய்தினேன்"

தன்னைப் பார்த்துக் கொண்டு பாடியவனின் பார்வையில் அத்தனை நேசம் நிரம்பி வழிந்ததை உணர்ந்து அவளது முகம் திகைப்பை வெளிப்படுத்தியது...

'சாமி... என்னைய காதலிக்குதா...? இது எப்படிச் சாத்தியம்...?' அவளது உடல் நடுங்கியது... நிற்க முடியாமல் அவளது கால்கள் துவள அங்கிருந்த சுவற்றின் மீது சாய்ந்து நின்றவள் அவனைத் தான் இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...

"பொன்னையே நிகர்த்த மேனி மின்னை ய, நிகர்த்த சாயற்
பின்னை ய!-நித்ய கன்னியே! கண்ணம்மா!"

சற்று முன் ஆடிய குத்து நடனத்திற்கு ஏற்றவாறு ஜீன்ஸ் பேண்ட் மீது கைலியை கட்டி கொண்டு ஆண்மகன் போன்றதொரு தோற்றத்தில் நின்று கொண்டிருந்தவளின் அந்த வித்தியாசமான அழகு கூட அவனை மயக்கச் செய்வதாய்...

"மார னம்புக ளென்மீது வாரி வாரி வீச நீ-கண்
பாரா யோ? வந்து சேரா யோ? கண்ணம்மா?"

அவன் பாடிய பாவத்தில், உருகிய உருகலில், அவன் கண்ணில் வழிந்த காதலில் பாவையவளின் மனமும் லேசாகத் தடம் புரளத்தான் செய்தது...

அவளது முகத்தில் தெரிந்த மாற்றத்தில், கண்களில் எட்டிப்பார்த்த காதலில் அவனுள் சாதித்துவிட்ட கர்வம் எழுந்தது...

அதே சமயம் முத்துபேச்சி அருகில் இருந்த நித்யா அவனது பாடலில் தனது மனதினை பறி கொடுத்தவளாய் நின்றிருந்தாள்... தோழிகள் இருவரின் நெஞ்சங்களையும் அந்தக் கள்வன் அழகாய் களவாடிச் சென்றிருந்தான்...

அன்று நேரமாகி விட்டதால் அவனால் தன் காதலை அவளிடத்தில் சொல்ல முடியாமல் போய்விட்டது...

மறுநாள் அவளிடத்தில் தன் காதலை சொல்லிவிடும் முடிவுடன் அவளை விளையாட்டு மைதானத்தில் சந்தித்தான் அவன்...

இதுநாள் வரை அவனைக் கண்டால் இரப்பர் பந்து போல் உற்சாகத்தில் துள்ளி குதிப்பவள் இன்று அவனை நேர்பார்வையாய் சந்திக்க முடியாமல் வேறு எங்கோ பார்த்தபடி நின்றிருந்தாள்... நேற்று அவன் பாடிய பாடல் அவள் மனதில் சிறிது சலனத்தை ஏற்படுத்திவிட்டது... ஆனால் இந்தச் சலனம் நல்லதிற்கா இல்லை கெட்டதிற்கா என்று அவளுக்குத் தெரியவில்லை...

அதிலும் இந்தக் காதல் எல்லாம் அவளுக்குச் சரி வருமா என்று அவளுக்குத் தெரியவில்லை... அதைப் பற்றி அவள் இன்னமும் யோசிக்கவில்லை...

அப்போது பலத்த காற்று வீச அதில் தூசி பறந்து வந்து அவளது கண்ணில் விழுந்தது...

"ஷ்..." என்றபடி அவள் தன் கண்ணைக் கசக்க...

"கண்ணைக் கசக்காதே..." என்றபடி அவள் அருகில் வந்தவன் அவளின் இமைகளைப் பிரித்தெடுத்து மென்மையாக ஊதி விட்டான்...

கண்ணில் விழுந்த தூசி போன பின்பும் இருவரும் தங்களது பார்வையை விலக்கி கொள்ளவில்லை...

இருவரது பார்வையும் ஒன்றை ஒன்று கவ்வி கொண்டிருந்தது...

அவன் தன்வசம் இழந்து அவளது விழி மீது இதழ் பதித்தான்... அதில் சுரணை அடைந்தவள் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டபடி,

"பொட்டப் புள்ளைய தொடாதே..." என்று கண்டிக்க...

அதில் அவனது முகம் சுருங்கி போனது... நேற்று அவளது கண்ணில் வழிந்த காதல் பொய்யா... இல்லை இப்போது தன்னை இமைக்காது பார்த்து பார்வையால் கபளீகரம் செய்தாளே அது பொய்யா... இல்லை இப்போது கண்டிக்கும் இவள் பொய்யா... எது பொய், எது மெய் என்று தெரியாது குழம்பி நின்றான் அவன்...

ஆனாலும் உடனே தன்னைச் சுதாரித்துக் கொண்டான் அவன்... என்னவானாலும் சரி இன்று தனது காதலை அவளிடத்தில் கூறாமல் தான் போகப் போவதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டான்...

"நான் உன்னைக் காதலிக்கிறேன் கண்ணம்மா..." என்றான் அவன் தன் வார்த்தையில், முகத்தில், மனதில் அவள் மீதான அத்தனை காதலை தேக்கி வைத்து...

அவன் திடுமெனக் காதலை சொன்னதில் திகைத்து விழித்தவளை கண்டு அவனது முகம் மிருதுவானது...

"ஐ லவ் யூ ஹனி..." என்றான் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு...

இப்போது அவள் அவனது கையைத் தட்டி விடவில்லை... மாறாக அவனை இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...

"ஏதாவது பதில் சொல்லு ஹனி... பிடிச்சியிருக்கு... பிடிக்கலை... இப்படி ஏதாவது... நாளையில் இருந்து நமக்கு ஸ்டடி ஹாலிடே விடப் போறாங்க... அதுக்கு அப்புறம் நீயும், நானும் பார்ப்பதே அரிதாகி போயிரும்... எக்ஸாம் முடிஞ்சு நானும் டெல்லிக்கு வேலைக்குப் போயிருவேன்... உன்

பதிலை தெரிஞ்சிக்கிட்டா நான் நிம்மதியா டெல்லிக்கு போவேன்..."

"என்ன சாமி சொல்லச் சொல்ற... உன்னை எனக்குப் பிடிக்கும் தான்... ஆனா இந்தக் காதல்...? எனக்கு அது தெரியலையே சாமி..."

அவளுக்குப் பெருத்த குழப்பமாய் இருந்தது காதலை நினைத்து... அவளது குழப்பம் புரிந்தவனாய்,

"உன் படிப்பு முடிய இன்னும் மூணு வருசம் இருக்கு... அதுவரை யோசிக்க டைம் எடுத்துக்கோ... நல்லா யோசிச்சு நல்ல பதிலா சொல்லு... உனக்காக ஒருத்தன் காத்துக்கிட்டு இருக்கான் என்பதை மட்டும் நீ மறந்துவிடாதே..."

"உன்னைப் போய் நான் மறப்பேனா சாமி..."

'இதற்குப் பெயர் தானடி காதல், என் கண்ணம்மா...' மனதுக்குள் சொல்லியவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"இந்த மூணு வருசமும் நான் உன்னைத் தொந்திரவு பண்ண மாட்டேன்... நீ படிப்பு முடிச்சதும் நான் உன்னைப் பார்க்க வருவேன்... அப்போ நீ உன் பதிலை சொல்லணும்..."

"இடையில் ஒரு ஃபோன் கூடப் பண்ண மாட்டியா சாமி...?"

"ம்ஹூம்... இது உனக்கு மட்டும் இல்லை... என் காதலின் உறுதிக்கும் நான் வைக்கும் பரீட்சை..."

"உன் கூடப் பேசாம என்னால் இருக்க முடியாது..." என்று சிணுங்கியவளை கண்டு அவனுக்கு நிறைவாக இருந்தது... இன்னும் கொஞ்சம் யோசித்தால் அவளது மனம் அவளுக்கே புரியும் என்று நினைத்தான் அவன்...

"இருந்து தான் ஆகணும்..." என்று கண்டிப்புடன் அவன் கூற...

"ம்... ம்..." என்று அவள் முனங்க...

"சரி நான் கிளம்பறேன்..." என்றவன்,

"கொஞ்சம் சிரிச்சிக்கிட்டே வழியனுப்பறது... மூணு வருசம் தாங்கணும் இல்லையா...?" என்று அவன் கேலி போல் சொன்னாலும் அதில் பெருமளவு ஏக்கம் இழையோடியது...

அவனது ஏக்கம் அவளது மனதினை எட்டியதோ என்னவோ அவனைப் பார்த்து மென்மையாய் புன்னகைத்தாள்...

"வா... இந்தச் சிரிச்ச முகத்தோடு ஒரு செல்ஃபி எடுத்துக்கலாம்..." என்றவன் அவள் அருகில் நெருங்கி நின்று இருவரையும் சேர்த்து தனது அலைப்பேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டான்...

என்றும் இல்லாத திருநாளாய் அவனது அருகாமையில் மனதில் தோன்றிய படபடப்புடன் முகம் எல்லாம் சிவந்து போய் அவள் நின்றிருந்த கோலம் அலைப்பேசியில் அழகாய் பதிவானது...

****

அன்று சென்றவன் தான் வருடம் மூன்றாகியும் அவளிடம் பேசவில்லை... நேரில் சந்திக்கவும் முயற்சிக்கவில்லை... சொன்னது போல் செயலிலும் இருந்து காட்டிவிட்டான்...

முத்துபேச்சி தான் அவனது நினைவில் அல்லும் பகலும் கரைந்தாள்... அந்த நினைவை காதல் என்று ஏற்றுக் கொள்ள அவளால் முடியவில்லை... அவளுக்கு விஜய்யை பிடிக்கும் தான்... ஆனால் அது காதல் தானா என்று அவள் ஆராய விரும்பவில்லை...

அவளது மூன்று வருடப் படிப்பு முடிந்தது... இனியாவது விஜய் அவளைக் காண வருவானா என்று அவளது மனம் அவனுக்காகப் பரபரப்புடன் காத்திருந்தது...

அந்த நேரம் தான் நித்யா விஜய்யை காதலிப்பது பற்றி அவளுக்குத் தெரிய வந்தது...

படிப்பு முடிந்ததும் செல்வநாதன் நித்யாவிற்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார்... இத்தனை நாள் பயத்தில் வாயை

மூடி கொண்டிருந்த நித்யா இப்போது தைரியம் வரப்பெற்றவளாய் தான் விஜய்யை காதலிப்பதை தந்தையிடம் கூற... அவரும் மகளின் காதலை பற்றி யோசிக்க ஆரம்பித்தார்...

அவர் ஒன்றும் காதலுக்கு எதிரி கிடையாது... அதனால் பையன் நல்லவனாக இருக்கும் பட்சத்தில் அவனுக்கு அவளைத் திருமணம் செய்து வைக்கிறேன் என்று அவர் உறுதி அளித்தார்... அதில் அவள் மிகவும் மகிழ்ந்து போனாள்... உடனே முத்துபேச்சிக்கு அழைத்து விசயத்தைக் கூறினாள்...

நித்யா விஜய்யை காதலிப்பதை அறிந்து முத்துபேச்சியின் நெஞ்சம் சுக்கு நூறாய் உடைந்து சிதறியது... அவளது இதயத்தை உயிரோடு பிடுங்கி எறிவதை போன்று ஒரு வலி ஏற்பட்டது அவளுள்...

முதன்முறையாய் காதலின் வலியை அவள் அனுபவித்தாள் அந்த நொடி... தன்னவன் மீதான காதலை அவள் உணர்ந்தாள் அந்தக் கணம்...

"ஐ லவ் யூ விஜூ..."

காற்றில் காதலை சொன்னவள் துக்கம் தாங்காது அழத் துவங்கினாள்...!!!

வாசம் நேசமாகும்...!!!

கல்லூரி விடுமுறை என்பதால் அந்த விளையாட்டு மைதானம் வெறிச்சோடி காணப்பட்டது... சொன்ன நேரத்திற்கு முன்பாக அங்கு வந்து காத்திருந்த முத்துபேச்சி ஆவலோடு தன்னவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்...

நித்யா விஜய்யை காதலிப்பதாய்ச் சொன்னதும் அவள் அழுகையில் கரைந்து துடித்த போது அவளது இந்த அழுகை தேவையில்லாத ஒன்று என்பது போல் அவளது அலைப்பேசி அழைத்தது...

விஜய் தான் அழைத்திருந்தான்... கடந்த மூன்று வருடங்களாக அவளை அழைக்காதவன், இவ்வளவு ஏன் ஒரு குறுஞ்செய்தி கூட அனுப்பாதவன் இப்போது அவளை அழைக்கிறான் என்றால்...?

அவனது அழைப்பில் அவளது அழுகை ஸ்விட்ச் போட்டார் போன்று அப்படியே நின்றது... அவசரமாகக் கண்ணீரை துடைத்துக் கொண்டு பரபரப்போடு தன்னவனின் அழைப்பை உயிர்ப்பித்ததோடு மட்டுமில்லாமல் தன்னையும் உயிர்ப்பித்துக் கொண்டாள்...

அவன் தன்னை மறக்கவில்லை என்பதே அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

"சாமி... எப்படியிருக்க...?" இவ்வளவு நேரம் அழுததாலோ என்னமோ அவளது குரல் தேம்பியது...

அதை அவன் உடனே இனம் கண்டு கொண்டான்...

"அழுதியா...?"

அவன் கேட்கும் இந்நேரம் கூட அவளது கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டு தான் இருந்தது... ஆனால் சற்று நேரத்திற்கு முன்பு வடிந்த வேதனை கண்ணீர் போல் இது இல்லை... இது சந்தோசத்தில் வழிந்த ஆனந்தக் கண்ணீர்...

"இல்லை சாமி... கொஞ்சம் சளி பிடிச்சியிருக்கு..."

"டாக்டர் கிட்ட போனியா...? மருந்து எடுத்தியா...?"

அவனது குரல் பதட்டத்துடன் ஒலித்தது... அவனது இந்த அக்கறை அவளது காயம் கொண்ட மனதிற்கு அத்தனை இதமாக இருந்தது...

"அந்தளவுக்குப் பெருசா இல்லை சாமி..." என்றவள்,

"நீ எப்படியிருக்கச் சாமி...?" என்றாள் மீண்டும்...

"அதை நான் சொல்றதை விட நீயே என்னைப் பார்த்து தெரிஞ்சுக்கோ..." என்று சிறுசிரிப்புடன் கூறியவன் பின் குரலை தழைத்துக் கொண்டு,

"கண்ணம்மா... நான் சொன்ன மூணு வருசம் முடிஞ்சிருச்சு... உன்னோட முடிவு என்னன்னு தெரிஞ்சுக்க ஆவலா இருக்கேன்..."

அதைக் கேட்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... தன்னவன் இந்த மூன்று வருடங்களில் அவளை மறந்து விடவில்லை... அவளின் நினைவில் தான் வாழ்ந்து இருக்கிறான்...

அவனது காதல் அவளைச் சுகமாகத் தாலாட்டியது... பிறந்ததில் இருந்து பெரிதாக அன்பும், அக்கறையையும் கண்டிராத அவளுக்குத் தன்னவனின் ஒட்டு மொத்த காதலும் தனக்கு மட்டுமே வேண்டும் என்கிற பேராசை பெரும் ஓசையாய் அவள் மனதில் ஆர்ப்பாட்டமாய் இரைந்தது...

அன்பில்லாமல் வாழும் அவளது வாழ்க்கையை முழுமையடையச் செய்யத் தன்னவனின் காதல் ஒன்றால் மட்டும் தான் முடியும் என்று உறுதியாக அவள் நம்பினாள்...

என்ன தான் நித்யா அவளது தோழியாக இருந்தாலும் தன்னவனை அவளுக்கு விட்டு கொடுக்க அவளுக்கு மனம் வரவில்லை... அதை விட அவனை எத்தனை பேர் காதலித்தாலும் அவன் காதலிப்பது தன்னை மட்டும்

தானே... அந்த எண்ணத்தில் அவளது மனம் அவனிடத்தில் உரிமையாய் உறவாடியது...

செல்வநாதனை பற்றிச் சொல்லவே வேண்டாம்... தானும், விஜய்யும் காதலிப்பது தெரிந்தால் நிச்சயம் தங்களைத் தான் சேர்த்து வைப்பார் என்பது அவளுக்குத் திட்டவட்டமாகத் தெரியும்... அப்படியே நித்யாவின் மனதை அவர் மாற்றிவிடுவார் என்றும் தெரியும்...

அதனால் இப்போது அவளது காதலை அவனிடத்தில் சொல்ல அவளுக்கு எந்தத் தடையும் இருப்பது போல் அவளுக்குத் தெரியவில்லை...

"கண்ணம்மா... நாம வழக்கமா சந்திக்கிற காலேஜ் கிரவுண்ட்ல சந்திக்கலாமா...?"

"ம்..." சந்தோசத்தில் அவளுக்குப் பேச்சு வரவில்லை...

அதன் பின் இதோ அவனுக்கு முன் கிளம்பி வந்து இங்கே அவனுக்காகக் காத்திருக்கிறாள்...

சொன்ன நேரத்திற்குச் சரியாக அங்கு வந்து சேர்ந்த விஜய்யை கண்டதும் மகிழ்ச்சியோடு எழுந்து நின்றாள் அவள்... கம்பீரமாக நடந்து வரும் அவனைக் கண்டு அவளது மனதில் மத்தாப்புப் பூத்தது... அடிவயிற்றில் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் ஒருசேர பறப்பது போல் ஒருவித இன்ப அவஸ்தை எழுந்தது...

மனதின் காதலை கண்களில் பிரதிபலித்தபடி அவனை இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள் அவள்...

முன்பை விட இப்போது நல்ல ஆளுமையுடன், கம்பீரமாக முழுமையான ஆண்மகனாய் தன்முன் வந்து நின்றவனைக் கண்டு மூச்சு விட மறந்து உறைநிலையில் சமைந்தாள் அவள்...

"ஹனி..." என்று அவள் கண் முன் தன் வலக்கையை ஆட்டி அவன் சிரிக்க...

அவனது புன்னகையில் அவளது இதயம் தாளம் தப்பியது... எத்தனையோ முறை அவன் அருகில் அவள் இருந்திருக்கிறாள் தான்... அப்போது எல்லாம் தோன்றாத உணர்வுகள் இப்போது ஆழிப்பேரலையாய் பிரவாகம் எடுத்து அவளைத் தாக்கியது...

"என்ன ப்ரீஸாகி நிற்கிற...?" மீண்டும் அவன் கேட்கவும் தான் அவளுக்கு நிகழ்காலம் உறைத்தது...

அவளையும் அறியாது அவளது முகத்தில் நாணப்பூக்கள் பூத்தது... அவளின் முகச்சிவப்பு, கண்களில் தெரிந்த தடுமாற்றம், அதையும் மீறி அதில் வழிந்த நேசம் எல்லாம் சொல்லாமல் சொல்லியது அவளது காதலை...

அதை உணர்ந்தவனுக்கோ அந்த ஆகாயத்தை வசப்படுத்தியது போன்று ஒரு பரவச உணர்வு...

"ஹனி... உட்காரேன்..." அங்கிருந்த கல்மேடையில் அவளை அமர வைத்தான்...

"நீயும் உட்காரு சாமி..." என்றபடி அவள் அமர்ந்தாள்...

அவள் அமர்ந்ததும் அவள் முன் வந்தவன் நிமிர்ந்து நின்றபடி காவல்துறை பாணியில் அவளுக்கு விறைப்பாய் வணக்கம் வைத்தான்... அதைக் கண்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறியது...அவளுக்குத் தான் காவல்துறை என்றாலே பிடிக்காதே...

"சாமி... நீ போலீஸ்க்காரன் ஆகிட்டியா...?" என்று சந்தேகத்துடன் கேட்க...

"எஸ் ஹனி... சாதாரணப் போலீஸ்க்காரன் இல்லை... ஐயா இப்போ ஐபிஎஸ் ஆக்கும்..." என்றான் பெருமையாய் மார் தட்டியபடி...

விஜய் காவல்துறையில் சேர்வான் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை... பொறியியல் படித்தவன் எதற்குக் காவல்துறையில் சேர்ந்தான் என்று அவளுக்குக்

குழப்பமாக இருந்தது... அதை அவனிடத்தில் அப்படியே கேட்கவும் செய்தாள்...

"உனக்காகத் தான்..." என்றான் அவன்...

அதைக் கேட்டு அவளது விழிகள் வியப்பில் விரிந்தது... அதில் அவன் விரும்பியே மூழ்கிப் போகத் துடித்தான்...

"எந்தப் போலீசால் நீ அவமானப்பட்டேன் ரொம்ப ஃபீல் பண்ணினியோ அதே போலீஸ் வேலையில் நான் சேர்ந்து உன்னை மரியாதையா நடத்தணும்ன்னு விருப்பப்பட்டேன்..."

அவன் சொன்னது கேட்டு அவளது விழிகள் கசிந்தது அவனது நேசத்தில்... தனக்காக யோசித்து யோசித்துச் செயல்படும் அவனைக் கண்டு அவளது உள்ளம் நெகிழ்ந்தது...

"டெல்லிக்கு வேலைக்குப் போனது சும்மா கண்துடைப்புக்கு தான்... சிவில் சர்வீஸ் எக்ஸாம் எழுதுவதற்குத் தான் அங்கே போனது... நினைச்ச மாதிரி வெறியோடு படிச்சு ஒரே வருசத்தில் ஐபிஎஸ் எக்ஸாம்ல பாஸ் பண்ணினேன்... இப்போ தான் ட்ரெயினிங் முடிஞ்சு போஸ்ட் போட்டிருக்காங்க..."
தனக்காக வெறிக் கொண்டு உழைத்த அவனது நேசம் கண்டு அவள் ஸ்தம்பித்துப் போனாள்...

"இது எல்லாம் உனக்காகத் தான் ஹனி... உனக்காக மட்டும் தான்..." என்றவன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு,

"இப்போ சொல்லு நீ என்னைக் காதலிக்கிறியா...?"

கண்களில் காதலையும், எதிர்பார்ப்பையும் தேக்கி வைத்துக் கொண்டு ஆர்வத்துடன் கேட்டவனை இமைக்காது பார்த்தவள் மனமோ பலவித உணர்வுகளில் சிக்கித் தவித்தது...

இங்கு வந்த போது அவனது தோளில் தலை சாய்த்து, அவனது கை கோர்த்து, அவனது முகம் பார்த்து ஆசையுடன்

தனது காதலை சொல்ல வேண்டும் என்று தோன்றிய எண்ணம் இப்போது சிறிது மட்டுப்பட்டது போல் தோன்றியது...

சமுதாயத்தில் உயர் பதவி வகிக்கப் போகும் அவனுக்குத் தன்னைப் போன்று ஒரு பெண் எப்படி மனைவியாக முடியும் என்று பெரும் குழப்பம் சூழ்ந்தது அவளுள்...

அவன் தனக்கு மரியாதை தர வேண்டும் என்பதற்காக இந்த வேலையில் சேர்ந்ததாய்ச் சொல்கிறான்... அவளைத் திருமணம் செய்வதால் அவனது மரியாதையை அவன் இழக்க வேண்டி வருமோ என்று அவளுக்கு அச்சமாக இருந்தது... தனக்கு மரியாதை கொடுக்க நினைக்கும் அவனின் மரியாதையைக் குலைக்க அவளால் முடியவில்லை...

இதே கல்லூரியில் விபச்சார வழக்கில் அவள் கைது செய்யப்பட்டதைச் சுட்டிக் காட்டி கேலி செய்யப்பட்டு அவமானப்பட்டது இப்போது அவளது நினைவில் நின்றது... நாளை தன்னுடன் வெளியில் செல்லும் போது அவனுக்கு இத்தகைய அவமானம் மிஞ்சி விடுமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது...

அவளை விட அவளுக்கு அவன் மிகவும் முக்கியமானவன் அல்லவா...

ஒருவேளை அவன் சாதாரண வேலையில் இருந்திருந்தால் கூட அவள் தன் காதலை சொல்லியிருப்பாள்... ஆனால் இப்போது அதைச் சொல்ல முடியாமல் தொண்டைக்குள் முள் சிக்கியது போல் பெரும் அவஸ்தையாக இருந்தது அவளுக்கு...

எந்தக் காரணத்துக்காக அவன் காவல்துறையில் சேர்ந்தானோ, அந்தக் காரணமே அவனது காதலுக்கு எதிரியாக மாறி போனதை அந்தக் கணம் அவன் அறியவில்லை...

அவளது மௌனம் அவனைப் பெரிதும் காயப்படுத்தியது...

"இன்னும் நீ யோசிக்கலையா...?" என்றவனது வார்த்தைகள் ஏமாற்றத்துடன் வெளிவந்தது...

அவனை ஏறிட்டு பார்த்தவளின் கண்களில் கண்ணீர் மல்கியது... அவனுக்குக் காட்டாதவாறு கண்ணீரை உள்ளிழுத்து கொண்டவள் மறுப்பாய் தலையசைத்தாள்...

"ஏன்...?"

சற்று முன் அவள் கண்ணில் வழிந்த நேசம் எங்கே போனது என்பது போல் அவளது முகம் மிகச் சாதாரணமாக இருந்தது...

"பிரெண்ட்ஷிப்புக்கு மேல என்னால் எதையும் யோசிக்க முடியவில்லை சாமி..." என்றாள் தன் மனதினை மறைத்துக் கொண்டு...

சத்தமில்லாது அவனது இதயத்தில் இடியை இறக்கினாள் அவனது ராட்சசி...

"பொய் சொல்லாதேடி..." அவனது குரல் நடுங்கியது...

"உண்மை தான் சொல்றேன் சாமி..." என்றாள் தனது மனதினை கல்லாக்கி கொண்டு...

அவனது இத்தனை வருடக்காதல் அடிப்பட்ட குழந்தையாய் கதறி அழுதது... மனதுக்குள் ஊமையாக அழுதான்...

"உன்னைச் சந்திச்சதுல எனக்கு ரொம்பச் சந்தோசம் சாமி... அப்ப நான் கிளம்பவா...?" என்று தன் மனதினை முயன்று மறைத்துக் கொண்டு அவள் கேட்க...

அவ்வளவு தானா எல்லாம் என்று அவனுக்கு மனம் கனத்துப் போனது... ஏனோ வாழ்வே அஸ்தமித்துப் போனது போல் ஒரு தோற்றம்... கம்பீரமான அந்த ஆண்மகனையும் காதல் தட்டு தடுமாறச் செய்தது...

இருக்கையில் இருந்து எழுந்து நின்றவளை அவனது விழிகள் ஏக்கத்துடன் பார்த்தது... அதைக் காண சகிக்காது தனது பார்வையைத் திருப்பிக் கொண்டாள் அவள்...

அவளது மனமும் மௌனமாய்க் கண்ணீர் வடிப்பதை அவன் அறியவில்லை...

ஒவ்வொரு ஆண்மகனை போன்று வன்முறையில் அவளிடத்தில் இருந்து காதலை யாசிக்கவும் அவனுக்கு மனம் வரவில்லை... ஏனெனில் காதலை தாண்டிய ஒரு அன்பு அவள் மீது அவனுக்கு இருக்கிறது... அதில் அவளது நலன் பெரிதும் அடங்கியிருந்தது...

அந்த அன்பு தான் அவள் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டது... அது தான் அவளுக்கு எதிராக எதுவும் செய்யச் சொல்லி அவனைத் தூண்டி விடவில்லை...

அந்த அன்பு தான் அவனது மனதை முறித்த அவளின் மனதிற்காகப் பாவம் பார்த்து அமைதியாக இருந்தது...

அவனும் அமைதியாக எழுந்தான்... எதுவும் பேசும் மனநிலையில் அவன் இல்லை...

அந்நேரம் அவளது அலைப்பேசி அழைத்தது... செல்வநாதன் தான் அவளை அழைத்தார்... அப்போது தான் நித்யா விசயம் அவளுக்கு நினைவில் வந்தது... அவனைத் திரும்பி பார்த்தாள்...

நித்யா தான் அவனுக்கு எல்லா விதத்திலும் பொருத்தம் என்றே அவளுக்குத் தோன்றியது... மீண்டும் அழுகை முட்டி கொண்டு வந்தது அவளுக்கு... இன்னும் இங்கே இருந்தால் தான் அழுது தன்னைக் காட்டி கொடுத்து விடுவோமோ என்று பயந்து போனவளாய்,

"சாமி... ஐயா கூப்பிடறாரு... நான் வர்றேன்... நீ இங்கே தானே இருப்ப... ப்ரீயா இருக்கும் போது பார்க்கலாம்..."

அவன் பேச இடம் கொடுக்காதபடி அவளே பேசியவள் அவனிடம் விடைப்பெற்று சென்றாள்...

செல்லும் அவளைக் கனத்த மனதுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்... காதல் தோல்வி அவனைப் பெரிதும் வாட்டியது... அந்த நிலையிலும் அவள் நன்றாக

இருக்க வேண்டும் என்று தான் அவனது மனம் எண்ணியது...

செல்வநாதன் அவளிடம் பேச வேண்டும் என்று சொல்லி அவளை வரவழைத்து இருந்தார்... போனதுமே எடுத்தவுடன் விஜய்யை பற்றித்தான் அவளிடத்தில் விசாரித்தார்...

"நித்தி காதல் விசயம் ஏற்கெனவே உனக்குத் தெரியுமா...?"

"எனக்குத் தெரியாதுங்க ஐயா..." அது தானே உண்மை...

"அந்தப் பையன் குணம் எப்படி...?"

"எனக்குத் தெரிஞ்சு விஜய் நல்லவன் தான்ங்க ஐயா..."

"ம்..." என்று தாடையைத் தடவி கொண்டு யோசித்த செல்வநாதன்,

"ஒரே பொண்ணு ஆசைப்பட்டதைச் செஞ்சு கொடுக்கணும்னு தான் நான் நினைக்கிறேன்... போய் அந்தப் பையன் வீட்டில் பேசி பார்க்கிறேன்..."

அதில் நித்யா நிம்மதி அடைந்தாள் என்றால், முத்துபேச்சி பெரும் துயரம் அடைந்தாள்...

"அப்புறம் முத்து... உனக்கும் படிப்பு முடிஞ்சது... வேலைக்குப் போறியா...? என்ன செய்யப் போற...?"

"வேலைக்கு எல்லாம் போக விருப்பம் இல்லைங்கய்யா... எனக்கு அரசியல் தான்னு முடிவு பண்ணிட்டேன்..." என்றாள் தீர்மானமாய்...

"அதுக்கு அப்புறம் உன் விருப்பம்..." என்றவர் அவளிடத்தில் ஒரு கவரை நீட்டினார்...

அவள் புரியாமல் அவரைப் பார்க்க...

"பிரிச்சு பாரு..."

அவர் சொன்னதைத் தட்டாமல் செய்தவள் அதிலிருந்த ஒரு இளைஞனின் புகைப்படத்தைக் கண்டு திகைத்து

போனாள்...

"பையன் பேரு நந்தகுமார்... நம்ம கல்வி அமைச்சர் பழனிச்சாமி இருக்கார் இல்லையா அவரோட பிஏ... நல்ல சுறுசுறுப்பான பையன்... பழனிச்சாமி அவனுக்கு நிறையச் செஞ்சியிருக்காரு... இன்னமும் செய்வார்... எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லை... அம்மா மட்டும் தான்... ஒரே ஒரு தங்கச்சி அதுக்கும் கல்யாணமாகிருச்சு... எந்தப் பிக்கல் பிடுங்கலும் இல்லை..." என்றவர்,

"உனக்குப் பையனை பிடிச்சியிருக்கா முத்து..."

அவர் கேட்டதைக் கண்டு அவள் திகைத்து விழித்தாள்...

அவள் திகைப்பை வேறுமாதிரி எண்ணி கொண்டவர் அவளை ஆதூரமாய்ப் பார்த்தபடி, "இது எல்லாம் சின்னப் பொண்ணு உன் கிட்ட பேச கூடாது தான்... ஆனா உன் வீட்டு நிலைமையால் தான் நான் உன் கிட்ட நேரிடையா கேட்கிறேன்..." வருத்தமாய் அவர் கூற...

"ஐயோ... நீங்க என் கிட்ட கேட்டதில் எந்தத் தப்பும் இல்லை... ஆனா எனக்குக் கல்யாணத்தில் விருப்பம் இல்லை ஐயா... நான் இப்படியே இருந்துட்டு போறேன்..." என்றவள் அந்தப் புகைப்படத்தை மீண்டும் கவரில் வைத்து அவரிடத்தில் நீட்டினாள்...

"என்ன முத்து இப்படிப் பேசுற... எனக்கு நித்தி மாதிரி நீயும் ஒரு பொண்ணு தான்... உனக்கு ஒரு நல்லது பண்ணி பார்க்கணும்ன்னு எனக்கு ஆசையிருக்காதா..."

'ஆனா எனக்கு அந்த ஆசை கை கூடாம போயிருச்சே...' என்று அவளது மனம் கதறியது...

செல்வநாதனிடம் தனது திருமணத்திற்கு மறுத்துவிட்டு, நித்யாவிடம் அவளது காதல் வெற்றியடையப் போவதற்கு வாழ்த்து தெரிவித்து விட்டு வந்தவளுக்கு அத்தனை துயரமாக இருந்தது... அதே துயரத்துடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் அவள்...

அப்போது குமாரியும், பாண்டியனும் திருப்பதிக்கு கிளம்பி கொண்டிருந்தனர்... அவர்கள் வசிக்கும் குடியிருப்பில் இருக்கும் ஒருவரின் மகளுக்குத் தான் திருப்பதியில் வைத்துத் திருமணம் நடைபெற இருக்கிறது... அதற்காகத் தான் அந்தக் குடியிருப்பில் இருப்பவர்கள் அனைவரும் பேருந்தில் திருப்பதி செல்கின்றனர்... ஒரு சிலர் மட்டுமே வேலை காரணமாகப் போகாமல் அங்கு இருந்தனர்...

"முத்து... சீக்கிரம் கிளம்பு..." பாண்டியன் உற்சாகமாக அவளிடம் கூற...

"நீங்க ரெண்டு பேரும் போயிட்டு வாங்க பாண்டி... நான் வரலை..." என்று சோர்வாகக் கூறியவள் தரையில் அமர்ந்தாள்...

"ஏன் புள்ள...? உடம்பு ஏதும் சரியில்லையா...?"

அவளது ஓய்ந்து போன தோற்றத்தை கண்டு அவன் அப்படிக் கேட்டான்...

"ஆமா பாண்டி... காய்ச்சல் மாதிரியிருக்கு..."

"அப்போ நாங்களும் போகலை... நீ வா நாம டாக்டர் கிட்ட போயிட்டு வரலாம்..."

"நான் என்னைச் சமாளிச்சுக்குவேன் பாண்டி... அம்மா எங்கேயும் போனது இல்லை... அது எவ்வளவு ஆசையா கிளம்பியிருக்கு பாரு..."

திருப்பதி போகும் ஆர்வத்தில் கண்களில் எதிர்பார்ப்போடு அமர்ந்திருந்த குமாரியை கண்டு பாண்டியனுக்கும் பாவமாகத் தான் இருந்தது... ஆனால் முத்துபேச்சியை இப்படித் தனியாக விட்டு விட்டு போக அவனுக்கு மனம் வரவில்லை...

"நான் என்ன சின்னப் புள்ளையா பாண்டி... என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்..." என்று அவனுக்குச் சமாதானம் கூறியவள் வலுக்கட்டாயமாக அவர்களைத் திருப்பதிக்கு அனுப்பி வைத்தாள்...

அடுத்து வந்த நாட்களில் அவளது வாழ்க்கையே மாறப் போகிறது என்று யாராவது கூறியிருந்தால் அவளும் திருப்பதி சென்றிருப்பாளோ என்னமோ... விதி அவளைக் கண்டு விகாரமாய்ச் சிரித்தது...

செல்ல மகளின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதற்காகச் செல்வநாதன் விஜய்யின் வீட்டிற்கு நேரில் சென்றார்... சொந்த விசயமாக அவர் அங்குச் செல்வதால் தனது பதவி செல்வாக்கை காட்டாது தான் மட்டும் தனித்து அங்குச் சென்றார்...

****

காலை நேர பரபரப்பில் விஜயின் வீடு இயங்கி கொண்டிருந்தது... ஆனால் அவன் மட்டும் சோம்பி போய்ப் படுத்திருந்தான்... முத்துபேச்சியின் நினைவுகளில் மூழ்கிப் போயிருந்தவன் நேரம் விரைந்து செல்வதைக் கூட உணராது இருந்தான்...

அந்நேரம் அவனது அன்னை மைதிலி பரபரப்பாய் உள்ளே நுழைந்தார்...

"டேய் விஜய்... மினிஸ்டர் செல்வநாதன் உன்னைத் தேடி வந்திருக்கிறார்..."

அவர் கூறியதும் பரபரப்புடன் எழுந்து அமர்ந்தான் அவன்...

"அவர் எதுக்கும்மா என்னைத் தேடி வரணும்...?" என்று யோசனையாய் கேட்டவன் பின் முகம் மலர்ந்தவனாய்,

"இதோ ஒரு நிமிசம்..." என்றபடி குளியலறையை நோக்கி ஓடினான்...

ஒருவேளை முத்துபேச்சியைத் தான் காதலிப்பது அவருக்குத் தெரிந்து தன்னைப் பார்க்க வந்திருக்கிறாரோ... அப்படி என்றால் தன் காதல் கை கூடியது மாதிரி தான் என்று உறுதியாக எண்ணியவன் வேகமாய் முகத்தைக் கழுவி கொண்டு வரவேற்பறைக்கு வந்தான்...

அவன் தனது காதலில் நித்யாவை பற்றி யோசிக்க மறந்து போனான்...

"வாங்க சார்..." என்று அவரை வரவேற்றவன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

"நான் சுத்தி வளைச்சு பேச விரும்பலை... என் பொண்ணும், உங்க பையனும் ஒருத்தருக்கு ஒருத்தர் விரும்பறாங்க... எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பொண்ணு... அவள் விருப்பத்தை மீறி இதுநாள் வரை நான் எதுவும் செய்ததில்லை... இப்போ அவளோட விருப்பம் உங்க மகன் மீது... அதனால் தான் சம்பந்தம் பேச நானே நேரிடையா வந்திருக்கிறேன்..."

அதைக் கேட்டு விஜய் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான்... நித்யா அவனை விரும்புவது அவனுக்குப் புதுச் செய்தி... இப்போது அவனுக்கு எல்லாம் புரிந்தது...

'ஓ... இந்தக் குள்ள கத்திரிக்காவுக்காகத் தான் இவள் என்னைக் கழட்டி விட்டுட்டாளா...? இவளை என்ன செய்தால் தகும்...'

மனதுக்குள் முத்துபேச்சியை வசைப்பாடி கொண்டிருந்தான்... அவனுக்குச் சர்வ நிச்சியமாகத் தெரிந்து போனது நித்யாவிற்காகத் தான் முத்துபேச்சி அவளது காதலை தன்னிடம் இருந்து மறைத்திருக்கிறாள் என்று... அவளது தோழி மீதான பாசம், செல்வநாதன் மீதான விசுவாசம் எல்லாம் தான் அவனுக்குத் தெரியுமே...

தன் காதலியை நினைத்து அவனது மனம் உலைக்களமாய்க் கொதித்தது...

செல்வநாதன் கூறியதை கேட்டு மைதிலி முகம் சந்தோசத்தில் விகசித்தது... எவ்வளவு பெரிய சம்பந்தம் இது... கனவிலும் அவர்கள் நினைத்து பார்த்திராத இடம்... அதனால் வாயெல்லாம் பல்லாக,

"எங்க விஜய் ஜாதகம் அதிர்ஷ்டமான ஜாதகம்ன்னு ஜோசியர் சொன்னப்போ நான் நம்பலை... இப்போ அதை

நான் முழுசா நம்பறேன்..."

ரகுராமனோ மனைவியைக் கேள்வியாகப் பார்த்தார்... சாதி பார்க்கும் மனைவி இப்போது ஏன் இப்படிப் பேசுகிறாள் என்று புரியாமல் விழித்தார் அவர்... தனது ஒற்றைக் கண் பார்வையில் கணவனை அடக்கிய மைதிலி செல்வநாதனிடம்,

"சின்னஞ்சிறுசுக ஆசையை நாம ஏன் கெடுப்பானேன்...? பேஷா சேர்த்து வைச்சிடலாம்..." என்று சந்தோசமாய்க் கூறினார்...

அன்னையின் சம்மதத்தை ஆச்சிரியத்துடன் பார்த்தான் விஜய்... எப்போதும் சாதி, அந்தஸ்து பார்க்கும் அன்னை இப்படி உடனே சம்மதித்தது கண்டு அவனுக்குச் சந்தோசமாய் இருந்தது... அதனால் தனது காதல் கை கூடி விடும் என்று உறுதியாக நம்பினான்...

இந்த இடத்தில் தான் விஜய் தனது அன்னையைப் பற்றித் தவறாகக் கணித்து விட்டான்... பணம் என்ற ஒன்று அங்குச் சாதியை மழுங்கடித்து விட்டதை அவன் உணர்ந்து கொள்ளவில்லை... அந்தப் பணம் முத்துபேச்சியிடம் இல்லை என்பதையும் அவன் உணரவில்லை...

அந்தத் தைரியத்தில் அவன் செல்வநாதனிடம் பேசினான்...

"சார்... நான் வேறு ஒரு பெண்ணை விரும்புகிறேன்... உங்கள் மகளை மணக்க எனக்குச் சம்மதமில்லை... சாரி சார்..." என்று இரு கரம் கூப்பிப் பணிவுடன், அதே சமயம் கம்பீரமாகக் கூறிய விஜய்யை கண்டு செல்வநாதன் திகைத்து தான் போனார்...

அவர் நினைத்தது அவரது மகளும், அவனும் விரும்புகிறார்கள் என்று... ஆனால் அவனோ வேறு பெண்ணை விரும்புவதாக அல்லவா கூறுகிறான்... மிகவும் குழம்பி போனார் அவர்...

அந்த இடத்தில் முத்துபேச்சியைப் பற்றிச் சிறு குறிப்பாவது அவன் அவரிடத்தில் கூறியிருக்கலாம்... ஆனால் அதை

அவன் செய்யவில்லை...

அவரது பெண்ணை மறுத்துவிட்டு இப்போது முத்துபேச்சியைப் பற்றித் தான் சொன்னால் எதுவும் தவறாக நினைத்து கொள்வாரோ என்று பயந்து அதைச் சொல்லாது விடுத்தான்... செல்வநாதன் அப்படிப்பட்டவர் இல்லை என்பது அவனுக்குத் தெரியவில்லை...

மைதிலி மகனை முறைத்துக் கொண்டு நின்றிருந்தார்... எந்த நேரத்தில் என்ன பேசுகிறான் என்று மகன் மீது பெரும் கோபத்தில் அவர் இருந்தார்...

"உன் காதல் கை கூட என்னுடைய வாழ்த்துக்கள்..." என்று அவனை வாழ்த்தியபடி அவர் கிளம்புவதற்காக எழுந்தார்...

"சார்... என்னை மன்னிச்சுக்கோங்க..."

"உன் மீது எந்தத் தவறும் இல்லை விஜய்... சரியா விசாரிக்காமல் வந்தது என் தவறு..." என்றவர் கிளம்பி சென்றுவிட்டார்...

அவர் சென்றதும் மைதிலியிடம் விஜய் வந்தான்...

"யாருடா அந்தப் பொண்ணு..." அடக்கப்பட்ட கோபத்தில் ஒலித்த அவரது குரலை அவன் இனம் கண்டு கொள்ளவில்லை...

அன்னை முத்துபேச்சியைப் பற்றிக் கேட்டதும் கண்களில் கனவுடன் அவளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்... அதைக் கேட்க கேட்க மைதிலியின் முகம் அருவருப்பாய் மாறியது...

"நீங்க காதலுக்கு இவ்வளவு லேசா சம்மதிப்பீங்கன்னு நான் நினைச்சுக்கூடப் பார்க்கலைம்மா... ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ்ம்மா..." என்று அவன் கூற...

"உன் காதலுக்கு நான் சம்மதிச்சேன்னு இப்போ யார் உனக்குச் சொன்னா...?" என்று அவர் கோபத்துடன் கேட்க...

"அம்மா..." அவன் அதிர்ந்து போய் அவரைப் பார்த்தான்...

"எங்கேயோ சேரியில் இருக்கிறவள் எல்லாம் எனக்கு மருமகளாக முடியாது... இனியும் உன் வாழ்க்கையை உன் இஷ்டப்படி விட என்னால முடியாது... வெளிநாட்டுக்கு போய் டாலர்ல சம்பாதிச்சு இந்தக் குடும்பத்தைத் தலை நிமிர்த்துவேன்னு கனவு கண்டேன்... அது பகல் கனவா மாறி போச்சு... பேரு தான் பெரிய ஐபிஎஸ் ஆபிசர்ன்னு... ஆனா நீ மாச சம்பளக்காரன் தானேடா... இதுக்காகவா உன்னை எம்ஈ வரைக்கும் கஷ்டப்பட்டுப் படிக்க வச்சோம்... அதாவது எப்படியும் போய்த் தொலைன்னு விட்டுரலாம்... ஆனா இதுக்கு நான் ஒருகாலமும் சம்மதிக்க மாட்டேன்... நமக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு... நீ அவளைக் கல்யாணம் பண்ணினா நம்ம சாதி, சனத்தில் நான் தலைநிமிர்ந்து நடக்க முடியாது... என்னால் இதை ஏத்துக்க முடியாது..."

அன்னையின் வார்த்தைகள் அவனுக்குப் பெருத்த அதிர்ச்சியாக இருந்தது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டான்... உடம்பில் ஓடும் இள இரத்தம் அன்னையை எதிர்த்து பேச சொல்லியது...

"மினிஸ்டர் பொண்ணை மருமகளாக ஆக்கணும்ன்னு நினைக்கிறப்போ உங்க சாதி எங்கே போச்சு... கௌரவம் காணாமல் போச்சா...? எனக்கு உங்க சம்மதம் முக்கியமில்லை... நான் பேச்சியைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்... நீங்க சம்மதிச்சா உங்க முன்னாடி கல்யாணம் நடக்கும்... இல்லை நாங்களே கல்யாணம் பண்ணிக்குவோம்..."

'டேய்... கல்யாணப் பொண்ணே கல்யாணத்துக்குச் சம்மதிக்கலைடா...' அவனது மனசாட்சி நேரம் காலம் தெரியாமல் அவனைக் கிண்டலடித்தது...

"ஓ... அந்தளவுக்கு வந்துட்டியா... பார்க்கலாம்டா... நீ எப்படி அவளைக் கல்யாணம் பண்றேன்னு நானும் பார்க்கிறேன்..." என்று மைதிலி சவால் விட...

அவன் அன்னையை விடுத்து தந்தையைப் பார்த்தான்...

"ஏப்பா நீங்க எதுவும் பேச மாட்டேங்கிறீங்க...?" என்று கேட்க...

ரகுராமன் அவனை ஒரு பார்வை பார்த்தவர் ஒன்றும் பேசவில்லை... அவரது அமைதியே சொல்லாமல் சொல்லியது அவருடைய சம்மதமின்மையை...

அதில் அவனுக்குக் கோபம் வந்தது... அவனது ஒட்டு மொத்த கோபமும் முத்துபேச்சி மீது திரும்பியது...

'எல்லாம் இவளால் வந்தது... இவள் என்ன பெரிய காதல் தியாகியா...? காதல் என்ன தியாகம் செய்கிற அளவுக்கு மலிவு விலை கடைப்பொருளா என்ன...?'

அதே கொதிப்புடன் நேரே தன் அறைக்கு வந்தவன் முத்துபேச்சி அழைத்தான்...

இந்நேரம் செல்வநாதன் நித்யாவிற்காக விஜய் வீட்டில் சம்பந்தம் பேசியிருப்பார் என்ற நினைவில் மனதுக்குள் மருகி கொண்டிருந்தாள் முத்துபேச்சி...

ஏதாவது அதிசயம் நடந்து தானும் அவனும் சேர்ந்து விட மாட்டோமா என்று ஆசையாக இருந்தது அவளுக்கு... அவளது காதலுக்கு யாரும் எதிரியில்லை... அவள் தான் எதிரி என்பதை அவள் உணர்ந்து கொள்ளவில்லை...

யாருமில்லாத தீவில் தானும், அவனும் மட்டுமாய்த் தனித்து இன்பமாய் வாழ மாட்டோமா என்று அவளது காதல் மனம் ஏங்கி தவித்தது...

தன்னை மாதிரி ஒரு பெண்ணிற்கு எல்லாம் காதல் ஏன் வந்து தொலைத்தது என்று தனக்குள் நொந்து கொண்டாள் அவள்...

அந்நேரம் தான் விஜய் அவளை அழைத்தான்...

பயம், ஆர்வம், ஆசை என்று பலவிதமான உணர்வுக் கலவையுடன் அவள் அலைப்பேசியை உயிர்ப்பித்தாள்... அவளைப் பேசவிடாமல் அவன் கோபத்தில் படபடவெனப் பொரிந்தான்...

"உன் மனசில என்னடி நினைச்சிக்கிட்டு இருக்க... என் காதல் என்ன உனக்கு விளையாட்டுப் பொருளா போச்சா...? நான் யாரை காதலிக்கணும், கல்யாணம் பண்ணணும்ன்னு நான் தான் முடிவு பண்ணணும்... நீ இல்லை... நீ யாருடி நித்யாவுக்காக என் காதலை பங்கு போடுறதுக்கு... இப்ப மட்டும் என் கண் முன்னாடி நீ இருந்திருந்த ஓங்கி ஒரு அறை விட்டிருப்பேன்... அந்தளவுக்கு உன் மேல் ஆத்திரத்தில் இருக்கேன்..."

அவன் கோபத்தில் திட்டிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளுக்குப் பன்னீர் பூவாய் மாறி அவளை ஆனந்தத்தோடு அபிசேகம் செய்தது... அவனது கோபமே சொல்லாமல் சொல்லியது அவனது காதலின் ஆழத்தை...

தன் மீது வைத்த காதலுக்காக அவன் நித்யா மாதிரியான ஒரு நல்ல பெண்ணை வேண்டாம் என்று சொல்கிறான் என்றால்... இதை விட அவளுக்கு வேறு என்ன வேண்டும்...

யார் என்ன சொன்னாலும், யார் அவளை அவமானப்படுத்திப் பேசினாலும் தன்னைக் காக்க அவன் இருக்கிறான் என்ற நம்பிக்கை இப்போது வந்தது அவளுக்கு... அன்று நட்பிற்கான அவனது உறுதியை உத்திரவாதத்தோடு சோதித்து நம்பியது போல், இப்போது அவனது காதலின் உறுதியையும் அவனது செயலில் உணர்ந்து அவன் மீது மலையளவு நம்பிக்கை வந்தது அவளுக்கு...

அவளது அடிப்பட்ட மனம் எதையும் நம்பத் தயாராக இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மை... தாயின் வாழ்க்கை, மற்ற பெண்களின் கண்ணீர் கதை எல்லாம் கண்டு அவளது ஆழ் மனதில் ஒரு பயம் இருந்து கொண்டே இருந்தது...

அந்தப் பயம் எல்லாம் அவனது உறுதியான காதலில் அப்படியே ஆட்டம் கண்டு அதில் அவளது காதல் உயிர்ப்பித்தது...

"வாழ்க்கையில் எதை வேணும்ன்னாலும் தியாகம் செய்யலாம்... ஆனால் எப்படிடி உன்னால காதலை தியாகம் செய்ய முடிஞ்சது...?"

அவனது மனக்குமுறலில் அவளது புண்பட்ட மனம் இதமானது...

"இப்பவும் உன்னால் வாய் திறந்து பதில் சொல்ல முடியலைல்ல..."

தான் இவ்வளவு பேசியும் அவள் வாய் திறந்து பேசாமல் இருந்தது அவனுக்குப் பெருத்த அடியாக இருந்தது... வெறுப்புடன் அழைப்பை துண்டித்துவிட்டான்...

வாசம் நேசமாகும்...!!!

அத்தனை நேரம் தனக்குள் உழன்று கொண்டிருந்த முத்துபேச்சி விஜயின் கடைசி வார்த்தையில் நிகழ்காலம் உறைக்க,

"விஜூ..." என்று அவள் அவனை அழைக்க...

அவளின் காதலான அந்த அழைப்பை கேட்க மறுமுனையில் அவன் காத்திருக்கவில்லை...

அவன் அழைப்பை துண்டித்ததை உணர்ந்து அவள் மீண்டும் அவனுக்கு அழைக்க முயன்றாள்... அந்தோ பரிதாபம் அவனது அலைப்பேசி முற்றிலும் அணைத்து வைக்கப்பட்டிருந்தது...

மிகவும் ஏமாற்றத்துடன் அலைப்பேசியைக் கீழே வைத்தாள்... ஆனாலும் நம்பிக்கையை விட்டு விடவில்லை... நாளை அவனை நேரில் சந்தித்துத் தனது மனதினை உணர்த்திட வேண்டும் என்று எண்ணினாள்...

இப்போது அவளுக்கு முதலில் இருந்த பயம் இல்லை... தன்னால் அவனுக்கு அவமானம் நேர்ந்துவிடுமோ என்ற கலக்கம் இப்போது அவளுக்கு இல்லை... எல்லாவற்றையும் தன் காதலன் பார்த்து கொள்வான் என்கிற நம்பிக்கை அவளுள் விருட்சமாய் வளர்ந்திருந்தது...

காலம் முழுவதும் அவன் துணை அவளுக்கு இருக்குமேயானால் அவள் அந்த வானிலேறி நட்சத்திரப்பூ பறித்து வரவும் அவள் ஆயத்தமாக இருந்தாள்... அந்தளவுக்கு அவனது துணை அவளுக்குப் பக்கபலமாக இருக்கும் என்று அவள் உறுதியாக நம்பினாள்...

தன்னவன் நினைவில் அவள் உழன்று கொண்டே வீட்டு வேலை செய்து கொண்டிருந்த போது வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது... கதவை திறந்தவள் அங்கு நின்றிருந்த மூவரை கண்டு யோசனையாய் பார்த்தாள்...

"நீ தான் முத்துபேச்சியா...?" அதிகாரமாய்க் கேட்ட அந்தப் பெண்மணியைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"ஆமாம்..." என்றாள் தனது கோபத்தை அடக்கி கொண்டு...

"பார்க்க அழகாயிருக்க இல்ல அதான் என் பையனை வளைச்சு போட்டுட்ட..."

அவர் கூறியது கேட்டு அவள் முகம் யோசனையாய் மாறியது... அடுத்த நொடி முகம் மலர,

"நீங்க விஜயோட அம்மாவா... உள்ளே வாங்க..." என்று சந்தோசமாய் வரவேற்றாள்... ஏனெனில் இதற்கு முன் அவர்களை அவள் பார்த்தது இல்லை...

அவளது வரவேற்பை முகத்தைச் சுளித்தபடி ஏற்றுக் கொண்டு உள்ளே வந்தார் மைதிலி... உடன் ரகுராமன், வெங்கட் இருவரும் வந்திருந்தனர்...

வெங்கட் தன் அண்ணன் சொன்னதை வைத்து அவளின் முகவரியை கண்டுபிடித்துக் கொண்டு வந்து அன்னையிடம் கொடுத்தான்... மகனின் காதலை முளையில் கிள்ளிவிட எண்ணிய மைதிலி முத்துபேச்சியைக் காண நேரில் வந்துவிட்டார்...

"காபி, கூல் ட்ரிங்க்ஸ் ஏதாவது குடிக்கிறீங்களா...?" அவள் உபசாரமாய்க் கேட்க...

"உன்னை மாதிரியான ஆட்கள் வீட்டுக்கு எல்லாம் நாங்க போகவே யோசிப்போம்... இதில் உன் வீட்டில் கை நனைக்கிறதா... ச்சீ... ச்சீ..." மீண்டும் அருவருப்பில் முகத்தைச் சுளித்தார் அவர்...

அதைக் கேட்டு அவளது முகம் அவமானத்தில் சுருங்கி போனது...

"எல்லாம் நான் பெத்து வச்சியிருக்கிற பைத்தியக்காரனை சொல்லணும்... அவன் பண்ணின வேலையால் தான் நான் இந்த மாதிரி இடத்துக்கு எல்லாம் வர வேண்டியிருக்கு..." என்றவர்,

"ஒழுங்கு மரியாதையா என் மகனை விட்டுட்டு போயிடு... உனக்கு என்ன பணம் வேணுமோ கேளு... நாங்க கொடுக்கிறோம்..."

அவளது ஏழ்மையைத் தனக்குச் சாதகமாக்கி கொள்ள நினைத்தார் அவர்... அதில் எல்லாம் அசரும் ஆளா அவள்...

நிமிர்ந்து அவரைப் பார்த்தவள், "எனக்குப் பணம் எல்லாம் வேண்டாம்... உங்க மகன் தான் வேணும்..." என்றாள் தைரியமாய்...

அவளது பேச்சில் அவருக்குக் கோபம் வந்தது...

"என் மகன் வேணுமா...? எவ்வளவு கொழுப்பு இருந்தா என் கிட்டேயே இப்படிப் பேசுவ...? அவன் உனக்குக் கிடைக்க மாட்டான்... அவனுக்கும் மினிஸ்டர் பொண்ணுக்கும் கல்யாணம் பேசி முடிச்சாச்சு..." என்றார் கெத்தாக...

விஜய்யின் மனமும் அவளுக்குத் தெரியும்... அது போல் செல்வநாதனை பற்றியும் அவளுக்குத் தெரியும்... அதனால் திமிராய் தான் அவளும் பதில் சொன்னாள்...

"ஓஹோ... இதுக்கு உங்க பையன் சம்மதிச்சிட்டாரா..." என்று எகத்தாளமாய்க் கேட்டாள் அவள்...

அதிலேயே தெரிந்து போனது மகனை பற்றி அவள் எந்தளவுக்குப் புரிந்து வைத்திருக்கிறாள் என்று... அதில் அவருக்குக் கோபம் தான் அதிகரித்தது...

"சம்மதிக்க வைப்பேன்..."

"அது ஒருகாலும் முடியாது... உங்களால் முடிந்தால் அதைச் செய்து பாருங்க..." என்றவள் அலட்சியமாய் வாயிலை நோக்கி கை காண்பித்தாள் அவர்களை வெளியேறுமாறு...

தனது அன்னையை அவள் அவமானம் செய்துவிட்டதாய் ஆத்திரம் அடைந்த வெங்கட் தனது காலில் கிடந்த செருப்பைக் கழட்டி அவளை அடித்துவிட்டான்...

எதிர்பாராத அந்தச் செயலில் திகைத்து போன முத்துபேச்சிக்குக் கோபம் வந்த போதும் அவனைத் திருப்பி அடிக்க முயலவில்லை... விஜய்க்காகப் பொறுமையாய் இருந்தாள்...

அவளது அமைதி மைதிலிக்கும் தைரியத்தை அளித்ததோ என்னவோ மகன் கையிலிருந்த செருப்பை வாங்கித் தனது ஆத்திரம் தீரும் மட்டும் அவளை அடிக்க ஆரம்பித்தார்...

தன்னவனுக்காக அனைத்தையும் மௌனமான வலியோடு தாங்கி கொண்டாள் முத்துபேச்சி... ஆனால் அவளது கண்கள் வன்மத்துடன் மைதிலியையும், வெங்கட்டையும் வெறித்துப் பார்ப்பதை அவர்கள் இருவரும் அறியவில்லை... ஆனால் ரகுராமன் அதைக் கண்டு கொண்டார்...

அதன் விளைவை எண்ணி அவரது மனம் பயந்து போனது... எது நடக்கக் கூடாது என்று எண்ணி அவர்கள் இங்கு வந்தார்களோ அது நடப்பதற்காக அஸ்திவாரத்தை அம்மா, மகன் இருவரும் அவர்களை அறியாது பலமாய் அமைத்து கொண்டிருந்தனர் என்பதை அந்தக் கணம் அவர்கள் உணரவில்லை...

ரகுராமனால் மனைவியை அடக்க முடியவில்லை... தடுத்தவரையும் வெங்கட் அடக்கி விட்டான்... அதற்கு மேல் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அவர் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்க வேண்டியதாய் போயிற்று...

மைதிலியின் ஒவ்வொரு அடியிலும் அவளது மனதின் வைராக்கியம் அதிகரித்துக் கொண்டே போனது... உறுதியும் அப்படியே...

மைதிலியின் ஆத்திரம் இன்னமும் அடங்கவில்லை... ஆனால் அவரது கைகள் தான் மிகவும் சோர்ந்து போய்விட்டது...

"இதுக்கு மேல் நீ என் மகனோட பழகின உன்னை அசிங்கப்படுத்திவிடுவேன்..." என்று அவர் மிரட்ட...

அதற்கும் அவள் பதில் பேசவில்லை... அமைதியாய் அவரைப் பார்த்து கொண்டிருந்தாள்...

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு... உனக்குப் புரிந்திருக்கும்ன்னு நினைக்கிறேன்..." என்றவர் கணவரையும், மகனையும் அழைத்துக் கொண்டு சென்றார்...

அப்போது முத்துபேச்சியின் கண்களில் இருந்த தீவிரத்தை கண்டு ரகுராமன் மிகவும் பயந்து போனார்...

அவர்கள் மூவரும் சென்று ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் அழைப்பு மணி ஒலித்தது... அதுவரை திக்பிரம்மை பிடித்து அமர்ந்திருந்த முத்துபேச்சி எழுந்து வந்து கதவை திறந்தாள்...

அங்கு நின்று கொண்டிருந்த விஜய்யை கண்டதும் அவளது கண்கள் கலங்கியது... ஆதரவு தேடும் கன்று குட்டி போல் அவனது மடி தேடியது அவளது நிராதரவான மனது...

"எப்படியிருக்க ஹனி...? இப்போ சந்தோசமா இருப்பியே..." என்று கோணல் சிரிப்புடன் கூறியவனைச் சந்தேகமாய்ப் பார்த்தாள் அவள்...

"குடிச்சியிருக்கியா சாமி..."

அதற்குப் பதில் பேசாது அவளை இடித்துக் கொண்டு உள்ளே வந்தான் அவன்...

"சாமி... கேட்டதுக்குப் பதில் சொல்லு..." என்று அவனது தோள் பற்றி அவள் கேட்க...

விருட்டென்று அவளைத் திரும்பி பார்த்தவன் கண்கள் கோபத்தில் ஜொலித்தது...

"ஆமாம்டி... குடிச்சிருக்கேன்... எல்லாம் உன்னால் தான்டி..." என்று பழியை அவள் மீது போட்டவன் நிற்க முடியாமல் தள்ளாடினான்...

சட்டென்று அவனைத் தாங்கி பிடித்தவள் அவனை நாற்காலியில் அமர வைக்க முயல, அவனோ அதைக்

கேட்காது வெற்றுத் தரையில் அமர்ந்தான்... அவளும் அவன் அருகில் அமர்ந்தாள்...

"ஏன்டி... உனக்கு என்னைய பிடிக்கலை..." என்று அவளிடம் கேட்டவன்,

"இல்லை... உனக்கு என்னைப் பிடிக்கும்... ஆனா நித்யாவுக்காக என் கிட்ட பொய் சொல்லிட்ட... நான் உன்னை நம்ப மாட்டேன்..." என்றான் குழறலாக...

"இல்லை சாமி..." என்று அவள் சொன்னதைக் கேட்டு முகத்தைச் சுளித்தவன் அடுத்த நொடி அவள் மீது வாந்தி எடுத்தான்...

அதைக் கண்டு அவள் அருவருப்பில் முகத்தைச் சுளிக்கவில்லை... மாறாகத் தாயின் வாஞ்சையுடன் அவனைச் சுத்தப்படுத்தினாள்...

சாலையோரம் இருக்கும் மனநோயாளிகளுக்கு ஆண், பெண் என்று பேதம் பாராமல் அவள் சேவையாற்றி இருக்கிறாள்... மருத்துவர்கள் ஆண், பெண் என்று பேதம் பாராமல் மருத்துவம் பார்ப்பது போல்...

அது போல் இப்போது விஜய்யை சுத்தப்படுத்திப் பாண்டியனின் கைலியை எடுத்து அவனுக்கு அணிவித்தவள் மனதில் காதல் இல்லை... காமம் இல்லை... மாறாகத் தாதிப்பெண்ணின் சேவை மானப்பான்மையோடு அவள் அவனுக்குச் சேவை செய்தாள்...

எல்லாவற்றையும் சுத்தம் செய்து தானும் சுத்தப்படுத்திவிட்டு வந்த போது விஜய் தரையில் படுத்தபடி, "கண்ணம்மா, கண்ணம்மா..." என்று புலம்பி கொண்டிருக்க...

அவன் அருகே வந்தமர்ந்தவள் அவனது தலையை எடுத்து தனது மடியில் வைத்துக் கொண்டு அவனது முடியை வருடி கொடுத்தாள்...

அன்று கலை விழாவில் கண்ணில் காதல் வழிய அவன் பாடிய கண்ணம்மா பாடல் அவளின் நினைவில் வந்தது... அவனின் காதல் கண்ணம்மா அவள் அல்லவா... பெருமிதத்தில் அவளது நெஞ்சம் விம்மியது...

எத்தனை இடர் வந்தாலும் அவனது இந்தக் காதலை யாராலும் மாற்ற முடியுமா...?

"விஜூ..." என்றழைத்தபடி அவனது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டாள்...

அதை அவன் உணரும் நிலையில் இல்லை...

இரண்டு முறை அவனிடத்தில் காதலை சொல்ல வந்து அவள் தோல்வியைத் தழுவி விட்டாள்... இன்னொரு முறை அந்த வாய்ப்பு அவளுக்குக் கிடைக்குமா என்று அவளுக்குத் தெரியவில்லை... இப்போது கிடைத்த இந்த வாய்ப்பை நழுவ விடவும் அவளுக்கு மனம் வரவில்லை...

அவனது முகத்தைத் தனது இரு கைகளில் தாங்கி பிடித்தபடி காதலாய் அவனைப் பார்த்து, "ஐ லவ் யூ விஜூ..." என்றாள் விழிகளில் விழிநீர் வழிய...

அவள் காதலை சொல்லியதை கேட்டு பூரிக்க வேண்டியவனோ எந்தவித உணர்வினையும் காட்டாது, "கண்ணம்மா... கண்ணம்மா..." என்று தனது வேதனையில் உழன்று கொண்டிருந்தான்...

அவனது வேதனையைத் தாங்க முடியாது அவனைத் தனது நெஞ்சோடு சேர்த்து அணைத்து கொண்டாள் அவள்...

அவளது நெஞ்சில் முகம் புதைத்தவனின் நாசி நுகர்ந்தது தன்னவளின் பிரத்யேக நறுமணத்தை... அதில் அவனுக்குச் சற்றுச் சுரணை வந்ததோ... அவளது அணைப்பை உணர்ந்தார் போன்று அவனது கைகளும் அவளின் கழுத்தில் மாலையாகக் கோர்த்துக் கொண்டது...

"கண்ணம்மா..." என்றழைத்தபடி அவளின் நெஞ்சின் நடுவே அழுத்தமாய் முகம் புதைத்தவனின் செய்கையில்

அவள் தன்னிலை மறந்தாள்...

அவளின் காயம் அடைந்த மனதிற்கு அவனின் செயல் பெரும் மருந்தாக இருந்தது... அவனது அருகாமையில் அவளது மனம் பெருத்த ஆறுதல் அடைவதை கண்டு அவளது அணைப்பு இறுகியது... அவனை யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது என்பது போல் இருந்தது அந்த அணைப்பு... அவன் தனக்கு மட்டுமே சொந்தம் என்பது போல் இருந்தது அந்த அணைப்பு...

அவனைச் சொந்தமாக்கி கொள்ள அவளது காதல் நெஞ்சம் துடித்தது... அவனை இழக்க போகிறோம் என்ற பயத்தில் அவனுள் புதைய சொல்லி தூண்டியது அவளது காதல் மனம்...

ஆணுக்கு மட்டும் தான் ஆசை இருக்கும் என்றில்லை... பெண்ணுக்கும் ஆசை உண்டு... அதுவும் காதலில் பெண்ணவளுக்குப் பேராசை உண்டு...

"ஐ லவ் யூ விஜூ..." என்றபடி அவனது இதழில் இதழ் பதித்தவளின் செய்கையில் அவன் அவளிடம் இருந்து விலகினான்...

அந்தப் போதையிலும் அவன் தடம் மாறாமல் விலகுவது கண்டு அவளுக்கு அத்தனை பெருமையாக இருந்து அவனை நினைத்து... அதே நேரம் இத்தகைய குணம் உடைய ஒருவனை உரிமை கொண்டாட முடியாத நிலையில் இருக்கும் தன் நிலையை நினைத்து அவளுக்குத் துக்கமாகவும் இருந்தது...

"ப்ளீஸ் விஜூ..." என்றபடி அவனுள் புதைந்தாள் அவள்...

"ஐ லவ் யூ ஹனி..."

அதன்பின் அவனும் அவளை விடவில்லை... இயற்கையாய் ஆணுள் எழும் வேதியியல் மாற்றத்தை கட்டுப்படுத்த அவன் ஒன்றும் கடவுள் இல்லையே... சாதாரண மனிதன் தானே... அத்தனை வருடங்கள் அடக்கப்பட்ட காதல் அனைத்தும் பொங்கி பிரவாகம் எடுத்தது அவனுள்...

அவளின் புண்பட்ட மனதிற்கு அவனது அணைப்பு, அருகாமை எல்லாம் அத்தனை தேவையாய் இருந்தது... அவனை விட அவள் தான் அவனை அதிகம் நாடினாள்... அன்பில்லாமல் வறண்ட வாழ்க்கையை வாழ்ந்து வந்தவள் மீது அவன் காதல் என்னும் பெருமழையைப் பொழிந்து அவளைக் குளிர்வித்தான்...

எல்லாம் முடிந்து அவனை விட்டு விலகியவள் மனதில் எந்தவித துக்கமும் இல்லை... துன்பமும் இல்லை... மாறாகக் கிடைத்ததற்கரிய பொருள் கிடைத்த சந்தோசத்தில் அவள் இருந்தாள்...

இந்த மகிழ்ச்சி அவளது வாழ்க்கை முழுமைக்கும் போதும்... மிகுந்த பரவசத்தோடு உறங்கும் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

மாலை மங்கி இரவும் கவிழ்ந்தது... அப்போது தான் அவன் மெல்ல போதை தெளிந்து எழுந்து அமர்ந்தான்... தான் எங்கே இருக்கிறோம் என்று உணர முடியாதளவுக்கு அவனுக்குத் தலைவலித்தது... கைகளால் தலையைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அமர்ந்திருந்தவன் மெல்ல தலை உயர்த்திப் பார்த்தான்...

எதிரில் அமர்ந்திருந்த முத்துபேச்சியைக் கண்டு குழப்பமுற்றவனாய் அந்த வீட்டை சுற்றி பார்த்தான்... அது அவளது வீடு... ஒன்றிரண்டு முறை அவன் இங்கே வந்திருக்கிறான்... ஆனால் இப்போது அவன் எப்படி இங்கே...?

மிகவும் குழப்பமாக இருந்தது அவனுக்கு...

"இதைக் குடி..." என்று முத்துபேச்சி 'ப்ளாக் டீ'யை அவன் முன் நீட்ட...

மறுக்காது வாங்கிக் குடித்தவன் முயன்று யோசிக்க ஆரம்பித்தான்... முத்துபேச்சியிடம் அலைப்பேசியில் பேசியவன் மனம் வெறுத்து போனவனாய் மதுபான கடைக்குப் போனது வரை அவனது நினைவில் இருந்தது...

அதன் பின் என்ன நடந்தது என்பது அவனுக்கு அவ்வளவாக நினைவில்லை... அந்தளவுக்கு அளவுக்கு அதிகமாகக் குடித்திருந்தான் அவன்...

அப்போது தான் தனது உடை மாற்றப்பட்டு இருப்பதை உணர்ந்து அவளைச் சங்கடத்துடன் பார்த்தான்... அவளோ சாதாரணமாக அவனைப் பார்த்தாள்...

"வாமிட் பண்ணிட்டேன்னா...?"

ஆம் என்பது போல் தலையசைத்தாள் அவள்...

"சாரி... உன்னை ரொம்பத் தொந்திரவு பண்ணிட்டேன்..."

அதற்கு அவள் ஒன்றும் பேசாது அவனை வெறித்துப் பார்த்தாள்... அவள் தானே அவனைத் தொந்திரவு செய்திருக்கிறாள்... அதை அவனிடத்தில் சொல்ல முடியாது தவித்தாள் அவள்... இன்னும் சிறிது நேரத்தில் அவன் சென்றுவிடுவான்... அதன் பின் அவனை எப்போது பார்ப்போமோ என்று ஏக்கத்துடன் அவனைப் பார்த்தாள் அவள்...

"என்னோட ட்ரெஸ்..."

"எல்லாம் வாமிட்டாகிருச்சு..." என்றவள் பாண்டியனின் உடையில் இருந்து புது உடையை எடுத்து அவனிடத்தில் நீட்டினாள்...

மௌனமாய் அதை வாங்கிக் கொண்டவன் அதை மாற்றிவிட்டு அவளிடம் வந்தான்...

"நித்யாவுக்காகப் பொய் சொன்னியா...?"

இல்லை என்பது போல் தலையாட்டினாள்...

"இல்லை நீ பொய் சொல்ற... அவளுக்காகத் தான் என் காதலை நீ ஏத்துக்க மாட்டேங்கிற... பொய் சொல்லாதேடி..." என்று முதலில் கத்தியவன் பின் அவளிடம் கெஞ்சினான்...

"இல்லை சாமி... நான் பொய் சொல்லலை... நீ எனக்கு நல்ல பிரெண்ட்... அது மட்டும் தான் நமக்கிடையே உள்ள உறவு... காதல் எல்லாம் கிடையாது சாமி..."

அவனுடன் ஓருயிர் ஈருடலாய் கூடிவிட்டு இப்போது தான் இப்படிப் பேசுவது கண்டு அவளுக்கே அத்தனை வேதனையாய் இருந்தது... இருந்தாலும் அவனுக்காகப் பொறுத்து கொண்டாள்...

"என் வாழ்க்கையிலும் காதல், கல்யாணம் எல்லாம் வரும் சாமி... என் மனசுக்கு பிடிச்சவரை நான் சந்திக்கும் போது இது எல்லாம் நடக்கும்... நிச்சயமா அது நீ கிடையாது சாமி..." இதைச் சொல்லும் போது அவள் உள்ளுக்குள் துடித்தது அவள் மட்டுமே அறிவாள்...

அவளது வார்த்தையில் அதிர்ந்து போய்ப் பார்த்தான் அவன்... அவளது இந்த வார்த்தைகளில் அந்தக் கணம் அவன் உள்ளுக்குள் செத்துப் போனான்... இது நாள் வரை அவன் கட்டி வைத்திருந்த காதல் மாளிகை அந்த நொடி தூள் தூளாய் சிதறிப் போனது...

அப்படி என்றால் அவள் தன்னைக் காதலிக்கவில்லையா... தான் தான் தவறாக எண்ணி கொண்டோமோ என்று மிகவும் குழம்பி போனான்...

"சாமி... நான் சொல்றதை கேட்பியா..."

உயிர்பில்லாமல் நின்று கொண்டிருந்த அவன் வெறுமனே தலையாட்டினான்...

"நீ உங்க வீட்டுக்கு மூத்த மகன் சாமி... உன் மேல அவங்க நிறைய எதிர்பார்ப்புகள் வைச்சிருப்பாங்க... அதை எல்லாம் நீ தான் நிறைவேத்தணும்... அவங்க கிட்ட கோபப்பட்டாதே... அவங்களை நீ தான் பார்த்துக்கணும்..."

அவள் சொன்னது எதுவும் அவனது காதில் ஏறவில்லை... ஆனால் அவனது மனம் அதை எல்லாம் குறித்து வைத்துக் கொண்டது...

"கட்டாயம் நீ கல்யாணம் பண்ணிக்கணும் சாமி... உன் அப்பா, அம்மாவுக்கு உன்னோட பிள்ளைங்களைத் தூக்கி கொஞ்சணும்ன்னு ஆசை இருக்காதா..."

இதை அவள் சொல்லும் போது அவன் அவளை வெறித்துப் பார்த்தான்... அவளின் மனமோ வலியில் துடித்துத் தவித்தது அவளுக்கு மட்டும் தான் தெரியும்...

"இந்தக் காதல் கொஞ்ச நாளைக்கு மனசை போட்டு கஷ்டப்படுத்தும்... ஆனா இதை மறந்துட்டு நீ உனக்கான வாழ்க்கையை அமைச்சுக்கோ..." என்றவள்,

"எந்தக் காரணத்தைக் கொண்டும் உன் குடும்பத்தை நீ வெறுத்துடாதே..."

மீண்டும் மீண்டும் அவள் அதை வலியுறுத்தும் போதே அவன் சுதாரித்து இருந்திருக்க வேண்டும்... ஆனால் அவனுக்கு இருந்த மனநிலையில் அதை அவன் கவனிக்கவில்லை...

"கல்யாணம் பண்ணிப்பேன்னு சத்தியம் செஞ்சு கொடு சாமி..."

அதில் அவளை ஆழ்ந்து பார்த்தவன், "என்னைக்குமே உன் பேச்சை மீறும் தைரியம் எனக்கு இருந்தது இல்லை ஹ..." 'ஹனி' என்று சொல்ல வந்தவன் நிறுத்தி நிதானித்து,

"பேச்சி..." என்று முடித்தான்...

அவனது அந்த விலகல் தன்மை அவளை மிகவும் பாதித்தது...

"நமக்கு இடையே உள்ள இந்த நட்பு என்னைக்கும் இப்படியே இருக்கணும் சாமி... இருக்குமா...?"

அவனது மனம் முழுவதும் நிறைந்து வாசம் வீசும் இந்த வனமலரின் நேசத்தை அவன் யாசித்தால் அவளோ அவனது நட்பை யாசிக்கிறாள்...

சரி என்பது போல் தலையசைத்தவன் மேலே ஒன்றும் பேசாது அங்கிருந்து கிளம்பிவிட்டான்...

அவள் மட்டும் தான் அவனுக்குப் பொருத்தமில்லை... அந்த நித்யா தான் அவனுக்குப் பொருத்தம் என்று அசட்டுத்தனமாய் உளறி தன்னிரக்கத்தில் தவித்திருந்தால் அவன் அவளது காலில் விழுந்தாவது தனது காதலுக்காகப் போராடி இருப்பான்... இல்லை ஏதாவது அதிரடி செய்து அவளது கழுத்தில் தாலி கட்டியிருப்பான்...

ஆனால் நட்பு மட்டுமே போற்றும் அவளிடத்தில் அவனால் அது போல் எதுவும் அடாவடியாய்ச் செய்ய இயலவில்லை... தான் தான் அவளைத் தவறாக எண்ணி கொண்டோமோ என்று அவனுக்குத் தன் மீதே கோபம் வந்தது... தன் மீது அளவில்லா வெறுப்பு எழுந்தது...

நட்பில் காதலை கொண்டு வந்த தனது துரோகத்தை அவன் அறவே வெறுத்தான்...

****

அன்றிரவே அவன் தனது வேலை விசயமாக வடக்கே கிளம்பி சென்றுவிட்டான்... முழுதாய் ஆறு வருடங்கள் அங்கேயே கழித்தான்...

அவளை மறக்க வேண்டும் என்று நினைத்தவனுக்கு அவளை மறக்கத்தான் இயலவில்லை... அதனால் மதுவின் துணையோடு அவளை மறக்க நினைத்தான் அவன்...

அந்தோ பரிதாபம், மதுவின் போதையானது மாது போதை என்றால் என்ன என்பதைத் தெளிவாக உணர்த்தியது... இது எப்படிச் சாத்தியம் என்று அந்தப் போதையிலும் அவனுக்குக் குப்பென்று வியர்த்தது...

அவனது கண்ணம்மாவோடு காதலில் உருகிக் குழைந்து கூடிய காட்சிகள் படமாய் அவனுள் விரிந்தது... அதிலும் அவளின் உடலில் உள்ள தழும்புகள், மச்சம் முதற்கொண்டு அவனது நினைவில் வந்தது அவனுக்குமே பெருத்த ஆச்சிரியம்...

அப்படி ஒரு நிகழ்வு நடந்திருக்கக் கூடுமோ என்று அவன் மனம் பேராசை கொண்டது... ஆனால் அவனது கண்ணம்மாவின் குணமோ அதற்குத் தடை போட்டது... அது அவனது ஆசைக்கு அணை போட்டது... அவளைப் பற்றித் தான் அவனுக்கு நன்கு தெரியுமே... லேசாகத் தொட்டால் கூடப் பஸ்மமாய் எரித்துப் பொசுக்கி விடுவாளே... அப்படி இருக்கும் போது இது எப்படிச் சாத்தியம் என்று அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

இது அவனது ஆழ்மனதின் ஆசையின் வடிவம் என்றே எண்ணி கொண்டான்... அப்படி எண்ணித்தான் கனவில் அவளுடன் குடும்பம் நடத்தினான்... பின் வந்த நாட்களில் அவளது அந்த நினைவுகள் மட்டுமே அவனுக்குச் சுவாசமாகி போனது...

எல்லாம் கனவு என்று நினைத்துத் தன்னை வருத்தி கொண்டு இருந்தவன் ஆறு வருடங்கள் கழித்து அது நனவு என்று தெரிந்த போது அளவில்லாத மகிழ்ச்சி கொண்டான்... அன்று மதுவின் போதையில் நடந்த அழகிய தவறு இன்று அவனது மகளாய் உருகொண்டு வளர்ந்திருப்பதைக் கண்டு எல்லையில்லா சந்தோசம் அடைந்தான்... ஆனால் இன்னமும் அவனது கண்ணம்மா அவன் கை வந்து சேராதது குறித்து அவனுக்குப் பெருத்த வருத்தமாய் இருந்தது...

அவனிடம் வந்து சேர இன்னமும் என்ன தடையிருக்கிறது அவளுக்கு என்று அவனுக்குப் புரியவில்லை...

விஜய் சென்ற பின் உயிர்ப்பில்லாமல் நடமாடியவளை கண்டு பாண்டியன் சந்தேகமாய்ப் பார்த்தான்... பல முறை என்ன என்று அவளிடத்தில் கேட்டு கூடப் பார்த்து விட்டான்... எதற்கும் அவளிடத்தில் பதில் இல்லை...

இந்த நேரத்தில் செல்வநாதன் அவளை அழைத்து நித்யாவிற்குப் புத்திமதி சொல்ல சொன்னார்... அவளுடைய துக்கத்தில் அவள் நித்யாவை மறந்து போனதை நினைத்துத் தன்னைத் தானே கடிந்து கொண்டாள்...

"முத்து... அவனும் இவளை விரும்பியிருந்தா எந்தப் பிரச்சினையும் இல்லை... இவள் சொன்னதைக் கேட்டு அங்குப் போய் நான் அசிங்கப்பட்டு வந்தது தான் மிச்சம்... அத்தனை அவமானமா இருந்தது... தப்பு எல்லாம் இவள் பேரில் தான்... அதனால் தான் அமைதியா வந்துட்டேன்... இப்போ பிரச்சினை அது இல்லை... நான் பார்க்கிற மாப்பிள்ளைக்கு இவளை ஒழுங்கா கழுத்தை நீட்ட சொல்லு..." என்று அவர் மகளைக் கண்டு சத்தம் போட்டார்...

முத்துபேச்சிக்குக் குற்றுவுணர்ச்சி கொன்றது... நித்யாவை தனியே அழைத்து அறிவுரை கூறினாள்...

"நாம விரும்புறவங்களைக் காட்டிலும் நம்மை விரும்புறவங்களை நாம விரும்புவது தான் புத்திசாலித்தனம் நித்தி... இந்த மாப்பிள்ளைக்கு உன்னை ரொம்பப் பிடிச்சியிருக்காம்... பேசாம கல்யாணம் பண்ணிக்கோ... ஐயா, அம்மாவை கொஞ்சம் நினைச்சு பாரு... உன்னை விட்டா அவங்களுக்கு யாரு இருக்கா...?" என்று அவளைத் தொடர்ந்து தேற்றி திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தாள்...

அதன் பின் நித்யா திருமண வேலையில் அவள் பரபரப்பாக மூழ்கி போக, தன்னுள் நிகழ்ந்த மாற்றத்தை அவள் உணரவில்லை...

நித்யா திருமணமாகி போன பின்பு மீண்டும் செல்வநாதன் அவளிடம் திருமணப் பேச்சை எடுக்க, அவளோ அதற்கு மறுத்துவிட்டாள்...

அன்று முழுவதும் விஜயின் எண்ணம் தான் அவளுக்கு... எதை எதையோ நினைத்துக் கொண்டு வந்தவளுக்கு அப்போது தனது நாள் கணக்கு உதைத்தது... உதைத்த கணக்கை சரியாய் கணக்கிட்டு பார்த்தவளுக்கு விடை சரியாக வர மனதில் எழுந்த ஆனந்தத்தோடு தனது வயிற்றைத் தடவி பார்த்தாள்...

தன்னவனின் அடையாளமாய் அவளது மணிவயிற்றில் அவனது வாரிசு வளர்ந்து வருகிறது... அத்தனை

சந்தோசமாய் இருந்தது அவளுக்கு... இதை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை... வாழ்க்கை வெறுத்து இருந்தவளுக்கு வாழ்வதற்கான பற்றுக்கோலாய் குழந்தை தோன்றியிருந்தது...

தன்னுடைய சாமி கொடுத்தப் பிரசாதமாக அந்தக் குழந்தையைப் புனிதமாகக் கருதினாள்... அதைப் பெற்று வளர்ப்பது என்று உறுதியாய் முடிவு செய்தாள்... அதனால் சமுதாயத்தில் என்ன, என்ன அவமானம் ஏற்படும் என்று அவளுக்கு நன்கு தெரியும்... ஆனாலும் அந்த எண்ணத்தில் இருந்து அவள் சற்றும் பின்வாங்கவில்லை...

அவளின் நிலை கண்டு குமாரி கண்டபடி திட்ட துவங்க, பாண்டியன் ஒருவன் தான் அவளுக்குப் பெரும் ஆறுதலாய் இருந்தான்... அவனுக்கு முத்துபேச்சியைப் பற்றி நன்கு தெரியும்... எல்லோரிடமும் தள்ளி நின்று பழகும் அவள் இந்தக் குழந்தையைப் பெற்றுக் கொள்வது என்று பிடிவாதம் பிடிப்பதிலேயே தெரிந்து போனது அதன் பின்னால் இருக்கும் அவளது காதல் மனம்...

அதனால் அவன் அவளுக்கு முழு ஆதரவு தந்தான்... சிலர் அது அவனுடைய குழந்தை என்று சொன்ன போதும் அவன் அதைக் கண்டு கொள்ளவில்லை...

முத்துப்பேச்சிக்கு ஆறு மாதம் முடிந்த நிலையில் மருத்துவப் பரிசோதனைக்காக அவள் மருத்துவமனை வந்த போது தான் அவள் மீண்டும் மைதிலி, ரகுராமனை சந்தித்தாள்...

முதலில் மைதிலியை பார்த்தவள் முகம் எதையோ வென்றுவிட்ட உணர்வை வெளிப்படுத்தியது... அவரிடத்தில் எதையோ சொல்ல போனவள் அங்கு ரகுராமனை கண்டதும் அமைதியாகிவிட்டாள்...

அவள் அப்படி அமைதியாகச் செல்ல மைதிலி விட்டு விடுவாரா என்ன...!

"என்னம்மோ காதல் அது இதுன்னு கதை சொன்ன, இப்போ பார்த்தா வயத்தைத் தள்ளிக்கிட்டு இருக்க..." என்று

சொன்னவரின் கண்கள் அத்தனை கேலியாய் அவளைப் பார்த்தது...

அதன் அர்த்தம் புரிந்தவளோ அப்படியே துடிதுடித்துப் போனாள்...

"தேவையில்லாம பேசாதீங்க..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் அவள் சீற...

"யாருடி தேவையில்லாம பேசுறது... கழுத்துல தாலியை காணோம்... ஆனா வயித்துல குழந்தையிருக்கு... அப்போ உன்னை நான் எந்த மாதிரி எடுத்துக்கிறது... உன்னை மாதிரி வேசி..."

அடுத்த வார்த்தை அவர் பேசும் முன் தன் கையுயர்த்தி அவரைத் தடுத்தவள் முகம் ஆத்திரத்தில் சிவந்து போனது...

"என் குழந்தை மேல சத்தியமா சொல்றேன், இது உங்க புள்ளையோட வாரிசு தான்... தேவையில்லாம என்னைப் பத்தி நீங்க தப்பா பேசாதீங்க..." என்றவளின் உடல் அடக்கப்பட்ட கோபத்தில் நடுங்கியது...

அவள் ஆவேசமாய்க் கூறியதில் மைதிலி சற்று திகைத்து தான் போனார்... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"யாரோட புள்ளைக்கு யாருடி அப்பன்...?" என்று எகிற...

"நிச்சயம் என் புள்ளைக்கு உங்க புள்ள தான் அப்பா..."

அவள் சொன்னதும் அதிர்ச்சியை வெளிப்படுத்திய ரகுராமனின் முகத்தைக் கண்டு என்ன நினைத்தாளோ,

"இது உங்க மகனோட வாரிசு தான்... அதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம்... எந்தச் சூழ்நிலையிலும் இது உங்க மகனோட குழந்தைன்னு நான் அவர் கிட்ட சொல்ல மாட்டேன்... என்னால் அவரோட வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் வராது..." என்றவள் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

"அப்பாடி நம்மைப் பிடிச்ச பீடை ஒழிஞ்சது..." என்று மைதிலி நிம்மதி பெருமூச்சு விட...

"இனி தான் ஆரம்பமாகப் போகிறது..." என்ற ரகுராமனை கண்டு,

"ஒண்ணு வாயை திறக்கிறது கிடையாது... இல்லை அப்படியே வாயை திறந்தாலும் இப்படி அச்சுபிச்சுன்னு எதையாவது அசட்டுத்தனமா உளர்றது... பேசாம வாங்க..." என்று மைதிலி கணவரை அடக்க...

அதற்கு மேல் ரகுராமன் ஒன்றும் பேசவில்லை...

ஒரு நல்ல நாளில் முத்துபேச்சி கயல்விழியைப் பெற்றெடுத்தாள்... தன்னையும் தன்னவனையும் கொண்டு பிறந்த மகளைக் கண்டு அவளுக்கு அத்தனை பூரிப்பாய் இருந்தது... அந்த மகிழ்ச்சியில் ஊராரின் ஏளனப் பார்வை எல்லாவற்றையும் தாங்கி கொண்டாள்...

நாளாக நாளாக அவளின் நேர்கொண்ட நன்னடத்தைக் கண்டு மக்களும் அவளைப் பற்றிப் புறணி பேசுவதை விட்டு விட்டு தங்களது வாழ்க்கையைப் பார்க்கலானர்...

மீண்டும் ஆறு வருடங்கள் கழித்து விஜய்யை நேரில் கண்ட போது அவளுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... அதிலும் தனது வீட்டிற்கு வந்த அவனை அப்படி ஒரு ஆனந்தமான மனநிலையில் வரவேற்றாள்...

அந்தச் சந்தோச மனநிலை எல்லாம் மகள் அவனைக் கண்டு 'அங்கிள்' என்றழைத்தது போது அப்படியே காணாமல் போனது... ஆனால் அது தானே எதார்த்தம், நிரந்தரம் என்பதைக் கசப்புடன் ஏற்றுக் கொண்டாள் அவள்...

அதனால் தான் மருத்துவமனையில் கயல்விழி அவனை 'அங்கிள்' என்று அழைத்துவிடுவாளோ என்று விஜய் பயந்து நின்ற போது அவனது மனவலியை உணர்ந்தவளாய் மகளிடம் அவனை ‘தந்தை’ என்றழைக்கச் சொன்னாள்...

அவளது வாழ்வு தான் சாபமாகி போய்விட்டது... தந்தை, மகள் வாழ்க்கையாவது நன்றாக இருக்கட்டுமே என்று எண்ணினாள்...

இதோ இப்போது ஊதியம் வாங்கிக் கொண்டு அவனுக்குப் பணிவிடை செய்யும் செவிலிப்பெண்ணாய் அவளின் நிலை பரிதாபமாய் மாறிப் போயிருக்கிறது...

அதை நினைத்து அவளுக்கு மட்டுமல்ல அவனுக்குமே பெருத்த வேதனையாக இருந்தது...

இதன் முடிவு அவளது கையிலா, இல்லை அவனது கையிலா, இல்லை வேறு யார் கையில் என்பதைக் காலம் தான் முடிவு செய்ய வேண்டும்...

வாசம் நேசமாகும்...!!!

மீனாவிற்குத் தலையெல்லாம் பாரமாகக் கனத்த போதும் இப்படியே படுத்திருப்பது சரிவராது என்றெண்ணி மெல்ல எழுந்தவள் சமையலறையை நோக்கி நடந்தாள்... கடந்த இரண்டு நாட்களாகக் காய்ச்சல் விடாமல் இருக்கிறது... காய்ச்சலுக்குரிய மாத்திரையை விழுங்கிய போதும் அது நின்றபாடில்லை...

சமையலறை வாயிலுக்கு வந்தவள் அங்குக் கண்ட காட்சியில் அப்படியே தேங்கி நின்றாள்... பாண்டியன் வேட்டியை மடித்துக் கொண்டு மும்முரமாக அடுப்பில் எதையோ கிண்டி கொண்டிருக்க, கயல்விழி உணவு மேசையில் அமர்ந்து கொண்டு கறிவேப்பிலையை உருவி கொண்டிருந்தாள் தனது தளிர் கரத்தினால்...

அதைக் கண்டு அவளது மனம் உருகி போனது... இந்த இரண்டு நாட்களாகப் பாண்டியன் தான் வீட்டு வேலைகள் எல்லாம் பார்ப்பதோடு மட்டுமில்லாமல் சமையலும் சேர்த்துச் செய்கிறான்... அவன் வீட்டிற்கும், மருத்துவமனைக்கும் அலைவது கண்டு அவள் இரக்கப்பட்டு உதவ முன்வந்தாலும் அவன் விடுவதில்லை...

"கயலு... உங்க அக்காவுக்கு உடம்பு சரியாகுற வரைக்கும் எந்த வேலையும் செய்ய வேண்டாம்ன்னு சொல்லு..." என்று அவளுக்குத் தடை போட்டுவிட்டான்...

ஆண் பிள்ளை அவன் வேலை செய்வது கண்டு அவளுக்குச் சங்கடமாக இருக்கும்... ஆனால் அவன் அவளை எதுவும் செய்ய விட மாட்டான்...

முத்துபேச்சி விஜயுடன் மருத்துவமனையில் இருப்பதால் வீட்டில் கயல்விழி, பாண்டியனுடன் அவள் தனித்து இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு போனாலும், அதற்குப் பாதகம் விளைவிக்கும் படி அவன் ஒருபோதும் நடந்து கொண்டதில்லை... இதுவரை அவன் வீட்டினுள் வந்ததில்லை...

இரவு வெளி வராந்தாவில் படுத்து கொள்பவன், காலையில் வீட்டின் பின்புறம் இருக்கும் குளியலறையில் குளித்து உடை மாற்றிக் கொள்வான்... பின் மூன்று வேளை உணவும் வராந்தாவில் தான்... அவ்வப்போது வெளியில் வேலை விசயமாகச் சென்று வருபவன் வெகுசீக்கிரத்தில் வீடு திரும்பி விடுவான்...

அவன் என்ன வேலை பார்க்கிறான் என்று அவளுக்குத் தெரியாது... ஆனால் அவனது முழுநேர வேலையும் கயல்விழியைப் பாதுகாப்பது தான் என்பது மட்டும் அவளுக்கு நன்கு தெரியும்...

இப்போது இரண்டு நாட்களாக அவளுக்கு உடல் சரியில்லாத காரணத்தால் அவன் வீட்டினுள் வந்து வேலை செய்கிறான்... அவன் குணம் அறிந்து அவன் வீட்டினுள் வரும் போது அவள் வெளியில் சென்று அமர்ந்துவிடுவாள்...

"கயலு... உங்க அக்காவை இங்கே வந்து உட்கார சொல்லு... உடம்பு சரியில்லாம மயக்கம் போட்டு கீழே விழுந்துட போகுது..."

பாண்டியன் கிண்டலாக உரைத்தபடி அவள் அமர்வதற்கு ஏதுவாக உணவு மேசையில் இருந்த நாற்காலியை இழுத்து போட... அதில் தனது யோசனையில் இருந்து வெளிவந்தவள் சமையலறைக்குள் உள்ளே நுழைந்தபடி,

"அது என்ன எப்பப்பாரு உங்க அக்கான்னு சொல்லிக்கிட்டு... எனக்குன்னு பேரு இருக்கு கயல்..." என்று கயல்விழியைப் பார்த்து சொன்னவள் அவனைக் கண்டு,

"என் பேரு மீனா..." என்று கழுத்தை நொடித்துக் கொண்டு சொல்லியவாறு நாற்காலியில் அமர்ந்தாள்...

அவள் முன் சூடாய்ப் பாலிருந்த தம்பளரை வைத்தவன், "உன் பேரு மீனாவா...? இதுநாள் வரை இது எனக்குத்

தெரியாம போச்சே..." என்று கிண்டலாய் உரைத்தவனின் கண்களும் சேர்ந்து சிரித்தது கேலியாய்...

அதைக் கேட்டு, "க்கும்... அப்படியே தெரிஞ்சு கிட்டாலும் முதல் வேலையா என் பேரை சொல்லிட்டுத்தான் மறு வேலை பார்க்க போறீங்களாக்கும்..." என்று அவள் நொடித்துக் கொள்ள, அதில் அவளை ஒரு மாதிரியாய் ஏறிட்டு பார்த்தவன் ஒன்றும் பேசாது அமைதியாய் சமையல் வேலையில் ஈடுபட்டான்...

'ரொம்ப அதிகமா பேசிட்டோமோ...' என்று நினைத்தவள் தானும் அமைதியாக இருந்தாள்...

கையிலிருந்த பாலை பருகியவள் கயல்விழியிடம், "குளிக்கப் போகலாமா கயல்..." என்று கேட்க...

சின்னவள் சரியென்று மீனாவுடன் கிளம்பினாள்...

"இந்தா புள்ள மீனா..."

பாண்டியன் தன் பெயர் சொல்லிக் கூப்பிட்டதும் பரவசத்துடன் திரும்பி பார்த்தாள் அவள்... அவள் கண்ணில் கண்ட ஆர்வம் அவனது மனதினையும் ஏதோ செய்தது... அதனால் அவளை ஏறிட்டுப் பார்க்காமல்,

"காலையில் குடிக்க உனக்குக் கஞ்சி வச்சியிருக்கேன்... குடிச்சிட்டு மாத்திரை போட்டுக்கோ... அப்படியே எங்க கூடக் கிளம்பி ஹாஸ்பிட்டலுக்கு வா... இன்னைக்கு டாக்டரை பார்த்துட்டு வரலாம்..."

"ஹாஸ்பிட்டல்லா...? வேண்டாம்..." என்று முகத்தைச் சுளித்தாள் அவள்...

இரண்டு நாட்களாக அவனும், கயல்விழியும் விஜய்யை பார்ப்பதற்காக மருத்துவமனை செல்லும் போது எல்லாம் மீனாவையும் கூப்பிட்டுக் கொண்டு தான் இருக்கிறான்... அவள் எதையாவது சொல்லி தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறாள்...

"இன்னைக்குக் கட்டாயம் எங்க கூட வர்ற..." என்று அவன் கண்டிப்புடன் கூற...

"அதிகாரத்தைப் பாரு..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் கயல்விழியை அழைத்துக் கொண்டு சென்றாள்...

கயல்விழியைக் கிளப்பித் தானும் கிளம்பி கொண்டு அவள் வந்த போது பாண்டியனும் கிளம்பி தயாராக இருந்தான்... மூவரும் உணவு உண்டுவிட்டு முத்துபேச்சிக்கும், விஜய்க்கும் உணவு எடுத்துக் கொண்டு கிளம்பினர்...

ஆட்டோவில் கயல்விழி நடுவில் அமர்ந்திருக்க அவர்கள் இருவரும் இரு ஓரத்தில் அவளுக்குப் பாதுகாப்பாய் அமர்ந்திருந்தனர்...

விஜய்யை அரசாங்க மருத்துவமனையில் இருந்து தனியார் மருத்துவமனைக்கு மாற்றியிருந்தனர்... கயல்விழி இருந்த அதே மருத்துவமனை தான்...

விஜய் இருந்த அறையை அவர்கள் அடைந்த போது அப்போது தான் விஜய் உறக்கம் கலைந்து எழுந்திருந்தான்... மகளைக் கண்டதும் சந்தோசமாய்ப் புன்னகைத்தான்...

கயல்விழிக்கு கழுத்துக் காயம் ஆறாததால் அதில் இன்னமும் சிறியதாய் கட்டு போடப்பட்டு இருந்தது...

"அப்பா..." என்றபடி அவன் அருகில் வந்தமர்ந்த மகள் அவனது காயங்களை மெல்ல வருடி கொடுக்க, அதில் அவனது கண்கள் கலங்கியது...

தந்தை மகள் பாசம் கண்டு முத்துபேச்சியின் கண்களும் கலங்கியது... ஆனாலும் யாருக்கும் காட்டாதபடி அதை மறைத்து கொண்டாள்...

"முத்து... நான் இந்தப் புள்ளைய டாக்டர் கிட்ட காட்டிட்டு வர்றேன்..." என்று மூவருக்கும் தனிமை கொடுக்க வேண்டி பாண்டியன் மீனாவை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்...

சொன்னது போல் பொறுப்பாய் உடனிருந்து தன்னை மருத்துவரிடம் காட்டிவிட்டு மருந்து, மாத்திரைகள் வாங்கிக் கொண்டு வந்தவனை இமைக்காது பார்த்தாள் மீனா... தோற்றத்திற்கும், உருவத்திற்கும் சிறிதும் சம்பந்தம் இல்லாது இருப்பவனின் அக்கறை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது...
குடிகார தந்தையிடம் அடிப்பட்டு வளர்ந்தவள் அவள்... அவளது அன்னையும் கணவனிடம் அத்தனை கொடுமைப்பட்டு இருக்கிறாள்... அந்தக் கொடுமை எல்லாம் அவள் பார்த்து வளர்ந்ததினாலோ என்னவோ இந்த ஆண்மகன் அவளது கண்ணிற்கு வித்தியாசமாகத் தெரிந்தான்...

அவர்கள் இருவரும் திரும்பி வந்த போது கயல்விழி தந்தைக்கு உணவு ஊட்டி கொண்டிருந்தாள்... இதற்கு முன் மைதிலி விஜய்க்கு மட்டும் சமைத்துக் கொடுத்துவிட்டார்... அவருக்கு முத்துபேச்சிக்கு உணவு கொடுப்பதில் பிடித்தம் இல்லை... வேறு யாருக்கு என்ன செய்தாலும் அவளுக்கு எதுவும் செய்யக்கூடாது என்ற வெறுப்பில் இருப்பவர் அவர்...

அதனால் விஜய்யும் அவரது உணவை மறுத்துவிட்டு முத்துபேச்சி வீட்டில் இருந்து வரும் உணவை உண்ண ஆரம்பித்தான்... அவளின்றி அவனில்லை என்பதை அவனது அன்னைக்கு உணர்த்திட நினைத்தான்... அதை அவர் சரியாக உணர்ந்து கொண்டாலும் வெளிக்காட்டி கொள்ளவில்லை... அது அவரின் இயல்பும் இல்லையே... அதனால் அதை அவர் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை...

எக்கேடோ கெட்டுப் போ என்பது போல் மகனை தண்ணி தெளித்து விட்டு விட்டார்...

கயல்விழி விஜய்க்கு உணவு ஊட்டி முடிக்கும் வரை அங்கு இருந்தாள் மீனா... பின்பு அவள் கயல்விழியை அழைத்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினாள்...

இருவரையும் தனியாக அனுப்ப பாண்டியன் மிகவும் தயங்கினான்... விஜய் தான் தைரியமூட்டினான்...

"இப்போ அந்தச் சுந்தரலிங்கம் உயிரோடு இல்லை.. அதனால் கயல்க்கு எந்த ஆபத்தும் இல்லை பாண்டி..." என்று அவனைச் சமாதானப்படுத்தி அவர்கள் இருவரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தான்...

அவனுக்குமே மகள் அவனுடன் இருக்க வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருந்தது... ஆனால் அவளது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு அவன் அமைதியாக இருந்தான்...

"முத்து... நீ தேர்தல் விசயமா ஐயாவை பார்த்துட்டு வந்துடுறியா...? நான் விசய்க்கு துணையா இங்கே இருக்கேன்..."

முத்துபேச்சியின் வேலைப்பளு தெரியுமாதலால் விஜய்யும் அதற்குச் சரியென்றான்... கடந்த ஐந்து நாட்களாக உணவு, உறக்கமின்றி அவள் தன்னைக் கவனித்து வருவது கண்டு அவனுக்குமே பாவமாக இருந்தது...

சரி என்று அதற்குச் சம்மதித்தவள் உடனே கிளம்பாமல் அவனது உடலை சுத்தம் செய்து வேறு உடை மாற்றிவிட்டு அதன் பின்னரே கிளம்பினாள்...

எந்தவித முகச்சுளிப்பும் இல்லாமல் அவள் தனக்குப் பணிவிடை செய்வதைக் கண்கள் பனிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்... இத்தனை அன்பு வைத்திருப்பவள் ஏன் தன்னை விட்டு விலகியிருக்கிறாள் என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை...

விஜய் மீதான அவளது அன்பை கண்டு பாண்டியனும் கண்கள் கலங்க நின்றிருந்தான்...

முத்துபேச்சி வெளியில் கிளம்பியதும் பாண்டியன் விஜய்யிடம் வந்தான்...

"விசய்..." என்று அவனை அழைக்க...

"என்ன பாண்டி...?"

"முத்து தான் இப்படிப் பிடிவாதம் பிடிக்குதுன்னா நீயும் ஏன் அது போக்குல விட்டுப் பிடிச்சிட்டிருக்க... வலுக்கட்டாயமாவாவது அது கழுத்துல தாலி கட்டி உன் கூடக் கூட்டிட்டு போக வேண்டியது தானே விசய்... இத்தனை வருசமா அது படுற வேதனையைப் பார்த்து என்னால தாங்க முடியலை... நீ இங்கே திரும்ப வந்தப்பவே எனக்கு லேசா சந்தேகம் வந்துச்சு... அன்னைக்கு உன் வீட்டில் உன்னோட அம்மா கிட்ட கயல் உன்னோட குழந்தைன்னு நீ சொன்னதை முத்து கிட்ட சொன்னப்போ அது அதிர்ந்து போனதை நான் பார்த்தேன்... அதை எனக்குத் தெரியாம சாமர்த்தியமா மறைச்சிட்டதா முத்து நினைச்சிக்கிட்டு இருக்கு... சின்ன வயசுல இருந்து முத்தை நான் பார்க்கிறேன்... அதோட மனசு எனக்குத் தெரியாதா...?" என்றவன்,

"முத்து உன்னை ரொம்ப லவ் பண்ணுது விசய்... கயலை உண்டானப்போ எத்தனை சந்தோசம் பட்டுச்சு தெரியுமா... எல்லோரும் அவளை அசிங்கமா பேசினப்போ அவள் எதையும் கண்டுக்கலை... என்னைப் புனிதப்படுத்த வந்த குழந்தைன்னு சந்தோசமா சொன்னா... அந்த நல்ல மனசு யாருக்கும் வராது விசய்... முத்து மனசுல அத்தனை காதல் இருக்கப் போய்த் தான் அது உனக்காக வாழ்ந்துட்டு இருக்கு... நீ எதையாவது செஞ்சு அவ மனசை மாத்தும் வழியைப் பாரு விசய்..."

பாண்டியன் சொன்னதைக் கேட்டு விஜய்யின் கண்கள் கலங்கியது தன்னவளின் துயரத்தை நினைத்து...

"எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை பாண்டி... நிச்சயம் அவள் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டாள்... ஒரே ஒரு வழி தான் இருக்கு... நீ சொல்ற மாதிரி வலுக்கட்டாயமா தான் அவள் கழுத்தில் தாலி கட்டணும்... அப்படிச் செய்ய எனக்குக் கஷ்டமாயிருக்கு... ரெண்டு பேரும் சந்தோசமான மனநிலையில் கல்யாணம் பண்ணணும் பாண்டி... அவள் விருப்பமில்லாமல்

கல்யாணம் பண்ண எனக்கு விருப்பமில்லை... நான் என்ன செய்யப் பாண்டி...?"

பரிதாபமாய்க் கேட்ட விஜய்யை பார்க்க பாண்டியனுக்குமே பாவமாகத் தான் இருந்தது... உயிரை கூடக் கொடுக்கும் அளவுக்கு முத்துபேச்சி மீது உயிரை வைத்திருக்கும் காதலன்... இதை விடத் தனது தோழிக்கு என்ன வேண்டுமாம் என்று அவளிடம் அதிகக் கோபம் வந்தது அவனுக்கு...

"முதலில் தேர்தல் முடியட்டும் பாண்டி... எதுவாயிருந்தாலும் அதுக்குப் பிறகு யோசிக்கலாம்... அதற்குள் என் கையும், காலும் சரியாகிவிடும்... நிச்சயம் நான் அவளைக் கைவிட்டு விட மாட்டேன் பாண்டி..." என்று விஜய் உறுதியாகச் சொல்லவும் பாண்டியன் மனது ஓரளவு சமாதானமாகியது...

****

மருத்துவமனையில் இருந்து வந்த முத்துபேச்சி நேரே செல்வநாதனை பார்க்க சென்றாள்... அவள் தேர்தலை பற்றிப் பேசும் முன்னரே அவர் அவளுக்காகத் தேர்தல் பணிகளைத் தெளிவாகத் திட்டமிட்டு இருந்தார்...

"உனக்கு விஜய்யை பார்க்கிற வேலை இருக்குது இல்லையா... அதனால் உனக்குப் பதிலா நான் தொகுதியில் பிரச்சார வேலைகளை மேற்கொள்கிறேன்... முக்கியப் பிரச்சாரக் கூட்டத்திற்கு மட்டும் நீ வந்தால் போதும்... அது போல் தலைவர் பிரச்சாரத்திற்கு வரும் போதும் நீ கட்டாயம் உடனிருக்க வேண்டும்..."

அவரது அன்பில் மனம் நெகிழ்ந்து சரியென்றவள், "ஐயா... செலவுக்குப் பணம் பேங்கில் இருந்து எடுத்து..."

அவளிடம் கொஞ்சம் பணம் இருந்தது வங்கியில்...

"மூச்... பணத்தைப் பத்தி நீ கவலைப்படாதே... உனக்கு நான் கொடுக்க வேண்டிய பணம் அப்படியே பேங்கில் தூங்குது... அதைத் தான் நான் தேர்தலுக்கு எடுத்துச்

செலவு பண்ண போகிறேன்... இது உன் பணம் தான் கவலைப்படாதே..."

மாதம் தோறும் அவளுக்கு என்று அவர் தனியே பணம் கொடுப்பார்... சம்பளம் தவிர அவள் வேறு எதுவும் அவரிடத்தில் வாங்கியது இல்லை... ஆனால் அவர் அவளை அப்படியே விட்டு விடவில்லை... அவளது பெயரில் அவர் வங்கியில் தனியே சேமித்து வருகிறார்...

அதற்கு மேல் எதுவும் சொன்னால் அவர் வருத்தப்படுவார் என்றெண்ணி அவள் நன்றி கூறிவிட்டு கிளம்பினாள்...

மீண்டும் மருத்துவமனைக்குப் போகும் முன் தனது ஏரியாவுக்குச் சென்று அங்கு மக்களை நேரில் சந்தித்துக் குறைகளைக் கேட்டு கொண்டாள்... அதன்பின் கயல்விழி படிக்கும் பள்ளிக்கு சென்றாள்...

கயல்விழிக்கு உடல் சரியில்லாத காரணத்தால் அவளால் பள்ளிக்கு செல்ல முடியவில்லை... இப்போது முழு ஆண்டுப் பரீட்சை வேறு நடந்து கொண்டிருக்கிறது... அவள் நன்கு படிக்கும் குழந்தை என்பதால் முந்தைய தேர்வின் மதிப்பெண்களின் அடிப்படையில் அவளை அடுத்த வகுப்பிற்குத் தேர்ச்சி அடையச் செய்வதாகப் பள்ளி தலைமையாசிரியர் கூறிவிட்டார்... அதனால் அவள் வீட்டிலிருக்கிறாள்...

ஆனால் முத்துபேச்சி இப்போது இங்கு வந்தது அதற்கல்ல... வேறு ஒரு காரணத்திற்காக...

அங்குப் படிக்கும் பொருளாதார வசதியில் பின்தங்கிய மாணவிகளில் வயதுக்கு வந்த சிறுமிகளுக்கு மட்டும் மாதந்தோறும் உள்ளாடை இரண்டு செட் மற்றும் மாதாந்திர பிரச்சினைக்கான நாப்கின் ஒரு பாக்கெட் என்று இந்த இரண்டும் இலவசமாகக் கொடுத்து வருகிறாள்... அவர்களுக்கு அந்தச் சமயத்தில் சுத்தமாய் இருக்க வேண்டிய சுகாதாரத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்வதற்காக இந்தச் சேவையை அவள் ஆற்றி வருகிறாள்...

கடந்த சில வருடங்களாகத் தான் இதை அவள் செய்து வருகிறாள்... குஜராத்தில் உள்ள சூரத்தில் மீனா மேத்தா என்ற பெண்மணி இதை ஒரு முக்கியச் சேவையாகச் செய்து வருவதைச் செய்தித்தாளில் படித்த போது அவளது மனதிலும் தான் ஏன் இது போல் செய்யக் கூடாது என்கிற எண்ணம் உதித்தது...

சாலையோரமாய் வசித்த போது இந்த மாதிரி சமயத்தில் அவள் எவ்வளவு துன்பப்பட்டு இருக்கிறாள் என்பது பெண்ணான அவளுக்கு மட்டும் தான் தெரியும்...

அதனால் சில நல்ல மனிதர்களின் உதவியோடு இந்தச் சேவையை அவள் செய்து வருகிறாள்... இந்தச் சேவை மூலம் இரு பெண்களுக்கு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறாள்...

குறைந்த செலவில் சுகாதரமான நாப்கினை தயாரிப்பது எப்படி என்று கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்ணிற்கு இந்த வேலை வாய்ப்பை அவள் ஏற்படுத்தித் தர, இப்போது அந்தப் பெண் முத்துபேச்சிக்கு மட்டும் அல்லாது வெளியிலும் இதை விற்று நல்ல லாபம் சம்பாதிக்கிறாள்... எப்போதுமே தரமான பொருட்களுக்குச் சந்தையில் நல்ல மதிப்பு, வரவேற்பு உண்டு இல்லையா...

அது போல் தான் உள்ளாடை தயாரிப்பிலும்... அதற்கும் ஒரு கைம்பெண்ணிற்கு உதவும் பொருட்டு இந்த வாய்ப்பை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்து இன்று அவரும் நல்லவிதமாக இருக்கிறார்...

மொத்தத்தில் ஒரு சேவை மூலம் பல உதவிகள், பல மகிழ்ச்சிகள்...

இப்போது கயல்விழிக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தால் கடந்த இரண்டு மாதமாக அவள் இங்கு வரவில்லை... அதனால் மீண்டும் பள்ளிக்கு வந்து இந்தக் 'கிட்'டை கொடுத்துவிட்டு சென்றாள்... அது போக அருகில் இருக்கும் மற்ற பள்ளிகளுக்கும் சேர்த்து... வருங்காலத்தில் இதை இன்னுமும் விரிவடையச் செய்ய வேண்டும் என்று

அவளுக்குப் பெரிதாக ஆசை இருந்தது... நிச்சயம் அவள் அதைச் செய்வாள்...

எல்லா வேலைகளையும் அவள் முடித்துக் கொண்டு மீண்டும் மருத்துவமனைக்கு வந்த போது மாலை மங்கி இரவாகி போனது... பாண்டியன் அவளுக்காகப் பொறுமையாகக் காத்திருந்தான்... அவன் கண்ணும் கருத்துமாக விஜய்யை பார்த்துக் கொண்டான்...

முத்துபேச்சி வந்ததும் பாண்டியன் விடைப்பெற்றுச் சென்றான்...

"சாப்பிட்டியா சாமி...?" என்று கேட்டவள் அவனது பார்வையில் நாக்கை கடித்துக் கொண்டாள்...

அவனோ பார்வையை வேறு எங்கும் திருப்பாது அவளை உறுத்து விழித்தான்... அதில் பாவையவள் முகம் சிவந்து போனது வெட்கத்தில்...

"சாப்பிட்டியா விஜூ..." என்று கேட்டவளின் குரல் கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் மெல்லமாய் ஒலித்தது...

" என்ன சொன்ன...? கேட்கலை..." என்றான் காதில் கை வைத்துக் கொண்டு வேண்டுமென்றே...

"போ விஜூ..." என்று அவள் அழகாய் வெட்கப்பட...

அவளைப் பார்த்து கொண்டிருந்தவனின் விழிகளில் ரசனை தெரிந்தது...

"நான் சாப்பிட்டேன்... நீ சாப்பிடு..." என்று அவன் சொல்ல...

அவள் மறுப்பு சொல்லாது உண்ண ஆரம்பித்தாள்... அவள் உண்டு முடிக்கும் வரை அவன் அமைதி காத்தான்...

"நீ தூங்கு சாமி..." என்றவள் அவனுக்குப் போர்வையைப் போர்த்திவிட்டு அவனுக்கு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

வெளியில் அலைந்துவிட்டு வந்ததாலோ என்னவோ அவளுக்கு மிகவும் தலைவலித்தது... அவளையும் அறியாது அவளது கை தலையைப் பிடித்தது...

"தலைவலிக்குதா...?"

அவன் கேட்கவும் அவள் ஆமென்று தலையசைக்க...

"இங்கே வா..." இடது கரத்தை தூக்கி அவன் அவளை அழைக்க... அவளோ அவனுக்கு அருகில் செல்ல மிகவும் தயங்கினாள்...

அதைக் கண்டு அவன் மிகவும் வேதனை அடைந்தான்...

"இந்த நிலையில் என்னால் உன்னை எதுவும் பண்ண முடியாது... அதனால் பயப்படாமல் கிட்டே வா..." என்று வருத்தத்துடன் கூறியவனைக் கண்டு தன்னைத் தானே திட்டி கொண்டு அவன் அருகில் வந்தமர்ந்தாள்...

தன்னைக் கேள்வியாய் பார்த்தவளை இடது கரம் கொண்டு அவளது தோளோடு அணைத்துக் கொண்டு தன் மீது சாய்த்து கொண்டவன் அவளது தலையை மென்மையாய் பிடித்துவிட்டான்... அவனது செயலில் முதலில் திகைத்து விலக நினைத்தவள் அவனது வருடலில் தன்னை மறந்து அவனது தோள் சாய்ந்தாள்...

அந்தக் கணம் அவளது இழப்பு எத்தகையது என்ற நினைவு அவளது மனதை பெரிதாய் தாக்க, அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் அவள்...

"கண்ணம்மா..."

"ம்..." அவனது வருடலில், அவனது அருகாமையில் அவளது தலைவலி சிறிது மட்டுப்படுவது போலிருந்தது அவளுக்கு... சுகமாய் உறக்கம் வருவது போலிருந்தது...

"இந்த ஐஞ்சு நாளா நானும் உன்னைப் பார்த்துட்டுத்தான் இருக்கேன்... இப்பயெல்லாம் உனக்கு அடிக்கடி தலைவலி வருதே ஏன்...? டாக்டர் கிட்ட போய்க் காண்பிச்சியா...?"

"சாதாரணத் தலைவலிக்கு போய் யாராவது டாக்டர் கிட்ட போவாங்களா விஜூ..."

தனது காதுக்கருகில் ஒலித்த அவளது 'விஜூ' என்றழைப்பு அவனுள் தாபத்தைத் தூண்டியது... அவளை அள்ளி அணைத்து தன்னுள் அடக்கி கொள்ள வேண்டும் என்று அவனது காதல் மனம் துடித்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

முதலில் திருமணம் அதன் பின்னரே மற்றது எல்லாம்...

"கண்ணம்மா... நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...?"

திடுமென அவன் அப்படிக் கேட்டதும் அத்தனை நேர இனிமை மறைய அவள் சட்டென்று விலக முயல அதைத் தடுத்தவன் மீண்டும் அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டு,

"கல்யாணத்தைப் பத்தி பேசி இப்போ கிடைக்கிற நிம்மதியை நான் கெடுத்துக்கிறதா இல்லை... நீ இப்படியே இரு..." என்றவன் அவளது நெற்றியை வருடி விட அதில் உறக்கம் அவளை மெல்ல தழுவலானது...

அவளைப் பார்த்து கொண்டிருந்தவன் மனதில் அவளை எப்படியாவது கைப்பிடித்துத் தீர வேண்டும் என்கிற வெறி எழுந்தது... இத்தனை நாள் எழாத மோகத்தீ வேறு இன்று பெரும் ஜூவாலையாய் பற்றியெரிந்து அவனது திருமண ஆசைக்குத் தூபம் போட்டது...

தனது உடல்நலம் தேறியதும் முதல் காரியமாய்த் தன்னவளை கைப்பிடிக்க வேண்டும் என்று உறுதியாய் தீர்மானித்துக் கொண்டான்...

இன்னும் மூன்று மாதங்களில் வர போகும் தன்னவளின் பிறந்த நாளை தங்களது திருமணநாளாக மாற்றிவிட எண்ணி அந்த நாளை அவன் தேர்ந்தெடுத்தான்... அவளது பிறந்தநாள் பரிசாகத் தன்னையே அவளுக்குக் கொடுக்க எண்ணினான்... அதை அவளிடத்தில் சொல்லாது இனிய

அதிர்ச்சியாய் நடத்தி காட்ட வேண்டும் என்று முடிவு செய்தான்...

'இனிய அதிர்ச்சியா...? உண்மையில் அவளுக்குப் பேரதிர்ச்சியாக இருக்கும்...' என்று தனக்குள் சிரித்துக் கொண்டவன் அந்தக் கணம் திகைப்பும், வியப்புமாய் விரியும் தன்னவளின் விழிகளின் மொழியினைப் படிக்க இப்போதிருந்து ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்தான்...

மனதில் உறுதியாய் முடிவு எடுத்ததும் அவனையும் உறக்கம் வந்து தழுவி கொண்டது... மருந்துகளின் வீரியம் வேறு சேர்ந்து கொள்ளத் தன்னவளின் அருகாமையில் வெகுநாட்களுக்குப் பின் நிம்மதியாக உறங்கத் துவங்கினான் அவன்...

மறுநாள் காலையில் மைதிலி மகனை பார்க்க வந்தார்... இந்த ஐந்து நாட்களாக வராதவர் இன்று தான் வந்திருந்தார்... தான் வந்தும் அறையை விட்டு நகராமல் நின்று கொண்டிருந்த முத்துபேச்சியைக் கண்டு முகத்தைச் சுளித்தார் அவர்...

"விஜய்... நான் உன் கூடத் தனியா பேசணும்..."

குறிப்பாக அவளை வெளியில் போகச் சொல்லி அவர் சொல்ல... அதில் அவமானம் அடைந்த முத்துபேச்சி வெளியில் செல்ல முயல, விஜய் தனது கையால் அவளது கையைப் பற்றிக் கொண்டு அவளை நகர முடியாதபடி செய்தவன் அன்னையைக் கண்டு,

"அவளுக்குத் தெரியாமல் ரகசியம் எதுவும் என் கிட்ட கிடையாது... எது பேசுறதா இருந்தாலும் பேச்சி முன்னாடி பேசுங்க... அவள் வேறு... நான் வேறில்லை..." என்று அன்னையை நேரிடையாக அவன் தாக்கினான்...

அதில் அவரது முகம் அவமானத்தில் சிறுத்துப் போனது... உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டார்... இப்போது அவருக்கு அவனின் உதவி தேவை... அதனால் சற்று தழைந்து போனார்... அவன் பேசியதை கண்டு

கொள்ளாமல் தனது தேவையை அவனிடத்தில் உரைத்தார்...

"காயூ குழந்தைக்குப் பெயர் வைக்கணும் விஜய்... அதுக்குச் செலவுக்குப் பணம் வேணும்... அப்புறம் குழந்தைக்கு நகை போடுறதுக்கும் சேர்த்துப் பணம் வேண்டும்..."

இப்போது தான் காயத்ரி பிரசவத்திற்குப் பணம் கொடுத்திருந்தான்... அடுத்து இன்னொரு செலவா என்று அவனுக்குச் சற்று ஆயாசமாக இருந்தது... இப்போது அடிப்பட்டு இருப்பதால் மருத்துவ விடுமுறையுடன் அவன் சம்பளம் கிடைப்பதற்குச் சற்றுத் தாமதமாகலாம்... இதில் அவனது மருத்துவச் செலவு வேறு இருக்கிறது... என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை...

ஆனாலும் அவனால் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியவில்லை... குடும்பத்தின் தலை மகனாய் யோசித்தான்...

"இரண்டு நாள் டைம் கொடுங்கம்மா... யார் கிட்டேயாவது கேட்டு பார்க்கிறேன்..."

அவன் அப்படிச் சொல்லவும் சற்றுச் சமாதானம் அடைந்த மைதிலி வீட்டிற்குக் கிளம்பிச் சென்றார்...

அவர் சென்றதும் அவன் அருகில் வந்தமர்ந்த முத்துபேச்சி அவனிடம், "நான் வேணா தரட்டுமா விஜூ..." என்று ஆவலுடன் கேட்டாள்...

தன்னவனின் பாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ளும் தவிப்பு அவளிடத்தில்... தனக்காகத் துடிக்கும் அவளின் நேசம் அவனுக்குப் புரிவதாய்... ஆனால் அந்த நேசத்தைப் புரிந்து கொள்ளாமல் இருக்கும் அவளுக்கு அதை உணர்த்திட நினைத்தவனாய்,

"நீ யார் எனக்குப் பணம் கொடுப்பதற்கு...?" என்று நிர்தாட்சண்யமாய்க் கேட்க...

அதில் திகைத்து போனவள், "விஜூ... நான் யார்ன்னா கேட்கிற...?"

"ஆமாம்... அதைத் தான் கேட்கிறேன்..." என்றவன் அவளது பார்வையைச் சந்திக்காது வேறு பக்கம் பார்த்தான்...

நிச்சயம் அவளது கண்களைச் சந்தித்தால் அவனால் இது போல் பேச முடியாது... அவனைக் கலங்கச் செய்துவிடுவாள் அவனது ராட்சசி... அதனால் கவனமாய் அவளைப் பார்ப்பதை அவன் தவிர்த்தான்...

அவனது தாடையைப் பற்றித் தன்புறம் திருப்பியவள் அவனது தலையைக் கோதி கண்களில் கண்ணீர் மல்க, "நான் அடுத்தவளா விஜூ..." என்று தவிப்புடன் கேட்க...

"அடுத்தவள் இல்லாமல் நீ வேறு யார்...? என் காதலியா இல்லை என் மனைவியா...? எந்த உறவு முறையை என்னைச் சொல்லச் சொல்கிறாய்...? உன் பிடிவாதம் முன்னால் என் நம்பிக்கை எல்லாம் தூள் தூளாய் சிதறிப் போகிறது கண்ணம்மா... ஏன் இப்படி இருக்கிற கண்ணம்மா...? எனக்கு ரொம்ப வலிக்குதுடி..." என்று கூறியபடி தனது நெஞ்சை நீவி விட்டு கொண்டவன் அடுத்த நொடி துக்கம் தாங்காது ஆறுதல் வேண்டி அவளை அணைத்துக் கொண்டு அவளது நெஞ்சில் முகம் புதைத்தவனின் முதுகு குலுங்கியது அழுகையில்...

கம்பீரமான அந்த ஆண்மகனின் அழுகை பேதையவளின் மனதை சற்று அசைத்துப் பார்த்தது... தன் மனதிலுள்ள துயரத்தை அவனிடத்தில் சொல்ல முடியாது தவித்தவள் அவனை ஆறுதலாய் அணைத்து கொண்டாள்...

"நீ எனக்குப் பணிவிடை பண்ணும் போது எல்லாம் எனக்கு எப்படி இருக்கு தெரியுமா...? ஒரு பக்கம் சந்தோசம், ஒரு பக்கம் துக்கம்ன்னு ரெண்டு வேறுவிதமான மனநிலையை அனுபவிக்கிறேன்... ஒரு அம்மா தன்னோட குழந்தைக்கு எப்படி முகம் சுளிக்காம, அருவருப்பு அடையாம பணிவிடை செய்வாளோ அது போல் நீ செய்யும் போது எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா...? உன்னோட

அன்பு பார்த்து வாயடைத்து போய் நிற்கிறேன்... அதே சமயம் ஒரு வளர்ந்த ஆண்மகனா மனசுக்குள் கூசி போய்த் தவிக்கிறேன் கண்ணம்மா..."

"இத்தனை நாட்களில் உனக்கு நான் என்ன செய்தேன் கண்ணம்மா...? எதுக்கு இத்தனை காதல் என் மீது...? நான் உனக்குக் கொடுத்தது எல்லாம் துன்பம் மட்டும் தான்... அப்படி இருந்தும் என் மேல் ஏன்டி இத்தனை நேசம் உனக்கு... மனசு ரொம்ப வலிக்குது கண்ணம்மா... உன்னை என்னவளாக்கி, உன்னை ரொம்பச் சந்தோசமா பார்த்துக்கணும்ன்னு தோணுது கண்ணம்மா... இத்தனை நாள் நீ அனுபவிச்ச துன்பத்திற்கு எல்லாம் சேர்த்து வைத்துக் காலம் முழுவதும் உன்னைக் கண் கலங்காம தங்கத் தட்டில் வச்சு தாங்கணும்ங்கிற ஆசை பேராசையா இருக்குதுடி..."

"உன்னோட ஒட்டு மொத்த அன்பும் எனக்கு மட்டுமே வேணும்ன்னு சுயநலம் சுனாமியாய் பெருகுதுடி... இதுக்கு மேல் என்னால் உன்னை விட்டு இருக்க முடியும்ன்னு எனக்குத் தோணலை... நீ என்னை விட்டு போயிடாதேடி கண்ணம்மா... நீ வேணும் எனக்கு... என் வாழ்நாள் முழுவதும் வேணும்..."

அவன் பேச பேச அவனின் காதலில் சுகமாய் அவள் கரைந்த போதிலும் அவனுக்குப் பதில் பேச முடியாது தனக்குள் மருகி கொண்டிருந்தாள்... அந்த நிலையிலும் அவனுக்கு ஆறுதல் சொல்ல மறக்கவில்லை அவள்... அவனது தலை கோதி, முதுகு நீவி அவனை ஆறுதல் படுத்தியவள் தன் நெஞ்சோடு அவனை அணைத்து கொண்டாள்...

அன்று அவன் உணர்ந்த அவளது நறுமணத்தை இன்றும் அவன் உணர்ந்தான்... அன்று போல் இன்று அது அவனுள் தாபத்தை ஏற்படுத்தவில்லை... மாறாக அவளது இழப்பை அவனுக்கு அப்பட்டமாய் உணர்த்தி மிகவும் வலிக்கச் செய்தது...

ஏக்கத்துடன் விழிகளை உயர்த்தி அவளைப் பார்த்தவன், "நீ வேணும்ன்னா அதுக்கு அர்த்தம் உன்னுடைய உடல் இல்லை கண்ணம்மா... உன்னோட மனசு... அதில் இருக்கும் காதல்... இந்த ஐஞ்சு நாட்களில் தான் வாழ்க்கையில் காதலோட பங்கு என்ன என்பதை நான் நல்லா உணர்ந்து இருக்கேன்... இன்பத்தில் மட்டும் பங்கெடுப்பது காதலில்லை... துன்பத்திலும் துவளாமல் நின்று தோள் கொடுப்பது தான் காதல்... இந்த ஐஞ்சு நாளில் என்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் உன் கிட்ட கொடுத்து உன் கிட்ட நான் சரணடைஞ்சு இருக்கேன்னா அதுக்குப் பெயர் தான் காதல் என்பதைப் புரிந்து கொண்டேன்... நான் என்ன சொல்ல வர்றேன்னு உன்னால் புரிஞ்சு கொள்ள முடியுதா கண்ணம்மா...?"

தவிப்புடன் கேட்டவனைக் கண்டு கண்ணீர் மல்க பார்த்தவள் ஆம் என்பது போல் தலையாட்டினாள்...

இந்த ஐந்து நாட்களில் அவனை ஒரு சேய் போல் தாயாய் தான் மடி தாங்கியதை தான் அவன் அவ்வாறு குறிப்பிடுகிறான் என்பதை அவள் புரிந்து கொண்டாள்... அவளும் இந்த நாட்களில் தானே காதலின் முழுமையான அர்த்தத்தை உணர்ந்திருக்கிறாள்... நிச்சயம் அவளுக்கு இது போல் அடிப்பட்டு அவன் பணிவிடை செய்தாலும் அவளும் அவனைப் போல் அதை ஏற்றுக் கொண்டிருப்பாள் தான்... இதற்குக் காரணம் மனதில் இருக்கும் நேசம் தான் என்பது அவளுக்குப் புரியாமல் இல்லை...

காதலில்லா, காமமில்லா, உடல், மனம் தேவையைத் தாண்டிய தாய்மையின் தேடல் இது... அவன் தன்னவளில் தன் தாயை கண்ட அற்புதமான கணங்கள் இவை... இதுநாள் வரை தோழியாய், காதலியாய், மனைவியாய் கண்டு வந்த தன்னவளை தன் அன்னையாய் எண்ணி கைக்கூப்பித் தொழச் செய்த நெகிழ்வான தருணங்கள் இவை...

அவர்கள் இருவரது உரையாடல் அனைத்தையும் அறையின் வெளியில் இருந்த ரகுராமன் கேட்டு விட்டார்...

கதவை தட்டிவிட்டு தான் அவர் உள்ளே நுழைந்தார்... தங்களுக்குள் மருகி கொண்டிருந்த அவர்கள் இருவரும் அவரது வரவை கவனிக்கவில்லை...

அவர்களது பேச்சை கேட்டவர் மனம் வேதனையில் உழல மீண்டும் கதவை சாத்திவிட்டு வெளியேறினார்... இத்தனை வருடங்கள் மணவாழ்க்கை வாழ்ந்தும், இந்த முதுமையிலும் அவருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் இது போல் ஒரு நல்ல புரிந்துணர்வு இருந்தது கிடையாது... ஆனால் இந்த இளம் உள்ளங்களிடத்தில் இத்தகைய புரிந்துணர்வு இருப்பதைக் கண்டு அவர் பிரமித்துப் போய் வாயடைத்துப் போனார்...

அப்படிப்பட்ட ஒத்த மனமுடையவர்கள் வாழ்க்கையில் ஒன்று சேர முடியாமல் தவிப்பது கண்டு அவரது மனம் மிகவும் கனத்துப் போயிருந்தது... சொல்லொண்ணா வேதனையில் குற்றவுணர்ச்சியில் குறுகுறுத்துத் தவித்தது அவரது நெஞ்சம்...

முத்துபேச்சி விஜய்யின் வேதனையைப் போக்கும் வகையறியாது அவனை விட்டு மெல்ல விலகினாள்... அவளது அந்த விலகலை கண்டு அவன் வருத்தத்துடன் பார்க்க, அவளோ எழுந்து சென்று கதவை தாழ் போட்டுவிட்டு மீண்டும் அவனிடத்தில் வந்தமர்ந்தாள்...

அவனது முகத்தை வாஞ்சையுடன் வருடி கொடுத்தவள் அவனைக் காதலாய் பார்த்தாள்... இத்தனை வருடங்களில் முதன்முறையாக அவளது கண்ணில் வழிந்த காதலை கண்டு அவன் வாயடைத்துப் போனான்...

அன்று அடிப்பட்ட போது காதலை சொன்னவளை இது போல் கூர்ந்து கவனிக்கவில்லை அவன்...

சுமார் பத்து வருடங்களாகக் காதலை மனதுக்குள் பொத்தி வைத்துக் கொண்டு இருப்பவனுக்கு அவளது இந்த நேசம் கலந்த பார்வை எல்லையில்லா உவகையைக் கொடுத்தது...

கண்களில் காதல் மின்ன அவள் அவனைப் பார்க்க, அவளின் காதலை கண்டு கண்கள் கலங்கியவனாய் அவன் தவித்திருந்தான்...

'கடவுளே... இத்தனை காதலை அனுபவிக்கும் அதிர்ஷ்டத்தை எனக்கு ஏன் கொடுக்காமல் போனாய்...' என்று மனதுக்குள் ஆண்டவனை நிந்தித்தான்...

அவனது எண்ணம் புரிந்தார் போன்று அவனது முகத்தைத் தனது இரு கரத்தால் மென்மையாய் பற்றியவள் அதில் அடுத்தடுத்து முத்தங்களைப் பரிசாகக் கொடுத்தாள் மிக மிக மென்மையாய்... அவனது மனக்காயத்திற்கு மருந்தாக மயிலிறகு போல் வருடிச் சென்றது அவளது இதழொற்றல்...

அவனும் காதலில் மனம் கரைந்தவனாய் கண்களை மூடி அவளது முத்தத்தில் கரைந்தான் சுகமாய்... இருவரின் காதல் மனமும் அந்தக் கணத்தை மிகவும் அழகாய் ரசித்தது...

அப்போது அவள் அவனது இதழில் இதழ் பதிக்க வரும் போது அவன் சட்டென்று விலகினான்...

"ஏன் விஜூ...?" தவிப்புடன் வந்தது அவளது வார்த்தைகள்...

"எனக்கு வேண்டியது உன் உடல் அல்ல... உன் மனசு... அதை எப்போ எனக்குத் தர போகிற...?"

"இப்பவும் என் மனசில் நீ மட்டும் தான்டா நிறைஞ்சிருக்க..."

அவனது இடது கையை எடுத்து தனது நெஞ்சின் மீது வைத்தபடி அவள் சொல்ல... அவன் மெல்ல தன் கையை உருவி கொண்டு,

"அதைத் தான் எப்போது உரிமையுடன் எனக்குத் தர போகிற...? என் மனைவியாய்..."

அவன் சொன்னதைக் கேட்டுப் பதில் தெரியாது திகைத்து விழித்தாள் அவள்...

அவள் பதில் பேசாதது கண்டு அவன் வேதனையுடன் தனது விழிகளை மூடி கொண்டான்...

அந்த உணர்ச்சி மிகுந்த நிலையிலும் தானாய் விலகி நின்ற அவனது கண்ணியத்தைக் கண்டு அவள் மனதுக்குள் பெருமை அடைந்தாலும், அவனது வேதனையைப் போக்கும் வழியறியாது கையறு நிலையில் செய்வதறியாது அமர்ந்திருந்தாள்...

'இனி உன்னை நம்பி பிரயோஜனமில்லை கண்ணம்மா... நான் அதிரடி ஆக்சனில் இறங்கினால் தான் நீ சரிப்பட்டு வருவாய்...'

அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் அவனுள் வெறியாய் மாறத் துவங்கியது அந்தக் கணம்...

காதலில் சிறிதளவு வன்முறை இருந்தால் தான் அது ருசிக்குமோ...!

வாசம் நேசமாகும்...!!!

"பேபி... அம்மா இல்லாம இருக்கிறது உனக்குக் கஷ்டமாயிருக்கா...?"

தன்னுடன் விளையாடிக் கொண்டிருந்த மகளைக் கண்டு விஜய் அப்படிக் கேட்க, அதில் அவனை ஏறிட்டு பார்த்த சின்னவள்,

"கொஞ்சம்..." என்று கண்களையும், கைவிரல்களையும் சுருக்கி கொண்டு அபிநயம் பிடித்தவளின் பாவனை அழகிய கவிதை போல் அத்தனை அழகாய் இருந்தது அவனுக்கு...

"ஹனி... பேபி உன்னை மாதிரி அப்படியே பண்ணுகிறாள்... நீயும் இப்படித்தான் செய்வ..." என்றான் தன்னவளை பார்த்து...

அவனது வார்த்தையில் முத்துபேச்சி மகளைத் திரும்பி பார்த்தவள், "எனக்கு அப்படி ஒண்ணும் தெரியலையே விஜூ... என்னை மாதிரியா இருக்கா...?" என்று வியப்புற்றவள்,

"கயலோட அமைதி, அழுத்தம் எல்லாம் பார்த்து அவள் உன் அப்பா மாதிரின்னு நான் நினைச்சுக்கிட்டு இருந்தேன்..."

அப்படிச் சொன்னவளை அவன் கேள்வியாய் பார்த்தான் தனது தந்தையைப் பற்றி அவளுக்கு எப்படித் தெரியும் என்று... அதில் சற்று தடுமாறியவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அதான் இத்தனை நாளா அவரை நேரில் பார்க்கிறேனே..." என்றவள்,

"கயல் நம்மளை மாதிரி இல்லைன்னு எனக்கு நல்லா தெரியும்... நம்ம ரெண்டு பேருமே அமைதின்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிற ஆளுங்களாச்சே..." என்று அவள் சிரித்தபடி கேலியாய் கூற...

"அது என்னவோ உண்மை தான்..." என்றவனின் முகத்திலும் புன்னகையின் சாயல்...

மூவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் போது மைதிலி அங்கே வேகமாய் வந்தார்...

"நினைச்சேன்டா... நீ இப்படித்தான் அசட்டுத்தனமா கூத்தடிச்சிட்டு இருப்பேன்னு..." என்று மகனை திட்டியவர்,

"காயூவோட புகுந்த வீட்டுக்காரங்க, ஜமுனா, நம்ம மூத்த மாப்பிள்ளை எல்லாரும் உன்னைப் பார்க்க வர்றாங்க... இந்த நேரத்தில் நீ இவங்களோட இப்படிக் கூத்தடிச்சிட்டு இருக்கியே... இது உனக்கே நல்லாயிருக்கா விஜய்...?" என்று மகனிடம் படபடத்தவர் கயல்விழியிடம்,

"இந்தா பொண்ணு, வர்றவங்க இங்கிருந்து போகிற வரைக்கும் நீ உன் அம்மா கிட்டத்தான் இருக்கணும்... அப்பான்னு உரிமைக்குக் கொண்டாடிட்டு என் மகன் கூட ஒட்டிக்கிட்டி இருக்கக் கூடாது... என்ன புரிஞ்சதா..." என்று கயல்விழியைக் கண்டு அவர் சத்தம் போட்டார்...

அவர் சொல்லவும் தான் இன்று காயத்ரியின் மகளுக்குப் பெயர் சூட்டும் விழா என்பதே அவனுக்கு ஞாபகத்தில் வந்தது... அதற்குத் தான் அனைவரும் அங்கு வந்திருந்தனர்...

மைதிலியின் பேச்சில் அரண்டு போன கயல்விழி தகப்பனிடம் இருந்து விலக முயன்றாள்... ஏற்கெனவே கோவிலில் வைத்து அவர் பேசியது வேறு அவளது மனதில் ஆழப்பதிந்து இருந்தது...

"பேபி... நீ இங்கேயே இரு..." என்று விஜய் மகளைப் பிடித்துத் தடுத்தவன்,

"தேவையில்லாம என் மகளைப் பேசும் வேலையை வச்சுக்காதீங்க... அதுக்கு அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்..." என்று அவன் அன்னையை எச்சரித்தான்...

இனி மகனிடம் பேசி பிரயோஜனம் இல்லை என்று நினைத்த மைதிலி நேரிடையாய் முத்துபேச்சியிடம் திரும்பினார்...

"இங்கே பாரு... அவன் இப்படித்தான் லூசுத்தனமா உளறுவான்... அதுக்காக எல்லாம் உன்னையும், உன் மகளையும் நாங்க எங்க பக்கத்தில் சேர்த்துக்க முடியாது... உன்னையும், உன் மகளையும் எங்க சம்பந்திக்கிட்ட யாருன்னு அறிமுகப்படுத்துவது...? அப்படியே அறிமுகப்படுத்தினாலும் அது எங்களுக்குக் கேவலம் தான்..."

அவர் பேசுவதைப் பொறுமையாய் கேட்டுக் கொண்டிருந்த முத்துபேச்சி அதன் பின்னரே வாய் திறந்தாள்...

"உங்க மருமகள், பேத்தின்னு அறிமுகப்படுத்துங்க..."

அவள் கூறியதை கேட்டு மைதிலியின் முகம் செத்துப் போனது என்றால், விஜய்யின் முகம் பிரகாசமாய் மலர்ந்தது... இதைத் தானே அவன் அவளிடத்தில் இருந்து எதிர்பார்த்தது... இந்தத் தைரியமான முத்துபேச்சியைக் காணத்தான் அவன் இவ்வளவு நாளாய்க் காத்திருந்தது...

அவனது மனதில் அப்படியொரு சந்தோசம்...

"என்னடி சொன்ன...?" மைதிலி கோபத்தில் எகிற துவங்க...

"உண்மையைச் சொல்லச் சொன்னேன்... இந்த ஜென்மத்தில் உங்க மகனோட மனைவி நான் மட்டும் தான்... நீங்கன்னு இல்லை அந்த ஆண்டவனே வந்தால் கூட அதை மாத்த யாராலும் முடியாது..." என்று அசால்ட்டாய் தோளை குலுக்கியபடி நிமிர்வாய் கூறியவளை கண்டு அவர் பல்லை கடித்தார் கோபத்தில்...

விஜய் மகிழ்ச்சியோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... முதன்முறையாக அவனின் மனைவியாக அவளை அவள் அடையாளப்படுத்தி இருக்கிறாள்... அதற்கு அடையாளமான மாங்கல்யத்தை அவளுக்கு அணிவித்துத் தன்னுடைய மனைவி என்கிற

அந்தஸ்தை உடனே அளிக்க வேண்டும் என்று அவனது உள்ளம் பரபரத்தது... உள்ளத்தின் பரபரப்பிற்கு ஏற்றார் போல் தனது உடல்நிலை ஒத்துழைக்காமல் இருப்பதைக் கண்டு அவன் தன் விதியை சபித்தான்...

அதற்குள் விருந்தினர் கூட்டம் உள்ளே நுழைய முத்துபேச்சி இயல்பு போல் தங்களது மகளைத் தன்னிடம் இழுத்து கொண்டாள்...

"எப்படியிருக்க விஜய்...?" அவனது மூத்த சகோதரி ஜமுனா அவனிடம் நலம் விசாரித்தாள்... கூடவே அவளது கணவனும்...

அடுத்து வரிசையாய் காயத்ரி வீட்டினர் நலம் விசாரிக்க, யாரிடத்திலும் அவனால் ஒட்டுதலுடன் பதிலளிக்க முடியவில்லை... முன்பு போல் யாரிடத்திலும் அவனால் அன்பை காட்ட இயலவில்லை... இப்போது எல்லாம் அவனது மனம் தன் குடும்பம், தனது வாழ்க்கை என்று சுயநலமாய்ச் சிந்திக்கத் துவங்கியிருந்தது...

"விஜய்... காலாகாலத்தில் கல்யாணம் பண்ணியிருந்தேன்னா இப்படித் தனியா கிடந்து அவஸ்தைப் படணுமா...? யாரோ நர்ஸ் வந்து உன்னைப் பார்க்க வேண்டியதாய் இருக்கு... இதே இது உனக்கு மனைவின்னு ஒருத்தி இருந்திருந்தா உன்னைப் பொறுப்பாய் கவனிச்சியிருப்பாள் இல்லையா...?"

காயத்ரியின் மாமியார் தனது வெண்கலத் தொண்டையில் கத்தி பேச... அதில் அவனுக்கு அத்தனை எரிச்சல் வந்தது...

'என் மனைவி தான் என்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள்...' என்று அவருக்கு மட்டுமல்லாது ஊருக்கே கத்தி சொல்ல வேண்டும் போலிருந்தது அவனுக்கு...

அவனது முகமாறுதலை அவதானித்தபடி தன் முகம் மாறிடாமல் சிலையாய் நின்றிருந்தாள் முத்துபேச்சி...

"விஜய்... இது என்னோட பேத்தியோட ஃபோட்டோ... உனக்குப் பிடிச்சிருந்தா உடம்பு சரியானதும் அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை வச்சிக்கலாம்..." என்றபடி அவர் தனது கைப்பையில் இருந்து ஒரு கவரை எடுத்து அவனிடத்தில் நீட்டினார்...

அதை அவன் வாங்காமல் அமைதியாக இருந்தான்... யாரையும் பார்ப்பதற்கு அவனுக்குப் பிடிக்கவில்லை...

மைதிலி வாயெல்லாம் பல்லாக அதை வாங்கியபடி,

"அண்ணி... தப்பா நினைச்சுக்காதீங்க... விஜயோட வலது கை அடிப்பட்டிருக்கு இல்லையா... அதனால் இடது கையில் வாங்க சங்கடப்பட்டு முழிக்கிறான்... நல்ல காரியம் நல்லபடியா நடக்கணும் இல்லையா...? இதிலெல்லாம் அவன் ரொம்பச் சென்ட்டிமென்ட் பார்ப்பான்..."

மகனை முறைத்துக் கொண்டே சம்பந்தியம்மாளிடம் அவர் குழைந்தார்...

"நீ சொல்றதும் சரி தான் மைதிலி..." என்று சொன்னவர்,

"சீக்கிரம் நல்ல முடிவா சொன்னா நல்லாயிருக்கும்... நிறைய இடத்தில் இருந்து வரன் வர்றது... ஆனா எனக்கு என்னவோ விஜய்க்கு கொடுக்கணும்ன்னு ஆசை..." அவர் தனது ஆசையை வெளிப்படுத்தினார்...

அந்தப் பேச்சில் அருவருப்பு அடைந்த விஜய்க்கு ஒவ்வாமை உணர்வு ஏற்பட, உடலும் ஒத்துழைக்காமல் போக அடுத்த நொடி அப்படியே வாந்தி எடுத்தான்...

ஒரு கணம் கூடத் தாமதிக்காது அவன் அருகில் விரைந்து வந்த முத்துபேச்சி அதை அப்படியே தனது கைகளில் ஏந்தி கொண்டாள்...

எந்தவித அருவருப்பும் இல்லாமல் அவள் இதைச் செய்ததை ரகுராமனின் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தது... அதே சமயம் மகன் அருகில் செல்ல

சிறிது யோசித்த மனைவியின் தயக்கத்தையும் அவரது கண்கள் அளவிடத் தவறவில்லை...

அந்த நேரம் மகனுக்கு வேண்டியது என்ன என்பது அவருக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்தது... புரிந்த விசயமோ கசப்பாக இருந்த போதும் அதைக் கஷ்டப்பட்டு விழுங்கி கொள்ள அவருக்குச் சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது...

சட்டென்று அவரால் மனதை மாற்றிக் கொள்ள முடியவில்லை... அதே சமயம் மகனது காதலின் ஆழத்தை உணராமலும் அவர் இல்லை...

"அருமையான பெண்... பணத்துக்காக வேலை பார்த்தாலும் இந்தக் காலத்தில் யார் இப்படி அக்கறையாக இருக்கிறார்கள்..."

முத்துபேச்சியின் செயலை கண்டு காயத்ரியின் மாமியார் பாராட்ட அதை மற்றவர்களும் ஆமோத்தினர்... மைதிலி இருதலைக்கொள்ளி எறும்பு போல் எரிச்சலுடன் நின்றிருந்தார்...

எதையும் கண்டு கொள்ளாமல் தனது கடமையே கர்மமாக வேலை செய்தாள் முத்துபேச்சி... விஜய்யின் வாயை துடைத்துச் சுத்தம் செய்தவள் அவன் மீதிருந்த போர்வையை அகற்றிவிட்டுப் புதுப் போர்வையைப் போர்த்திக் கொள்ளச் செய்தவள் பழையதை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்றாள்...

யாரையும் அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை... அவளது மனம் மிகவும் துன்பத்தில் இருந்தது... தன் கண் முன்னே தன்னவனுக்குப் பெண் பார்க்கும் கொடுமையைக் கண்டு அவளது மனம் துயரத்தில் தவித்தது... கண்ணீர் முட்டி கொண்டு வந்தது... முயன்று அடக்கி கொண்டாள்...

இதற்கு எல்லாம் தான் தான் காரணம் என்று அவளுக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்தது... ஆனாலும் எதுவும் செய்ய

முடியாத நிலையில் இருக்கும் தனது நிலையை அறவே வெறுத்தவளாய் அவள் நின்றிருந்தாள்...

போர்வையை அலசும் சாக்கில் அவள் குளியலறையின் உள்ளேயே நின்று கொண்டாள்... மீண்டும் அறைக்குள் சென்று வேதனைப்பட அவளது காதல் மனம் தயாராக இல்லை...

அப்போது குளியலறைக்குள் வந்த கயல்விழி அங்கு இருந்த ஈரத்துணியை எடுத்துக் கொண்டு தந்தையிடம் ஓடினாள்... மகளைத் தடுக்கும் வகையறியாது நின்றவள் மறந்தும் வெளியில் வரவில்லை...

தந்தையின் கழுத்தோரம் ஒட்டியிருந்த வாந்தியின் துணுக்குகளைச் சின்னவள் பரிவுடன் துடைத்து விட்டாள்... பின்பு தனது சிறிய விழிகளால் அவனை நன்கு அலசி ஆராய்ந்து வேறு எங்கும் வாந்தி இல்லை என்று தெரிந்ததும் திருப்தியுற்றவளாய் அங்கிருந்து நகர முற்பட்டாள் அவள்...

"பாப்பா... இங்கே வா..." காயத்ரியின் மாமியார் சின்னவளை பாசமாய் அழைக்க...

அதில் பதறிப் போய் முத்துபேச்சி குளியலறையில் இருந்து வெளியில் வந்தாள்... மைதிலியோ சிறு அதிர்வுடன் பயந்து போய் நின்றிருந்தார்...

விஜய் என்ன நடக்கப் போகிறது என்பதை ஆர்வத்துடன் கவனித்தான்...

"உன் பேர் என்ன...?" என்று அவளது பெயரை விசாரித்தவர் அவள் தனது பெயரை கூறியதும்,

"நீ யார் பொண்ணு...? இங்கே என்ன பண்ற...?"

சின்னவளின் செயலை கண்டு அவளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக ஆர்வத்துடன் அவளிடம் விசாரித்தார் அந்த மூதாட்டி...

முத்துபேச்சி, மைதிலி இருவரும் திக்திகென்று படபடக்கும் மனதுடன் கயல்விழியைப் பார்க்க... விஜய்யோ இன்றோடு தனது பிரச்சினை முடிந்தது என்று சந்தோசத்தோடு தனது மகளைப் பார்த்தான்...

கயல்விழியோ எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தாள்... மைதிலி மீது அவளின் பார்வை ஒரு நிமிடத்திற்கும் அதிகமாய்ப் படிந்து விலகியது...

அவரின் பேச்சில் ஏற்கெனவே காயம் அடைந்திருந்தவள் இப்போது தனது தந்தையை அடையாளம் காட்டி கொள்ள மிகவும் தயங்கினாள்... தந்தையின் அன்னைக்குத் தன்னையும், தனது அம்மாவையும் பிடிக்கவில்லை என்பது அந்தப் பிஞ்சு மனதிற்கு நன்கு புரிந்தது... தான் எதையாவது கூறி தந்தைக்குப் பிரச்சினை தந்துவிடக் கூடாது என்று நினைத்து அவள் முத்துபேச்சியைச் சுட்டிக்காட்டி,

"நான் அவங்க பொண்ணு..." என்றாள்...

அதில் முத்துபேச்சி, மைதிலி நிம்மதி அடைந்தார்கள் என்றால், விஜய் மிகவும் வேதனை அடைந்தான்... அவனது விழிகள் மைதிலியை குற்றம் சாட்டியது... அவர் அதைக் கண்டு கொண்டு கொண்டால் தானே...

"அதான் அவளை மாதிரியே உனக்கும் நல்ல குணம் இருக்கு... இந்தச் சின்ன வயசில் என்னவொரு பக்குவம்..." என்று சின்னவளை பாராட்டி அவளது கன்னத்தில் முத்தம் பதித்தவர் முத்துபேச்சியிடம்,

"குழந்தையை ரொம்ப அருமையா வளர்த்திருக்கேம்மா..." என்று மனதார பாராட்டினார்...

அதில் மைதிலி முகம் கறுத்துப் போனது...

முத்துபேச்சி, விஜய் முகம் மகிழ்ந்து பெருமிதம் அடைந்தது மகளை நினைத்து...

இப்போது ரகுராமன் தனது பேத்தியை தான் பார்த்துக் கொண்டிருந்தார்... அவளே உடம்பு சரியில்லாதவள் அந்த நேரத்திலும் அவள் தனது தந்தையைக் கவனித்துக் கொண்ட பாங்கு அவரது உள்ளத்தை உருக்குவதாய்... மௌனமாய் அவர் வெளியேறினார்...

மீண்டும் அவர் அறைக்குள் வந்த போது அனைவரும் சென்றிருந்தனர் மைதிலி உட்பட... நேரே சின்னவளிடம் வந்தவர் தன் கையிலிருந்த சாக்லேட்டை அவளிடம் நீட்டினார் மௌனமாய்...

தந்தை தனது மகளுக்காகச் சாக்லேட் வாங்கி வந்ததைக் கண்டு விஜய் வியப்பாய் அவரைப் பார்த்தான்...

கயல்விழி அதை வாங்காமல் முதலில் தனது அன்னையைப் பார்த்துவிட்டுப் பின் தந்தையைப் பார்த்தாள்... இருவரும் ஒன்று போல் 'வாங்கிக் கொள்' என்பது போல் மகிழ்ச்சியோடு தலையசைக்க அதில் முகம் மலர்ந்தவள் சந்தோசமாய் அந்தச் சாக்லேட்டை வாங்கிக் கொண்டு,

"தேங்க்ஸ்..." என்று நன்றியுரைத்தாள்...

சின்னவளின் நன்றி அந்த வயது முதிர்ந்தவரின் மனதை வாள் கொண்டு அறுக்க நிமிர்ந்து முத்துபேச்சியைப் பார்த்தார்... அவளும் கண்கள் கலங்க அவரைத் தான் பார்த்து கொண்டிருந்தாள்... அவளது உள்ளப் போராட்டம் அவருக்கும் புரிந்தது போலும் அதனால் சின்னவளின் கன்னம் தட்டி,

"தாத்தாவுக்கு நன்றி எல்லாம் சொல்ல வேண்டாம் செல்லம்..." என்றுரைத்தவர் அதற்கு மேல் அங்கு நிற்காமல் வெளியில் சென்றுவிட்டார்...

அவரது மனதில் மகனது காதலை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தைத் தனக்குக் கொடு என்ற வேண்டுதலே நிறைந்திருந்தது...

அவரின் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் அசைப் போட்டுக் கொண்டிருந்த முத்துபேச்சியின் மனம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது...

அந்நேரம் அம்மா, மகளைத் தன்புறம் அழைத்த விஜய் மகளிடம், "இனி யார் கேட்டாலும் உன் அப்பா நான் தான்னு தைரியமா சொல்லணும்... என்ன சரியா...?" என்று சொல்ல...

"அந்தப் பாட்டி திட்டுவாங்களே..." சின்னவள் மைதிலியை நினைத்து தயங்க...

அதில் வருத்தமுற்ற விஜய், "அப்படி அவங்க ஏதாவது சொன்னா அப்பா நான் கண்டிக்கிறேன்... சரியா...?"

தந்தை சொன்னதைக் கேட்டு மகள் சந்தோசமாய்த் தலையசைத்தாள்...

பின் முத்துபேச்சியிடம் திரும்பி, "யார் என்ன சொன்னாலும் நீ தான்டி என் பொண்டாட்டி... இதுக்குப் போய் அழுதுக்கிட்டுப் பாத்ரூமில் ஒளிஞ்சிக்கிற... என்னோட ரௌடியோட தைரியம் இவ்வளவு தானா..." என்று அவன் அவளைக் கேலி செய்து சிரிக்க...

தன்னை அவன் கவனித்துப் பார்த்ததைக் கண்டு அவள் மனம் நெகிழ, "விஜூ..." என்றழைத்தபடி அவனை அணைத்துக் கொள்ள...

"நானும்..." என்று இருகரம் நீட்டியபடி கயல்விழியும் துள்ள...

"நீயில்லாமலா செல்லம்...", "நீயில்லாமலா பேபி..." என்று பெற்றோர் இருவரும் ஒரே சேர கூறிவிட்டு ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்...

பின் முத்துபேச்சி புன்னகையுடன் மகளைத் தூக்கி விஜய் அருகில் அமர வைத்தவள் இருவரையும் மகிழ்ச்சியோடு அணைத்து கொண்டாள்...

'இது எங்கள் குடும்பம்...' என்கிற மகிழ்ச்சி மூவரின் மனதிலும் ஆனந்தத் தாண்டவமாடியது...

அன்றிரவு இருவரும் மட்டுமே இருந்த தனிமையில் விஜய் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு யோசனையாய் அமர்ந்திருந்தான்...

"விஜூ... என்ன யோசனை...?" அவனது தலைமுடியை செல்லமாய்க் கலைத்தபடி அவள் கேட்க...

அவளது அந்தக் கரத்தை பிடித்துத் தனது கன்னத்தோடு அழுத்தி வைத்துக் கொண்டவன், "அன்னைக்கும் இப்படித்தான் சுத்தம் செஞ்சியா....?"

அவன் கேட்டதும் அன்றைய நாளின் நினைவில் அவளது உடல் அதிர்ந்தது... மெல்ல அவனைப் பார்த்து புன்னகைத்தவள் ஆம் என்பது போல் தலையசைத்தாள்...

"அன்னைக்கு என்ன நடந்தது கண்ணம்மா...? எல்லாமே கனவு மாதிரியிருக்கு..."

அவனது பேச்சில் பாவையவள் முகம் நாணத்தில் இரத்த நிறம் கொண்டது...

"அது உனக்குக் கனவா விஜூ... அன்னைக்கு நடந்ததுக்குச் சாட்சியா கயல் இருக்கிறாள்... அவளை நீ மறந்துவிடாதே..."

அவனைக் கேலி செய்து தனது நாணத்தை விரட்டியடித்தவளாய் அவனது முகம் பார்த்தாள் அவள்... என்ன முயற்சி செய்தும் பெண்ணவளின் வெட்கம் இன்னமும் அவளிடத்தில் இருந்து அகலவில்லை... மிச்சமிருந்த வெட்கத்தில் பாவையவளின் முகம் அழகுற மின்னியது...

இடது கை ஆட்காட்டி விரலை கொண்டு அவளது முகத்தில் கோலம் போட்டவன், "ம்ஹூம்... அது நனவா...? அப்படி நனவில் நடந்தது போல் எனக்கு ஞாபகம் இல்லையே... எல்லாமே கனவு போல் நினைவுகள் எல்லாம் மேகமூட்டமாய் என் ஞாபகத்தில் இருக்கிறது... எனது அந்தக் கனவு நனவாவது எப்போது கண்ணம்மா...? என் கனவு கை வந்து சேரும் நாள் எப்போது கண்ணம்மா...?"

உள்ளம் உருக கேட்டவனைக் கண்டு அவளும் மனம் உருக பார்த்திருந்தாள்...

"நித்திக்குத் துரோகம் பண்றோம்ன்னு நினைக்கிறியா ஹனி... இப்போ தான் அவள் கணவன், குழந்தைன்னு சந்தோசமா இருக்கிறாளே... அப்புறமும் எதற்கு நமக்கிடையே இந்தப் பிரிவினை...?"

"விஜூ... நீ ஒண்ணை மட்டும் நல்லா புரிஞ்சிக்கணும்... எனக்கு நித்தியை விட நீ தான் முக்கியம்... அவள் எனக்கு உயிருக்கு உயிரான தோழி தான்... ஆனால் நீ என்னோட உயிர் விஜூ..."

அவள் கூறிய விதத்திலேயே அவனுக்குத் தெரிந்து போனது அவள் நித்யாவிற்காகத் தன்னை விட்டு விலகவில்லை என்று...

"பிறகு எதற்கடி என்னைப் பிரிந்து இருக்க...?"

அவன் கேட்டதற்கு அவளிடம் பதிலில்லை... மௌனமாய் அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள்... அதற்கு மேல் அவளைக் கடிந்து பேச அவனுக்கும் வாய் வரவில்லை... அவனும் மௌனமாய் அவளை அணைத்துக் கொண்டான்...

ஏன் என்ற விடை தெரியா கேள்வி அவனது மனம் முழுவதும் ஆக்கிரமித்து இருந்தது... விடை தெரிந்தவளோ அதை அவனிடத்தில் சொல்லப் பயந்தவளாய் இறுக வாய் மூடி மௌனியானாள்...

****

ஒவ்வொரு வீடாகச் சென்று ஓட்டு வாங்குவதில் மும்முரமாக இருந்தாள் முத்துபேச்சி... செல்வநாதன் அவளுடன் இருந்தார்... ஏற்கெனவே அவள் அந்த ஏரியாவில் பழக்கமான முகம் ஆதலால் அவளுக்குப் பெரிதாக அறிமுகம் தேவைப்படவில்லை... அதிலும் அனைத்து மக்களும் அவளைத் தங்களது சொந்த உறவாய்ப் பார்த்தது அவளுக்குக் கிடைத்த மிகப் பெரிய 'ப்ளஸ் பாயிண்ட்'...

வேறு எந்தக் கட்சி வேட்பாளருக்கும் கிடைக்காத அங்கீகாரம் இது... அதுவே சொல்லாமல் சொல்லியது அவளது வெற்றி வாய்ப்பை பற்றி... அவளை விடச் செல்வநாதன் மிகுந்த உற்சாகத்தில் மகிழ்ச்சியாய் இருந்தார்...

அப்படி அவள் ஒரு வீட்டிற்குச் சென்ற போது அந்த வீட்டின் ஆண் தனது மனைவியைப் போட்டு அடித்துக் கொண்டிருந்தான்... நல்ல போதையில் இருந்ததால் அவன் அறிவு மழுங்கி போய் மிருகமாய் மாறியிருந்தான்...

அந்நேரம் அங்கு வந்த முத்துபேச்சியைக் கண்டு ஓடி வந்த அந்தப் பெண் அவள் பின்னே மறைந்து கொண்டாள் பயத்தில்...

"முத்து... இந்தக் குடிக்கு ஒரு விடிவு காலம் கொண்டு வா... தெருவுக்குத் தெரு டாஸ்மாக் கடை திறந்து வச்சிருக்காங்க... பட்டப்பகல்ல வேலைக்குக் கூடப் போகாம நல்லா மூக்கு பிடிக்க ஊத்திக்கிட்டு வந்து என்னை மாட்டைப் போட்டு அடிக்கிற மாதிரி அடிக்கிறாரு... நான் ஒருத்தி சம்பாதிச்சு தான் குடும்பத்தைக் காப்பாத்தணும்... மூணு புள்ளைங்க வேற... இதில் பணத்தைக் கேட்டு என்னை அடிச்சா நான் என்ன பண்ணுவேன் முத்து..." என்று அந்தப் பெண் கண்களைக் கசக்கினாள்...

அவளைக் கண்டு முத்துபேச்சிக்குப் பாவமாக இருந்தது... அந்த ஆணை அடித்துத் துவம்சம் செய்ய வேண்டும் என்று அவளுக்கு ஆத்திரம் எழுந்தது... ஆனால் செய்ய முடியாதபடி அவளின் நிலை இருந்தது... வேட்பளராய் இருக்கும் போது இதைச் செய்தால் ஊடகங்கள் இதைப் பெரிதுப்படுத்தி விடுமே...

அப்படியே அவனை அடிப்பதால் மட்டும் எதுவும் மாறிவிடப் போவதில்லை... முதலில் இந்த மலிவுவிலை மதுபான கடைகளை மூட வேண்டும்... அந்தக் கணம் அவள் மனதில் தீர்மானம் எழுந்தது...

"நிச்சயம் இதற்கான முயற்சி எடுக்கிறேன்..." என்றவள் அவளுக்கு ஆறுதல் அளித்துவிட்டு வெளியில் வந்தாள்...

அடுத்து கடந்து சென்ற மணித்துளிகளில் அவள் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டாள்... மொத்தமாய்த் தொகுதி முழுவதும் சென்று ஓட்டு சேகரித்துவிட்டு, மாலையில் பிரச்சார மேடையில் அவள் பேசிவிட்டு மருத்துவமனை வந்த போது இரவு பதினோரு மணி ஆகியிருந்தது...

விஜய்யை காண சீக்கிரம் வர வேண்டும் என்று நினைத்திருந்தவளுக்கு வேலைப்பளு அத்தனை எளிதில் அவளை விடவில்லை... ஏனெனில் நாளை அவன் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்குச் செல்கிறான்...

கடந்த இருபது நாட்களாய் மருத்துவமனையில் இருந்த அவனது மருத்துவமனை வாசம் நாளையுடன் முடிவடைகிறது... அதை நினைத்து அவளுக்கு அத்தனை துக்கமாய் இருந்தது... நாளையோடு அவளால் அவனைப் பார்க்க முடியாதே...

அவனைத் தனது கண்களில் நிரப்பி நெஞ்சத்தில் நிறைத்து கொண்டவள் அவனிடம் கெஞ்சுதலாய்,

"விஜூ... நான் உன் வீட்டிற்கு வந்து உன்னைப் பார்த்துக்கவா...?"

அவளின் மனத்தவிப்புப் புரிந்தாலும் அதற்குச் சம்மதிக்க அவனால் முடியவில்லை...

"அது என் வீடில்லை கண்ணம்மா... நம் வீடு... நம் வீட்டின் ராணியாய் உரிமையாய் அங்கு நீ வா... அப்போது நான் உன்னைக் கூட்டிட்டுப் போகிறேன்... ஆனால் இப்போது எனக்கு ஆயாவாக நீ அங்கே வரத் தேவையில்லை..." என்று நிர்தாட்சண்யமாய் அவளின் கூற்றுக்கு மறுத்தவன்,

"நம் வீட்டின் ராணியாக வரச் சம்மதிக்கிறாயா கண்ணம்மா..." அவளின் சம்மதம் வேண்டி அவன் அவளைப் பார்க்க...

இயலாமையுடன் அவனைப் பார்த்தவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

அதை மென்மையாகத் துடைத்துவிட்டவன், "இந்தக் கண்ணீருக்கு அவசியமே இல்லை கண்ணம்மா... நீ 'ம்' என்று ஒற்றைச் சொல் சொன்னால் போதும்..."

அதற்கு அவளின் மௌனம் கண்டு, "அதைச் சொல்லத்தான் உனக்கு மனம் வரவில்லை இல்லையா...?" என்று வருத்தத்துடன் கேட்டவனை அணைத்துக் கொண்டு கதறினாள் அவள்...

ஆனால் அவனுக்குப் பதில் மட்டும் சொல்ல மறுத்துவிட்டாள்...

மறுநாள் காலையில் மகனை அழைத்துச் செல்ல கணவனுடன் வந்தார் மைதிலி... ரகுராமன் நேரே மருத்துவமனைக்குப் பில் கட்டுவதற்காகச் சென்றுவிட, மைதிலி மகன் இருந்த அறைக்குள் நுழைந்தார்...

வந்தவர் நேரே முத்துபேச்சியிடம் வந்து கொஞ்ச பணத்தை அவள் முன் நீட்டியபடி, "நீ என் மகனுக்கு நர்ஸ் வேலை பார்த்ததுக்கான சம்பளம்..." என்று திமிராய் சொல்ல...

முத்துபேச்சி வேதனையுடன் விஜய்யை பார்த்தவள் மௌனமாய் அதை வாங்கிக் கொள்ளக் கையை நீட்டினாள்... அவனும் அதே வேதனையுடன் அவளைப் பார்த்தான்...

அது அவளது பணம் தான் என்று தெரியாமல் அறியாமையில் நடந்து கொள்ளும் அன்னையைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

ஆம் முத்துபேச்சி தான் காயத்ரி குழந்தைக்குப் பெயர் வைப்பதற்கு, இதோ இப்போது வீட்டு செலவுக்கு என்று எல்லாவற்றிற்கும் தன்னுடைய பணத்தை எடுத்து அவனிடத்தில் கொடுத்திருந்தாள்... ஆனால் அதை மைதிலியிடம் கூற வேண்டாம் என்று தடுத்துவிட்டாள்...

வேண்டுமென்றே மைதிலி அந்தப் பணத்தை அவளது கையில் கொடுக்காது நழுவ விட, அந்தப் பணம் கை நழுவி நாலாப்புறமும் சிதறிப் பறந்தது...

"அம்மா..." என்று அதட்டலாய் ஒலித்தது விஜய்யின் குரல்...

அன்னையின் செயலை கண்டு அவனது முகம் அதிருப்தியை காட்டியது... அவனது குரலில் அதற்கான ஆட்சேபணை இருந்தது...

"என்னடா அம்மா... முன்னாடி ரோட்டில் பேப்பர் பொறுக்கிட்டு இருந்தவத் தானே... இப்போ பணத்தைப் பொறுக்கினா என்ன குறைந்தா போயிருவாள்..." என்று எகத்தாளமாய் அவர் கூற...

அதைக் கேட்டு பல்லை கடித்தான் அவன் ஆத்திரத்தில்... எழுந்து சென்று பேச முடியாதபடி அவனின் உடல்நிலை அவனைக் கட்டுப்படுத்தியது...

அதனால் முத்துபேச்சியைப் பார்த்து, "நீ அதை எடுக்காதே கண்ணம்மா..." என்று கூற...

"நான் பணத்தோட அருமை தெரிஞ்சு வளர்ந்தவ விஜூ... இந்தப் பணத்தால் எத்தனை பேர், எத்தனை நாளைக்கு வயிறார சாப்பிடலாம் தெரியுமா..." என்று கூறியவள் குனிந்து பணத்தை எடுக்க ஆரம்பித்தாள்...

"பிச்சைக்கார புத்தி... அதான் எப்பப்பாரு சாப்பாட்டைப் பத்தியே யோசிக்குது..." என்று அதற்கும் நக்கல் அடித்தார் மைதிலி...

அப்போது ரகுராமன் பரபரப்புடன் அங்கு வந்தார்...

"மைதிலி... பத்தாயிரம் ரூபாய் வைச்சிருக்கிறியா... கூடுதல் பணம் தேவைப்படுது..."

கணவர் பணம் கேட்டதும் மைதிலி விழித்தார்... அவர் தேவைக்கு மட்டுமே பணம் கொண்டு வந்திருந்தார்... அதிகப் பணம் கொண்டு வருமளவுக்கு அவரிடமும் அதிகப் பணம் இருக்கவில்லை... இவ்வளவு நேரம் இருந்த அவரது

அலட்சியம் மறைந்து போய்ப் பயம் எழுந்தது அவரது மனதில்...

"இப்போ என்ன பண்றதுங்க...?"

"ஏன் உன் கிட்ட பணம் இருந்ததே...?"

"அதை இவளுக்குச் சம்பளமா கொடுத்துட்டேன்..."

"என்னது...?" என்று உறுமியபடி கேட்டவர் அடுத்த நொடி மனைவியை ஓங்கி அறைந்திருந்தார்...

"யாருக்கு யாருடி சம்பளம் கொடுக்கிறது... அந்தப் பொண்ணு செஞ்சதுக்கு எல்லாம் நீ சம்பளம் போட்டு கொடுக்கணும்னா நம்ம உயிரை தான் நாம கொடுக்கணும்... அதைக் கொடுக்க நீ ரெடின்னா சொல்லு... இப்ப இந்த நொடி நாம ரெண்டு பேரும் நம்ம உயிரை விட்டு விடலாம்... கழுத்துல தாலி வாங்காம உன் மகனோட குழந்தையைக் கஷ்டப்பட்டுச் சுமந்து, பெத்து, வளர்த்ததுக்கு உன்னால சம்பளம் போட்டு கொடுக்க முடியுமா...? நீ எல்லாம் பெண்ணாடி... ராட்சசிடி..."

அமைதியான தந்தையின் ருத்ரதாண்டவத்தைக் கண்டு விஜய் ஆவென வாய்ப் பிளந்தான்... முத்துபேச்சியோ கண்கள் கலங்க மௌனமாய்த் தலைக்குனிந்து நின்றிருந்தாள்...

"அவ முன்னாடி என்னைத் திட்டுறது, அடிக்கிறதை விட்டுட்டு இப்ப பணத்துக்கு என்ன பண்றதுன்னு யோசிங்க..."

அப்போது தான் முத்துபேச்சி அந்தக் காரியத்தைச் செய்தாள்... தன் கையிலிருந்த பணத்தை விஜய்யிடம் கொடுத்தவள்,

"இதைக் கொடுக்கச் சொல்லு விஜூ..."

அவன் அதை வாங்கித் தந்தையிடம் நீட்டினான்... அவளிடத்தில் பணம் வாங்க அவன் சிறிதும் சங்கடப்படவில்லை... கணவன், மனைவிக்குள் இது சகஜம்

என்பது போலிருந்தது அவனது இயல்பான அந்தச் செயல்... ஆனால் மைதிலி தான் முத்துபேச்சியின் செயலில் கூனிக்குறுகி போய்விட்டார்...

பணத்தைப் பெற்றுக் கொண்டு ரகுராமன் சென்றதும் முத்துபேச்சி மைதிலியை நிமிர்ந்து பார்த்தவள், "நாம எப்போதுமே மகாலெக்ஷ்மியை தூக்கி எறிய கூடாது... அப்படித் தூக்கி எறிஞ்சா நமக்குத் தேவைப்படும் போது அது நமக்குக் கிடைக்காது..."

இருபொருள்படக் கூறுகிறாளோ என்று அவளைச் சந்தேகமாய் உற்று நோக்கினார் அவர்...

அவளது ஏழ்மை நிலையைச் சுட்டிக்காட்டி தனது பணத்திமிரை அவளிடத்தில் அவர் காட்ட நினைத்தால் இப்போது அவரது நிலை சந்தி சிரிக்கும்படி கேவலமாய் மாறிவிட்டதை எண்ணி மனதுக்குள் நொந்து போனார்...

அவளது வார்த்தையில் அவருக்குச் செருப்பைக் கழட்டி அடித்தது போல் அத்தனை அவமானமாக இருந்தது...

அன்று அவளைத் தான் செருப்பால் அடித்தது இப்போது நினைவில் வந்தது... பதிலுக்குச் செருப்பால் அடிக்காமல் தனது வார்த்தையால் குறிப்பார்த்து அடித்தவளை கண்டு அவருக்கு அத்தனை கோபம் வந்தது...

போயும் போயும் அவளை மாதிரி ஒருத்தியிடத்தில் தான் அவமானப்பட்டது அவருக்கு ஒரு மாதிரியாக இருந்தது...

வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு மகனது உடைமைகளை எடுத்து வைக்க ஆரம்பித்தார்...

அதைக் கண்டு மனம் தளர்ந்தவளாய் அவள் தன்னவனைப் பார்த்தாள்... இன்னமும் சில நிமிடங்கள் தான் அவனை அவள் பார்க்க முடியும்... அதன் பின்னர் எப்போது அவனைத் திரும்பப் பார்க்க போகிறாளோ... அவனின் நினைவிலும் அது தான் ஓடியது போலும்... அவளையே இமைக்காது பார்த்திருந்தான்...

அறையில் இருந்து கார் வரை விஜய்யை சக்கர நாற்காலியில் வைத்து தள்ளி கொண்டு வந்தவள் மனம் மிகுந்த பாரமாய் இருந்தது...

"உடம்பை பத்திரமா பார்த்துக்கோ விஜூ..." அவள் கூறியதற்குச் சரியென்று தலையசைத்தவன் ஒன்றும் பேசவில்லை...

அவனைக் காரிலேற்றி அமர வைக்கும் போது அவன் பிடிப்பு இல்லாமல் சிறிது தடுமாற, அப்போது முத்துபேச்சி அவனது உதவிக்கு வர, அவளைத் தடுத்துவிட்டு மைதிலி மகனுக்கு உதவினார்... அதை அவன் உணர்ந்தாலும் அமைதியாய் காரிலேறி அமர்ந்தான்...

அமர்ந்தவன் ஜன்னல் வழியாய் கையை நீட்டி தன்னவளின் கரத்தை ஆறுதலாய் பிடித்துக் கொண்டான்... அதைக் கண்டு முகத்தைச் சுளித்த மைதிலி மறுபக்கம் ஏறியமர்ந்தார்... முன்னால் அமர்ந்திருந்த ரகுராமன் ஒன்றும் பேசாது மகனின் செயலை பார்த்துக் கொண்டிருந்தார்...

"கவலைப்படாதே கண்ணம்மா..." என்றான் ஆறுதலாய்...

அவனைப் பிரிவது கண்டு கவலைப்படாமல் அவளால் எப்படியிருக்க முடியும்...?

கண்களில் கண்ணீர் துளிர்க்க அவனைப் பார்த்தவள் மௌனமாய்த் தலையசைத்தாள் அவனின் வார்த்தைக்காக...

"கயலை பத்திரமா பார்த்துக்கோ... நீ தேர்தலில் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்கள்... நீ அமைச்சராகும் போது நான் ட்யூட்டியில் ஜாயிண்ட் பண்ணி உனக்குச் சல்யூட் அடிக்கணும் கண்ணம்மா... அதற்குள் என் உடம்பு சரியாகணும்ன்னு கடவுளை வேண்டிக்கோ..."

அவன் கூறியதை கேட்டு முத்துபேச்சியை ஆச்சிரியமாய்ப் பார்த்தார் மைதிலி... பின்பு அலட்சியமாய் உதட்டை பிதுக்கி கொண்டார்...

அவளாவது தேர்தலில் வெற்றிப் பெறுவதாவது என்கிற அலட்சியம் அவருக்கு...

"நான் கடவுளை வேண்டுறதே உனக்காகத் தான் விஜூ..." கண்ணீர் மல்க கூறியவள் அவனுக்குப் பிரியாவிடை கொடுத்தாள் துயரத்துடன்...

அவனும் மனம் கனக்க அவளைப் பார்த்துக் கையசைத்தான்... கார் நகர்ந்து சென்று சிறு புள்ளியாகும் வரை பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் அவள்...

மனதின் பாரம் தாங்காது அவளது தலையும் மிகவும் பாரமாகி வலிக்கத் துவங்கியது... முன்பு போல் இல்லாது இப்போது அதி தீவிரமாய் அவளால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு வலி எழுந்தது...

மனதின் வேதனையில் அதைப் புறந்தள்ளிவிட்டு நின்றாள்... ஆனால் அவளால் அதைச் செய்ய முடியவில்லை... மயக்கம் வருவது போல் கண்களை இருட்டி கொண்டு வந்தது...

வாசம் நேசமாகும்...!!!

"ஏ புள்ள முத்து... வெரசா கிளம்பி வா... நேரமாகுது..." என்று பாண்டியன் வரவேற்பறையில் இருந்து உரக்கக் குரல் கொடுத்தான்...

கறுப்புப் பேண்ட், வெள்ளைச் சட்டை என்று சலவை செய்த உடுப்பில் கச்சிதமாகக் கிளம்பி இருந்தான் அவன்...

"மாமா... என் பட்டுப்பாவாடை நல்லாயிருக்கா..." என்று கேட்டபடி ஓடி வந்தாள் கயல்விழி...

பட்டுப்பாவாடை சட்டையில் அழகாய் இருந்தாள் அவள்... இரு கைகளால் பாவாடையைப் பிடித்துக் கொண்டு ஒரு சுற்று சுற்றி காண்பித்தாள் அவள்...

"பாவாடைச் சட்டையில் என் கயலு குட்டி சூப்பரா இருக்காளே..." என்று அவளைத் தூக்கி கொஞ்சினான் அவன்...

இந்த இரண்டு மாதத்தில் அவளது கழுத்துக் காயம் நன்றாக ஆறியிருந்தது... இப்போது லேசாகக் காயத்தின் தழும்பு மட்டுமே மிஞ்சியிருந்தது...

கயல்விழியை அவன் தூக்கி வைத்திருந்த அழகை கண்டு ரசித்தபடி அங்கு வந்து நின்றாள் மீனா...

பாண்டியனின் ஆளுமையான அழகு இன்று ஏனோ அவளது மனதை ஏதோ செய்தது...

இமைக்க மறந்து தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தவளை இனம் கண்டு கொண்டவன், கயல்விழியை அணைத்து பிடித்தபடி அவளைப் பார்த்து என்னவென்று விழியால் கேட்டான்...

"ஒண்ணுமில்லை..." தன்னைக் கண்டு கொண்டானோ என்ற வெட்கத்தில் முகம் சிவந்தபடி அவள் வேறு பக்கம் திரும்பி நின்றாள்...

அவளது செயலை ஒரு தினுசாய் பார்த்தவன் கயல்விழியிடம், "நீ போய் அம்மா என்ன பண்ணுதுன்னு பார்த்துட்டு வா..." என்று அவளை அனுப்பி வைத்து விட்டு அவன் வாயிற்புறம் செல்ல...

"நல்லாயிருக்கா..." என்று மெதுவாய் ஒலித்த மீனாவின் குரலில் அப்படியே நின்றவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"என்னது நல்லாயிருக்கா...?" அவன் புரியாமல் கேட்க...

"என்னோட புடவை..."

அவள் அப்படிச் சொன்னதும் 'என்னவானது இவளுக்கு' என்பது போல் ஒரு மாதிரியாக அவளைப் பார்த்து வைத்தான் அவன்... ஆனாலும் அவனது கண்கள் புடவையை மட்டுமல்லாது அவளையும் அளவிடத் தவறவில்லை...

"கயல் கேட்டதுக்கு மட்டும் பதில் சொன்னீங்க..." என்று கழுத்தை வெட்டி கொண்டு சிறு குழந்தை போல் செல்லக் கோபம் கொண்டு கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"பதில் மட்டுமா சொன்னேன்... அவளைத் தூக்கி வைத்து..." என்று அவன் மேலே சொல்லும் முன்,

"ஐயோ போதும், போதும்..." என்று நாணத்துடன் அவனைப் பேச விடாது கையுயர்த்தித் தடுத்தவள் அங்கிருந்து ஓட...

"ரொம்ப நல்லாயிருக்கு புள்ள..." என்று கத்தி சொன்னவனின் முகத்தில் அப்படியொரு சந்தோசம் நிரம்பி வழிந்தது...

ஏனோ தெரியவில்லை அவனது மனதுக்கு இதமாய், சுகமாய் இருந்தது அந்தக் கணம்...

அவனது கண்ணில் வழிந்த சந்தோசம், ரசனை இதை எல்லாம் பார்த்தபடி அங்கு வந்தாள் முத்துபேச்சி... தோழனின் மனமாற்றத்தை அவளது மனம் குறித்துக்

கொண்டது... எப்படியோ நண்பன் தனது வாழ்க்கையைப் பற்றி இப்போதாவது யோசிக்க ஆரம்பித்தானே என்று அகமகிழ்ந்து போனாள்...

எப்போதும் அவளை நினைத்து கவலைப்படுபவன் ஒருபோதும் தன்னைப் பற்றி யோசிப்பது இல்லை... இப்போது அந்தக் குறை தீர்ந்தது அவளுக்கு...

"பாண்டி..."

முத்துபேச்சியின் அழைப்பில் திடுக்கிட்டவனாய் அவளைத் திரும்பி பார்த்தான் பாண்டியன்... அதுவரை மீனா சென்ற திசையைத் தன்னை மறந்து பார்த்துக் கொண்டு இருந்ததை நினைத்து அவனுக்கே வெட்கமாய்ப் போய்விட்டது...

"என்ன முத்து...?" அவனது வார்த்தைகள் தடுமாற்றத்துடன் வந்தது...

"கிளம்பலாமா..." அவனது தடுமாற்றத்தை கண்டு கொள்ளாது அவள் கேட்டாள்...

அவள் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்து நிம்மதியடைந்தவனாய் கயல்விழியைத் தூக்கி கொண்டவன்,

"போகலாம்..." என்றபடி முன்னால் நடந்தான்... முத்துபேச்சி அவனைப் பின் தொடர்ந்தாள்...

நால்வரும் காரிலேறியதும் கார் கிளம்பியது...

இந்தச் சட்டமன்றத் தேர்தலில் அமோகமாய் வெற்றிப் பெற்ற முத்துபேச்சி பொதுப்பணித்துறை அமைச்சராக இன்று பொறுப்பேற்கிறாள்... அந்த விழாவிற்காகத் தான் அனைவரும் கிளம்பி போய்க் கொண்டு இருந்தனர்...

அத்தனை எளிதில் அவளுக்கு இந்தப் பதவி கிடைத்து விடவில்லை... பலர் அதற்கு எதிராக இருந்தனர்... ஆனால் செல்வநாதன் முயன்று போராடி, தனது செல்வாக்கை பயன்படுத்தி அவளுக்கு அதைப் பெற்று கொடுத்தார்...

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தான் இந்த விழா நடைப்பெற இருந்தது...

அங்குச் சென்று காரில் இருந்து இறங்கியவளின் கண்கள் விஜயை தேடி தவித்தது...

கடந்த இரண்டு மாதங்களாக அவனை அவள் பார்க்கவில்லை... ஆனால் தினமும் அலைப்பேசியில் மட்டும் அவளிடத்தில் உரையாடுவான்... அவனில்லாத தனிமைத் துயரில் அவள் அழுது கரையும் போது அவளுக்கு வேண்டிய மன ஆறுதலை அவன் அளிப்பான்... அவனுக்குத் தெரியும் தேர்தல் சமயத்தில் அவள் இப்படி மனதளவில் துவண்டால் அவளது பணிகள் பாதிக்கப்படும் என்று... அதனால் தான் தினமும் அவளிடம் பேசி அவளை உற்சாகமாக வைத்திருந்தான்...

இப்போது அவன் உடல்நலம் சரியாகி பணியில் சேர்ந்து விட்டான் என்று ஒரு வாரத்திற்கு முன்னர்த் தான் அவளிடத்தில் சொல்லியிருந்தான்... அதைக் கேட்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

அவளின் தேடுதலை உணர்ந்தார் போன்று விஜய் அவள் கண் முன் தரிசனம் தந்தான்...

அவனைக் கண்டதும் அவளது கண்களில் கண்ணீர் துளிர்த்தது... கம்பீரமான அவனது அழகை அவள் தன்னுள் நிறைத்து கொண்டாள்...

'வாழ்த்துக்கள்' என்று கண்களால் அவளை வாழ்த்தியவன் அவள் மட்டும் பார்க்கும்படி தனது வலக்கை கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தான்...

கண்கள் கலங்க அவனைப் பார்த்து லேசாகத் தலையசைத்தவள் தான் செல்ல வேண்டிய இடத்தை நோக்கி நகர்ந்தாள்...

அவள் சென்றதும் கயல்விழியிடம் வந்த விஜய் அவளைப் பாசத்துடன் தூக்கி கொண்டான்...

"அப்பா..." என்று அவனை ஆசையோடு கட்டிக் கொண்ட சின்னவள்,

"உங்க காயம் எல்லாம் சரியாகி போச்சா..." என்று அவனது வலதுகையைத் தொட்டு பார்த்து கேட்க...

"இப்போ அப்பா நல்லாகிட்டேன் பேபி..." என்றவன் அவளைக் கொஞ்சிவிட்டுப் பாண்டியனிடம் கொடுத்தவன்,

"பத்திரமா பார்த்துக்கோ..." என்று கூறிவிட்டுச் சென்றான்...

ஏனெனில் அவன் அங்குப் பாதுகாப்பு பணிக்காக வந்திருந்தான்...

பதவி பிரம்மாணம் எடுக்கும் விழா ஆர்ப்பாட்டத்துடன் ஆரம்பித்தது... ஒவ்வொருவராய் வந்து பதவியேற்று சென்றனர்... முத்துபேச்சியின் முறை வந்தது...

"திருமதி. முத்துபேச்சி விஜயாகிய நான்..." தனது கணீர் குரலில் அவள் பதவி பிரம்மாணம் எடுக்க ஆரம்பித்தாள்...

மேடையில் இருந்து சற்று தள்ளி நின்றிருந்த விஜய்யின் காதில் அவள் கூறிய பெயர் தேனாகப் பாய்ந்தது... அவனுக்குரிய அங்கீகாரத்தை அவள் பெற்று கொடுத்து விட்டது போலிருந்தது... அது போல் அவளுக்கு உண்டான அங்கீகாரத்தை அவன் கொடுப்பது எப்போது...?

அந்நேரம் அவளது கண்களும் அவனைத் தான் பார்த்து கொண்டிருந்ததோ... அவனால் உறுதியாய் சொல்ல முடியவில்லை... அவனது கண்களைக் கண்ணீர் திரையிட்டு மறைத்திருந்தது...

செல்வநாதன், கமலாவுடன் அங்கு வந்து முத்துபேச்சி பதவியேற்பதை பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்...

விழா முடிந்து ஒவ்வொருவராய் கலைந்து சென்றனர்... கடைசியாக முத்துபேச்சி தனது காரிலேறும் போது விஜய் அவளருகில் வந்தான்...

அவனது வரவை உணர்ந்தார் போன்று அவள் தேங்கி நின்றாள்...

அவனோ அவளைக் கண்டு கொள்ளாது அவளைத் தாண்டி சென்றவன் அவளது கார் கதவை திறந்து விட்டு அவளைப் பார்த்து விறைப்பாய் வணக்கம் வைத்தபடி நின்றான்...

அவனது நீண்ட நாள் ஆசை இன்று தான் நிறைவேறியது... சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் பிறந்துவிட்டோம் என்று மனதுக்குள் துன்பப்பட்டு உழன்று கொண்டிருந்தவளுக்கு அந்தக் கணம் அவன் மிகப்பெரிய மரியாதையைச் செலுத்தினான்...

கண்கள் பனிக்க அவனது வணக்கத்தை ஏற்றுக் கொண்டவள் காரிலேறி அமர்ந்தாள்...

அவள் அமர்ந்தபின் கதவை சாத்தியவன் அவளைக் கண்டு நிறைவாய் புன்னகைத்தான்...

அவன் எந்தளவுக்கு மனதுக்குள் நிறைவாக உணர்ந்தானோ, அந்தளவுக்கு அவள் மனதுக்குள் நொறுங்கி போனாள்...

பாண்டியன், கயல்விழி, மீனா மூவரும் செல்வநாதனுடன் சென்றுவிட்டனர்... முத்துபேச்சி தனது பணியைப் பார்க்க கிளம்பினாள்...

****

அன்று அவள் கையெழுத்திட்ட முதல் கோப்பே சாலையோரம் வசிக்கும் மக்களுக்கான குடியிருப்பு கட்டும் திட்டப்பணிக்கானது... அதில் கையெழுத்திடும் போது எதையோ சாதித்துவிட்ட உணர்வு அவளுள் எழுந்தது...

அதற்கு அடுத்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னையில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பணிக்கான திட்டத்தில் கையெழுத்திட்டாள்...

இந்த இரு காரியத்திற்கு அவள் பிள்ளையார் சுழி போட்ட அந்த நொடி மனதுக்கு அப்படியொரு நிறைவாக இருந்தது...

அன்றைய வேலையை முடித்துக் கொண்டு அவள் மதிய உணவை மார்ட்டினா நடத்தும் இல்லத்திற்குச் சென்று ஆதரவற்ற குழந்தைகளோடு சேர்ந்து உண்டாள்... அங்குத் துரையைச் சந்தித்து அவனிடம் சிறிது நேரம் பேசினாள்... அவனது அக்கா அமைச்சராகி விட்டது அறியாது அந்தப் பாலகன் எப்போதும் போல் பேசினான்...

சின்னவர்கள் எப்போதும் அன்புக்கு தானே கட்டுப்படுவார்கள்...

அன்றிரவு மகளைத் தூங்க வைத்துவிட்டு தான் மட்டும் உறக்கம் இல்லாது தவித்தாள் முத்துபேச்சி...

அவளது நீண்ட நாள் கனவான அரசியல் வாழ்க்கைக் கை கூடியதை எண்ணி அவளால் மகிழ்ச்சியில் கூத்தாட முடியவில்லை... மாறாக அவளது மனம் எதையோ ஒன்றை இழந்துவிட்டார் போன்று வெறுமையான நிலையில் இருந்தது...

'எனது கனவு என் கை வந்து சேரும் நாள் எப்போது கண்ணம்மா...?'

விஜயின் குரல் அவளது காதில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது... அதே கேள்வி தான் அவளது மனதிலும் எழுந்தது...

அவளது கனவு கை வந்து சேருமா...? இல்லை காற்றில் கலையும் மேகமாய்க் கலைந்து போகுமா...?

தன்னவனின் உருவம் மீண்டும் மீண்டும் அவளது மனதில் தோன்றி அவளைப் பார்த்துக் குற்றம் சாட்டியது...

'நீ என்னோட காதலுக்கு நியாயம் செய்யவில்லை கண்ணம்மா' என்று...

அவளா அவனுக்கு நியாயம் செய்யவில்லை... அப்படி நியாயம் வழங்கிட முடியாதபடி அவளது கைகள் சாபத்தால் கட்டப்பட்டு இருப்பதை அவன் அறிவானா...!

பழைய நினைவின் தாக்கம் அவளுள் எழுந்து அவளைச் சுனாமியாய் சுருட்டி சென்றது...

****

அன்று மைதிலியும், வெங்கட்டும் அவளைச் செருப்பால் அடித்த ஒவ்வொரு அடியும் அவளது மனதில் 'விஜய்யை கரம் பிடிக்க வேண்டும்' என்கிற வைராக்கியத்தை வன்மையாய் அவளது மனதில் ஆழப்பதிய வைத்தது...

அவள் அடைந்த அவமானம் ஒவ்வொன்றும் அவளது எண்ண விதைக்கு நீருற்றி விருட்சமாக வளரச் செய்தது...

அது அவளுள் ஒருவித தீவிர மனோபாவத்தை ஏற்படுத்த கண்களில் குரோதம் கொப்பளிக்க மைதிலி அடித்த அடிகளைத் தாங்கி கொண்டாள் அவள்...

அவர்களைத் திருப்பி அடிக்க அவளுக்கு ஒரு நொடியாகாது... ஆனால் தன்னவனின் காதல் முகம் அவள் கண் முன்னால் எழுந்து அவளது ஆவேசத்தை அப்படியே கட்டுப்படுத்தி விட்டது...

அவனுக்காகத் தனது உடல்வலி மற்றும் மனவலியை அவள் தாங்கி கொண்டு அசராது நின்றாள்...

அவர்கள் சென்ற பின்னரும் கூட அவளால் தனது அதிர்ந்த நிலையில் இருந்து அவ்வளவு சீக்கிரத்தில் வெளிவர முடியவில்லை... அப்படியே நின்றிருந்தாள் கல்லாய் இறுகி போய்...

பத்து நிமிடங்கள் கழித்து வாசலில் நிழலாடியது... யாரென்று பார்த்தவள் அங்கு நின்றிருந்த ரகுராமனை கண்டு திகைத்தவளாய் அவர் என்ன கூறப் போகிறாரோ என்று மிகவும் பயந்தாள்...

ஆனால் வந்தவரோ மனைவி, மகன் போன்று அவளைச் செருப்பால் அடித்து எல்லாம் அவமானப்படுத்தவில்லை... மாறாக அவளது காலில் சாஷ்டாங்கமாய் விழுந்தவர் கண்ணீர் குரலில்,

"என் மகனை நீ மறந்திரும்மா..." என்று கெஞ்சி வேண்டினார்...

இத்தனை நேரம் அவமானப்பட்ட போது கூட அவள் தன்னவனைக் கரம் பிடித்தே தீர வேண்டும் என்று உறுதியாய் தீர்மானித்து இருந்தாள்... ஆனால் இப்போது அவரது செயலில் அவளது தீர்மானம் லேசாக ஆட்டம் கண்டது...

"ஐயோ... என்னங்கய்யா நீங்க போய் என் காலில் விழுந்துட்டு..." என்று பதறிப் போய்ப் பின்னால் நகர்ந்தாள்...

என்ன பாவம் செய்தாளோ இந்தப் பிறவியில் இப்படி இழிநிலையில் பிறந்து தவிக்கிறாள்... இதில் இந்தப் பாவம் வேறா என்று துடித்துப் போனாள்...

அதில் எழுந்து நின்றவர் அவளைப் பார்த்துக் கரம் குவித்து, "நான் இப்படிக் கேட்பதற்காக என்னை மன்னித்துவிடும்மா... என் மகனை பத்தி எனக்கு நல்லா தெரியும்... அவன் ஒண்ணை நினைச்சான்னா காலம் முழுவதும் அதை மறக்க மாட்டான்... உன்னையும் அது போல் தான் மறக்க மாட்டான்..."

அவர் விஜய் பற்றிச் சொன்ன போது அவளது மனம் தன்னவனின் காதலை கண்டு பெருமிதப்பட்டது...

"நீயும் அப்படித்தான் என்பது உன் கண்ணில் தெரிந்த தீவிரத்தில் நான் உணர்ந்து கொண்டேன்... என் மனைவி, சின்ன மகன் செய்த தவறுக்கு நான் உன் கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... அவங்களைத் தண்டிக்கிறதா நினைச்சு நீ என் குடும்பக் கௌரவத்தைத் தண்டிச்சிடாதேம்மா..."

கண்கள் கலங்க, கரம் கூப்பியபடி அந்தப் பெரியவர் அவளிடத்தில் கெஞ்சிய போது தான் ஏதோ செய்யக் கூடாத பாவத்தைச் செய்துவிட்டது போல் அவளது உடலும், உள்ளமும் கூசி போனது... அவரது முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை அவளால்...

தலைக்குனிந்து கண்களில் கண்ணீர் வழிய அவள் நின்றிருந்தாள்...

"நான் பழங்காலத்து மனுசன்... என்னால் திடீர்ன்னு இது மாதிரி காதல் எல்லாம் ஏத்துக்க முடியலை... அதிலும் உன்னைப் போல்..."

அவர் மேலே சொல்லாமல் நிறுத்தினார்... அதில் அவள் அவரை ஏறிட்டு பார்த்தாள் பரிதாபமாய்... அவளின் நிலை அவரின் மனதையும் அசைத்து பார்த்ததோ என்னவோ... சிறிது நேரம் அமைதியாக இருந்தார்... பின்பு,

"நான் பெருசா பணம், காசு சம்பாதிச்சு வைக்கலை... சமுதாயத்தில் எனக்குன்னு இருப்பது இந்தக் கௌரவம் ஒண்ணு தான்... அந்த மான, மரியாதையை நான் இழந்துட்டேன்னா அதுக்கு அப்புறம் நான் உயிர் வாழ்றதில் அர்த்தம் இல்லை..."

அவர் சொன்னதைக் கேட்டுக் கண்களில் கண்ணீர் வழிய அவரைப் பார்த்தவள், "நீங்க சொல்றது எல்லாம் சரி தான்... ஆனா உங்க மகன் என்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ண மாட்டாரே... அதே மாதிரி தான் நானும்... அந்தளவுக்கு ரெண்டு பேரும் உயிருக்கு உயிராய்க் காதலிக்கிறோம்... இந்த மூணு வருசமா நாங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்து பேசிக்கலைன்னாலும் கூட எங்களுக்கு இடையில் இருந்த காதல் குறையலை... இப்படிப்பட்ட எங்களைப் பிரிப்பதால் உங்களுக்கு என்ன லாபம்...? எங்க ரெண்டு பேர் மனசை விட உங்களுக்கு உங்க கௌரவம் தான் முக்கியமா..." என்று துயரம் தாங்க மாட்டாமல் அவரிடம் கேள்வி கேட்டாள்...

அப்படி என்ன தவறு செய்துவிட்டார்கள் அவர்கள்... காதலித்தது ஒரு பெரிய குற்றமா...?

"காதல் என்பது நீங்க ரெண்டு பேர் சம்பந்தப்பட்டது... ஆனா கல்யாணம் என்பது இரு குடும்பம் சம்பந்தப்பட்டது... இரு குடும்பத்துக் கௌரவம் சம்பந்தப்பட்டது... விஜய் தான் வீட்டில் மூத்த ஆண்மகன்... அவனுக்கு அடுத்து ஆண், பெண் இருவர் இருக்கின்றனர்... இவன் செய்யும் செயல் அவர்களது நல்லது, கெட்டதை மிகவும் பாதிக்கும்... இதனால் அவனது அக்காவின் வாழ்க்கையும் பாதிக்கப்படும்... உங்கள் இருவரது காதலால் என்னோட ஒட்டு மொத்த குடும்பமும் பாதிக்கப்படும்... யார் எப்படிப் பாதிச்சாலும் பரவாயில்லை உங்க காதல் தான் உங்களுக்கு முக்கியம்ன்னு நீ சொல்லுறியா...? அந்தளவுக்குச் சுயநலமான காதலா உங்கள் காதல்...?"

"அப்போ இதுக்கு என்ன தான் முடிவு...? காலம் முழுவதும் நாங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்காம ஒருத்தர் நினைவில் ஒருத்தர் வாழ்றது தான் எங்களுக்கான சாபமா...? அப்படி எங்களைப் பிரிச்சு வைச்சிட்டு நீங்களும் தான் நிம்மதியா இருந்துட முடியுமா...?" என்று ஆவேசமாய்க் கேட்டவள்,

"சாமி என்னைய மறந்துட்டு வேறு பொண்ணு கழுத்துல தாலி கட்டுவாருன்னு மட்டும் கனவு காணாதீங்க... அது அவர் உயிர் இருக்கும் வரை நடக்காது..." என்று துக்கம் பொங்க அவள் சொல்ல...

"என்னுயிர் இருக்கும் வரை உங்க காதலுக்கு என்னால் சம்மதம் சொல்ல முடியாது... அப்படி என்னை மீறி நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டா அடுத்த நொடி நான் என்னுயிரை விட்டு விடுவேன்... மானம், மரியாதை போய் நடைப்பிணமாய் வாழ்றதை விட ஒரேடியாய் உயிரை விடறது மேல் இல்லையா...?"

அழுத்தம் திருத்தமாய்க் கூறியவரை கண்டு அவள் அதிர்ந்து விழித்தாள்...

செருப்பால் அடித்தவர்களையே தன்னவனுக்காகத் தாங்கி கொண்டவள், தன்னவனின் தந்தை தங்களது காதல் ஈடேறினால் உயிரை விட்டு விடுவேன் என்று கூறியதை கேட்டு தாங்க முடியாது துடித்தாள்...

அன்னை இருந்தும் அவரது அன்பு முழுமையாய் கிடைக்கப் பெறாத தூரதிர்ஷ்டசாலி அவள்... ஆனால் விஜய் அப்படியில்லை... பெற்றோரின் அன்பில் மூழ்கி திளைத்து பாசமாய் வளர்ந்தவன்... அப்படிப்பட்டவனை அவர்களிடம் இருந்து பிரிப்பது எப்பேர்பட்ட பாவம் என்று உணர்ந்தவளோ என்ன செய்வது என்று தெரியாது தவித்தாள்...

அவனது அன்னை அவமானப்படுத்திய போது அது அவளுள் காதலின் வெறியை அதிகப்படுத்தியது... ஆனால் அவனது தந்தையின் மன்னிப்பானது அவளின் காதலின் வெறியை அப்படியே தணித்தது...

தன்னவனுக்கு உயிர் கொடுத்தவரின் உயிரை பணயம் வைத்து தங்களது காதல் உயிர் வாழ்வதா என்று அவள் தனக்குள் மருகி போனாள்...

என்ன செய்வது என்று தெரியாத நிலை அவளுக்கு...

துக்கம் தொண்டையை அடைக்க, விழிகளில் விழிநீர் தேங்க அவரைப் பார்த்தவள், "வாழ வேண்டிய வயசில் எங்களை வாழ விடாம பண்றீங்களே... வாழ்க்கையை வாழ்ந்து அனுபவிச்சு முடிச்ச நீங்க இப்படிச் செய்றது கொஞ்சமும் நியாயமில்லை ஐயா... எங்களுக்கு இந்தச் சமுதாயம் எதுவும் வேண்டாம்... இவ்வளவு ஏன் நாங்க இந்த ஊரை விட்டு எங்கேயாவது கண் காணாத இடத்துக்குப் போயிர்றோம்... உங்க கண் முன்னாடி வந்தா தானே உங்களுக்கு அவமானம்... நாங்க வரவே இல்லை..." என்று தங்கள் காதல் ஈடேற மீண்டும் அவரிடத்தில் மன்றாடி பார்த்தாள்...

அவள் சொல்வதை எல்லாம் பொறுமையாய் கேட்டவர், "எப்படிச் செய்தாலும் என் மகன் செய்த தவறு என்னைத்

துரத்தத் தானே செய்யும்... கடைசியில் நான் என்னுயிரை தான் விட வேண்டி வரும்..."

தயவுதாட்சண்யமின்றிக் கூறிய ரகுராமன் தன் முடிவில் நிலையாய் நின்றார்... அதில் அவள் தான் தன் காதலில் மனம் தளர்ந்து போனாள்...

வேறுவழியின்றித் தானே தனது காதலுக்குத் தானே சமாதி கட்டி கொண்டாள்... தனக்குத் தானே கழுத்தறுத்துக் கொண்டு துடிக்கத் துடிக்க உயிரை விடுவது போல் அவ்வளவு வலித்தது அவளுக்கு...

மனதை கல்லாக்கி கொண்டு அவரைப் பார்த்துக் கை தொழுதவள், "ஐயா... உங்க மகனை மறக்க சொன்னீங்க... என்னால் என் உயிர் இருக்கும் வரை அது முடியாது... ஆனால் அவரை விட்டு விலகியிருக்க என்னால் முடியும்... இனி அவரோட வாழ்க்கையில் நான் குறுக்கே வர மாட்டேன்... என்னை நம்பலாம்... இது அவர் மேல் நான் வச்ச காதல் மேல் சத்தியம்..."

அவள் இதைக் கூறும் போதே அவளது கண்ணில் கண்ணீர் மழை பொழிந்தது...

ரகுராமனுக்குமே அவளைப் பார்க்க பாவமாக இருந்தது... ஆனாலும் அவருக்கும் வேறுவழி தெரியவில்லை...

"என்னை மன்னிச்சிரும்மா..." என்று கூறியவர் அவளை ஏறிட்டு பார்க்க இயலாது தலையைக் குனிந்து கொண்டு வெளியேறினார்...

மைதிலி போல் சண்டை போட்டு அடாவடி செய்திருந்தால் அவளும் பதிலுக்கு அடாவடி செய்திருப்பாள்... இப்படிக் காலில் விழுந்து கெஞ்சி, உயிரை விட்டு விடுவேன் என்று பணிபவரிடம் அவளால் எதுவும் பேச முடியவில்லை...

துக்கத்துடன் திக்பிரம்மை பிடித்தார் போன்று அவள் இருந்த போது தான் அங்கு விஜய் குடித்துவிட்டு வந்தான்... அவனைக் கண்டதும் அவளின் இழப்பின் அளவு அவளை வருத்தியதோ என்னமோ... அந்தக் கணம் அவனை இழக்க

முடியாது என்று நினைத்தவள் அவனிடத்தில் தன்னை இழந்தாள் மொத்தமாய்...

தவறு செய்கிறோம் என்று தெரிந்தே தான் அவள் தவறு செய்தாள்...

அவன் போதை தெளிந்து சுயவுணர்வு அடைந்த போது அவளால் நடந்த எதையும் அவனிடத்தில் உரைக்க முடியவில்லை... உரைத்தால் அடுத்தக் கணம் அவன் அவளது கழுத்தில் தாலி கட்டி அவளைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்வான் தான்... ஆனால் அதன் பின்னர்...? அந்த நினைவே அவளுக்குப் பயமாக இருந்தது... அதனால் தான் அமைதியாக இருந்தாள்...

தன்னைக் காதலித்த பாவத்திற்கு அவன் வேறு திருமணம் செய்யாமல் இந்த இளம் வயதில் அவனது வாழ்க்கையை அவன் வாழாதிருப்பதா என்றெண்ணித் தான் அவனைக் காதலிக்கவே இல்லை என்று பொய்யுரைத்து சாதித்தாள்... அவனிடம் திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்தினாள்... அதே சமயம் அவனது குடும்பத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னாள்... எங்கே உண்மை தெரிந்தால் அவன் தனது குடும்பத்தை வெறுத்துவிடுவானோ என்கிற பயம் தான் அதற்குக் காரணம்...

அவளது கூற்றின் படி அவனும் அவளை விட்டு விலகி போனான்... அத்தோடு அவளும் மனதளவில் உயிரற்று போனாள்...

கயல்விழியை உண்டாகி இருக்கும் போது அவள் மீண்டும் ரகுராமனை மருத்துவமனையில் பார்த்துவிட்டு கூனிக்குறுகி போய்விட்டாள்... விஜய்யின் வாழ்க்கையில் இருந்து விலகிவிடுவதாய்க் கூறியவள் அவனின் வாரிசை வயிற்றில் சுமந்து கொண்டு இருப்பதைக் கண்டு அவர் என்ன நினைப்பாரோ என்று...

அதன் பின்னர் அவரைக் கண்ட போது எல்லாம் அவளது மனநிலை அது போல் தான் குற்றவுணர்வில் கூனிக் குறுகியது...

பழைய நினைவின் தாக்கத்தில் இருந்தவளுக்குத் தலை பயங்கரமாய் வலித்தது... தலைவலி அதிகரிக்கும் முன் மாத்திரை போட்டாக வேண்டும்...

அதனால் விரைந்து சென்று மாத்திரையை எடுத்து விழுங்கினாள்... அதன் பின்னரே தலைவலி சற்று மட்டுப்படுவது போலிருந்தது...

அன்று மருத்துவமனையில் இருந்து விஜயை வழியனுப்பி வைக்கும் போது ஏற்பட்ட தாங்கொண்ணா தலைவலி காரணமாக வேறுவழியின்றி அன்றே அவள் மருத்துவரிடம் சென்றாள்...

ஆனால் அவரோ அவளது தலையில் பெரிய இடியை அல்லவா தூக்கி போட்டார்...

மருத்துவரிடம் பேசிவிட்டு மருத்துவமனையில் இருந்து வெளியில் வந்தவள் முகம் பேயறைந்தார் போல் காட்சியளித்தது... மரணபயம் என்றால் என்ன என்பதை அந்தக் கணம் அவள் உணர்ந்தாள்...

வாழ்க்கையில் முதல்முறையாகப் பயந்தாள் அவள்... தாலி கட்டாது முறை தவறி குழந்தை பெற்ற போது கூடத் தோன்றாத அச்சம் இப்போது அவளுள் தோன்றியது...

மருத்துவர் பேசிய வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவளது காதில் ஒலித்தது...

"இதுக்கு முன்னாடி கீழே விழுந்ததில் உங்க தலையில் அடிப்பட்டு இருந்ததா...?"

அவளுக்குத் தெரிந்து அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததாய் நினைவில் இல்லை... இல்லை என்று அவள் கூற...

"இல்லையேம்மா... உங்க பின்னந்தலையில் அடிப்பட்டு அந்த இடத்தில் உள்ளுக்குள் இரத்தம் உறைந்து சிறு கட்டியாய் இருக்கிறதே..."

மருத்துவர் பின்னந்தலையில் அடிப்பட்டிருக்கக் கூடும் என்று கூறியதும் தான் அவளுக்கு அந்த நிகழ்வு

நினைவில் வந்தது... அன்று சந்தோஷமும் அவனது நண்பர்களும் சேர்ந்து கொண்டு அவளை ஸ்கூட்டியில் இருந்து தள்ளிவிட்டது ஞாபகத்தில் எழுந்தது...

"எவ்வளவு சீக்கிரம் ஆபரேசன் பண்றீங்களோ அவ்வளவு சீக்கிரம் ஆபரேசன் பண்ணி அதை ரீமூவ் பண்றது நல்லது... இல்லைன்னா அது உங்க உயிருக்கே ஆபத்தா போயிரும்... இந்த ஆபரேசனும் ஐம்பது சதவீதம் தான் வெற்றியடைய வாய்ப்பிருக்கு... மீதி ஐம்பது சதவீதம் அந்த இறைவன் கையில் தான் இருக்கிறது..."

மருத்துவர் அவளது நிலையைத் தெளிவாக எடுத்துரைத்துவிட்டார்...

மருத்துவர் அவளிடம் சொன்னதற்கு இயந்திரகதியில் தலையை ஆட்டிவிட்டு வெளியில் வந்தாள்...

அந்த நொடி அவளது மனதில் எந்தக் கவலையும் எழவில்லை... இவ்வளவு ஏன் எப்போதும் எழும் மகள் கயல்விழி மீதான கவலை கூட இப்போது இல்லை... ஏனெனில் இப்போது அவளைக் காக்க விஜய் இருக்கின்றான்...

ஆனால் இப்போது அவளது கவலை எல்லாம் விஜய் மட்டுமே... இறக்கும் தறுவாயில் கூட அவனது காதலுக்கு நியாயம் செய்யாமல் தான் சாகப் போகிறோமே என்று மிகுந்த வேதனையுற்றாள்...

அவனது காத்திருந்த காதலுக்குத் தன்னையே அவனுக்குக் கொடுத்தாலின்றி வேறு எது செய்தாலும் அதற்குத் தகுந்த நியாயம் செய்துவிட முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது...

அவனுக்குத் தன்னைக் கொடுக்க முடியாதபடி இருக்கும் தடையை நினைத்து அவளது மனதில் சொல்லொண்ணா துயரம் எழுந்தது...

எல்லாவற்றையும் நினைத்து பார்த்தவள் மனதில் துக்கம் தான் பொங்கியது...

இதோ இப்போது மரணபயம் அவளைத் துரத்தும் போதும் கூடத் தன்னவனின் மடி சாய்ந்து மீளாத்துயில் கொள்வதற்குக் கூட உரிமையற்றவளாய் அவள் இருக்கிறாள்...

மனம் கனத்துப் போனது தனது இயலாத நிலையை எண்ணி... இனி என்ன செய்வது என்று தெரியாது அவள் அமர்ந்திருந்தாள்...

வாசம் நேசமாகும்...!!!

கயல்விழிக்கு வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுத்து கொண்டிருந்தாள் முத்துபேச்சி... பகல் முழுவதும் அத்தனை வேலைகள் இருந்த போதும் இரவில் எப்படியும் மகளுக்கு என்று தனியாய் நேரம் ஒதுக்கிவிடுவாள்...

இப்போது கொஞ்ச நாட்களாகத் தான் கயல்விழி உடல்நலம் தேறி பள்ளிக்கு செல்கிறாள்... முத்துபேச்சி அமைச்சரானாலும் அவளது மகள் அதே அரசு பள்ளியில் தான் படித்து வருகிறாள்... தனக்கு என்று வைத்திருக்கும் சில கொள்கைகளை அவள் எதற்காகவும், யாருக்காகவும் மாற்றிக் கொண்டதில்லை... இதிலும் அப்படியே...

அப்போது வெளியில் இருந்து வீட்டினுள் பரபரப்புடன் நுழைந்த பாண்டியன் நேரே முத்துபேச்சியிடம் வந்து நின்றான்... அங்குக் கயல்விழி இருப்பதைக் கண்டு அவன் சற்றுத் தயங்கி நின்றான்...

"என்ன பாண்டி...?"

முத்துபேச்சி கேட்கவும் சின்னவள் முன்னிலையில் இதை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் விழித்த பாண்டியன்,

"பிறகு பேசலாம் புள்ள... இப்போ வேண்டாம்..." என்றபடி உள்ளே சென்றுவிட்டான்...

அவனது டென்சன் கண்டு யோசனையாய் அவன் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவள் மகளின் அழைப்பில் அவளிடம் கவனத்தைப் பதித்தாள்...

இரவு உணவு முடிந்து மகளைத் தூங்கச் செய்துவிட்டு அறையை விட்டு வெளியில் வந்தவள் நேரே பாண்டியனை தேடிச் சென்றாள்...

"கயலு தூங்கிருச்சா...?" என்று பாண்டியன் கேட்க...

"தூங்கிட்டா..."

"மீனா..." என்று அவன் இழுக்க...

"அவளும் தூங்கிட்டா..." என்று பதிலுரைத்தவள்,

"என்னாச்சு பாண்டி...? ஏன் இப்படி டென்சனா இருக்க...?"

அதற்குப் பதிலளிக்காது அவளிடம் ஒரு அலைப்பேசியை எடுத்து நீட்டினான் அவன்... அவள் புரியாது பார்த்தபடி அதை வாங்கினாள்...

"என் பிரெண்ட் ஒருத்தன் ஃபோன் ரிப்பேர் பண்ற கடை வச்சிருக்கான்னு உனக்குத் தெரியுமே... அதுல ரிப்பேருக்கு இந்த ஃபோன் வந்திருக்கு..."

"சரி அதுக்கு என்ன...?"

"அதுல இருக்கிற வீடியோவை போட்டு பாரு உனக்கு எல்லாம் புரியும்..." என்றவன் உடனே அவள் அதைப் பார்க்க முயன்ற போது பதற்றத்துடன் தடுத்தான்...

"நான் போனதுக்கு அப்புறம் பாரு..."

"அப்படி என்னத்தான் இதிலிருக்கு பாண்டி...?"

"உன்னையும், விசயையும் கேவலப்படுத்தினானே அந்தச் சரவணனை பத்தி இதில் இருக்கு... வழக்கமா எல்லா ஃபோன் கடைக்காரனும் செய்யிற வேலையைத் தான் என் பிரெண்டும் செஞ்சிருக்கான்... அப்படிச் சரவணனோட வீடியோவை எடுத்து பார்த்ததுல அதைப் பார்த்து பயந்து போய் என் கிட்ட சொன்னான்... நானும் அதைப் பார்த்தேன்... அதைப் பார்த்ததில் இருந்து எனக்கு மனசே சரியில்லை புள்ள... நீயே அதைப் பார்த்துட்டு என்ன பண்றதுன்னு முடிவு பண்ணு புள்ள..." என்றவன் அவளது முகத்தைப் பார்க்க கூடச் சங்கடப்பட்டவனாய் அங்கிருந்து வெளியேறினான்...

அந்த அலைப்பேசியில் அப்படி என்ன இருக்கிறது என்று ஆர்வத்துடன் அதிலிருந்த காணொளியை எடுத்து பார்த்தவள் அப்படியே அதிர்ந்து தான் போனாள்...

ஒரு பெண்ணாய் அவளது மனம் மிகவும் கனத்துப் போனது... 'ச்சீய்... ச்சீய்... இப்படியும் மனிதர்கள்

இருப்பார்களா...' என்று அவளது மனம் அருவருத்துப் போனது...

சரவணனும், மேலும் இரு காவல்துறை அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு இரண்டு சிறுமிகளைப் பாலியல் பலாத்காரம் செய்ததைத் தான் காணொளியாக எடுத்து வைத்திருந்தார்கள்... உடல் ரீதியில் பலவீனமான அந்தச் சிறுமிகளைச் சித்ரவதை செய்ததோடு மட்டுமல்லாது வக்கிர எண்ணத்துடன் அதைக் காணொளியாய் எடுத்து பார்த்து ரசிக்க வேறு செய்திருக்கின்றனர்...

அதைக் கண்டு அவளது உள்ளம் உலைக்களமாய்க் கொதித்தது...

உடனே மனம் தாளாமல் விஜய்க்கு அழைத்தாள்... மறுபக்கம் அவன் எடுத்ததும் அவள் விசயத்தைக் கூற அவனும் அதைக் கேட்டு திகைத்துப் போனான்... தான் உடனே வருவதாகக் கூறியவன் அடுத்த அரை மணி நேரத்தில் அவளது வீட்டில் இருந்தான்...

விஜய் வருவதற்குள் சரவணன் அலைப்பேசியில் இருந்த ஒரு காணொளியை மட்டும் முத்துபேச்சி தனது அலைப்பேசிக்கு மாற்றிக் கொண்டாள் மனதில் எழுந்த வன்மத்துடன்...

மனம் சரியில்லாமல் வாசலில் நின்று கொண்டிருந்த பாண்டியன் தான் முதலில் விஜயை கண்டது...

"வா விசய்... என்ன திடீர்ன்னு இந்த நேரத்தில்...?"

என்றும் வராதவன் இன்று வீடு தேடி வந்ததில் பாண்டியனுக்கு மிகுந்த ஆச்சிரியமாக இருந்தது...

"பேச்சி கூப்பிட்டிருந்தா..." விஜயுமே பதட்டத்தில் இருந்தான்...

பாண்டியனுக்கு விசயம் புரிந்து போனது... உடனே அவனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்...

வெகுநாட்கள் கழித்து விஜயும், முத்துபேச்சியும் இன்று தான் நேரில் சந்திக்கின்றனர்... தாங்கள் சந்திப்பதன் நோக்கத்தை அறிவு அறிவுறுத்தினாலும் மனம் அதன் கட்டுப்பாட்டினை இழந்து தங்களது மனங்கவர்ந்தவரை தலை முதல் கால் வரை அலசி ஆராய்ந்தது... இருவரது கண்களும் மற்றவரின் நலத்தை மௌனமாய் விசாரித்துக் கொண்டது...

இருவரின் நிலையையும் கண்ட பாண்டியன் தான் அங்கே அதிகப்படியோ என்றெண்ணி நகர முயலும் போது விஜய் சுதாரித்துக் கொண்டான்...

"நீ இங்கே இரு பாண்டி..." என்றவன்,

"இந்த விசயத்தை மேலிடத்துக்குக் கொண்டு போனா டிப்பார்ட்மெண்ட் பெயர் கெட்டுப் போகக் கூடாதுன்னு நினைச்சு விசயத்தை அமுக்கத்தான் பார்ப்பாங்க... அதனால் விசயத்தை மீடியாவில் பரவ விடுவது தான் நல்லது..."

"அது எனக்குத் தெரியாதா விஜூ... ஆனா பாதிக்கப்பட்ட ரெண்டு பேரும் ரொம்பச் சின்னப் பொண்ணுங்க... அவங்களைப் போய் எப்படி மீடியாவில்...?"

மகளைப் பெற்ற அம்மாவாய் அவளது மனம் குமுறியது...

முத்துபேச்சி சொல்வதும் நியாயம் தான்... என்ன செய்வது என்று அவன் தீவிரமாய் யோசித்தான்... பிறகு முடிவெடுத்தவனாய்,

"எப்படியும் மீடியா வெளிச்சத்துக்கு இந்த நியூஸ் வந்து தான் ஆகும்... ஆனால் அந்தப் பொண்ணுங்க முகம் வெளியில் தெரியாம வேணும்ன்னா பார்த்துக்கலாம்... இதுக்கு வேறுவழி தெரியலை..." என்று விஜய் கூற...

அவனது கூற்றை மற்ற இருவரும் கனத்த மனதுடன் ஏற்றுக் கொண்டனர்... ஏனெனில் நேர்மையாய் சென்று அவர்கள் பெற்றுக் கொண்ட மரண அடியை அவர்களது மரணப் படுக்கையில் கூட மறக்க மாட்டார்கள்... அதற்கு

அவர்களுக்குக் கிடைத்த வெகுமதியையும் அவர்கள் மறக்கவில்லை...

"ஆனா அதுக்கு முன்னாடி ஒரு சின்ன வேலையிருக்கு..." என்றவள் சற்று முன் தனது அலைப்பேசிக்கு அனுப்பியிருந்த அந்தக் குறிப்பிட்ட காணொளியை தன்னிடம் இருந்த 'வாட்ஸ் அப் குரூப்'களுக்கு அவள் அனுப்பி வைத்தாள்...

"ஏய் கண்ணம்மா என்ன பண்ற..." பதட்டத்துடன் விஜய் தடுப்பதற்குள் அவள் அதைச் செய்து முடித்து விட்டாள்... இனி இந்தக் காணொளி உலகம் முழுவதும் பரவிவிடும்...

'காவல்துறை அதிகாரியும், அவரது கள்ளக்காதலியும் தனியறையில் ஜல்சா...' என்று...

அது தானே அவளுக்கு வேண்டும்... தங்களது புனிதமான காதலை களங்கப்படுத்தியவனைக் களங்கப்படுத்தாமல் இருந்தால் அவள் முத்துபேச்சி அல்லவே...

சரவணனிடத்தில் சொன்னது போல் இப்போது செய்து காட்டிவிட்டாள்... அவள் என்றுமே சொல்ல மாட்டாள்... செயலில் தான் செய்து காட்டுவாள்... அது தான் அவள்...

அவளது கையிலிருந்த சரவணனின் அலைப்பேசியை வாங்கிக் கொண்ட விஜய்,

"என்ன கண்ணம்மா...? உனக்கு எதுக்கு வீண் வம்பு...?" எப்போதும் போல் அவளைக் கடிந்தான்...

"அவன் செய்தது மட்டும் சரியா...? உன்னையும், என்னையும் அசிங்கப்படுத்தியது தப்பு இல்லையா...?"

கண்களில் ஒருவித தீவிர பாவத்துடன் உக்கிரமாய், ஆத்திரத்துடன் கேட்டவளை கண்டு அவன் தான் சற்று அடங்கிப் போனான்... அவள் கூறுவதும் உண்மை தானே என்று...

"நீ சொன்னா சரி தான் கண்ணம்மா..." என்று கூறி சிரித்தபடி அவளைச் சமாதானப்படுத்தியவன்,

"மீடியாவுக்கு இந்த நியூசை கொடுக்கிறதுக்கு முன்னாடி முதல்ல அந்தச் சிறுமிகளைக் காப்பாத்தியாகணும்..."

"அவங்களைக் கூட்டிட்டு வந்து நம்ம மார்ட்டினா ஆசிரமத்தில் வேணும்ன்னா தங்க வைக்கலாமா விஜூ...?"

"ம்... அப்படியே செய்யலாம்..." என்றவன் கிளம்பி போகும் முன்,

"பேபி எங்கே...?" என்று முத்துபேச்சியிடம் மகளைக் கேட்டவன், கயல்விழி தூங்குவதை அறிந்து அறைக்குச் சென்று அவளைப் பார்த்தவன் கண்கள் கலங்க அவளது தலையை வருடிவிட்டு அவளது நெற்றியில் முத்தமிட்டு நிமிர்ந்தான்...

அவனது செய்கையை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த முத்துபேச்சி அருகில் வந்தவன் புன்னகையுடன் அவளது உச்சி வகிட்டில் முத்தமிட்டு,

"இப்போ ஓகேவா கண்ணம்மா..."

எப்போதும் அவனை விலக்கி விடுபவள் இன்று அவனது அருகாமையில் உள்ளம் உருக நின்றிருந்தாள்... அவனுக்கும் அவளுடன் இப்படியே இருக்க வேண்டும் என்று ஆசை தான்... ஆனால் அதைச் செய்ய முடியாதபடி அவனுக்குத் தடை போட்டிருக்காளே அவனது கண்ணம்மா...

"வர்றேன் கண்ணம்மா..." என்று அவளிடம் விடைப்பெற்றுக் கிளம்பினான் அவன்...

முத்துபேச்சி அந்தக் கணமே மார்ட்டினாவை அழைத்துப் பேசியவள் உடனே பாண்டியனை அழைத்துக் கொண்டு அங்குச் சென்றாள்...

அன்றே கையும் களவுமாய்ச் சரவணன் மற்றும் அவனுடன் இருந்த இரண்டு காவலர்களும் சிறுமிகளைப் பாலியல் வன்கொடுமை செய்ததற்காகக் கைது செய்யப்பட்டனர்...

விஜயின் இந்த அதிரடி செயலில் சரவணனின் மனம் ஆத்திரத்தில் கொதித்தது...

ஏனெனில் ஒரே துறையைச் சேர்ந்தவர்கள் மற்றவர் தவறு செய்யும் போது யாரும் ஒருவரை ஒருவர் காட்டி கொடுக்க மாட்டார்கள்... ஆனால் அதையும் மீறி விஜய் இந்த விசயத்தை ஊடகங்களுக்குக் கொண்டு சென்றதை தான் அவனால் தாங்க முடியவில்லை... இனி அவனால் ஊருக்குள் தலை நிமிர்ந்து வாழ முடியுமா...?

முதலில் அவன் மீது போடப்பட்ட வழக்கில் இருந்து இப்போது தான் நிபந்தனையின் பேரில் ஜாமீனில் வெளிவந்திருக்கிறான்... இப்போது வேறு வழக்கு அவன் மீது பாய்ந்து மீண்டும் உள்ளே வந்துவிட்டான் அவன்...

அந்தக் கணம் முத்துபேச்சி அவனிடத்தில் சவாலாய் பேசியது நினைவில் வந்தது...

'என்னை அசிங்கப்படுத்திய உன்னை நான் சும்மா விட மாட்டேன்டா... ஒரு நாள் இல்லை ஒரு நாள் இருக்கு உனக்கு...'

'நான் சொல்லிட்டுச் செய்ய மாட்டேன்டா... செஞ்சிட்டு சொல்வேன்... அன்னைக்குப் புரியும் உனக்கு நான் யார்ன்னு...'

சொன்னது போல் செய்து காட்டிய அவளை நினைத்து பல்லை கடித்தான் அவன் கோபத்தில்... வேறு என்ன செய்ய முடியும் அவனால்... இப்போதைக்கு அவனால் அதை மட்டுமே செய்ய முடியும்...

நிச்சயம் இந்த வழக்கில் அவனுக்கு ஜாமீன் கூடக் கிடைக்காது... அந்தளவுக்கு இந்த வழக்கு அவனுக்கு எதிராக மிகவும் வலிமையாய் மாறி இருந்தது...

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து விஜய் பெண் காவலர்கள் துணையுடன் அந்தச் சிறுமிகளை மீட்டு அங்கு அழைத்து வந்தான்...

"அந்த வீடியோவில் இருக்கிற அடையாளத்தை வைத்து கண்டுபிடித்து அங்கே போவதற்குள் நேரமாகிவிட்டது..." என்று அவன் மன்னிப்பு கேட்பது போல் அவளிடம் கூற,

"எவ்வளவு பெரிய வேலை செய்திருக்கிற விஜூ... ரொம்பத் தேங்க்ஸ்..." என்றவள் கண்களில் கண்ணீர் மல்கியது...

ஏனெனில் அந்தச் சிறுமிகளுக்குக் கயல்விழியை விட ஏழெட்டு வயது அதிகமாக இருக்கலாம்... பதின்பருவ வயதில் இருந்தனர்... தங்களுக்கு நேர்ந்த கொடுமையின் காரணமாக மிகவும் அச்சமுற்று காணப்பட்டனர்...

சிறிது நேரம் அவர்களுடன் பேசி அவர்களை அமைதியடையச் செய்து மார்ட்டினா வசம் ஒப்படைத்து விட்டு வந்தவளுக்கு மனம் மிகவும் பாரமாகி போனது...

அவளுக்கு இருந்த மனநிலையில் விஜயிடம் தனித்துப் பேச முடியவில்லை... அதனால் மௌனமாகக் கிளம்பி வீடு வந்து சேர்ந்தாள்...

அடுத்து வந்த நாட்களில் இந்த வழக்கு தனி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது... முத்துபேச்சியின் மனம் குளிரும்படி இந்த வழக்கில் சரவணன் மற்றும் அவனது கூட்டாளிகளுக்கு மரணத் தண்டனை விதிக்கப்பட்டது... அதைக் கேட்டு அவள் மிகவும் சந்தோசப்பட்டாள்...

நாட்டில் இந்த நீதிபதி போல் மனதில் ஈரமுள்ள நீதிபதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள் போலும்...

அந்தக் கணம் அவளது நினைவில் செல்வி தூக்கில் தொங்கிய காட்சி எழுந்தது... சந்தோஷிற்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து செல்விக்கு நியாயம் கிடைக்கச் செய்ய முடியாமல் போனதை எண்ணி மனதுக்குக் கஷ்டமாக இருந்த போதும், இப்போது சரவணனுக்குக் கிடைத்த இந்தத் தண்டனையானது செல்விக்கான நீதியை பெற்று தந்து விட்டதாய் தான் அவளுக்குத் தோன்றியது...

அந்தச் சிறுமிகள் இருவரும் காப்பகத்தில் பத்திரமாக இருந்தனர்... இனி படிப்பில் கவனம் செலுத்த போவதாய் இருவரும் ஒன்று போல் கூறினர்...

இதைச் செயலாற்றிய விஜய்யை கண்டு அவள் நிறைவாய் சிரித்தாள்... அவனும் அப்படியே...

****

அந்த மருத்துவமனைக்கு ஒரு வழக்கு விசயமாக விஜய் அந்த நரம்பியல் மருத்துவரை சந்திக்க வந்திருந்தான்... உள்ளே ஆள் இருப்பதால் வெளியில் காத்து கொண்டிருந்தவன் அந்நேரம் அலைப்பேசியில் அழைப்பு வரவும் அதை உயிர்ப்பித்தபடி சற்று தள்ளி சென்று பேசத் துவங்கினான்...

அந்த நேரம் முத்துபேச்சி மருத்துவர் அறையில் இருந்து வெளியில் வந்தாள்... மாதந்தோறும் பரிசோதனைக்கு வருவது போல் இன்றும் வந்திருந்தாள்... அவளது வாழ்நாள் எண்ணப்படுவதாக மருத்துவர் எச்சரிக்கை செய்ததும் அவளுள் பயம் எழுந்தது...

அந்தப் பயத்துடன் வெளியில் வந்தவள் விஜயை கவனிக்கவில்லை...

முக்கியப் பிரமுகர்களுக்கு என்றிருக்கும் பிரதான வாயில் வழியாக அவள் செல்வதை அவன் தான் முதலில் கண்டான்...

"பேச்சி..." என்று உரக்க அழைக்கப் போனவன் அவளின் உயரம் அறிந்து அமைதியாகிவிட்டான்... அதற்குள் அவள் வாயிலை கடந்து வெளியில் சென்றுவிட்டாள்...

அந்த நொடிப் பொழுதிலும் அவளது முகத்தில் கவ்வியிருந்த சோகம் அவனது மனதிலும் சூழ்வதாய்... ஏன், என்னவாயிற்று இவளுக்கு...? என்ற யோசனையுடன் நின்றவனைச் செவிலிப்பெண் வந்து அழைத்தாள் மருத்துவர் அழைப்பதாய்...

அவன் மருத்துவர் அறைக்குள் நுழையும் போது மருத்துவர் செவிலிப்பெண்ணிடம் ஒரு கோப்பை கொடுத்து,

"இது மினிஸ்டர் முத்துபேச்சியோடது... விட்டுட்டு போயிட்டாங்கன்னு நினைக்கிறேன்... யாரையாவது விட்டு அவங்க வீட்டில் சேர்த்துட சொல்லுங்க..." என்றவர் விஜயிடம் திரும்பி,

"சொல்லுங்க மிஸ்டர். விஜய்..." என்று புன்னகை முகமாய்க் கேட்டார்...

விஜய்க்கு தான் வந்த விசயம் மறந்து போய்விட்டது... அவனது நினைவு முழுவதும் அவனது கண்ணம்மா தான் வியாபித்திருந்தாள்...

"அவளுக்கு என்னாச்சு டாக்டர்...?" பதட்டத்தில் மொட்டையாக விசாரித்தான்...

"யாரை கேட்கறீங்க...?"

"முத்துபேச்சி..."

பதவியில் இருக்கும் அமைச்சரை உரிமையுடன் பெயர் சொல்லி அழைத்தவனை அவர் வியப்பாய் பார்த்தார்... அவரது பார்வையை உணர்ந்தார் போன்று அவன்,

"அவள் என் மனைவி..." என்றான் நிமிர்வோடு...

அப்போது தான் மருத்துவருக்கும் ஞாபகம் வந்தது... முத்துபேச்சியின் முழுப்பெயர் திருமதி. முத்துபேச்சி விஜய் என்பது...

"நீங்க தான் அவங்களோட கணவன்னு அவங்க சொன்னதே இல்லையே... இங்கே வரும் போது எல்லாம் தனியா தான் வருவாங்க..." என்றவர் அவளது நோயின் தீவிரத்தை பற்றி அவனிடத்தில் விளக்கமாய்க் கூற... அதைக் கேட்டு அவன் மூச்சு விட மறந்து அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான்...

மருத்துவர் கொடுத்த அதிர்ச்சியில் கல்லாய் இறுகிப் போய் அமர்ந்திருந்தவனை அவர் அழைக்கவும், முயன்று அவரிடம் வழக்குச் சம்பந்தமாகப் பேசிவிட்டு இயந்திரகதியில் விடைபெற்று வெளியில் வந்தான்...

தன்னவளை பற்றிய சிந்தனை தான் அவனது மனதில் விடாமல் ஓடி கொண்டிருந்தது...

இப்படி ஒரு நோய் இருப்பதை அவள் தன்னிடத்தில் இருந்து மறைத்ததை எண்ணி அவள் மீது அவனுக்குக் கோபம் வந்தது... அதே சமயம் அவளிடத்தில் இரக்கமும் சுரந்தது...

தனது வாழ்நாளை எண்ணி கொண்டிருப்பவள் தன்னை விடப் பெரும் துயரில் இருப்பாள் என்று...

விதி தங்களது வாழ்வில் மட்டும் ஏன் இப்படிச் சதி செய்கிறது என்று அந்த விதியை சபித்தான் மனதுக்குள்...

இனியாவது அவளுடன் மனமொத்து வாழலாம் என்று அவன் சந்தோசமாய்க் கனவு கண்டு கொண்டிருக்க... கடைசிவரை அவனது கனவு கனவாகவே இருக்க வேண்டும் என்பது தான் அந்தக் கடவுளின் எண்ணம் போலும்...

ஆனால் அந்த விதியை மதியால் வெல்ல அவனால் முடியும்... அவனது கனவை நனவாக்கிக் காட்டுவது அவனது கையில் தான் இருக்கிறது...

துயரத்தில் துடித்த மனதை சமாதானப்படுத்திவிட்டு அடுத்து தான் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி யோசிக்கலானான்...

அதே போல் வீட்டிற்கு வந்து சேர்ந்த முத்துபேச்சியும் சோர்வான மனநிலையில் தான் இருந்தாள்...

விரைவில் அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும் என்று மருத்துவர் அவளை எச்சரித்துவிட்டார்... இல்லையேல் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கூறிவிட்டார்...

அப்படியே அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும் அவளது உயிருக்கு உத்திரவாதம் கிடையாது... அதனால் தான் அவள் அறுவை சிகிச்சையைத் தள்ளி போட்டுக் கொண்டு வந்தது... தான் உயிரோடு இருக்கும் வரையிலுமாவது தன்னவனைக் கண்ணார கண்டு ரசித்து விட்டு உயிர் துறக்கலாம் என்று அவள் நினைத்தாள்...

அவனுடன் வாழும் கொடுப்பினை தான் அவளுக்கு இல்லை... ஆனால் இன்னும் சிறிது நாட்களாவது அவனைக் கண்ணார பார்த்து கொண்டாவது இருக்கலாமே என்று தோன்றியது அவளுக்கு...

அவள் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்க, விஜயோ பாண்டியனுடன் பேசி தனது திட்டத்தினை விரைந்து செயல்படுத்த நினைத்தான்...

அன்றே விஜய் தனது வீட்டினரிடம் தனது திட்டத்தினைக் கூறிவிட்டான்...

"நாளைக்கு எனக்கும், பேச்சிக்கும் கோவிலில் வைத்துக் கல்யாணம் நடக்கவிருக்கிறது..." என்று எல்லோருக்கும் பொதுவாக அறிவிப்பு போல் அவன் சொல்ல...

அதைக் கேட்டு மைதிலி ஆத்திரமுற்றவராய், "எவ்வளவு தைரியம் இருந்தா இதை நீ எங்க கிட்ட வந்து சொல்லுவ...? அவள் இந்த வீட்டு மருமகளா...? முடியவே முடியாது..." என்று குதிக்க...

"நான் உங்க சம்மதம் வேண்டி நிற்கலை... ஒரு அறிவிப்பா தான் இதைச் சொன்னேன்..." என்றவன் அப்போதும் ஒன்றும் பேசாது அமைதியாக இருந்த தந்தையின் அருகில் வந்தான்...

அவர் முன் மண்டியிட்டு அமர்ந்து அவரது கையைப் பிடித்துக் கொண்டு ஒரு நொடி மௌனமாக இருந்தவன் பின்,

"என்னை மன்னிச்சிருங்கப்பா... உங்க நிலையில் உங்களது விருப்பமின்மை சரி தான்... ஆனால் என்

நிலையில்...? காதலுக்குக் கண் இல்லை என்பது உண்மை தான்ப்பா... அவளைப் பத்தி எல்லா உண்மையும் தெரிஞ்சு தான் நான் அவளைக் காதலித்தேன்... உங்க கண்ணுக்கு தெரிஞ்ச அவளோட அந்தஸ்து, குடும்பப் பின்னணி எதுவும் என் கண்ணுக்கு தெரியலை... அவள் மட்டும் தான் என் கண்ணுக்கு தெரிஞ்சாள்... உங்க மனசுக்குத் தவறாகப்பட்டது... என் மனசுக்கு சரியாய் தோன்றியது... இந்த ஒரு விசயத்தில் என்னை மன்னிச்சிருங்கப்பா... உங்க மௌனத்தை நான் மீற வேண்டியதாய் போச்சு..."

மகனது வார்த்தைகள் அவருக்கு மிகுந்த வேதனையை அளித்த போதும் ஒருபுறம் அவருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது... அவரால் தனது கௌரவத்தை விட்டு கீழிறங்கி வந்து இந்தக் காதலுக்குப் பச்சைக் கொடி காட்ட முடியாது...

இத்தனை வருடங்கள் அவர்களது காதலுக்கு எதிரியாகத் தான் இருந்ததே அவருக்கு மிகவும் துன்பமாக இருந்தது... அதனால் இன்று மகன் அதை மீறவும் அவர் சந்தோசம் தான் அடைந்தார்...

அந்தக் கணம் அவரது மனதில் அதுவரை அரித்துக் கொண்டிருந்த குற்றவுணர்வு நீங்கி எல்லையில்லா நிம்மதி எழுந்தது என்றால் மிகையில்லை... ஆனால் அதை வெளிப்படையாய் ஒத்துக் கொள்ள மறுத்து அமைதியாய் மகனை பார்த்தார் அந்தப் பழங்கால மனிதர்...

"இந்தக் கல்யாணம் பத்தி அவளுக்கு எதுவும் தெரியாதுப்பா... அம்மா மாதிரி நீங்களும் அவளைத் தப்பா நினைச்சுக்காதீங்க..."

அவன் கூறியதை கேட்டு அவர் திகைத்து போய் அவனைப் பார்த்தார்...

"அவளோட உயிருக்கு ஆபத்தான இந்த நிலையில் இந்த முடிவை எடுப்பதைத் தவிர எனக்கு வேறுவழி தெரியலைப்பா..." என்றவன் அவளின் உடல்நலத்தைப் பற்றிக் கூற...

அவருக்கு எல்லாம் புரிந்து போனது... உயிர் பிரியும் அந்தத் தருணத்தில் கூடத் தனக்குக் கொடுத்த வாக்கிற்காகத் தனது மகனை விட்டுப் பிரிந்திருக்கும் முத்துபேச்சி அவரது கண்களுக்கு தெய்வமாகத் தெரிந்தாள்... அந்தக் கணம் அவரது மனம் அவளிடத்தில் சற்று இளகி இரக்கம் கொண்டது...

தனது கையைப் பிடித்துக் கொண்டிருந்த மகனின் கை மீது ஆறுதலாய் தட்டி கொடுத்த ரகுராமன்,

"மருமகளையும், பேத்தியையும் நல்லா பார்த்துக்கோ விஜய்..." என்க...

அதில் அவன் சந்தோசம் அடைந்தான்... அவனது மனவருத்தம் எல்லாம் துணி கொண்டு துடைத்தது போல் பளிச்சென்று அகன்றுவிட்டது...

"கண்டிப்பா அப்பா... அவங்க ரெண்டு பேரும் என்னோட உயிர்..."

"என்ன பண்றீங்க நீங்க...?" என்று இடையிட்டு கத்திய மைதிலியை ஒரு பார்வையில் அடக்கி விட்டார் ரகுராமன்...

அன்று மருத்துவமனையில் கணவனிடம் இருந்து வாங்கிய அடியை மைதிலி இன்னமும் மறக்கவில்லை... இப்போது மீண்டும் சின்ன மருமகள் முன் அடிவாங்கி அவமானப்பட அவர் தயாராக இல்லை... அதனால் அப்படியே அடங்கிப் போய் விட்டார்...

தந்தை சம்மதம் சொன்னதே அவனுக்குப் போதுமானதாய் இருந்தது...

****

மறுநாள் பொழுது அழகாய் விடிந்தது... அதிகாலையில் முன்னதாகக் கிளம்பி வந்து கோவிலில் காத்திருந்தான் விஜய்...

தன்னவளை கைப்பிடிக்கப் போகும் அந்த இனிய தருணம் இன்னும் சில மணித்துளிகளில் நிகழப் போகிறது...

ஆனால் அதற்குரிய மகிழ்ச்சி அவனிடத்தில் இல்லை... மனதில் பாரமேறிய உணர்வுடன் நின்றிருந்தான் அவன்...

புதுப் புடவை சரசரக்க முத்துபேச்சியும், பட்டுப்பாவடையில் அழகாய் கயல்விழியும், பாண்டியன், மீனாவுடன் அங்கு வந்து சேர்ந்தனர்...

வேட்டி சட்டையில் கம்பீரமான அழகுடன் நின்றிருந்தவனை மனதில் நிறைத்துக் கொண்டு வந்த முத்துபேச்சியின் விழிகள் காதலில் கசிந்துருகியது...

அவனும் அவளது அழகில் ஒரு நொடி தடுமாறித்தான் போனான்... ஆனால் அவளது உடல்நலம் அவன் கண்முன் வந்து பயமுறுத்த அவனது ரசனை நொடியில் பயமாய் மாறிப் போனது...

"அப்படி என்ன வேண்டுதல் விஜூ...?" கோவிலை சுற்றிப் பார்த்துக் கொண்டே அவள் கேட்டாள்...

கோவிலில் வேண்டுதல் இருக்கிறது என்று கூறித்தான் அவளை அழைத்து வரச் சொன்னான்... திருமணம் என்றால் அவள் இங்கு எட்டிப்பார்க்கவே மாட்டாள் என்பது அவனுக்குத் தான் தெரியுமே...

"நீ மினிஸ்டர் ஆனதுக்கு இந்தக் கோவிலில் ஒரு வேண்டுதல் வச்சேன்... அதைச் செய்யலாம்ன்னு தான் உன்னை வரச் சொன்னேன்..."

"ஐயோ விஜூ... என்னை மொட்டை எல்லாம் போட சொல்லிடாதே... எனக்கு இருக்கிறதே கொஞ்ச முடி தான்..."

ஆண் பிள்ளை போன்று ஒட்ட வெட்டியிருந்த தனது முடியை சுட்டிக்காட்டி அவள் கூறிய விதத்தில் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"மொட்டை போடுறதுக்கும் கொஞ்சம் முடி வேணும் கண்ணம்மா... அது உன் கிட்ட இல்லை... அதனால் பயப்படாம வா..." என்று அவளைக் கேலி செய்தவன் மகளைக் கையில் தூக்கி கொண்டான்...

முத்துபேச்சி விஜயின் பின்னே செல்ல... பாண்டியன் அவர்கள் இருவரையும் பின் தொடர்ந்தான்... மீனா எதுவும் புரியாது அமைதியாக வந்தாள்...

கடவுள் சந்நிதானத்தில் முத்துபேச்சி கண்களை மூடி வேண்டிக் கொண்டிருந்த போது அவளது கழுத்தில் ஏதோ ஒன்று உரசுவது போலிருக்க, அதில் திடுக்கிட்டு போய் அவள் கண் விழித்துப் பார்த்தாள்...

விஜய் அவளை இமைக்காது பார்த்தபடி அவளது கழுத்தில் தாலி கட்டி கொண்டிருந்தான்... அவனது கண்கள் உணர்ச்சிகளைத் துடைத்து வெறுமனே அவளைப் பார்த்தது...

தோழியின் திருமணத்தைக் கண்ட மகிழ்ச்சியில் பாண்டியன் நிம்மதியாய் நின்றிருந்தான்...

விஜயின் செயலில் முதலில் அதிர்ந்து பின் மனம் மகிழ்ந்து போனவளாய் அந்தத் தாலியை தன் கையில் எடுத்து பார்த்தவளின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது...

அவளது திகைப்பு, வியப்பு எல்லாவற்றையும் பார்த்து ரசிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தவன் மனம் இப்போது ரசிக்கும் மனநிலையில் இல்லை... மாறாகத் துக்கத்தோடு அவளைப் பார்த்தான்... என்ன மாதிரியான திருமணம் இது என்பது போல்...

ஆனாலும் அவளைக் கரம் பிடித்தது அவனது மனதுக்கு அத்தனை நிம்மதியை தந்தது...

எத்தனை வருட தவம் அவளுடையது... அவனது கை சேர மாட்டோமா என்று ஏங்கி தவித்தவளுக்கு அந்த நொடி அவனது கை வந்து சேர்ந்த நிம்மதி எழுந்தது... இப்படி ஒரு பொன்னான தருணத்திற்காகத் தானே இத்தனை வருடம் அவள் நம்பிக்கையுடன் காத்திருந்தது...

எல்லாம் ஒரு கணம் தான்... அடுத்தக் கணம் அவளுக்கு அவனது தந்தையைப் பற்றிய ஞாபகம் வர மிகுந்த

துயரத்துடன் அவனைப் பார்த்தவள் தனது தாலியை இறுக பற்றிக் கொண்டு,

"ஏன் விஜூ இப்படிப் பண்ணின...? என் கழுத்தில் தாலி ஏறுவதற்காக உங்கம்மா கழுத்தில் தாலி இறங்கச் செய்யப் பார்க்கிறியே...? இது நியாயமா...?"

அவளது வார்த்தையில் விஜய் அவளைக் கூர்ந்து பார்த்தவன், "என்ன சொல்ற கண்ணம்மா...?" என்று கேட்டான் ஆழ்ந்த குரலில்...

"இந்தக் கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்றேன்..." என்றபடி தீவிர மனோபாவத்துடன் தாலியை கழற்ற போனாள் அவள்...

அந்த நொடி அப்படிச் செய்வதற்கு அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது... ஆனால் ஒரு உயிரின் மதிப்பின் முன் அவளது வேதனை அவளுக்குப் பெரியதாய் தோன்றவில்லை...

அவளது செயலில் விஜயின் முகம் மாறியது... ஆனாலும் அவளது காதல் மனம் பற்றி அவனுக்குத் தெரியுமாதலால் அவன் சட்டென்று அவளது கையைப் பிடித்துத் தடுக்க வந்தான்...

"வேண்டாம்மா..." என்ற குரல் அவனுக்கு முன் அவளைத் தடுத்து நிறுத்தியது...

அதில் அவளது கை அப்படியே அந்தரத்தில் நின்றது... அருகில் இருந்த தூண் மறைவில் இருந்து ரகுராமன் வெளியில் வந்தார்...

"எனக்காக இதுவரை நீ உன் வாழ்க்கையில் இழந்தது எல்லாம் போதும்மா... உன்னை விடக் குணமான ஒரு பெண்ணை உலகம் முழுவதும் தேடினாலும் கிடைக்காது... என் மகனுக்கு உன்னை விட வேறு பெண் பொருத்தம் கிடையாது... நீ தான்ம்மா என்னோட மூத்த மருமகள்..." என்று அவளது தலையில் கை வைத்து அவர் ஆசிர்வதிக்க...

அதில் உணர்ச்சிவசப்பட்ட முத்துபேச்சி அவரது காலில் விழுந்தாள் கண்களில் கண்ணீரோடு... அவளோடு சேர்ந்து விஜயும் அவரது காலில் விழுந்தான் தந்தையின் ஆசிர்வாதம் வேண்டி... நடப்பது எதுவும் அவனுக்குப் புரியவில்லை... இருந்தாலும் தந்தை அங்கு வந்தது அவனுக்குச் சற்றுச் சந்தோசமாக, நிம்மதியாக இருந்தது...

இருவரையும் ஆசிர்வதித்த ரகுராமன் தன் சட்டைப் பையில் இருந்து ஒரு ஜோடி தங்க வளையலை எடுத்து மகனிடம் கொடுத்து,

"இது உன்னோட பாட்டியோட வளையல் விஜய்... உன் மனைவிக்காகப் பத்திரமாக வைத்திருந்தேன்... உன் மனைவிக்குப் போட்டு விடு..." என்க...

அதில் முகம் மலர்ந்த விஜய் அந்த வளையல்களை எடுத்து முத்துபேச்சியின் கரத்தில் அணிவித்தான்... அவளுக்கென்று செய்தது போல் அந்த வளையல்கள் கச்சிதமாகப் பொருந்தியது அவளது கரத்தில்...

அவருக்குக் கொடுத்த வாக்கை மீறி தான் நடந்து கொண்டு விட்டோமே என்று அதுவரை இருந்த அவளது உறுத்தல், மாமனார் அந்த வளையலை கொடுத்ததும் அப்படியே பனி போல் அகன்றுவிட்டது...

அவளது அந்த உறுத்தல் அகன்றது நிச்சயம் பொன்னை கண்டதால் அல்ல... அதில் அவள் கண்ட அவரது மனமாற்றத்தால்... திருமணத்திற்கு வரும் போதே தனது அன்னையின் வளையலை அவளுக்காக எடுத்து வந்திருக்கிறார் என்றால் அவர் தன்னை இந்தத் திருமணத்திற்கு முன்னரே ஏற்றுக் கொண்டு விட்டார் என்று தானே அர்த்தம்...

குற்றவுணர்வு நீங்கி அவளது மனதில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடியது...

பெற்றோரின் திருமணத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்த கயல்விழி அவர்களுக்கு இடையில் வந்து

நிற்க, ரகுராமன் தனது பேத்தியை கைகளில் தூக்கி கொண்டார் மன மகிழ்வோடு...

"தாத்தா... சாக்லேட்..." அன்று அவர் சாக்லேட் கொடுத்ததை நினைவில் வைத்துக் கொண்டு அவள் அப்படிக் கேட்க...

"நீ கேட்பேன்னு எனக்குத் தெரியும்..." பேத்தி கேட்டதும் அவளுக்காக வாங்கி வைத்திருந்த சாக்லேட்டை தனது சட்டைப் பையில் எடுத்து அவளிடம் நீட்டினார் அவர்...

சின்னவள் சந்தோசத்துடன் அதை வாங்கிக் கொண்டாள்...

அந்த மகிழ்ச்சியுடன் எல்லோரும் விஜயின் வீட்டிற்குச் சென்றனர்... அதுவரை மகிழ்ச்சியோடு இருந்த முத்துபேச்சியின் உடலும், உள்ளமும் இறுகத் துவங்கியது... முகம் உணர்வினை தொலைத்தது...

வாசம் நேசமாகும்...!!!

வீட்டு வாசலில் மணமக்களாய் வந்து நின்ற மகனையும், முத்துபேச்சியையும் கண்டு மைதிலி முகத்தில் ஆத்திரம் ருத்ரதாண்டவம் ஆடியது...

"இந்த வீட்டு வாசப்படியை மிதிக்க உனக்கு எந்த அருகதையும் இல்லை... அப்படியே வந்த வழியே திரும்பப் போய்விடு..." என்று முத்துபேச்சியிடம் அவர் கோபமாய்ச் சீற...

அவரது கோபம் அவளுள் மகிழ்ச்சியைக் குமிழச் செய்தது... ஏனெனில் அவர் எது நடந்து விடக் கூடாது என்று அவளை அவமானப்படுத்தினாரோ அது இன்று நடந்து விட்டதே... அந்தளவில் அவள் தான் வெற்றிப் பெற்றாள்... ஆனாலும் அன்று அவர் அவளை அவமானப்படுத்தியது அவளை உள்ளுக்குள் இறுகச் செய்தது...

அன்னையின் வார்த்தையில் விஜயும் கோபமாய் ஏதோ பேச போனான்...

மகன் வாய் திறந்து பேசும் முன் ரகுராமன் மனைவியை அடக்கினார்...

"எல்லா அருகதையும் மருமகளுக்கு இருக்கு... நீ போய் ஆரத்தி கரைச்சுக் கொண்டு வா... இப்போ உன் மருமகள் சாதாரணப் பெண்ணில்லை... இப்படி வீட்டு வாசலில் நிக்க வச்சுக் கேள்வி கேட்டுக்கிட்டு இருக்கிறதுக்கு... இப்போ அவள் ஒரு அமைச்சர்... முதலில் அதற்கான மரியாதையைக் கொடுத்து அவளை வீட்டினுள் விடு..." என்க...

கணவர் பேச்சை கேட்டும் மைதிலி அசையாது நின்றார்... அதற்கு எல்லாம் ரகுராமன் அசரவில்லை... மீனாவை அழைத்து ஆரத்தி கரைக்கச் செய்து மணமக்களை முறையோடு உள்ளே அழைத்துச் சென்றார்...

முத்துபேச்சியைப் பூஜையறையில் விளக்கேற்றச் சொல்லியவர் அதன் பின்னர் மனைவியிடம் திரும்பினார்...

"மருமகளுக்கு அருகதை இல்லைன்னா சொல்ற... நமக்குத் தான் இங்கே இருக்க அருகதை இல்லை... நாம நல்லா இருக்கணும்ங்கிறதுக்காக அவள் இத்தனை நாள் அமைதியா இருந்திருக்கிறாள்... அவளைப் போய்த் தேவையில்லாமல் பேசாதே..."

பூஜையறையில் விளக்கேற்றி வைத்துவிட்டு வந்தவள் காதில் அவரது வார்த்தைகள் விழத்தான் செய்தது... பழைய அவமானத்தில் அவளது மனம் குமுறியது... அவளது முகமாறுதலை உணர்ந்தோ என்னவோ விஜய் அவள் அருகிலேயே நின்றிருந்தான் ஆறுதலாய்...

கயல்விழி பாண்டியன், மீனாவுடன் தந்தையின் அறையில் இருந்தாள்... இந்தக் கலவரத்தை சின்னவள் பார்ப்பதை விஜய் விரும்பவில்லை... அதனால் பாண்டியனிடம் அவளை உள்ளே அழைத்துச் செல்ல சொல்லிவிட்டான்...

யார் என்ன பேசுவது என்று தெரியாமல் அனைவரும் அமைதியாய் நின்றிருந்தனர்...

"நான் கிளம்பறேன் விஜூ..." முதலில் முத்துபேச்சி அந்த மௌனத்தைக் கலைத்தாள்...

'எங்கே...?' என்பது போல் அதிர்ந்து போய்ப் பார்த்தான் அவன்...

"என்னால் இங்கே இருக்க முடியாது விஜூ..." கண்களில் கண்ணீர் மல்க அவள் கூற... அவனோ செய்வதறியாது அவளைப் பார்த்தவன் பின்பு,

"சரி வா போகலாம்... நானும் உன் கூட வர்றேன்..."

அதில் முகம் மலர அவனைப் பார்த்தவள் அவனது கரத்தோடு தனது கரத்தினைக் கோர்த்து கொண்டாள் விருப்பத்தோடு... அப்பப்பா இதற்காக எத்தனை போராட்டங்கள்...? மனதில் சந்தோசம் ததும்பியது அவளுக்கு...

"நீ ஏன் இப்படிச் சொல்றன்னு எனக்குத் தெரியும்மா... நீயும், விஜயும் இங்கேயே இருங்க... நாங்க போகிறோம்..." என்று ரகுராமன் சொல்ல...

"நினைச்சேன்... இப்படித்தான் ஏதாவது நடக்கும்ன்னு... மகராசி காலடி எடுத்து வச்சவுடனேயே இந்தக் குடும்பத்தை ரெண்டா பிரிச்சிட்டியே... நீ நல்லாயிருப்பியா...?" என்று மைதிலி முத்துபேச்சியைக் கண்டு கத்த துவங்கினார்...

வெங்கட்டோ வெளியில் அமைதியாய் நின்றிருந்தாலும் உள்ளுக்குள் நடுநடுங்கி கொண்டிருந்தான்... அன்று ஆத்திரத்தில் அறிவிழந்து செய்த தவறு இன்று பூதாகரமாய் எழுந்து அவனைப் பயமுறுத்தியது... அன்று சாதாரணப் பெண்ணாய் இருந்தவள் இன்று அமைச்சராவாள் என்று அவன் கனவா கண்டான்...

"வாயை மூடு மைதிலி..." என்று மனைவியை நோக்கி இரைந்தார் ரகுராமன்...

சாதுவாய் இருந்தவர் இன்று சிங்கமாய் மாறி கர்ஜனை செய்தார்...

"அன்னைக்கு மருமகளைச் செருப்பால அடிச்சியே அது உனக்கு ஞாபகத்தில் இல்லையா... அதற்கான தண்டனையை நீ அனுபவிக்க வேண்டாம்..."

அவர் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போய்த் தன்னவளை பார்த்த விஜயின் கைப்பிடி இறுகியது அவனது மனதினை போல்...

"இது எப்போப்பா நடந்தது...?"

இறுகிய குரலில் கேட்டவனைக் கண்டு ரகுராமன் அன்று நடந்ததை ஒன்று விடாமல் அவனிடத்தில் கூறினார்... தன்னுடைய தவறையும் சேர்த்து கூற அவர் தவறவில்லை...

அதைக் கேட்டுத் தேகம் இறுகியவன் மறுநொடி தனது தம்பியை ஓங்கி அடித்திருந்தான்... அவனால் அவனது அன்னையை அடிக்க முடியவில்லை... அதனால் தம்பியிடம்

கையை ஓங்கியிருந்தான் தனது ஆத்திரத்தை காண்பிக்கும் பொருட்டு...

கணினி முன் அமர்ந்து சொகுசாய் வேலை பார்த்து வந்த வெங்கட்டால் விஜயின் காவல்துறை அடியினைத் தாங்க முடியாது தள்ளி போய் விழுந்தான்... அதில் சியாமளா அலறிக் கொண்டு கணவனிடம் செல்ல, அவளது கையில் இருந்த ராம் நடப்பது புரியாது அழத் துவங்கினான்...

தம்பி மகனது அழுகையில் சற்று நிதானித்த விஜயின் ஆக்ரோசம் முற்றிலும் அடங்கவில்லை... ஆனால் முத்துபேச்சி மறுப்பான தனது ஒற்றை மருகலான தலையசைப்பில் அவனது அத்தனை கோபத்தையும் அப்படியே இறங்கச் செய்துவிட்டாள்... என்றுமே அவளை மீறும் தைரியம் அவனுக்குக் கிடையாதே...

அவள் மேல் பெருகிய காதலில் தன்னைச் சுற்றியிருந்தவர்களை மறந்தவனாய் விரைந்து வந்து அவளை அணைத்து கொண்டவன் விழிகள் கலங்கியது...

"இதுக்காகவாடி என்னை விட்டு பிரிஞ்ச...? என் கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நான் இவங்களைத் தண்டிச்சு இருப்பேன்... அப்படியே அப்பா கிட்டேயும் பேசியிருப்பேனே..."

தன்னவளின் தியாகத்தின் முன் அவனது காத்திருந்த காதல் கூடப் புறமுதுகிட்டு தோற்றுப் போனது...

"அவர் உயிரை விட்டுருவேன்னு சொல்றப்போ எனக்கு என்ன செய்றதுன்னு தெரியலை..." அவளும் கண்கள் கலங்க அவனது அணைப்பில் அடங்கினாள்...

அவர்கள் இருவரையும் குரோதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் மைதிலி... இன்னமும் ஏனோ அவரால் முத்துபேச்சியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

"என்ன வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க...? மூட்டை முடிச்சை எடுத்துக்கிட்டு கிளம்பு..." என்று மனைவியை அவசரப்படுத்தினார் ரகுராமன்...

விஜய் அவர்களைத் தடுக்க முயற்சிக்கவில்லை... மனைவியின் அவமானத்தின் முன் அவனால் பெற்றோருக்குச் சாதகமாகப் பேச முடியவில்லை...

"நீங்க இருங்க... நாங்க போகிறோம்..." என்று முத்துபேச்சி சொல்ல...

"இல்லைம்மா... இதுவரை எங்களுக்காக நீங்க ரெண்டு பேரும் உங்க வாழ்க்கையை இழந்து கஷ்டப்பட்டது எல்லாம் போதும்... இனிமேலாவது உங்களுக்காக நீங்க வாழுங்க..." என்று அவர்களை வாழ்த்தியவர் சின்ன மகனிடம்,

"நீயும் தான் கிளம்பு... இதுவரை உன் மாமனார் பணத்தில் வாழ்ந்ததா உன் மனைவி கூறினாள் இல்லையா... இனியும் அது போல் உன் மாமனார் வீட்டிற்குப் போய் அவரது பணத்தில் வாழ்ந்துக்கோ... நானும், உன் அம்மாவும் முன்பு குடியிருந்த வீட்டிற்குப் போகிறோம்... விருப்பம் இருக்கிறவங்க எங்களை அங்கே வந்து பார்க்கலாம்..."

விஜய் அவனது திருமண விசயத்தைச் சொன்னதுமே அவர் இந்தத் திட்டத்தைத் தீட்டிவிட்டார்... தன்னை அவமானப்படுத்தியவர்களுடன் சேர்ந்து வாழ முத்துபேச்சி யோசிப்பாள் என்று அவருக்குத் தெரியும்... அவள் என்றில்லை மானமுள்ள எவரும் இதைத்தான் யோசிப்பார்கள்...

அதனால் தான் அவளுக்காக அவர் யோசித்தார்... அவரது மனதில் எந்தவித வருத்தமும் இல்லை... மாறாகச் சந்தோசமே நிறைந்திருந்தது...

அந்தச் சந்தோசத்துடனே அவர் தன் மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு கிளம்ப, வெங்கட்டும் அவர்களைப் பின் தொடர்ந்து தனது குடும்பத்துடன் வீட்டை விட்டு வெளியேறினான்...

"உன் குடும்பத்தை உன்னிடம் இருந்து பிரிச்சிட்டேனா விஜூ..." கவலையுடன் கேட்டவளை அணைத்துக் கொண்டு மறுப்பாய் தலையசைத்தவன்,

"அவங்களுக்கு அவங்க குடும்பம் இருக்கு... ஆனா எனக்கு நீயும், கயலும் தான் குடும்பம்... உங்க ரெண்டு பேருக்காக இதை நான் தாங்கிக் கொள்வேன்..."

அவன் கூறியது அவளுக்கு அத்தனை ஆறுதலாக இருந்தது... அவளும் சராசரி பெண் தான்... தன்னை அவமானப்படுத்தியவர்கள் முன் எதுவும் அறியாதது போல் வளைய வர அவளால் முடியாது...

அந்நேரம் பாண்டியன், மீனா, கயல்விழி மூவரும் அங்கே வர, சிறிது நேரம் சந்தோசமாய்க் கழிந்தது...

"முத்து... நாங்க கயலை வீட்டுக்கு கூட்டிட்டு போயிட்டு உங்களுக்குத் தேவையான துணிமணியை எடுத்துட்டு வர்றேன்..."

இருவருக்கும் வேண்டிய தனிமையைக் கொடுத்துவிட்டு நாசுக்காய் அகன்ற பாண்டியன் மீனா மற்றும் கயல்விழியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு கிளம்பினான்...

****

மூவரும் சென்ற பின் விஜய், முத்துபேச்சி இருவர் மட்டுமே தனித்திருந்தனர்...

பெண்ணவளோ கணவனின் அருகாமையில் நாணம் கொண்டு தலைக்குனிந்து அமர்ந்திருக்க, அவனோ தனக்குள் யோசனையில் மூழ்கிப் போயிருந்தான்...

பொறுத்து பொறுத்து பார்த்த முத்துபேச்சிக்குப் பொறுமை காற்றில் பறந்தது... மெல்ல அவனை உரசியபடி அமர்ந்தாள்... அதில் அவளை ஏறிட்டுப் பார்த்தான் அவன்...

"அன்னைக்கு யாரோ சொன்னாங்க 'என் உறவுக்கான உரிமையை நானே எடுத்துக்குவேன்'னு... இப்போ உறவும் வந்தாச்சு, உரிமையும் வந்தாச்சு..." என்று கூறியவள் அவனைப் பார்த்து கண்சிமிட்டியபடி,

"எப்போ எடுத்துக்கிறதா உத்தேசம்...?" என்று கேட்டு சிரித்தாள்...

அவளைப் போன்று அவனால் சிரிக்க முடியவில்லை... அவளின் உடல்நலம் அவனது மனதை பாரமாய் அழுத்தியது... மனதுக்குள் ஊமையாய் அழுதான் அந்தக் கம்பீரமான ஆண்மகன்...

"விஜூ..." என்று கிறக்கமாய்க் கூறியபடி அவனது முகத்தைத் தனது கரங்களில் தாங்கியவள் அவனது இதழோடு இதழ் பதித்தாள்...

அவனோ அவளது இதழ் முத்தத்தில் ஒன்ற முடியாது விலகியவன் அவளை அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தான்... அதற்கு மேல் அவனால் தனது துயரத்தை கட்டுப்படுத்த முடியவில்லை...

"விஜூ... என்னடா...?" அவனது கண்ணீர் கண்டு அவள் பதறித்தான் போனாள்...

"எப்படிடி உன்னால மட்டும் என் கிட்டே இருந்து எல்லாத்தையும் மறைக்க முடியுது... அந்தளவுக்கு என் காதல் ஆழமானது இல்லையா... இல்லை இவன் கிட்ட சொல்லி என்னவாகப் போகுதுன்னு அலட்சியமா...?"

கோபமும் ஆதங்கமுமாய்க் கேட்டவனைக் கண்டு புரியாது பார்த்தாள் அவள்...

"உனக்கு மூளையில் கட்டி இருப்பதை ஏன் என் கிட்ட சொல்லலை...?"

அதில் நாக்கை கடித்துக் கொண்டாள் தனது தவறு உணர்ந்து...

"சொன்னா நீ ரொம்ப வருத்தப்படுவ விஜூ... அதனால் தான்..."

"ஓ... அப்போ நீ வருத்தப்பட்டா பரவாயில்லையா..." அவன் காட்டத்துடன் கேட்டான்...

"எனக்கு இது எல்லாம் பழகி போச்சு விஜூ..." என்றவள்,

"இப்போ சந்தோசமா இருக்கிறப்போ எதுக்கு இந்தப் பேச்சு...?" என்று அவனைக் கடிந்தவள் அவனைக் காதலுடன் அணைத்துக் கொள்ள...

அவனோ விலகி நின்றான்...

"விஜூ... நான் சாகுறதுக்குள்ள உன் கூடத் திகட்ட திகட்ட வாழ்ந்துட்டு செத்து போகணும்... என்னோட கடைசி ஆசையை நிறைவேத்த மாட்டியா..."

அவளது வார்த்தையில் கண்ணீர் மல்க அவன் மறுப்பாய் தலையசைத்தான்...

"ஏன் விஜூ...?"

"உன்னோட இந்த ஆசையை நான் நிறைவேத்தினா நீ என்னை விட்டுட்டு போயிருவ... நீ எனக்கு ஆயுள் முழுக்க வேணும் கண்ணம்மா..."

"அது நடக்காத காரியம் விஜூ..." நம்பிக்கை இல்லாமல் அவள் சொல்ல...

"நடக்கும் கண்ணம்மா கட்டாயம் நடக்கும்... ஆபரேசன் பண்ணினா நீ பிழைப்பதற்கு ஐம்பது சதவீதம் வாய்ப்பிருக்குன்னு டாக்டர் சொன்னார்..."

"நீ எப்போ அவரைப் பார்த்த...?"

அப்போது தான் தனது நோய் பற்றி அவனுக்கு எப்படித் தெரிந்தது என்று அவள் யோசித்தாள்...

"நான் அன்னைக்கு ஹாஸ்பிட்டலில் உன்னைப் பார்த்தேன்..." என்றவன்,

"எனக்கு நம்பிக்கை இருக்கு நீ பிழைச்சு வருவ... என்னோடு நூறு வருசம் வாழுவேன்னு..."

"எனக்கு அந்த நம்பிக்கை இல்லை விஜூ..."

நம்பிக்கையற்று கூறியவளின் முகத்தைத் தனது கைகளில் தாங்கியவன், "உனக்காக நான் ஒருத்தன் காத்திட்டு இருக்கேன்ங்கிற நினைவில் நீ பிழைச்சு வரணும்... உன்னோடு வாழ்வதற்காகப் பத்து வருசமா மனசுக்குள் காதலை சுமந்துக்கிட்டு இருக்கிற என்னை நீ உன் நெஞ்சில் ஞாபகம் வைத்து நீ பிழைத்து வரணும்... என்னோட கனவை எப்போது நனவாக்குவாய் கண்ணம்மா..."

ஏக்கத்துடன் கேட்டவனின் வார்த்தைகள் அவளுள் நம்பிக்கை விதையைத் தூவியது...

அதுவரை வாழும் ஆசையற்று இருந்தவளுக்கு அவனது காதல் வாழும் ஆசையைத் தூண்டி விட்டது... அவனது காதலில் திகட்ட திகட்ட வாழ வேண்டும் என்று அவளது காதல் மனம் ஆசை கொண்டு ஏங்கியது அந்தக் கணம்...

அவனது கையைப் பிடித்துக் கொண்டு அவள் ஆம் என்பது போல் தலையாட்டினாள்... அதில் அவளது விழிகளில் இருந்து பிரிந்த விழிநீர் கன்னத்தில் சிந்தி சிதறி கீழே வழிந்தது...

"அப்படின்னா நாளைக்கே ஆபரேசன் பண்ணிக்கலாமா கண்ணம்மா..."

நாளை அவளுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கான எல்லா ஏற்பாட்டினையும் அவன் ஏற்கெனவே செய்துவிட்டு தான் இன்று அவளைக் கரம் பிடித்தது...

"உனக்காகப் பண்ணிக்கிறேன் விஜூ..." என்று அவள் சம்மதித்தாள் தன்னவனுக்காக...

அன்றே முத்துபேச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்... ஊடகங்களுக்கு எதுவும் சொல்லாது ரகசியமாய் அவள் சேர்க்கப்பட்டாள்... இன்னமும் அவர்களது திருமணம் கூட முறையாக அறிவிக்கப்படவில்லை...

அது எதுவுமே விஜய்க்கு நினைவில் இல்லை... அவளைக் காப்பாற்ற வேண்டியது மட்டும் தான் அவனது நினைவில் நின்றது...

தோழியின் நிலை அறிந்து பாண்டியன் அங்கு ஓடி வந்தான்... இதுவரை அவனிடம் விஜய் எதுவும் சொல்லவில்லை... திருமணத்தைப் பற்றிச் சொன்னவன் ஏன், எதற்காக இவ்வளவு சீக்கிரத்தில் திருமணம் என்பதைப் பற்றி அவன் வாய் திறக்கவில்லை...

பாண்டியன் முத்துபேச்சியைக் கண்டபடி திட்ட துவங்கினான்...

"விசய்... அவளுக்கு நீயும், நானும் முக்கியமில்லை... இப்போ எல்லாம் அவள் ரொம்பப் பெரிய மனுசியாகிட்ட... அமைச்சராகிட்டா இல்ல... அந்தப் பவிசு... அதான் இப்படி எல்லாம் நடந்துக்கிறா..."

கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு அவன் அவளைச் சத்தம் போட்டான்...

"இல்ல பாண்டி..." என்று தன்னைச் சமாதானம் செய்ய முயன்றவளின் கையைப் பிடித்துக் கொண்டு அவன் அழுதுவிட்டான்...

"எனக்கு வேறு யாரு புள்ள இருக்கா... நீ தானே எனக்கு எல்லாம்... உனக்கு ஒண்ணுன்னா நானும் உன் கூடச் சேர்ந்து செத்துருவேன் புள்ள..."

காதலில் மட்டும் தான் உயிர் தியாகம் இருக்குமா... இதோ இங்கே தூய நட்பிலும் உயிர் தியாகம் இருந்தது...

அவர்களது நட்பினை கண்கள் பனிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்...

விசயம் கேள்விப்பட்டுச் செல்வநாதன், கமலா இருவரும் வந்தனர்... அவர்களைக் கண்டதும் ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்த கையோடு அவள் எழுந்து அமர முயற்சிக்க,

அதைத் தடுத்த கமலா அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டார்...

"சார்... உங்களுக்குத் தெரியாம கல்யாணம் பண்ண வேண்டிய சூழ்நிலை..."

செல்வநாதனிடத்தில் தனது சூழ்நிலையை விஜய் விளக்கி சொல்ல, அவனது இயலாத நிலையை ஏற்றுக் கொண்டவர் முத்துபேச்சியைக் கடியவும் தவறவில்லை...

அன்னையின் உடல்நிலையைப் பற்றி அறியாதவளாய் கயல்விழி மீனாவுடன் வீட்டில் இருந்தாள்...

****

மறுநாள் அதிகாலையில் முத்துபேச்சிக்கு அறுவை சிகிச்சை நடந்தது... ரகுராமன் மகனுக்கு ஆறுதலாய் அங்கு வந்திருந்தார்... தந்தை வந்தது அவனது மனதுக்குச் சற்று ஆதரவாக இருந்தது...

விசயம் கேள்விப்பட்டும் மைதிலி வரவில்லை... அவரை மாதிரியான ஆட்களை எல்லாம் திருத்த முடியாது...

மனம் நிறையத் தவிப்புடன் விஜய் அமர்ந்திருந்தான்...

பல மணி நேரம் கழித்து அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது...

அடுத்து வந்த இரு நாட்களில் மயக்கத்தில் இருந்த முத்துபேச்சி கண்களைத் திறந்தாள் மெதுவே... மரணப் பயத்தில் வாழும் நம்பிக்கையற்று இருந்தவள் தன்னவனுக்காக உயிர் போராட்டம் நடத்தி உயிர் மீண்டு வந்தாள்... அந்தப் போராட்டக்காரியின் போர்க்குணத்தின் முன் எமன் கூடத் தோற்றுப் போய்ப் புறமுதுகிட்டு ஓடி போனான்...

உயிர் பிழைத்து வந்தவளை கண்டு அவன் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதான்... அவனது பத்து வருட எல்லாத் தவிப்பையும் ஒன்று சேர்த்து இந்தச் சில மணித்துளிகளில் ஒட்டு மொத்தமாய் அவன் அனுபவித்து விட்டான்... உயிரை

கையில் பிடித்துக் கொண்டு அவளுக்காகக் காத்திருந்தான்... அவனது காத்திருப்பு வீண் போகாது அவளும் உயிர் பிழைத்து வந்துவிட்டாள்...

"இதுக்கே இப்படி அழுதால் எப்படி விஜூ...? நான் உன்னைப் படுத்தி எடுக்க வேண்டியது இன்னும் நிறைய இருக்கே..." என்று அவள் கண்சிமிட்டி சிரிக்க...

"அதுக்காக நான் காத்திருக்கிறேன் கண்ணம்மா..." என்று கண்ணீர் மல்க கூறியவனின் மனதில் சந்தோசம் மட்டுமே...

அவனது சந்தோசத்தைக் கண்டு அவளுக்கும் சந்தோசமாய் இருந்தது...

இருபது நாள்கள் மருத்துவமனை வாசம் முடிந்து முத்துபேச்சி வீட்டிற்கு வந்த போது தலையில் கட்டுடன் இருந்த அவளை வித்தியாசமாகப் பார்த்தாள் கயல்விழி...

"அம்மாவுக்கு என்னாச்சுப்பா...?"

"உன்னைப் போல் அம்மாவும் கேன்சர் பேஷண்ட்க்கு முடியை கொடுத்துட்டாங்க... மொட்டை போடும் போது காயம் ஏற்பட்டிருச்சு..."

மனைவியின் மரணப் போராட்டத்தை மகளிடத்தில் சொல்லி அவளைக் கஷ்டப்படுத்திப் பார்க்க அவன் விரும்பவில்லை...

அன்னையின் தலைக்கட்டினை தடவி கொடுத்த சின்னவள், "காயம் சரியா போயிரும்மா..." என்று கூற...

மகளின் வார்த்தையில் முத்துபேச்சிக்கு தனது வலி கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டது... மகளை வாரியணைத்து கொண்டாள்...

அடுத்து வந்த நாட்களில் அவளது உடல்நிலையையும், திருமணத்தைப் பற்றியும் ஊடங்களில் பிரகடனப்படுத்த வேண்டியதாய் போயிற்று... எதுவும் தவறாகக் கிசுகிசு வரும் முன் அவர்களை இதைச் செய்யச் சொல்லி செல்வநாதன் தான் வற்புறுத்தி இருந்தார்...

இப்போது எல்லாம் சரியாகி போனது... இருவருக்கும் அந்த வானத்தை வசப்படுத்தியது போன்றதொரு மகிழ்ச்சியான உணர்வு, நிறைவு...

அடுத்து வந்த நாட்கள் அமைதியாகச் சென்றது... முத்துபேச்சியின் உடல்நலம் நன்றாகத் தேறி வந்தது...

****

ஒரு விடுமுறை நாளில் கயல்விழி பாண்டியன், மீனாவுடன் தீம் பார்க் சென்றிருந்தாள்... வீட்டில் முத்துபேச்சியும், விஜயும் மட்டுமே தனித்திருந்தனர்...

கண்ணாடி முன் நின்று கொண்டு தனது உருவத்தைக் கவலையுடன் நோக்கியபடி நின்றிருந்தாள் முத்துபேச்சி... அவளைப் பார்த்தபடி அவள் பின்னால் வந்து நின்றவன் மெல்ல அவளை அணைத்தான்...

"என்ன பார்த்துக்கிட்டு இருக்கக் கண்ணம்மா...?"

அவளது தோளில் நாடி பதித்துக் கொண்டு கண்ணாடியில் தெரிந்த அவளது பிம்பத்திடம் அவன் கேட்க...

"என் தலைமுடியை பாரேன் விஜூ... குச்சி குச்சியாய் நீட்டிக்கிட்டு அசிங்கமாயிருக்கு..." என்று கவலையாய் அவள் கேட்க...

அறுவை சிகிச்சைக்காக மொட்டை அடிக்கப்பட்டதில் இப்போது தான் அவளது காயம் ஆறி முடி கொஞ்சம் வளர ஆரம்பித்திருக்கிறது...

"முன்னாடி மட்டும் உனக்கு எட்டடி கூந்தலா இருந்தது கண்ணம்மா..." என்று அவன் அவளைக் கிண்டலடிக்க...

"விஜூ..." அதில் செல்லமாய்ச் சிணுங்கியவள் அவன் மீது சுகமாய்ச் சாய்ந்தாள்...

தன் மீது சாய்ந்தவளை விருப்பத்துடன் தாங்கி கொண்டவனின் கைகள் அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக்கி கொண்டது...

அவனை அண்ணாந்து பார்த்தவள், "நான் இப்படி இருக்கிறது உனக்குப் பிடிக்கலையா விஜூ..." என்று கவலைக் குரலில் கேட்க...

"ஏய் அசடு... நீ எப்படி இருந்தாலும் உன்னை எனக்குப் பிடிக்கும்டி... என்னோட காதல் உன்னோட மனசு பார்த்து வந்தது..."

"அப்படியா அப்போ அதை நிரூபிச்சு காட்டு பார்ப்போம்..." என்று கூறியபடி அவனை நோக்கி திரும்பியவள் கண்களில் குறும்பு வழிய அவனைப் பார்த்தாள்...

அவளது கண்களில் வழிந்த குறும்பு, அதையும் மீறி அதில் தெரிந்த ஆர்வம் கலந்த எதிர்பார்ப்பு எல்லாம் சேர்த்து அவனிடம் தனிக்கதை பேசியது ரகசியமாய்...

அவளின் எதிர்பார்ப்பை புரிந்தவனாய் ஆசையாய் அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டான் அவன்...

காத்திருந்த காதல் பெருவெள்ளமாய் அணையை உடைத்துக் கொண்டு வருவது போல் பெருகிய போதும், அதே காத்திருந்த காதல் அவர்களைப் பொறுமையைக் கடைப்பிடிக்கச் சொல்லியது...

கிடைப்பதற்கரிய தங்களது துணையை நிதானமாய்க் கொண்டாடி, கொண்டாடி கூத்தாட சொல்லியது...

அதிரடிக்காரர்களான இருவரும் பொறுமையாய், நிதானமாய்த் தங்களது காதலை தங்களது துணைக்கு உணர்த்தியவர்கள் அதே அளவு காதலை அனுபவிக்கவும் தவறவில்லை...

காத்திருந்து கிடைக்கும் வெற்றிக்கு எப்போதுமே ருசி அதிகம்... அது போல் தான் அவர்களது காதலும் அந்தக் கணம் அவ்வளவு இனித்து ருசித்தது...

கூடல் முடிந்து அவளைப் பார்த்து நிறைவாய் சிரித்தவன், "இப்போ தான் ரொம்பச் சந்தோசமாயிருக்கு

கண்ணம்மா..." என்று அவளது நெற்றில் முத்தமிட்டு சொல்ல...

அவனது மகிழ்ச்சி கண்டு அவளும் மகிழ்ந்தவளாய் மனம் நிறையப் பூரிப்புடன் அவனை அணைத்து கொண்டாள்...

இந்தக் காதல் கை கூடத்தான் எத்தனை போராட்டங்கள்...

"அம்மா, வெங்கட் அப்படிப் பண்ணினதை நீ ஏன் என் கிட்ட சொல்லலை கண்ணம்மா...?" திடுமென அவன் அப்படிக் கேட்டதும் அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"அவங்க செருப்பால அடிச்சது ரொம்ப அவமானமாத்தான் இருந்தது... ஆனா பதிலுக்குத் திருப்பி அடிக்கத் தோணலை... ஏன்னா அவங்க உன்னோட அம்மா விஜூ... உன்னை மாதிரி ஒரு அருமையான மகனை பெத்து எனக்காகக் கொடுத்து இருக்காங்களே அதுக்காகவாவது நான் அவங்க காலில் பூ போட்டு தான் கும்பிடணும்..."

உண்மையில் மனதில் எழுந்த மரியாதை மிகுந்த அன்போடு அவள் அதைக் கூறினாள்...

"உனக்கு ரொம்பப் பெரிய மனசுடி..."

"அப்படி எல்லாம் என்னைத் தவறா நினைக்காதே விஜூ... உன் தம்பி அடிச்சது எனக்குக் கோபம் தான்... ஆனா ஒரு அடி மட்டும் அடிச்சதால அவன் தப்பிச்சான்... இல்லைன்னா நடந்திருப்பதே வேறு... அந்த ஒரு அடியையும் நீ திருப்பிக் கொடுத்துட்டே... இப்ப கணக்கு சரியாப் போச்சு..."

"உனக்காக நான் எத்தனை அவமானங்கள் வேணும்ன்னாலும் தாங்கி கொள்வேன் விஜூ... வாழ்க்கையில் நான் பார்க்காத அவமானங்களா...? அதுக்கு எல்லாம் பழிக்குப் பழிவாங்கணும்ன்னா சென்னையில் இருக்கிற பாதிப் பேரை நான் பழிவாங்கணும்... எல்லாத்தையும் கடந்து வந்தாச்சு விஜூ... இப்ப இந்த நொடி என் மனசில் எந்தக் கவலையும் இல்லை... சந்தோசம், சந்தோசம் மட்டுமே இருக்கு..." என்று கூறியவள் அவனை இறுக அணைத்து கொண்டாள்...

"அப்பா மட்டும் அப்படிக் கேட்கலைன்னா அன்னைக்கே நாம சேர்ந்திருக்கலாம் இல்லையா கண்ணம்மா... எத்தனை வருச பிரிவு...?"

பிரிவுத்துயர் அவனது வார்த்தையில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"நீ போலீஸ் வேலையில் சேராம இருந்திருந்தா அதுக்கு முன்னாடியே நாம சேர்ந்திருக்கலாம்..."

அன்று தான் நினைத்ததை அவள் கூற...

"கடைசியில் உனக்காக நான் தேர்ந்தெடுத்த போலீஸ் வேலை தான் நம்ம காதலுக்கு எமனா போயிருச்சா...?" என்று கேட்டபடி அவன் தலையில் கை வைத்தான்...

"அதுவும் ஒரு காரணம் விஜூ... ஆனா உங்கப்பா வார்த்தையை மீறுகிற துணிவு எனக்கு எப்போதும் இருந்தது இல்லை... அவரோட மரணத்தின் மீது நம்ம காதல் வாழணுமா...?"

நிச்சயம் அந்த இடத்தில் அவன் இருந்திருந்தாலும் அவளை மாதிரியான ஒரு முடிவை தான் எடுத்திருப்பான்...

"நீ செஞ்சதும் சரி தான்..." என்றவன் அவளை அணைத்துக் கொண்டான்...

"ஆனாலும் நீ தாலியை கழட்ட துணிஞ்சது பார்த்து நான் ரொம்ப ஷாக்காகிட்டேன்... ஏன்டி அப்படிச் செய்ய நினைச்ச...?"

துயரத்துடன் கேட்டவனைக் கண்டு அவள் ஆறுதலாய் அணைத்துக் கொண்டு,

"உனக்கு உயிர் கொடுத்தவர் உயிர் முன் என்னோட சந்தோசம் எனக்குப் பெருசா தோணலை விஜூ..."

அவளது நல்ல உள்ளம் கண்டு அவனது அணைப்பும் இறுகியது... இருவரும் உணர்ச்சிவசப்பட்டதில் சிறிது நேரம் மௌனத்தில் கரைந்தது...

"விஜூ..."

"ம்... என்ன கண்ணம்மா...?" அவளது தோள் வளைவில் முகம் புதைத்தபடி அவன் வினவ,

"உன் கனவு இப்போ நனவாகியிருச்சு தானே...?"

அதில் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்து சிரித்தவன், "இன்னும் சில விசயங்கள் கனவு போல் தான் இருக்கு கண்ணம்மா..." என்றவன் அவளைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தபடி,

"அன்னைக்கு நான் உன்னிடம் பார்த்த மச்சம், தழும்புகள் எல்லாம் அதது இடத்தில் சரியா இருக்கான்னு திரும்ப ஆராய்ச்சி பண்ணி பார்க்கணுமே கண்ணம்மா..." என்று குறும்பாய் கண்சிமிட்டியபடி கூறியவன் அவளை ஆராய முற்பட்டான்...

அவனது செயலில் நாணமுற்றவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் கொள்ள... அவளது நாணம் கண்டு வாய்விட்டு சிரித்தவன் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான்...

****

அன்று மீனா கண்களைக் கசக்கி கொண்டு வந்து நின்றாள் முத்துபேச்சி முன்பு...

"என்ன மீனா...? ஏன் அழுற...?" என்று முத்துபேச்சி புரியாது கேட்க...

"எங்கம்மா எனக்கு மாப்பிள்ளை பார்த்துட்டாங்களாம்..."

அதில் முத்துபேச்சியின் விழிகள் கூர்மையாய் அவளை அளவெடுத்தது...

"நல்ல விசயம் தானே... இதுக்குப் போய் யாராவது அழுவாங்களா...?" என்றாள் வேண்டுமென்றே...

"எனக்கு... எனக்கு..." அவள் தடுமாறி நின்றாள்...

"உனக்கு...?"

"உங்க பிரெண்ட்டை தான் பிடிச்சியிருக்கு... கட்டினா அவரைத் தான் கட்டுவேன்..." என்று மீனா தேம்ப...

"இப்படித் தடாலடியா சொல்றதை விட்டுட்டு இதுக்குப் போய் யாராவது கண் கலங்குவாங்களா...?" என்ற முத்துபேச்சி அவளை ஆதரவாய் அணைத்துக் கொள்ள...

"அக்கா...?" இன்னமும் மீனாவின் கண்களில் தன் காதல் நிறைவேறுமா என்கிற பயம் மிச்சம் இருந்தது...

"பாண்டி மனசில் நீ தான் இருக்க மீனா... அவனுக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்..."

முத்துபேச்சி கூறியதை கேட்டு மீனாவின் அலைப்பாய்ந்த மனம் சட்டென்று அமைதியடைந்தது...

"எனக்கும் அவரை ரொம்பப் பிடிக்கும்..." என்று நாணியவளாய் தலைக்குனிந்து கொண்டு அவள் கூற...

"அம்மாடி மீனா... நீயாவது உன் காதலை தைரியமா சொன்னியே..." என்று அவளைப் பாராட்டியபடி அங்கு வந்தான் விஜய்...

"உங்கக்கா காதல் சொல்ல ஏழு வருசமாச்சு... அந்தக் கதை உனக்குத் தெரியுமா...?" என்று தன்னவளை கண்டு அவன் கேலியாய்ச் சொன்னான்...

"போ விஜூ..." என்று அவனைக் கண்டு அவள் வெட்கம் கொள்ள...

அதைக் கண்டு அவன் சிரித்தான்... இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் மீனா...

"உன் காதல் நிறைவேறுவதற்கு நான் கியாரண்ட்டி..." என்று விஜய் அவளுக்கு உத்திரவாதம் அளிக்க...

மீனா சந்தோசத்தில் புள்ளி மானாய் துள்ளி குதித்துக் கொண்டு ஓடினாள்...

மீனா சென்றதும் முத்துபேச்சி அவனை உரசி கொண்டு நின்றாள்... மனைவியின் செயலை கண்டு அவனது கைகள் அவளை அணைத்துப் பிடித்துக் கொண்டது ஆசையாய்...

"இப்போ எல்லாம் உனக்கு என் நினைவே இல்லை விஜூ... எப்பப்பாரு உன் பொண்ணு நினைவு தான் உனக்கு..." என்று அவள் குறைப்பட்டுக் கொள்ள...

"என்ன செய்யச் சொல்ற கண்ணம்மா... பேபி கூட இருக்கிறப்போ எனக்கு எல்லாமே மறந்து போகுது..."

மகளைப் பிரிந்திருந்த ஏக்கம் அவனது வார்த்தையில்...

"ம்... அப்போ ஒண்ணு செய்வோமா...?"

"என்ன செய்யணும்...?"

"அடுத்து உன்னைப் போல் ஒரு பையனை எனக்குக் கொடுத்திரு... நான் அவன் கூட இருந்திருக்கிறேன்... நீ உன் பொண்ணு கூட இருந்துக்கோ... என்ன என்னோட டீலுக்கு ஓகேவா..."

"ம்ஹூம்... இந்த டீல் எனக்கு ஓகே இல்லை..." என்று கூறிக் கொண்டே அவளைத் தனது கைகளில் தூக்கியவன்,

"நமக்குக் கயல் மட்டும் போதும்டி... அவளை ஆணுக்கு ஆணா, பெண்ணுக்குப் பெண்ணா தைரியமா வளர்க்கலாம்... என்ன சரியா...?"

"நான் வயித்தை தள்ளிக்கிட்டு கர்ப்பிணியாய் இருக்கிறதை நீ பார்க்க வேண்டாமா...? எல்லாப் புருசனும் அதுக்குத் தானே ஆசைப்படுவாங்க..." என்று கவலைக் குரலில் கேட்டவளை கட்டிலில் இறக்கி விட்டவன் அறைக் கதவை தாழ் போட்டுவிட்டு மீண்டும் அவள் அருகில் வந்து,

"உன்னை எப்படிப் பார்க்கணும்ங்கிற என்னோட ஆசையை நான் சொல்லவா..." என்றவன் அதைச் சொல்லாமல் செயலில் காட்டத் துவங்க... அதில் தன்னைத் தொலைத்தவளாய் கிறக்கத்துடன்,

"கயல் வந்துற போறா...?" என்று முணுமுணுக்க...

"பேபி, பாண்டி கூட வெளியில் போயிருக்கிறா... அவள் வர்றதுக்குள்ள நாம நிறைய ஷிப்ட் முடிச்சிரலாம் கண்ணம்மா..." என்றவன் தனது காரியத்தில் கண்ணாய் இருந்தான்...

"விஜூ..." என்றவளும் அவனுள் மூழ்கத் துவங்கினாள்...

"எனக்காடி உன் நினைவு இல்லை..." என்றவன் தன் நினைவில் அவள் எந்தளவுக்குக் கலந்து இருக்கிறாள் என்பதைச் செய்முறை விளக்கமாய் அவளுக்குக் காட்டத் துவங்கினான்...

****

அடுத்து வந்த நாட்களில் பாண்டியனின் சம்மதத்துடன் அவனுக்கும் மீனாவுக்கும் விமர்சையாகத் திருமணம் நடந்தது...

மீனா மட்டும் தன் காதலை சொல்லவில்லை என்றால் பாண்டியன் இந்த ஜென்மத்தில் அதைப் பற்றிச் சிறிதும் யோசித்திருக்கப் போவதில்லை... காதல் விசயத்தில் அவன் தனது தோழியைப் போல் சற்று மக்கு தான் போலும்...

விஜய், முத்துபேச்சி இருவரும் திருமணத்தில் எல்லா வேலைகளையும் இழுத்து போட்டுக் கொண்டு செய்தனர்...

திருமணமான பாண்டியனுக்கு இருவரும் சேர்ந்து தனியாய் தொழில் வைத்து கொடுக்க நினைத்தனர்... ஆனால் அவனோ முத்துபேச்சியின் செயலாளர் பதவியில் இருந்து விலக மாட்டேன் என்று பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டான்...

தோழியின் நிழலாய் தொடர்வதே அவனுக்கு விருப்பம்...

அடுத்து வந்த நாட்களில் பாண்டியன், மீனா இருவரும் தேனிலவுக்குக் கிளம்பிச் சென்றனர்...

இங்கே விஜய், முத்துபேச்சி வாழ்க்கை இயல்பு போல் ஆனந்தமாய் நகர ஆரம்பித்தது...

அன்று சட்டமன்றக் கூட்டத்திற்கு முத்துபேச்சி கிளம்பி கொண்டிருந்தாள்... எப்போதும் போல் கார் வரை வந்து அவளை வழியனுப்பி வைத்தான் விஜய்...

அவளுக்காகக் கார் கதவை திறந்துவிட்டு அவன் விறைப்பாய் வணக்கம் வைக்க அதைக் கண்டு கயல்விழி,

"ஏன்ம்மா அப்பா எப்பவும் உனக்குச் சல்யூட் அடிச்சிக்கிட்டு இருக்காரு..." என்று புரியாமல் அவள் கேட்க...

"உங்கப்பாவுக்கு அப்படி ஒரு வேண்டுதல்..." என்று கேலி போல் கூறினாலும் முத்துபேச்சி தன்னவனைப் பெருமிதத்துடன் பார்த்தாள்...

அவனோ புன்னகை மாறாது, "இது என் கண்ணம்மாவுக்கு நான் கொடுக்கும் மரியாதை..." என்று காதலோடு கூறினான்...

அதில் அவளது காதல் அதிகரிக்க இடம், பொருள் பார்க்காமல் அவனது உயரத்திற்கு எம்பி அவனது கன்னத்தில் அழுத்தமாய் இதழ் பதித்துவிட்டு புன்னகையுடன் கம்பீரமாகக் காரிலேறி அமர்ந்தவள் அவர்களிடம் விடைப்பெற்று சென்றாள்...

மகளைக் கையில் பிடித்தபடி மனைவியின் கார் கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்திருந்த விஜய் மகளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்... முதலில் மகளைப் பள்ளியில் விட்டு விட்டு அதன் பின்னரே அவன் தனது வேலைக்குச் சென்றான்... அவனது தினசரி வேலை இது...

அவனது மனம் முழுவதும் சந்தோசத்தில் நிறைந்திருந்தது... நிறைவான குடும்ப வாழ்க்கை அவனுக்கு அத்தனை நிம்மதியை பெற்றுத் தந்திருந்தது...

நேரே தனது அலுவலகத்திற்கு வந்தவன் தனது மேலதிகாரியுடன் சமுதாயத்தில் நடக்கும் குற்றங்களை

முற்றிலும் வேரறுப்பதைப் பற்றிக் கலந்தாலோசிக்க ஆரம்பித்தான்...

அதே நேரம் சட்டமன்றத்தில் ஊழலில்லா சமுதாயத்தை உருவாக்குவதைப் பற்றி முத்துபேச்சி தனது கணீர் குரலில் பேசி கொண்டிருந்தாள்...

நாட்டிற்குச் சேவை செய்ய அவர்கள் இருவரும் அதிக ஆர்வம் காட்டிய போதும் அவர்களது அந்த ஆர்வத்தை இன்றளவும் உயிர்ப்புடன் வைத்திருப்பது இருவரின் மாசில்லா காதல் தான்...

தனது காதலனின் நேசத்தில் இந்த வனமலர் வாசமாய் மலர்ந்து சுகமாய் மணம் பரப்புவாள் தனது வாழ்நாள் முழுவதும்...!!!